


# எழுநா

மாத இதழ் 23

ஜூன் 2024

# எழுநா

## இதழ் 23

**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ் – சஞ்சிகை
ஜனனி பாலசுந்தரம் – வலைத்தளம்
அச்சுதநாயர் இசைப்பிரியன் – ஆவணப்படம்
நிவேதிகா இராசன் – கற்கை வட்டம்
பாலரூபன் கிருஷிகா – குரல் வடிவம்
பவித்ரா இரமணீகரசர்மா – குரல் வடிவம்

**வளவாளர்கள்**
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை
கதிர் சயந்தன் – நூல் தயாரிப்பு
சுவர்ணலதா செந்தில்குமார் – மெய்ப்புத் திருத்தம்
தங்கராஜா பிரபாகரன் – மெய்ப்புத் திருத்தம்
நடராஜா முரளிதரன் – அச்சுப்பதிப்பு – விநியோகம் (கனடா)
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி/ விவரணப்படம்
சிறிதரன் சோமிதரன் – காணொலி / விவரணப்படம்
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு
பரமசிவம் பவதாரணி – செயல்பாட்டு மேலாண்மை

**துறை சார் ஆலோசகர் குழு**
ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
கந்தையா ரமணிதரன் – நீரியலும் நீர்ப்பாசனமும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்ட முறைமையும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப் பல்வகைமையும்
தர்சன் அம்பலவாணர் – சமயமும் இறையியலும்
பால சிவகடாட்சம் – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்
நாகமுத்து பிரதீபராஜா – புவியியலும் திட்டமிடலும்
பரமு புஸ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
சனாதனன் தமோதரம்பிள்ளை – கட்புல அரங்கேற்ற கலைகள்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் – பொருளியலும் நிதியியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்றலும்
மரியோ அருள்தாஸ் – அரசியலும் மெய்யியலும்
இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
கந்தையா பகீரதன் – விவசாயமும் மீன்பிடியும்

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே


### அட்டைப்படம்

*Image credit : Thamotharampillai Sanathanan*

*தாமோதரம்பிள்ளை சனாதனன் அவர்கள் வரைந்த 'Grandma's Court yard' எனத் தலைப்பிடப்பட்ட இவ் ஓவியம், ஊரின் மீதான நினைவேக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.*


**FOLLOW**

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/

தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

# உள்ளே...


நாக இனக் குழுவும் இலங்கைத் தமிழரும் : அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு— பகுதி 1,2 — 04
- பரமு புஷ்பரட்ணம்

'இலங்கையின் போரும் சமாதானமும்' : நோர்வேயின் சமாதானத் தோல்வியின் விளைவுகள் நோர்வேஜியப் பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் எழுதிய நூல் — பகுதி 2 — 35
- சிவராஜா ரூபன்

ரோஹண விஜயவீரவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களும் : சமூகவியல் நோக்கு — பகுதி 1,2 — 50
- ஆங்கில மூலம் : சரத் அமுனுகம
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

இலங்கையில் நீர் மின்சாரம் : தன்னிறைவின் விலை — 68
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

நன்மையின் நம்பிக்கையுரு கிங்கிலியர் — 77
- தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் — 12 — 84
- நடராஜா செல்வராஜா

தமிழ்ப் பௌத்த மீட்டுருவாக்கம் — 92
- நடேசன் இரவீந்திரன்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகளும் தீவுகளும் — 99
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

NurtureLeap : யாழ்ப்பாணத்தின் திறன்வளம் கொண்டோரை வல்லுநர்களாக்கும் நிறுவனம் — 105
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன்

வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்தல்: பொருளாதார முன்னேற்றமும் சமூகப் பொறுப்பும் — 110
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன்

தனிநாயகம் அடிகளாரின் கல்விச் சிந்தனைகள் — 115
- கு. சின்னப்பன்

எதியோப்பியாவின் சமஷ்டி அரசியல் யாப்பு : ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் ஆய்வுரையை முன்வைத்து ஓர் உரையாடல் — 130
- கந்தையா சண்முகலிங்கம்

மண்முனையில் பற்சின்னம் கொணர்ந்தவளும் மல்வத்தையில் புத்தர் சிலை அமைத்தவனும் — 142
- விவேகானந்தராஜா துலாஞ்சனன்

இலங்கையில் ஆசீவகச் சமயம் — 147
- ஜெகநாதன் அரங்கராஜ்

அனுக் அருட்பிரகாசத்தின் ' ஒரு குறுகிய திருமணத்தின் கதை' — 157
- இளங்கோ

மன்னார்ப் படுகை எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வும் அகழ்வும் : அபிவிருத்திக்கான வாய்ப்பா, சாபமா? — 161
- வை. ஜெயமுருகன்

நாக யுவராஜனின் தவறான சமய நம்பிக்கை பற்றிக் குறிப்பிடும் திஸ்ஸமகராம கல்வெட்டு — 170
- என். கே. எஸ். திருச்செல்வம்

பிதுரங்கல பிராமிக் கல்வெட்டுகளில் நாகர் — 176
- என். கே. எஸ். திருச்செல்வம்

இலங்கையின் வடக்குப் பகுதியின் மழைவீழ்ச்சி — 180
- நாகமுத்து பிரதீபராஜா

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் — பகுதி 07 — 195
- ஜிஃப்ரி ஹாசன்

கிழக்கிந்தியக் கம்பெனிகளும் அவற்றின் வியாபாரத் தந்திரங்களும் — 200
- சை. கிங்ஸ்லி கோமஸ்

இலங்கையின் கறவை மாடுகளைப் பாதிக்கும் முக்கியமான தொற்று நோய்கள் — 204
- சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

வரலாற்றின் வழியில் மலையகத் தமிழரும் இலங்கை அரசியலும் — 208
- எம். இராமதாஸ்

வணிக நகர்வுகளில் துணிவுடமையின் வகிபாகம் — 214
- கணபதிப்பிள்ளை ரூபன்

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.



● பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

# நாக இனக்குழுவும் இலங்கைத் தமிழரும் : அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு


1



பெல்லன்பெந்திபலசை குகையில் அகழப்பட்ட பலாங்கொடை மனிதனின் எச்சம்

Image source - roar.lk

தென்னாசியாவில் பண்டு தொட்டு பெரிதும் புழக்கத்தில் இருந்து வந்த ஒரு பெயராக வடமொழியில் 'நாஹ' என்ற பெயரும், தமிழில் 'நாகம், நாகன், நாகர்' என்ற பெயர்களும் காணப்படுகின்றன. மத வழிபாட்டில் நாகத்தை குலமரபுத் தெய்வமாகக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. வட இந்தியாவில் அரசமைத்த குப்தரும், தக்கணத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனரும் தம்மை நாக குலத்தவர் என அழைத்துக் கொண்டனர். தமிழகத்தின் பண்டைய தலைநகரான நாகபட்டினம் நாகரின் தலைநகர் என்ற கருத்துண்டு. தமிழ்நாட்டில் சங்க இலக்கியத்திலும், சமகாலப் பிராமிக் கல்வெட்டுகளிலும் நாகன், நாகர் என்ற பெயர்கள் குறுநிலத் தலைவர்களுடனும், புலவர்களுடனும், நாடு - நகர் - ஊர் ஆகிய இடப்பெயர்களுடனும் இணைந்து வருகின்றன. இலங்கையின் முதற் பாளி வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான



பாகியங்கலை குகையின் முன்னே ஆதி மனிதர்களின் வாழ்க்கையைக் காட்டும் ஓவியம்

Image Source - ta.wikipedia.org

**இலங்கையில் இதுவரை 1500 இற்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையிலான கல்வெட்டுகள் தென்னாசியாவில் வேறு எந்த வட்டாரத்திலும் கண்டுபிடிக்கப்படவில்லை.**

மகாவம்சம் ஈழத்திற்கு விஜயன் வருவதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த மக்களை இயக்கர், நாகர் எனக் குறிப்பிடுகின்றது (Mahavamsa : vivii.51-55). ஆயினும் இலங்கையின் மனித வரலாறும், நாகரிக உருவாக்கமும் வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறிய மக்களுடன் தோன்றியவை என்ற கருத்துடைய அறிஞர்கள் பலரும் வடஇந்தியக் குடியேற்றம் நடப்பதற்கு முன்னர் இங்கு வாழ்ந்த இயக்கரையும், நாகரையும் மனிதப் பிறவிகள் அற்ற அமானுசர் என்றே குறிப்பிட்டு வந்துள்ளனர் (Mendis 1946:8, Paranavitana 1961-181-82). இந்நிலையில் பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, பேராசிரியர் ராஜ் சோமதேவா போன்ற அறிஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுகளை நம்பகத்தன்மை உடைய ஆதாரங்களாகக் காட்டி இயக்கரையும், நாகரையும் இலங்கையில் வாழ்ந்த தொடக்க கால இனக்குழுக்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர் (Karunaratne 1984:56). இக்கருத்தை வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்ட மக்கள், பண்பாடு தொடர்பான தொல்லியற் சான்றுகள் மேலும் உறுதி செய்கின்றன. இத்தொல்லியல் ஆதாரங்கள் இலங்கையில் மனிதவரலாறு, பண்பாடு என்பவற்றின் உருவாக்கத்தை இங்கு வாழ்ந்த இயக்கர், நாகர் எனும் இனக்குழுக்களில் இருந்து ஆராய்ந்து பார்க்க வழியேற்படுத்தியுள்ளது எனலாம்.

இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முற்பட்ட இலங்கையின் தொடக்ககால எழுத்து, மொழி, மதம், இனம், பண்பாடு என்பவற்றை அறிவதற்கு பிராமிக் கல்வெட்டுகள் நம்பகரமான சான்றுகளாகக் காணப்படுகின்றன. இலங்கையில் இதுவரை 1500 இற்கும் மேற்பட்ட பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வளவு எண்ணிக்கையிலான கல்வெட்டுகள்



கந்தரோடை

Image Source - www.lanka-excursions-holidays.com

தென்னாசியாவில் வேறு எந்த வட்டாரத்திலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவற்றுள் ஏறத்தாழ 200 கல்வெட்டுக்களில் 'நாக' என்ற பெயரை பலதரப்பட்ட மக்களும் தனிநபரின் முன்னொட்டு அல்லது பின்னொட்டுப் பெயராகப் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. அப்பெயருக்குரியவர்கள் இனக் குழுத்தலைவர்கள், சிற்றரசர்கள், அரச அதிகாரிகள், வணிகர்கள் என உயர் பதவிகளில் இருந்ததை அக்கல்வெட்டுகள் மேலும் கூறுகின்றன. அவற்றுள் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட நான்கு கல்வெட்டுகள் அப்பிராந்தியத்தில் ஆட்சியில் இருந்த நாகச் சிற்றரசர்கள் பற்றிக் கூறுகின்றன. கல்வெட்டுகளில் வரும் செய்திகளை சமகாலப் பாளி இலக்கியங்களும் உறுதிசெய்கின்றன. அவ்விலக்கியங்கள் புராதன அநுராதபுரகால அரசியல் வரலாற்றை முன்னிலைப்படுத்திக் கூறுவதால் அக்காலத்தில் ஆட்சியில் இருந்த துல்லத்த நாக (கி.மு.119), கல்லத்த நாக (கி.மு.109-103), சோறநாக (கி.மு.63-51), மகாநாக (கி.பி.79), இளநாக (கி.பி.3343), மகல்லநாக (கி.பி.136-143), குஜநாக (கி.பி.186-187), குஞ்சநாக (கி.பி.187-189), ஸ்ரீநாக (கி.பி.189-209), அபயநாக (கி.பி.231-240), ஸ்ரீநாக (கி.பி.240-242) முதலான நாக மன்னர்களின் ஆட்சி பற்றியே சிறப்பாகக் கூறியுள்ளன. இலங்கையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்ததாகக் கூறப்படும் காலத்திற்கு முந்திய நாக மக்கள் பற்றி வரலாறு, பல நூற்றாண்டுகள் கடந்த நிலையில், வரலாற்றுத் தொடக்ககால (கி.மு.3-கி.பி.3நூற்றாண்டு வரை) வரலாற்றில் முன்னிலைப்படுத்திக் கூறப்படுவது நாக மக்களுக்கும் பிற்கால மக்களுக்கு இடையிலான உறவையும், தொடர்பையும் காட்டுவதாகக் கொள்ளலாம். வடஇந்தியக் குடியேற்றத்திற்கு முந்திய இலங்கை வரலாறு

பற்றி தொல்லியல் ஆய்வுகள் கூறுவதை இவ்விடத்தில் எடுத்துக்காட்டுவது இதற்குப் பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

நீண்டகாலமாக இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வரலாற்றுப் பாட நூல்களில், இலங்கையின் பூர்வீக மக்கள், வடஇந்தியாவில் இருந்து விஜயன் தலைமையில் வந்த ஆரியர்களின் வழித்தோன்றல்கள் என்றே கூறப்பட்டு வந்துள்ளன. இந்நிலையில் அண்மைக்காலங்களில் இலங்கை அரசால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் வரலாற்றுப் பாட நூல்களில் விஜயன் தலைமையிலான குடியேற்றம் நடப்பதற்குப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த மக்கள், பண்பாடு பற்றிய விடயதானங்களை சேர்க்கப்பட்டிருக்கின்றன. 1970 களில் இருந்து மேற்கொள்ளப்பட்ட நவீனத் தொல்லியல் ஆய்வுகள், விஜயன் வருகைக்கு முன்னரே வெவ்வேறு காலகட்டத்தில் மூன்று வகையான பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததை வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருப்பதே இந்த மாற்றத்திற்கு காரணமாகும். இப் பண்பாட்டுக்குரிய மக்களையே மகாவம்சம் கூறும் இயக்கர் - நாகர் என தொல்லியல், மானிடவியல், மொழியியல் அறிஞர்களும் அடையாளப்படுத்தி வருகின்றனர்.

## கற்காலப் பண்பாடு

1970 களில் வடஇலங்கையில் தொல்லியல் ஆய்வுகளை மேற்கொண்ட கலாநிதி சிரான் தெரணியகல கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுப் பகுதியில் இருந்து இற்றைக்கு 125,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை கண்டுபிடித்தார். இந்த ஆய்வின் போது, உணவு தேடி நாடோடிகளாக வாழ்ந்த இப்பண்பாட்டு மக்கள் பெரிய மிருகங்களை வேட்டையாடவும், காடுகளில் இயற்கையாகக் கிடைக்கும் காய்கனிகள், கிழங்கு வகைகளைப் பறிக்கவும் பயன்படுத்திய பல அளவுகளில், வடிவங்களில் செய்யப்பட்ட குவாட்ஸ், சேட் கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். மேலும் இப்பண்பாட்டு மக்கள், இரணைமடுவில் இருந்து தெற்கே மாங்குளம், தென்மேற்கே மன்னார் வரை வாழ்ந்திருக்கலாம் எனக் கூறப்பட்டுள்ளது. நடோடிகளாக வாழ்ந்த கற்கால மக்கள் தற்காலிகமாகத் தங்கி வாழ்வதற்குப் பொருத்தமான அடர்ந்த காடுகள், குகைகள், பாறைகள், சமவெளிகள், மிருகங்களை வேட்டையாடுவதற்குப் பொருத்தமான வைரமான கற்கள், இலகுவாக நீரைப் பெறுவதற்கு ஏற்ற இயற்கையான நீர்நிலைகள் என்பன வன்னிப் பிராந்தியத்தின் இயற்கை அமைப்பாக இருப்பதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. இரணைமடுவைத் தொடர்ந்து, இலங்கைத் தொல்லியற் திணைக்களமும், தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களும் இணைந்தும், தனித்தும் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வுகளில் தென்னிலங்கையில் முந்தல் போன்ற இடங்களில் இம்மேலைப்பழங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வுகளால் தென்னாசியாவின் ஏனைய நாடுகள் சிலவற்றைப் போல இலங்கையிலும் கற்காலப்பண்பாட்டிற்குரிய மக்கள் வாழ்ந்துள்ளமை உறுதியாயிற்று.

**தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும், மேலைப்பழங்கற்காலப் பண்பாடு மறைந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தொழில்நுட்பம் வாய்ந்த சிறிய நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.**

201-617 ஆண்டு காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் மன்னார் மாவட்டத்தில் கட்டுக்கரைக் குளப் பிரதேசத்தில் தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டபோது யாழ்ப்பாண தொல்லியல் திணைக்கள ஆய்வு உத்தியோகத்தர் திரு.



**கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஈமத்தாழி**

புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது

மணிமாறன் செயற்கையாகச் செய்யப்பட்ட சில கற்கருவிகளைக் கண்டுபிடித்தார். அவற்றுள் ஒரு கற்கருவி காட்டுப் பகுதியில் பிற தேவைக்காக மண் அகழப்பட்ட இடத்தில் ஏறத்தாழ 12 அடி ஆழத்தில் கிரவல் மண்படையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. இக்கருவி செயற்கையாக வடிவமைக்கப்பட்டதை கற்கருவியின் வடிவமைப்பும், அதில் பதிந்துள்ள கைவிரல் அடையாளங்களும் உறுதிசெய்கின்றன. இருப்பினும் இக்கருவியை வைத்து அதன் காலத்தையோ அல்லது அக்கருவியைப் பயன்படுத்திய மக்களையோ உறுதிப்படுத்த முடியாது. முறையான அகழ்வாய்வில் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அதன் கலாசார மண் அடுக்குகளையும், கருவிகளுடன் இணைந்திருக்கக் கூடிய (Associate Findings) பிற ஆதாரங்களையும் நவீன ஆய்வு முறைக்கு உட்படுத்துவதன் மூலமே ஒரு கருவியின் காலத்தையும், அதன் பண்பாட்டையும் உறுதி செய்ய முடியும். அதற்கான வாய்ப்புகள் விரைவில் கட்டுக்கரை ஆய்வுகளுக்கு ஏற்படும் என நம்பலாம்.

மேலைப்பழங்கற்காலப் பண்பாடு (Upper Paleolithic Culture) பற்றிய ஆதாரங்கள் வடஇலங்கையிலும், தென்னிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையின் பூர்வீக மக்கள் பற்றிய பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும் இப்பண்பாட்டு மக்களுக்கும் இலங்கையின் பிற்கால மக்களுக்கும் இடையே இருந்திருக்கக் கூடிய உறவு, தொடர்பு பற்றிய விரிவான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலைப்பழங்கற்காலப் பண்பாட்டின் முடிவுக்கும், பிற்காலத்தில் தோன்றிய நுண்கற்காலப் பண்பாட்டிற்கும் இடைப்பட்ட நீண்டகால இடைவெளியில்

வாழந்திருக்க கூடிய மக்கள், பண்பாடுகள் பற்றிய ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படாதிருப்பது முக்கிய காரணம் எனக் கூறலாம்.

## நுண்கற்கால மக்கள் (Mesolithic People)

தென்னிந்தியாவைப் போல் இலங்கையிலும், மேலைப்பழங்கற்காலப் பண்பாடு மறைந்து நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் தொழில்நுட்பம் வாய்ந்த சிறிய நுண்ணிய கற்கருவிகளைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இவர்களின் நாளாந்த வாழ்க்கையில் நுண்ணிய கற்கருவிகள் முக்கிய தொழில்நுட்ப சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டிருந்ததால் இம்மக்களை தொல்லியலாளர்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் அல்லது குறுணிக்கற்காலப் பண்பாட்டு (People of Mesolithic Culture) மக்கள் எனப் பெயரிட்டுள்ளனர். இம் மக்கள் கி.மு. 37,000 இல் இருந்து மலைநாடு தொட்டு தாழ்நிலம் வரை இலங்கையில் ஏறத்தாழ 75 இற்கும் மேற்பட்ட இடங்களில் வாழ்ந்ததற்கான சான்றாதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வடஇலங்கையில் மாதோட்டம், மாங்குளம், பூநகரி, இரணைமடு, புளியங்குளம், அண்மையில் கட்டுக்கரைக்குளம் ஆகிய இடங்களில் இப்பண்பாட்டு மக்கள் பயன்படுத்திய குவாட்ஸ், சேட் கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் இப்பண்பாட்டு மக்கள் வாழ்ந்த குகைகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இப்பண்பாட்டின் தோற்றமும், மறைவும் இடத்திற்கு இடம் வேறுபட்டதாக இருப்பது தெரியவந்துள்ளது (Deraniyagala 1992: 695-701, 2004:6). இக்கால வேறுபாடுகளுக்கு, தொடக்க காலத்தில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் காலப்போக்கில் அவர்களின் வாழ்வியலுக்குச் சாதகமாக இருந்த இடங்களைக் கண்டறிந்து வேறுபட்ட காலங்களில் அங்கு சென்று குடியேறியமையோ, அல்லது வேறுபட்ட காலங்களில் இப்பண்பாட்டு மக்கள் இலங்கைக்கு வெளியே இருந்து வந்து குடியேறியமையோ காரணமாக இருக்கலாம்.

தென்னிலங்கையில் பலாங்கொடைக்கு அண்மையில் உள்ள குகைகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் காலத்தால் முந்திய நுண்கற்கால கருவிகளும், மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக இப்பண்பாட்டை பலாங்கொடைப் பண்பாடு எனவும், இங்குவாழ்ந்த மனிதர்களை பலாங்கொடை மனிதன் எனவும் அழைக்கின்றனர். இப்பண்பாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கையில் கற்கருவிகளே முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் மிருக எலும்புகள், மான் கொம்புகள் என்பவற்றில் வடிவமைக்கப்பட்ட முனைகள், ஊசிகள் போன்ற கருவிகளையும் பயன்படுத்தியதற்கு ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன (Seneviratne 1085:149, Deraniyagala, 1992:278-81, 2004:9). இப்பண்பாட்டு மக்களின் இருப்பிடங்கள் மிக அரிதாகவும், சிறிதாகவும் காணப்பட்டன. அவை ஏறத்தாழ 50 சதுர மீற்றரில் ஒரு சில மையக் குடும்பங்கள் வாழக்கூடிய நிலையில் அமைந்திருந்தன (Deraniyagala 1992:351, 2004:8). இறந்தவர்களை இம்மக்கள், வாழ்விடங்களிலேயே அடக்கம் செய்தனர். பாகியன் (Fahien Cave) மற்றும் ரணவிலா குகைகளில் (Ranaella Cave) மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது இறந்த மனிதனின் ஒரு சில எலும்புகளை மட்டும் அடக்கம் செய்து அதன் மேல் செம்மண்ணால் பூசப்பட்டிருந்ததற்கான தடயங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இம்மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கைகளைப் பிரதிபலிப்பதாகக் கருதப்படுகின்றது (Deraniyagala 1992: 46-57, 696). பெல்லன்பண்டிபலச (Bellanbandipalasa) குகையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து இம்மக்கள் பலவகைப்பட்ட தானியங்கள், கிழங்குவகைகள், பழங்கள், காட்டு விலங்குகள், மீன் போன்ற கடல் உணவுகளைப் பயன்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. இச்சான்றுகளில் இருந்து இம்மக்கள் உணவுகளைச் சேமித்துவைக்கும் பழக்கத்தையும் நெருப்பின் பயன்பாட்டையும் அறிந்திருந்தனர் என்பது மேலும் தெரியவந்துள்ளது. 30,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகக் கணிப்பிடப்பட்டுள்ள பெலி குகையில் (Beli





நுண்கற்காலப் பண்பாடு பற்றிய ஆதாரங்கள் மேலைப்பழங்கற்கால மறைவிற்குப் பின்னர் இலங்கையில் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

**கட்டுக்கரையில் பெருங்கற்கால மக்களால் மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டதற்கான ஆதாரங்கள்**

*Cave)* இருந்து உப்புப் படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் இம்மக்கள் மலைநாட்டிற்கும் கடற்கரைகளுக்கும் இடையே வலைப்பின்னலான தொடர்புகளைக் கொண்டிருந்தமை தெரிகிறது (Deraniyagala **1992:326, 2004:9).**

நுண்கற்கால மக்களின் கலைப் படைப்புக்களையும், கலையுணர்வையும் அறிந்து கொள்ளக்கூடிய சான்றுகள் அதிகம் கிடைக்கவில்லை. ஆயினும் சிரான் தெரணியகல சில குகை ஓவியங்கள் நுண்கற்கால மக்களுக்கு உரியவையாக இருக்கலாம் எனக் கருதுகிறார் **(1992:465,2004:10).** குருவித்தைக்கு அண்மையில் உள்ள பட்டதொம்பா (Batadomba Cave **31,00011,500)** குகையில் இருந்து சங்கிலிருந்து வடிவமைக்கப்பட்ட மணிகள் (beds of shell) கடல் ஓடுகள், சங்கு, சிப்பி என்பனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை அக்கால மக்களின் கலையுணர்வையும் கடற்கரையோடு இம் மக்களுக்கிருந்த தொடர்பையும் எடுத்துக்காட்டுகின்றன. அண்மையில் தொல்லியலாளர் பிரேமதிலகா, ஹற்றன் சமவெளியில் கிடைத்த தானிய விதைகளை ஆய்வுக்கு (Palynological Evidence) உட்படுத்தியதில் இருந்து கி.மு 17,000 இல் இருந்து வாற்கோதுமை, ஓட்ஸ் (oats) எனப்படும் தானியங்கள் இம்மக்களால் பயிரிடப்பட்டமை தெரியவந்துள்ளது (Derani yagala **2004:10).**

நுண்கற்காலப் பண்பாடு பற்றி ஆதாரங்கள் மேலைப்பழங்கற்கால மறைவிற்குப் பின்னர் இலங்கையில் ஓரளவு நாகரிகமுடைய மக்கள் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இம்மக்கள் பிற்காலத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கைக்கு புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்கால (Megalithic People) அல்லது ஆதி இரும்புக்கால (Early Iron Age People) மக்கள் அறிமுகப்படுத்திய புதிய பண்பாட்டுடன் கலந்துள்ளனர். இந்த உண்மை பொம்பரிப்பு, அநுராதபுரம் அண்மையில் கட்டுக்கரைக் குளம் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது அவ்விடங்களில் நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக அதன் மேற்படையில் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய சான்றுகளும், அதன் தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடக்ககாலச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து உறுதியாகின்றது. இந்நிலையில் கட்டுக்கரைப் பிரதேச அகழ்வாய்வின் போது பெருங்கற்காலச் சின்னங்களுடன் நுண்கற்காலக் கருவிகளும் கலந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமை இதை மேலும் உறுதிசெய்கின்றன. இம்மரபு தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் காணப்படுகின்றன. இலங்கைக்கு முதலில் இரும்பினை அறிமுகப்படுத்திய பெருங்கற்கால மக்கள் தமக்கு முற்பட்ட காலப்பண்பாட்டையும் உள்வாங்கிக் கொண்டனர் என்பதை இது காட்டுகிறது.

## பெருங்கற்காலப் பண்பாடு

பெருங்கற்காலப் பண்பாட்டின் அறிமுகம் இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. இப்பண்பாட்டின் அறிமுகத்தோடு நாடோடிகளாக வாழ்ந்த இலங்கை மக்கள் ஓர் இடத்தில் நிரந்தரமாகக் கூடி வாழ்தல், நிரந்தரப் பொருளாதாரம், நீர்ப்பாசன விவசாயம், குளத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புக்கள், இரும்பின் பயன்பாடு, மிகை உற்பத்தி, சிறு தொழில்நுட்ப வளர்ச்சி, சக்கரங்களைப் பயன்படுத்திய மட்பாண்ட உற்பத்தி, பண்டமாற்று, உள்நாட்டு - வெளிநாட்டு வர்த்தகம், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பன தோற்றம் பெற்றன.

பெருங்கற்காலப் பண்பாடு என்பது இறந்தவர்களுக்கான ஈமச் சின்னங்கள் பெரிய கற்களைப் (Megangupa,Lithic - கற்கள்) பயன்படுத்திக் கட்டப்பட்டதைக் குறிக்கின்றது. ஆதிகால மக்கள் இறந்தவர்களுக்கு மறுபிறப்பு உண்டு என்ற நம்பிக்கையில், தமது வாழ்விடங்களை விட இறந்தவர்களுக்கு பெரிய கற்களைப் பயன்படுத்தி ஈமச் சின்னங்களை





தென்னாசியாவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்தியா ஊடாக பெருங்கற்காலப் பண்பாடுவரை தொடர்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அமைத்ததற்கான சான்றுகள் உலகின் பல நாடுகளில் காணப்படுகின்றன. ஆயினும் திராவிட மொழி பேசும் தென்னிந்திய மாநிலங்களின் பெருங்கற்காலப் பண்பாட்டில் சில தனித்துவமான அம்சங்கள் காணப்படுகின்றன. அதிலும் தென்தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு பல்வேறு அம்சங்களில் நெருங்கிய ஒற்றுமை காணப்படுகின்றது. அவற்றுள் இரும்பின் அறிமுகம், கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களின் பயன்பாடு, தாழியடக்க முறை, சுடுமண் கலைவடிவங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

இலங்கையில் இதுவரை 60 இற்கும் மேற்பட்ட இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களும், ஈமச் சின்ன மையங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பெரிய குடியிருப்பு மையமாக அநுராதபுரம் அடையாளம்







கட்டுக்கரையில் ஐயனார் வழிபாட்டுச் சின்னங்கள்

**பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர்.**

காணப்பட்டுள்ளது. அதையடுத்து இரண்டாவது பெரிய குடியிருப்பு மையமாக வடஇலங்கையில் உள்ள கந்தரோடை அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையின் ஆரம்பகால பெருங்கற்காலக் குடியிருப்புகள் இலகுவாக நீரைப் பெறக்கூடிய மணற்பாங்கான இடங்கள், சிறிய பற்றைக் காடுகள், கடலுணவை இலகுவாகப் பெறக்கூடிய பரவைக்கடல், கடல் - தரை வழிப் போக்குவரத்திற்குச் சாதகமான இயற்கைத் துறைமுகங்கள் என்பவற்றைக் கொண்டிருந்த கடற்கரை ஓரங்களிலேயே உருவாகின. இலங்கையில் இக்குடியிருப்புகள் தமிழகத்தில் அரிக்கமேட்டுக்கு நேரெதிரே அமைந்த மாதோட்டத்திலும், ஆதிச்சநல்லூருக்கு நேரெதிரே அமைந்த புத்தளத்தில் உள்ள பொம்பரிப்பிலும் முதலில் தோன்றியதாகக் கூறப்படுகின்றது. இங்கு குடியேறிய மக்களே காலப்போக்கில் வளமான இடங்களைத் தேடிச் சென்று அவ்விடங்களில் குடியேறினர் (Seneviratne 1983 237- 307). அவற்றுள் பௌதிக மற்றும் கனிம வளங்களைக் கொண்டிருந்த அநுராதபுரம், கந்தரோடை, மகாகமை ஆகிய இடங்களில் பெருங்கற்காலக் குடியிருப்புக்கள் உருவாகி அவ்விடங்களில் ஆரம்பகால நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் நிகழ்ந்தன. அநுராதபுரத்தில் மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்புகள் தோன்றியதால் அங்கு பலமான அரச தலைநகர் தோன்றியது. இங்கு 1994 இல் இருந்து உலகப் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் கனிங்காம் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சான்றுகளை நவீன காலக்கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து இங்கு பெருங்கற்காலப் பண்பாடு தோன்றிய காலம் கி.மு. 1000 (இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்னர்) எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

பாளி இலக்கியங்கள் கி.மு.6 ஆம் நூற்றாண்டிலிருந்து (இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன்னர்) இலங்கைக்கு வடஇந்தியக் குடியேற்றங்கள் ஏற்பட்டதாகக் கூறுகின்றன. இது பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் புலப்பெயர்வை அடுத்து 400 ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட புதிய குடியேற்றமாகக் கொள்ளலாம். ஆயினும் இவ்வாறான குடியேற்றங்கள் நடந்ததற்கு நம்பகரமான தொல்லியற் சான்றுகள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இதே பாளி இலக்கியங்கள் வடஇந்தியாவில் இருந்து கி.மு.3 ஆம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு பௌத்த மதம் பரவியதாகக் கூறுகின்றது. இவற்றை உறுதிப்படுத்தும் பிராமிக் கல்வெட்டுகளும், பௌத்த மதம் சார்ந்த தொல்பொருட் சான்றுகளும் பெரும்பாலும் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்த குடியிருப்பு மையங்களிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள், இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்களே, புதிதாக அறிமுகமான பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்டனர் என்பதனை உறுதிப்படுத்துகின்றன.

பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்கள் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த நுண்கற்கால மக்கள் ஒரே இன வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர். தொல்லியலாளர்கள் இலங்கையில் இம்மக்கள் பயன்படுத்திய கற்கருவிகளுக்கும் தென்னிந்தியாவில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்கும் இடையே நெருங்கிய ஒற்றுமை இருப்பதாகச் சுட்டிக்காட்டுகின்றனர். அல்ஜின் என்ற தொல்லியலாளர் இலங்கையில்



**கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆலய அத்திவாரம்**

**புகைப்படம் - கட்டுக்கரை தொல்லியல் ஆய்வில் எடுக்கப்பட்டது**

பயன்படுத்தப்பட்ட இரு பக்க அலகுடைய நுண்கற்காலக் கல்லாயுதங்கள் தமிழகத்தில் பாம்பன் கடற்கரைக்கு அண்மையில் உள்ள தேரிக் கலாசாரத்துடன், ஒரே பிராந்தியம் எனக் கருதும் அளவிற்கு ஒற்றுமையைக் கொண்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றார் (Kennedy 1990:34). மொழியியலாளர்கள் இலங்கையில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழி தென்னிந்தியாவில் நுண்கற்கால மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழியோடு கொண்டுள்ள ஒற்றுமையைச் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் தற்காலத்தில் இலங்கையில் பேச்சுவழக்கில் உள்ள 200 இற்கும் மேற்பட்ட சொற்கள் நுண்கற்காலப் பண்பாட்டு மக்கள் பேசிய ஆதி ஒஷ்ரிக் மொழிச் சொற்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வொற்றுமைகளின் அடிப்படையில் இலங்கையில் வாழ்ந்த நுண்கற்கால மக்கள், தென்னிந்தியா - அதிலும் குறிப்பாகத் தமிழகத்தில் உள்ள - தேரி மணற்குன்றுப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்து வந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.

பேராசிரியர் இந்திரபாலா வடஇலங்கை - அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு - தமிழகத்தின் தொடக்க வாயிலாக இருப்பதால் தமிழகத்தில் இருந்து புலம்பெயர்ந்துவந்த இம்மக்கள் முதலில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலேயே குடியேறியிருக்க வேண்டும் எனக் கூறுகிறார்.

நுண்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து இலங்கைக்குப் பரவிய பெருங்கற்காலப் பண்பாட்டை அறிஞர்கள் பலரும் இலங்கையின் ஆக்க காலமாகவே (Formation Period) எடுத்துக் கொள்கின்றனர். இப்பண்பாடு எங்கே தோன்றியது? எப்போது தோன்றியது? தோற்றுவித்த மக்கள் யார்? என்பது தொடர்பாக அறிஞர்களின் மத்தியில் வாதப் பிரதிவாதங்கள் உள்ளன. ஆயினும் திராவிட மொழி பேசும் மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலப் பெருங்கற்காலப் பண்பாட்டில் காணப்படும் தனித்துவமான அம்சங்கள் ஒரே பிராந்தியத்திற்குரிய பண்பாடாக

தோற்றமளிக்கின்றன. இப்பண்பாட்டு வட்டத்திற்குள்ளேயே இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாடு உள்ளடக்கப்படுவதால் இப்பண்பாட்டை தென்னிந்தியாவில் இருந்து புலம்பெயர்ந்த திராவிட மக்களே அறிமுகப்படுத்தினர் என்பது அறிஞர்களின் பொதுவான கருத்தாகும். கலாநிதி சிரான் தெரணியாகல இப்பண்பாட்டை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாக இன மக்கள் எனத் தனித்து அடையாளப்படுத்திக் கூறுகின்றார் (Deraniyagala 1992:735). பேராசிரியர் இந்திரபாலா தென் தமிழக - இலங்கைப் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கு இடையே ஈமச் சின்னங்கள், தாழியடக்க முறை, இரும்புக் கருவிகள், சமயச் சின்னங்கள், சுடுமண் உருவங்கள், கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்டங்கள் என்பவற்றில் காணப்படும் ஒற்றுமையைச் சுட்டிக்காட்டி நுண்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக பெருங்கற்காலப் பண்பாடும் தென்தமிழகத்தில் இருந்தே இலங்கைக்குப் பரவியதாகக் கூறுகின்றார் (இந்திரபாலா 2006). இவ்வாதாரங்களில் இருந்து பௌத்தத்திற்கு முந்திய இலங்கை மக்களும், பண்பாடும் தமிழகத்தில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டவை என்பது தெரிகிறது. இதனால் பௌத்த மதத்தின் பரவலோடு இலங்கையில் தோன்றிய மொழிவழிப் பண்பாடுகளை பௌத்தத்திற்கு முற்பட்ட பெருங்கற்கால மக்கள், பண்பாடு என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்வதே பொருத்தமாகும்.

இலங்கைக்கு, விஜயன் யுகத்திற்கு முந்திய வரலாறு உண்டு என்பதற்கு தொல்லியற் கண்டுபிடிப்புக்களை ஆதாரங்களாகக் காட்டியிருக்கும் பேராசிரியர் சேனக பண்டாரநாயக்கா இலங்கை மக்களின் இன அடையாளங்களுக்கு உடற்கூற்றியல் வேறுபாடுகள் காரணமல்ல, பண்பாட்டு வேறுபாடுகளே காரணம் எனக் கூறி அப்பண்பாட்டு வேறுபாடுகளை இலங்கையில் மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டுமென வலியுறுத்துகின்றார் (சேனக பண்டாரநாயக 1985:123). அண்மையில் “வல்லியக்கனும் வல்லிபுரநாதரும்” என்ற பொருளில் கலாநிதி பொ. இரகுபதி எழுதிய கட்டுரையொன்றில் இலங்கைத் தமிழரது பண்பாட்டு அடையாளங்கள் பூர்வீக மக்களது பண்பாட்டிலிருந்து தொடங்க வேண்டும் எனக் குறிப்பிட்டு, 2500 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர் வழிபாட்டில் இருந்துவந்த இயக்கர் வழிபாடு எவ்வாறு அண்மைக் காலங்களில் வல்லிபுரநாதர் ஆலயமாக மாறியதென்பதற்கு பொருத்தமான ஆதாரங்களைக் காட்டியிருந்தார் (இரகுபதி 2006:123). தற்காலத்தில் தமிழர் சமூகத்தில் மாடுகளுக்கு இடப்படும் குறிகள், சலவைத் தொழிலாளர் பயன்படுத்தும் அடையாளச் சின்னங்கள் என்பவை - அவை வரலாற்றுக் காலத்தில் கல்வெட்டுகள், நாணயங்களில் பயன்படுத்தப்படுவதற்கு முன்னரே - பெருங்கற்கால மக்களின் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டதற்கு, பெருங்கற்கால மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களில் பொறித்துள்ள குறியீடுகள், சின்னங்கள் என்பன சான்றாகக் காணப்படுகின்றன (புஷ்;பரட்ணம்: 1999: 62-67). இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழர் வாழ்வியலுடன் இணைந்திருக்கும் நாக மரபிற்கும் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் தொடர்பு இருந்திருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

தென்னாசிய நாடுகள் பலவற்றில் வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் இருந்து நாகத்தைக் குலமரபுத் தெய்வமாக கொண்ட மக்கள் வாழ்ந்ததற்கு நம்பகரமான தொல்லியல் ஆதாரங்கள் காணப்படுகின்றன. இந்நாக வழிபாட்டு மரபு வடஇந்தியா, தக்கணம், தென்னிந்தியா, தமிழகம், தென் தமிழகம் ஆகிய வட்டாரங்களிலும், வட்டாரங்களுக்கு உள்ளேயும் வேறுபட்ட காலங்களில், செம்புக்காலம் (Chalcolithic Culture), புதிய கற்காலம் (Neolithic Culture), நுண்கற்காலம் (Mesolithic Culture), பெருங்கற்காலம் (Megalithic Culture) முதலான பண்பாடுகளின் உருவாக்கத்துடன் தோன்றியதை தொல்லியல்

ஆதாரங்கள் மேலும் உறுதிசெய்கின்றன. இலங்கைக்குரிய பெருங்கற்காலப் பண்பாடு தென்தமிழகத்தில் இருந்து பரவியதற்கே அதிக சான்றுகள் காணப்படுகின்றன. கலாநிதி சிரான் தெரணியாகல நாகர்களே இலங்கைக்குப் பெருங்கற்காலப் பண்பாட்டை பரப்பியவர்கள் எனக் கூறுகின்றார். 1960 களில் புத்தளம், பொம்பரிப்பு பெருங்கற்காலப் பண்பாடு பற்றி ஆராய்ந்த பேராசிரியர் பரணவிதானாவும் இக் கருத்தையே முதலில் முன்வைத்துள்ளார். பேராசிரியர் இந்திரபாலா பௌத்த மொழியான பிராகிருத மொழியை ஏற்றுக் கொண்ட மக்கள் அம்மொழி சார்ந்த இனக்குழுவாக உருவாகிக் கொண்டிருந்த போது நாக இன மக்கள் தமிழ் மொழி பேசும் இனக்குழுவாக உருவாகி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழத் தொடங்கினர் எனக் கூறுகிறார். இந்நிலையில் வடஇலங்கையில் கட்டுக்கரை, நாகபடுவான் ஆகிய பெருங்கற்கால மையங்களிலும் நாக வழிபாட்டுச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது இம்மக்களிடையே நாகத்தை குலமரபுத் தெய்வமாக வழிபடும் மரபு தோன்றிவிட்டதை உறுதி செய்வதாக உள்ளது.

கட்டுக்கரைத் தொல்லியல் மையம் வடஇலங்கையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வடகிழக்கே 26 கி.மீ. தொலைவில் வட்டக்கண்டல் பிரதேசத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சிறிய கிராமமாகும். குளத்தை மையப்படுத்தி தோன்றிய இக்கிராமத்தின் பெயர் சிங்களத்தில் 'யோதவெவ' எனவும், தமிழில் கட்டுக்கரைக்குளம் எனவும் அழைக்கப்படுகின்றது. ஆயினும் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இக்குளம் உட்பட அதைச் சுற்றியமைந்த சில கிராமங்கள் 'பாலப் பெருமாள் கட்டு' என்றே அழைக்கப்பட்டது. இலங்கையில் வரலாற்றுப் பழமை வாய்ந்த பெருங்குளங்களில் ஒன்றான இக்குளத்திற்கு தொன்மையான, தொடர்ச்சியான வரலாறு உண்டு. 2016 - 2017 காலப்பகுதியில் எமது பல்கலைக்கழகத் தொல்லியல் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து யாழ்ப்பாணப் பிராந்திய தொல்லியற் திணைக்கள மற்றும் மத்திய கலாசர நிதியம் என்பவற்றின் தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர்களின் துணையோடு இரண்டு இடங்களில் அகழ்வாய்வும், ஏறத்தாழ நான்கு மைல் சுற்றுவட்டத்தில் தொல்லியல் மேலாய்வுகளும் நடாத்தப்பட்டன. இந்த ஆய்வு நடவடிக்கைகளின் போது தென்னிலங்கைத் தொல்லியல் அறிஞர்களின் ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் அவ்வப்போது பெறப்பட்டன. இந்தக் கட்டுரையின் பிரதான நோக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டிற்கும் நாக மரபிற்கும் இடையிலான தொடர்பை எடுத்துக்காட்டுவதாகும். ஆயினும் கட்டுக்கரை ஆய்வுகள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்து கி.பி.13 ஆம் நூற்றாண்டு வரையான வடஇலங்கை வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதுச் செய்திகளைச் சொல்வதால் அவற்றை இவ்விடத்தில் சுருக்கமாகக் கூறுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

வடஇலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய பெருங்கற்காலக் குடியிருப்பு மையமாக கட்டுக்கரை அடையாளம் காணப்பட்டுள்ளது. இக்குடியிருப்பை அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள மிகப்பெரிய பெருங்கற்கால ஊரிருக்கைப் பகுதியாக எடுத்துக் கொள்ளலாம். பெருங்கற்காலப் பண்பாட்டில் குடியிருப்பு, ஈமக்காடு, குளம் என்பன ஒருங்கே அமைந்திருப்பது அப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகும். இலங்கையில் இந்த நான்கு அம்சங்களும் ஒரேயிடத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் கட்டுக்கரை அகழ்வாய்வில் இந்த நான்கு அம்சங்களும் முதல் முறையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெருங்கற்கால ஈமச் சின்னங்களுள் ஈமப்பேழையும் ஒன்றாகும். இலங்கையில் முதன்முறையாகக் கட்டுக்கரை அகழ்வாய்வில் தாழியடக்க முறையுடன், ஈமப்பேழையும் ஈமச்சின்னமும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. வரலாற்று மூலங்கள் பலவும் இலங்கையின் வரலாற்றுப் பழமைவாய்ந்த துறைமுகமாக மாதோட்டத்தைக் கூறுகின்றன. அங்கு 1825 இல் இருந்து அகழ்வாய்வுகள்

மேற்கொள்ளப்பட்டு வந்தாலும் அங்கு கண்டுபிடிக்கப்படாத தொன்மைச் சான்றுகள் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. கட்டுக்கரையில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களிடையே இரும்பு, கல்மணி, சங்கு, மட்பாண்டம் என்பவற்றை உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகள் இருந்தமைக்கான உபகரணங்களும், உற்பத்திப் பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதற்கு வேண்டிய கார்ணீலியன் கல்வகைகளும், விலையுயர்ந்த மட்பாண்டங்களும் தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இங்கு கிடைத்துவரும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளுக்குரிய தொன்மைச் சான்றுகள் பண்டைய காலத்தில் அநுராதபுரத்திற்கும் மாதோட்டத்திற்கும் இடைப்பட்ட தரைவழிப் பாதையில் கட்டுக்கரை ஒரு நகரமாக வளரச்சி அடைந்ததை உறுதிப்படுத்துகின்றன.

தென்னாசியாவில் பிராமி எழுத்து தோன்றுவதற்கு முன்னர் மக்களிடையே குறியீடுகள் ஒரு தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தில் தோன்றிய இக்குறியீடுகள் மேற்கிந்தியா ஊடாக பெருங்கற்காலப் பண்பாடுவரை தொடர்ந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இக்குறியீடுகள் பற்றி ஆராய்ந்த பி.பி. லால், யஸ்தானி போன்ற அறிஞர்கள் பெருங்கற்காலப் பண்பாட்டில் பயன்படுத்தப்பட்ட 80 வீதமான குறியீடுகள் சிந்துவெளி நாகரிகத்தில் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளை ஒத்திருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். இக்குறியீடுகளில் இருந்தே பிராமி எழுத்து தோன்றியதை அண்மைக்கால ஆய்வுகள் உறுதிப்படுத்தியுள்ளன. கட்டுக்கரை அகழ்வாய்வில் ஈமச்சின்னங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் சில வகையான குறியீடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் குறியீடுகளை ஆய்வு செய்த தென்னிந்தியாவின் முதன்மைத் தொல்லியலாளர்களில் ஒருவரான பேராசிரியர் இராஜன் கட்டுக்கரை பெருங்கற்காலக் குடியிருப்புகளின் தோற்றம் தமிழகத்தின் மிகப்பெரிய குடியிருப்பு மையமான கொடுமணலின் சமகாலமாக அல்லது அதற்கு முற்பட்ட காலமாக இருக்கலாம் எனக் கூறுகிறார். அண்மையில் கட்டுக்கரைப் பிரதேசத்தில் அகழ்வாய்வை மேற்கொண்ட இராஜரட்டைப் பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வுக் குழுவினரும் நாம் முன்வைத்திருக்கும் கருத்துக்கள் பலவற்றை தமது ஆய்வு அறிக்கையில் அழுத்தமாகச் சுட்டிக்காட்டியுள்ளதை இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

எமது தொல்லியல் அகழ்வாய்வின் போது பெருங்கற்காலக் குடியிருப்புப் பகுதியிலிருந்து வெளிவந்த சமயச் சின்னங்கள் பொது மக்கள் பலரின் கவனத்தைக் கட்டுக்கரையின் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்துள்ளது. நன்கு திட்டமிடப்பட்ட முறையில் கட்டுக்கரைக் குளத்தின் கரையோரமாக உள்ள காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் ஆறு மீற்றர் நீளமும், மூன்று மீற்றர் அகலமும் கொண்ட ஆறு குழிகளில் அதன் இயற்கை மண் அடையாளம் காணப்படும் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று வேறுபட்ட கலாசாரமண் அடுக்குகளைக் கொண்ட இவ்வாய்வுக் குழிகளின் மூன்றாவது கலாசார மண் அடுக்கில் செங்கட்டிகள் கொண்டு கட்டப்பட்ட அத்திவாரத்தின் ஒரு பகுதி கண்டுபிடிக்கபபட்டுள்ளது. ஏனைய பகுதி குளத்திற்குள் புதையுண்டு இருப்பதை நீரலையினால் கரையோரத்தில் ஒதுக்கப்பட்டிருக்கும் செங்கற்களும், பிற தொல்பொருட்ச் சான்றுகளும் உறுதிசெய்கின்றன. இக் கட்ட ஆதாரங்கள் இவ்விடத்தில் பழமையான ஆலயம் அல்லது சமயச் சடங்கு நடந்த மண்டபம் இருந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேலும் இக்கட்டிப் பகுதியில் இருந்தே பெருமளவு சுடுமண் சிற்பங்கள், சிலைகள், மணிகள், யானை, குதிரை, நந்தி, முதலான தெய்வ வாகனங்களின் பாகங்கள், அகல் விளக்குகள், தீபங்கள், சமயச் சின்னங்கள், இலட்சனைகள், குறியீடுகள்

என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக் கலைவடிவங்கள் பெரும்பாலானவை களிமண் அல்லது களிமண்ணுடன் குருமணல், நெல் உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து உருவாக்கப்பட்டு பின்னர் அவை சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவை தமிழகப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்களைப் பெருமளவு ஒத்ததாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து கி.பி. 6 ஆம் நூற்றாண்டுவரை இந்து ஆலயங்களும், அவை சார்ந்த கலைவடிங்களும் அழியக்கூடிய மண், மரம், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டவையாகும். இதைச் சமகாலப் பழந்தமிழ் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. இம்மரபே சமகால இலங்கையிலும் பின்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட சமயச் சின்னங்கள் மேலும் சிறந்த சான்றுகளாகும்.

கட்டுக்கரை அகழ்வாய்வில் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், நாகபாம்புகள் முதலான வழிபாடுகளுக்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன. இவற்றின் அடிப்படையில் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஆலயத்தை ஐயனாருக்குரிய ஆலயமாக அல்லது ஐயனார் வழிபாட்டுச் சடங்கு நடந்த இடமாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும். தென் தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றிய குளக் குடியிருப்பில் ஐயனாரை முக்கிய தெய்வமாக வழிபடும் மரபு இருந்துள்ளது. இது பொருளாதாரச் செழிப்பிற்காகவும், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் கொடிய மிருகங்கள் என்பவற்றிலிருந்து பாதுகாக்கவும் மக்களால் வழிபடப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இதற்கு தமிழகத்தில் மதுரை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மிகத் தொன்மையான ஐயனார் வழிபாட்டுக்குரிய சின்னங்கள் சிறந்த சான்றாகும். வன்னியிலும் பண்டுதொட்டு ஐயனார் ஒரு முக்கிய தெய்வமாக வழிபடப்பட்டு வருவதற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. கட்டுக்கரை அகழ்வாய்வுகளில் ஐயனார் தெய்வத்தை அடையாளப்படுத்தும் நூற்றுக்கணக்கான யானை, குதிரை என்பவற்றின் உடற்பாகங்கள், தலைப்பகுதிகள், 75 இற்கும் மேற்பட்ட யானைத் தந்தங்கள், 50 இற்கும் மேற்பட்ட யானை, குதிரை, நந்தி முதலான வாகனங்களின் கழுத்தில் அணியப்பட்டிருந்த மணிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இவ்வாதாரங்களிடையே யானை அல்லது குதிரையின் மேலமைந்திருந்த பீடத்தில் தெய்வீகக் கோலத்தில் இரு கால்களையும் கீழே தொங்கவிடப்பட்ட நிலையில் இருக்கும் இரு பெண் தெய்வங்களின் அரிய சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனாரின் இரு தேவியர்களைக் குறிப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இவற்றைத் தவிர ஆண், பெண் தெய்வங்களின் தலை உருவங்கள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஐயனார், ஐயனாரின் தேவியர்களின் சிலைகளின் உடைந்த பாகங்களாக இருக்கலாம்.

**கட்டுக்கரை அகழ்வாய்வில் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர், நாகபாம்புகள் முதலான வழிபாடுகளுக்குரிய சின்னங்கள், சிற்பங்கள், சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளே அதிக அளவில் கிடைத்துள்ளன.**

இங்கு ஐயனார் வழிபாட்டுக்குரிய சான்றுகளுடன் சிவன், முருகன், விநாயகர், அகத்தியர் முதலான வழிபாட்டுக்குரிய சான்றுகளும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் பிற்கால ஐயனார் ஆலயங்களில் பிறதெய்வங்களையும் வைத்து வழிபடப்படும்

மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்திலிருந்தே தோன்றியதைக் காட்டுகின்றது எனக் கூறலாம். அல்லது பொருளாதாரச் செழிப்பு, பாதுகாப்பு என்பவற்றை வேண்டி ஐயனாரை வழிபாடு செய்த மக்கள் தமது குலத் தெய்வங்களின் உருவங்களை, சின்னங்களை மண்ணிலே செய்து ஐயனாருக்கு காணிக்கையாக வழங்கியிருக்கலாம். அல்லது அவ்விடத்தில் வைத்து வழிபட்டிருக்கலாம் எனக் கருதலாம். இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம், திரிசூலம் என்பன சிவ வழிபாடு இங்கிருந்ததை உறுதி செய்கின்றன. நந்தி, ஆவுடையுடன் கூடிய சிவலிங்கம் முதலான சுடுமண் சிற்பங்கள் முதன் முறையாக கட்டுக்கரை பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்தே கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை முக்கியமாக நோக்கத்தக்கது. தமிழக ஆதிச்சநல்லூர் பெருங்கற்காலப் பண்பாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட முருக வழிபாட்டிற்குரிய வேலும், சேவல் சின்னமும் இரும்பால் செய்யப்பட்டிருந்தன. ஆனால் கட்டுக்கரையில் முருகவழிபாட்டை நினைவுபடுத்தும் மயில் சின்னங்களும், அதன் இறகும் சுடுமண் உருவங்களாகக் கிடைத்திருப்பது அவ்வழிபாட்டின் தொன்மையைக் காட்டுவதாக உள்ளது. கட்டுக்கரை அகழ்வாய்வின் போது மிகச் சிறிய கலசங்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றின் வாய்ப் பகுதியில் இருந்து ஏதோவொரு தெய்வ உருவம் வெளிவருவது போன்ற தோற்றப்பாடு காணப்படுகின்றது. வரலாற்றுக் கதைகளில் அகத்தியரை குடமுனி என அழைக்கும் மரபு காணப்படுவதுடன், அகத்தியர் வழிபாடு இராமேஸ்வரத்தில் இருந்து இலங்கைக்குப் பரவியதாகவும் கூறப்படுகிறது. இதனால் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சிறிய கலசங்கள் அகத்தியர் வழிபாடு இங்கிருந்ததை நினைவுபடுத்துவதாக இருக்கலாம். ஆயினும் தமிழக இலங்கைப் பெருங்கற்கால மையங்களில் இது போன்ற கலசங்கள் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை.

பண்டு தொட்டு ஐயனார் வழிபாட்டு ஆலயங்களுடன் இணைந்த ஒன்றாக நாகவழிபாடு காணப்படுகிறது. இன்றும் கிராமப்புறங்களில் மரங்களின் கீழ் அமைந்துள்ள ஐயனார் ஆலயங்களில் நாகபாம்புகளை வைத்து வழிபடும் மரபைக் காணமுடிகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்பாட்டிலேயே தோன்றிவிட்டதை கட்டுக்கரை அகழ்வாய்வுகள் உறுதிசெய்கின்றன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது இலகுவாக சிற்பங்களைச் செதுக்கக் கூடிய வெண்மையான கற்கள் சில கண்டுபிடிக்கப்பட்டன. அக்கற்களில் காணப்படும் உருவத்தை ஆய்வு செய்த தமிழக ஆய்வாளர்கள் அவற்றில் உள்ள உருவம் நாக பாம்பைப் பிரதிபலிப்பதாகக் கூறுகின்றனர். மேலும் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாக உருவங்கள் வேறுபட்ட தோற்ற அமைப்பில் காணப்படுகின்றன. நீண்ட பெரிய நாக உருவங்களில் சில சாதாரணமாகப் படுத்த நிலையில் காணப்படுகின்றன. ஏனைய நாக உருவங்கள் வளைந்து படமெடுப்பது போன்ற தோற்றத்தில் வாயைப் பிளந்த நிலையில் காணப்படுகின்றன. சிறிய சில நாக உருவங்கள் படமெடுப்பது போன்ற தோற்றத்தில் காணப்படுகின்றன. இவை மண் சட்டியில் வைத்து வழிபடப்பட்டவையாக இருக்கலாம். சில சிறிய நாக உருவங்கள் பீடத்துடன் காணப்படுகின்றன. இச் சிறிய பீடத்தின் மத்தியில் காணப்படும் அரை வட்ட வளைவு நாகச் சிற்பம் இன்னொரு உருவத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் காட்டுகிறது. இது பிற்கால நாக வழிபாட்டு மரபை நினைவுபடுத்துவதாக உள்ளது. சமகாலத் தொல்லியல் ஆய்வில் இனத் தொல்லியல் (Ethno archaeology) முக்கி இடத்தைப் பெற்று வருகிறது. இது குறிப்பிட்ட இனத்திற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான நீண்டகால வரலாற்றுத் தொடர்பை ஆராய்கின்றது. இன்று கட்டுக்கரையிலும், பொதுவாக வன்னியிலும் முக்கியத்துவம் பெற்றிருக்கும் நாக வழிபாட்டு ஆலயங்களின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றுள் சிலவற்றின் தொடக்கம் பெருங்கற்காலப் பண்பாடாக இருக்கலாம் என்பதற்கு கட்டுக்கரை அகழ்வாய்வு சிறந்த உதாரணமாகும்.







**நாகபடுவானில்
நாக வழிபாட்டுச் சின்னங்கள்**

2 கட்டுக்கரையைத் தொடர்ந்து வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட இன்னொரு முக்கிய பெருங்கற்கால பண்பாட்டு மையமாக நாகபடுவான் என்ற இடம் காணப்படுகின்றது. இவ்விடம் பூநகரிப் பிராந்தியத்தில் முழங்காவிலுக்கு அண்மையில் காட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட ஆதாரங்கள் இலங்கையில் நாக வழிபாட்டு மரபு தோன்றி வளர்ந்த வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளுக்குப் புதிய செய்திகளைக் கூறுவதாக இருக்கின்றன. எமது அறிவுக்கு எட்டியவரை இங்கு கண்டுபிடிக்கப்பட்ட சில வகையான சான்றுகள் தென்னாசியாவின் ஏனைய வட்டாரங்களில் இதுவரை கிடைத்ததாகத் தெரியவில்லை. இதுவே இந்திய இலங்கைத் தொல்லியல் அறிஞர்களிள் பலரின் கருத்தாகவும் உள்ளது.

இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயரின் பழமை, அதன் பொருள் ஆய்வுக்கு உரியது. நாகபடுவான் என்ற பெயர் ஐரோப்பியர் ஆட்சியில் பூநகரியில் ஒரு பரந்த பிரதேசத்திற்குரிய பெயராக இருந்தது. காலப்போக்கில் இப்பிரதேசத்தின் ஒருபகுதி பயிர்ச்செய்கைக்கு பயன்படாது போனதால் அந் நிலப்பகுதி கரியலை நாகபடுவான் என தனியொரு கிராமத்தின் இடப்பெயராக அழைக்கப்படுகின்றது. பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய பண்பாட்டு அம்சங்களில் ஒன்று குளத்தை மையப்படுத்திய கிராமக் குடியிருப்புகளின் தோற்றமாகும். பிராமிக் கல்வெட்டுகளிலும், சமகாலப் பாளி இலக்கியங்களிலும், பெருங்கற்கால மையங்களை அண்டிய இடப்பெயர்கள் குளத்தைக் குறிக்கும் ஆவி, வாவி, மடு, குளம், பழை, வேலி முதலான பின்னொட்டுச் சொற்களுடன் முடிவதற்கு இதுவே காரணமாகும். வடஇலங்கையில் அதிலும் குறிப்பாக வன்னியில் 2000 இற்கும் மேற்பட்ட இடப்பெயர்கள் குளம் என்ற பின்னொட்டுச் சொல்லைக் கொண்டுள்ளன. இதற்கு இவ்விடங்களில் பல, ஆதியில் பெருங்கற்காலக்






**நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்**

குளக் குடியிருப்புகளைக் கொண்டிருந்ததே காரணமாகும். இங்கே நாகபடுவான் என்ற இடப்பெயர் நாககுளம் என்ற பொருளிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது. படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம், பெரிய குளம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனால் நாககுளம் என்ற பொருளைக் கொண்ட இடப்பெயரே இன்றும் மாற்றம் அடையாது நாகபடுவான் என்ற பண்டைய தமிழ்ச் சொல்லில் அழைக்கப்படுகிறது எனலாம். கலாநிதி இரகுபதி, நாகபடுவான் என்ற இடப்பெயர் ஆதியில் இங்கு நாகத்தைக் குல மரபாகக்க கொண்ட மக்கள் வாழ்ந்ததன் காரணமாகத் தோன்றியது எனக் கூறுகிறார். நாகபடுவானில் அகழ்வாய்வுக்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் கானமோட்டை என்ற பழைய குளத்தின் அழிபாடுகள் காணப்படுகின்றது. கானமோட்டை என்பதற்கு காட்டில் இருந்த குளம் அல்லது நீர்நிலை எனப் பொருள் கொள்ளலாம். பழந்தமிழ் இலக்கியத்தில் மோட்டை என்பதற்கு வயற் பரப்பிற்கு நீர் செல்லும் பாதை என்பது பொருள். இப்பழமையான பெயர்கள் இப்பிரதேசத்தில் புராதன குளக் குடியிருப்புகள் தோன்றியிருந்ததை மேலும் உறுதிசெய்கின்றன.

நாகபடுவானில் *‘4X3’* மீற்றர் நீள அகலத்தில் ஆறு குழிகள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் இயற்கை மண் அடையாளம் காணும்வரை அகழ்வு செய்யப்பட்டது. இவற்றின் கலாசார மண் அடுக்குகளின் எண்ணிக்கைகள் அகழ்வுக் குழிகளுக்கு இடையே வேறுபட்டுக் காணப்பட்டாலும் மூன்றாவது கலாசார மண் அடுக்குகளிலேயே அதிக அளவிலான













நாகபடுவானில் நாக வழிபாட்டுச் சின்னங்கள்

தொல்லியற் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன மட்பாண்டங்கள், இரும்புக் கருவிகள் (Iron Slakes), பெருங்கற்காலத் தாழிகளின் பாகங்கள் (4ஆம், 5ஆம் ஆய்வுக்குழியில் கண்டுபிடிக்கப்பட்டவை) நாகபடுவானின் தொடக்ககால மக்கள், பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரியவர்கள் என்பதை உறுதிசெய்கின்றன. ஆயினும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது போன்ற செறிவான ஆதாரங்கள் நாகபடுவானில் இதுவரை கிடைக்கவில்லை. தொடர்ந்து இவ்விடத்தில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் அதிக சான்றுகள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

நாகபடுவானில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் போது 1 ஆம், 2 ஆம், 3 ஆம் ஆய்வுக்குழிகளில் இருந்து பெருமளவு சமயச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் இந்து மதத்திற்கு முன்னோடியாக (Proto hinduism) பெருங்கற்கால மக்களிடையே இருந்த சமய நம்பிக்கைகளை வெளிப்படுத்துவதாக உள்ளன. இச்சமயச் சின்னங்கள் பெரும்பாலும் கட்டுக்கரையில் கண்டுபிடிக்கப்பட்ட சின்னங்களைப் போல் களிமண், குருமணல், உமி அல்லது வைக்கோல் என்பன கலந்து செய்யப்பட்டு பின்னர் நெருப்பினால் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இவற்றின் வெளித்தோற்றம் முழுமையாகக் காணப்பட்டாலும் அவற்றின் உட்பகுதி வெறுமையாகவே காணப்படுகின்றது. இவ்வாறான கலைமரபு, தொழில்நுட்பம் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதற்கு தமிழகத்திலும், இலங்கையிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன.

நாகபடுவான் அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட 99 வீதமான சமயச் சின்னங்கள் இங்கு வாழ்ந்த மக்கள் நாக வழிபாட்டுடன் ஒன்றிணைந்திருந்ததைப் பட்டவர்த்தனமாக உறுதிப்படுத்துகின்றன. அச்சான்றுகள் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அகழ்வாய்வுக் குழிகளில் மிகச் செறிவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்குழிகளில் இருந்து அதிக எண்ணிக்கையிலான ஆண் - பெண் தெய்வச் சிலைகள், சிற்பங்கள், அவற்றுடன் இணைந்திருந்த பீடங்கள், நாகக் கற்கள், பயன்படுத்தப்பட்ட அடுப்புகள், தீபச் சட்டிகள், மண் தட்டுக்கள், பல அளவுகளில் செய்யப்பட்ட நாகச் சிற்பங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாதாரங்கள், இவ்விடத்தில் நாக வழிபாட்டு ஆலயம் ஒன்று இருந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது. பெருங்கற்கால மக்கள் வைரமான கற்களில் துவாரங்களை இட்டு அவற்றில் மரங்களை நாட்டி மண், மரம், இலைகள் என்பன பயன்படுத்தித் தமக்குரிய இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்தவர்கள். 2011 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியற் திணைக்களத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினர் இணைந்து கந்தரோடையில் மேற்கொண்ட அகழ்வாய்வில் சமையல் அறையுடன் கூடிய பெருங்கற்கால மக்களது இருப்பிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

பண்டைய இலக்கியங்கள் சங்க காலத்தில் இருந்த ஆலயங்கள், அவற்றில் வைத்து வழிபடப்பட்ட சிலைகள், சிற்பங்கள் பற்றிக் கூறுகின்றன. அதே இலக்கியங்கள் அக்கலை வடிவங்கள் அழியக் கூடிய மரம், மண், சுதை என்பன கொண்டு அமைக்கப்பட்டதாகக் கூறுகின்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்னர் பெரும்பாலும் இக்கலை மரபே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பல்லவ மன்னன் மகேந்திரவர்மனது மண்டகப்பட்டு கோவில் கல்வெட்டு, அவனது ஆட்சியில் இருந்தே அழியாத கற்களைக் கொண்டு ஆலயங்கள்

கட்டப்பட்டதாகக் கூறுவதில் இருந்து, இது மேலும் உறுதியாகின்றது. இதே போல் நாகபடுவானில் இருந்த நாக வழிபாட்டு ஆலயமும் அழியக் கூடிய மண், மரம், சுதை கொண்டு கட்டப்பட்டதால் அவை காலப்போக்கில் அழிவடைந்து குறிப்பிட்ட இடத்தில் குவியலாகக் காணப்படக் காரணம் எனலாம். இச்சான்றுகளுடன் அரிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட சிவலிங்கம், கருடன், ஆமை முதலான சிற்பங்கள் என்பன நாக ஆலயத்தோடு இணைந்திருந்த பிற தெய்வங்களைக் குறிப்பதாக இருக்கலாம்.

இங்கு கண்டுபிடிக்கப்பட்ட நாக வழிபாட்டுச் சின்னங்களுள் ஆண், பெண் தெய்வச் சிலைகள் சிறப்பாக நோக்கத்தக்கது. இவை சுடுமண் சிலைகளாக இருப்பதால் அவை பெரிதும் சிதைவடைந்த நிலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆயினும் சிதைவடைந்த சிலைகளின் தலைப்பாகங்கள், உடம்புப் பகுதிகள், கை - கால் உறுப்புகள், அவற்றில் அணியப்பட்ட கை வளையல்கள், கழுத்து மாலைகள், காற்சலங்கைகள், தலை முடிகள், காது அணிகலங்கள், ஆடை அமைப்புக்கள் என்பவற்றை ஆதாரங்களாகக் கொண்டு ஆண், பெண் சிலைகளை வேறுபடுத்தி அடையாளம் காண முடிகிறது. இச்சிலைகள் பெரும்பாலும் பீடத்தில் அமர்ந்திருக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டதை சிலைகளுடன் காணப்பட்ட பீடங்கள் உறுதி செய்கின்றன. இப்பீடங்கள் பல அளவுகளில் சதுரமாகவும், வட்டமாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. பீடத்தில் அமர்ந்துள்ள தெய்வங்கள் வலது காலை மடித்து, இடது காலைத் தொங்கவிட்ட நிலையில் ஏதோ வரம் அளிப்பது போல் காணப்படுகின்றன. இதனால் இச்சிலைகளை நாக வழிபாட்டு ஆலயங்களில் காணப்படும் நாக, நாகினி தெய்வங்களாகக் கொள்ளலாம்.

பிற்காலத்தில் இலங்கைத் தமிழரிடையே மரநிழலின் கீழ் அல்லது சிறிய ஆலயங்களில் நாகக் கற்களை வைத்து வழிபடும் மரபு காணப்படுகின்றது. அக்கற்கள் பெரும்பாலும் கருங்கற்களை சதுரமாக அல்லது வட்டமாக வெட்டி கல்லின் மேற்பகுதியில் நாகபாம்பு படமெடுத்த நிலையிலும், கல்லின் கீழ்பகுதியில் அதன் உடற்பகுதி கல்லைச்சுற்றி வளையங்களாகவும் செதுக்கப்பட்டிருக்கும். இம்மரபு பெருங்கற்கால பண்பாட்டிலேயே தோன்றியிருக்கலாம் என்பதை நாகபடுவான் அகழ்வாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. இங்கு அதிக எண்ணிக்கையில் நாகக் கற்கள் கிடைத்துள்ளன. இவை கற்களுக்குப் பதிலாக மண்ணால் வட்டவடிவில் செய்யப்பட்டு பின்னர் நெருப்பில் சுடப்பட்டவையாகக் காணப்படுகின்றன. இச்சுடுமண் நாகக் கற்களில் நாகத்தின் உடற்பாகங்கள் வளையங்களாகச் செய்யப்பட்டு அதன் மேற்பாகம் வட்டவடிவில் அழகாக வடிமைக்கப்பட்டுக் காணப்படுகின்றன. இதன் மேற்பகுதியில் நாக பாம்பு இணைந்திருக்கும் நிலையில் இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை. ஆயினும் இந்நாகக் கற்களுக்கிடையே தனியாகப் படமெடுத்த நாகச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவை நாகக் கற்களின் மேற்பகுதியில் வைக்கப்பட்ட நாகச் சிற்பங்களாக இருக்கலாம்.

பிற்கால நாக வழிபாட்டில் செப்புத்தட்டத்தில் அல்லது செப்புப் பாத்திரத்தில் நாகபாம்பை வைத்து வழிபடுதல் அல்லது நாகதோசம் நீங்குவதற்காக அதனை ஆலயங்களுக்கு கொடுக்கும் மரபு காணப்படுகிறது. சில ஆலயங்களில் நாகதோசம் நீங்குவதற்கு நாகபாம்பை மண் சட்டியில் வைத்துக் கொடுக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. இம்மரபு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தோன்றியதை நாகபடுவான் அகழ்வாய்வு உறுதிப்படுத்துகின்றது. இங்கு அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்ட மூன்றாவது ஆய்வுக்குழியில் மண் சட்டிகளின் விளிம்புப் பகுதியில் நான்கு திசைகளை நோக்கியவாறு நாகபாம்பு படமெடுத்த நிலையில் இருக்க, அவற்றின் வால் பகுதிகள் சட்டிக்குள் இணைந்து சட்டியின் நடுமையத்தில் ஒரு வளையமாகக் காணப்படுகின்றது. இக்குழியின் இன்னொரு இடத்தில் சிறிய வாய்ப்பகுதி கொண்ட பானையும், பானையின் மேற்பகுதியில் வாய்பபகுதியைச் சுற்றி மூடிய நிலையில் நான்கு சிறு கலசங்களும் காணப்படுகின்றன. பானையின் மூன்று திசைகளிலும் தெய்வங்கள் அமர்ந்திருக்கும் பீடங்கள் காணப்படுகின்றன.



**2000 ஆண்டுகளுக்கு முன்னர் வடஇலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறும் பிராமிக் கல்வெட்டு**

அவற்றில் அமர்ந்துள்ள தெய்வத்தின் இடது கால் பானையை முட்டியவாறு உள்ளது. நான்காவது திசையில் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நாக பாம்பு காணப்படுகிறது. இவ்வாறு வேறுபட்ட சின்னங்கள் ஒரேயிடத்தில் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட வகையில் வைக்கப்பட்டதற்கான பொருள் விளக்கத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நாக வழிபாடு பற்றிய ஆய்வில் புலமையுடைய தமிழக அறிஞர்களுக்கும் இது புதிய சான்றாகக் காணப்படுவதால் அவர்களும் மாறுபட்ட கருத்துக்களையே தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் இச்சின்னங்கள் நாகபாம்பை முதன்மைத் தெய்வமாகக் காட்டுவதற்காக செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இருக்கலாம் எனக் கூறலாம். இதை இங்குள்ள பானையில் இருந்து எடுக்கப்பட்ட நாக உருவமும் உறுதிப்படுத்துகிறது.

தமிழரிடையே பாம்புப் புற்றை வழிபடும் மரபு மிகத் தொன்மையானது. இவ்வழிபாட்டு மரபு சமகாலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு வடஇலங்கை, கிழக்கிலங்கையிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைச் சான்றாகக் காட்டலாம். மரநிழலின் கீழுள்ள பாம்புப் புற்றிற்குப் படையல் செய்து வழிபட்ட மக்கள் காலப்போக்கில் பாம்புப் புற்றை கர்ப்பக்கிருகத்தில் வைத்து அதற்கு ஆலயம் அமைத்து வழிபடுகின்றனர். இதற்கு யாழ்ப்பாணத்தில் எருவன், கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு ஆகிய இடங்களிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைக் குறிப்பிடலாம். இப்பாம்புப் புற்று வழிபாட்டை பெருங்கற்கால மக்கள் மண் பானையில் செய்து வழிபட்டதை நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட பானை உறுதிசெய்கிறது. இப்பானையில் செய்யப்பட்ட சிறிய துவாரமும், அதைச் சுற்றி கவிழ்ந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய கலசங்களும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்ததால், முழுமையாக மண்ணுடன் அகழ்ந்து எமது அருங்காட்சியகத்திற்கு எடுத்து வந்தோம். இப்பானைக்குள் இருக்கக் கூடிய சின்னங்களை கண்டறியும் நோக்கில் தமிழகத் தொல்லியல் அறிஞர் வை. சுப்பராயலு அவர்களின் ஆலோசனையுடன் ஆராய்ந்த போது அதற்குள் அழகான நாகபாம்புச் சிலையைக் கண்டுபிடிக்க முடிந்தது. இதிலிருந்து, நிலத்தில் நாட்டப்பட்ட நாகபாம்புச் சிலையை அரைவட்ட வடிவில் செய்யப்பட்ட பானையால் மூடி, அக்கால மக்கள் வழிபட்டனர் என்பது தெரியவந்துள்ளது. இம்மரபே பிற்காலத்தில் புற்று வழிபாடு தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இதன் முக்கியத்துவம் தொடர்பாக கலாநிதி பொ. இரகுபதி கூறும்போது "பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்கள் பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும், பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்புப் புற்றிலிருந்து பாம்பு வெளியேறும் வழியாகவும் உள்ளன. பிற்காலத்தில் பாம்புப் புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாக கொண்டு படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இருந்த பூர்வீக வழிபாட்டு மரபையே நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட வழிபாட்டு மையம்

உறுதிப்படுத்துவதாகக் கொள்ள முடிகிறது."

தென்னாசியா நாடுகளிடையே மத வழிபாட்டில் நாகபாம்பைக் குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த மக்களிடையே, அது காலப்போக்கில் இனம், தனிநபர், அம்மக்கள் வாழ்ந்த இடம், பிராந்தியம் என்பவற்றை அடையாளப்படுத்தும் பெயராக மாறியது வரலாறாகும். இலங்கையில் பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து நாகவழிபாட்டு மரபு தோன்றியதற்கு கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள் சான்றாகக் காணப்பட்டாலும் அம்மரபு காலப்போக்கில் தமிழரையும், தமிழர்கள் வாழ்ந்து வரும் பிராந்தியத்தையும் குறித்ததென்பதை இங்கே எடுத்துக்காட்டுவது இவ்வாய்வின் முக்கிய கருப்பொருளாகும். நீண்டகாலமாக "நாக" என்ற பெயரின் மூலமொழி பற்றி அறிஞர்கள் பலரும் ஆராய்ந்து வருகின்றனர். மொழியியல் அறிஞர்களில் ஒரு சாரார் இதன் மூல மொழி வடமொழி சார்ந்ததெனவும், குமார் சட்டர்ஜி, பரோ போன்ற மொழியியல் அறிஞர்கள் இது திராவிட மொழி சார்ந்ததெனவும் கூறுகின்றனர். ஆயினும் இலங்கையில் இப்பெயரை மொழி வேறுபாடின்றி பலதரப்பட்ட மக்களும் தனிநபர் பெயராகப் பயன்படுத்தியதற்கு பிராமிக் கல்வெட்டுக்களிலும், பாளி இலக்கியங்களிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அக்காலத்தில் இருந்தே நாக என்ற பெயரில் தமிழ் மொழியின் செல்வாக்கு ஆரம்பமாகியுள்ளது.

தென்னாசியாவின் பல வட்டாரங்களில் சுதேச மொழிகள் இருந்தும், கி.பி. 3 ஆம் நூற்றாண்டுவரை (இற்றைக்கு 1700 ஆண்டுகளுக்கு முன்னர்) பௌத்த, சமண மதங்களின் மொழியான பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்தது. சமகாலத்தில் தமிழகத்தில் கல்வெட்டு மொழியாக தமிழ் இருந்தாலும் அக் கல்வெட்டுகளில் 25 விழுக்காடுச் சொற்கள் பிராகிருதமாக உள்ளன. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகள் பிராகிருத மொழியில் பௌத்த மதம் சார்ந்த செய்திகளைக் கூறுகின்றன. ஆயினும் இக் கல்வெட்டுகளில் தமிழகப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் தமிழ் மொழிக்கே உரிய சிறப்பான எழுத்துக்களும், தமிழ்பிராமி எழுத்தை ஒத்த வடிவங்களும், தமிழ்ப் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் பிராகிருத மொழியை எழுதுவதற்கு 40 எழுத்துக்கள் இருந்தும் கல்வெட்டுகளில் தமிழ்ப் பிராமி பயன்படுத்தப்பட்ட இருபது வகையான எழுத்துகளும், எழுத்து வடிவங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளமை சிறப்பாக நோக்கத்தக்கது. ஒரு எழுத்து தோன்றி பல ஆண்டுகள் கடந்த பின்னரே அவ்வெழுத்தின் வடிவம் மாற்றம் பெறுகின்றது. ஆனால் இலங்கையில் பிராகிருத மொழியில் எழுதப்பட்ட தொடக்ககாலக் கல்வெட்டுகளிலேயே தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கலந்து எழுதப்பட்டுள்ளமையால், பிராகிருத மொழி வருவதற்கு முன்னரே இங்கு தமிழ் மொழியின் பயன்பாடு இருந்துள்ளமை தெரிகிறது. இவற்றைக் கருத்திற் கொண்டே சிங்கள எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்ன, ஆரிய அபயசிங்கா, பெர்ணுந்தோ போன்ற அறிஞர்கள் பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி எழுத்து இலங்கைக்கு அறிமுகமாவதற்கு முன்னர் தென்னகப் பிராமி எழுத்து புழக்கத்தில் இருந்துள்ளது எனக் கூறுகின்றனர் (Ariyasinghe 1965, Karunaratne 1984).

**தமிழரிடையே பாம்புப் புற்றை வழிபடும் மரபு மிகத் தொன்மையானது. இவ்வழிபாட்டு மரபு சமகாலத்திலும் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு வடஇலங்கை, கிழக்கிலங்கையிலுள்ள நாக வழிபாட்டு ஆலயங்களைச் சான்றாகக் காட்டலாம்.**

பௌத்த மதம் பற்றிக் கூறும் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் நாக என்ற பெயர் பிராகிருத மொழியில் 'நஹ', 'நஹஸ', 'நஹய', 'நஹலி' என்றே எழுதப்பட்டுள்ளன. (Paranavitana 1970 : nos 1120,1998. 1982 : nos :

**கி.பி.10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி சூளவம்சத்தில் காணப்படுகிறது (Culavamsa 53 : 1216). இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்திருக்கலாம் என்பதை வெசகிரியில் கிடைத்த சிங்களச் சாசனம் உறுதிப்படுத்துகின்றது (E. Z, I : 3551). ஆனால் இதே காலப்பகுதியில் சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்து வெற்றி பெற்ற செய்திகளை அவன் வெளியிட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன.**

126,138,180, 267). ஆயினும் சில கல்வெட்டுகளில் தமிழகத்தைப் போல் இப்பெயர் 'ந(h)க', 'நாக', 'ணாக' எனத் தமிழ் மயப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளன (Mahadevan 1966 : no 33). இவ்வாதாரங்கள் நாக என்ற பெயரில் தமிழர்கள் இங்கு வாழ்ந்ததையும், அவர்கள் பௌத்தர்களாக அல்லது பௌத்த மதத்தை ஆதரித்தவர்களாக இருந்துள்ளனர் என்பதையும் உறுதிப்படுத்துகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டு இங்கிருந்த 'நாகநகர்' பற்றிக் கூறுகிறது (Karunaratne 1984 : 82). இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் 'நஹநஹர' (Naganagara) என எழுதப்படும் இப்பெயர், இச்சாசனத்தில் தமிழில் 'ந(h)கநகர்' (Nakanakar) என எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. கலாநிதி இரகுபதி, கல்வெட்டில் வரும் இந்த 'நாகநகர்' அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார் (Ragupathy 1991). ஆனால் நிக்லஷ் என்ற அறிஞர் கி.பி. 9 ஆம் நூற்றாண்டுக்குரிய சாசனமொன்றில் வரும் நாகநகரை ஆதாரம் காட்டி மேற்கூறப்பட்ட கல்வெட்டில் வரும் நாகநகரை வவுனியாவுக்கு வடக்கில் இருந்த ஒரு நகரம் என அடையாளப்படுத்துகிறார் (Nicholas 1963 : 81). இந்நகரம் எங்கு அமைந்திருந்தாலும் இந்த நகரில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களாக இருந்தனர் என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகின்றது என்பதில் ஐயமில்லை.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் நூற்றுக்கணக்கான பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்நாணயங்கள் இலங்கைத் தமிழரின் தொன்மையையும், நாக மன்னர்களின் ஆட்சியையும் உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. இங்கு கிடைத்த நாணயங்கள் சில தமிழ் மொழியில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு நாணயங்களில் 'நாக' மற்றும் 'ணாக' என்ற பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன (Bopearachchi 1999 : 51-60, Pushparatnam 2003 : 67-78). ஒரு நாணயத்தில் அதை வெளியிட்ட மன்னன் பெயர் 'திஷபுர சடணாகராசன்' என எழுதப்பட்டுள்ளது (Pushparatnam 2002 : 56). இதன் பொருள் 'திஷபுரத்தில் ஆட்சி புரிந்த சடணாகராசன் என்ற மன்னன் வெளியிட்ட நாணயம்' என்பதாகும். இதன் மூலம் இச் சிற்றரசனின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென்னிலங்கை மக்களில் ஒரு பிரிவினராவது தமிழ் மொழி பேசிய நாக இன மக்களாக இருந்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு. மேலும் இக்காலகட்ட அரசியல் வரலாற்றைக் கூறும் மகாவம்சம், துட்டகாமினி என்ற மன்னன் எல்லாளன் என்ற தமிழ் மன்னனை அநுராதபுரத்தில் வெற்றி கொள்வதற்கு முன்னர் தென்னிலங்கையில் அதிகாரம் செலுத்தி வந்த 32 தமிழ்ச் சிற்றரசர்களை ஆரம்பத்தில் வெற்றி கொள்ள வேண்டியிருந்ததாகக் கூறுகிறது. மகாவம்சத்தின் இக்கூற்று கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முன்னரே தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்ததற்கு மேலும் சான்றாகும்.

1990 களில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் உடுத்துறை என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கி.பி. 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாணயம் வடஇலங்கையிலும் தமிழ் மொழி பேசிய நாகரின் ஆட்சியிருந்ததற்கு முக்கிய சான்றாகக் காணப்படுகிறது. இந்நாணயத்தின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்ட சாசனத்தை இந்திய அறிஞர் பேராசிரியர் சுப்பராயலு நாகவம்சம் எனவும், சாசனவியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் 'நாகபூமி' (Nkapmi) எனவும் வாசித்துள்ளனர். இருவரின் வாசிப்புக்களிலும் சிறிய வேறுபாடு காணப்பட்டாலும் இந்நாணயம் நாகரின் ஆட்சியில் வெளியிடப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ சமகாலத்தில் அநுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த நாக மன்னர்களைப் பற்றியும் மகாவம்சம் கூறுகிறது. அவர்களுள் இளநாக மன்னனின் பட்டத்தரசியாக இருந்த தமிழாதேவி (தமிழ் அரசி) பற்றியும் இந்நூல் மேலும் கூறுகின்றது. இப்பெயரில் இருந்து இளநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கூறுகின்றனர். மேற்கூறப்பட்ட ஆதாரங்களில் இருந்து தமிழ்மொழி பேசிய நாக மக்கள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இலங்கையின் பல வட்டாரங்களில் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆயினும் தற்காலத்தில் நாகர் பற்றிய வரலாற்று நினைவுகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களிடையே பெரிதும் காணப்படுகின்றன.

பேராசிரியர் இந்திரபாலா, தென்னிந்தியாவிலிருந்து பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுக்கள், அநுராதபுரத்திலும் தென்னிலங்கையின் ஏனைய பிராந்தியங்களிலும் பிராகிருத மொழி தழுவிய பேரினக் குழுவாக உருவாகிய போது, ஏனையோர் வடக்கில் தமிழ் இனக்குழுவுடன் கலந்து கொண்டனர் எனக் குறிப்பிடுகிறார் (Indrapala 2005 : 172-73). இந்த இனக்குழு வடக்கில் மட்டுமன்றி சமகாலத்தில் கிழக்கிலும் தோன்றியது எனக் கூறலாம். இலங்கையில் கி.மு. 3 ஆம், 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஐந்து பிராமிக் கல்வெட்டுகள், தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழ்ந்ததை உறுதி செய்கின்றன. அவற்றுள் நான்கு கல்வெட்டுகளில் இரண்டு வடஇலங்கையில் வவுனியாவிலும், ஏனைய இரண்டு கல்வெட்டுகள் கிழக்கிலங்கையில் அம்பாறை (குடுவில்), திருகோணமலையில் சேருவில் ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் சிலவற்றில் நாகர் பற்றிய குறிப்புகளும் இடம்பெற்றிருப்பது வரலாற்றுத் தொடக்கத்திலேயே நாக இனக்குழுவின் மொழியாகத் தமிழ் இருந்ததற்குச் சான்றாகும். இதை இப் பிராந்தியங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன.

> 1936 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு பொற்சாசனமாகும்.

அண்மைக்காலங்களில் தமிழகத்திலும், இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட மட்பாண்ட சாசனங்கள் (Brahmi Potsherds) தொடர்பான ஆய்வுகளும், நவீன காலக்கணிப்புகளும் இலங்கையில் தமிழ் மொழியின் தொன்மையை உறுதிப்படுத்துவதில் அதிக முக்கியத்துவம் பெறுகின்றன. பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்ட சாசனங்கள் பெரும்பாலும் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன் மங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டவையாக உள்ளன. இவற்றில் மட்பாண்டத்தை வனைந்தவர்களின் பெயர்கள் அல்லது அதைப் பயன்படுத்தியவர்களின் பெயர்களே பெரும்பாலும் காணப்படுகின்றன. இவ்வாறான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் தமிழகத்திலும் இலங்கையிலும்

மட்டும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. அநுராதபுர பெருங்கற்காலப் பண்பாட்டு அகழ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்துப் பொறித்த சாசனங்கள், நவீன காலக்கணிப்பில் கி.மு. 650 முதல் கி.மு. 700 வரை பயன்பாட்டிலிருந்தவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஆதிச்சநல்லூர் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களின் காலம் ஏறத்தாழ கி.மு. 550 இற்கு முற்பட்டவை எனக் கணிப்பிடப்பட்டுள்ளன (Conigham, Robin 2002 : 99-107). இக்காலக்கணிப்புகள் பௌத்த மதத்துடன் பாளி, பிராகிருத மொழி இலங்கைக்கு அறிமுகமாவதற்கு ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் எழுத்தும், தமிழ் மொழியின் பயன்பாடும் புழக்கத்தில் இருந்துள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றன. இவ்வகையான பிராமி எழுத்துப் பொறித்த மட்பாண்டச் சாசனங்கள் வடஇலங்கையில் கந்தரோடை, பூநகரி, இரணைமடு ஆகிய இடங்களிலும், மட்டக்களப்பில் வவுணதீவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பூநகரி (ஈழவூர்), இரணைமடு ஆகிய இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டங்களில் நாக என்ற பெயரும், வவுணதீவில் கிடைத்த மட்பாண்டங்களில் தம்பன், வண்ணக்கன் ஆகிய பெயர்களும், இருபது மட்பாண்டங்களில் 'ணாகன்' என்ற பெயரும் காணப்படுகின்றன. இப்பெயர், தமிழ் மொழிக்குரிய 'அன்' என்ற விகுதியுடன் முடிவது சிறப்பாக நோக்கத்தக்கது. இவ்வாதாரங்கள் மூலம், வடக்கு - கிழக்கின் பூர்வீக மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழு எனவும், அவர்களில் பெரும்பான்மையோர் தமிழ் மொழிபேசும் மக்களாக வாழ்ந்து வந்துள்ளனர் எனவும் கூறலாம். இதற்கு மேலும் சில ஆதாரங்களைக் காட்டலாம்.

பாளி வரலாற்று ஏடுகளில் இலங்கையின் புராதன துறைமுகங்களின் பெயர்கள் தொட்ட, தொட என்ற விகுதியுடன் முடிகின்றன. ஆனால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுக நகரங்கள் 'பட்டன' என்ற விகுதியோடு அழைக்கப்படுகிறது. இதற்கு ஜம்புக்கோலபட்டன (யாழ்ப்பாணம்) (Maha vamsa:xi.23,38, xviii:7, xix 23, 25, 60 xx:25), கோணகாமகபட்டன (திருகோணமலை மாவட்டம்) (Ibid:iii.24, Culavamsa xli: 79, xlviii.5. lxxi.18), மஹபட்டன (மன்னார் மாவட்டம்) (இந்திரபாலா 2006:180) ஆகிய துறைமுக நகரங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம். இதில் பின்னொட்டு விகுதியாக வரும் 'பட்டினம்' என்பதை ஒரு திராவிடச் சொல்லாகக் குறிப்பிடும் மொழியியல் அறிஞர் பரோ இது பட், பட்டி என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததாகக் குறிப்பிடுகிறார் (Burrow 1968:211). இப்பெயர் மலையாள, கன்னட மொழிகளில் பட்டி எனவும், தெலுங்கில் பட்டு எனவும், சமஸ்கிருதத்தில் பட்டன எனவும் அழைக்கப்படுகிறது. இவை கடற்கரைசார்ந்த நகர், சிறுநகர், கிராமம், ஊர் போன்ற இடங்களைக் குறிக்கின்றன (Burrow & Emeneau 1961 : no.3199). சங்க நூல்களில் பட்டினம் என்பது பொதுவாக கடற்கரை சார்ந்த இடங்களுக்குரிய பெயராகக் குறிப்பிடப்படுகிறது. தமிழகத்தில், ஆந்திராவில் இருந்து கன்னியாகுமரி வரையுள்ள கடற்கரை சார்ந்த சமூகங்களை 'பட்டினத்தார்' என அழைக்கும் மரபு காணப்படுகின்றது (Veluppillai 2002:149). ஈழத் தமிழரிடம் நகரங்களில் வசிப்போரை 'பட்டணத்தார்' என அழைக்கும் மரபு இன்றும் காணப்படுகின்றது. பேராசிரியர் இந்திரபாலா, இலங்கையில் ஏனைய துறைமுகங்களுக்கு பட்டினம் என்ற விகுதி பயன்படுத்தப்படாது, வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இருந்த துறைமுகங்களுக்கு மட்டும் அப்பெயர் பயன்படுத்தப்பட்டுள்ளமை, ஆதியிலும் இங்கு தமிழ்மொழி பேசுவோர் அல்லது திராவிட மொழிபேசுவோர் வாழ்ந்த இடங்கள் என்பதற்கான மறைமுக ஆதாரங்கள் எனக் குறிப்பிடுகிறார் (இந்திரபாலா 2006: 180).

பேராசிரியர் வேலுப்பிள்ளை, சம்பந்தர் தேவாரத்தில், திருகோணமலை பற்றி வரும் "குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்" என்ற சொற்றொடர் அங்கு தமிழர்கள் செறிந்து வாழ்ந்தமைக்குச் சான்றாக அமைகின்றதெனக் குறிப்பிடுகிறார்

(வேலுப்பிள்ளை 1986). பேராசிரியர் கே.எம். டீ. சில்வா, பக்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்த என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும் சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் முனைப்புப் பெற்றமைக்கும், அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறியதற்கும் காரணம் எனக் கூறுகிறார் (Silva 1981: 2021). ஒன்பதாம் நூற்றாண்டில் (கி.பி. 835), பாண்டிய மன்னன் ஸ்ரீமாறஸ்ரீவல்லபன் அநுராதபுரத்திற்கு எதிராகப் படையெடுத்து வந்து வடஇலங்கையில் (உத்தரதேசத்தில்) தங்கியிருந்த போது, மாதோட்டத்தில் வாழ்ந்த தமிழர்களும் அவர்களுடன் இணைந்து அநுராதபுர அரசைத் தோற்கடித்தனர் என சூளவம்சம் கூறுவதும் இக்கூற்றை உறுதிப்படுத்துவதாக உள்ளது (Culavamsa 50:12 42).

பண்டுதொட்டு, திருகோணமலை உள்ளிட்ட அநுராதபுரத்திற்கு வடக்கில் உள்ள பிராந்தியம் நாகதீப(ம்), நாகநாடு என வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இப்பெயர்களே கி.பி. 13 ஆம் நூற்றாண்டு வரை இப்பிராந்தியத்தில் வன்னி, வன்னிப்பற்று என்ற பெயர்களும், 15 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பட்டினம் என்ற பெயரும் தோன்றும் வரை தொடர்ச்சியாகப் பயன்பாட்டில் இருந்து வந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. பண்டைய இலங்கையில் நாக இனமக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் பல பிராந்தியங்களில் காணப்பட்டாலும், அது இலங்கையில் ஒரு பிராந்தியத்தின் பெயராக அடையாளப்படுத்திக் கூறப்பட்டு வருவது, தற்காலத்தில் இப்பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாறு பெருங்கற்காலப் பண்பாட்டை அறிமுகப்படுத்திய நாக இனக்குழுவோடு தோன்றி வளர்ந்ததைக் காட்டுகின்றது எனலாம். மகாவம்சம், கி.மு.6 ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது, நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்துவைத்ததாகக் கூறுகிறது (Mahavamsa 8:54). மகாவம்சம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதீகமாக இருப்பினும், இந்நூல் எழுதப்பட்ட கி.பி 6 ஆம் நூற்றாண்டில், அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரால் அழைக்கப்பட்டதை இவ்வரலாற்றுச் செய்திகள் உறுதிப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

ஆதிகாலத்தில் இந்தியாவை அடுத்து இலங்கையுடன் அதிக அளவில் வணிக உறவை ஏற்படுத்திக் கொண்ட வரலாறு கிரேக்க, உரோம நாட்டு வணிகர்களுக்கு உண்டு. இவ்வுறவுகள் பெரும்பாலும் வடஇலங்கைத் துறைமுகங்கள் ஊடாக நடைபெற்றதை மாதோட்டம், கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, பூநகரி, சாட்டி, அண்மையில் கட்டுக்கரை முதலான இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட கிரேக்க, உரோம நாடுகளுக்குரிய பலவகை மட்பாண்டங்கள், மதுச்சாடிகள், நாணயங்கள் என்பன உறுதி செய்கின்றன. இவ்வணிக உறவுகள் பற்றிக் கூறும் இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பில், இலங்கையில் இருந்த முக்கிய கரையோரப் பட்டினங்களில் ஒன்றாக நாகதீபம் ‘நாகடிப’ என்ற இடம் கூறப்பட்டிருப்பதுடன், அவ்விடம் அவர் வரைந்த தேசப்படத்தில், இலங்கையின் வடபகுதியில் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (Weerakkody 1997:87).

1936 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம் என்ற இடத்தில் பிராமி எழுத்துப் பொறித்த கி.பி.3 ஆம் நூற்றாண்டுக்குரிய பொற்சாசனம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுவே இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு பொற்சாசனமாகும். இச்சாசனத்தில் ‘நகதிவ’ என்ற இடத்தில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரை பற்றிக் கூறப்படுகின்றது (Paranavitana 1982 : 79-80). இந்த ‘நாகதிவ’ என்ற பெயர் பாளி மொழியில் வடஇலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட நாகதீப(ம்) என்ற பெயரின் இன்னொரு வடிவமாகும். சாசனத்தில் பிராகிருத மொழியுடன் சில தமிழ்ச்

சொற்களும் கலந்து எழுதப்பட்டுள்ளன என்பது இச்சாசனத்தில் காணக்கூடிய சிறப்பம்சம் ஆகும். உதாரணமாக, பிராகிருத மொழியில் 'நாஹ' என எழுதப்படும் பெயர் இச்சாசனத்தில் நாக என தமிழில் எழுதப்பட்டுள்ளது. இந்த வேறுபாடுகள், இச்சாசனத்தை நாகதீபத்தில் வாழ்ந்த தமிழ்ப் பௌத்தர்கள் எழுதியிருக்கலாம் எனக் காட்டுகிறது.

வடஇலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட நாகதீப(ம்) என்ற பெயர் சில இடங்களில் நாகநாடு, உத்திரதேசம் (வடபகுதி) எனவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கி.பி. 6 ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை, தமிழகத்திற்கு அப்பால் கடல் கடந்து செல்ல வேண்டிய இடங்களில் ஒன்றாக நாக நாட்டைக் குறிக்கின்றது. இதன் சமகாலத்திற்குரிய வேலூர்ப்பாளைச் செப்பேட்டில், பல்லவ மன்னன் ஒருவன் நாககுல மகளை மணந்த செய்தி சொல்லப்படுகின்றது (பாலசுப்பிரமணியம்). இதன் பின்னர் தோன்றிய கலிங்கத்துப்பரணியில், சோழ வம்சத்துக் கிள்ளிவளவன் நாகநாட்டு இளவரசியை மணந்த கதை கூறப்படுகின்றது.

எட்டாம் நூற்றாண்டில், ஸ்ரீநாக என்பவன் தலைமையில் நாகதீபத்தில் (உத்தரதேசத்தில்) இருந்து அநுராதபுரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பு பற்றிய செய்திகள் சூளவம்சத்தில் காணப்படுகின்றன (*Culavamsa* 44 : 70-73). சுவாமி ஞானப்பிரகாசர் இப்படையெடுப்பை மேற்கொண்ட ஸ்ரீநாகன் ஒரு தமிழ் மன்னனாக இருக்கவேண்டும் எனக் கூறுகின்றார் (ஞானப்பிரகாசர் சுவாமி 1928 : 47-50). பக்தி இயக்கத்தை தலைமையேற்று நடாத்திய நாயன்மார்களுள் ஒருவரான சுந்தரர் தேவாரத்தில், தமிழகத்தை அடுத்து முதன்மை பெற்ற ஆலயங்களாக வடஇலங்கையில் மாதோட்டத்திலுள்ள திருக்கேதீஸ்வரத்தையும், கிழக்கிலங்கையில் திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரர் ஆலயத்தையும் போற்றிப்பாடுகிறார். பேராசிரியர் வேலுப்பிள்ளை மாதோட்டத்தில் உள்ள ஆலயம் கேதீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றதற்கு அது நாகரின் ஆலயமாக இருந்ததே காரணம் எனக் குறிப்பிடுகின்றார் (*Ktu is considered to be a cobra representing the Nagas. Veluppillai* 2002:154).

கி.பி.10 ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய மன்னன் வல்லபன் என்பவன் நாகதீபத்தின் மீது படையெடுத்த செய்தி சூளவம்சத்தில் காணப்படுகிறது (*Culavamsa* 53 : 12-16). இப்படையெடுப்பு தோல்வியில் முடிந்திருக்கலாம் என்பதை வெசகிரியில் கிடைத்த சிங்களச் சாசனம் உறுதிப்படுத்துகின்றது (E. Z, I : 35-51). ஆனால் இதே காலப்பகுதியில் சோழ மன்னன் முதலாம் பராந்தகன் ஈழத்தின் மீது படையெடுத்து வெற்றி பெற்ற செய்திகளை அவன் வெளியிட்ட கல்வெட்டுகள் கூறுகின்றன. இந்த வெற்றியின் நினைவாகப் பராந்தக சோழன் 'ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்' என்ற விருதைப் பெற்றதையும், அந்த வெற்றியின் நினைவாக ஈழக் காசு என்ற பெயரில் நாணயம் வெளியிட்டான் என்பதையும் அவன் ஆட்சிக்கால கல்வெட்டுகள் உறுதி செய்கின்றன. நாணயவியல் அறிஞர்கள் வடமொழியில் 'உரக' என்ற பெயர் பொறித்த பொன் நாணயத்தையே பராந்தகசோழன் ஈழத்தை வெற்றி கொண்டதற்காக வெளியிட்டான் என அடையாளப்படுத்தியுள்ளனர். சோழ மன்னர்கள் கல்வெட்டுகளை தமிழில் வெளியிட்ட போது சர்வதேச வர்த்தகத்திற்காக தமது பெயர்களையும், நாடுகளையும் நாணயங்களில் வடமொழியில் வெளியிட்டனர். இங்கே நாணயத்தில் வரும் 'உரக' என்ற வடமொழிச் சொல் நாகர் அல்லது நாகநாடு எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த உதயணன் பெருங்கதையும், பிற்பட்ட மயிலநாதர் உரையும் தமிழகத்தைச் சுற்றியுள்ள நாடுகளாக ஈழத்தையும், சிங்களத்தையும் தனித்தனியாகக் கூறுகின்றன (வேலுப்பிள்ளை 1986:10). இவ்வாதாரங்களில் இருந்து பராந்தகச் சோழன், தான் வெற்றி கொண்ட நாக நாட்டைக் குறிக்க நாணயத்தில் வடமொழியில் 'உரக' என்ற

பெயரையும், கல்வெட்டுகளில் தமிழில் 'ஈழம்' என்ற பெயரையும் பயன்படுத்தினான் எனக் கூற முடிகிறது. பாளி மொழியில் நாகதீப என அடையாளப்படுத்தப்பட்ட வடஇலங்கை கி.பி.13 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள இலக்கியத்தில் 'மணிநாகதீப' என்ற பெயரால் அடையாளப்படுத்தப்படுகின்றது. கொடகும்புர என்ற அறிஞர் இப்பெயர் கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனவும் கூறுகிறார் (Godakumbura 1968:7). ஏறத்தாழ இதே காலப்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து வடஇலங்கை மீது படையெடுத்த கலிங்கமாகன் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி அங்கு நாகர்குல அரசனைச் சந்தித்ததாக மட்டகளப்புமான்மியம் கூறுகின்றது (மட்டகளப்புமான்மியம் :54).

பண்டைய கால இலங்கையில் நாக மரபை நினைவுபடுத்தும் பெயர்களை பல மொழிபேசிய மக்களும் பயன்படுத்தியுள்ள போதிலும் அப்பெயர்கள் பிற்காலத்தில் படிப்படியாக மறைந்துவிட்டன. ஆனால் தமிழர் மத்தியில் அப்பெயர்கள் தற்காலம் வரை பயன்பாட்டிலுள்ளன. இதற்கு, வடக்கு - கிழக்கில் வாழும் தமிழர் சமூகத்தில் பயன்படுத்தப்படும் நாகன், நாகி, நாகதேவன், நாகராசன், நாகம்மாள், நாகவண்ணன், நாகநாதன், நாகமுத்து முதலான தனிநபர் பெயர்களையும், அவர்கள் வாழ்விடங்களில் புழக்கத்திலுள்ள நாகர்கோயில், நாகமுனை, நாகபடுவான், நாகதேவன்துறை, நாகமலை, நாகதாழ்வு முதலான இடப் பெயர்களையும், கிராமங்கள் தோறும் காணப்படும் நாக வழிபாட்டு ஆலயங்களையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக குலமரபுடன் தமிழருக்கிருந்த நீண்டகால உறவையும், தொடர்பையும் உறுதிப்படுத்துவதாக உள்ளன.

இலங்கையின் பூர்வீக மக்கள் தொடர்பாக ஆராய்ந்த தொல்லியல், வரலாற்று அறிஞர்கள்

பண்டைய கால இலங்கையில் நாக மரபை நினைவுபடுத்தும் பெயர்களை பல மொழிபேசிய மக்களும் பயன்படுத்தியுள்ள போதிலும் அப்பெயர்கள் பிற்காலத்தில் படிப்படியாக மறைந்துவிட்டன. ஆனால் தமிழர் மத்தியில் அப்பெயர்கள் தற்காலம் வரை பயன்பாட்டிலுள்ளன. இவ்வாதாரங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக குலமரபுடன் தமிழருக்கிருந்த நீண்டகால உறவையும், தொடர்பையும் உறுதிப்படுத்துவதாக உள்ளன.

பலரும் சிங்கள மக்களின் பூர்வீகத்தை வடஇந்தியாவுடனும், தமிழரின் பூர்வீகத்தை தமிழ்நாட்டுடனும் (தென்னிந்தியா) தொடர்புபடுத்தி அழுத்தமாக ஆராயும் அணுகுமுறையைப் பின்பற்றி வந்துள்ளனர். ஆயினும் சமீபகாலத் தொல்லியல், மானிடவியல், மொழியியல், சமூகவியல் ஆய்வுகள் தற்காலத் தமிழ், சிங்கள மக்களின் மூதாதையினர், தென்னிந்தியாவிலிருந்து - சிறப்பாக தென்தமிழகத்தில் இருந்து - புலம்பெயர்ந்து வந்த நுண்கற்கால, பெருங்கற்கால மக்களின் வழித்தோன்றல்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இதன் மூலம் தமிழ், சிங்கள மக்கள் ஒரே இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இதையே பேராசிரியர் சேனக பண்டாரநாயக்காவின் 'இலங்கை மக்களிடையே உடற்கூற்றியல் வேறுபாடுகள் இல்லை. பண்பாட்டு வேறுபாடுகளே உண்டு' என்ற கூற்றும் உணர்த்துகின்றது. பௌத்த மதத்துடன் அறிமுகமான பாளி, பிராகிருத மொழிகள் இங்கிருந்த தமிழ், திராவிட, ஆதி ஒஸ்ரிக் மொழிகளுடன் கலந்ததன் விளைவாக இலங்கையில் மொழிவழிப் பண்பாடுகள் தோன்றின. அவற்றுள் பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக இனக்குழுவின் ஒரு பிரிவினர், பிராகிருத மொழியால்

உள்வாங்கப்பட்டு பிராகிருத மொழி பேசும் பெரும்பான்மை இனக்குழு உருவாகி, அது காலப்போக்கில் சிங்கள மொழிபேசும் பௌத்தர்களாக மாறிய போது, நாக இனக்குழுவின் இன்னொரு பிரிவினர் தொடரந்தும் தமிழ் திராவிட மொழிகள் பேசும் மக்களாக இருந்தனர். இம்மக்கள் தொடக்க காலத்தில் இலங்கையின் முக்கிய நகரங்கள், துறைமுகங்களில் வாழ்ந்த போதும், பெரும்பான்மை மக்கள் வடஇலங்கையில் வாழ்ந்ததன் காரணமாகவே அப்பிராந்தியம் நாகதீபம் என்ற பெயரைப் பெற்றதெனலாம். இதற்கு, வடஇலங்கையில் வாழ்ந்த மக்கள் மொழி, மதம், பண்பாடு என்பவற்றால் தமிழகத்துடன் நெருங்கிய ஒற்றுமை கொண்டிருந்ததுடன், இலங்கை - தமிழக உறவில், வடஇலங்கை தமிழகத்தின் தொடக்க வாயிலாகவும், குறுக்கு நிலமாகவும் இருந்தமை, இன்னொரு முக்கிய காரணமாய் அமைந்திருக்கலாம். மேலும், பக்தி இயக்கத்தின் விளைவால் இலங்கையில் தோன்றிய இந்து - பௌத்த என்ற சமய வேறுபாடுகள் காலப்போக்கில் தமிழ், சிங்கள முரண்பாடாக உருவெடுத்த போது, இலங்கையின் ஏனைய இடங்களில் வாழ்ந்த தமிழரும் பாதுகாப்புக் கருதி வடக்கு - கிழக்கு மாகாணங்களில் குடியேறியமையும் இங்கு நாக இன மக்கள் செறிந்து வாழக் காரணம் எனலாம்.

பொதுவாக இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தில் இருந்து வர்த்தகர்களாக, படையெடுப்பாளர்களாக வந்து குடியேறியோரின் வழித்தோன்றல்கள் என்றே கூறப்பட்டு வந்துள்ளன. ஆனால் கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகள், இலங்கைத் தமிழர் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழி பேசும் மக்களாக வருவதற்கு முன்னரே, அவர்களின் மூதாதையினர் இலங்கையில் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றன. அதற்கு பெருங்கற்காலப் பண்பாட்டுடன் உருவான நாக மரபு காரணம் எனலாம். இப்பண்பாடு இலங்கையில் அறுபதுக்கு மேற்பட்ட இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டாலும், நாக மரபை அடையாளப்படுத்தும் விரிவான தொல்லியல் ஆதாரங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் கட்டுக்கரை, நாகபடுவான் அகழ்வாய்வுகளில் அதற்குரிய தொல்லியற் சான்றுகள் பல கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் தமிழரின் பூர்வீக வரலாறு பற்றிய எதிர்கால ஆய்வுகளில் இவ்விருவிடங்கள் தொடக்கப் புள்ளியாக இருக்கும் என நம்புகிறேன்.

**உசாத்துணைகள்**


1. இந்திரபாலா, கா., 2006, இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு, குமரன் பத்தக இல்லம், கொழும்பு.
2. இரகுபதி, பொ., 2006, வல்லியக்கனும் வல்லிபுரநாதரும், புலரி மறுபிரசுரம், யாழ்ப்பாணம்.
3. சிற்றம்பலம், சி.க., 1996, ஈழத்து இந்து சமய வரலாறு, பாகம்.1, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, கொழும்பு.
4. சேனக பண்டாரநாயக்கா.,1985, (தமிழாக்கம்) “இலங்கை மக்கள் வசிப்பிடமாதல், தேசிய பிரச்சினை, வரலாறு, இனம் தொடர்பான சில கேள்விகள்”இலங்கையில் இனத்துவமும் சமூகமாற்றமும், சமூக விஞ்ஞான மன்றம், கொழும்பு:123.
5. வேலுப்பிள்ளை, ஆ., 1986, ஈழத்து தொடக்க கால இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
6. பத்மநாதன், சி., 2016, இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (கி.மு.250கி.பி.300), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்துமத அலுவல்கள் அமைச்சு, கொழும்பு.
7. பாலசுப்பிரமணியம், குடவாயில்., 1988,“ஈழத்து வெற்றியும் இராஜராஜன்

காசும்", தினமணி (செய்தி நாளிதழ் 9.12.1988), சென்னை.

8. புஷ்பரட்ணம், ப., 1999, "வட இலங்கைச் சமூகவழக்கில் பெருங்கற்காலக் குறியீடுகள்"வளர்தமிழியல் அறிவியல், அனைத்திந்திய அறிவியல் தமிழ்க் கழகம், தஞ்சாவூர்.

9. புஷ்பரட்ணம், ப., 1999, "தென்னிலங்கையில் கிடைத்த தமிழ் நாணயங்கள் - ஒரு வரலாற்று நோக்கு" நாவாவின் ஆராய்ச்சி, இதழ்.49, சென்னை:55-70.

10. புஷ்பரட்ணம், ப., 2003, "உடுத்துறையில் கிடைத்த அரிய தமிழர் நாணயங்கள்" ,ஆவணம், இதழ். 14, தமிழகத் தொல்லியற் கழகம், தஞ்சாவூர்:116-119.

11. புஷ்பரட்ணம், ப., 2007,இலங்கைத் தமிழர்ஒரு சுருக்க வரலாறு, தமிழ்க் கல்விச் சேவை சுவிற்சர்லாந்து, மலேசியா.

12. 12. *Bopearachchi, O. and Wickramesinhe, W.,* **1999**, *Ruhuna an Ancient Civilization Revisited, Numismatic and Archaeological Evidence on Inland and Maritime Trade, Nugegoda - Colombo.*

13. *Burrow, T. and Emeneau, M.B.,* **1961**, *Dravidian Etymological Dictionary, Oxford.*

14. *Conigham,Robin.,***2002**, *"Beyond and Before the Imperial Frontiers: EARLY Historic Sri Lanka and the Origins of Indian Ocean Trade" Man and Environment, Journal of the Indian Society for Prehistoric and Quaternary Stud ies; Vol.XXVII,No.***1:99-107.**

15. *Culavamsa,* **1953**, *Geiger. W. [E.d], Ceylon Government Information Department, Colombo.*

16. *Deraniyagala, S.U.,* **1992**, *The Prehistory of Sri Lanka: An Ecological Perspective, Department of Archaeological Survey, Colombo.*

17. *Mahadevan, I.,* **1966**, *Corpus of the Tamil Brahmi Inscriptions, Reprint of Seminar on Inscriptions, Department of Archaeology, Government of Tamil Nadu, Madras.*

18. *Mahavamsa,* **1950**, *(e.d) Geiger, W., The Ceylon Government Information Department, Colombo.*

19. *Nicholas, C.W.,* **1963**, *Historical Topography of Ancient and Medieval Ceylon in Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society, Colombo, VI.*

20. *Paranavitana, S.,* **1970**, *Inscription of Ceylon: Early Brahmi Inscriptions, The Department of Archaeology Ceylon, Colombo,I.*

21. *Paranavitana, S.,* **1983**, *Inscription of Ceylon: Late Brahmi Inscriptions, The Department of Archaeology Sri Lanka, Moratuwa, and II* **[1].**

22. *Pushparatnam, P.* **2002**, *Naka Dynasty as Gleaned from the Archaeological Evidences in Sri Lanka" Jaffna Science Association Tenth Annual Session:***134.**

23. *Pushparatnam, P.* **2000**, *Tamil Brahmi Graffiti from Northern Sri Lanka" Studies in Indian Epigraphy, Vol.XXVI, Mysore.*

24. *Ragupathy, P.,* **1991**, *The Language of the Early Brahmi Inscription in Sri Lanka, [Unpublished].*

25. 2*Seneviratne, S.,* **1984**, *The Archaeology of the MegalithicBlack and Red Ware Complex in Sri Lanka in Ancient Ceylon, Journal of the Archaeological Survey of Sri Lanka,* **5:237 307.**

26. *Sittampalam, S.K.,* **1990**, *Proto Historic Sri Lanka: An Interdisciplinary Perspective in Journal of the Institute of Asian Studies, VIII* **[1]: 18.**

(தொடரும்)



ஈழம் சார்ந்தும் ஈழப்பிரச்சினை சார்ந்தும் ஆங்கிலத்திலும் தமிழல்லாத பிற மொழிகளிலும் பல்வேறு நூல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 2009 இற்கு பின்னர் வெளியாகிய அபுனைவு நூல்களை அவற்றின் சமூக – அரசியல் முக்கியத்துவம் கருதி தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் நோக்கோடு 'திக்குகள் எட்டும்' என்ற தொடர் வெளிவருகின்றது. இத்தொடரின் மூலம் தமிழ் சூழலுக்கு தமிழல்லாத பரப்பில் நடைபெறும் ஈழம் சார்ந்த வெளிப்பாடுகள் அறிமுகமாகும்.


● சிவராஜா ரூபன்

ரூபன் சிவராஜா அவர்கள் 1993 ஆம் ஆண்டு சிறுவனாக இருக்கும்போது ஈழத்திலிருந்து நோர்வேக்குப் புலம்பெயர்ந்தார். தற்போது கட்டுரைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு, நாடகம் மற்றும் ஊடகம் ஆகிய தளங்களில் இவர் செயற்பட்டு வருவதுடன் அரசியல், சமூகம், கலை, இலக்கியம் சார்ந்தும் எழுதி வருகிறார். ஈழம், தமிழகம், மற்றும் புலம்பெயர் ஊடகங்கள், இதழ்களில் இவரது எழுத்துக்கள் தொடர்ந்து வெளிவருகின்றன.

'எதிர்ப்பரசியல்', 'அதிகார நலனும் அரசியல் நகர்வும்' (உலக அரசியல் கட்டுரைகளின் தொகுப்பு), 'எழுதிக் கடக்கின்ற தூரம்' (கவிதைத் தொகுப்பு), 'கலைப்பேச்சு' (திரை நூல் அரங்கு) என்பன இவரது படைப்புகளாகும்.


# 'இலங்கையின் போரும் சமாதானமும்' :

## நோர்வேயின் சமாதானத் தோல்வியின் விளைவுகள் நோர்வேஜியப் பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் எழுதிய நூல்

### பகுதி- 2



திம்புப் பேச்சுவார்த்தையின் போது

Image Source - www.sooddram.com

'திக்குகள் எட்டும்' தொடரின் கடந்த பாகம் நோர்வேஜியப் பேராசிரியர் ஒய்வின்ட் புக்லறூட் எழுதி 2019 இல் வெளிவந்த 'இலங்கையின் போரும் சமாதானமும் - நோர்வேயின் சமாதானத் தோல்வியின் விளைவுகள்' நூலின் முதல் இரண்டு அத்தியாயங்களின் அறிமுகமாக அமைந்தது. அது, இலங்கைத் தீவின் புவியியல் அமைவிலிருந்து அதன் மொழி, இன, கலாசார, சமூக, பொருளாதாரக் கூறுகளை வரலாற்று ரீதியாகவும் தகவல், தரவுகள் ரீதியாகவும் முன்வைக்கின்றன. சிங்களத் தேசியவாதத்தின் தோற்றத்திலிருந்து அதன் போக்கு, தமிழ்த் தேசியவாதம், அதன் போக்கு, இனமுரண்பாடு, போர் மற்றும் சமாதான முயற்சிகள், வன்முறைகள், சிங்கள உயரடுக்குகளும் அவற்றுக்கெதிரான ஜே.வி.பி தலைமையிலான ஆயுதக் கிளர்ச்சிகளும்,

ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள் என்பவற்றின் மீது ஆழமான ஆய்வுப் பார்வையை முன்வைத்திருந்ததைப் பற்றிப் பார்த்திருந்தோம். இந்தப் பகுதியில் நூலின் ஏனைய அத்தியாயங்கள் மீது பார்வையைச் செலுத்துவோம். இது, தமிழர்களின் தனிநாட்டுக்கான போராட்டம், போர் - சமாதானம் - விசாரணை அறிக்கைகள், வெற்றிக்களிப்பும் சித்திரவதைகளும், சிறுபான்மை மூலோபாயங்கள், பத்து ஆண்டுகளுக்குப் பின் ஆகிய தலைப்புகளிலான பெரும் அத்தியாயங்களின் கீழ் பேசப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான பார்வையாக அமைகின்றது.

## தமிழர்களின் விடுதலைப் போராட்டம்

தமிழர்கள் தனிநாடு கோரிப் போராட நிர்ப்பந்திக்கப்பட்ட இலங்கைத் தீவின் அரசியல் ரீதியான நிகழ்வுகள், போக்குகளையும் - தமிழர்கள் மீதான சிங்கள ஆட்சியாளர்களினது இனத்துவ ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும் விரிவாகவும், நிகழ்வுகளின் பின்னணயிலும் விபரிக்கின்ற இந்நூலின் 'தமிழர்களின் விடுதலைப் போராட்டம்' எனும் தலைப்பிலான அத்தியாயம் கல்வித்தரப்படுத்தல் தனிநாட்டுப் போராட்டம் நோக்கி இளைஞர்களை அணிதிரட்டியது பற்றிப் பேசுகிறது. தமிழ் அரசியலில் இனத்துவப் பாகுபாடு சார்ந்த ஒரு குறியீடாக கல்வித்தரப்படுத்தல் சட்டமும் அதன் விளைவுகளும் ஆகிப்போயின. சிறிலங்கா அரசாங்கம் கல்விசார் நிலமைகளை ஒரு பொருளாதாரக் கண்ணாடி ஊடாகப் பார்த்திருக்க வேண்டும். நாட்டின் பரந்துபட்ட இளைஞர்களுக்குக் கல்வி வாய்ப்பினை வழங்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் விருப்பு புரிந்துகொள்ளக்கூடியது. ஆனால் அதனை ஒரு பொறுப்பற்றதும், வெளிப்படையான ஒடுக்குமுறைக்கு ஊடாகவும் அரசாங்கம் செய்தது. தமிழ்ச் சமூகத்தினை விலைகொடுக்கச் செய்வதன் மூலம், சிங்கள வாக்காளர்களுக்கு ஆதரவாகத் தாம் இருக்கின்றோம் என்பதைக் காட்ட முனைந்தனர். அதன் விளைவு இனத்துவ துருவமயமாக்கலுக்கு இட்டுச் சென்றது என்கிறார் ஒய்வின்ட் புக்லறூட்.

1971 இல் கொண்டுவரப்பட்ட கல்வித்தரப்படுத்தல் 1956 இல் அமுல்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைமயப்பட்ட மொழி அரசியலின் அடுத்தகட்டம் ஆகும். இவை தமிழ்ச் சமூகத்தின் மத்தியதர வர்க்கத்தினை வெகுவாகப் பாதித்ததோடு; கல்வி, இன ஒடுக்குமுறையின் குறியீடாகவும் ஆனது.

இந்த அத்தியாயத்தில், 1974 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சர்வதேச தமிழாராய்ச்சி மாநாட்டில் காவல்துறையினர் நடாத்திய வன்முறை, அதனைத் தொடர்ந்து இயக்கங்கள் மேற்கொண்ட எதிர் வன்முறைகள் ஆகியன விபரிக்கப்பட்டுள்ளன. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் உள்ளடக்கம் மற்றும் அதன் மூலம் தனிநாட்டுப் போராட்டத்திற்கு விடுக்கப்பட்ட நேரடியான அழைப்பு, போராட்ட இயக்கங்களின் தோற்றுவாய் குறித்த வரலாறும் பதிவாகியுள்ளது.

தமிழரசுக் கட்சித் தலைமையானது தனது உத்தியோகபூர்வ அறிவிப்புகளில் தமிழீழ விடுதலைக்கான போராட்டம் அமைதி வழியில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்று கருதியபோதும், வட்டுக்கோட்டைத் தீர்மானத்தினை நேரடியான அர்த்தத்தில் பலர் பொருள் விளங்கினர்.

1970 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் திட்டமிடப்பட்ட படுகொலைகள், வங்கிக் கொள்ளைகள், காவல்துறை ரோந்துப் படைகள் மீதான தாக்குதல்கள் ஆகியன அதிகம் நிகழ்த்தப்பட்டன. 1970 களில், ஒடுக்குமுறை அரசியல், தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகியிருந்தது. காவல்துறை மோசமான வழிமுறைகளைக் கையாண்டது. ஆனால் தமிழ் போராட்ட அமைப்புகளின் வங்கிக் கொள்ளைகள், சிங்களப் பொலிசார் மீதான கொலைகள் இடம்பெற்ற காலத்தில், தமிழ் மக்களுக்கெதிராக அரச வன்முறை இயந்திரம் முழு அளவில் ஏவிவிடப்பட்டிருக்கவில்லை.



**ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தம்**

Image Source - www.tamilmirror.lk

தமிழ் ஆயுத இயக்கங்கள், அரசியல் தொலைநோக்கு என்பதைக் காட்டிலும் தமது இலக்கிற்கான ஆதரவை உருவாக்கும் பொருட்டுத் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டன. அந்நடவடிக்கைகள், தமிழ் மக்களுக்கெதிரான அரச ஆக்கிரமிப்பைத் தூண்டும் முனைப்பினைக் கொண்டிருந்தன என அக்கால நிகழ்வுகளை மேற்கோளிட்டு தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகள் மீதான விமர்சனம் முன்வைக்கப்படுகின்றது.

அந்தப் போக்கில் 1979 இன் அவசரகாலச் சட்டம், அதாவது பயங்கரவாதத் தடைச் சட்டம் (Prevention of terrorism act) ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இந்தச் சட்ட அமுலாக்கம், காவல்துறை மற்றும் படைத்துறையினருக்கு, கைதுகளுக்கும் சித்திரவதைகளுக்குமான பூரண சுதந்திரத்தை வழங்கிற்று. வடக்கில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான பொறுப்பு படைத்துறையினருக்கு வழங்கப்பட்டது. 1981 இல் நடந்த யாழ் நூலக எரிப்பு, தமிழ் வரலாற்றின் இக்காலத்தினது ஒரு குறியீடாக நிலைபெற்றிருக்கின்றது எனக் குறிப்பிடும் புக்லறூட், அக்காலகட்ட நிகழ்வுகளை வரலாற்று ரீதியாகவும் அவற்றின் சங்கிலித்தொடர் விளைவுகளை தொகுத்தும் முன்வைக்கின்றார்.

### இனத்துவ மற்றும் அக சமத்துவமின்மை : சாதியப் படிநிலைகள்

இனத்துவ மற்றும் அகச் சமத்துவமின்மை என்ற துணைத்தலைப்பின் கீழ் தமிழ்ச் சமூகத்தின் சாதியப் பாகுபாடு, அதன் கட்டமைப்பு, அடுக்குகள், நடைமுறைகள், சாதியம் குறித்த சமூக மனநிலை குறித்த பார்வை என்பன முன்வைக்கப்படுகின்றன. தமிழ் மற்றும் சிங்களத் தரப்பில், குறிப்பாகத் தமிழ்த் தரப்பில், சமூக - பொருளாதார வேறுபாடு சாதிய அம்சத்துடன் தொடர்புபட்டதாக இருந்து வந்துள்ளது என்று குறிப்பிட்டு, அதன் தோற்றுவாயிலிருந்து சமூகப் பாகுபாட்டில் அதன் வகிபாகம் எப்படியாக இருந்து வந்துள்ளது என்பதை வருணாசிரம முறைமையை விபரித்து விளக்குகின்றார். சாதியப் போக்கினையும் அதன் கட்டமைப்பு, நடைமுறைசார் அம்சங்களை நுண் பார்வையினூடு பதிவு செய்கின்றார்.

தமிழ்ச் சமூகத்தின் சாதியக் கட்டமைப்புச் சார்ந்தும், அதற்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அணுகுமுறை,

மூலோபாயம் குறித்தும் பேசப்படுகின்றது. போர் வரலாற்றினையும் தமிழ்ச் சமூகத்தின் இன்றைய நிலையினையும் புரிந்துகொள்வதற்கு சமூக முரண்பாடுகள் பற்றிய அறிதல் அவசியம் என்ற தனது நிலைப்பாட்டினைப் பதிவு செய்கின்றார் புக்லறூட்.

பல தாழ்த்தப்பட்ட சமூகங்கள் நவீன காலம் வரை நில உடமையாளர்களுடன் (வெள்ளாளர்) சேவைப் பரிமாற்றத்தில் ஈடுபட்டிருந்தாலும், சில சமூகங்கள் சாதியப் படிநிலை அடையாளங்களிலிருந்து விடுதலை பெறப் போராடினர். 1900 நடுப்பகுதியில் தமது சேவை, உற்பத்தி மற்றும் உழைப்பினை கைக்காசிற்கு விற்கக்கூடிய பொருளாதாரச் சந்தை வாய்ப்பினைப் பெற்ற சமூகத்தினர், நில உடமையாளர்களின் அதிகாரத்திலிருந்து விடுபடும் சூழல் ஏற்பட்டது. கைத்தொழில் மற்றும் மீனவச் சமூகங்கள் உட்பட்ட சில சமூகத்தினர் அவ்வாறு விடுபட முடிந்தமை பற்றி விபரிக்கப்படுகின்றது.

1900 களின் ஆரம்பத்தில் மீனவச் சமூகத்தினர் நில உடமையாளர்களின் மேலாதிக்கத்திலிருந்து விடுபடத் தொடங்கியதோடு மட்டுமல்லாமல், கடற்போக்குவரத்து மற்றும் கடத்தல் மூலம் அடைந்த சமூக நிலையினால், யாழ்ப்பாணக் கரையோரத்தில் அவர்கள் தமக்கான ஒரு சுதந்திரமான அதிகார நிலையைத் தமிழ் சமூகத்தின் மத்தியிற் கட்டியெழுப்பினர். சாதியப் படிநிலையின் தரவரிசையில், மீனவச் சமூகம் தாழ்த்தப்பட்டதாக வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் ஆதிக்க சாதியினரின் பொருளாதார வளங்களில் அதிகம் சார்ந்திருக்கவில்லை. பிரித்தானியாவிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்த பின்னர், அவர்கள் அரசியல் ரீதியாகவும் நில உடமையாளர்களுக்குப் போட்டியான நிலையையும் அடைந்தனர்.

சாதியப் பாகுபாடுகளின் அனைத்து வடிவங்களும் ஒழிக்கப்படவேண்டுமென்ற நிலைப்பாட்டினைப் புலிகள் கொண்டிருந்ததோடு, சாதியுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்குத் தடையும் விதித்திருந்தனர். தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று தம்மைத் தாமே கருதிக்கொண்ட அவர்கள், சாதியச் சிக்கல், ஒழிக்கப்பட்ட ஒன்றாகக் கருதினர். ஆனால் 35 ஆண்டுகளாக தமிழ் அரசியலில் வெளிப்படையாகப் பேசப்படாத பொருளாகச் சாதி இருந்திருக்கின்றது என்கிறார் புக்லறூட். இதன் மூலம் அவர் சொல்லமுனையும் செய்தி, மன ரீதியாகவும், சமூக ரீதியாகவும் சாதியச் சிக்கல் பேசாப் பொருளாக இருந்துள்ளது; அது முற்றிலும் ஒழிக்கப்படவில்லை என்பதாகும்.

## தமிழ்ச் சமூகத்தின் பெண்கள் பற்றிய பார்வை

'கற்பு' என்ற கருதுகோளின் கீழ், தமிழ்ச் சமூகத்தின் பெண்கள் பற்றிய பார்வை கட்டமைக்கப்பட்டுள்ள விதத்தினை விபரிக்கின்றார். விடுதலைப் புலிகள் இயக்கம் பெண்கள் குறித்த தமிழ்ச் சமூகத்தின் பார்வையை, பெண் போராளிகள் விடயத்தில் எவ்வாறு உடைத்தது என்பதைக் குறிப்பிடுகின்றார். பெண்கள் குறித்த மரபுசார்ந்த கலாச்சாரப் 'பொதி'யினைப் புலிகள் இயக்கம், குறிப்பாகத் தமது பெண் போராளிகள் மத்தியில், உடைத்துப் போட்டது. 1983 இலேயே புலிகள் இயக்கம் பெண்கள் மீதான அனைத்து வகை ஒடுக்குமுறைகளையும் இல்லாமற் செய்யும் நோக்குடன் பெண்கள் பிரிவினை உருவாக்கியது. பெண்கள் தமது வாழ்வைத் தாமே தீர்மானிக்கும் நிலையை ஏற்படுத்தும் நோக்கமும் இருந்துது.

புலிகள் இயக்கத்தின் வழிமுறைகள் தொடர்பான மாறுபட்ட கருத்துகள் இருப்பினும், பெண்கள் முன்னர் சமூகத்திற் பெற்றிராத செயற்பாட்டு வெளியினை, இயக்கத்திற்குள் கொண்டிருந்தனர் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்கிறார். போர்க்கள முன்னரங்குகளில் அவர்களின் பங்கேற்பு, தற்கொலைப் போராளிகள் எனவாகத் தமிழ்ச் சமூகத்திற் பெண்கள் சார்ந்த நிலைப்பாடு, புதியதும் கவனயீர்ப்பிற்குரியதுமான நிலைமைகளைப் பிரதிபலித்தன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு பயணம் செய்த ஒருவரால் இவற்றைத் தெளிவாக உணர

முடியும். படைத்துறைப் பயிற்சியை முடித்த பெண்களிடத்து தனித்ததொரு உடல்மொழி, தகமை, பார்வை மற்றும் தன்னம்பிக்கையினை (சீருடை அணிந்திருந்தாலும் இல்லாவிட்டாலும்) அவதானிக்க முடிந்தது. சீதனத் தடை, காதல் திருமணத்திற்கான அனுமதி, இந்து சமயச் சடங்குகள் அற்ற சமத்துவத்தைப் பிரதிபலிக்கும் திருமண முறை போன்றவற்றை உதாரணமாகச் சுட்டும் புக்லறூட், சமூகத்தில் புலிகள் பின்பற்றிய பெண்ணியப் பார்வையின் நடைமுறைசார் குறைபாடுகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

## இந்தியாவின் நிழலில்

'இந்தியாவின் நிழலில்' என்ற துணைத்தலைப்பின் கீழ் '1983 கறுப்பு ஜூலை' படுகொலைகளை அடுத்து, இலங்கை நிலைமைகள், குறைந்தது இரண்டு அடிப்படைகளில் மாற்றம் கண்டது என்கிறார். ஒன்று இந்தியாவின் தீவிர தலையீடு; இராணுவ ரீதியாகவும் அதன் தலையீடு அமைந்தது. மற்றையது தமிழர்களின் பெருவாரியான இடப்பெயர்வு; அதாவது வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வு. கறுப்பு ஜூலை படுகொலைகளுக்கான ஜே.ஆர் ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் பதில், மன்னிப்புக் கோரலாகவோ பொறுப்புக்கூறலாகவோ இருக்கவில்லை. மாறாக 6 ஆவது திருத்தச் சட்டத்தினை அவர் அமுல்படுத்தினார். அந்தச் சட்டத்திருத்தமானது இலங்கையின் ஆள்புலத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, தூண்டுதல்கள் மூலமோ, நிதியுதவி அல்லது வேறு வழிகளிலோ சுதந்திரத் தனியரை நிறுவுவதைச் சட்டவிரோதமாக்குகிறது.

## எண்ணற்ற தமிழ் விடுதலைப் போராட்ட அமைப்புகள்

1980 கள் வரையான காலப்பகுதியிற் தோற்றம் பெற்ற விடுதலைப் போராட்ட அமைப்புகள் பற்றிய தகவல்களோடு, அவற்றுக்கான இந்தியாவின் பயிற்சிகள் குறித்த தகவல்களும் இடம்பெற்றுள்ளன. இயக்கங்கள் கூட்டாக இணைந்து கலந்துகொண்ட திம்புப் பேச்சுவார்த்தை, அதில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் குறித்தும் பேசப்படுகின்றது. அக்கோரிக்கைகளில் ஒன்றான 'இலங்கைத் தீவினைத் தமது நாடாகக் கருதும் அனைத்துத் தமிழர்களுக்கும் குடியுரிமை மற்றும் முழு ஜனநாயக உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்' என்ற இறுதிக் கோரிக்கை வடக்கு - கிழக்கிற்கு வெளியில் வாழும் மலையகத் தமிழர்களின் உரிமை சார்ந்தும் முக்கியமானது. அத்தோடு 'திம்புக் கோட்பாடுகள்' என அறியப்பட்ட 'இலங்கைத் தமிழர் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்படுதல், இலங்கைத் தமிழருக்கென்ற அடையாளம் காணப்பட்ட தாயகத்தின் இருப்பை அங்கீகரித்தல், தமிழர் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்' ஆகிய கோரிக்கைகள் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட அரசியலின் அடிப்படையாக இருந்து வருவதோடு, நோர்வே தலைமையில் புலிகள் கலந்துகொண்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படையாகவும் அக்கோட்பாடுகள் அமைந்திருந்தன என்பதை இந்நூல் பதிவாக்கியுள்ளது.

## இந்தியத் தலையீடும் 13 ஆவது திருத்தச்சட்டமும்

முப்பது ஆண்டு காலப் போரில் சில காலப்பகுதிகள் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் வடக்கின் பொது மக்களுக்கு அதிக அவலங்களை ஏற்படுத்தியுள்ளன. தொடர்ச்சியான குண்டுமழை, ஆட்லறித் தாக்குதல்கள், பயங்கரவாதம் ஆகியன இயல்பு வாழ்வின் ஒவ்வொரு அங்கங்களையும் சாத்தியமற்றதாக்கியது. 2009 இன் ஆரம்பம் முதல் மே வரையான காலப்பகுதி அதில் ஒன்று. மற்றையது 1990 களின் இறுதி அரைப் பகுதி. அதேபோல் 1987 இலிருந்து 1990 களின் இறுதிக் காலமும் அந்த வகைக்குள் அடங்குகின்றது என்கிறார்; இந்தியாவின் தலையீட்டினால் வலிந்து இலங்கை அரசாங்கத்தின் மீது திணிக்கப்பட்ட உடன்படிக்கைக்கு அமைய, தமிழர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினர் தமிழர் பிரதேசங்களுக்கு அனுப்பப்பட்ட

காலப்பகுதியையும், அவ்வாறான மோசமான காலப்பகுதியாகக் குறிப்பிடுகின்றார். வெகு குறுகிய காலத்திற்குள் 'Indian Peace keeping forces (இந்திய அமைதி காக்கும் படை)' என்ற பெயரில் அனுப்பப்பட்ட படைகள் Indian People killing forces (இந்திய மக்கள் கொலைப் படை) என அழைக்கப்படும் அளவிற்கு நிலைமை மோசமாகியது. மூன்று ஆண்டு காலம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான இந்தியப் படைகளின் போர், பொதுமக்களுக்குப் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

**புலிகளின் தனித்துவமான இராணுவத் திறன்களுக்கு அப்பால், அவர்களின் வெற்றிக்கு இரண்டு காரணிகள் அடிப்படையானவை. ஒன்று சர்வதேச ரீதியில் அமைப்பு ரீதியான கட்டமைப்புகளை ஒவ்வொரு நாடுகளிலும் உருவாக்கியமை. அதன் மூலம் நிதிசேகரிப்பு மற்றும் தமது நிலைப்பட்ட தகவல் பரப்புரைகளை புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் மத்தியில் மேற்கொண்டமை.**

இந்த மூன்று ஆண்டுகளின் நிகழ்வுச் சங்கிலியை விரிவாக முன்வைப்பது தனியான ஒரு புத்தகத்தினைக் கோரக்கூடியது என்று குறிப்பிட்டு முக்கிய நிகழ்வுகள், விளைவுகளை விபரிக்கின்றார். அக்காலகட்டம், அரசியல் ரீதியாகப் பல்வேறு இரகசிய உடன்படிக்கைகள், துரோகங்கள், அதிர்ச்சிக்குரிய கூட்டுகள் என்பவற்றால் நிறைந்திருந்தது.

தமிழீழ விடுதலை இயக்கங்களுக்கிடையிலான சகோதரப் படுகொலைகள் குறித்த சம்பவங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. குறிப்பாக விடுதலைப் புலிகளால் ஏனைய இயக்கங்கள் தடைசெய்யப்பட்டமை, கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வுகள் பதிவாகியுள்ளன. புலிகள் ஏனைய இயக்க உறுப்பினர்களைப் படுகொலை செய்து தடை செய்தமை, அவ்வியக்கங்களும் போராளிகளும் இந்திய மற்றும் சிறிலங்கா அரச படைகளிடம் பாதுகாப்புத் தேட நிர்ப்பந்திக்கப்பட்டமை பற்றியும் பேசப்படுகின்றது.

## புலிகள் இயக்கமும் சாதிய ஒடுக்குமுறை உடைப்பிற்கான வெளியும்

நியூசிலாந்தில் வாழும் என். மாலதி எழுதிய 'A Fleeting moment in my country' என்ற புத்தகத்தை முன்வைத்தும், அவருடனான தனது கலந்துரையாடல்கள், விவாதங்களை முன்வைத்தும் சில அவதானங்கள் பகிரப்படுகின்றன. இயக்கத்தின் உள்மட்டத்தில் ஒரு சமூக வெளியைப் புலிகள் உருவாக்கியிருந்தார்கள் என்ற மாலதியின் கருத்துப் பகிரப்படுகின்றது. சாதிய வேறுபாடுகள் நீக்கம்பெற்ற ஒரு வெளி அது என்கிறார் மாலதி. வன்னியில் ஒருமுறை தன்னுடனான உரையாடலில் மாலதி தெரிவித்ததைப் பதிவு செய்கின்றார் புக்லறூட்; ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இயக்கத்திற்குள் மேலெழ முடிந்திருக்கின்றது என்பது அந்த வாதமாகும்.

## புலிகளும் தமிழரும்

2000 ஆம் ஆண்டுகளிலிருந்து வீட்டுக்கொரு வீரர் - வீராங்கனையை போராட்டத்திற்குத் தரவேண்டுமென்று கோரி, இயக்கத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்துவந்த புலிகள், 2006 இலிருந்து வீட்டுக்கு இரண்டு பேரைக் கோரினர். 2009 இறுதிப் போரில் எவரொருவரும் போர்முனையில் நிற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். புலிகளுக்கான தமிழ் மக்களின் ஆதரவு, எதிர்ப்பு குறித்த கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன. புலிகள் சார்ந்து பல்வேறு நிலைப்பாடுகளும் பார்வைகளும் அனுபவங்களும் இருப்பினும், பல தமிழர்கள் தம்மை அச்சுறுத்திய சிங்கள அரச படைகளுக்கு எதிரான பாதுகாப்பாகப் புலிகளைப் பார்த்தனர்.

புலிகளின் தனித்துவமான இராணுவத் திறன்களுக்கு அப்பால், அவர்களின் வெற்றிக்கு

இரண்டு காரணிகள் அடிப்படையானவை. ஒன்று சர்வதேச ரீதியில் அமைப்பு ரீதியான கட்டமைப்புகளை ஒவ்வொரு நாடுகளிலும் உருவாக்கியமை. அதன் மூலம் நிதிசேகரிப்பு மற்றும் தமது நிலைப்பட்ட தகவல் பரப்புரைகளை புலம்பெயர் தமிழர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொடர்புகள் மத்தியில் மேற்கொண்டமை. 1983 இலிருந்து போர் முடிவடைந்த காலம் வரை புலிகளின் மிகவலிமையான ஆதரவு சக்தியாக புலம்பெயர் தமிழ்ச்சமூகம் இருந்துள்ளது. தமிழ் 'டயஸ்போறா' மிகப்பெரியதும் உலகளாவிய கருத்துருவாக்க சக்திகள் உள்ள வட அமெரிக்கா, அவுஸ்ரேலியா, ஐரோப்பா எனப் பல பிராந்தியங்களில் பரந்துள்ளதும் உள்ளது.

மற்றைய அம்சம், தாம் முன்னெடுத்த போராட்டத்தைக் குறியீடுகள் மற்றும் வெளிப்பாட்டு வடிவங்களுக்கு ஊடாக படைப்பாற்றலுடன் நிலை நிறுத்தியமையாகும். அவர்கள் கொண்டுவந்த சடங்குகள், நடைமுறைகள், நினைவுச் சின்னங்கள், குறியீடுகள், கவிதைகள், இசைப் பாடல்கள் என்பன அவர்களுக்கான ஆதரவு அதிகரிக்க உதவின. அதனை அவர்களின் அரசியல் 'அண்டவியல்' என அழைக்கலாம். தமது அரசியல் பரப்புரைகளில் அவர்கள் பண்டைய தமிழ் போர் மரபினது விசுவாசம் மற்றும் வீரம் ஆகிய முதன்மை விழுமியங்களைப் பின்பற்றினர். சமத்துவம், மனித உரிமைகளுக்கு முன்னுரிமை கொடுப்பதைக் காட்டிலும், தலைமை மீதான விசுவாசத்தை முதன்மைப்படுத்தியமை, சாவைப் புனிதப்படுத்துகின்ற போக்கு புலிகள் இயக்கத்தில் நிலவியதெனக் குறிப்பிடுகின்றார் புக்லறூட்.

## போர், சமாதானம் மற்றும் விசாரணை அறிக்கைகள்

'போர், சமாதானம் மற்றும் விசாரணை அறிக்கைகள்' என்ற தலைப்பிலான அத்தியாயம் இறுதிக்கட்டப் போரின் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், படுகொலைகள் குறித்த சர்வதேச அறிக்கைகள், ஆதாரங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள், அவற்றை சிறிலங்கா அரசாங்கங்கள் எதிர்கொண்ட முறைமை குறித்தும் பேசுகின்றது.

2009 மே போர் முடிவுற்ற ஐந்து நாட்களின் பின் அன்றைய ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கி - மூன் இலங்கைப் பயணம் மேற்கொண்டார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடன் சந்திப்புகளை மேற்கொண்டார். உலங்குவானூர்தியில் போர் நடைபெற்ற பிரதேசங்களைப் பார்வையிட்டார். அத்தோடு வன்னியிலிருந்து வெளியேற்றப்பட்ட 300,000 மேற்பட்ட மக்கள் தங்கவைக்கப்பட்டிருந்த 'மெனிக் பார்ம்' அகதி முகாமிற்கும் விஜயம் செய்தார். பான் கி - மூனும் மகிந்த ராஜபக்சவும் கூட்டாக ஊடகச் சந்திப்புகளை நடாத்தி உறுதிமொழிகளை வழங்கினர். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைச் சட்ட மீறல்களைக் கண்டடைவதற்கான (An accountability process) பொறுப்புக்கூறலின் அவசியத்தை ஊடகச் சந்திப்பின் இறுதியில் பான் கி - மூன் வலியுறுத்தினார்.

குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும் என்பது ஊடக மாநாட்டின் இறுதிச் சொற்களாக அமைந்தன. இறுதிப் போரில் பொதுமக்கள் மீதான இராணுவத்தின் தாக்குதல்கள் பற்றியோ அல்லது போரில் உயிர் தப்பியவர்கள் மிக மோசமான நிலைமைகளில் மெனிக் பார்ம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருந்தமை குறித்தோ பான் கி - மூன் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) பின்னர் ஒரு அறிக்கையில், பான் கி - மூனின் கருத்துகள் ஐ.நா மனித உரிமை மன்றில் ஒரு காத்திரமான தீர்மானத்தினை நிறைவேற்றப்படுவதைப் பலவீனப்படுத்தியதோடு, ஐ.நா மீதான நம்பிக்கையையும் பலவீனப்படுத்தியதாகச் சுட்டிக் காட்டியிருந்தது.

## முக்கிய அறிக்கைகள்

இறுதிப் போர் தொடர்பாக மனித உரிமை அமைப்புகள், ஆய்வு நிறுவனங்கள், அரசியல் நோக்கம் கொண்ட வெவ்வேறு அமைப்புகள்



**இறுதிப்போரின் பின்னர் முள்ளிவாய்க்கால்**

Image Source - oneindia.com

சார்பில் பல்வேறு அறிக்கைகள் வெளிவந்துள்ளன. சிறிலங்கா அரசாங்கத்திற்கும் ஐ.நா விற்கும் இடையிலான விவாதங்களில் மூன்று அறிக்கைகள் முக்கிய இடம்பிடித்தன. அவை, 2011 மார்ச் மாதம் வெளிவந்த ஐ.நா நிபுணர் குழு அறிக்கை, 2011 நவம்பரில் வெளிவந்த சிறிலங்கா அரசாங்கத்தின் சொந்த அறிக்கையான 'கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்கமும்' அறிக்கை (Lessons Learnt and Reconciliation - LLRC), ஐ.நா மனித உரிமைகள் உயர் ஸ்தானிகரகத்தின் சிறிலங்கா மீதான விசாரணை அறிக்கை (Office of the High Commission er for Human Rights' Investigation on Sri Lanka - OISL) ஆகியனவாகும். இவற்றின் உள்ளடக்கம், சிறிலங்கா மீதான போர்க்குற்றம் - மனிதத்திற்கும் மனித உரிமைகளுக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் குறித்த சர்வதேச விவாதங்களில் அவை ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றது.

## ஐ.நா நிபுணர்குழு அறிக்கை

ஐ.நா நிபுணர்குழு அறிக்கையானது பேரழிவுமிக்க இறுதிக்கட்டத்திற்கு இட்டுச் சென்ற நிகழ்வுப் போக்கினை விபரிக்கின்றது. 'தமது இராணுவ நடவடிக்கைகள் மனிதாபிமான மீட்பு' என்ற சிறிலங்கா அரசாங்கத்தின் முன்னிறுத்தலை ஐ.நா நிபுணர்குழு அறிக்கை முற்றிலும் நிராகரிக்கின்றது. விளைந்த பெரும் அவலத்திற்கான பொறுப்பினைச் சிறிலங்காப் படைகள் ஏற்கவேண்டுமென்பதை மிகத் தெளிவாக அவ்வறிக்கை வலியுறுத்துகிறது.

நிபுணர் குழுவின் புரிதலின் படி சிறிலங்காப் படையினரே பொது மக்களை முள்ளிவாய்க்கால் நீர் - விளிம்புவரை விரட்டிச் சென்றுள்ளனர். செப்ரெம்பர் 2008 இலிருந்து 2009 மே 19 வரை சிறிலங்கா இராணுவம் வன்னியில், பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் இறப்புகளுக்குக் காரணமான மிகப் பரவலான ஆட்லறித் தாக்குதல்களை நடாத்தியுள்ளது என இராணுவத்தின் படை முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து நிபுணர் குழு குறிப்பிட்டுள்ளது.

5 பிரிவுகளின் கீழ் படையினர் மோசமான மீறல்களைச் செய்துள்ளதாக அறிக்கை வகைப்படுத்துகிறது:

1. பரந்தளவிலான தாக்குதல்களில் பெருமெண்ணிக்கையில் பொதுமக்கள் கொல்லப்பட்டமை.
2. மருத்துவமனை உட்பட்ட மனிதாபிமான மையங்கள் இலக்குவைத்துத் தாக்கப்பட்டமை.
3. மனிதாபிமான உதவிகளைத் தடுத்தமை.
4. உயிர் தப்பியவர்கள் மீதான மனித உரிமை மீறல்கள்.
5. முரண்பாட்டுச் (போர்) சூழலுக்கு வெளியில், அரசாங்கத்தை விமர்சித்தோர் மீதான மனித உரிமை மீறல்கள்.

*விடுதலைப் புலிகள் இயக்கம் மீது நிபுணர் குழு 6 குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது:*

1. மனிதக் கேடயங்களாகப் பொதுமக்களைப் பயன்படுத்தியமை.
2. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைவிட்டு வெளியேற முயன்ற பொதுமக்கள் மீது துப்பாக்கிச் சூடு.
3. பொதுமக்கள் கூடியிருந்த பகுதிக்கு அருகில் படைத்துறைக் கருவிகளைக் கையாண்டமை.
4. வயது குறைந்தவர்களைத் தமது படையில் இணைத்தமை.
5. கட்டாய வேலை.
6. தற்கொலைத் தாக்குதல் மூலம் பொதுமக்களைக் கொன்றமை.

## ராஜபக்சவின் சீனச்சாய்வும் மேற்கின் எதிர்வினையும்

*ராஜபக்ச ஆட்சிபீடத்தின் அதிகார அரசியலின் கிழக்கு நோக்கிய (சீனா) நகர்விற்கும் சாய்விற்கும், ஒரு அழுத்தம் அல்லது பாடம் புகட்டும் நோக்கில், மேற்கு நாடுகளின் கூட்டுத் திட்டமாக, மனித உரிமைகள் மையத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட அரசியல் பற்றியும் புக்லறூட் குறிப்பிடுகின்றார். 2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்தபோது, ஜனநாயகம் மற்றும் உள்வாங்கல் அரசியல் தொடர்பான நம்பிக்கை உருவாக்கப்பட்டிருந்தது. புதிய சகிப்புத்தன்மைக்கும் பொறுமைக்குமான நம்பிக்கை மேற்கில் உருவாக்கப்பட்டது. ஆனால் அது உரிய விளைவுகளை உண்டாக்கவில்லை.*

*ஐ.நா மனித உரிமைகள் மையம், இறுதிப்போரில் நிகழ்ந்தவை தொடர்பான சர்வதேச விவாதங்களுக்கான மையமாக 2009 இலிருந்து விளங்கி வருகின்றது. ஐ.நா பாதுகாப்பு அவையில், இலங்கை விவகாரத்தினை நிகழ்ச்சித் திட்டத்திற்குக் கொண்டுவருவதற்கான வாய்ப்பு இல்லவே இல்லை என்ற யதார்த்தப் புறநிலை, ஐ.நா மனித உரிமை மன்றத்தில் இலங்கை விவகாரம் கையாளப்பட்டதற்கான மற்றுமோர் காரணியாகும். 2009 இன் ஆரம்பத்தில் ஒருமுறை மெக்சிக்கோ பாதுகாப்பு மையத்தில் இலங்கை விவகாரத்தினைக் கொண்டுவர முயன்றபோது, மேற்கு நாடுகள் மற்றும் ஜப்பான் ஆதரவளித்தன. ஆனால் பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பு நாடுகளான சீனாவும் ரஸ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி நிராகரித்தன. சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்குமான தீர்மானங்களைக் கொண்டுவருவதற்கான ஆணையை மட்டுமே ஐ.நா பாதுகாப்பு அவை கொண்டுள்ளது. அரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடும் ஆணை இல்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.*

## சிறிலங்காவின் போர்க்குற்ற ஆதாரங்கள்

*2009 இன் பின்னரான இலங்கைத் தீவின் அரசியல் மாற்றங்கள், அரசாங்க மாற்றங்கள் என்பன முக்கிய நிகழ்வுகளின் பின்னணியில் விபரிக்கவும் விவாதிக்கவும் படுகின்றன. 2009 - 2010 காலப்பகுதியில் போர்க்குற்றம் இடம்பெற்றதை ஆதாரப்படுத்தி மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கைகளை வெளிக்கொணர்ந்திருந்தது. 2011 இல் ஐ.நா நிபுணர் குழு அறிக்கையில் 40,000 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தது. 2012 இல் இறுதியில்*

வெளிவந்த ஐ.நாவின் உள்ளக மீளாய்வு அறிக்கை, இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கை 70,000 என்று பதிவுசெய்துள்ளது.

2011 மே கோர்டன் வைஸ் எழுதிய 'The Cage (கூண்டு)' நூலில் ஐ.நா பணியாளர்கள் போர் முடிவினை எவ்வாறு எதிர்கொண்டனர் என்ற சித்தரிப்புகளை முன்வைத்து நிலைமைகள் சித்தரிக்கப்படுகின்றன.

2011 இல் பிரித்தானிய சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட 'Sri lanka's killing fields' ஆவணப்படம் ஏற்படுத்திய தாக்கங்கள் மற்றும் ஜெனீவாவில் மனித உரிமைகள் மன்றத்தின் 17 ஆவது கூட்டத்தொடரில் அவ் ஆவணப்படம் காண்பிக்கப்பட்ட சம்பவங்கள் பற்றியும் பேசப்படுகின்றன. தொடர்ந்து அந்த ஆவணப்படம் அமெரிக்க அரசியற் பிரதிநிதிகள், சர்வதேச இராஜதந்திரிகள் மற்றும் ஏனைய பிரமுகர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச முரண்பாட்டுச் சபை ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கும் காண்பிக்கப்பட்டது.

சனல் - 4 ஆவணக் காட்சிகள் படுகொலைகளில் ஈடுபட்ட இராணுவச் சிப்பாய்களினால் கைத்தொலைபேசி மூலம் படம்பிடிக்கப்பட்டவை. அதில் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கைதிகள் படுகொலை செய்யப்படுகின்றனர்; கொல்லப்பட்ட நிலையில், நிர்வாணமாக வாகனங்களில் இராணுவத்தினரால் தூக்கி அடுக்கப்படும் பெண் உடல்கள் தொடர்பான வக்கிரமான பேச்சுகள் எனவாக அந்தக் காணொளியில் காட்சிகள் இடம்பெற்றிருந்தன. சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகளுக்கு எதிரான ஐ.நா சிறப்பு அறிக்கையாளர், ஆவணப்படத்தின் உண்மைத் தன்மை, தொழில்நுட்ப நிபுணர்களால் உறுதிப்படுத்தப்பட்டவை என்பதை உறுதிப்படுத்தினார்.

2012 இல் பி.பி.சி (BBC) ஊடகவியலாளர் 'Frances Harrison vOjta' உடைய 'Still Counting the Dead : Survivors of Sri Lanka's Hidden War' எனும் புத்தகத்தில் கலங்கவும் நடுங்கவும் வைக்கும் விபரிப்புகள் இடம்பெற்றுள்ளன.

தனிமனிதர்கள் எவ்வாறான கொடூரங்களை இறுதி யுத்தத்திலும் அதற்குப் பின்னரும் எதிர்கொண்டனர் என்ற சித்தரிப்புகள் அதில் உள்ளன. ஐ.நா நிபுணர் குழு அறிக்கை மற்றும் சனல் - 4 ஆவணப்படம் ஆகியன, 2012 மார்ச்சில் 'LLRC' அறிக்கையின் தீர்மானங்களைச் சிறிலங்கா நிறைவேற்ற வேண்டுமென்று, அமெரிக்கா வலியுறுத்துவதற்கான புற அழுத்தங்களைக் கொடுத்தன.

இவ்வாறாகத் தொடர்ந்து வெளிவந்த புதிய புதிய ஆதாரங்கள், இறுதிக்கட்டப் போரின் போதான இராணுவத்தின் திட்டமிட்ட அடிப்படை மனித உரிமை மறுப்புகளையும் மீறல்களையும் வெளிப்படுத்தின. 2014 வரை, அதாவது போர் முடிவடைந்த 5 ஆண்டுகள் வரை, காத்திரமான பல அறிக்கைகள் தமிழர் பிரதேசங்களில் சிறிலங்காப் படைகள் நடாத்திய மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தின.

### 'OISL' அறிக்கை

குறுகிய கால ஆய்வின் பயனாக வெளிவந்த போதிலும் OISL அறிக்கை விரிவானதும் சிறந்த முறையில் ஆவணப்படுத்தப்பட்டதுமாகும். விசாரணை ஆணைக்குழுவிற்கு இலங்கை செல்ல அனுமதி வழங்கப்படவில்லை. ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிடுவது போல், விசாரணையை முடிப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒத்துழைக்காததும், ஆணைக்குழுவின் பணிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்தியதும் மிகப்பெரிய தடையாக இருந்தது. அறிக்கை முக்கியமாக மூன்று வகையான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது:

1. மனித உரிமை அமைப்புகள், ஐ.நா சிறப்பு அறிக்கையாளர்கள் மற்றும் பல அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்டது.
2. மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய சாட்சிகளுடனான நேர்காணல்கள்.
3. எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளை நேரடியாக அனுப்புமாறு OISL இன் கோரிக்கைக்கு அமையக் கிடைக்கப் பெற்ற எழுத்துமூலப் பதில்கள்.

OISL அறிக்கையின் முக்கிய கண்டடைவுகள் இந்நூலிற் பட்டியலிடப்பட்டுள்ளன.

சிறிலங்கா அரசாங்கமும் அரசியல்வாதிகளும், ஐ.நா உட்பட சர்வதேச தரப்புகள் வலியுறுத்திய பொறுப்புக்கூறல், போர்க்குற்ற - மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும் அறிக்கைகளையும் மறுதலிப்பதும் எதிர்ப்பதுமாகவே இருந்தனர்.

## வெற்றியும் சித்திரவதைகளும்

போர் வெற்றியின் கதாநாயகனாகக் கொண்டாடப்பட்ட மகிந்த ராஜபக்ச 2015 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியுறுகின்றார். நல்லிணக்க அரசியலை முன்வைத்து மைத்ரிபால சிறிசேன வெற்றிபெறுகின்றார். 2010 ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டுத் தோல்வியுற்ற இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, மகிந்த ஆட்சியில் கைது செய்யப்பட்டார்; அரசியலமைப்புச் சட்டத்திற்கு மாறாகக் கட்சிப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி உச்ச நீதிமன்ற நீதிபதி, சிரானி பண்டாரநாயகாவை 2013 இல் பதவியிலிருந்து நீக்கினார். மகிந்தவின் மறுசீரமைப்புகளில் ஒன்றினை ஏற்று அங்கீகரிப்பதற்கு உச்சநீதி மன்றம் மறுத்தமையே சிரானி பதவி நீக்கத்திற்கான காரணமாகும்.

18 ஆவது அரசியலமைப்புச் சட்ட மாற்றம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமைக்கு இட்டுச் சென்றது. அது பொது ஆணையங்களுக்குரிய பிரதிநிதிகளை நியமிப்பதற்குரிய அதிகாரத்தினை ஜனாதிபதிக்கு வழங்கியது. அடிப்படையில் அந்த ஆணையங்கள் அரச நிர்வாக அலகுகளைக் கண்காணிப்பதற்காக உருவாக்கப்பட்டவை. உதாரணமாக தேர்தல் ஆணையம், காவல்துறை மற்றும் மனித உரிமை ஆணையம் போன்றனவற்றைக் குறிப்பிடலாம். அத்தோடு உச்ச நீதிமன்ற மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் போன்ற சட்ட அமைப்பில், உயர் பதவிகளுக்கான பிரதிநிதிகளையும் தன்னிச்சையாக நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி தன்வசம் கொண்டிருந்தார். நடைமுறையில் நிறைவேற்று அதிகாரம், ஜனாதிபதியை ‘எல்லாம் வல்லவர்’ ஆக்கியது.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமற் செய்வதென்பது மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. தேர்தலில் வெல்ல வைத்தால், நூறு நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவேன் என்பது மைத்திரியின் வாக்குறுதிகளில் ஒன்று. 2010 இல் புதிய ஜனாதிபதியாகத் தேர்தலில் வென்ற மைத்திரியின் வெற்றி ‘சிறுபான்மையினரின் (தமிழ்) பெரும்பான்மை (தமிழர்) மற்றும் பெரும்பான்மையினரின் (சிங்கள) சிறுபான்மை வாக்குகளினாற் சாத்தியமாயிற்று. ஆனால் மகிந்தவிற்குப் பெரும்பான்மையினரின் பெரும்பான்மை வாக்குகள் கிட்டியபோதும் சிறுபான்மையினரின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறமுடியவில்லை என்று சொல்லப்படுவதுண்டு. அதாவது 2010 தேர்தலில் பெரும்பான்மை சிங்களவர்கள் (58%) மகிந்தவிற்கே வாக்களித்திருந்தனர். தமிழ், முஸ்லீம் வாக்குகள் பெரும்பான்மையாக மைத்திரிக்குச் சென்றதாலேயே அவரது வெற்றி சாத்தியமானது.

## ராஜபக்ச ஆட்சிக்காலம் : குடும்பம் முதன்மை

மகிந்தவின் அரசியற் பிரவேசம் பற்றிய வரலாற்றினை மீட்டப் பார்க்கும் எவரும் சர்வாதிகார ஆட்சி, மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்களின் குறியீடாக மகிந்தவின் அரசியல் வாழ்வு முடிவுக்கு வருமென நினைத்துப்பார்த்திருக்க வாய்ப்பில்லை. 1970 இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்ட மகிந்த, அக்காலகட்டங்களிற் தன்னை அடிப்படையில் வறியவர்களினதும் உரிமை மறுக்கப்பட்டவர்களினதும் பிரதிநிதியாகவும் மனித உரிமைப் போராளியாகவுமே அடையாளப்படுத்தியவர். ஜே.வி.பி மீதான இராணுவத்தின் மோசமான நடவடிக்கைகளுக்கு எதிரான பேச்சாளராக மகிந்தவின் அரசியல் அத்திவாரம் வலுவாக இடப்பட்டதோடு, புகழுக்கும் வழி சமைத்தது. 1990 இல் ஜெனீவா சென்று அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை ஐ.நா மனித உரிமை ஆணையத்தில் முறையீடு செய்தவர் மகிந்த. ஜெனீவாப்

பயணத்தின் போது, எடுத்துச் சென்ற ஆவணங்கள் காரணமாக விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுவிக்கப்பட்டார். நாடு திரும்பியபின், அவரது அரசியல் எதிர்ப்பாளர்களால் துரோக முத்திரை குத்தப்பட்டுக் குற்றம் சாட்டப்பட்டார்.

### கடத்தல், காணாமல் ஆக்கப்படல், படுகொலைகள்

2004 இல் பிரதமராகவும் - பின்னர் 2005 தேர்தலில் வென்று ஜனாதிபதியாகவும் மகிந்த எவ்வாறானதொரு மோசமான சிங்களப் பெருந்தேசிய இனவாத அரசியலை முன்னெடுத்தார் என்பது விரிவாகப் பேசப்படுகின்றது. போரைத் தீவிரப்படுத்தியது மட்டுமல்ல, கடத்தல் (வெள்ளைவான் கடத்தல்), கப்பம் அறவிடல், காணாமல் ஆக்கப்படுதல், சட்டத்திற்குப் புறம்பான படுகொலைகள், சித்திரவதைகள் என மகிந்த ஆட்சிபீடத்தின் மீறல்கள் பட்டியலிடப்படுகின்றன. இத்தகைய மோசமான மீறல்கள் சிங்களப் பகுதியிலும் நிகழ்த்தப்பட்டன.

ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைச் சம்பவங்கள் துல்லியமாக விபரிக்கப்படுகின்றன. தர்மரட்ணம் சிவராம் (தாராகி), லசந்த விக்ரமதுங்க ஆகிய ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகள் - மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டதை முன்வைத்து, ஊடகத்துறையின் குரல்வளையை மகிந்த ஆட்சிபீடம் எவ்வாறு நெரித்தது என்பதை விளக்குகின்றார் புக்லறூட். 2004 - 2011 காலப்பகுதியில் (இறுதிப் போர் தவிர்ந்த) 34 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக, கருத்துச் சுதந்திரத்தினை முன்னிறுத்திச் செயற்பட்டு வந்த 'Ground Views' ஊடகச் சேவை 2011 இல் தகவல் வெளியிட்டமை மேற்கோள் காட்டப்படுகின்றது. இக்கொலைகளுக்காக எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. 2004 - 2010 காலப்பகுதியில் 44 பெயர் குறிப்பிடப்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக ஜனநாயகத்திற்கான இலங்கை ஊடகவியலாளர்கள் (Journalists for democracy in Sri lanka) அமைப்பு தமது இணையத்தளத்திற் குறிப்பிட்டிருந்தமையும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

### ஊழல், பொருளாதார மோசடிகளும் நாட்டின் நிதி நிர்வாக முறைகேடுகளும்

2005 இலிருந்து மகிந்த மகிந்த ஆட்சிபீடமானது நாட்டின் பொருளாதாரத்திற்கும் குடும்பத்தின் தனிப்பட்ட பொருளாதாரத்திற்கும் இடையிலான வேறுபாட்டினை இல்லாமற் செய்தது. எல்லாமாக 5 முதல் 6 பில்லியன் டொலர் வரையான அரச பட்ஜெட் தொகையை ராஜபக்ச குடும்பம் விழுங்கிவிட்டதாகக் கூறப்படுகின்றது. 2015 வரை ராஜபக்ச கும்பத்தைச் சேர்ந்த குறைந்தது 29 நபர்கள் அரசாங்கத்தில் முக்கிய துறைசார் பதவிகளை வகித்துள்ளனர். அத்தோடு 50 - 70 வீதமான தேசிய வருமானத்தினையும் குடும்பத்தினர் கட்டுப்படுத்தியுள்ளனர்.

ராஜபக்ச சகோதரர்களின் ஊழல் மோசடிகள், வருமான ஏய்ப்புத் தொடர்பான தகவல்களும் பதிவாகியுள்ளன. மகிந்தவின் மூத்த சகோதரர் பசில் ராஜபக்சவின் மனைவி புஸ்பா, 2012 ஆம் ஆண்டு 19 மில்லியன் ரூபாய்கள் 'புஸ்பா ராஜபக்ச அறக்கட்டளைக்கு (Pushpa Rajapaksa Foundation) அன்பளிப்பாகப் பெற்றமையை 'Lanka enews' இணையத்தளம் ஆவணப்படுத்தியுள்ளது. அன்பளிப்பினை வழங்கியது சி.ஐ.சி.ரி (CICT) சீன நிறுவனமாகும். இந்நிறுவனமே துறைமுக அபிவிருத்திக்குப் பொறுப்பு வகித்தது. துறைமுக அபிவிருத்திப் பணிகள் தொடங்கப்படுவதற்கு ஓராண்டுக்கு முன்னர் இந்தப் பணப் பரிவர்த்தனை நடைபெற்றுள்ளது. 2015 ஆட்சி மாற்றத்தின் பின், பொது நிதிவளங்களை முறைகேடாக நிர்வகித்த குற்றச்சாட்டில், சட்ட நடவடிக்கைக்கு உட்பட்ட ராஜபக்ச குடும்பத்தின் முதல் ஆள் பசில் ராஜபக்ச ஆவார். அவர் மட்டுமல்ல மகிந்தவின் இரு புதல்வர்களான நாமல், ஜோசித மற்றும் மனைவி சிறாந்தி அத்தோடு இளைய சகோதரர் கோத்தபாய ஆகியோரும் பல்வேறு பொருளாதார முறைகேடுகளுக்காக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். ராஜபக்ச ஆட்சிபீடத்தின் முன்னிலை உறுப்பினர்கள் (குடும்பத்தினர் உட்பட்டோர்)

16 பொருளாதார முறைகேடுகளில் தொடர்புபட்டிருந்தமையும் அதற்கான வழக்குகளை எதிர்கொள்ள நேர்ந்தமையும் 2017 ஓகஸ்ட் 'Daily News' பத்திரிகை தகவல் வெளியிட்டிருந்தது. இவை தவிர, பல சட்ட மீறல் குற்றங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படவே இல்லை. போருக்கான ஆயுதக் கொள்வனவுகளில் கோத்தபாய மேற்கொண்ட ஊழல் மோசடிகளும் பேசப்படுகின்றன. மதச் சிறுபான்மையினர் மீதான இலக்குவைக்கப்பட்ட வன்முறைகள், 2018 முஸ்லீம்கள் மீதான கண்டி வன்முறையை முன்வைத்துப் பேசப்படுகின்றது.



காணாமல் ஆக்கப்பட்டோர் போராட்டம் - இலங்கை

Image Source - ibctamil.com

## சிறுபான்மையின மூலோபாயங்கள்

இவ்வத்தியாயம் முஸ்லீம்களின் நிலை, தமிழ் - முஸ்லீம் உறவு விரிசல், இஸ்லாமிய மரபுவாதத்தின் தோற்றமும் போக்கும் எனவாகப் பல்வேறு விடயங்களை நோக்குகின்றது. இலங்கைக்கு முஸ்லீம்களின் வருகை, பரம்பல் குறித்த வரலாற்றினையும் பேசுகின்றது. அவர்களின் அடையாள அரசியல் குறித்தும், வரலாற்று ரீதியாக அதன் தோற்றுவாய், மாற்றங்கள், போக்குகள் பற்றியும் சித்தரிப்புகள் இடம்பெற்றுள்ளன. இறுதிப் பத்து - இருபது ஆண்டுகளுக்குள், இலங்கை இஸ்லாமியவாதத்தின் போக்கு எவ்வாறு தலைகீழ் மாற்றம் கண்டிருக்கின்றது என்பது மேற்கோள்களுடன் முன்வைக்கப்படுகின்றது.

1990 கள் வரை தமிழ் - முஸ்லீம் உறவு, அரசியல் - கலாசார ரீதியில் நல்ல முறையில் விளங்கியமையும், பிற்பட்ட காலத்தில் அது எவ்வாறு பகைமுரண் நிலைக்கு இட்டுச் செல்லப்பட்டது என்பதும் விபரிக்கப்படுகின்றது. 1990 இல் யாழிலிருந்து அனைத்து முஸ்லீம் மக்களும் புலிகளால் வெளியேற்றப்பட்டமை, தமிழ் - முஸ்லீம் உறவினை உச்சமாகப் பாதித்த நிகழ்வு எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. சிறிலங்கா முஸ்லீம் கொங்கிரசின் உருவாக்கமும், படிப்படியாக அக்கட்சி எவ்வாறு இலங்கையில் தேசிய அளவில் முஸ்லீம் நலன்களை முதன்மையாகப் பிரதிநிதித்துப்படுத்தும் கட்சி என்ற நிலையை அடைந்தது என்பதும் அரசியல் வரலாற்று நிகழ்வுகளின் பின்னணியில் பேசப்படுகின்றன.

தமிழ் டயஸ்போறாவும் தாயகமும் என்ற துணைத் தலைப்பின் கீழ், 2009 இற்குப் பின்னரான ஈழ - டயஸ்போறா உறவும், அரசியல் நிலைப்பாடுகள், முரண்கள், பிளவுகள் குறித்த தகவல்பூர்வமான பார்வையும் முன்வைக்கப்படுகின்றன. ஈழத் தமிழர்களின் உரிமை அரசியல் சார்ந்து இலங்கை அரசியலில் பங்கேற்றுள்ள கட்சிகளின் போக்கு, புலம்பெயர் அமைப்புகளின் போக்கு, நிலவுகின்ற சிக்கல்கள், முரண்கள் குறித்தும் பேசப்படுகின்றன.

## மகிந்த மீள் தெரிவும் நகர அபிவிருத்தியும்

2010 இல் மீள் தெரிவின் பின்னர் மகிந்த

ஆட்சிபீடம் நகர மற்றும் துறைமுக அபிவிருத்திகளுக்கு முதலிடம் கொடுத்துச் செயற்பட்டது. வெளித்தோற்றத்தில் நவீனப்படுத்தல் சார்ந்த கட்டுமானங்களுக்கும் அபிவிருத்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. உள்நாட்டு - வெளிநாட்டு முதலீட்டாளர்கள், சுற்றுலாப் பயணிகளின் மற்றும் உள்நாட்டு மேல் மத்தியதர வர்க்கத்தினர் மத்தியில் கொழும்பு நகரத்தின் கவர்ச்சிப் பெறுமதியைக் கூட்டும் வகையிலான திட்டங்களை அந்த வகையிற் குறிப்பிடலாம். 2009 இலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொழும்பு நகர அபிவிருத்தியானது, சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளுடனும், நவதாராளவாதக் கொள்கைகளுடனும் தொடர்புபட்டவையாக வகுக்கப்பட்டிருந்தது. நகர அபிவிருத்தி வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதோடு, அது பொருளாதார இலக்குடைய தனியார் மயப்படுத்தல் மூலோபாயமாகவும் அமைகிறது.

## தாராளவாதப் பொருளாதாரம்

தாராளவாதப் பொருளாதாரம் இலங்கைக்குப் புதியதல்ல. 1977 இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தபோது அரச கட்டுப்பாட்டிலிருந்து சந்தைப் பொருளாதார மறுசீரமைப்புத் தொடங்கியது. ஆட்சிக்கு வந்த அடுத்த ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தினை அறிமுகப்படுத்திய புதிய அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து வந்த சீர்திருத்தங்கள் விரிவானவை. ஏற்றுமதியை அதிகரிக்க நாணய மதிப்பிறக்கம், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை நிறுவுவதற்கான கட்டுப்பாட்டுத் தளர்வு, அரச தனியதிகார நீக்கம், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வரிவிலக்குகளுடன் பொருளாதார மண்டலங்களை நிறுவுதல் போன்ற பொருளாதார மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1978 - 1984 வரையிலான ஆறு ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சி இரட்டிப்பாகியது, ஆனால் அதே நேரத்தில் செல்வந்தர் - வறியவர்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன. அரசின் பொதுநல நடவடிக்கைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டன. 1970 ஆம் ஆண்டில், சமூக நலத்திட்டங்கள், சேவைகளுக்கான அரசாங்க செலவினங்கள், அரசின் மொத்தச் செலவினங்களில் கிட்டத்தட்ட 40 வீதமாக இருந்தது. 1980 களின் இறுதியில் இது பாதியாகக் குறைக்கப்பட்டது.

## கடன்களும் பொருளாதார நெருக்கடியும்

மேற்சொன்ன பின்னணிகளோடு மகிந்த ஆட்சிப் பீடத்தின் பொருளாதாரக் கொள்கை எத்தகைய தன்மையைக் கொண்டிருந்தது, எத்தகைய விளைவுகளைக் கொடுத்தது என்பது குறித்துப் பேசப்படுகின்றது. மகிந்த ஆட்சிப் பீடத்தினால் தனியார் துறை, வெளிநாட்டு முதலீடுகள் என்பன முதன்மைப்படுத்தப்பட்டன. அத்தோடு சீனாவுடன் மேற்கொள்ளப்பட்ட கடன் உடன்படிக்கைகள் நாட்டின் பொருளாதார தாங்கு சக்தியைக் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளன. முன்னைய அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கடன்கள் நாட்டின் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக கூறப்பட்ட 2015 இன் பின் பதவியில் இருந்த நிதி அமைச்சர்களின் கூற்று, மேற்கோள் காட்டப்படுகின்றது. 2022 இல் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியும் மக்கள் போராட்டங்களுக்குமான எதிர்வுகூறலாக இதனை நோக்கமுடியும்.

## தமிழ் அரசியல் வெளியின் வாய்ப்புகள்

ஒய்வின்ட் புக்லறூட் நூலின் முடிவுரையில் அல்லது இறுதிக் கட்டுரையின் முடிவில் தெரிவித்திருப்பதை இவ்வாறு பொருட்படுத்தலாம்:

ஈழத்தமிழர்களுக்கு இரண்டு தெரிவுகள் உள்ளன. ஒன்று அரசியற் தீர்வு நோக்கி ஆக்கபூர்வமான மூலோபாயங்களோடு செயற்படுவது. அது சிங்களத் தரப்பிலும் ஆதரவைக் கட்டியெழுப்புகின்ற மூலோபாயத்துடன் அரசியலை முன்னெடுப்பது பற்றியது. மற்றையது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அரசியற் போராட்டத்தினை முன்னெடுப்பதன் ஊடாக, உரிய அரசியற் தீர்வு நோக்கி அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது. இப்போதைய சூழலில் இலங்கைக்கு வெளியே வசிப்பவர்களுக்கு இத்தகைய அரசியற்

போராட்ட அணிதிரட்டலுக்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பது முக்கியமான அம்சமல்ல. ஆனால் போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கில் வாழ்பவர்களுக்கு இது மிகவும் முக்கியமானது. இன்னும் 100 வருடங்கள் அல்லது அதற்கும் மேலாக என்ன சாத்தியம் இருக்கப்போகிறது என்பதை எவராலும் கணிக்க முடியாது. ஆனால் 2002 இல் புலிகள் கட்டியெழுப்பிய பேச்சுவார்த்தைக்கான பேரப் பலத்தினை ஒத்த நிலையை எதிர்வரும் காலங்களில் தமிழ் சமூகத்தின் அரசியல் பிரதிநிதிகள் எவரும் எட்ட முடியாது என்பது மட்டும் தெளிவானது.



**1990 விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்படும் முஸ்லிம் மக்கள்**

Image Source - namathu.blogspot.com

## இந்நூலின் முக்கியத்துவம்

இலங்கைத் தீவின் அரசியலை கொலனித்துவ காலகட்டத்திலிருந்து பின் - முள்ளிவாய்க்கால் காலம் வரை விரிவாக இந்நூல் நோர்வேஜிய மொழியில் முன்வைக்கின்றது. தமிழிற்கூட இத்தகைய பெரும்பரப்பினை கையாண்ட ஈழத்தமிழர் அரசியல் வரலாற்று நூலைக் காணமுடியாது என்று கருதுகின்றேன். நுண் விபரங்களுடன் பன்முகப்பட்ட பார்வை - தகவல் - தரவுகள் - வரலாற்று நிகழ்வுகளை முன்வைத்து விமர்சனபூர்வமாக (கல்வியியல் ஆய்வு) ஆராய்கிறது.

இலங்கைத் தீவின் சிங்கள - தமிழ் - முஸ்லீம் தரப்புகளின் அரசியல் வரலாறும் அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகள் - விளைவுகளும், சமூக உள்முரண்பாடுகளின் பின்னணிகளும் பேசப்படுகின்றன. பிராந்திய, சர்வதேசத் தலையீடுகளும், விளைவுகளும் பேசப்படுகின்றன. இந்நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய நூல். அதற்குரிய நேரம் கனியும்போது மொழிபெயர்ப்பினைச் செய்வேன். ஆனால் 'திக்குகள் எட்டும்' தொடரில் இந்த அறிமுகக் கட்டுரையை மிக விரிவாக எழுதியிருக்கின்றேன். இந்நூல் கையாண்டிருக்கின்ற கால அளவும் விடயப்பரப்பும் அத்தகைய விரிவான அறிமுகத்தினைக் கோரும் தன்மையுடையது.

தமிழர்கள் - சிங்களவர்கள் - முஸ்லீம்களின் அரசியல் பற்றிய விடயங்களை மட்டுமல்லாமல் அவர்களின் சமூக - மொழி - பண்பாட்டு - வாழ்வியல் - உளவியல் தொடர்பான ஆழமான அறிதலும் ஆய்வு அநுபவமும் கொண்டவர் புக்லறுாட்; மட்டுமல்லாமல், இச் சமூகங்களுடனான நீண்ட கால நேரடியான ஊடாட்டமும் உறவுமுடையவர் என்பதுவும்தான் இத்தகைய நூலைச் சாத்தியப்படுத்தியுள்ளது. தமிழர்களும் இலங்கையின் ஏனைய சமூகத்தினரும் தம்மை மீளாய்வு செய்யவும் அது குறித்த உரையாடல்களை முன்னெடுக்கவும் இந்நூல் வழிகோலக்கூடியது. தமிழ்ச் சூழலில் இந்நூல் குறித்த உரையாடல்கள் நடாத்தப்படுவது பயனுடையது. ஈழத்தமிழ் அரசியலை அறிவார்ந்த திசைவழி செலுத்துவதற்கான உரையாடல்களுக்கு இந்நூலில் இடம்பெற்றுள்ள பல்வேறு தகவல்களும் பார்வைகளும் பயன்தரக்கூடியவை.

(தொடரும்.)



கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

'இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு' என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்று கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

*ஆங்கில மூலம் : சரத் அமுனுகம*

# ரோஹண விஜயவீரவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர்களும் : சமூகவியல் நோக்கு

பகுதி-1

சமூகவியலாளர் கலாநிதி சரத் அமுனுகம அவர்கள் 'WIJEWEERA AND THE LEADERSHIP OF THE J.V.P: A SOCIOLOGICAL PERSPECTIVE' என்ற தலைப்பில் ஒரு ஆய்வுக்கட்டுரையை எழுதியுள்ளார். 2018 ஆம் ஆண்டில் வெளிவந்த 'DREAMS OF CHANGE - LAND LABOUR AND CONFLICT IN SRI LANKA' என்ற இவரது கட்டுரைத் தொகுப்பு நூலின் ஆறாவது அத்தியாயமாக (பக். 184 - 242) அமைந்துள்ள இக்கட்டுரையின் கருத்துகளைச் சுருக்கியும் தழுவியும் தமிழில் தந்து, விமர்சன நோக்கில் அறிமுகம் செய்வதே இத் தமிழாக்கத்தின் நோக்கமாகும். விஜயவீரவின் கவர்ச்சி, ஆளுமை, அவரின் பலமும் பலவீனமும், அவருக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் பிற தலைவர்களுக்கும் இடையிலான உள் முரண்பாடுகளும் மோதல்களும் ஆகியவற்றை சமூகவியல் நோக்கில் இக்கட்டுரை பகுப்பாய்வு செய்கின்றது.

1971 கிளர்ச்சி பற்றி வெளிவந்த ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள், விபரத்தொகுப்புகள் ஆகியன பற்றிய நூற்பட்டியலான 'THE APRIL 1971 INSURRECTION IN CEYLON : A BIBLIOGRAPHICAL COMMENTARY' என்ற நூலை நூலகவியலாளர் எச்.ஏ.ஐ. குணதிலக (H.A.I. GOONETILEKE) 1975 ஆம் ஆண்டு வெளியிட்டார். இந்நூற்பட்டியலில் 440 வெளியீடுகள் பற்றிய தகவல்கள்


தரப்பட்டன. கிளர்ச்சி நடைபெற்று நான்கு ஆண்டுகள் கடந்த பின் வெளியிடப்பட்ட இந்நூலில் குறிப்பிடப்படும் நூல்களும் கட்டுரைகளும் ஜே.வி.பி கிளர்ச்சியின் தோற்றத்திற்கான வரலாற்றுப் பின்புலம், அக் கிளர்ச்சியின் நியாயப்பாடு (JUSTIFICA TION) என்பனவற்றுக்கு முதன்மையளிப்பனவாக இருந்தனவென்றும், ஜே.வி.பி இயக்கத் தலைவர்களுக்கும் விஜயவீரவிற்கும் இடையிலான முரண்பாடுகள் பற்றிய தகவல்கள் போதியளவு அவற்றில் கூறப்படவில்லை என்றும் சரத் அமுனுகம தெரிவிக்கின்றார். மூன்றாம் உலக நாடுகளின் புரட்சிகள்/கிளர்ச்சிகள் பற்றி அக்கறை கொண்டிருந்த மேற்குலகிற்கு 1971 கிளர்ச்சி பற்றி அறிமுகம் செய்யும் கட்டுரையை, 1971 இல் பிரட் ஹலிடே (FRED HALLIDAY) 'நியு லெவ்ட் ரிவியு' (NEW LEFT REVIEW) இதழில் எழுதினார். இதே இதழில் தமரா டொய்ஸ்ரர் (TAMARA DEUTSCHER) 1972 இல் இரு கட்டுரைகளை எழுதினார். இக்கட்டுரைகளும் கிளர்ச்சியின் அரசியல் வரலாற்றுப் பின்புலம் பற்றி ஆராய்வன என்றும் சரத் அமுனுகம குறிப்பிடுகிறார்.



சரத் அமுனுகம

Image Source - asianmirror.lk

ஜே.வி.பி இன் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரும் 'பொடி அத்துல' என்ற பெயரால் அழைக்கப்பட்டவருமான 'விக்டர் ஐவன்' (VICTOR IVAN) 1979 இல் 'THE INSURRECTION OF 1971 (சிங்களம்)' என்ற நூலை வெளியிட்டார். இன்னொரு உயர் மட்டத் தலைவரான 'லயனல் போப்பகே' 'THE LIONEL BOPAGE STORY' என்ற நூலை 2011 இல் வெளியிட்டார். இவ்விரு நூல்களும் கட்சியின் உள்ளகத் தகவல்கள் பலவற்றை விரிவாகக் குறிப்பிடும் நூல்களாக அமைந்தன. நினைவுக்குறிப்பு/ வாழ்க்கை வரலாறு என்ற வகையில் அமைந்த இவ்விரு ஆக்கங்களும் உள்ளாள் பார்வையை (INSIDER VIEW) வழங்குவனவாக அமைந்தன. கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளின் போது பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் ஊடாகவும் உள்ளகத் தகவல்கள் வெளிவரலாயின. ஜே.வி.பி கிளர்ச்சி பற்றிய முதனிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத்தரவுகள் பற்றிய சுருக்கமான நல்ல அறிமுகத்தை முதலிரு பக்கங்களில் கட்டுரையாளர் வழங்கியுள்ளார்.



விக்டர் ஐவன்

Image Source - english.theleader.lk

### விஜயவீரவும் லயனல் போப்பகேயும்

நீதி விசாரணை, அதன் பின் தண்டனையும் சிறை வாழ்க்கையும் எனப் பல ஆண்டுகளைக் கழித்த போது ஜே.வி.பி தலைவர்கள் சிலர் தமது கிளர்ச்சியின் தோல்வி பற்றி ஆழ்ந்து சிந்தித்துத் தம் அனுபவப் பதிவுகளை நூல்கள், கட்டுரைகள் வடிவில் எழுதினார்கள். அவ்வாறு எழுதப்பட்ட நூல்களில் சிறந்து விளங்கும் பகுப்பாய்வுகளாகவும் தகவல் களஞ்சியங்களாகவும் விக்டர் ஐவன், லயனல் போப்பகே ஆகிய இருவரதும் நூல்கள் விளங்குகின்றன என சரத் அமுனுகம குறிப்பிடுகிறார். விக்டர் ஐவன் கிளர்ச்சிக் கால

நிகழ்வுகளை மிகச் சிறப்பாக எடுத்துரைக்கிறார். இவ்வாறே லயனல் போப்பகேயும் கிளர்ச்சியின் உள்ளகத் தகவல்களை நன்கு விபரிக்கிறார். அவரது நூல், வாழ்க்கை வரலாறு என்ற முறையில் சிறந்து நிற்கிறது. லயனல் போப்பகே, பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானப் பிரிவு மாணவனாக இருந்தே போது இன்னொரு விஞ்ஞானப் பட்டதாரி மாணவனான விஜயவீரவுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார். போப்பகே மற்றும் விஜயவீர இருவருக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இருவரும் தென்னிலங்கையின் கொவிகம அல்லாத சாதிப் பின்புலத்தை உடையவர்கள். இருவருடைய தந்தையரும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொண்டர்களாக இருந்தனர். அதிகாரப் பலம் மிக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசியல்வாதிகளால் கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள் என்பதற்காக இவர்கள் பழிவாங்கப்பட்டனர். விஜயவீர அம்பலாங்கொடவிலும், போப்பகே மாத்தறையிலும் கிராமத்துப் பாடசாலைகளில் கல்வி கற்றனர். அவர்களுக்கு விஞ்ஞானப் பட்டதாரிப் படிப்பு என்பது அக்காலத்தில் எட்டாக் கனியாகவே இருந்தது. அம்பலாங்கொட தர்மாசோக கல்லூரியில் விஜயவீரவும், மாத்தறை ராகுல கல்லூரியில் போப்பகேயும் சேர்ந்து உயர் வகுப்புகளில் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். அவர்கள் இருவரும் திறமையின் அடிப்படையில் பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவிற்குத் தெரிவாயினர்.




ரோஹண விஜயவீரவும் லயனல் போபகேவும்

Image Source - www.colombotelegraph.com

நீதி விசாரணையின் போது பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களிலும் இத் தலைவர்களது இளமைக்கால வாழ்க்கை பற்றிய செய்திகள் பல பதிவிடப்பட்டன. தர்ம விக்ரமரட்ண என்பவர் எழுதிய 'THE SECOND INSURRECTION OF THE JVP' என்ற நூலும் பல தகவல்களைத் தருவதாக உள்ளது என சரத் அமுனுகம குறிப்பிடுகிறார்.

### விஜயவீரவின் கல்வி இடை நடுவில் நிறுத்தப்படுதல்

ரஷ்யாவின் லுமும்பா பல்கலைக்கழகத்தில் பொறியியல் கல்விக்காக சென்ற விஜயவீர, ஒரு தடவை கொழும்புக்குத் திரும்பி வந்தபோது, மீண்டும் அங்கு செல்வதற்கு விசா மறுக்கப்பட்டது. இவ்வாறு விசா மறுக்கப்பட்டதன் காரணம், கம்யூனிஸ்ட் கட்சியின் (மொஸ்கோ பிரிவு) தலைவர்கள் சிலர் கொழும்பு ரஷ்யத் தூதரகத்திற்கு விஜயவீரவின் பீகிங் பிரிவு கட்சி சார்பு நடவடிக்கைகள் பற்றிய தகவல்களைக் கொடுத்து, விசாவை நிராகரிக்கும்படி ஆலோசனை கூறியது தான் என்று விஜயவீர குறிப்பிட்டிருக்கிறார். தெற்கு இலங்கையின் கம்யூனிஸ்ட் அரசியல்வாதியான எஸ்.ஏ. விக்கிரமசிங்கவின் உதவியாளராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் விளங்கிய பிரேமலால் குமாரசிறி, அவரது கட்சியில் இருந்து வெளியேறி நா. சண்முகதாசனின் பீகிங் ஆதரவுக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். பிரேமலால் குமாரசிறியுடன் நெருங்கிய தொடர்புகளை வளர்த்துக் கொண்டு படிப்படியாக சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் செல்வாக்குள்ள ஒருவராக விஜயவீர மாறினார்.

அவரது ஆதரவுத் தளம் விரிவாகியது. சீன - சோவியத் விவாதம் (SINO - SOVIETDEBATE) அப்போது உச்சக் கட்டத்தில் இருந்தது. விஜயவீர ரஷ்ய மொழியில் நல்ல புலமை பெற்றிருந்தபடியால் ரஷ்யாவில் வெளியான நூல்கள், ஆவணங்கள் பற்றிய நேரடியான அறிவு அவருக்கு இருந்தது. இதனால் கட்சித் தொண்டர்கள் மத்தியில் அவருக்கு அதிகாரபூர்வமாகப் பேசக்கூடிய கோட்பாட்டாளர் என்ற மதிப்பு கிடைத்தது. சீனசார்பு கட்சியின் தலைவர் நா. சண்முகதாசனின் தலைமைத்துவத்திற்கு அறைகூவலாக அமையும் முறையில் விஜயவீரவின் நடவடிக்கைகள் அமைந்தன. அக்கட்சியைச் சார்ந்த இளைஞர்களைத் தன் பக்கம் வசியப்படுத்தி, கட்சியைப் பிளவுபடுத்தி வெளியேற அவர் தயாரிப்புகளைச் செய்து கொண்டிருந்தார்.

### சேகுவேரா

கியுபா புரட்சித் தலைவர் சேகுவேரா 1960 களில் உலகப் புகழ்பெற்ற புரட்சியாளராக விளங்கினார். கியுபா புரட்சியின் பின் அந்நாட்டில் அமைச்சுப் பதவி போன்ற உயர் பதவிகளைப் பெற்று சுகவாழ்வைத் தொடர்வதைத் துறந்து, லத்தின் அமெரிக்காவிற்குப் புரட்சியை எடுத்துச் செல்ல விரும்பிய 'சே' பொலிவியாவின் மலைக் காடுகளுள் கரந்துறை வாழ்க்கையை மேற்கொண்டார். சி.ஐ.ஏ உளவாளிகளால் கொலை செய்யப்பட்டு தன்னுயிரைத் தியாகம் செய்த அவர், உலகெங்கும் இளைஞர் புரட்சிக் குழுக்களால் போற்றப்பட்ட வீரபுருசனாகத் திகழ்ந்தார். விஜயவீர தலைமையில் இலங்கையில் சேகுவேரா குழு (CHE GROUP) பிரபலம் பெற்றது. விஜயவீர தனக்கு போட்டியான தலைவர்களை திட்டமிட்டு ஓரம் கட்டுவதிலும் வேரறுப்பதிலும் வல்லவராக விளங்கினார். இக்காலத்தில் ஹொரண பகுதியைச் சேர்ந்த தர்மசிறி என்பவருடன் விஜயவீர போட்டியையும் பகைமையையும் வளர்த்துக் கொண்டார். சேகுவேரா, சுயநலமற்ற கொள்கைப்பற்று, தியாகம், நீதியும் சமத்துவமும் என்பனவற்றின் குறியீடாக விளங்கினார். 'சே'யின் ஆளுமையை தன் பிரச்சாரத்திற்கு நன்கு பயன்படுத்திய விஜயவீர, இலங்கையின் மரபுவழி இடதுசாரிகளின் மேட்டிமைக் குழுவாதம் (ELITISM) மீது வெறுப்புக் கொண்டிருந்த தென்பகுதி இளைஞர்களை தன் பக்கம் கவர்ந்திழுத்துக் கொண்டார்.

சேகுவேரா பற்றிப் பலரும் அறியாத தகவல் ஒன்றையும் சரத் அமுனுகம தருகிறார். சேகுவேரா ஒரு தடவை இலங்கைக்கு வருகை தந்தார். அவர் மேற்கு மாகாணத்தின் ஹொரண என்ற இடத்துக்கு அப்போது சென்றார். இந்த முற்போக்காளர்களின் நகரத்தில் (PROGRESSIVE TOWN) தம் வருகையின் நினைவாக 'சே' ஒரு மரத்தை நட்டார். அந்த மரம் இன்று விஜயவீரவின் பின் வந்தோரின் வழிபாட்டுக்குரியதாக இருப்பதாக சரத் அமுனுகம குறிப்பிடுகிறார் (பக். 187). ஹொரண பகுதியே ஜே.வி.பியின் முக்கிய ஆதரவுத்தளமாக இருந்ததைக் குறிப்பிடுவதோடு, விஜயவீரவின் பரம வைரியான தர்மசிறி, ஹொரணவைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிடுகிறார் (பக். 187). உலகம் முழுவதிலும் அக்காலத்தில் இலட்சியவாத இளைஞர்கள் சேகுவராவின் கவர்ச்சி ஆளுமைக்கு ஆட்பட்டிருந்தனர் (பக். 187). இலங்கையின் ஜே.வி.பி இளைஞர்களும் 'சே' என்ற மந்திரச் சொல்லால் கவரப்பட்டதில் ஆச்சரியமில்லை. விஜயவீர 'சே'யின் கவர்ச்சி ஆளுமையை நன்கு பயன்படுத்திக் கொண்டார்.

சண்முகதாசன், பிரேமலால் குமாரசிறி என்ற இருவரதும் தலைமையில் இயங்கிய சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில், உட்கட்சி பிரச்சினைகள் தலைதூக்கின. சண்முகதாசன் ஒரு தமிழர். அவரது தமிழ் அடையாளம் புரட்சிக்கு தலைமை தாங்கும் தகுதியை அவருக்கு இல்லாமல் செய்திருந்தது. சண்முகதாசன் கோட்பாட்டாளர் என்ற முறையில் சிறந்து விளங்கினார். அவர் தொழிற்சங்க போராட்டங்களில் கூடிய கவனம் செலுத்தினார். மாத்தறைப் பகுதி தலைவரான பிரேமலால் குமாரசிறியின்

தொடர்பால் கட்சிக்குள் புகுந்த விஜயவீர தன் செல்வாக்கை வளர்த்துக் கொண்டார்.

சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளர்களில் ஒருவரான விஜயசேன விதான என்பவரை விஜயவீர தன்னுடன் சேர்த்துக் கொண்டார். விஜயசேன விதானவின் இயக்கப் பெயர் ‘சனத் பொறலு ஹெட்டிய’ என்பதாகும். இவர் அனுராதபுரத்தில் ஆசிரியராக வேலை செய்ததோடு அம்மாவட்டத்தின் சீனச்சார்பு கட்சியின் மாவட்டச் செயலாளராகவும் இருந்தார். ‘சனத் பொறலு ஹெட்டிய’ விஜயவீரவின் அம்பலாங்கொட பகுதியைச் சேர்ந்தவர். அத்தோடு அவர் விஜயவீர போன்று ‘கராவ’ சமூகப் பிரிவைச் சேர்ந்தவராகவும் இருந்தார். சீனச்சார்பு கம்யூனிஸ்ட் குழுவில் இருந்த வேறு பலரும் விஜயவீரவுடன் இணைந்து கொண்டனர் எனக் குறிப்பிடும் சரத் அமுனுகம அத்தகைய 14 நபர்களின் பட்டியலைத் தருகிறார். சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருந்து பல முக்கிய புள்ளிகளை விஜயவீர கவர்ந்திழுத்தமையை இப்பட்டியல் காட்டுகிறது. அதனை முழுமையாகக் கீழே தந்துள்ளோம்:

1. டபிள்யு.ரி. கருணாரத்தின (சீனச்சார்புக் கட்சியின் வத்தளைக் கிளைச் செயலாளர்)
2. எஸ். பியதிலக (வத்தளைக் கிளை உறுப்பினர்)
3. எச். மில்டன் (வேலையற்ற இளைஞர், கொழும்பு வடக்கில் பிரபலமான செயற்பாட்டாளர்)
4. டெல்கொட ராஜா பெரேரா (துறைமுக அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
5. சிறிபால அபய குணவர்த்தன (இ.பொ.ச வின் பஸ் சாரதி)
6. டி.பி. விமலகுண (தொழிற்சங்கவாதி, கொலட்ஸ் லிமிட்டட் கம்பனி ஊழியர்)
7. ரி.ஜி. வால்டர் (மோட்டார் வாகனத் திருத்துனர்)
8. ஏ.ஈ. யமிஸ் (எலக்ரிக்கல் தொழில்நுட்பவியலாளர்)
9. பியசிறி குணரத்தின (எழுது வினைஞர்)
10. நிகால் டயஸ் (பல்கலைக்கழக மாணவன், சீனச் சார்புக் கட்சியின் பாணந்துறைக் கிளைச் செயலாளர்)
11. மகிந்த பாலிகவாதன (வங்கி எழுதுநர்)
12. பியதாச யலகல (வேலையற்ற இளைஞர்)
13. முத்துபால (எழுது வினைஞர்)
14. ரி.பி.சி. பெர்ணாண்டோ (வேலையற்ற இளைஞர்)

சண்முகதாசனின் கட்சியில் இருந்து தன்பக்கம் சேர்த்துக் கொண்ட குழுவில் முக்கியமானவர்களின் மேற்படி பட்டியல் அக்கட்சியில் விஜயவீர எந்தளவுக்கு ஊடுருவியிருந்தார் என்பதற்குச் சான்றாக விளங்குகிறது. 1965 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் நா. சண்முகதாசன் சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் கொழும்பு, தெற்குத் தொகுதி வேட்பாளராகப் போட்டியிட்டுத் தோல்வியடைந்தார். கொழும்பு, தெற்குத் தொகுதி தமிழர்கள் அதிகமாக வாழும் பகுதி (வெள்ளவத்தையை உள்ளடக்கியது). சண்முகதாசன் தேர்தலில் கட்டுப் பணத்தையும் இழந்து தோல்வியுற்றார் என்பதைக் காட்டி, விஜயவீர குழுவினர் சண்முகதாசனுக்கு எதிரான பிரச்சாரத்தை கட்சிக்குள் முன்னெடுத்தனர். கட்சியின் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறி நடப்பவர்களை அவதானித்து வந்த சண்முகதாசன், விஜயவீரவின் இனவாத நடவடிக்கைகளை ஏற்க முடியாதவராய் விஜயவீரவைக் கட்சியில் இருந்து நீக்கினார். இது விஜயவீரவுக்குப் புதிய கட்சியை ஆரம்பிக்க வாய்ப்பான தருணம் ஆயிற்று. ‘ஜனதா விமுக்தி பெரமுன (மக்கள் விடுதலை முன்னணி)’ என்ற பெயரில் புதிய கட்சியை விஜயவீர ஆரம்பித்தார். உலக அளவில் இடதுசாரி சார்புள்ள இளைஞர்களைக் கவர்ந்த ‘மக்கள் (PEOPLE)’, ‘விடுதலை (LIBERATION)’ என்ற இரு சொற்களையும் சேர்த்த கவர்ச்சியானதொரு பெயரை விஜயவீர தன் கட்சிக்கு வைத்துக்கொண்டார் (பக். 190).

புதிய கட்சியை ஆரம்பித்த தொடக்கத்தில் விஜயவீர, இடதுசாரி சார்புடையவர்களான இரண்டு இளைஞர்களைத் தன் பக்கம்

சேர்த்துக் கொண்டார். இவர்களில் ஒருவர் களனியைச் சேர்ந்த நிமலசிறி ஜயசிங்க என்பவராவர் (இவர் பின்னர், லொக்கு அத்துல என்றும் பெயரைப் பெற்றார்). மற்றவர் சிறில் திசாயக்க (டினோரிஸ்) என்பவர். இவர்கள் இருவரும் கட்சியில் முக்கிய வகிபாகம் பெற்றனர்.

களனி - மகர பகுதி, வகும்புற (பத்கம) என்னும் சாதியினர் அதிகம் வாழும் பகுதியாகும். நிமலசிறி ஜயசிங்க இப்பகுதியைச் சேர்ந்தவர். இச்சமூகப் பிரிவினரின் ஆதரவுப் பலத்தை புதிய கட்சிக்கு பெற்றுக் கொள்ள இவர் உதவினார். ஒழுங்கமைப்பு வேலைகளில் திறமை மிக்க 'லொக்கு அத்துல' கட்சியின் அதிகாரப் படிநிலையில் உயர்ந்து சென்றார். சிறில் திசநாயக்க காணி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழிற்சங்கத்தில் இருந்தார். அத்திணைக்களத்தின் வாகனங்களைப் பெற்றுப் பயன்படுத்தல், காணித் திணைக்களத்தின் கட்டிடங்களில் கட்சியின் இரகசியக் கூட்டங்களை நடத்துதல் போன்ற செயற்பாடுகளுக்கு உதவினார்.

நா. சண்முகதாசனின் கட்சிக்குள் இருந்து கொண்டே அவரின் தலைமையை விமர்சித்துக் கொண்டிருப்பதும், அக்கட்சியில் இருந்து வெளியேறி தனியாக ஒரு கட்சியை அமைப்பதும் வெவ்வேறான விடயங்கள். தனிக்கட்சியை அமைப்பது சவால் மிகுந்த விடயம் என்று குறிப்பிடும் சரத் அமுனுகம, விஜயவீர தலமைத்துவப் பண்புகள் மிக்க திறமைசாலி எனவும், புத்தாக்கமான தந்திரங்களைக் கையாண்டு மக்கள் விடுதலை முன்னணியை ஒரு பலம்மிக்க கட்சியாக வளர்த்தார் என்றும் குறிப்பிடுகிறார். சண்முகதாசனின் கட்சியில் இருக்கும் வரை அவர் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் விளிம்பு நிலை வகிபாகத்தை (PERIPHERAL ROLE) வகித்தார் என்றும், விஜயவீர போன்ற இளம் தலைவர்களையும் கட்சித் தொண்டர்களையும் எல்லா இடதுசாரிக் கட்சிகளும் அலட்சியம் செய்து வந்தன என்றும் சரத் அமுனுகம கூறுகிறார். இதற்குக் காரணம், கட்சிகளின் உயர் பீடங்களில் அமர்ந்திருந்தவர்கள் மத்தியதர வர்க்கத்தினராக இருந்தமையும், அவர்களது மேட்டிமையான போக்குமாகும். கட்சிகளின் உட்குழுக்களுக்குள் மத்திய தர வர்க்கத்தினர் அல்லாதவர்களைத் தலைவர்கள் உட்புக அனுமதிக்கவில்லை. லங்கா சமசமஜாக்கட்சி, இரண்டாம் உலகப் போருக்கு முந்திய காலத்தில், கீழ் மட்டங்களில் இறங்கி வேலை செய்தவர்களான பிலிப் குணவர்த்தன, என்.எம். பெரேரா போன்ற தலைவர்களைக் கொண்டிருந்தது. ஆனால் பிற்காலத்தில் இடதுசாரித் தலைவர்களின் பாராளுமன்றவாதமும் (PARLIAMENTARISM), தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் பின்பற்றிய உயர் வர்க்கப் பண்பாடும் கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்களை அந்நியப்படுத்துவதாக அமைந்தன. இப்பின்னணியில் விஜயவீர இடதுசாரித் தலைவர்கள் மீது விரக்தி கொண்டிருந்த இளைஞர்களைத் தன் பக்கம் கவர்ந்திழுக்கக் கூடிய வகையில் ஒழுங்கமைப்பு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார். பின்வரும் தலைப்புகளின் கீழ் மக்கள் விடுதலை முன்னணியின் ஒழுங்கமைப்பு வேலைகளையும் விஜயவீரவின் தலைமைத்துவத்தின் நிறை குறைகளையும் சரத் அமுனுகம பகுப்பாய்வு செய்கிறார்:

1. காணித் திணைக்களத்தின் தொழிற்சங்கம்
2. பல்கலைக்கழகங்கள்
3. கட்சியின் கட்டமைப்பு (பொலிட் பீரோ, மாவட்டம், கிளைகள்)
4. பிராந்தியக் குழுக்கள்
5. இளம் புத்ததுறவிகள்
6. இலக்கிய, கலை, கலாசாரக் குழுக்கள்

### காணித் திணைக்களத்தின் தொழிற்சங்கம்

தொடக்கத்தில் இருந்தே காணித் திணைக்களத்தின் தொழிற்சங்கம் மக்கள் விடுதலை முன்னணிக்கு வளங்களைக் கொடுத்துதவிய ஒன்றாக இருந்து வந்தது. இத்தொழிற்சங்கத்தின் தலைவர்களாக தகநாயக்க (டையோனிஸ்) மல்கொன்ட, எஸ்.



ரோஹண விஜயவீர

Image Source - groundviews.org

ஜே. பீற்றர் ஆகியோர் இருந்தனர். மிக விரைவிலேயே மக்கள் விடுதலை முன்னணி தொழிற்சங்கத்தின் தலைவர் டையானிஸ், செயலாளர் எஸ்.ஜி. சமரசேன, நிர்வாகக்குழு உறுப்பினர்களான தனபால, ரூபன் ஆகியோரைத் தனது உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டது. இவர்கள் காணித் திணைக்களத்தின் தொழிற்சங்கத்தை மக்கள் விடுதலை முன்னணியின் நடவடிக்கைகளுக்கான பலமான களமாக மாற்றினர். அத்தொழிற்சங்கத்தின் செய்திப் பத்திரிகையான 'அபிவிருத்தியின் குரல்' தொழிற்சங்க உறுப்பினர்களின் சந்தாப் பணத்தைக் கொண்டு நடத்தப்பட்டு வந்தது. அப்பத்திரிகை, விஜயவீரவின் பிரச்சார வேலைக்கான கருவியாக ஆகியது. காணித் திணைக்களத்தின் தொழிற்சங்கம் பொலநறுவ மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற ஒரு அமைப்பாகவும், மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் தன் இருப்பை வெளிப்படுத்திய ஒன்றாகவும் இருந்தது. முன்னாள் சிவில் சேவை உத்தியோகத்தராகவும், பொலநறுவ பாராளுமன்ற உறுப்பினராகவும், காணி அமைச்சராகவும் இருந்த சி.பி.டி. சில்வா கட்டமைத்த நிறுவனமே காணித் திணைக்களமாகும். அத்திணைக்களத்தின் உத்தியாகத்தர்களும் தொழிலாளர்களும் அப்பகுதியில் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளையும், காடழிப்பு, வீடமைப்பு, வீதியமைப்பு போன்ற கட்டுமான வேலைகளையும் செய்து முடிப்பவர்களாக இருந்தன. சி.பி.டி சில்வா பாராளுமன்றத் தேர்தல்களில் தோற்கடிக்கப்பட முடியாத ஒருவர் என்றே கருதப்பட்டு வந்தார். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமறைவுப் பிரச்சார வேலைகள் காரணமாக 1970 பொதுத் தேர்தலில் மின்னேரியாத் தொகுதியின் வேட்பாளராகப் போட்டியிட்ட சி. பி.டி. சில்வா தோற்கடிக்கப்பட்டார். பொலநறுவவிற்கு வெளியே இருந்து கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்ட ஒரு வேட்பாளர் சி.பி.டி. சில்வாவைத் தோல்வியுறச் செய்தார். அத்தோல்வியின் பின் சில மாதங்கள் கழித்து சில்வா காலமானார்.

ரோஹண விஜயவீரவின் கட்சியின்

கொள்கைகளின் இனத்துவப் பரிணாமம் (ETHNIC DIMENSION) மிக முக்கியமான ஒரு விடயம். தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அக்கட்சியின் கொள்கைகளைத் தீர்மானிப்பதில் பொலநறுவவும், காணித் திணைக்களத் தொழிற்சங்கமும் முக்கிய இடத்தைப் பெற்றன. 1958 ஆம் ஆண்டு இனக் கலவரம் நடைபெற்ற போது, காணித் திணைக்களத்தின் தொழிலாளர்கள் பெரும் அழிவு வேலைகளைச் செய்தனர். கொழும்பில் நடந்த சம்பவங்கள், கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்கள் கொலை செய்யப்பட்டார்கள் என்பன பற்றிய பொய் வதந்திகள் பரவிய போது, பொலநறுவ காணித் திணைக்களத் தொழிலாளர்கள் அப்பகுதியில் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். அங்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களாகவிருந்த தமிழர்களைத் தாக்கினர். பொலநறுவையில் தமது அழிவு வேலைகளை முடித்த பின்னர் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான இயந்திரங்களையும் வாகனங்களையும் எடுத்துக் கொண்டு 'தமிழர்களைக் கொல்வோம்' என்ற கோஷத்தோடு பதுளை நோக்கிச் சென்றனர். அப்போது, அரசாங்க அதிபரும் ஆயுதப் படைகளும் பலாத்காரத்தை உபயாகித்து காணித் திணைக்கள தொழிலாளர்களைத் தடுத்து நிறுத்தினர். இத்தொழிலாளர்களே 'சண்டியர்கள்' எனப் பிரசித்தம் பெற்றவர்கள். தென்இலங்கையின் பலப்பிட்டிய போன்ற பகுதிகளில் இருந்து கடுமையான உடலுழைப்பு வேலைகளுக்காக கொண்டுவரப்பட்டவர்களான இத் தென்பகுதித் தொழிலாளர்கள் சோசலிஸ்டுகளாகவும் அதிதீவிரத் தேசியவாதிகளாகவும் விளங்கினர். விஜயவீரவின் கோட்பாடுகள், தோட்டத் தொழிலாளர்களையும் நகரம் சார் இடதுசாரிக் கட்சிகளையும் எதிரிகளாக விளக்கம் கொடுத்தன. இதனால் விஜயவீரவின் 'சிங்களச் சோசலிசம்' இத் தொழிலாளர்களுக்கு கவர்ச்சி மிக்கதாக இருந்தது. விஜயவீரவின் இனவாத அடிப்படையிலான 'சிங்களச் சோசலிசம் காணித் திணைக்களத் தொழிலாளர்களை மட்டுமல்லாது ஏனைய அடிநிலை இடதுசாரித் தொழிலாளர்களையும் கவர்ந்திழுத்தது. சி.பி.டி. சில்வா பற்றிய அடிக்குறிப்பில், சில்வா தென்பகுதியின் பலப்பிட்டியைச் சேர்ந்தவர் என்பதையும் பலப்பிட்டியின் அயற்பகுதியான அம்பலாங்கொடவைச் சேர்ந்த விஜயவீரவிற்கும் அவருக்கும் இடையிலான கருத்தியல் ஒற்றுமைகளைப் பற்றியும் சரத் அமுனுகம விபரித்துள்ளார்.

## பல்கலைக் கழகங்கள்

சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, பொலநறுவ காணித் திணைக்களம் என்பனவற்றில் இருந்தும் பிற இடதுசாரிச் சார்புடைய தொழிலாளர்களில் இருந்தும் ஒரு சிறு குழுவை விஜயவீர தனக்குச் சார்பானவர்களாக மாற்றிக் கொண்டார். அத்தோடு பல்கலைக்கழகங்களில் தனக்கு ஓர் ஆதரவுத் தளத்தை உருவாக்கினார்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி நடைபெற்ற காலத்தில் இலங்கையில் மூன்று பல்கலைக்கழகங்கள் இருந்தன. இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராதனை வளாகத்தில் சரத் விஜயசிங்க, நிகால் டயஸ், லயனல் போப்பகே ஆகிய மாணவத் தலைவர்கள் முக்கிய செயற்பாட்டாளர்களாக விளங்கினர். விதியோதயப் பல்கலைக்கழகத்தின் மகிந்த விஜயசேகர, தர்மசேகர ஆகியோர் கொழும்பின் புறநகர்ப் பகுதிகளான நுகேகொட, களனி ஆகிய இடங்களில் தம் செயற்பாடுகளை மேற்கொண்டனர். இத் தலைவர்களோடு விஜயவீர கொண்டிருந்த முரண்பாடுகள் பற்றி சரத் அமுனுகம விளக்கிக் கூறுகிறார்.

## கட்சியின் கட்டமைப்பு

நூலின் பக்கம் 198 இல் மக்கள் விடுதலை முன்னணியின் 9 பொலிட் பீரோ உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் தரப்பட்டுள்ளன. அவ்வுறுப்பினர்கள் பலரதும் பதவிப் பொறுப்பு, அவர்கள் எம்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் ஆகிய விபரங்களும் தரப்பட்டுள்ளன. மாவட்டத் தலைவர்கள் என்ற தலைப்பில் பக்கம் 198-199 இல், 18 இடங்களின் பெயர்களோடு, கிளைகளுக்குப் பொறுப்பான தலைவர்களின் பெயர்களும் தரப்பட்டுள்ளன. மக்கள் விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவர்கள், அவர்களது

சமூகப் பின்புலம், அத்தலைவர்களின் செயற்பாடுகளின் மையங்களாக அமைந்த நகரப் பகுதிகள் போன்ற தரவுகள் நூலின் இப்பகுதியில் தரப்பட்டுள்ளன. முழுமையும் சிங்கள இளைஞர்களைக் கொண்டதாக அமைந்த 17 நகரங்களின் பெயர்களும் நூலின் 198 - 199 பக்கங்களில் தரப்பட்டுள்ளன. இவற்றில் திருகோணமலை, வவுனியா என்னும் இரு தமிழ்ப் பகுதிகளின் நகரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்விரு நகரங்களின் தலைவர்களும் சிங்கள இளைஞர்களாகவே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. 1971 ஜே.வி.பி கிளர்ச்சி, முழுமையாக சிங்கள இளைஞர்களின் கிளர்ச்சியாகவே இருந்ததைக் காணமுடிகிறது. கேகாலை மாவட்டத்தின் தலைவராக விளங்கிய சரத் விஜயசிங்க, ஆளுமைமிக்க மாணவத் தலைவரராக இருந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவராக விளங்கிய இவர் கேகாலைப் பகுதியின் பத்கம சமூகப் பிரிவினரின் மத்தியில் செல்வாக்குள்ளவராகத் திகழ்ந்தார். இராணுவம் இப்பகுதியில் கடுமையான எதிர்ப்பைச் சந்தித்தது. இராணவத்துடனான சண்டையில் சரத் விஜயசிங்க மரணத்தைத் தழுவினார்.



நா. சண்முகதாசன்

Image Source - www.colombotelegraph.com

## சிங்களச் சோசலிசம்

விஜயவீரவினதும் ஏனைய ஜே.வி.பி. தலைவர்களினதும் சமூகப் பின்புலம் பற்றிய சரத் அமுனுகம அவர்களின் ஆய்வு, நிலம், உழைப்பு ( LAND, LABOUR) என்ற இரண்டு திறவுச் சொற்களை (KEYWORDS) மையமாகக் கொண்ட சிறப்பான ஆய்வாகும். நிலம், உழைப்பு என்ற முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே 1948 இற்குப் பிந்திய அரசியல் வரலாற்றின் இயக்கம் அமைந்துள்ளது. ஜே.வி.பியின் அரசியல் கருத்தியலை ‘சிங்களச் சோசலிசம்’ என மிகப் பொருத்தமான தொடரால் சரத் அமுனுகம குறிப்பிடுகின்றார் (பக்.193). நகரத் தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டம், மூலதனத்திற்கும் உழைப்பிற்கும் இடையிலான முரண்பாட்டின் அடிப்படையில் எழுவது. இலங்கையின் கிழக்கு மாகாணத்துடன் எல்லையை உடையதான பொலநறுவை மாவட்டம், விஜயவீரவின் முக்கிய ஆதரவுத் தளமாக இருந்தது. பொலநறுவ மாவட்டத்தில் ஜே.வி.பி, இன முரண்பாடுகளை முதன்மைப்படுத்தும் வகையில் தனது செயற்பாடுகளை அமைத்தது. அங்கு காணி அபிவிருத்தித் திணைக்களத்தின் தொழிற்சங்கத்தில், விஜயவீரவிற்கு ஆதரவான தொழிற்சங்கத் தலைவர்களிடம் வேரூன்றியிருந்த கருத்தியல் இனவாதக் கலப்புடையது.

‘இத் தொழிற்சங்கத்தினர் சோசலிஸ்டுகளாகவும் தீவிர சிங்களத் தேசியவாதிகளாகவும் இருப்பதை விரும்பினார்கள் (THEY WANTED TO BE BOTH SOCIALISTS AND EXTREME SINHALA NATIONALISTS - பக்.192193)’ என சரத் அமுனுகம குறிப்பிடுகின்றார். இத் தொழிற்சங்கத்தின் தலைவர்கள் மட்டுமல்லாது, அடிநிலை இடதுசாரித் தொழிலாளர் பிரிவினரிடமும் (GRASS ROOT LEVEL LEFTIST WORKERS) சிங்களச் சோசலிசம் ஆதரவைப் பெற்றது. இவ்வாதரவு பொலநறுவ, மின்னேரியா பகுதிகளுக்கு மட்டுப்பட்டதாக இருக்கவில்லை. பிற மாவட்டங்களின் கிராமப்புற இடதுசாரித் தொழிலாளர்களிடமும் அது பரவியிருந்தது.



மா ஓ சேதுங்
Image Source - www.britannica.com

### அரச அதிகாரத்தை கைப்பற்றுதல்

அரச அதிகாரத்தைக் கைப்பற்றுதல் (CAPTURE OF STATE POWER) பற்றிய மார்க்சியக் கோட்பாடுகள் சீனசோவியத் வாதங்களின் போது மேற்கிளம்பின. சீனா, கியுபா, வியட்நாம் ஆகிய நாடுகளின் அனுபவங்கள் மரபுவழி மார்க்சிஸ்டுகள் முன்வைத்த மாதிரியில் இருந்து வேறுபட்டதாக இருந்தன. சீனாவின் ஷங்காய் நகரின் தொழிலாளர் வர்க்கத்தின் கிளர்ச்சி கொடூரமாக அடக்கப்பட்டது. அதன் பின்னர் 'மா ஓ சேதுங்' யெனான் (YENAN) பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றார். அவர் மார்க்சிய அரசியல் சிந்தனை வரலாற்றில் விவசாய வர்க்கத்திற்கு முதன்மையளிக்கும் அரசியல் தத்துவத்தை அறிமுகம் செய்தார். மா ஓ, சீனாவின் கிராமப் புறங்களின் சமூக அமைப்பைச் சீர்திருத்தியவர் (AGRARIAN REFORMER) என்ற பெயரைப் பெற்றார். அவரின் புரட்சி 'கீழிருந்து மேல் (FROM BELOW)' உபாயமாக இருந்தது (பக். 213). விஜயவீரவின் புரட்சிக் கோட்பாடு மேற்குறித்த விவாதங்களின் பின்புலத்திலேயே பரிசீலிக்கப்பட வேண்டும்.

### 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் சமூகப் பின்புலம்

1974 ஆம் ஆண்டு கணநாத் ஒபயசேகர 'இலங்கையின் 1971 ஏப்ரல் கிளர்ச்சியின் சமூகப் பின்புலம் : சில குறிப்புகள் (SOME COMMENTS ON THE SOCIAL BACK GROUND OF THE APRIL 1971 INSUR GENCY IN SRI LANKA)' என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார். அக்கட்டுரை கிளர்ச்சியில் பங்குபற்றிய இளைஞர்கள் பற்றிய புள்ளிவிபரப் பகுப்பாய்வை வழங்குவதாக அமைந்தது. அவர் தரும் புள்ளி விபரங்களின்படி கிளர்ச்சியின் பின்னர் 10,192 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களுள் 4492 பேர் கைது செய்யப்பட்டவர்கள். 5700 பேர் ஆயுதப் படைகளிடம் சரணடைந்தவர்கள்.

இவ்விளைஞர்களின் சமூகப் பின்புலம் பற்றிக் கணநாத் ஒபயசேகர கூறியவற்றை சரத் அமுனுகம மேற்கோளாகத் தந்துள்ளார் (பக் 215 - 216).

1. ஜே.வி.பி கிளர்ச்சி இளைஞர் கிளர்ச்சியாகவே இருந்தது. இதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இக்கிளர்ச்சி ஆண்களான இளைஞர்களின் கிளர்ச்சியுமாகும். சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டோரில் 92.8% பேர் 1632 வயதுக்கு இடைப்பட்டோராய் இருந்தனர். இவர்களுள் 77% பேர் 1626 வயதுக்கு இடைப்பட்டோராக இருந்தனர்.

2. பெண்களில் சிறுதொகையினரைக் கூட சேர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்து புதுமையானதாக, ஏற்க முடியாததாக இருந்த காலத்தில், ஆண்கள் மட்டுமே இவ்விளைஞர் கிளர்ச்சியில் பங்கு கொண்டனர்.

3. சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்ட கிளர்ச்சியாளர்களில் சிங்கள பௌத்தர்கள் 94% ஆகவும், மிகப்பெரும்பான்மையினராகவும் இருந்தனர். சிங்கள பௌத்தர்களுக்கு அடுத்த நிலையில், சிங்கள கத்தோலிக்கர் 3.4% ஆக இருந்தனர்.

4. சில ஆய்வாளர்கள் 1971 இன் ஜே.வி.யை 'தாழ்த்தப்பட்ட சாதி இயக்கம்' (LOW CASTE MOVEMENT) என விளக்கம் கூறியுள்ளனர். ஒபயசேகரவின் அபிப்பிராயம் வேறுபட்டது. புள்ளி விபரங்களை உற்று நோக்கின் சாதி என்ற காரணியின் பங்கு இருப்பதைக் காண முடியும். ஆனால் இவ்வியக்கம் சாதிகளை ஊடறுத்த ஒன்றாக எல்லாச் சாதியினரையும் உட்படுத்திய பொதுமையுடைய இயக்கமாக இருந்ததென்பதே உண்மை.

5. கரைநாட்டுச் சிங்களவர் பகுதிகளில் வகும்புர சாதியினரும் கண்டிப் பகுதிகளில் பத்கம சாதியினரும் கூடிய எண்ணிக்கையில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டிருப்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

6. சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டோரில் உயர் தொழில்களில் இருந்தோர்கள் சிலரும் இருந்தனர். இவர்களின் வீதாசாரம் 0.25% ஆகும். நிருவாகத்துறையின் மத்திய மட்டத்தினர், 6.1% ஆக இருந்தனர். (இப்பிரிவில் ஏனைய 'STABLE' ஆன பதவிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.) சம்பளம் பெறாத சுயதொழிலில் ஈடுபட்டோர் 21.4% பேர் இருந்தனர். விவசாயத் துறையில் கூலி வேலையாளர்களாக 39.6% பேர் காணப்பட்டனர். இக் கூலியாட்கள் குறை வேலையுடமை (UNEMPLOYMENT) காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் என்பது வெளிப்படை. புள்ளிவிபரப் பகுப்பாய்வின் படி 6.3% பேர் நிரந்தர வருமானம் உடைய தொழில்களில் இருந்ததையும் அவர்களின் சம்பளம் நியாயமான அளவினதாயும் இருப்பதை அறிய முடிகிறது. மிகுதி ஆட்கள் குறைந்த வருமானம், குறை வேலையுடமை, வேலையின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களாய் காணப்பட்டனர்.

7. கிளர்ச்சியாளர்களின் கல்வித் தகைமைகளை ஆராயும் போது 80% பேர் மகா வித்தியாலயங்களிலும் 64% பேர் மத்திய மகா வித்தியாலயங்களிலும் 2% பேர் பல்கலைக் கழகங்களிலும் கற்றவர்களாக இருந்ததைக் காண முடிந்தது. பெரும்பான்மையினர் கிராமப்புறத்து உயர்குழு சாராத (NON ELITE) சமூகப் பின்புலம் உடையவர்களாய் இருந்தனர்.

8. 90% இளைஞர்கள் 'படித்தவர்கள்' எனக் கூறக் கூடியவர்கள். அவர்களது கல்வித் தரம் குறைவுடையதன்று. இவ்விளைஞர்களை இலவசக் கல்வித்திட்டமும் சமூக நலத்திட்டங்களும் (WELFARE SCHEMES) உருவாக்கியிருந்தன.

மேற்குறித்த புள்ளி விபரப் பகுப்பாய்வு ஜே.வி.பி இன் ஆட்சேர்ப்பு முறையின் இயல்புகளை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஜே.வி.பி ஆண்களின் இயக்கம்; உயர்குழு சாராத இயக்கம்; சிங்கள - பௌத்த இளைஞர்களின் இயக்கம் (MALE ORIENTED, NONELITE, AND SINHALA - BUDDHIST) என்று கூறலாம். அவ்வியக்கத்தில் சிங்களக் கிராமங்களின் எல்லாச் சாதி இளைஞர்களும் சேர்ந்து கொண்டனர். ஆயினும் வகும்புர, பத்கம என்னும் இரு சாதி இளைஞர்கள், கூடிய வீதத்தில் ஜே.வி.பி இயக்கத்தில் இணைந்திருந்தனர். ஒபயசேகரவின் இந்த விளக்கங்கள் பிந்தி வந்த ஆய்வுகள் சிலவற்றால் கேள்விக்கு உட்படுத்தப்பட்டன (பக். 216).

கணநாத் ஒபயசேகர அவர்களின் பகுப்பாய்வு ஜே.வி.பி இயக்கத்தின் பிரதான குண இயல்பை எடுத்துக் காட்டுகிறது. அவ்வியக்கத்தின் உறுப்பினர்கள் 'ANTI - ELITE' உணர்வுடையவர்கள். அதாவது, 'மேட்டுக்குடி' எதிர்ப்பாளர்கள் என சரத் அமுனுகம குறிப்பிடுகிறார் (பக். 216). ஜே.வி.பி இளைஞர்களின் வேறு சில குணப் பண்புகளும் கவனிப்புக்குரியவை.

"இலங்கையின் சனத்தொகை வேகமாக வளர்ச்சியுற்றது. சமூக நலத் திட்டங்களாலும், இலவச கல்வித் திட்டத்தாலும் இளம் தலைமுறை நன்மைகளைப் பெற்றது. ஆனால் இவற்றின் ஒன்றிணைந்த விளைவாக சமூகக்



1971 ஏப்ரல் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டவர்கள்
Image Source - www.colombotelegraph.com

விஜயவீரவினதும் ஏனைய ஜே.வி.பி. தலைவர்களினதும் சமூகப் பின்புலம் பற்றிய சரத் அமுனுகம அவர்களின் ஆய்வு, நிலம், உழைப்பு ( LAND, LABOUR) என்ற இரண்டு திறவுச் சொற்களை (KEYWORDS) மையமாகக் கொண்ட சிறப்பான ஆய்வாகும். நிலம், உழைப்பு என்ற முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே 1948 இற்குப் பிந்திய அரசியல் வரலாற்றின் இயக்கம் அமைந்துள்ளது.

கொந்தளிப்பு நிலை (AN EXPLOSIVE SOCIAL SITUATION) உருவானது (பக். 217).

டேனியல் லேர்னர் (DANIEL LERNER) என்னும் மானிடவியலாளர் 'மரபு வழிச் சமூகத்தைக் கடந்து செல்லுதல்' (THE PASSING OF THE TRADITIONAL SOCIETY) என்றொரு நூலை (1958) எழுதினார். அந்நூலில் அவர் 'TRANSITIONALS' என்ற சொல்லை உபயோகித்தார். 'மரபுச் சமூகம் நவீன சமூகமாக மாறும் பொழுது அம்மாற்றத்தின் ஊடாகப் பயணிப்பவர்' என்ற பொருளில் ஜே.வி.பி இளைஞர்களை டேனியல் லேர்னரின் மேற்படி சொல்லால் குறிப்பிடலாம். "கல்வியும், சமூகநல வசதிகளும் இவ்விளைஞர்களிடம் உயர் எதிர்பார்ப்புக்களை உருவாக்கியிருந்தன. ஆனால் பொருளாதாரம் அதற்கேற்ற வேகத்தில் வளர்ச்சியடையவில்லை (பக். 217)." இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் மழுங்கடிக்கப்பட்டன. இதனால் அவர்களிடம் விரக்தி உணர்வு மேலோங்கியது. தமது ஆசைகள் நிராசைகளாக, கானல் நீராக ஆகியதை அவர்கள் உணர்ந்தனர். லேர்னர் இப்பயணிகளான இளைஞர்களை 'அழகாக உடையுடுத்தி ஆயத்தமாக வந்தவர்களுக்கு போகுமிடம் எதுவெனத் தெரியவில்லை' என்று திகைத்து நின்றவர்களாகக் குறிப்பிடுகிறார். 1971 இல் கிளர்ச்சி நடைபெற்ற காலத்தின்

இலங்கையின் வேலையின்மைப் பிரச்சனை பற்றி ஆராய்ந்த டட்லி சியர்ஸ், லேர்னர் குறிப்பிடுவதைப் போன்ற ஒரு இக்கட்டான நிலை (DILEMMA) உருவாகியிருந்ததைக் குறிப்பிட்டார். இலங்கையின் வேலையின்மைப் பிரச்சனை, தேவைகளை எதிர்பார்ப்புகளுடன் சமன்படுத்த முடியாத இக்கட்டான சிக்கலாக உள்ளது என்றார் டட்லி சியர்ஸ்.

### புதிய சமூக சக்திகளின் தோற்றம்

1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கும் விஜயவீரவின் 1987 - 89 காலத்து இரண்டாவது கிளர்ச்சிக்கும் இடையில் பல வேறுபாடுகள் இருந்தன என சரத் அமுனுகம குறிப்பிடுகின்றார். புதிய சமூக சக்திகளின் தோற்றம் (THE EMERGENCE OF NEW SOCIAL FORCES) என்னும் தலைப்பில் 5 பக்கங்களில் (218-223) இவ்வேறுபாடுகளின் சமூகப் பின்புலத்தை அவர் ஆராய்கிறார். அவர் கருத்துக்களைச் சுருக்கமாகப் பார்ப்போம். இவ்விடயம் குறித்து விக்டர் ஐவனின் கூற்று மேற்கோளாக சரத் அமுனுகம அவர்களால்

தரப்பட்டுள்ளது. அது வருமாறு .

விஜயவீரவின் 1971 இளைஞர் கிளர்ச்சி மனோரதியமானது; கிராமத்து இளைஞர்களின் அப்பாவித்தனம் இதில் வெளிப்பட்டது. எனவே வரலாற்றில் இக்கிளர்ச்சி பதிவு பெறும். ஆனால் 1987 - 89 ஜே.வி.பியின் ஆயுதப் போராட்டம் கொடுமையான அழிவுப் போராட்டமாகவே வரலாற்றில் பதிவு பெறும். இரண்டாவது போராட்டத்தில் விஜயவீர, படித்த கிராமத்து இளைஞர்களை மட்டுமல்லாமல் லும்பன் பாட்டாளிகளையும் (LUMPENPROLETARIAT) பயன்படுத்தினார். மார்க்ஸ், லும்பன்கள் பற்றி வன்முறையாளர் சமூகக்குழு (A SOCIAL FORMATION PRONE TO VIOLENCE) என்றே குறிப்பிட்டிருந்தார் (பக். 218). தொடர்ச்சியான பயங்கரவாதத் தாக்குதல்கள், தனிநபர்களைக் குறிவைத்துச் செய்யப்பட்ட படுகொலைகள் என்பன மூலம் 1987-89 காலத்தில் அரச இயந்திரந்தைச் செயலிழக்கச் செய்யும் தந்திரம் கையாளப்பட்டது. விஜயவீரவின் இத் தந்திரத்தின் தோற்ற மூலத்தை, இலங்கைச் சமூகத்தில் படிப்படியாக எவ்வாறு வன்முறை அதிகரித்து வந்தது என்பதை, சமூகவியலாளர்களின் எழுத்துக்கள் ஊடாக கண்டுணரலாம் என சரத் அமுனுகம குறிப்பிடுகிறார் (பக் -220)

1. சிங்கள சமூகத்தை அமைதியும் சமாதானமும் நிறைந்த ஒழுக்கமுடைய இலட்சிய பௌத்த சிங்கள சமூகமாக சித்தரித்த சமூகவியலாளர்கள் சிலர், அச்சமூகத்தில் வெளித்தெரியாது மறைந்திருந்த வன்முறையை எடுத்துக் காட்டத்தவறினர். இத்தகைய எழுத்தாளர்களின் இலட்சிய சமூகச் சித்தரிப்புக்கு மாறாக றையன், லீச், ஒபயசேகர, செனிவிரத்தின, தம்பையா ஆகியோர் சூனியம், சடங்குகள், நாட்டார் கதைகள், நாடகங்கள் ஆகியவற்றில் வெளிப்பட்ட வன்முறையைத் தமது ஆய்வுகளில் வெளிக்கொணர்ந்தனர். இவ் ஆரம்ப கட்ட எழுத்துக்கள் கிராம மட்டத்தில் பகையுணர்வு, வன்முறை என்பன குறித்த வெளிப்பாடுகளை எடுத்துக் காட்டின.

2. இலங்கையில் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டபின் கிராமப் புறங்களில் அரசியல் வன்முறை (POLITICAL VIOLENCE) தோற்றம் பெற்றது. தேர்தல் சமயங்களில் இவ்வன்முறை குறிப்பாக தாழ்த்தப்பட்ட நிலையில் இருந்த சாதிகளுக்கு எதிரான வன்முறையாக இருந்தது. ஜே.வி.பியும் கிராம மட்டத்தில் உள்ள சாதிப் பிரிவுகளை தனது பிரசாரத்திற்கு உபயோகித்தது. ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட சாதிகளின் அதிருப்தியை தனது நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்தியது.

3. 1956 இல் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் தமிழர்கள் மீது வன்முறை பியோகிக்கப்பட்டது. தமிழர் மீதான வன்முறைக்கு அரசியல் கட்சித் தலைவர்களும், அத்தலைவர்களது ஆதரவாளர்களும் உதவினர். 1970 இல் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தோட்டத் தொழிலாளர்கள் மீது, வன்முறை முன்னர் எப்போதும் இல்லாத அளவு தீவிரத்துடன் பிரயோகிக்கப்பட்டது. இக்காலப் பகுதியின் சனத்தொகைப் புள்ளி விபரங்களை நுட்பமாகப் பகுப்பாய்வு செய்தால், சிறுவர்கள், குழந்தைகள் இறப்பு வீதமும் முதியோர் இறப்பு வீதமும் தோட்டத் தொழிலாளர்களிடையே திடீரென அதிகரித்தது என்பதை அறிந்து கொள்ளலாம். காரணம் இச்சாவுகள் பட்டினியால் நிகழ்ந்தமையாகும். தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட முதிய தொழிலாளர்கள் வீதிகளில் கிடந்து பட்டினியால் இறந்தனர். குழந்தைகளும் பட்டினியாலும் போஷாக்கின்மையாலும் இறந்தன (பக். 221).

4. 1971 ஜே.வி.பி கிளர்ச்சியும் ஜே.வி.பி இன் மீதான ஒடுக்கு முறையும் அடுத்த பெரிய வன்முறையாகும்.

5. 1971-1988 கால ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் திட்டமிட்ட அரச



மக்கள் விடுதலை முன்னணியினர்
Image Source - thuppahis.com

பயங்கரவாதத்தை (STATE TERROR) அரசாட்சி உபாயமாக நடைமுறைப்படுத்தியது. இக்கால வன்முறை பற்றி கணநாத் ஒபயசேகர 'POLITICAL VIOLENCE AND THE FUTURE OF DEMOCRACY IN SRI LANKA' என்ற தலைப்பிலான கட்டுரையில் விபரித்துள்ளார். இக்கட்டுரை 1984 இல் எழுதப்பட்டது. தொழிற்சங்கவாதிகள், பிக்குகள், எதிர்க் கருத்துக்களைக் கொண்டவர்களான அறிவாளிகள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் எதிரிகள் எனப் பல்வகையினரும் குறிவைக்கப்பட்டு வன்முறைத் தாக்குதலுக்கு ஆளாகினர். இந்த வன்முறைகளின் உச்சமாக 1983 பேரழிவு (HOLOCAUST) அமைந்தது.

6. 1977 இற்கு முற்பட்ட காலத்தில் இருந்து வடபகுதியில் தோன்றிய வன்முறை, தமிழாராய்ச்சி மாநாட்டு கொலைகளை அடுத்து, கட்டுமீறிச் சென்றது. 1983-1989 காலத்தில் சிவில் யுத்தமாக அது மாற்றம் பெற்றது.

7. 1970-77 காலத்திய கூட்டணி அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சியினர் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டது. இதன் விளைவாக ஐக்கிய தேசியக் கட்சி "சண்டியர்களை" தெரிந்தெடுத்து 1977 தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தியது. 1977 இற்குப் பிற்பட்ட காலத்தில் இச்சண்டியர்கள் தமது தொகுதிகளில் 'WAR LORDS' ஆக சுயமாக இயங்கும் இராணுவ கமாண்டர்கள் போன்று இயங்கினர். இந்தியஇலங்கை உடன்படிக்கைக்கு எதிரான ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது அரசாங்கம் வன்முறையைப் பிரயோகித்தது. இதனைச் சாட்டாக வைத்து ஜே.வி.பி தனது பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டது.

மேற்கூறியவாறு இலங்கை படிப்படியாக வெளிப்படையான வன்முறைச் சமூகமாக மாறியதை விபரிக்கும் சரத் அமுனுகம வன்முறையை ஒரு அரசியல் முறையாகவும் தந்திரமாகவும் (STRATEGY) கையாள்வதன் பின் விளைவுகளை எடுத்துக் கூறுகிறார்.

### ஐக்கிய தேசியக் கட்சி

அரசின் தந்திரோபாயம் ஜே.வி.பி விடயத்தில் எவ்வாறு இருந்தது என்பதை சரத் அமுனுகம எடுத்துக் கூறுகிறார். 1971-77 காலத்தில் கூட்டணி அரசாங்கம் ஜே.வி.பி மீது ஒடுக்கு

முறையைக் கையாண்டது. 1977 இல் பதவிக்கு வந்த அரசாங்கம் ஜே.வி.பி வெளிப்படையாக அரசியலில் செயற்படக்கூடிய விதமாக ஜனநாயக 'வெளியை' (DEMOCRATIC SPACE) திறந்து விட்டது. மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலை (DDCELECTIONS) எதிர்க் கட்சிகள் பகிஷ்ரிப்புச் செய்தன. ஆனால் ஜே.வி.பி அத் தேர்தலில் போட்டியிட்டது. 1982 இல் ஜே.வி.பி இன் வேட்பாளராக விஜயவீர விளங்கினார். ஜே.வி.பி இற்கு ஜனநாயக வெளியைத் திறந்துவிட்ட ஜே.ஆர். ஜயவர்த்தனவின் அரசுக்கு எதிராக, ஜே.வி.பி 1987-89 காலத்தில் வன்முறைப் போராட்டத்தை ஆரம்பித்தது. இந்தியாவின் கைப்பொம்மையாக ஜே.ஆர். ஜயவர்த்தனவைச் சித்தரித்த ஜே.வி.பி, இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு (INDIAN EXPANSIONISM) எதிரான போராட்டத்தை ஆரம்பித்தது. தேசபக்த முன்னணி (PATRIOTIC FRONT) என்னும் தந்திரோபாயத்தைக் கையாண்டது.

### வியட்நாமும் இலங்கையும்

இலங்கைஇந்திய உடன்படிக்கைக்கு பிந்திய காலத்தின் இரண்டாவது ஜே.வி.பி கிளர்ச்சி, அமெரிக்காவுக்கு எதிரான வியட்நாமிய போராட்டம் என்ற மாதிரியில் வடிவமைக்கப்பட்டது.

- வியட்நாமிய போராட்டத்தில் அமெரிக்கா அந்நிய ஆக்கிரமிப்பாளராக கருதப்பட்டது போல், இலங்கையில் இந்தியாவை ஜே.வி.பி அந்நிய ஆக்கிரமிப்பாளராகச் சித்தரித்தது.
- வியட்நாமின் 'டியெம்' ஆட்சி என்ற பொம்மை அரசுக்கு ஜே.ஆரின் ஆட்சி ஒப்பிடப்பட்டது.
- வியட்நாமின் என்.எல்.எவ் (N.L.F), தேச பக்தப் போராளிகளான ஜே.வி.பி இற்கு ஒப்பிடப்பட்டது.

பெண்கள், பிக்குகள் மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய தேசப்பற்றாளர் முன்னணியை (PATRIOTIC FRONT) ஜே.வி.பி உருவாக்கியது. அரசுக்கு எதிராக, தேசப்பற்றுள்ள அறிவாளிகளை (PATRIOTIC INTELLECTUALS) ஒன்றிணைத்தது. ஆளும் கட்சியின் பிரதிநிதிகளான கிராமமட்ட உத்தியோகத்தர்கள் கொலை செய்யப்பட்டனர். வியட்நாமில் என்.எல்.எவ் (NATIONAL LIBERA TION FRONT - NLF) கையாண்ட தந்திரங்கள் அனைத்தையும் ஜே.வி.பி கையாண்டது. மேற்தோற்றத்தில் தெரியும் இம்மாதிரி ஒப்புமை தவறானது. சோவியத் யூனியனும், கிழக்கு ஐரோப்பிய சோஷலிட் நாடுகளும், சீனாவும் பேரளவு இராணுவ உதவியை வியட்நாமிற்கு வழங்கின. வியட்நாமின் சைகோன் நகரை நோக்கி மத்திய உயர் நிலப்பகுதிகளில் இருந்து முன்னேறிய இராணுவ டாங்கிகளும் பயிற்றப்பட்ட இராணுவமும் சைகோனின் வீழ்ச்சியை நிர்ணயித்தன. வியட்நாமை ஜே.வி.பி உடன் ஒப்பிட முடியாது என விளக்குவதோடு வேறு சில காரணிகளையும் சரத் அமுனுகம எடுத்துக் காட்டுகிறார் (பக்.223).

### புத்த துறவிகளும் ஜே.வி.பியும்

வியட்நாமில் எவ்வாறு புத்ததுறவிகள், கத்தோலிக்க உயர்குழாமைப் பிரதிநிதித்துவப்படுத்திய "டியெம்" ஆட்சிக்கு எதிராக அணி திரட்டப்பட்டனரோ, அவ்விதமே இலங்கையின் புத்த துறவிகளை, குறிப்பாக இளம் துறவிகளை அரசுக்கு எதிராக அணி திரட்டுவதில் ஜே.வி.பி வெற்றி கண்டது என சரத் அமுனுகம குறிப்பிடுகிறார். சைகோன் நகரின் குவொன்றி பகோடா (QUONTRI PAGO DA) என்னும் புத்த கோவில் பெற்ற வகிபாகத்தை, ஜே.வி.பி இன் இரண்டாம் கிளர்ச்சிக் காலத்தில் நாரஹன்பிட்ட கோவில் பெற்றது.

கொழும்பு நகரில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவைப் பெற்றிருந்த பிரபல கோவில்கள் கூட ஐக்கிய தேசிய தேசியக் கட்சி அரசுக்கு எதிராகத் திரும்பின. இந்திய-இலங்கை உடன்படிக்கையை பௌத்த துறவிகளின் அமைப்புக்கள் ஒரே குரலில் எதிர்த்தன. ஜே.வி.பி ஆதரவாளர்களான இளம் பிக்குகள் கோவில்களினதும் மடாலயங்களினதும் முகாமைத்துவத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர் (பக்.224)

224-225 ஆம் பக்கங்களில் ஒரு பந்தியில் புதிய தலைமுறை இளந்துறவிகளின் கருத்தியல் சார்பை சமூகவியல் நோக்கில் சுருக்கமாகவும் தெளிவாகவும் சரத் அமுனுகம விளக்கியுள்ளார்.

*“இன்று “சங்க“ வலையமைப்பு கிராமங்களின் வறிய விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளிற்கு சமூகத்தில் மேல்நோக்கிய உயர்ச்சிக்கு (UPWARD SOCIAL MOBILITY) ஒரு சாதனமாக அமைந்துள்ளது. முந்திய நாட்களில் கிராமத்தின் பிரபுக் குலத்தைச் (ARISTOCRACY) சேர்ந்த சிறுவர்கள் “சங்க“வில் இளம் துறவிகளாகச் சேர்த்து விடப்படுவார்கள். குறிப்பாக சியாம் நிகாய பிக்குகள், மரபுவழி உயர் குடியைச் சேர்ந்தோராய் இருந்து வந்தனர். இந்த வழக்கம் இப்பொழுது குறைந்து வருகின்றது. தமது பிள்ளைகளுக்கு உணவு கொடுத்து வளர்ப்பதற்கு இயலாத ஏழைப் பெற்றோர்கள் அவர்களை துறவிகளாகச் சேர்த்து விடுகின்றனர். “சங்க“ அமைப்பில் இளம் துறவியாக சேரும் ஒரு சிறுவன் தனது “பிரக்ன (அறிவுத் திறன்)”, “சீலம் (துறவு ஒழுக்கம்) அல்லது சமாதி (தியானம் செய்யும் திறன்கள்)” ஆகியவற்றால் “சங்க“ படியமைப்பில் உயர்ந்து மதிப்புக்குரிய ஆளுமையாக உருவாக்கம் பெற முடியும். அவ்வுயர்ச்சி அத்துறவிக்கு பௌத்த சமூகம் முழுவதினதும் மதிப்பைத் தேடித் தரும்.*

*சமூகத்தில் அவர் மதிக்கப்படும் ஆளுமையாகவும் உயர்ச்சி பெறுகிறார் (பக். 225) மரபுவழிச் சமூகத்தை விட இன்று கிராமத்து இளம் துறவிக்கு கல்வி வாய்ப்புகள் திறந்து விடப்பட்டுள்ளன. அவர் பல்கலைக்கழகம் வரை சென்று தன் சுய முயற்சியால் முன்னேறலாம். மரபுவழிச் சமூகத்தில் சங்க அமைப்பின் உயர் நிலையில் உள்ள பிக்குகளுக்குப் பணிந்து சேவை செய்து தான், ஒருவர் உயர்ச்சியைப் பெற முடியும். இக்காலத்து இளம் துறவிகள் பல்கலைக்கழகங்களின் சமயசார்பற்ற ஒழுக்க மரபுகளை (SECULAR TRADITIONS) உள்ளீர்த்துக் கொள்கிறார்கள். அதிகார வரன்முறை அமைப்பை விமர்சன நோக்கில் பார்க்கும் மனப்பாங்கை அவர்கள் வளர்த்துக் கொள்கின்றனர் (பக்.225).”*

*“இளம் பிக்குகளிற்கு விரிந்த அறிவு உலகத்தின் (INTELLECTUAL WORLD) அறிமுகம் கிடைக்கிறது. இவ்வுலகம் “தம்ம (DHAMMA)” வழங்கும் அற நிச்சயத்தன்மைகள் (MORAL CERTAINTIES) இல்லாத உலகம். இதனால் இளம் பிக்குகள் பண்பாட்டு அதிர்ச்சிக்கு (CULTURAL SHOCK) உள்ளாகின்றனர். இவர்கள் கிளர்ச்சி வாதத்தை (RADICALISM) ஏற்கும் மனப்பாங்கைப் பெறுகின்றனர். இலங்கையின் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மகாபோதி சங்கம், இளம் பௌத்தர் கழகம் (YMBA) என்பனவற்றின் கருத்தியலையும், சமூக முன்னேற்றத்திற்காக சேவை செய்ய வேண்டும் என்ற அர்ப்பணிப்பு உணர்வையும் இளம் துறவிகள் பெறுகின்றனர். புதிய கிளர்ச்சிக் கருத்தியல், பௌத்தத்தின் சமூக, சமத்துவ செயற்பாடுகளுக்கு (SOCIAL AND EGALITARIAN FUNCTION) அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது (பக்.225). ஜே.வி.பி இன் கிளர்ச்சிவாதம் இளம்பிக்குகளை ஆட்கொண்டதில் வியப்பேதும் இல்லை.”*

## இந்திய மேலாதிக்கத்திற்கு எதிர்ப்பு

இந்தியா, இலங்கை மீது மேலாதிக்கம் செலுத்துகின்றது. அதனை எதிர்க்க வேண்டும் என்பது விஜயவீர புகுத்திய இந்திய விஸ்தரிப்பு வாதம் என்ற சொல்லாடலின் சாராம்சமாகும். ஜே. வி.பியை அவர் நிறுவிய போது அவர் முன்வைத்த ஐந்து பிரதான வாதங்களில் இதுவும் ஒன்றாகும். இந்தியா சோவியத் யூனியனின் நட்பு நாடாகியது. சீனாவின் கலாசாரப் புரட்சிக் கால கட்டத்தில் சீன இந்திய உறவு மேலும் மோசமடைந்தது. சீன இந்திய எல்லைப் பிரச்சனையில் கம்யூனிஸ்ட் நாடான சோவியத் யூனியன் சீனாவை ஆதரிக்கவில்லை என்ற மனக்கசப்பு சீனாவிடம் இருந்து வந்துள்ளது. சீனாவின் பக்கம் சார்ந்து நின்ற விஜயவீரவின் ”இந்திய விஸ்தரிப்பு வாதம்” அக்காலத்தின் சீனஇந்தியக் கண்டனப் போரின் சொல்லாடலின் பின்புலத்தில் கட்டமைக்கப்பட்டது. சிங்கள மத்திய தர வர்க்கத்தையும், கிராமப் புறத்து இளைஞர்களையும் விஜயவீரவின் இந்திய விஸ்தரிப்பு வாதம் கவர்ந்தது. இந்திய எதிர்ப்புப் பிரசாரத்தினை தொடக்கி வைத்தவர்களே

ஐக்கிய தேசியக் கட்சியினர் தாம் என்பது இவ்விடத்தில் கவனிப்புக்குரிய நகை முரணாகும்.

இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுகிறது என்று எதிர்ப்புணர்வை வளர்த்து, 'போர்க்களத்தில் தேசம் (A NATION AT WAR)' என்ற உளவியலை உருவாக்கிய ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஜே.வி.பி இன் இந்திய எதிர்ப்புக்கு அடித்தளம் இட்டது. இந்திய எதிர்ப்பு, தேசப்பற்றாளர் அணி, உயர்குடி எதிர்ப்பு (ANTI ELITISM), வன்முறைச் செயற்பாடுகள், பிக்குகளை அணிதிரட்டல் போன்ற பல விடயங்களின் கலவையாக ஜே.வி.பியின் சுதேசிக் கருத்தியல் (NATIVIST IDEOLOGY) அமைந்தது. மத்தியதர வர்க்க பௌத்த இளைஞர்களை இக் கருத்தியல் ஜே.வி.பியின் பக்கம் கவர்ந்திழுத்தது (பக்.227).

சீனசோவியத் முரண்பாடுகளும் விவாதங்களும் உலகின் கம்யூனிஸ்ட் கட்சிகளையும் இடதுசாரிகளையும் பிளவுபடுத்தி இரு முகாம்களை உருவாக்கின. இதனை விட கியுபாவின் புரட்சியாளர்களான பிடல் கஸ்ரோவும் சேகுவேராவும் மார்க்சிஸ்ட் கோட்பாட்டிற்கு புதிய கூறுகளைத் தம் பங்களிப்பாக வழங்கி, இடதுசாரிகளிடையே பல உட்பிரிவுகள் உருவாகக் காரணமாக இருந்தார்கள். மார்க்கசியலெனினிசக் கோட்பாடு பற்றிய விவாதங்களில் பங்கெடுத்த இளம் தலைமுறையினர் இலங்கையில் பல குழுக்களாகப் பிரிந்து செயற்பட்டனர். பிரேமலால் குமார சிறியின் ஆதரவாளராகி அவர் மூலமாகச் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நுழைந்த விஜயவீர, அக்கட்சிக்குள் தனக்கு ஒரு ஆதரவாளர் குழாமை உருவாக்கினார். பின்னர் பிரேமலால் குமாரசிறியைக் கைவிட்டு அக்கட்சியில் இருந்து தனது ஆதரவாளர்களுடன் வெளியேறினார். சீனச் சார்பு கம்யூனிஸ்ட்டுகளில் இருந்து பிரிந்து சென்ற வேறு குழுக்களும் சமகாலத்தில் செயற்பட்டன. களுத்துறையிலும், வித்தியாலங்காரவிலும் ஆதரவாளர்களைக் கொண்டிருந்த தர்மசேகரவின் குழு, காமினி யாப்பாவின் 'பெரதிக சுலங்க குழு' (கீழைக்காற்றுக் குழு), ரொட்ஸ்கிசவாத 'NLSSP' எனப் பல குழுக்கள் இயங்கி வந்தன. மகிந்த விஜயசேகர என்ற கவர்ச்சி ஆளுமை கொண்ட மாணவத் தலைவர் மொஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தார். விஜயவீர, தமக்குப் போட்டியாளர்களாக விளங்கிய மகிந்த விஜயசேகர போன்ற தலைவர்களை ஓரங்கட்டினார். விஜயவீர பிற தலைவர்களை விடச் செல்வாக்கு மிக்கவராக வளர்ச்சியுற்ற போது, அவர் பக்கம் பெருந்தொகையான இளைஞர்கள் சேர்ந்து கொண்டனர்.

விக்டர் ஐவன் உட்பட பலர் விஜயவீரவிற்கு மார்க்சிய தத்துவத்தில் போதிய அறிவு இருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர் (பக்.230). சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இருந்து வெளியேறிய விஜயவீர, ஏறக்குறைய நா. சண்முகதாசனின் கோட்பாட்டு விளக்கங்களைப் பின்பற்றியே தனது கருத்துக்களை வடிவமைத்தார்.

நா. சண்முகதாசன் மார்க்சியக் கோட்பாட்டை விளக்கும் பல கட்டுரைகளையும் நுல்களையும் எழுதியுள்ளார். 'A MARXIST LOOKS AT THE HISTORY OF CEYLON - 1972 (ஒரு மார்க்சிஸ்டின் பார்வையில் இலங்கை வரலாறு), MEMOIRS OF AN UNREPENTANT COMMUNIST (ஒரு கம்யூனிஸ்ட்டின் வாழ்க்கை நினைவுக் குறிப்புகள்) என்னும் இரு நூல்களை அவர் எழுதியுள்ளார். இந்நுல்களில் இருந்து அவருடைய அரசியல் கோட்பாட்டின் முக்கிய வாதங்களைத் தெரிந்து கொள்ள முடியும்.

1. இலங்கையின் ஆளும் வர்க்கம் ஏகாதிபத்தியச் சார்புடையது. கொம்பரடோர் (comprador) முதலாளித்துவத்தின் இயல்புகளை உடைய இவ் ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய நலன்களைக் காப்பதாக இருந்து வந்துள்ளது.
2. இலங்கையில் தேசிய முதலாளித்துவ வர்க்கம் என ஒரு வர்க்கம் இருக்கவில்லை. இதனால் இந்தியாவைப் போன்ற தேசிய விடுதலை இயக்கம் இலங்கையில் தோன்றவில்லை. பிரித்தானியாவில் இருந்து இலங்கை பெற்ற அரசியல்

சுதந்திரம் எவ்வித அடிப்படை வேறுபாட்டையும் ஏற்படுத்தவில்லை.

3. காலனியம் (COLONIALISM ), நவகாலனியம் (NEO COLONIALISM) என்ற வடிவில் தொடர்ந்தது. நவகாலனியக் கொள்கைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டதால் இலங்கை பொருளாதார, சமூக, பண்பாட்டு நெருக்கடிக்குள் சிக்கியது.

4. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது. எஸ். டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா தலைமையில் உருவான புதிய தலைவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் ஏகாதிபத்தியச் சார்புடைய கொள்கைகளைப் பின்பற்றுகின்றனர்.

5. ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடுகள் தனி நபர்களுக்கிடையிலான குரோதமும் போட்டியும் (PERSONAL RIVALRY) காரணமாக எழுந்தவை.

6. அரசியல் சந்தர்ப்ப வாதம் (POLITICAL OPPORTUNISM), பொப்பியுலிசம் (POPULISM) ஆகியவற்றால் தூண்டப் பெற்று இன்றைய ஆட்சியாளர்கள் செயற்படுகின்றனர்.

7. சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இடதுசாரிகள் இனவாதக் கொள்கைகளை பின்பற்றுவதோடு பாராளுமன்ற அரசியல் என்ற பாதையில் பயணிக்கின்றனர்.

நா. சண்முகதாசன் அவர்களின் மேற்கூறிய கருத்துக்களையே விஜயவீரவும் தன் கொள்கையிலும் நடைமுறைகளிலும் உள்ளீர்த்துக் கொண்டார். விஜயவீரவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் வேறுபாடுகள் இல்லை என்றே முடிவு செய்தார். ஆயினும் விஜயவீர தேவைக்கேற்ற முறையில் இரு கட்சிகளையும் தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்தும் தந்திரத்தைக் கையாண்டார். நா. சண்முகதாசன் தோட்டத் தொழிலாளர்களை புரட்சிகரச் சக்தியாகக் கருதியதோடு "செங்கொடிச் சங்கம்" என்ற பெயரில் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டப் போராட்டங்களை முன்னெடுத்தார். விஜயவீர சண்முகதாசனின் கொள்கைகளில் இருந்து தோட்டத் தொழிலாளர் விடயத்தில் தம்மை தெளிவாக வேறுபடுத்திக் கொண்டார். தோட்டத் தொழிலாளர்களை சிங்கள மக்களின் எதிரியாகவே அவர் சித்தரித்தார்.

## முடிவுரை

கலாநிதி சரத் அமுனுகம அவர்களின் கட்டுரை ஜே.வி.பி பற்றியும் விஜயவீரவும் ஏனைய தலைவர்கள் பற்றியும் பல கோணங்களில் விரிவாக ஆராய்கிறது. இவ்வாய்வு விஜயவீரவின் ஆளுமை பற்றிய வேறுபட்ட சித்திரம் ஒன்றை எமக்கு வழங்குகிறது. இருபதாண்டு கால எல்லைக்குள் அவர் நாட்டை உலுக்கிய இரண்டு கிளர்ச்சிகளை நடாத்தினார். 1971 இன் கிளர்ச்சி 1987-1989 இன் கிளர்ச்சியில் இருந்து பல அம்சங்களில் வேறுபட்டது. இருபதாண்டு இடைக்காலத்தில் அவர் கொள்கையிலும் நடைமுறைகளிலும் சில மாறுதல்களைப் புகுத்தினார். ஜே.வி.பி இன் இரண்டாவது கிளர்ச்சி நடைபெற்று ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் கடந்துவிட்ட இன்றைய நிலையில் இவ்வியக்கத்தின் சமூக, பொருளாதார, அரசியல் வேர்களைப் பரிசீலனை செய்வதற்கு உதவக்கூடிய உயர்தரமான ஆய்வுகளில் ஒன்றாக சரத் அமுனுகம அவர்களின் ஆய்வு விளங்குகிறது. அவரது ஆய்வினைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

## ஆதாரம்

*கலாநிதி சரத் அமுனுகமவின் DREAMS OF CHANGE – LAND LABOUR AND CONFLICT (2018) என்ற நுலின் ஆறாவது அத்தியாயமாக அமையும் WIJEWEERA AND THE LEADERSHIP OF JVB : A SOCIOLOGICAL PER SPECTIVE (பக். 184242).*

(தொடரும்)





மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


*காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.*

# இலங்கையில் நீர் மின்சாரம் : தன்னிறைவின் விலை



**லக்சபான நீர்மின் நிலையம்**
Image Source - commons.wikimedia.org

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையர்களுக்கு மின்சாரத்தை உறுதி செய்ததில் நீர் மின்சாரத்தின் பங்கு பெரிது. சுதந்திரத்துக்குப் பிந்தைய மூன்று தசாப்தகாலத்தில் இலங்கையர்களில் பெரும்பான்மையோருக்கு மின்சாரத்தை தங்கள் வீடுகளில் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு அமைந்தது. 1990 களின் நடுப்பகுதியில் இலங்கையின் மின் உற்பத்தியில் 96% நீர்மின்சாரத்தில் இருந்து பெறப்பட்டது. இலங்கை மின்சார உற்பத்தியில் தன்னிறைவை அடைந்திருந்தது. இதன்மூலம் சூழலுக்கு மாசற்ற முறையில் பெரும்பான்மையான மின்சாரத்தை உற்பத்தி செய்த நாடுகளில் இலங்கை முதன்மையானதாக இருந்தது. இவ்வாறான நீர்மின் திட்டங்களும் நீர்த்தேக்கங்களும் உருவாக்கப்பட்டதன் விளைவால் 2006 ஆம் ஆண்டு முழு இலங்கையருக்கும் மின்சாரம் உறுதிசெய்யப்பட்டது. இதைச் சாத்தியமாக்கியதில் நீர் மின்சாரத்தின் பங்கு பிரதானமானது. ஆனால் இத்திட்டங்கள் மிகப்பெரிய சமூக, சூழலியல் பாதிப்புக்களை ஏற்படுத்தின. ஆனால் அவை பேசப்பட்டதில்லை. “அபிவிருத்தியின் பெயரால்” அவை இலகுவாக மறைக்கப்பட்டன.

தென்னாசியாவில் அதிகரித்து வரும் எரிசக்தி தேவை, நீர்மின் வளர்ச்சிக்கான அதிக சாத்தியம் மற்றும் குறைந்த கார்பனீரொக்சைட்டை உமிழும் சக்தி மூலங்களுக்கான தேவை ஆகியன காரணமாக தெற்காசியாவின் எரிசக்தி எதிர்காலத்தில் நீர் மின்சாரம் ஒரு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருக்கின்றது.

நீர்மின்சார வளர்ச்சியின் அளவு, மாற்று எரிசக்தி ஆதாரங்களின் விலை, நீர்மின்சாரத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் சமத்துவ வளர்ச்சியின் சமூகப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல காரணிகளையும் நாம் கணிப்பில் எடுக்க வேண்டும். இன்று ஏனைய தென்னாசிய நாடுகள் நீர்மின்சாரத் திட்டங்களை நோக்கி நகர்கின்றன. அவற்றுக்கு இலங்கையின் அனுபவம் பயனுள்ளது.



**டி.ஜெ. விமலசுரேந்திர**
Image Source - en.wikipedia.org

## இலங்கையின் நீர்மின்சாரத்தின் கதை

இரண்டாவது போயர் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தென்னாபிரிக்கப் போர்க் கைதிகளுக்கான முகாம்கள் பிரித்தானியக் கொலனியாக இருந்த இலங்கையில் கட்டப்பட்டன. இதைக் கட்டும் பொறுப்பில் தியத்தலாவை மாவட்டப் பொறியாளராகப் பணிபுரிந்தவர் டி.டபிள்யு. விமலசுரேந்திர. இந்தப் பணிகளின் போது அவர் நெதர்லாந்து நாட்டின் பொறியியலாளர் இயன் வான் கெய்செல் என்பவரைச் சந்தித்தார். கெய்செல் போர்க்கைதியாக இலங்கையில் இருந்தார். முகாம்களைக் கட்டுவதற்கு மேலதிகமாக, இலங்கையின் கனிம வளங்களை அடையாளம் காணும் பொறுப்பும் விமலசுரேந்திரவுக்கு வழங்கப்பட்டது. அதற்கு உதவுவதற்கு பொறியியலாளராக கெய்செல்லை

பயன்படுத்தும்படி கொலனி நிர்வாகம் பணித்தது.

இருவரும் பணி நிமித்தம் நாடு முழுவதும் பயணித்தனர். அப்போது மஸ்கெலி ஓயா மற்றும் கிரிவநெலிய (பின்னர் லக்சபான) நீர்வீழ்ச்சிகள் வீணாக ஓடி களனி கங்கையில் கலப்பதை கெய்செல் அவதானித்தார். அவர் இதை ஏன் நீர்மின்சாரமாக உருவாக்கக்கூடாது என்ற வினாவை விமலசுரேந்திரவிடம் தொடுத்தார். நீர் ஆற்றலைப் பயன்படுத்தி நீர்மின்சாரத்தைப் பெறலாம் என்ற யோசனையையும் முன்வைத்தார். அவ்வகையில் இலங்கையில் நீர் மின் உற்பத்தி பற்றிய சாத்தியத்தைக் கண்டடைந்தவர் போர்க்கைதியாக இருந்த இயன் வான் கெய்செல். உலகம் முழுவதும் பயணம் செய்து, நீர் மின்சாரத்தை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்ற தனது தோழரான கெய்செல் தான், மின்சார உற்பத்திக்காக லக்சபானவை பயன்படுத்துவதற்கான சாத்தியத்தை பரிந்துரைத்தாக விமலசுரேந்திர நினைவுகூருகிறார் (Ref 56).

அபர்டீன் - லக்சபான திட்டம் என்பது நாட்டின் நான்காவது நீளமான நதியான களனி நதியுடன் இணைக்கப்பட்ட ஒரு நீர் மின்சார உற்பத்தித் திட்டமாகும். இது மத்திய மலைநாட்டிலிருந்து தனது பயணத்தைத் தொடங்கி கொழும்பில் கடலை அடையும். இது கெஹல்கமு ஓயாவின் துணை நதியான அபர்டீன் நீர்வீழ்ச்சி மற்றும் மஸ்கெலி ஓயாவின் துணை நதியான லக்சபான நீர்வீழ்ச்சியின் திறனைத் பயன்படுத்தி 70,000 குதிரை வலு கூட்டுத் திறனை உருவாக்குகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் திட்டமிடப்பட்ட போதும் முழு கொழும்பு நகரத்தின் மின்சாரத் தேவையை விட இத்திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் ஆற்றல் மிக அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டது. அபர்டீன் - லக்சபான திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மலிவான நீர் மின்சாரம், அப்போது பயன்படுத்தப்பட்ட விலையுயர்ந்த நிலக்கரி, டீசல் மற்றும் எரிசக்திக்கு மாற்றீடாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஏதிர்பாராத தாமதங்களுக்குப் பிறகு கட்டுமானப் பணிகள் 1924 இல் தொடங்கப்பட்டன, ஆனால் பல காரணங்களால் 1927 இல் நிறுத்தப்பட்டன. பம்பாயின் ஹிந்துஸ்தான் கட்டுமான நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டதன் மூலம் 1939 ஆம் ஆண்டு மேலும் பன்னிரண்டு ஆண்டுகள் தாமதத்துடன் கட்டுமானம் மீண்டும் தொடங்கியது. எவ்வாறாயினும், இரண்டாம் உலகப் போரின் போது ஏற்பட்ட சிரமங்கள் காரணமாக நிறுவனம் 1942 இல் ஒப்பந்தத்தில் இருந்து விடுவிக்கப்பட்டது. 1945 இல் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டன. அபர்டீன் - லக்சபான நீர்மின்சாரத் திட்டம் இறுதியாக 1950 இல் செயற்பாட்டுக்கு வந்தது. அரசாங்கத்திற்குச் சொந்தமான மின் நிறுவனங்களின் திணைக்களம், கட்டுமானப் பணிகளை முடித்தது. கட்டுமானம் மற்றும் நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட இந்த நீண்ட கால தாமதத்தின் போதுதான் தொழில்மயமாக்கல் பற்றிய ஒரு உரையாடல் இலங்கையில் தோன்றியது. நீர் மின்சாரத் திட்டத்தின் குறைந்த விலை மற்றும் வெகுஜன அளவிலான மின் ஆற்றல் உற்பத்தித் திறன் ஆகியன தொழில்துறையில் முன்னேறிய இலங்கையைக் கற்பனை செய்வதைச் சாத்தியமானது.

இன்று இலங்கையின் நீர்மின்சாரத்தின் தந்தை என டி.டபிள்யு. விமலசுரேந்திர அறியப்படுகிறார். ஆனால் இயன் வான் கெய்செல் வரலாற்றின் பக்கங்களில் இருந்து காணாமல் போயிருக்கிறார். இது நிகழ்ந்ததற்கு இரண்டு எதிரெதிரான கதையாடல்கள் காரணம். முதலாவது கதையாடல் பிரித்தானிய கொலனியாதிக்கக் கதையாடல். இது இலங்கையில் நீர்மின்சாரத்தை அறிமுகப்படுத்திய பெருமையை பிரித்தானியரான F.B. ரைலண்ட்ஸ் என்பவருக்கு வழங்குகிறது. இரண்டாவது கதையாடல் சிங்களத் தேசியவாதக் கதையாடல். இது அனைத்துப் பெருமையையும் டி.டபிள்யு. விமலசுரேந்திரவுக்கு அளிக்கிறது. ஒன்று கொலனியாதிக்கக் கதையாடலாகவும்

**இலங்கையின் முதலாவது நீர்மின்திட்டமான லக்சபான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட சூழலியல் இழப்புகள், இடப்பெயர்வுகள் குறித்த தகவல்கள் மிகக்குறைவு. இது குறித்து ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய நீர்மின் நிலையமான விக்டோரியா நீர்மின் திட்டம் தொடர்பில் விரிவான ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன.**

இன்னொன்று அதற்கு எதிரான தேசியக் கதையாடலாகவும் விளங்கியது. இவ்விரண்டிலும் இயன் வான் செய்செல் என்ற பாத்திரத்திற்கு இடமிருக்கவில்லை.

இலங்கையின் வரலாற்றில் டி.டபிள்யு. விமலசுரேந்திரவின் வகிபாகம் முக்கியமானது. குறிப்பாக இலங்கையின் சாதிய அரசியலை விளங்கிக்கொள்வதற்கும், எவ்வாறு வர்க்க அரசியலானது மக்கள் நல அரசியலை மேவியது என்பதையும் புரிந்துகொள்ள விமலசுரேந்திரவின் வாழ்க்கை அனுபங்கள் உதவும். சிங்களத் தேசியவாதத்தின் தேவைக்கான பயன்பட்ட விமலசுரேந்திர, சாதிய அடுக்கில் கீழ்நிலையில் இருந்தமையால் ஒரு தேசியக் கதாநாயகனானத் தோற்றம் பெறவில்லை.

## நீர்மின் திட்டங்களும் சவால்களும்

இலங்கையின் முதலாவது நீர்மின்திட்டமான லக்சபான திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட சூழலியல் இழப்புகள், இடப்பெயர்வுகள் குறித்த தகவல்கள் மிகக்குறைவு. இது குறித்து ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் இதைத் தொடர்ந்து உருவாக்கப்பட்ட இலங்கையின் மிகப்பெரிய நீர்மின் நிலையமான விக்டோரியா நீர்மின் திட்டம் தொடர்பில் விரிவான ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக பிரித்தானியாவின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இந்த நீர்த்தேக்கத்தின் சமூகச் சூழலியல் விளைவுகள் குறித்த சில முக்கிய விடயங்களை நோக்கலாம்.

விக்டோரியா திட்டம் துரிதப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஒரு பகுதியாகும். இது ஒரு மின்சார மற்றும் நீர்ப்பாசனத் திட்டமாகும். ஆனால் நீர்ப்பாசனப் பகுதி விக்டோரியா அணைக்குப் பின்னால் உள்ள நீர்த்தேக்கத்தில் மட்டுமே நீர் சேமிப்பைக் கொண்டுள்ளது. இது ஏப்ரல் 1985 இல் இயங்கத் தொடங்கியது.

1986 இல் இந்த திட்டம் தொடர்பில் பிரித்தானியாவின் அயல்நாட்டு அபிவிருத்தி பணியகம் ஒரு மதிப்பீட்டை செய்ய முடிவெடுத்தது. பிரித்தானியாவின் நிதியுதவியில் விக்டோரியா நீர்த்தேக்கமும், நீர்மின்சாரத் திட்டமும் அமைக்கப்பட்டிருந்ததால் பிரித்தானிய அயலுறவு அமைச்சகம் இந்த மதிப்பீட்டை செய்தது. குறித்த மதிப்பீட்டுத் துறையின் உறுப்பினர் தலைமையில் பொருளாதார நிபுணர், பொறியாளர், சமூகவியலாளர் மற்றும் சுற்றுச்சூழல் நிபுணர் ஆகியோர் அடங்கிய குழுவினால் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதற்காக இக் குழு மே 1986 இல் இலங்கைக்கு மூன்று வார விஜயத்தை மேற்கொண்டது.

குறித்த மதிப்பீட்டு அறிக்கை திட்டம் முடிக்கப்பட்டு செயற்பாட்டுக்கு வந்த குறுகிய காலத்தில், அது மறுமதிப்பீடு செய்யப்பட்டது. இதேபோன்ற திட்டங்களை திட்டமிடுவதற்கான சில முக்கியமான பாடங்களை அல்லது எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான ஏதேனும் ஒரு பெரிய கட்டுமானத் திட்டத்தை அறிக்கை



**விக்டோரியா அணைக்கட்டு**

Image Source - archives1.dailynews.lk

கொண்டிருந்தது. ஆய்வின் முக்கிய கவனம் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார அம்சங்களில் இருந்தது. அதில் இருந்து முக்கிய பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதப்பட்டது. இந்தப் பாடங்கள் கீழே சுருக்கப்பட்டுள்ளன.

இந்த திட்டத்தால் சுமார் 30,000 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இது கணிக்கப்பட்ட எண்ணிக்கையை விட நான்கு மடங்கு அதிகமாகும். எனவே தவறான கணிப்பீடானது பாரிய சமூவியல் நெருக்கடிகளை உருவாக்கியது. குறிப்பாக முற்கூட்டியே தயாரான நீண்ட கால மீள்குடியேற்றத் திட்டமிடலுக்குப் பாதகமாக அமைந்தது. இதற்கான கொள்கை வகுப்புகளோ நிர்வாகச் செயற்பாடுகளோ, நிதி ஒதுக்கீடுகளோ இருக்கவில்லை. இதனால் மக்களை இடம்பெயர்ப்பது பாரிய பிரச்சனையானது.

அதேவேளை குறித்த மக்களின் சொத்துக்களை கையகப்படுத்துதல், இழப்பீடு வழங்கல் மற்றும் மீள்குடியேற்றம் போன்ற உடனடிப் பிரச்சனைகளிலும் கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் குடியேறியவர்களின் மீது இது தேவையற்ற செலவுகளைச் சுமத்தியது.

குறித்த நீர்த்தேக்கத்திற்காக மக்களைக் இடம்பெயர்ப்பது பற்றி கொள்கையளவிலோ, அரசியல்ரீதியாகவோ தீர்க்கமான கரிசனை கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது. அரசின் கவனம் வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டமாக விக்டோரியாத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதாகவே இருந்தது. துரித மகாவலித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தபட்ட பல்வேறு திட்டங்களுக்கும் இந்த முடிவு பொருந்தும்.

அணையின் நீர்மட்டத்தைக் கட்டுப்படுத்துதல் தொடர்பில் தெளிவான பார்வையை இத்திட்டம் கொண்டிருக்கவில்லை. அதேவேளை அணைக்குக் கீழே மலேரியாவைத் தடுப்பது தொடர்பிலும் கவனம் கொள்ளப்படவில்லை. இதனால் இப்பகுதிகளில் மலேரியாத் தொற்று அதிகரித்தது. விக்டோரியா அணைக்கட்டின் ஏரிக்கரைக் குடியிருப்புகளில் நீரின் தரம் மிக மோசமாகக் குறைந்தது. இதனால் இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் வாழ்வாதாரங்கள் மோசமாகப்

**விக்டோரியா நீர்மின் நிலையத்தின் சமூகப் பாதிப்புகள் குறித்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாகச் சில தரவுகள் வெளியாகின. அவற்றின்படி, குறித்த பகுதியில் நெல், தென்னை போன்ற முக்கிய பயிர்கள் கணிசமாக குறைந்துள்ளன.**

பாதிக்கப்பட்டன. இம்மக்களின் மீன்பிடி, நன்னீர் செயற்பாடுகள் ஆகியன பாரிய நெருக்கடிக்குள்ளாகி யுள்ளன. சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிக கவனம் பெறவில்லை என்பதையே இந்த முடிவுகள் காட்டுகின்றன.

விக்டோரிய நீர்மின் நிலையத்தின் சமூகப் பாதிப்புகள் குறித்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டு நிறைவைக் குறிக்கும் முகமாகச் சில தரவுகள் வெளியாகின. அவற்றின்படி, குறித்த பகுதியில் நெல், தென்னை போன்ற முக்கிய பயிர்கள் கணிசமாக குறைந்துள்ளன. 1954 ஆம் ஆண்டில், மொத்த நெற்பயிர்ச்செய்கை கிட்டத்தட்ட 1,361 ஹெக்டேராக இருந்தது, 1998 இல் இது 791 ஹெக்டேராகி, 2003 இல் 597 ஹெக்டேராக குறைந்துள்ளது. 1954 இல் கிட்டத்தட்ட 2531 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த தென்னைச் செய்கை 2003 இல் 337 ஹெக்டேராகக் குறைக்கப்பட்டது. எனினும், வீட்டுத் தோட்டங்கள் 1954 இல் 1905 ஹெக்டேரிலிருந்து 2003 இல் 5946 ஆக அதிகரித்துள்ளன. இது இப்பகுதியில் அதிகரித்து வரும் மக்கள்தொகை அழுத்தத்தைக் காட்டுகிறது. நெற்பயிர்கள் மற்றும் தென்னைச் செய்கைகள் குறைவது மக்களின் வாழ்வாதாரம், விவசாயத்திலிருந்து மாறிவருவதைக் காட்டுகிறது. இந்த முக்கிய நிலப் பயன்பாடுகளுக்கு மேலதிகமாக, காடுகள், புதர்கள், தரிசு நிலங்கள் மற்றும் பயிரிடப்படாத நிலங்கள் போன்றவற்றின் பரப்புகளும் காலப்போக்கில் மாறிவிட்டன.

விக்டோரியா நீர்த்தேக்கதை மையமாகக் கொண்ட அறிக்கைகளின் புள்ளிவிபரங்களின்படி, நீர்த்தேக்கக் கட்டுமானத்தினால் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ 6,000 குடும்பங்கள் (30,000 உறுப்பினர்கள்) மற்றும் 3,098 வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் 5546 குடும்பங்கள் (23,209 உறுப்பினர்கள்) நீர்த்தேக்கத்தால் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். இன அடிப்படையில் 85% சிங்கள மக்களும் 7.61% தமிழர்களும் 7.12% முஸ்லிம்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1994 ஆம் ஆண்டு நன்கறியப்பட்ட அறிவியல் இதழான 'New Scientist' இலங்கையின் விக்டோரியா நீர்மின் திட்டம் தொடர்பில் முக்கியமான ஒரு கட்டுரையை வெளியிட்டது. அதன் சாராம்சம் இதுதான்:

"பிரித்தானியா, மூன்றாமுலக நாடுகளில், குறிப்பாக முன்னாள் கொலனிகளில் பாரிய நீர்த்தேக்கங்களையும் நீர்மின் உற்பத்தி நிலையங்களையும் உருவாக்குகிறது. அயலுறவு அபிவருத்தி அமைச்சகத்தின் அதிகாரிகளின் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார அடிப்படையிலான ஆட்சேபனைகளை மீறி, இதேபோன்ற திட்டமான விக்டோரியா அணைக்கான பிரித்தானியாவின் நிதியை, இலங்கை எவ்வாறு பெற்றது என்பது முக்கியமானது. அமைச்சர்கள் உள்ளூர் மக்களுக்கான நன்மைகளைக் காட்டிலும் பிரிட்டிஷ் நிறுவனங்களின் வணிக நன்மைகளில் கவனம் செலுத்தினர்.

இந்த நிலையில், திட்டத்தை வடிவமைத்து உருவாக்க உதவுவதற்காக பிரித்தானிய பொறியியல் நிறுவனங்கள் நியமிக்கப்பட்டன. இதனாலே பிரித்தானிய கொள்கை வகுப்பாளர்களின் எதிர்ப்பையும் மீறி இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்யப்பட்டது. இலங்கையில் பெற்ற அனுபவத்தின் மூலம் உலகெங்கிலும் அதிகமான இவ்வாறான பணிகளை பிரித்தானிய நிறுவனங்களால் பெற்றுக் கொள்ள முடியும் என்பதே இதன் ஒரே எதிர்பார்ப்பாக இருந்தது."

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய நீர்மின் திட்டமான கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு சுவீடன் நாட்டின் நிதியுதவி கிடைத்தது. இத்திட்டமானது 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு நிறைவடைந்து செயற்பாட்டுக்கு வந்தது. இதைத் தொடர்ந்து இத்திட்டம் தொடர்பாக சுவீடிஸ் அபிவிருத்தி நிறுவனம் இரண்டு மதிப்பீடுகளை மேற்கொண்டது. முதலாவது மதிப்பீடு 1989 ஆம் ஆண்டில் *"The Kotmale Environment - A Study of the Environmental Impact of the Kotmale hydropower Project in Sri Lanka"* என்ற தலைப்பில் வெளியானது. இந்த மதிப்பீடு சில முக்கியமான அவதானிப்புகளை மேற்கொள்கிறது:


1. கள ஆய்வின் போது நீர்த்தேக்கத்தில் உள்ள நீர்வாழ் உயிரினங்கள் (மீன் உள்ளிட்ட தாவரங்கள் மற்றும் விலங்குகள்) மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

2. இந்த நீர்த்தேக்கக் கரைகளில் உள்ள மண்ணானது மிகவும் மலட்டுத் தன்மையுடையனவாக இருக்கின்றன.

3. பல செங்குத்தான கரையோரப் பகுதிகளில் சிறிய மண் சரிவுகளின் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

4. நீர்த்தேக்கத்தின் வடக்கு மற்றும் தெற்கு இருபுறமும் ஒரு அடர்ந்த மலைக்காடு ஆக்கிரமித்துள்ளது. இந்த வாழ்விடம் மிகவும் மதிப்புமிக்கது. ஏனெனில் இது கன்னி மலை காடுகள், சிறிய பாலூட்டிகள், பறவைகள், பல மலர் கூறுகளுக்கு அடைக்கலமாக உள்ளது. இவற்றின் எதிர்காலம் இத்திட்டத்தின் வழி நெருக்கடிக்குள்ளாகலாம்.

5. முழு கொத்மலை பள்ளத்தாக்கிலும் 1979 - 1980 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்கெடுப்பின் போது, 300 இற்கும் மேற்பட்ட தனித்த நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக அறியப்பட்டது.




**இலங்கையின் நீர்த்தேக்கங்கங்களின் வரைபடம்**

Image Source - moonasingha.yolasite.com

6. நீர்த்தேக்கத்தின் இருப்பு அல்லது செயற்பாட்டினால் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான வீடுகளில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதற்கும் நீர்த்தேக்க உருவாக்கத்திற்குமான நேரடித் தொடர்பை, அறிவியல் ரீதியாக இன்னமும் நிறுவாத நிலையில், நீர்த்தேக்கத்தின் பாதிப்பின் சாத்தியங்கள் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது.

7. கொத்மலை நீர்த்தேக்க நீரின் திசை

திருப்பலானது அணைக்குக் கீழே உள்ள பழைய ஆற்றின் போக்கை, அதன் நீர் தேக்கத்திற்கு முந்தைய பாய்ச்சலில் இருந்து பிரித்தெடுத்துள்ளது. திசை திருப்பலின் சுற்றுச்சூழல் தாக்கம் பெரிது. இது முதலில் இந்த வகை வாழ்விடத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட நீர்வாழ் உயிரினங்களுடன் மறைந்திருக்கும் நீண்ட வாழ்வியலோடு தொடர்புடையது. நீர் திசை திருப்பப்படுவதற்கு முன்பு, விலங்கினங்கள் அல்லது தாவரங்கள் பற்றிய விபரங்கள் எதுவும் சேகரிக்கப்படாததால், ஏதேனும் அரிய அல்லது அழிந்து வரும் உள்ளூர் இனங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனவா என்பதைக் கூறுவது கடினம்.

8. கொத்மலை அணையானது இடம்பெயரும் மீன்களின் இயற்கையான இயக்கத்திற்கு இடையூறாக உள்ளது.

இதைத் தொடர்ந்து **1991**இல் சுவீடிஸ் அபிவிருத்தி நிறுவனம் கொத்மலை நீர்த்தேக்கம் மற்றும் நீர்மின்சாரத் திட்டம் தொடர்பான முழுமையான மதிப்பீட்டை மேற்கொண்டு “ஒரு குறைபாடுள்ள வெற்றி - கொத்மலை நீர்மின் திட்டத்திற்கான சுவீடிஸ் உதவியின் மதிப்பீடு” (*A Flawed Success - An Evaluation of SIDA Support to the Kotmale hydropower Project*) என்ற தலைப்பிலான அறிக்கையை வெளியிட்டது. இதன் சாரம்சம் இதுதான்:

“அவசரத் திட்டமிடல் மற்றும் முறைப்படுத்தப்படாத தொடக்கம் ஆகியவற்றால் இந்தத் திட்டம் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கை முடிவு செய்கிறது. கொடுக்கப்பட்ட புவியியல் நிலைமைகளுக்கு அடிப்படை வடிவமைப்பு அம்சங்கள் உகந்ததாக இல்லை. மேலும், ஒப்பந்ததாரர் மற்றும் உபகரண வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதில் போட்டி இல்லாதது - பெரும்பாலும் வாடிக்கையாளர்களின் வற்புறுத்தலின் பேரில் - இறுதியில் தேவையற்ற விலையுயர்ந்த திட்டத்திற்கு வழிவகுத்தது. மொத்தத்தில் அக்கறையற்ற, சமூக, சூழலியல் விடயங்களைக் கணிப்பில் எடுக்காத ஒரு திட்டமாகவே இதைக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் மோசமான பலன்களை இலங்கை மக்கள் நீண்டகாலத்திற்கு அனுபவிக்க நேரும்.”

## நிறைவுக் குறிப்புகள்

இலங்கை அனுபவம் சில முக்கியமான செய்திகளைச் சொல்கிறது. நீர்மின் திட்டங்கள் சிக்கலானவை. அவை பெரும்பாலும் பெரிய அளவிலானவை; அதிக ஆரம்ப முதலீடு தேவை. பல சுற்றுச்சூழல் மற்றும் சமூகச் சவால்களுக்கு கட்டுமானம் மற்றும் செயற்பாட்டின் போது வழிகாட்டல் தேவைப்படுகிறது. எதிர்காலத்தில் நிலையான நீர்மின்சாரத்தை அடைவது தொடர்பாக சுற்றுச்சூழல், சமூகப் பொருளாதாரம், நிதி மற்றும் தொழில்நுட்பக் களங்களைப் பார்க்கும்போது, இரண்டு முக்கிய கேள்விகள் எழுகின்றன:

1. சாத்தியமான எதிர்மறை தாக்கங்களைத் தணிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா (மற்றும் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றனவா)?
2. இந்த தணிப்பு நடவடிக்கைகள் செலவு குறைந்ததா?

சுற்றுச்சூழல் செலவுகள் குறிப்பிடத்தக்கதாக இருக்கும் என்பதை நாங்கள் அறிவோம். மேலும் சில சுற்றுச்சூழல் அபாயங்கள் காலநிலை மாற்றத்தால் மோசமடையக்கூடும். நீர்மின்சார வளர்ச்சியின் சமூக சமத்துவமும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நீர்மின் திட்டங்கள், நேரடி சமூக மற்றும் சுற்றுச்சூழல் செலவுகளை தாங்கும் உள்ளூர் மக்களை விட, நகரங்களுக்கும் அதைச் சுற்றியுள்ள மக்களுக்கும் பயனளிக்கும் என்ற கவலைகள் உள்ளன.

நீர்மின்சாரம் ஒப்பீட்டளவில் சுத்தமான ஆற்றலாக இருந்தாலும், நீர்மின் திட்டங்களின் கட்டுமானம் மற்றும் செயற்பாடுகள் பல சுற்றுச்சூழல் சவால்களை முன்வைக்கின்றன. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அபாயங்கள், திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும். நிலப் பயன்பாட்டில் ஏற்படும் மாற்றங்கள், ஆற்றின்

ஓட்ட முறைகளை மாற்றியமைத்தல் மற்றும் நீர்வாழ் மற்றும் நிலப்பரப்பு சுற்றுச்சூழல் அமைப்புகளின் சீர்குலைவு ஆகியவை நீர்மின் மேம்பாட்டுத் திட்டங்களில் ஏற்படும் சில பொதுவான தாக்கங்களாகும். சுற்றுச்சூழல் அபாயங்கள் காலநிலை மாற்றத்தால் மேலும் மோசமடைகின்றன. இது அதிகரித்த தீவிர வானிலை நிகழ்வுகள், வெள்ளம், நிலச்சரிவுகள், வண்டல் மற்றும் நீரியல் ஆட்சியில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவற்றைச் சாத்தியப்படுத்தலாம்.

> **இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய நீர்மின் திட்டமான கொத்மலை நீர்மின் திட்டத்திற்கு சுவீடன் நாட்டின் நிதியுதவி கிடைத்தது. இத்திட்டமானது 1979 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1985 ஆம் ஆண்டு நிறைவடைந்து செயற்பாட்டுக்கு வந்தது.**

சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்பது அதனுடன் தொடர்புடைய அபாயங்கள் எவ்வளவு நன்றாக அடையாளம் காணப்பட்டு குறைக்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டை (*Environmental Impact Assessment*) கண்டிப்பாக கடைபிடிப்பது, சாத்தியக்கூறு ஆய்வின் போது சுற்றுச்சூழல் அபாய மதிப்பீடு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், திட்டங்களைத் திறம்படச் செயற்படுத்துதல், இணக்கக் கண்காணிப்பு ஆகியவை சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முன்நிபந்தனைகள் ஆகும்.

> **நீர்மின்சாரம் ஒப்பீட்டளவில் சுத்தமான ஆற்றலாக இருந்தாலும், நீர்மின் திட்டங்களின் கட்டுமானம் மற்றும் செயற்பாடுகள் பல சுற்றுச்சூழல் சவால்களை முன்வைக்கின்றன. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை அபாயங்கள், திட்டங்களுக்கு இடையூறு விளைவிக்கும்.**

பெரிய அளவிலான நீர் உட்கட்டமைப்பின் வளர்ச்சியில், சமூக நீதி ஒரு முக்கியமான அக்கறையாகும். நீர்மின்சாரத்தின் நன்மைகள் பெரியதாக இருந்தாலும், உள்ளூர் சமூகங்கள் - மீள்குடியேற்றம், அவர்களின் கலாசார நிலப்பரப்பில் ஏற்படும் மாற்றங்கள், நிலச் சீரழிவு, குடிநீரின் தரம் குறித்த பிரச்சினைகள் மற்றும் மாசுபாடு ஆகியவற்றின் அடிப்படையில் சுற்றுச்சூழல் குறித்த கவனமும், சமூகங் குறித்த கவனமும் அவசியமாகின்றன.

நீர்மின் உற்பத்தியாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் உள்ளூர் தேவைகளை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். நீர்மின்சாரத்தின் நிதி நிலைத்தன்மை பெரும்பாலும் வருவாய் ஈட்டும் அடிப்படையில் மட்டுமே கருதப்படுகிறது. சுற்றுச்சூழல், சமூக அபாயங்கள் மற்றும் அவற்றின் செலவு, தாக்கங்கள் எப்போதாவது தான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. ஏனைய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களை விட தற்போது நீர்மின்சாரம் மலிவானதாக இருந்தாலும், இந்த சூழ்நிலை மாறுகிறது. சூரிய ஆற்றல், நிலக்கரியை முந்தி, உலகளவில் மிகப்பெரிய ஆற்றல் உற்பத்தியாளராக மாறியுள்ளது. தெற்காசியாவில் மின்சாரத் தேவை அதிகரித்து வருவதால், எதிர்காலத் தேவைகளை சமரசம் செய்யாமல் தேவையைப் பூர்த்தி செய்வதே சவாலாக இருக்கும்.

நீர் மின்சாரம் ஒரு நம்பிக்கைக்குரிய மாற்று எரிசக்தி ஆதாரமாக இருந்தாலும், அதனுடன் தொடர்புடைய கவலைகள் - சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல், தொழில்நுட்பம் என்பன எவ்வளவு சிறப்பாகத் தீர்க்கப்படுகின்றன என்பதைப் பொறுத்தது. இதை புரிந்துகொள்ள இலங்கையின் நீர்மின்சாரத்தின் கதையைப் விளங்குவது பயனுள்ளது.

(தொடரும்)



● தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

*பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.*

# நன்மையின் நம்பிக்கையுரு கிங்கிலியர்

## அறிமுகம்

நாட்டுப்புறவியலின் இயங்கு தளங்களில் ஒன்றாக மந்திரம் காணப்படுகின்றது. இறையியல், சமயவியல் பற்றிய கருத்தாக்கத்திற்கு சமமாகவும் சமாந்தரமாகவும் மந்திரம் முதன்மை பெறுகின்றது. ஆவியுலக நம்பிக்கை, முன்னோர் வழிபாடு போன்றன தோன்றிய காலத்திலிருந்து இன்று வரை மந்திரம், மனிதர்களிடம் - அந்நம்பிக்கைகளை உடைய இனக் குழுக்களிடம் செல்வாக்குற்றுள்ளது. 'இயற்கையை, அதன் அதீத ஆற்றல்களைப் புரிந்து கொள்ள முடியாத ஆதிமனிதர்கள், அதன் மீதான திகைப்பு, பயம் என்பவற்றிலிருந்து விடுபட்டு அதனைக் கட்டுப்படுத்தவும் தனக்குத் தேவையான பயன்களைப் பெற்றுக் கொள்ளவும் உருவாக்கிய ஒன்றே மந்திரம்' எனப்படுகின்றது. இது ஒலி 'வழி' நிகழ்த்தப்படுவது. கற்பனை ஒன்றைத்




எருவில் கண்ணகி அம்மன் ஆலயம்



**சங்கானை வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள கிங்கிலியர்**

உற்று நோக்கியதன் விளைவு என்றும் கூறப்படுகின்றது. மந்திரமானது விருப்பு, சொல், செயல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. விருப்பின் அடிப்படையிலேயே மந்திரம் (சொல்) ஓதப்பட்டு செயல்நிலைப் (சடங்கு) படுத்தப்படுகின்றது. மந்திரங்கள் ஒத்தது ஒத்ததை உருவாக்குவது; ஒரு தடவை தொடர்பு கொண்டது எப்போதும் தொடர்பைக் கொண்டிருக்கும் எனக் (frazer 1976:52) கருதப்படுகின்றது. முதல்வகை மந்திரக் கருத்தியல் ஒத்த மந்திரம், தொத்து மந்திரம் என வகைப்படுத்தப்படுகிறது. திருமண வீட்டில் விதவையை முன்னிறுத்தாமை, ஒட்டி இருக்கும் இரட்டை வாழைப்பழங்களை உண்பவள் இரணைப் பிள்ளைகளைப் பெறுவாள் போன்றன இதற்கு உதாரணங்கள். கன்று ஈன்ற பசு மாட்டின் இளங்கொடியை பால் மரத்தில் (ஆல், கிளுவை, அத்தி..) கட்டுவதனால் பசு அதீதமாகப் பால் சுரக்கும் என்பதை தொத்து மந்திரத்திற்கு எடுத்துக்காட்டாக உரைப்பர்.

இம்மந்திரங்கள், மந்திரங்களின் வழி நிகழ்த்தப்படும் சடங்குகள் என்பவற்றின் நோக்கை அடிப்படையாகக் கொண்டு அவற்றைத் தூய மந்திரம் ( நன்மை பயப்பது), தீய மந்திரம் (தீமை விளைப்பது) என இரண்டாகப் பகுப்பர். தீய மந்திரங்களுக்கு உதாரணமாக பில்லி, சூனியம், வசியம் முதலானவற்றைக் கூறலாம். தூய மந்திரங்களோ மருத்துவம், யுத்தம், துன்ப நீக்கம் முதலியவற்றுக்கு உதவுவன. இச்சடங்குகளுக்கு பயன்படுத்தப்படும் தெய்வங்களை, நன்மை செய்யும் தெய்வங்கள் அல்லது தீமையிலிருந்து காக்கும் தெய்வங்கள், தீமைக்கான தெய்வங்கள், நன்மைக்கும் தீமைக்குமாகப் பயன்படுத்தப்படும் தெய்வங்கள் என மூன்று வகையினதாக எடுத்தாளலாம். பில்லி, சூனியம், வசியம் போன்றன தீய மந்திரச் சடங்குகளிலிருந்து

தோற்றுவிப்பதன் மூலம் உண்மையை - இயற்கையைக் கட்டுப்படுத்தலாம் என்ற எண்ணத்தின் வழி மந்திரம் உருவாக்கம் பெற்றது. அறிவும் திறனும் அதன் வழி தொழில்நுட்பமும் மேலோங்காத காலத்தில் உருவான 'கற்பனையான தொழில்நுட்பம் (Thomson, Geroge, 1980:4) என மந்திரம் விளங்கப்படுகிறது. இது சமயத்துக்கும் முன் உருப் பெற்றதாகும்.

ஒரு விருப்ப நிறைவேற்றுக் கற்பனையான மந்திரம், மனிதர் தம் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வழிபாடுகளையும் வேண்டுதல்களையும் அடிப்படையாகக் கொண்ட சமயத்துக்கு முன்னோடியாகிறது. அதேவேளை மந்திரம், இயற்கை நிகழ்ச்சிகளை

மக்களைக் காக்கும் தெய்வமாகவே கிங்கிலியர் உருநிலைப்படுத்தப்படுகிறார்.

## கிங்கிலியர்

கிங்கிலியர் பற்றிய ஆய்வுகள் தமிழ்ச் சூழலில் பெரிதும் முன்னெடுக்கப்படவில்லை. இத் தெய்வம் பற்றி பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை மட்டுமே நான்கு வரிகளாலான பந்தியில் (1996:56) குறிப்பிட்டுள்ளார். மாந்திரீகத் தொடர்புபட்ட தெய்வமாக இருத்தல் இதற்குக் காரணமாக இருக்கவும் கூடும். கிங்கிலியர் பற்றிய கதையாடல்கள் சில உண்டு. தங்களுக்கு நன்மை செய்யும் மூதாதையாகக் கிங்கிலி கருதப்படுகிறார்.

கருட புராணம் உள்ளிட்டவை, மரணத்துக்கு முன்பும் பின்புமாக உயிர்களை அச்சுறுத்தவும், பாதுகாத்து அன்பினைக் காட்டவும் இறந்த பின் அழைத்துச் செல்லவும் என மூன்று நபர்கள் வருகிறார்கள்; அவர்கள் யமதூதர்கள்; அவர்களே 'கிங்கிரர்கள்' என்கின்றன. கிங்கிரர் என்ற சொல்லே கிங்கிலி - கிங்கிலியர் என மருவியிருக்க வேண்டும்.

ஆனால் யமகிங்கிரர்கள் பாவஞ் செய்பவர்களையே அழைத்துச் செல்வர் என்றும் நன்மை புரிந்தவர்களை இறைத்தூதர்கள் - தேவர்களே அழைத்துச் செல்வர் என்ற மாற்றுக் கருத்தும் உண்டு.

'குங்குலியம்' துர்மணத்தை நீக்கி நறுமணத்தை தருவது போல தீமைகளை நீக்கி நன்மை பயப்பவர் குங்கிலியர். அச்சொல்லே மருவி கிங்கிலியர் என்பதாயிற்று என்பர்.

## ஈழத்தில் கிங்கிலியர் வழிபாட்டிடங்கள்

ஈழத்தில் தமிழர் வாழும் பாகங்களில் கிங்கிலியர் வழிபாடு காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சங்கானை, திருநெல்வேலி, வசாவிளான், இருபாலை உள்ளிட்ட பிரதேசங்களிலும் கிளிநொச்சியில் முரசுமோட்டையிலும் இவ்வழிபாடு இருப்பதனை கள ஆய்வினூடாக எம்மால் உறுதிப்படுத்த முடிகிறது. பலாலி விமான

ஈழத்தில் தமிழர் வாழும் பாகங்களில் கிங்கிலியர் வழிபாடு காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சங்கானை, திருநெல்வேலி, வசாவிளான், இருபாலை உள்ளிட்ட பிரதேசங்களிலும் கிளிநொச்சியில் முரசுமோட்டையிலும் இவ்வழிபாடு இருப்பதனை கள ஆய்வினூடாக எம்மால் உறுதிப்படுத்த முடிகிறது. பலாலி விமான நிலைய எல்லையில் இருந்த கிங்கிலியரையே தொண்ணூறு இடம்பெயர்வின் பின் வசாவிளானில் வைத்துக் வணங்குவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

நிலைய எல்லையில் இருந்த கிங்கிலியரையே தொண்ணூறு இடம்பெயர்வின் பின் வசாவிளானில் வைத்துக் வணங்குவதாக அவர்கள் கூறுகிறார்கள். யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும் தனிக் காணிகளிலும், வீட்டு வளவினுள்ளும் சிறு கோயில் அமைத்தோ வெளியில் வைத்தோ வழிபடும் மரபே காணப்படுகின்றது. ஆனால் மட்டக்களப்பில் கிராமியக் கோயில்களில் பரிவாரமாக வைத்து வழிபடும் மரபும் காணப்படுதல் குறிப்பிடத்தக்கது. இதற்கு உதாரணமாக எருவில் கண்ணகையம்மன் ஆலயத்தில் கிங்கிலியர் பரிவாரத் தெய்வமாக இருப்பதைக் குறிப்பிட முடியும். திருகோணமலை ஆலங்கேணியில் தனிக்கோயில் உண்டு.

## பில்லி சூனியமும் கிங்கிலியர் பற்றிய கதைகளும்

மாந்திரிகம் என்பது ஒரு மனிதன் தன் சகமனிதனை தன் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப ஆட்டுவிப்பதாகவோ அழிப்பதாகவோதான் கருதப்படுகிறது. பில்லி, சூனியம், ஏவல், வைப்பு, வசியம் என்பதெல்லாம் தேவைக்கு ஏற்ப பயன்படுத்தும் உத்திகள். காலம்காலமாய் மாந்திரிகம் என்பது அமானுசம் நிறைந்த ஒரு கலையாகவே கருதப்படுகிறது. இதன்

உண்மைத் தன்மை பற்றிய விவாதங்கள் ஒரு புறம் இருந்தாலும், நம்பிக்கை என்கிற பெயரில்; பொருளையும் நிம்மதியையும் அழிக்கிறது. மந்திர சக்தி அல்லது சித்தி பெற்ற ஒருவர் ஒரு சாதாரண மனிதனை உடல் ரீதியிலும் மன ரீதியிலும் செயல் ரீதியிலும் ஈர்த்து கட்டுப்படுத்துவதே பில்லி ஆகும். அதாவது பில்லி மந்திரத்தால் ஒருவனை மனநோயாளியாக ஆக்கிவிட முடியும். நல்ல ஆரோக்கியமுள்ளவரை நோயாளியாக படுக்கையில் தள்ளிவிடவும் முடியும் எனப்படுகிறது.

சூன்யம் என்றால் வெறுமை என்பது பொருள். சூன்ய மந்திரத்தால் எவரை வேண்டுமானாலும் அழித்து விடலாம், கைகால்களை முடக்கி விடலாம், சம்மந்தப்பட்டவருக்குத் தெரியாமலே வயிற்றில் வசிய மூலிகைகளைச் செலுத்திவிடலாம், கருவில் உள்ள குழந்தையைக் கூட கொன்றுவிடலாம் எனப்படுகிறது. மந்திரசக்தியால் மந்திரவாதியின் கட்டுபாட்டுக்குள் இருக்கின்ற சில தீய சக்திகளை எதிரிகளின் மீது ஏவிவிட்டு அவர்களை ஒன்றுமில்லாமல் ஆக்கிவிடுவதே ஏவல் மந்திரத்தின் முக்கிய பண்பாகும். இந்த மந்திரத்தின் மூலம் ஒருவரை முற்றிலுமாக கைவசப்படுத்தி அவரை ஏவலாளாக ஆக்கிவிடமுடியும்.

தனது சொந்த விருப்பத்தின்படி செயற்பட்டு, இலாபத்தையும் வெற்றிகளையும் அநுபவித்து வரும் ஒருவனை மந்திரங்களால் தடுத்து அவன் மனதை பல வழிகளில் திசை திருப்பிவிட்டு கீழ் நிலைக்குத் தள்ளுவதே செய்வினையின் முக்கிய செயலாகும். மந்திர வழியிலோ மருத்து வழியிலோ ஒரு பொருளை ஆடையில், உடம்பில் தடவி விட்டு அல்லது உண்ணக் கொடுத்து அவர்களை வசியப்படுத்துவதே வைப்பு என்பதன் அர்த்தமாகும். இவ்வாறான விடயங்களை எழுதுவது மூடநம்பிக்கைகளை பரப்புவதாகக கருதப்பட்டாலும் இவற்றோடு ஒட்டி நிகழ்த்தப்பட்ட சடங்குகள், வழிபடப்பட்ட தெய்வங்கள் என்பன நாட்டார் வழிபாட்டில் முதன்மைப் பெறுவதை நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

*“ஆட்டின் பித்தெடுப்பேன் அடியடியாய்*
*மண்ணெடுப்பேன்*
*கொண்டை மயிர் எடுப்பேன் - மச்சி உன்ன*
*கொண்டு வர என் காலடிக்கு”*

*“உள்ளான் குருவியின்ர உள்ளிருக்கும்*
*பித்தெடுத்து*
*சேர்த்தி மருந்தரைத்து மச்சி உன்ன*
*சேர வைப்பேன் என் காலடிக்கு”*

*“கரையாக்கன் பூவாயின்றி கை வசமாய்*
*கொண்டு வந்து*
*வைரவனை முன் நிறுத்தி உன்ன வரவழைத்தன்*
*காலடிக்கு”*

*“போறாக வன்னியனார் பொத்துவிலப்*
*பார்ப்பமெண்டு - என்ன*
*மருந்துகளை போட்டு மயக்குறாளோ*
*தேவடியாள்”*

*(பாலசுந்தரம், இ.,1979:418-420)*

எனும் நாட்டார் பாடல்வரிகளின் ஊடாக மட்டக்களப்புப் பிராந்திய மக்களின் மந்திரங்கள், சடங்குகள் தொடர்பான நம்பிக்கைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தீயமந்திரங்களின் வழி தமக்கு விருப்பமில்லாத, பகையான மனிதர்களை அவர்களது குடும்பங்களைத் துன்பப்படுத்தவும், சீரழிக்கவும் செய்யப்படுகின்ற பில்லி, சூனியம், செய்வினை போன்றன பெருந்துயரங்களை, தொடர் மரணங்களைத் தரவல்லன. இவை, குறித்த வீட்டில் இருந்து அல்லது காணியிலிருந்து எடுக்கப்பட்டதன் பின், கிங்கிலியரை சூலத்திலோ கல்லிலோ வாலாயம் பண்ணி காணியின் ஒரு சிறுபகுதியைப் புனிதமாக்கி அங்கு அத்தெய்வத்தை நிலைநிறுத்துவர். பிற்காலத்தில், இயந்திரத்தட்டில் ஆவாகனம் செய்து பூஜையறையில் வைத்து வழிபடும் முறையே முதன்மை பெற்று இன்றுவரை காணப்படுகின்றது. நம்பிக்கை தரும் நம்பிக்கையுருவாகக் கிங்கிலியர் நம்பப்படுகிறார். அவர் தீமையிலிருந்து



எருவில் கண்ணகி அம்மன் ஆலயத்தில் பரிவாரத் தெய்வம்

காப்பவர். இது தொடர்பான கதைகளை களவாய்வின் போது கேட்க முடிந்தது.

கந்தையா பூரணம் என்பவர் வீட்டில், அவர்களுடைய உறவினரால் செய்வினை செய்யப்பட்டது என்றும், அதனால் ஐம்பத்தொரு நாட்களுக்குள் கந்தையாவும் அவருடைய இரு மகள்களும் மரணித்தனர் என்றும், அதன் பின் சாத்திரியார் வருகை தந்து தலைமயிர் உள்ளிட்ட பில்லி - சூனிய - செய்வினைப் பொருட்களை வீட்டு வாயிலிலிருந்து எடுத்தார் என்றும், வாயில்லா ஜீவன் ஒன்றின் இறப்போடு இவை வலுவிழக்கும் என்று கூறி வெள்ளை நிறக் கல் ஒன்றில் கிங்கிலியரை ஆவாகனம் செய்து படலை (gate) அருகே வைத்துவிட்டு விளக்கேற்றி வணங்குமாறு கூறினார் என்றும், அதன் பின்பு வீடு அமைதி கண்டது என்றும் அறிய முடிந்தது.

தன் கணவன் மரணத்துக்கு அருகிருப்பவர்கள் செய்த பில்லி, சூனியமே காரணம் என நம்பிய தங்கம்மா சாத்திரியின் உதவியோடு அதனைத் தேடி எடுத்ததாகவும் பின் கிங்கிலியரை வைத்து வழிபட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

பில்லி, சூனியத்தால் வயல் விளைச்சலின்றி பாழடைகிறது என நம்பிய கிளிநொச்சி முரசுமோட்டை வயல்காரர் ஒருவர் தனது வயலின் நடுவே கிங்கிலியரை வைத்து வழிபட்டு வருகின்றார்.

இந்தக் கதைகள் பில்லி, சூனியம், வசியம் முதலான தீமைசார் நடத்தைகள் பற்றிய நம்பிக்கைகள் ஆழ இவர்களிடம் வேரூன்றி இருப்பதைக் காட்டுகிறது. அந்தத் தீமைகளை விலக்கவல்ல தெய்வமாக கிங்கிலியரை இவர்கள் முழுமையாக நம்புவதையும் அவதானிக்க முடிகிறது. மனித இனக்குழுவின் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து இன்று வரை, இவ்வாறான நம்பிக்கைகள் மக்களிடம் நிலவிவருகின்றன. இவை அறிவியலுக்கு ஒவ்வாதவை என அறிஞர்கள் வாதிடவும் எள்ளல் செய்யவும் கூடும். ஆயினும் நிதர்சனத்தில் மக்களிடையே இந்நம்பிக்கைகள் இன்றும் நிலவி வருகின்றன என்பதே உண்மை.


திருகோணமலை - ஆலங்கேணி, கிண்ணியா பகுதியில் கிங்கிலியருக்குக் கோயில் அமைத்த மார்க்கண்டு இராசமாணிக்கம் பன்னீர்செல்வம் அவர்கள், குளக்கோட்டன் கந்தளாய்க் குளத்தை கட்டியபோது அதற்கு காவல் தெய்வமாக கிங்கிலியரை ஸ்தாபித்தான் என்றும் தான் சிறு வயதில் மாடு மேய்க்கச் சென்றபோது அத்தெய்வம் தன்னில் ஏறியதாகவும் பின்பு தான் இந்த கோயிலை அமைத்ததாகவும் கூறுகிறார். அங்கு பில்லி, சூனியம் பற்றிய கருத்தாடல் இல்லை. மக்கள்

இடர் களையும் தெய்வமாகவே கிங்கிலியர் கருதப்படுகிறார். பீடத்தில் ஒரு கல் வைத்து வழிபடப்படுகிறது. வடமராட்சியில் துரும்பர் குளத்தருகே கிங்கிலியர் வழிபாடு இருந்ததாகவும் அது துரும்பர் தெய்வம் எனக் கூறப்பட்டதாகவும் ஊரவர்கள் சிலர் அடையாளப்படுத்தினும், கிங்கிலியர் சாதியத்துக்கு அப்பாலான தீய மந்திரச் சடங்குகளால் பாதிக்கப்பட்ட மக்களின் தெய்வமாக இருப்பதையே காணமுடிகின்றது.

கிங்கிலியர் கல்லாலான தெய்வமாகக் காணப்பட்டாலும் சிற்சில இடங்களில் சூலத்திலும் வைத்து வழிபடப்படுகிறார். அவருக்கென ஒரு உருவம் எங்கும் கூறப்படவில்லை. ஆனால் சிற்சில கதைகள் கூறப்படுகின்றன.

தன்னுடைய அம்மம்மாவின் இளமைக் காலத்தில் அவர் தன் ஆச்சியுடன் (அம்மா) அதிகாலையில் தங்களது பனங்காணியில் பழம் பொறுக்கச் செல்வதாகவும் ஒரு நாள் முழு நிலவின் ஒளியினால் நேரம் தெரியாது மிக வேளைக்குச் சென்றதாகவும் அப்போது ஒரு நிழல் ஆச்சிக்குப் பின்சென்ற தனது அம்மம்மாவைக் கிளித்தட்டு மறிப்பது போல மறித்ததாகவும் அதனைக் கண்ட ஆச்சி அவரை ஏசிக் கூப்பிட்டதாகவும் அந்த நிழல் உடனே விலகி வழிவிட்டதாகவும் அதன் பின்பு இருவரும் கோயில் வாசலில் இருந்து விட்டு பின்பு விடியற்பொழுதில் பனம்பழம் பொறுக்கிச் சென்றதாகவும் கூறப்பட்டது (நேர்காணல் : திருமதி.சி. செல்வமனோகரி)

சாமப்பொழுதுகளில் வெள்ளை வேட்டி, நீண்ட சால்வை, தோளில் தொங்க வெண்மையான சுருள் முடியும் தாடியும் கையில் பிரம்பும் கொண்டு காற்சதங்கைச் சத்தம் கேட்க, வீதியால் காவலுக்கு கிங்கிலியர் நடந்து போவாராம் (நேர்காணல்: திருமதி.ச. இராஜேஸ்வரி)


வைரவராக மாற்றப்பட்ட கிங்கிலியர்
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

யமதூதர்களான கிங்கிரர்களின் கருமைத் தோற்றத்துக்கு மாறாக வெண்மை இங்கு சுட்டப்படுவது கவனத்திற்குரியது. வெண்மை பொதுவில் தூய்மையின் - நல்லதன் குறியீடாகவே கருதப்படுகின்றது. இங்கு தோற்றப்பொலிவு சொல்லப்பட்டாலும் 'உருவவியல்' முன்னிறுத்தப்படவில்லை. அனைத்துத் தகவல் வழங்கிகளினாலும் கிங்கிலியர் அருவமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வழிபாட்டு முறை

கிங்கிலியரை வீடுகளில் வைத்து ஆதரிப்பவர்கள் பொதுவில் பொங்கல் பொங்கி மடை பரவுகின்றனர். சில இடங்களில் கோழி, ஆடு பலியிடப்படுவதும் மச்சம் சமைத்து படைக்கப்படுவதாகவும் அறிய முடிகிறது. திருகோணமலை ஆலங்கேணி கிங்கிலியர் கோயிலில் வைகாசி அமாவாசை தோறும் மழை மடை பரவி வழிபடுவதோடு கருத்தக் கடா ஆடு பலியிடப்படுவதையும் அறிய முடிகின்றது. மந்திர சித்திக்காகவும் காரிய சித்திக்காகவும் அட்சரம் போட்டு கிங்கிலியரை அதிலே ஆவாகணம் செய்து அந்த இயந்திரத்தகட்டை வெற்றிலையிலே வைத்து இரு கைகளாலும் ஏந்தி சுடலையில் நின்றும் தமக்கு ஏதுவான இடங்களில் நின்றும் உருச் செபிப்பர்

(கணபதிப்பிள்ளை, க., 1996:53). இதன் ஊடாக தமது எண்ணம் சித்திக்கும் என்பது அவரது நம்பிக்கை. இத்தெய்வம் தம்மை துயரங்களில் இருந்து காக்கும் என்ற நம்பிக்கையின் வழி நேர்த்திக்கடன் வைப்பதும் பொங்கல் இடுவதும் நடைபெற்று வருகின்றது.

## சமகாலப் பயில்வு

இன்று பில்லி, சூனியம், வசியம் முதலான தீய மந்திரங்கள், சடங்குகள் பற்றிய நம்பிக்கைகள் வலுவிழந்து வருகின்றன. அவற்றை உரையாடுவதும் எழுதுவதும் அநாகரிகமானதாக கருதப்படுகின்றது. அது படிப்பறிவற்ற காட்டுமிராண்டிகளின் நம்பிக்கை என்று கருதப்படுகின்றது. அதற்குச் சமாந்தரமாக துன்புற்றவர்களிடம் இவை பற்றிய நம்பிக்கைகள் தொடர்கதைகளாக காணப்பட்டுவருகின்றன. இணையத்தில் கிங்கிலியர் என தட்டச்சு செய்யும் இடத்து கிங்கிலியர் மந்திரம் - இயந்திரம் பற்றிய குறிப்புகள், மந்திரங்கள், இயந்திரத் தகடுகள், அவற்றின் விலைகள், அசைவப் பலியுடன் படையல் எனும் பெறுபேறுகள் அதிகம் கிடைப்பதே இதற்கு உதாரணம். இவை நவீன சமய 'வர்த்தக' முறைகளாக, இந்நம்பிக்கையின் வீழாத் தொடர்ச்சியின் சான்றுகளாகக் காணப்படுகின்றன. ஆனால் கிங்கிலியர் வழிபாடு மிகவும் வலுவிழந்த நிலையிலேயே காணப்படுகின்றது. சாதாரண மக்களுக்கு கிங்கிலியர் பற்றித் தெரியாது இருக்கின்றமையை களவாய்வின் வழி அவதானிக்க முடிந்தது. இதற்கு மூன்று காரணங்களை பிரதானமானவையாகச் சுட்டலாம்.

1. பில்லி, சூனியம் முதலான நம்பிக்கைகள் வலு இழந்து வருதல்.
2. கிங்கிலியர், கிங்கிலிய வைரவராக - வைரவராக மேல்நிலை ஆக்கமும் உருமாற்றம் அல்லது உருமறைப்புச் செய்யப்படுகின்றமை.
3. பொதுவாக கிராம வழிபாடுகள் கைவிடப்பட்டு வருகின்ற தன்மை.

இங்கு கூறப்பட்ட மூன்றாவது விடயம் பொதுவானது எனினும் முதல் இரண்டு விடயங்களும் கிங்கிலிய வழிபாட்டுக்கு மட்டுமே உரியவை.

இன்றைய சமூகத்தில் ஏற்பட்டு வரும் பகுத்தறிவு வாதம், சமய ஈடுபாடற்ற அல்லது சமயத்துக்கு நேரம் ஒதுக்க முடியாத பொருளாதார நோக்குடைய இயந்திர வாழ்வு, பழமையைக் கைவிடுதல், புதுமை நாட்டம், மதமாற்றம் முதலான பல காரணிகள் இதன் பின்னணியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. தன்னிலைப்பட்ட தெய்வத்தை சமஸ்கிருதமயமாதல் என்னும் பிராமண மயப்படுத்தும் மேல்நிலை ஆக்கச் செயல்முறை கிங்கிலி எனும் தெய்வத் தொன்மத்தை அழிப்பு நிலை செய்து வைரவராக உயர்நிலைப்படுத்துகின்றது. இதன் வழி கிங்கிலியர் மக்களின் நம்பிக்கைகளில் இருந்து காணாமல் போய்க் கொண்டிருக்கின்றார்.

## முடிவுரை

மக்களின் காவல் தெய்வமாக வறுமை, துயர் என்பனவற்றில் இருந்து மட்டுமின்றி பிறரால் தம்மை, தமது குடும்பத்தை அழிவுக்கு உட்படுத்தும் நோக்கோடு செய்யப்பட்ட தீமைகளான பில்லி, சூனியம், வசியம் உள்ளிட்டவற்றைத் தடுத்து அழித்து காப்பாற்றும் நம்பிக்கை உருவானவர் கிங்கிலியர். அரூப தெய்வமாக, பேதமற மக்களால் பொதுநிலையில் வழிபடப்பட்ட தெய்வமே கிங்கிலியர். மக்களின் தெய்வமாய் நன்மையின் படிமமாய் எந்த உருவுமற்று கல்லிலும் சூலத்திலும் தனி வழிபாடுகளின் வழி வழிபடப்பட்ட தொன்மத் தெய்வம் கிங்கிலியர். இது சிறுகோயில், பரிவாரத் தெய்வம் என்ற நிலையில் இரண்டாம் கட்ட வளர்நிலையினைப் பெற்றது. ஆயினும் நம்பிக்கைகள், மந்திரங்கள், சடங்குகள் என்பனவற்றில் ஏற்பட்ட நம்பிக்கையீனம், பகுத்தறிவுச் சிந்தனை வளர்ச்சி இவ்வழிபாட்டில் கீழ்நிலையை ஏற்படுத்தின. 'கிங்கிலியசுவாமி' 'கிங்கிலியத் தகடாக' உருமாற்றம் பெற்றார். இன்று அவர் பூஜை அறைகளில் இயந்திரத் தகடாகவும் உடலில் அச்சரக்கூடுகளாகி அணிகலன்களாகவும் மாற்றம் பெற்று வர்த்தகப் பண்டமாக்கப்பட்டுள்ளார்.

(தொடரும்)



*"யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.*


**நடராஜா செல்வராஜா**

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.


# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள்

12




**ஆங்கிலேயர் காலத்து 'க்ளப்' ஒன்றின் வாசகம் - நாய்களுக்கும் இந்தியர்களுக்கும் அனுமதி இல்லை எனக் குறிப்பிடுகிறது.**

Image Source - theconversation.com

## யாழ்ப்பாணத்தில் உருவாகிய தனித்துவமான சனசமூக நிலைய நூலக மரபு

தத்தமது கிராமங்களின் சமூக மேம்பாடு, சமூகத்துக்கான பொது அறிவினை வழங்கல், சமூகத்தினரிடையே ஒற்றுமையைப் பேணல், சுயசிந்தனை கொண்ட அறிவுசார் சமூகமொன்றுக்கான அடித்தளத்தை வழங்கும் வகையில் வாசிப்புக் கலாசாரத்தை உருவாக்குதல் என்பன போன்ற காரணிகளை முன்வைத்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் உருவாகியதே சனசமூக நிலையச் சிந்தனையாகும். அக்காலகட்டத்தில், குறிப்பாக ஆங்கிலேயர் காலத்தில் பிரபுக்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் மட்டுமே

கிட்டியிருந்த 'கிளப்புகளின்' அங்கத்துவம், பொது வெளியில் சந்தித்து உண்டு கழித்து உரையாடும் கிராமத்துச் சுதேச மக்களுக்கு கிட்டவில்லை.

அக்காலகட்டத்து கலாசாரத்தில் பாரிய மரங்களைச் சுற்றிய 'குந்து'களும் மதகுகளும் தான் அவர்களது 'ஊர்த்துளவாரம்' பேசும் சந்திப்பு மையங்களாகியிருந்தன. பின்னாளில் ஊர் மக்களின் கூட்டு முயற்சியினாலும், ஊரில் பணம் படைத்தவர்களின் நிதியுதவிகளுடனும் ஞாபகச் சின்னங்களாக கூரையுடன் கூடியதாகக் கட்டப்பட்ட தெருக்கோடி இளைப்பாறு மடங்களும், முச்சந்தி மடங்களும், சுதேசிகளின் சந்திப்பு மையங்களாகின. காலக்கிரமத்தில் ஊரவரின் இத்தகைய நேர விரயத்தை பயனுள்ளதாக்கும் வகையில் இம்மடங்களில் 'பத்திரிகைகள்' வைக்கும் பழக்கம் அறிமுகமாகி அவர்களுக்கு 'நாட்டு வளப்பம்' பற்றிய செய்திகளை அறிந்துகொள்ளும் வாய்ப்பினை ஊர்ப் பிரமுகர்கள் வழங்கினர். மழை, வெய்யில் காலங்களில் அவர்களுக்கு வசதியாக இம்மடங்களையொட்டி தனியான சனசமூக நிலையக் கட்டிடங்களும் காலக்கிரமத்தில் பரிணாமம் பெற்றன. 1970 - 1980 களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்த மேகங்கள் சூழும் வரையில், கிராமிய மட்டத்தில் நூலக சேவையினை வழங்குவதில் மாவட்ட சபை உப அலுவலகங்களின் (இன்றைய பிரதேச சபை) கீழ் இயங்கும் பொதுசன நூலகங்களுக்கு அடுத்தபடியாக சனசமூக நிலையங்களே முன்னணியில் நின்றிருக்கின்றன. 1980 களின் ஆரம்பத்தில் சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் வேலைத் திட்டங்களில் பதிவு செய்யப்பட்டு பங்காற்றிய வகையில் 338 சனசமூக நிலையங்கள் பல்வேறு மட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையாற்றி வந்துள்ளன என்பதை நானறிவேன். இன்று வலிகாமம் தெற்குப் பகுதியில் மாத்திரம் சுமார் 60 சனசமூக நிலையங்கள் செயற்படுவதையும், அவற்றுள், நூலகப் பணியாளர்களைக் கொண்டியங்கும் மூன்று சனசமூக நிலையங்கள் செயற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரும்பாலான சனசமூக நிலையங்கள் புதினப் பத்திரிகைகளையும் சில சஞ்சிகைகளையும் கொண்ட வாசிகசாலைகளாக மாத்திரம் இயங்கி வந்தன. சில சனசமூக நிலையங்கள் வாசிகசாலையுடன் இணைந்ததாக இரவல் வழங்கும் நூலக சேவையினையும் நடாத்தின. நிதிப் பற்றாக்குறை, விஞ்ஞான ரீதியிலான நூலக நிர்வாகம் தொடர்பான போதிய துறைசார் அறிவின்மை, உள்ளக நிர்வாகச் சீர்கேடுகள் போன்ற காரணிகளால் சில சனசமூக நிலையங்கள் நூலக சேவையினை திறம்பட நடாத்தமுடியாத நிலையில் காணப்பட்டிருந்தன. சில இடங்களில் நிரந்தரக் கட்டிட வசதிகள் கொண்டுள்ள சனசமூக நிலையங்கள், கற்றோர், செல்வந்தர் போன்றோர் வாழும் சூழலில் அமைந்திருந்த போதிலும் அவர்களின் அக்கறையின்மையால் வாசிகசாலைகளாக மட்டுமே இயங்கி வந்ததையும் அவதானிக்க முடிந்தது.

சனசமூக நிலைய நூலகங்களிற் சில மிகத் திறமையாக இயங்கி கிராமத்தவரின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து இத்தகைய வெற்றி வாய்ப்பினைப் பெற்றுள்ள நூலகங்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளன. ஒரு கிராமத்தின் முழுமையான நிர்வாகத் திறனில் தங்கி இயங்கும் சனசமூக நிலையங்கள், சமய நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றைச் சார்ந்த நூலகங்களின் நாளாந்த நடவடிக்கைகளில் பல சிக்கல் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. பொதுநல நோக்கத்தைக் கருத்திற்கொண்டு இத்தகைய பிரச்சினைகளை சுமூகமாகத் தீர்த்துக்கொண்டு கிராமத்தவரின் ஒத்துழைப்புடன் நூலகத்தை நிர்வகிப்பது சிறிது கடினமாக இருப்பினும், அது இயலாத காரியமல்ல.

இத்தகைய பின்புல அறிமுகத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கி வருகின்ற சில குறிப்பிடத்தக்க சனசமூக நிலைய நூலகங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை வகை மாதிரிக்காக இத்தொடரில் வழங்குகின்றேன்.

யாழ்ப்பாணக் கலாசாரத்துடன் ஒன்று கலந்து நிற்கும் சனசமூக நிலைய மரபினை இவ்வுதாரண நிறுவனங்களின் வாயிலாக ஓரளவு வாசகர் உய்த்துணர்ந்து கொள்ளலாம். இவை வெறும் உதாரணங்களேயன்றி, இவையே தலைசிறந்த சனசமூக நிலையங்கள் என்ற வகைப்படுத்தல் எவையும் இங்கே மேற்கொள்ளப்படவில்லை.

## அல்வாய் பாரதிதாசன் படிப்பகம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் அல்வாய் கிராமத்தில் பாரதிதாசன் படிப்பகம் இயங்கி வருகின்றது. இது வடமராட்சியின் அல்வாய் கிராமத்தில் சமூக மேம்பாட்டின் மீது அக்கறை கொண்ட இளைஞர் குழுவொன்றினால் 1964 மே 1 ஆம் திகதி தொடங்கப்பெற்றது.
தமிழகக் கவிஞரான பாரதிதாசனின் கவிதைகள் விதைத்துச் சென்றுள்ள பகுத்தறிவு, மொழிப்பற்று, இனவுணர்வு, நாட்டுப்பற்று, சமூகச் சீர்திருத்தம் போன்ற கருத்துகளை உள்வாங்கி அதன்வழி ஒழுக முனையும் இளைஞர்களுக்கு அக்கவிஞனின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள இப்படிப்பகம் வழிகாட்டியாக அமைந்துள்ளது.
பாரதிதாசன் படிப்பகத்தின் மகுட வாசகமாக பாரதிதாசனின் கவிவரிகளில் ஒன்றான 'செல்வம் என்று போற்று செந்தமிழ்ச் சொல்லை' என்ற சொற்பதத்தைத் தேர்ந்தெடுத்துப் பொறித்து வைத்துள்ளார்கள்.

ஒரு சனசமூக நிலையமோ பொது நூலகமோ தம்மளவில் சிறப்பானதெனத் தேர்ந்தெடுத்துக்கொண்ட பாதையொன்றில் பயணிக்க வேண்டுமாயின் தனக்கென்றொரு தூரநோக்குச் சிந்தனை கொண்ட 'பணிக்கூற்று' முக்கியமானது. அப்பணிக்கூற்று, குறித்த அந்த நூலகம் அல்லது சனசமூகநிலையம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், அதன் இலக்கு, அதன் இலட்சியம் என்பவற்றை தெளிவாக வரையறை செய்துகொண்டதாக அமைய வேண்டும். அவ்வகையில் பாரதிதாசன் படிப்பகத்தின் பணிக்கூற்றுகளாக 'தமது பிரதேசத்தின் பாரம்பரிய முதுசங்களையும் புலமைச் சொத்துக்களையும் ஆவணப்படுத்திப் பயன்படுத்துவதினூடாக அறிவு சார்ந்த ஒரு சமூகத்தை உருவாக்குதல்' என்பது வரையறுக்கப்பட்டுள்ளது.
வடமராட்சிப் பிரதேசத்திலே பல்வேறு நூலகங்கள் நகரசபையாலும், பிரதேச சபையாலும், பாடசாலை நிர்வாகங்களாலும், உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் நிதிப் பின்னணியினாலும், இயங்கி வருகின்றன. இத்தகைய கல்விசார் நிறுவனங்களின் மத்தியில் தனித்துவமாக தனது இருப்பை தக்கவைத்துக்கொண்டுள்ளது பாரதிதாசன் படிப்பகம்.
வடமராட்சிப் பிரதேசத்தில், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய மூன்று பிரதேசச் செயலக பிரதேச எல்லைகளுக்குள் வசிக்கின்ற அறிவுத் தாகம் கொண்ட இளையோர், பெரியோர் அனைவரும் பாரதிதாசன் படிப்பகத்தில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை 1600 இற்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் பாரதிதாசன் படிப்பகத்தில் இணைந்து சேவைகளைப் பெற்று வருகின்றனர்.

இந்நூலகத்தின் சிறப்பம்சம், அங்கத்தவர்களுக்கிடையேயான கையெழுத்துச் சஞ்சிகை உருவாக்கமும் பகிர்தலுமாகும். மொழித்திறன் விருத்திக்கு வழிவகுக்கும் இத்தகைய செயற்பாடுகள் இப்பிரதேச பாடசாலை மாணவர்களிடையே இளம் படைப்பாளிகளையும் இலக்கியவாதிகளையும் முகிழ்ந்தெழச் செய்கின்றன. காலத்துக்குக் காலம் படிப்பகத்தினரால் கவிதை, கட்டுரை, சிறுகதைப் போட்டிகளும் நடைபெறுகின்றன.
இந்நூலகம் 9000 இற்கும் அதிகமான நூல்களை தனது நூற்சேர்க்கையில் கொண்டுள்ளது. இரண்டு நூலக அலுவலர்கள் நூலகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனால் பாரதிதாசன் படிப்பகத்தின் சேவைகள் இடையூறின்றி வழங்கப்பட்டு வருகின்றன. நூலக சேவைகளைக் கண்காணிப்பதற்கும், அதன் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், மேலதிக சேவைத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் என சமூக ஆர்வலர்கள், கிராமத்தின் கல்விமான்கள் ஆகியோரை உள்ளடக்கிய நூலகக் காப்பாளர் சபையொன்றும் இங்கு இயங்கி வருகின்றது. இந்நூலகம் திங்கட்கிழமைகள் தவிர்ந்த ஏனைய




**அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்**

Image Source - www.ariyalai.com

ஆறு நாட்களும் காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை சேவையாற்றுகின்றது. நூலகத்தின் விரிவாக்கப் பணிகளின் தேவை கருதி 2003 இல் புதிய கட்டிடம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது. இத்திறப்பு விழாவின் போது 'திரவியம்' என்ற பெயரில் ஒரு சிறப்பு மலரும் வெளியிடப்பட்டுள்ளது. அல்வாய் பாரதிதாசன் படிப்பகம் தொடர்பாக மேலதிக பல தகவல்களை இச்சிறப்பிதழின் வழியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்நூலகம் திறந்திருக்கும் நேரம் குறித்த மீள் மதிப்பீட்டினை நூலகக் காப்பாளர் சபை மேற்கொள்ள வேண்டும். நூலகம் திறந்திருக்கும் நேரத்தை, அரச - தனியார் அலுவலகங்களில் தொழில் பார்க்கும் அலுவலர்களுக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் வார நாட்களில் நூலகத்திற்கு வந்து பயன்பெற்றுச் செல்வதற்கு வசதியானதாகக் கருத முடியாது. மாணவர்களினதும் அலுவலக ஊழியர்களான அங்கத்தவர்களினதும் நலன் கருதி நூலகம் திறந்திருக்கும் நேரத்தை மாலை 6:30 மணி வரையாவது நீடிக்க வேண்டும்.
(தகவல் உதவி : கு.சரவணன், நூலகக் கவனிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்

2021 இல் பவளவிழாக் கண்ட ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம், 1946 ஆம் ஆண்டு அரியாலையூர் மக்களால் தொடங்கப் பெற்றது. ஆரம்பத்தில் தனியார் இல்லமொன்றில் இயங்கிய இந்தச் சனசமூக நிலையம், 1953 ஆம் ஆண்டில் சொந்தமாக வாங்கப்பெற்ற காணியொன்றில் 1977 ஆம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்ட நிரந்தரக் கட்டிடத்தில் இயங்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் விளையாட்டுத்துறையில் அதிக ஈடுபாடு கொண்ட அங்கத்தவர்களால் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் பெருமை பெற்றது. அன்றைய காலகட்டத்தில் கலைமகள் சனசமூக நிலையத்தினரால் ஒழுங்குபடுத்தப்பட்ட கரப்பந்தாட்ட அணி நாடளாவிய ரீதியில் சிறந்தவொரு அணியாகப் பெயர் பொறித்திருந்தது. அதன் கிரிக்கெட் அணி யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த அணிகளுள் ஒன்றாகவும், எல்லே அணி நல்லூர்ப் பிரதேச மட்டத்தில் சிறந்த அணியாகவும் திகழ்ந்து வந்தது. யாழ் மாவட்டத்திலேயே முதன் முறையாக

பெண்களுக்கான கிரிக்கெற் அணி அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது.

மாதர் சங்கம், இளைஞர் கலா மன்றம், சிறுவர்களுக்கான முன்பள்ளி, விளையாட்டுக்கழகம், சிறுவர் அரங்கம் எனப் பல்வேறு பகுதிகளுடன் சிறந்ததொரு நூல் நிலையத்தையும் ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம் கொண்டுள்ளது.

இந்நிலையத்தவர்களால் ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கல் நாளை முன்னிட்டு 'கரோல்' கதம்ப நிகழ்ச்சி கலாசாரப் பெருவிழாவாக நடாத்தப்பட்டு நிதி சேகரிப்பும் இடம்பெற்று வருகின்றது. ஆண்டுதோறும் ஒவ்வொரு சிவராத்திரி தினத்தின்போதும் கலையில் ஈடுபாடு கொண்ட அறுபது வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு 'கலைச் சிகரம்' விருதும் வழங்கப்படுகின்றது.
2016 ஆம் ஆண்டு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தினர் மேற்படி நிலையத்தின் எழுபதாவது ஆண்டு நிறைவு விழாவினை சிறப்பான முறையில் நடத்தி முடித்துள்ளனர். அதனை முன்னிட்டு கிரிக்கெட் போட்டிகளும் கல்வியாளர்கள், கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் கௌரவிப்புகளும் நாடகம், கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் இடம்பெற்றன.
(தகவல் உதவி : இ.மதிகரன், முன்னாள் தலைவர், ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம்)

## சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பருத்தித்துறைப் பிரதேசத்தின் விவசாயக் கிராமமான தம்பசிட்டியில் மாமலந்தணிச் சிவாலயத்தின் அருகாமையில் திரு. செல்லத்தம்பி முத்துக்கிருஷ்ணா, மு. நாராயணமூர்த்தி, செல்லத்தம்பி பெருமாள்பிள்ளை, செல்லத்தம்பி இராமச்சந்திரன், செ. அருச்சுனா ஆகியோர் 'இளைஞர் வாசிகசாலை' (Young Men's Library) ஒன்றை 1906 ஆம் ஆண்டு முதல் திருமதி பார்வதி கந்தையா அவர்களின் வீட்டில் இயங்கினர். இதுவே பின்னர் அவ்வூரில் வாழ்ந்து மறைந்த சதாவதானி கதிரைவேற்பிள்ளை



சதாவதானி கதிரைவேற்பிள்ளை

Image Source - tamil.wiki/wiki

அவர்களின் பெயர் சூட்டப்பெற்று ஜூலை 1948 முதல், படிப்படியான வளர்ச்சியைப் பெற்று வந்தது. கடந்த 12.7.1998 இல் ஐம்பதாவது ஆண்டு விழாவையும், 2006 இல் தனது நூற்றாண்டு விழாவையும் சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் கண்டுள்ளது.

பிராந்தியத்தின் சமூகக் கலாசாரம், பாரம்பரியம் என்பவற்றை நிலைநிறுத்திப் பேணும் நிலையமாக இயங்குவதைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு நடைபயின்று வருகின்ற சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம், 'சமூக மானுட விழுமியங்கள், ஒழுக்க அறிவியல் கட்டளைகள் மற்றும் நன்னடத்தைசார் உணர்வு ஆகிய பண்புகளை விருத்தி செய்து பிள்ளைகளின் மத்தியில் நல்லதொரு சூழலை உருவாக்கும் நிலையமாக விளங்குதல்' என்பதை தனது பணிக்கூற்றாகக் கொண்டுள்ளது.


பருத்தித்துறை, மேலைப் புலோலியில் பிறந்த சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை (தோற்றம்: 21.12.1871 - மறைவு: 26.03.1907) 36 வருடங்களே இவ்வுலகில் வாழ்ந்திருந்தாலும்,

தமது வாழ்நாளின் பெரும் பகுதியைத் தமிழகத்தில் தமிழ்ப் பணிக்கும், சைவப் பணிக்கும் தந்தவர். இவர் அயலில் இருந்த சைவப் பிரகாச வித்தியாசாலையில் தொடக்கக் கல்வியைப் பெற்றார். ஆறாம் வகுப்புக்கு மேல் படிப்பைத் தொடர இயலாத பொருளாதார வசதியீனமான நிலையில், ஆறுமுக நாவலரின் மாணாக்கராகிய மகாவித்துவான் தியாகராசப்பிள்ளையிடம் முறையாகக் கல்வி கற்றார். பதினெட்டு வயதிற்குள் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் சங்க நூல்களையும், தருக்க சாத்திரங்களையும் துறைபோகக் கற்றார்.

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் 12.07.1948 இல் பருத்தித்துறைப் பட்டண சபையில் ஒரு சனசமூக நிலையமாக முறைப்படி பதிவுசெய்யப்பட்டது (பதிவு இலக்கம்: J/U/CC/1). மக்களின் ஒத்துழைப்புடன் 1960 இற்குப் பின் படிப்படியாக பத்திரிகைகளும், நூல்களும் கொள்வனவு செய்யப்பட்டு அங்கு ஒரு நூலகம் உருவாக்கப்பட்டது.

சமய, சமூக, கலாசார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கென நிலையத்தின் ஒரு கிளையாக 1967 ஆம் ஆண்டில் ‘கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்’ என்ற அமைப்பினை உருவாக்கி, 1975 முதல் ‘கதிரொளி’ என்னும் மாதாந்தக் கையெழுத்துச் சஞ்சிகையை வெளியிட்டனர். முதலில் மு.ஆ. கந்தவேல் (முருகேசு ஆறுமுகம் கந்தவேல்) இச்சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகப் பணியாற்றினார். கதிரொளி சஞ்சிகை 11.04.1976 இல் சதாவதானியின் ஆண்டுவிழாவையொட்டி அச்சுருவிலும் வெளிவந்திருந்தது. அந்நாட்களில் கோவில்களில் நடைபெற்று வந்த சதிர்க் கச்சேரிகள், மிருகபலிகள் போன்றவற்றை எதிர்த்து துண்டுப் பிரசுரங்களை மக்களிடையே விநியோகித்து அவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் பணியில் ‘கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்’ ஈடுபட்டு வந்தது.

படிப்படியாக சனசமூக நிலையத்தின் விரிவாக்கச் சேவைகளாக பாலர் பாடசாலை,




கதிரொளி சஞ்சிகையின் அட்டைப்படம்
Image Source - noolaham.net

அறநெறிப் பாடசாலை ஆகியவற்றையும் தொடங்கினர். 1967 ஆம் ஆண்டிலிருந்து ஊர்ச் சிறுவர்களின் வாசிப்புத் திறனை மட்டுமல்லாது அவர்களது பேச்சுத்திறன், பாட்டுத்திறன், வாதாடும் திறன் என்பவற்றையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன், சதாவதானி கதிரைவேற்பிள்ளை அவர்களின் குருபூசைத் தினத்தன்று பேச்சு, பண்ணிசை, பட்டிமன்றம், கட்டுரை எழுதுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களையும் வழங்கினர்.
1985 ஆம் ஆண்டு (08.12.1985) அக்கிராம விவசாயிகளுக்குக் கடன் உதவி வழங்கும் நோக்குடன் சிக்கனக் கூட்டுறவுச் சங்கத்தினையும் ஆரம்பித்திருந்தனர். போர்க்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அழிவுகளில் இருந்தும் பீனிக்ஸ் பறவையாக மீண்டெழுந்த சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் 2012 ஆம் ஆண்டில் புனரமைக்கப்பெற்ற அழகான கட்டிடத்துடன் பொலிவு பெற்றது. இந்நூலகம் பத்திரிகை, சஞ்சிகைச் சேர்க்கைகளுடன், 3,200 நூல்களைக் கொண்டதாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

அப்பிரதேசத்தின் பாடசாலைச் சிறப்பு மலர்கள், ஆண்டு மலர்கள், அந்தியேட்டி நினைவு மலர்கள், உள்ளூர் ஆசிரிய/வெளியீட்டாளர்களின் நூற்சேர்க்கைகள் எனப் பல்வேறு சிறப்புச் சேர்க்கைப் பிரிவுகளை உருவாக்கி வளர்த்து வருகின்றது.
(தகவல் உதவி: அ. சுபாசினி, நூலகக் கவனிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

ஏழாலை சித்தி விநாயகர் நூலகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏழாலை என்ற சிற்றூர் பல புலவர்களையும், வித்துவான்களையும், பண்டிதர்களையும், பேராசிரியர்களையும், ஆசிரியப் பெருந்தகைகளையும், முன்னோடிச் சிறுகதை எழுத்தாளர்களையும் எமக்குத் தந்த மண்ணாகும்.

1981 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பொதுநூலகம் இலங்கையின் ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்டு அழிக்கப்பட்ட காலகட்டத்தில் தோன்றிய மக்கள் எழுச்சியின் பயனாகவும், அவர்களுக்கான வாசிப்பிற்கான உள்ளூர் வாய்ப்புகளை வழங்கும் நோக்குடனும் யாழ்ப்பாணத்தில் ஆங்காங்கே சனசமூக நிலையங்களினூடாக பல நூலகங்கள் சிறியதும் பெரியதுமாக உருவாக்கப்பட்டன. யாழ்ப்பாணம் ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டு நூலகத்தின் வரவும், மேலும் பல்வேறு சனசமூக நிலைய நூலகங்களின் உருவாக்கமும் இதன் ஒரு பக்க விளைவே.
ஏழாலை சித்தி விநாயகர் நூலகமும், யாழ்ப்பாண நூலக எரிப்பின் விளைவாக ஏற்பட்ட ஏழாலைப் பிரதேச மக்களின் வாசிப்புத் தேடலுக்குத் தீனியாக 1985 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 18 ஆம் நாளில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் அவர்களினால், ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் புத்தகக் கண்காட்சியுடன் திறந்து வைக்கப்பட்டது. இந்நூல் நிலையம், வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட (N/202) கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ளது. இது, மல்லாகத்தில் இருந்து தெற்குப் புன்னாலைக்கட்டுவனுக்குப் போகும் பிரதான பாதையில், ஏழாலை சாது சங்க மடமாக இருந்து தற்போது ஊர் மக்களால் ‘மடத்துப் பிள்ளையார்’ என்றழைக்கப்படும் கோவிலுக்கு எதிர்ப் புறமாக, முத்தமிழ் மன்றத்துக்குப் போகும் வழியில் உள்ளது.
ஏழாலை சித்தி விநாயகர் நூலகம் அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்துக்கு எதிர்ப்புறமாக அமைந்துள்ள இல்லம், ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடி சி. வைத்திலிங்கம் அவர்களுடைய பூர்வீக இல்லமாகும். இலக்கிய கலாநிதி திரு.மு. கந்தையா, சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் ஆகியோரின் வழிகாட்டல்களுடன் திரு.இ. கணேசராஜா அவர்கள் இந்நூலகத்தை ஆரம்பத்தில் நடாத்தி வந்தார். இவ்விரு பெருந்தகைகளும் இறந்த பின்னர் அவ்விருவரின் நினைவாகவும், இலக்கிய கலாநிதி திரு.மு. கந்தையா, சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் ஞாபகார்த்த சித்தி விநாயகர் நூலகமாக இதனை பெயர் மாற்றம் செய்துள்ளார். இரண்டறைகள் கொண்ட இந்நூலகக் கட்டிடம் பொதுமக்கள் மத்தியில் இன்றும் சுருக்கமாக ஏழாலை சித்தி விநாயகர் நூலகம் என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.
ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் கற்கும் யாழ் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் அயலில், பலரும் சங்கமிக்கும் ஒரு இடமாக தெருக்கரையில் அமைந்திருந்தமையால், பலரும் எப்போதும் பத்திரிகை வாசிப்பதற்கு அங்கு குழுமியிருக்கும் சூழலே காணப்பட்டது. இந்த நூலகத்தின் முதல் அங்கத்தவராக சிறுகதை முன்னோடி சி. வைத்திலிங்கம் அவர்களே தம்மைப் பதிவு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நூலகத்தின் தொடக்க காலத்தில் பெரியோர், சிறியோர், பெண்கள் என வாசகர் கூட்டம் எப்போதும் நூலகக் கட்டிடத்தைச் சூழ்ந்து காணப்பட்டனர். அவர்களுக்காக பல்வேறு பத்திரிகைகள், சஞ்சிகைகள், வார - மாத இதழ்கள், நாவல்கள், சிறுவர் சஞ்சிகைகள், அறிவுத்திறன் கொண்ட நூல்கள், மாணவருக்கான புத்தகங்கள், பயிற்சிக் கையேடுகள் எனப் பல்வகை எழுத்தாக்கங்களும் நூலகத்தில் கிடைக்க வழிசெய்யப்பட்டிருந்தன. வடபுலத்தில் யுத்தம் நடைபெற்ற காலகட்டத்தில் இந்நூலகத்தில் முதலுதவி வகுப்புகளும், தற்காப்புப் பயிற்சி நெறிகளும் ஊர் மக்களுக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன. யுத்த காலத்தில் பத்திரிகை வசதிகள் குன்றியிருந்த சூழ்நிலையில் கூட ஏழாலை சித்தி விநாயகர்

நூலகம் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இயங்கி வந்துள்ளது.

ஆரம்பகாலம் முதல் சேகரித்த பொக்கிஷங்கள் சுமார் 7000 வரை இருந்த நிலையில் தான், 1987 - 1991 காலகட்டத்தில், இந்திய இராணுவத்தின் சோதனைச் சாவடி இந்நூல் நிலையத்தை அண்டி அமைக்கப்பட்டது. இதன் போது நூலகத்தின் அருகில்கூட எவராலும் பாதுகாப்புக் காரணங்களால் போக முடியவில்லை. கையறு நிலையில் அங்கு இருந்த எமது முதுசங்கள் ஆயிரமாயிரமாக அழிவுற்றன. இந்திய இராணுவம் போனபின்பு சற்று சுதாகரித்து எழுந்த ஏழாலை சித்தி விநாயகர் நூலகம், தனது சேவையினை 1995 ஐப்பசி மாதம் வரை தடையின்றித் தொடர்ந்தது.
வலிகாமம் பாரிய புலப்பெயர்வின் பின்னர் அதன் நூலகச் சேவைகள் சிறிது காலம் பராமரிப்பின்றி கைவிடப்பட்டிருந்தது. யுத்தச் சூழலில் கட்டிடமும் நூல்களும் கவனிப்பாரற்று கறையான்களால் பாரிய சேதமடைந்திருந்தன. ஏழாலை மக்கள் மீண்டும் ஊருக்குத் திரும்பிவந்த பொழுது, அதுவரை சேர்த்து வைத்திருந்த சுமார் 7000 நூல்கள் கட்டிடத்தினுள்ளே நிலத்திலும், வெளித் தரையிலும் வீசியெறியப்பட்டு காற்றிலும் மழையிலும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுக் கிடந்தன. தீண்டுவாரற்றுக் கிடந்த ஏராளமான நூல்கள், பத்திரிகைகள் கறையானுக்குத் தீனியாகிவிட்டிருந்தன.

மக்களினதும் நிலையப் பொறுப்பாளர்களினதும் பொறுப்புணர்வினாலும், உணர்ச்சிப் பெருக்காலும், ஏழாலை சித்தி விநாயகர் நூலகம் மீண்டும் ஓரளவு புனரமைக்கப்பட்டு மீளவும், நூல் சேகரிப்பு முயற்சிகள் தொடங்கப் பெற்றன. தற்போது இந்நூலகத்தில் 2000 நூல்கள் வரை சேர்க்கப்பட்டுள்ளன. நூலகத்தை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு நீண்டகாலம் எடுக்கும் என்று கருதப்படுகின்றது.
தற்போதைய சூழலில் பத்திரிகைகள் வாசிப்பதற்கென முதியோர் சிலர் அங்கு வந்து செல்கின்றனர். பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் தமது ஆய்வுத் தேவைகளுக்காக அந்நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். மாலை மூன்று மணி முதல் ஏழு மணி வரை திறந்திருக்கும் இந்நூலகம் போதிய நூல்கள் இன்மையால், இரவல் வழங்கும் செயற்பாடுகள் முடுக்கிவிடப்படாமல் பெரும்பாலும் ஒரு உசாத்துணை நூலகமாகவே இன்று சேவையாற்றுகின்றது.
அண்மைக் காலத்தில் சிறுவர்களைக் கவரும் வகையில் சில புதிய சிறுவர் இலக்கியங்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன.
பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்களுக்குரிய விஷேட ஆய்வுக்குரிய புத்தகங்களும், பலகாலமாக பத்திரிகைகளில் வெளிவந்து வெட்டுத்துண்டுகளாகப் பராமரிக்கப்பட்டு வந்த ஆவணங்களின் பல தொகுதிகள் பத்திரிகை வெட்டுத்துண்டுக் கோவைகளாக இங்கே பேணப்பட்டு வந்துள்ளன.

ஏழாலை சித்தி விநாயகர் நூலகத்தின் பல சேவைகளுள் நூல் வெளியீட்டு நிகழ்வுகளும் குறிப்பிடத்தகுந்தவை. தமிழ்ப்பிரியா (காம்பொடிந்த மலர், 2009: ஒரு நியாயம் விழிக்கிறது, 2010), கு. றஜீபன் (புறநானூறு, பேசற்க, நகுநயம் மறைத்தல், 2014), ஏழாலைவாணி திருமதி செ. ஜெயவாணி (இப்போது சொல் எப்போது வந்த கவிதை நீ, 2011), இ. கணேசராஜா (சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம், 2015) ஆகியோரின் நூல்களின் வெளியீடுகளும் அறிமுக நிகழ்வுகளும் ஏழாலை சித்தி விநாயகர் நூலகத்தின் நூலக மண்டபத்தில் நூலகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

இந்தநூல் நிலையத்தை அமைப்பதில் ஆர்வத்துடன் செயற்பட்டவரும், இன்று தனது முதிய வயதிலும் நிலையத்தை கண்ணும் கருத்துமாக பாதுகாத்துப் பராமரித்து வருபவருமான திரு.இ. கணேசராஜா, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் உள்ளிட்ட பல பாடசாலைகளில் ஆசிரியராகவும், பின்னர் அதிபராகவும் பணியாற்றிய பின் ஓய்வு பெற்றவராவார்.

(தகவல் உதவி : ஏழாலை சித்தி விநாயகர் நூல் நிலையமும் ஆவணக் காப்பகமும்/மணிமொழி. 'எங்கட புத்தகங்கள்', மலர் 1 (4), ஜுலை 2021 : ப. 16 - 20).

(தொடரும்)



*நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.*

**நடேசன் இரவீந்திரன்**

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# தமிழ்ப் பௌத்த மீட்டுருவாக்கம்

இதுவரை நிலவி வந்த உலக ஒழுங்கு பாரிய மாற்றத்தை கண்டு வரும் செயலொழுங்குகள் முனைப்புடன் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் தமிழ்ப் பண்பாட்டு உருவாக்கத்தையும் அதன் விருத்திகளையும் பார்த்து வருகிறோம். ஏகாதிபத்திய நாடுகளும் அதன் தலைமைக் கேந்திரமான ஐக்கிய அமெரிக்காவும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்து, மீண்டெழுவதன் பொருட்டு ஆறேழு வருடங்களாக எடுத்து வரும் எத்தனங்கள் பற்றிப் பல தளங்களிலும் பேசப்படுகின்றன. தம்மை முந்திவிடக் கூடும் என முன்னாள் சோசலிச நாடான ருஷ்யாவைக் கருதி, அதனைப் பந்தாட நினைத்த உக்ரேன்ருஷ்ய யுத்தகளம் பாதகமான சமிக்ஞைகளுடன் இழுபட்டவாறுள்ளது; காலனித்துவப்படுத்தியவாறு உலகைத் தாம் கட்டியாளத் தொடங்குவதற்கு முன்னர் ஒட்டோமான் பேரரசு எனத் துருக்கியை மையமாகக் கொண்ட முஸ்லிம் சமூகம் திகழ்ந்த காரணத்தால் அரபுத்தேசம் பல நாடுகளாக சிதறடிக்கப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு இஸ்ரேல் எனும் நச்சு விதையையும் ஊன்றியிருந்தனர். எரிபொருள் வளக் கண்டுபிடிப்பின் பின்னர் 'முஸ்லிம் தேச' ஒன்றிணைவு சாத்தியப்படாத வகையில் மத்திய கிழக்கு நாடுகளைத் தமது இறுக்கமான கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு இஸ்ரேலின் தொடர்ந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஏகாதிபத்தியத் திணை உற்சாகமூட்டி வளர்த்து வந்தது. 'இஸ்ரேல்' என இல்லாதிருந்த தேசம் ஒன்றுக்குத் தமது மண்ணில் இரக்க மேலீட்டால் இடமளித்த தவறை உணர்ந்து கொண்ட பின்னர், பலஸ்தீன மக்கள் விட்டுக்கொடுப்பற்ற விடுதலைப்

போராட்டத்தை முன்னெடுப்பதன் பேரிலும் ஏகாதிபத்தியத் திணை மூச்சுத் திணறலுக்கு ஆட்பட்டவாறுள்ளது.

ஏகாதிபத்திய முகாம் மிகப் பெரும் சவாலை எதிர்கொண்டிருப்பது மக்கள் சீனத்திடம். அவர்கள் பொருளாதார முடக்கத்தில் திக்குமுக்காடிய போது சீனா தள்ளாட்டம் ஏதுமின்றி தொடர்ந்தும் விருத்திப் பாதையில் முன்னேறியவாறேதான் உள்ளது. இடையிட்டு ஏதும் நெருக்கடிகள் ஏற்பட்ட போதிலும் முதலாளித்துவ நாடுகள் சுதாகரித்து அடுத்த அடியெடுத்து வைப்பதை விடவும் மிக வேகமாகத் தனது தவறுகளைத் திருத்திக் கொண்டு மீண்டும் சீரான கதியில் முன்னேற்றத் திசையை நாடுகின்ற வேகம் மக்கள் சீனாவிடம் அதிகமாக உள்ளது. சோவியத் யூனியனை சிதறடிக்க வைத்ததைப் போல சீனாவின் சோசலிச முன்னெடுப்பையும் தகர்த்து விட இயலும் என்ற ஏகாதிபத்தியத் திணையின் எந்தவொரு முயற்சியும் பலிதமாகவில்லை.

குறிப்பாக, எல்லைப்புற நாடுகளுடன் மோதலை ஏற்படுத்துவதற்கு முழு அளவிலான முயற்சியை மேற்கொள்கின்றனர். முன்னதாக சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு அதன் இராணுவ முனைப்பும் ஒரு காரணமாக அமைந்திருந்தது. இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட ஏதாவதொரு நாட்டுடன் சீனாவையும் யுத்தத்தில் இறங்க வைத்து விட்டால் தங்களுக்கான இராணுவத் தளபாட விற்பனையும் அமோகமாக நடக்கும் யுத்தச் செலவில் சீனாவும் பின்னடையும் என ஏகாதிபத்தியத் திணை கருதுகிறது. அத்தகைய யுத்தம் சீனாவை மட்டுமன்றி ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாகக் கள மிறங்கும் அவர்களது நேச நாட்டையும் கூடப் பாதிக்கவே செய்யும்; இருப்பினும் உக்ரேனுக்கும் இஸ்ரேலுக்கும் உதவிகள் புரிந்து அவற்றைத் தூக்கி விடுவது போல உங்களையும் துவண்டு போகாமல் காவாந்து பண்ணக் காத்திருக்கிறோம் என்ற நம்பிக்கையை அவர்கள் நேச நாடுகளுக்கு வழங்கிய படியே உள்ளனர். என்னதான் உதவிகள் முட்டுக் கொடுப்பினும் உக்ரேனும் இஸ்ரேலும் இலகுவில் மீட்சி காண இயலாது என்பதை நேச நாடுகள் உணராமல் இல்லை.




Image Source - flashbooks.lk

அதைவிட மக்கள் சீனம் ஒவ்வொரு முரண் கூர்மைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களிலும் "எவரோ ஆதாயம் பெற நாங்கள் மோதி நாசப்பட வேண்டுமா? அதையும் மீறி யுத்தம் ஒன்றே வழியென்றால் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தாமல் அடங்க மாட்டோம்; எல்லை பிரச்சினையை உடனே தீர்க்க இயலாமல் போயினும் பொறுமையாக இரு தரப்புப் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதன் வாயிலாக எங்களது இரு நாடுகளும் வெற்றியீட்டும் சந்தர்ப்பத்தை உருவாக்குவோம். யுத்தம் நிரந்தர வெற்றியைத் தரப் போவதில்லை" என்று தனது அயல்நாடுகளுக்கு வலியுறுத்துவதனை மற்றைய தரப்பும் ஏற்க வேண்டியுள்ள நிர்ப்பந்தம் காரணமாக யுத்தம் தவிர்க்கப்பட்டு வருகிறது.

தவிர்க்கவியலாத ஒரு யுத்தகளம் பற்றிய நம்பிக்கையுடன் ஐக்கிய அமெரிக்கா தீவிரமான முயற்சியில் இறங்கி இருப்பது தைவானில். சீனா முழுமையிலும் அதிகாரம் செலுத்திய கோமிங்தாங் கட்சி அப்போதும் ஐக்கிய அமெரிக்கச் சார்புடன் இயங்கியது; சீனக்

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட புரட்சி மக்கள் சீனத்தைப் பூரண விடுதலைக்குரியதாக 1949 ஒக்டோபர் 1 ஆம் திகதி பிரகடனப்படுத்திய போது சீனாவின் ஒரு தீவான தைவானுக்குள் கோமிங்தாங் கட்சி ஒதுங்கிக் கொண்டது. பிரித்தானிய, போர்த்துக்கல் போன்ற நாடுகளது காலனிகளாக இருந்த ஹொங்கொங், மக்காவோ போன்ற தீவுகளைச் சமாதானமாகத் தாயகத்துடன் இணைத்ததைப் போல ஐக்கிய அமெரிக்காவின் காலனித் தீவாக உள்ள தைவானையும் யுத்தமின்றித் தாயகப் பெரு நிலப்பரப்புடன் ஒன்று சேர்க்க இயலும் என்ற நம்பிக்கை சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு உள்ளது; தைவான் மக்களிடமும் அத்தகைய விருப்பம் வளர்ந்து வருகிறது.

"தைவான் தன்னையொரு தனிநாடாக அறிவிக்காதவரை அதன் மீது யுத்தம் தொடுத்து அதனை இணைக்க மக்கள் சீனம் விரும்பவில்லை; அவசியமற்ற யுத்தத்தில் இறங்குவதற்கு நாங்கள் சோவியத் யூனியன் அல்ல. அதேவேளை, தனிநாடகப் பிரகடனப்படுத்தும் முயற்சியில் தைவான் இறங்கும் பட்சத்தில் யுத்தம் புரிவதில் இருந்து பின்வாங்கவும் மாட்டோம்" என்ற எச்சரிக்கையை மக்கள் சீனம் மீண்டும் மீண்டும் முன்வைத்து வருகிறது. யுத்தத்தைத் தவிர்த்தல் என்பது தனியே சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் இருந்து கற்றுக் கொண்ட விடயம் மட்டுமா? காலனித்துவ ஒடுக்குமுறையைத் தகர்த்து மக்கள் சீனம் விடுதலை பெற்ற மார்க்கத்துக்கும் இன்றைய நடைமுறைக்கும் தொடர்பில்லையா? இவற்றிலான திணை அரசியல் செயலொழுங்கு மிகுந்த கவனிப்புக்குரியது!

**சாதியமும் காலனித்துவமும் இணைந்து உருப்பெற்ற நிலப்பிரபுத்துவ முதலாளித்துவம்**

ஐரோப்பா மத்திய காலத்தின் இருண்ட யுகத்தில் விஞ்ஞான நோக்குக்கு விரோதமாகவும் வணிக மறுப்போடும் முடங்கிப்போய் இருந்த வேளையில் ஆசிய நாடுகளுக்குரிய அரபுஇந்திய சீன வணிகர்கள் உலக ஊடாட்டத்துடன் தத்தமது பிராந்தியங்களின் அறிவு வீச்சுகளைப் பரிமாறிக் கொள்பவர்களாக இருந்தார்கள்.

> ''தைவான் தன்னையொரு தனிநாடாக அறிவிக்காதவரை அதன் மீது யுத்தம் தொடுத்து அதனை இணைக்க மக்கள் சீனம் விரும்பவில்லை; அவசியமற்ற யுத்தத்தில் இறங்குவதற்கு நாங்கள் சோவியத் யூனியன் அல்ல. அதேவேளை, தனிநாடகப் பிரகடனப்படுத்தும் முயற்சியில் தைவான் இறங்கும் பட்சத்தில் யுத்தம் புரிவதில் இருந்து பின்வாங்கவும் மாட்டோம் என்ற எச்சரிக்கையை மக்கள் சீனம் மீண்டும் மீண்டும் முன்வைத்து வருகிறது.

அரபின் இரசாயனவியல், இந்தியாவின் பூச்சியம்தசமதானம்அட்சர கணிதம், சீனாவின் திசையறி கருவிவெடிமருந்துகாகிதம் என்பன உள்ளிட்ட பல்வகை விஞ்ஞானக் கருவூலங்கள் தேச எல்லைகள் கடந்து ஆசிய மக்களின் வாழ்வியல் விருத்தியை வளமூட்டியவாறு இருந்தன.

அதேவேளை,அவற்றின் மீதான நிலப்பிரபுத்துவ அமைப்புக்கான எல்லைப்படுத்தல்களும் இஸ்லாம்,இந்து,பௌத்தம் என்ற மதங்கள் ஏற்படுத்தியிருந்த வரையறைகளும் காரணமாக வாழ்வியல் நெறியாக விஞ்ஞான நோக்கு இணக்கம் பெறவில்லை. அதன் காரணமாக நிலப்பிரபுத்துவத் தளையிடல்களைத் தகர்த்துக் கொண்டு விரிந்த தளத்துக்கு விஞ்ஞானதொழில்நுட்ப விருத்தியை எடுத்துச் செல்ல இயலாமல் போனது. தனது இருப்புக்கு அச்சுறுத்தலாக அமையாத அளவில் விஞ்ஞானத்தை மதம் அனுமதித்தது என்ற வாய்ப்பே மதச் சிந்தனை எல்லைகளைத் தகர்த்துக் கொண்டு முழுமைப்பட்ட விஞ்ஞானப் பிரயோகங்களுக்குள் செல்ல இயலாத தடையாக ஆசிய நாடுகளுக்கு அமைந்தது.

விஞ்ஞானத் தேடல்களில் நாட்டம் கொள்ளும் அவசியம் ஐரோப்பியர்கள் வணிகத்தின் மீது

ஆர்வம் கொண்ட போது தான் அவர்களுக்கு ஏற்பட்டது. அதற்கு மதம் தடைவிதித்த போது அரசு,கல்வி என்பவற்றில் தலையிடாத வண்ணம் ‘மதசார்பின்மை’ என்பதனைச் செயலாக்க வேண்டும் என்ற போராட்டங்களை ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் முன்னெடுத்தனர். மதத்திலிருந்து பூரணமாக விடுவிக்கப்பட்ட விஞ்ஞானதொழிநுட்பகல்வி என்பவற்றின் மீதான ஆர்வமானது புதிய உலகம் படைக்கும் உத்வேகத்தை ஐரோப்பாவுக்கு வழங்கியிருந்தது. நிலத்துடன் பிணைக்கப்பட்ட பிராந்திய வரையறைக்குரிய நிலப்பிரபுத்துவ அமைப்பைத் தகர்த்துக் கொண்டு உலகெங்கும் வியாபித்த மூலதனத்தை முதன்மை உடையதாக்கிய முதலாளித்துவ அமைப்பு ஐரோப்பாவைப் புதிதாய்ப் புனைந்தது! அதே வீச்சுடன் பொதுவுடமைப் புத்துலகம் படைப்பதற்கான சோசலிசச் சமூக அமைப்பையும் ஐரோப்பா முன்னதாக உருவாக்கும் என்ற எதிர்பார்ப்பு நூற்றெழுபத்தைந்து வருடங்களின் முன்னர் மார்க்ஸ்,ஏங்கெல்ஸ் போன்றோரால் விஞ்ஞான பூர்வமாக எடுத்துரைக்கப்பட்டிருந்தது. அரை நூற்றாண்டுக்கு முன்னர் வரை அந்த நம்பிக்கை பலரிடமும் தளராமல் இருந்தது. மாறாக, முதலாளித்துவ மாற்றியமைத்தலில் பின்னடைந்திருந்த சீனா சோசலிசக் கட்டமைப்பில் துரித கதியிலான முன்னேற்றத்தை எட்டியுள்ளது.

சீன நிலப்பிரபுத்துவ அமைப்புக்கான மதமாக இயங்கிய பௌத்தம் இந்தியச் சமூகத்தால் வழங்கப்பட்டிருந்தது.சீனாவில் நிலவிய திணை மேலாதிக்கப் பேறான சீனத்தின் ஆதிக்கச் சாதி பிராமணரைக் கொண்டிராத இந்து மதப் பிரிவாகப் பரிணமித்திருந்த பௌத்தத்தைக் கையேற்றுத் தனது திணை அரசியலுக்கு உரிய மேலாதிக்கக் கடமையை முன்னெடுத்திருந்தது. திணை அரசியல் என்பது பேசுபொருளாக ஆகியிருக்கவில்லை என்ற போதிலும் மார்க்சியச் சிந்தனை வழிகாட்டலில் விடுதலைத் தேசியச்



ஜோதிராவ்புலே

Image Source - www.hindutamil.in

செயலொழுங்குகள் முன்னெடுக்கப்பட்டன; அந்த அனுபவத் தொகுப்பான மா ஒ சேதுங் சிந்தனை எனும் புத்தாக்கம் வர்க்க அரசியலினின்றும் வேறுபட்ட முழுச் சமூக சக்திக்கானது. மேலாதிக்கத் திணை அரசியலின் இயங்கு முறைமையைத் தமிழக வரலாற்றின் வாயிலாகப் பார்த்து வந்திருக்கிறோம். விடுதலைத் திணை அரசியலின் வடிவமாக மா ஒ சேதுங் சிந்தனை எவ்வகையில் புரிந்து கொள்ளத் தக்கது என்பது பற்றிப் பின்னர் (இறுதிப் பகுதியில்) பார்க்க இயலும்!

தமிழ் அனுபவமான திணை அரசியல் பற்றிய எந்தவொரு அருட்டுணர்வும் இல்லாத போதிலும் தமக்கான சொந்த அனுபவங்களை வடிவமைக்கின்ற போராட்டங்கள் அவர்களைத் திணை அரசியல் செயலொழுங்கின் பிரகாரம் இயங்க வழிப்படுத்துகின்றது. ‘எதிரியை அழித்தொழிப்பது’ என்ற நடைமுறையைக் கைவிட்டு திணை அரசியலுக்கான ‘அதிகாரத்தில் இருந்து வீழ்த்தப்பட வேண்டிய சமூக சக்தியின் மேலாதிக்கத்தைச் செயலிழக்கச் செய்தல்’ என்ற செயற்பாட்டையே இன்றைய சீனா கையாள்கிறது. முழுமைப்பட்ட மேலாதிக்கத்துக்கான கருத்தியலைப் பௌத்தத்தின் வடிவில் சீனா இந்தியாவிடமிருந்து

கையேற்பதற்கு முன்னர் கன்பூசியஸ், தாஓ மார்க்கங்கள் அங்கே செயற்பட்டு வந்தன. தமிழுக்குரிய ஆசீவகம் போல முழுமைப்பட்ட சமத்துவத்தை அவை பேசவில்லையெனினும் சாதிய வர்க்க மேலாதிக்கத்தை அவை வலியுறுத்தியனவல்ல; அதனாலேயே நிலப்பிரபுத்துவ அமைப்பில் பின்னடைந்திருந்தன. வலுக்குன்றிய குரலாகத் தொடர்ந்த அந்தச் சிந்தனை முறைமையும் சீனாவின் விடுதலை மார்க்கத்தில் சிறியளவான பங்களிப்பை நல்கியிருக்க இயலும்.

அதற்கப்பால், சீனா முழுமையாக ஒரே ஏகாதிபத்திய நாட்டால் காலனித்துவப் படுத்தப்பட்டிருக்கவில்லை என்ற வேறுபாடு பிரதானமான அம்சமாகும். இந்தியாவின் மிகப்பெரும் பகுதி பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காலனியாக இருந்தது. சில சமஸ்தானங்கள் நீடித்திருக்க அனுமதிக்கப்பட்ட போதிலும் அவையனைத்தும் பிரித்தானியாவின் ஏவலுக்குப் பணிந்து இயங்கியவையே, மிக மிகச் சிறிய நிலப்பகுதிகள் மட்டும் பிரான்ஸ், போத்துக்கல் ஆகியவற்றின் காலனித்துவத்துக்கு ஆட்பட்டிருந்தன.

மிகுந்த வளப்பெருக்கம் எட்டப்பட்டிருந்த போதிலும் நிலப்பிரபுத்துவ ஊளைச் சதையாகச் செயலிழப்புக்கு உள்ளாகியிருந்த இந்தியா பல சிற்றரசுகளாக சிதறிக்கிடந்த போது வணிகத்துக்கு வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனி சிறிது சிறிதாக ஆளும் நிலைக்கு மாறியது. ஒரு பேரரசாக முகலாய ஆட்சிப்பரப்பின் கடைசி மன்னருடன் மிகப் பவ்வியமாகவே கம்பனி நிர்வாகிகள் ஊடாட்டம் கொண்டிருந்தார்கள் என்பதனை ''கடைசி முகலாயன்: ஓர் அரச குலத்தின் வீழ்ச்சி, டெல்லி, 1857'' எனும் நூலில் வில்லியம் டேல் ரிம்பிள் எடுத்துக் காட்டியுள்ளார். முன்னர் வெளிவராத பல ஆவணங்களைப் பல இடங்களிலும் தேடிச் சென்று தொகுத்து வழங்கியிருக்கும் இந்த நூல் காலனித்துவப்படுத்தலின் அடிப்படைகளை வெளிப்படுத்தும் அரிய பணியைச் செய்துள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐம்பதாம் ஆண்டுகள் வரை மன்னருக்குப் பணிந்தவர்களாக மூத்த பிரித்தானிய அதிகாரிகள் இருந்துள்ளனர். இந்திய உயர் பண்பாட்டில், இஸ்லாம் - இந்து ஒற்றுமையின்பால் ஈடுபாடு கொண்டு வெள்ளை இஸ்லாமியர், வெள்ளை இந்துக்கள் என இங்கேயே மணமுடித்தும் வாழ்ந்தனர். ஆயினும் தொழிற்புரட்சியின் வீறுடன் மாற்றம் பெற்று வந்த இளம் அதிகாரிகள் மன்னரை அவமதிக்கும் நிலைக்கு வளந்திருந்தனர். அதன் காரணமாக புரட்சிக்குத் தலைமை ஏற்கும் படி சிப்பாய்கள் கோரிய போது மன்னர் அதனை ஏற்க வேண்டியவரானார். மனிதத் தனமற்ற கொடூரங்களுடன் அந்தப் புரட்சி அடக்கப்பட்டதுடன் கடைசி முகலாய மன்னரான ஜாஃபரும் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் முழுமையான காலனித்துவ



அயோத்திதாசர்

Image Source - www.nakkheeran.in

மயப்படலுக்கு முன்னர் இருந்த மத ஒற்றுமை, பன்மைத்துவம் என்பன காணாமல் போனது பற்றி கூறும் மேற்படி நூலின் வாசகங்கள் மனங்கொள்ளத்தக்கவை: “காலம் சென்ற முகலாயர்களின் பன்மைத்துவ மற்றும் தத்துவார்த்தக் கலப்பு நாகரிகத்தை துடைத்தெறிந்துவிட்டு, அதனை வேருடன் பிடுங்கிச் சென்ற பிரிட்டிஷாரின் வழிமுறைகளால் அதிகம் வருத்தப்படவும் வேண்டியிருக்கிறது” (வில்லியம் டேல்ரிம்பிள், 2017. “கடைசி முகலாயன்: ஓர் அரச குலத்தின் வீழ்ச்சி, டெல்லி, 1857” தமிழில்: இரா.செந்தில், எதிர் வெளியீடு, பொள்ளாச்சி .ப .655).

ஒன்று கலந்து வாழ்ந்த இஸ்லாமிய - இந்து மக்களைப் பரம வைரிகள் போல பிளவுபடுத்தி எதிரெதிர் முகாம்களாக ஆக்கியதைப் போன்றே கிராமங்களில் கொண்டும் கொடுத்தும் ஊடாடிய பல வேறு சாதிப் பிரிவுகளைக் கூட எதிரிகளாக உணர வைக்கும் நடைமுறைகளைப் பிரித்தானியர் ஆட்சி கையாண்டது. வேறுபட்ட சாதிகள் என்ற வாழ்வியல் ஊடாக பொருளுற்பத்தி உறவு சார்ந்த ஊடாட்டம் முதலாளித்துவ மாற்றத்தில் சிக்கலான வடிவ மாற்றத்தைப் பெறத்தக்கது. இயல்பாக அந்த மாற்றம் இங்கு ஏற்படாமல் பிறர் தலையீடு 'சாதிகளைக் கையாள முற்பட்ட போது' மேலும் சிக்கலான தன்மையைப் பெற்றது. நிலப்பிரபுத்துவ முறைமையை முற்றாகத் தகர்க்காமல் ஊடறுத்து வந்த முதலாளித்துவம் தொடர்ந்த விடுதலைப் பாதைக்கு பலவேறு தடைகளை ஏற்படுத்தும் வாய்ப்பைப் பெற்று உலகின் இறுதி ஏகாதிபத்தியமாக இந்தியாவை இயங்கு வகை செய்துள்ளது.

## ஆதித் தமிழர் மதம்

முதலாளித்துவ மாற்றம் பெறும் வாய்ப்புள்ளோரில் ஒரு தரப்பு ஏகாதிபத்தியத்துடன் கூட்டமைத்து இயங்கியது. தாமே ஆட்சியாளராக விரும்பிய பிரிவினர் காங்கிரஸ் கட்சியை உருவாக்கினர். அது தோற்றம் பெற்ற 1885 ஆம் ஆண்டிலேயே பிராமணர்கள் மீண்டும் மேலாதிக்கத்தைப் பெறுவதற்காகவே சுதந்திரம் கோருகின்றனர் எனும் எதிர் தேசியக் குரலை தமிழகத்தில் அயோத்திதாசரும் மராட்டியத்தில் ஜோதிராவ்புலேயும் முன்வைத்தனர். தலித் அரசியலுக்கு உரிய முதல் ஆளுமையாக அயோத்திதாசர் திகழ்ந்த போதிலும் தமிழின் தலித் அரசியல் எழுச்சி இருபதாம் நூற்றாண்டின் கடைக் கூறிலேயே சாத்தியப்பட்டது. சாதியத்துக்கு எதிரான போர்க்குரலாக இருந்த, இடைச் சாதியினரான ஜோதிராவ்புலே தொடக்கி வைத்த எதிர் தேசிய இயக்கப் பரிணமிப்பாக முப்பதாம் ஆண்டுகளிலேயே மராட்டியத்தில் தலித் அரசியல் எழுச்சி வீறுகொண்டு எழுவதற்கான ஆளுமையாக அம்பேத்கர் தோற்றம் பெற்று இயங்கி வந்தார். முப்பதாம் ஆண்டின் நடுக்கூறில் "இந்துவாகப் பிறந்தது எனது குற்றமல்ல,ஒரு இந்துவாக நான் சாக மாட்டேன்" என்று பிரகடனப்படுத்திய அம்பேத்கர் இரண்டு தசாப்தங்களின் பின்னர் (இறப்பதற்குச் சில மாதங்களுக்கு முன்னர், 1956 ஆம் ஆண்டில்) இலட்சக் கணக்கான ஆதரவாளர்களுடன் பௌத்த மதத்தைத் தழுவினார்.

பிரமாண்டமான இந்த நிகழ்வு நடந்தேறுவதற்கு உந்துதலைத் தமிழகம் அரை நூற்றாண்டின் முன்னரே ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. கொழும்புக்கு வந்து அயோத்திதாசர் பௌத்தத்தைத் தழுவுவதற்கு ஒல்கொட் உதவியுள்ளார். இருப்பினும், ஒல்கொட்டின் பிரசாரங்களால் தான் அயோத்திதாசர் பௌத்தத்தைத் தேர்ந்தெடுத்தார் என்பதற்கில்லை. அவரது கற்றலூடாகப் பெற்ற அறிவும் தான் இயங்கிய மக்களின் வழக்காறுகளில் புதைந்திருந்த பௌத்த மதக் கூறுகளும் பௌத்த மதத்தைத் தழுவுவதற்கு அயோத்திதாசரைத் தூண்டியுள்ளன.

சாதி ஒடுக்கு முறையில் இருந்து விடுதலைக்கான மார்க்கத்தைத் தேடியவருக்கு இலங்கையில் பௌத்த மறுமலர்ச்சிக்குப் பேரியக்கத்தை முன்னெடுத்த ஒல்கொட் ஆதர்சமாக அமைந்தார். வைதிகமதம் சாதிய வக்கிரங்களை இறுகப் பற்றிப் பரப்புரை செய்த போது அதற்கு எதிரான போர்க்குரலாக அப்போது பௌத்தம் உயிர்த் துடிப்புடன் இயங்கியது. அத்தகைய இயக்க வலு சமணத்துக்கு அமைந்திருப்பின் அவர் தழுவிக் கொண்ட மதமாக சமணம் அமைந்திருக்கும். இந்து மதத்தை ஒழித்துக் கட்டுவதற்கு எந்த மதத்தைத் தழுவுவது சாலச் சிறந்தது என இரண்டு தசாப்தங்களாகத் தேடலை மேற்கொண்டவர் அம்பேத்கர். தமிழகத்தில் பேசுபொருளாக இருந்த பௌத்தம் கூடுதல் பொருத்தமுடையது எனக் கண்ட போது அதனை ஆழமாகக் கற்று புத்தரின் மூலக் கோட்பாடுகளில் ஆழ்ந்த தேடுதலை மேற்கொண்டார். இடையிட்டு இலங்கை,பர்மா,சியாம் (தாய்லாந்து) போன்ற நாடுகளில் பௌத்த மதம் பெற்றிருந்த 'திரிபுகளை' அவர் நிராகரித்தார். புத்தரின் உணர்வு நிலைக்கு உரிய 'நவ பௌத்த' சிந்தனை முறைமையை அம்பேத்கருடையது!

இதனின்றும் வேறுபட்டது அயோத்திதாசருக்குரிய பௌத்தத்தின் மீதான நாட்டம். சடங்காசாரங்களுக்கு அப்பாற்பட்ட தூய பௌத்தக் கோட்பாடுகளின் மீது அம்பேத்கரின் நாட்டம் இருந்ததென்றால் மக்களிடமிருந்த வழக்காறுகளின் ஊடாகவே அயோத்திதாசர் பௌத்தத்தை மீட்டுருவாக்கம் செய்தார். இடைக்காலத்தில் பேசுபொருளாக இருந்த (தமிழர் மத்தியில் வணிகர்களின் ஒரு தரப்பினர் தொடர்ந்து பின்பற்றிய) சமணத்தையும் கூட அயோத்திதாசர் பௌத்தம் என்பதாகவே அணுகினார். பௌத்தர்கள், சமணர்கள் ஆகியோரிடம் காணப்பட்ட வழக்காறுகளில் இருந்து இந்துக்களால் கையேற்கப்பட்ட கார்த்திகை விளக்கீடு, தீபாவளிப் பண்டிகை போன்றவற்றின் மூல மத உள்ளடக்கத்தை வலியுறுத்துகிறவராக அவர் இருந்தார்.

பௌத்த மதமானது சைவ மதத்தால் ஒடுக்கப்பட்ட போது அதனைப் பின்பற்றிய மக்கள் ஒடுக்கப்பட்ட சாதியினராக ஆக்கப்பட்டனர் என்பது அவர் கருத்து. அந்த மக்கள் பிரிவினரே 'ஆதி திராவிடர்கள்' என்றவர், அந்த வகையில் பூர்வத் தமிழர் மதம் பௌத்தமே எனவும் வலியுறுத்தினார். பௌத்த மூல நூலான திரிபிடகத்தின் தமிழாக்கப்பட்ட வடிவமே திருக்குறள் என்ற கருத்தை அயோத்திதாசர் கொண்டிருந்தார். உண்மையில் 'திரிக்குறள்' என்பதே மருவித் 'திருக்குறள்' என அழைக்கப்படுவதாகக் கூறுவார் அயோத்திதாசர். அயோத்திதாசரின் (20.5.1845-5.5.1914) காலத்தில் தமிழரின் பூர்வ மதமான ஆசீவகம் மீள் கண்டுபிடிப்புச் செய்யப்படவில்லை. சமணம், பௌத்தம் போல சமகாலத்தில் இயங்கிய ஆசீவகம் அவை இரண்டை விடவும் சில வருடங்களால் முற்பட்டது. வேகமாக தனது கோட்பாடுகளைப் பரப்புரை செய்து புத்தர் முன்னேறி வந்த போது மிகுந்த கவர்ச்சியுடன் பலராலும் ஏற்கப்பட்ட மதமாக ஆசீவகம் இருந்தது பற்றி சற்று எரிச்சலுற்றார் என்ற பதிவு உள்ள அளவில் கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வீச்சுள்ள மதமாக அது இருந்துள்ளது. அதனை மீள்கண்டுபிடிப்புச் செய்து வெளிப்படுத்திய ஏ. எல். பசாம் தமிழின் ஊடாகவே பெரும்பாலும் கண்டறிந்தார் என்ற வகையில் தமிழகத்தில் கள ஆய்வில் ஆசீவகத்தின் உயிர்த் துடிப்புக்குரிய மிச்சம் மீதிகளைத் தேடினார் பேராசிரியர் க. நெடுஞ்செழியன் (15.6.1944-4.11.2022).

நெடுஞ்செழியனின் வெளிப்பாடுகள் உணர்த்தும் ஒரு பிரதான அம்சம், ஆசீவகம் தொடர்ந்து இன்றுவரை மாற்றுவடிவத்துடன் இயக்கம் கொண்டுள்ளது என்பதாகும். அவற்றை உள்வாங்கியபடி அயோத்திதாசரை மீள்வாசிப்புக்கு உள்ளாக்குவோமாயின் தமிழரின் பூர்வ மதம் (பௌத்தம்ஆசீவகம்) குறித்த பல புதிர்கள் மேலும் மேற்கிளம்பி வர இடமேற்படலாம்!

## பௌத்தத்தில் இருந்து விடுதலைத் தேசியத்திற்கு

வேர்களைத் தேடிப் புதிய தடங்களை அவற்றின் ஊடாகக் கண்டடையும் முயற்சி ஒரே தளத்திலே தான் இயக்கம் பெறும் என்பதற்கில்லை. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான வேர்களைத் தேடும் முயற்சியில் அயோத்திதாசர் கண்டடைந்த பௌத்தம் இன்னொரு தேவை சார்ந்தும் நாட்டங்கொள்ளப்பட்டது. அவரது சமகாலத்தில் அவருடன் இணைந்தும் தனித்தும் பௌத்த சங்கத்தை உருவாக்கி லட்சுமி நரசு, சிங்கார வேலர் போன்றோர் பொதுநெறியாக விடுதலை மார்க்கத்தை கண்டடைய முயன்றனர். இந்த முயற்சியின் ஒரு தசாப்தத்துக்குப் பின்னர் சிங்கார வேலர் நிதர்சன உலகை மாற்றியமைக்கும் விடுதலை மார்க்கமாக மார்க்சியத்தை வரித்துக் கொண்டார்.

லட்சுமி நரசு பௌத்தம் குறித்து ஆழமான ஆய்வுகளை வெளிப்படுத்தினார். அவரது ஆக்கங்களே பௌத்தத்தை நாடுவதற்கான முழுமைப்பட்ட உந்துதலைத் தனக்கு வழங்கியதாக அம்பேத்கர் கூறியிருந்தார். சாதியத் தகர்ப்புக்கான மார்க்கத்தை வழங்கிய பௌத்தம் காலனித்துவத் தகர்ப்புக்கான வழிகாட்டலையும் சாத்தியப்படுத்தியது என்பதும் இந்து மதத்தை ஒழித்துக்கட்டுவதற்காகப் பௌத்தத்தைத் தழுவிய அம்பேத்தர் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்த அணியினரிடமிருந்து அதற்கான உந்துதலைப் பெற்றிருந்தார் என்பதும் ஆழ்ந்த தேடலுக்கு உரியன.
சாதியம், காலனித்துவம் தொடர்பான விவாதங்களை மேலும் மூன்று இயல்களினூடாகத் தொடர வேண்டிய அவசியம் உள்ளது. தேடலைத் தொடர்வோம்!

(தொடரும்.)

*இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.*



**இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்**

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணத்தின் நான்கு பிரிவுகளும் தீவுகளும்

இந்தத் தொடரின் சென்ற இரண்டு கட்டுரைகளில் லெயுசிக்காம் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படத்தின் சில அம்சங்கள் குறித்து ஆராய்ந்தோம். இனி யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் பல்வேறு பிரிவுகளை விவரமாகக் காட்டும் நிலப்படங்கள் தரும் தகவல்கள் குறித்துப் பார்க்கலாம்.

லெயுசிக்காமின் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படத்துக்கு அடுத்ததாக யாழ்ப்பாணப் பட்டினத்தின் நான்கு பிரிவுகளையும் அதற்கு அயலிலுள்ள தீவுகளையும் ஒருங்கே காட்டும் நிலப்படம் உள்ளது (படம்1). ஒல்லாந்தின் தேசிய ஆவணக்காப்பகத்தில் '4.VELH 328.13' என்னும் இலக்கத்தையுடைய இந்த நிலப்படம் ஒரு நீளமான தலைப்பைக் கொண்டுள்ளது. இதை, "யாழ்ப்பாணப் பட்டினத்தின் நான்கு பெரும் பிரிவுகளையும் அருகிலுள்ள மக்கள் வாழுகின்றனவும் வாழாதனவுமான தீவுகளையும், ஒவ்வொரு பிரிவினதும் அளவையும், அவற்றில் எத்தனை கோவிற்பற்றுகளும் கிராமங்களும் உள்ளன என்பதையும், அவற்றின் பெயர்கள், முக்கியமான சாலைகள், குளங்கள், யானைப் பந்திகள், ஒவ்வொரு கிராமத்துக்குமுரிய தேவாலயங்கள் என்பவற்றைத்



படம்-1: லெயுசிக்காம் நிலப்படத் தொகுப்பிலுள்ள, யாழ்ப்பாணப் பட்டினத்தின் நான்கு பெரும் பிரிவுகளையும் தீவுகளையும் காட்டும் நிலப்படம்.

தனித்தனியாகவும், குளங்களை நீலநிறத்திலும் காட்டும் நிலப்படம்" எனத் தமிழில் கூறலாம். இத்தலைப்பு நிலப்படத்தின் உள்ளடக்கத்தை விவரமாக விளக்குகிறது.

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் நான்கு பிரிவுகளான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகியவற்றையும் வேலணைத்தீவு, காரைதீவு, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு ஆகிய ஏழு தீவுகளையும் தனித்தனியாகக் காட்டும் நிலப்படங்களும் அடங்குகின்றன. எனவே அப்பகுதிகளுக்குச் சிறப்பான விவரங்களை இனி வரக்கூடிய கட்டுரைகளில் விளக்குவோம். இந்தக் கட்டுரையில் தனித்தனிப் பிரிவுகளின் நிலப்படங்களில் இல்லாத தகவல்கள் அல்லது அந்நிலப்படங்களினூடாகப் போதிய அளவு விளக்கமுடியாத விடயங்கள் பற்றியும் நிலப்படம் காட்டும் அனைத்துப் பகுதிகளுக்கும் பொதுவான விடயங்கள் குறித்தும் பார்க்கலாம். இந்தக் கட்டுரையில் கையாள எடுத்துக்கொண்ட நிலப்படமும் தொகுப்பில் இதற்குப் பின்னர் வருகின்ற நிலப்படங்களும் அக்காலத்து நிர்வாகப் பிரிவுகளையும் அவை தொடர்பான குறிப்புகளையும் இயற்கையானவையும் மனிதரால் உருவாக்கப்பட்டனவுமான அம்சங்களையும் துல்லியமாகக் காட்டுகின்றன. இதனால், மேற்படி நிலப்படங்களே இலங்கையின் முதல் விவரமான நிலவுருவப் படங்களாகக் கொள்ளப்படலாம் என்ற கருத்து உண்டு[1].

## கடல்நீரேரிகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குள்ளும் அதை அண்டியும் பல கடல்நீரேரிகள் காணப்படுகின்றன. வடமராட்சியை வலிகாமம், தென்மராட்சி ஆகியவற்றிலிருந்து பிரிப்பது தொண்டமானாறு நீரேரி எனவும், வலிகாமத்துக்கும் தென்மராட்சிக்கும் இடையில் உள்ளது உப்பாறு எனவும் ஆனையிறவுக்கு மேற்கே குடாநாட்டுக்கும் தலைநிலத்துக்கும் இடையிலும் தொடர்ந்து வேலணை, காரைநகர் ஆகிய தீவுகளுக்கும் வலிகாமத்துக்கும் இடையிலும் அமைவது

யாழ்ப்பாணக் கடல்நீரேரி எனவும், ஆனையிறவுக்கும் சுண்டிக்குளத்துக்கும் இடையில் இருப்பது சுண்டிக்குளம் நீரேரி எனவும் தற்காலத்தில் அழைக்கப்படுகிறது. போர்த்துக்கேய, ஒல்லாந்த ஆவணங்களிலும் அக்கால நூல்களிலும் இவை அனைத்தையும் ஆறுகள் எனவே குறிப்பிட்டனர். இவற்றுள் தொண்டமானாறு, உப்பாறு ஆகிய நீரேரிகளின் தமிழ்ப் பெயர்களும் ஆறு என்ற பின்னொட்டைக் கொண்டுள்ளன. இங்கே எடுத்துக்கொண்ட லெயுசிக்காமின் நிலப்படத்தில் பெரும்பாலான நீரேரிகளுக்குக் குறிப்பான பெயர்கள் தரப்படவில்லை. ஆனால், தொண்டமானாறு நீரேரியின் கடலுக்கு அண்மித்த பகுதியைத் தொண்டமானாறு (*Tondemanar*) என்ற தமிழ்ப் பெயராலேயே குறிப்பிட்டுள்ளனர். இது, மேற்படி பெயர் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்துக்கு முன்பிருந்தே புழக்கத்திலிருந்ததைக் காட்டுவதாகக் கொள்ளலாம். ஆனாலும், இதன் உட்பகுதியை, "ஏரி" எனப் பொருள்படும் "*Lack*" என்னும் ஒல்லாந்தச் சொல்லால் மட்டுமே குறித்துள்ளனர். உப்பாறுக்குத் தமிழ்ப் பெயரை அவ்வாறே நிலப்படத்தில் பயன்படுத்தவில்லை. ஆனால், அதே பொருள் தரக்கூடிய ஒல்லாந்தச் சொல் (*Zoute Revier*) பயன்பட்டுள்ளது. உப்பாறு என்ற தமிழ்ப் பெயரை மொழிபெயர்த்து நிலப்படத்தில் பயன்படுத்தினரா அல்லது ஒல்லாந்தச் சொல்லிலிருந்து தமிழ்ப் பெயர் உருவானதா என்பது தெளிவில்லை. மற்றைய நீரேரிகளுக்கு நிலப்படத்தில் பெயர் குறிப்பிடவில்லை.


## தீவுகள்

ஒல்லாந்தரின் இந்தியப் பகுதிகளுக்கான ஆளுநர் நாயகம் ரைக்குளோஃப் வான் கூன்ஸ் 1658 இல் யாழ்ப்பாணத்தின் கட்டளைத் தளபதி அந்தனி பவிலியனுக்கு எழுதிய வழிகாட்டற் குறிப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகத்துக்கு உட்பட்டதாக மக்கள் வாழுகின்ற எட்டுத் தீவுகளும் மக்கள் வாழாத ஐந்து தீவுகளும் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மேற்படி ஆவணத்தின்படி மக்கள் வாழும் எட்டுத் தீவுகள் 1) காரைதீவு (அம்ஸ்டர்டாம்), 2) வேலணைத்தீவு (லேடன்), 3) புங்குடுதீவு (மிடெல்பேர்க்), 4) நெடுந்தீவு (டெல்ஃப்ட்), 5) நயினாதீவு (ஹார்லெம்), 6) அனலைதீவு (ரொட்டர்டாம்), 78) இரணைதீவு (ஹூர்ன் - என்குயிசென்) என்பனவாகும். மக்கள் வாழாத தீவுகள் 1) எழுவைதீவு, 2) வறண்ட தீவு, 3) பாலைதீவு, 4) கவுச்சே, 5) கச்சத்தீவு என்பன.[2] இங்கு கவுச்சே எனக் குறிப்பிடப்படும் தீவு எது எனத் தெரியவில்லை. நெடுந்தீவுக்கும் பாலைதீவுக்கும் இடையில் அமைந்துள்ள காக்கரத்தீவாக இது இருக்கக்கூடும். 1974 ஆண்டில் இந்திய, இலங்கை அரசாங்கங்களிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி கச்சத்தீவு இலங்கைக்கு உரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோதும், அவ்வப்போது இத்தீவைத் திரும்பப் பெற வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாட்டில் எழுவது வழக்கம். ஆனால், யாழ்ப்பாணத்தை ஒல்லாந்தர் கைப்பற்றிய காலத்திலேயே (1658) இத்தீவு யாழ்ப்பாணத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்ததை மேற்படி குறிப்புத் தெளிவாகக் காட்டுகிறது. ஆனாலும், லெயுசிக்காம் தொகுப்பிலுள்ள எந்தவொரு நிலப்படமும் இத்தீவைக் குறித்துக் காட்டவில்லை. இது மக்கள் வாழாததாகவும் பிற வகைகளில் முக்கியத்துவம் குறைந்ததாகவும் அளவிற் சிறிதாகவும் இருந்தது இதற்குக் காரணம் ஆகலாம்.

மேற்படி குறிப்பிலிருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்தில், ஓரளவு பெரிய தீவுகளுள் ஒன்றான எழுவைதீவும் மக்கள் வாழாத ஒரு தீவாகவே இருந்துள்ளதாகத் தெரிகிறது.[3] நிலப்படத்தில் இதற்கு ஒல்லாந்தர் வழங்கிய "பயனற்ற தீவு" எனப் பொருள்படக்கூடிய *Woest Eijland* என்னும் ஒல்லாந்தப் பெயர் காணப்படுவது இதை ஓரளவு விளக்குகிறது.

போர்த்துக்கேயரும் இதைப் "பாலைநிலத் தீவு" என்னும் பொருளில் "இல்கா டெசெர்ட்டா" (*Ilha Deserta*) என அழைத்தனர்.[4] ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்தில் எழுவைதீவில் மக்கள் வாழாததாலேயே, ஏனைய தீவுகளுக்கு இட்டதுபோல், எழுவை தீவுக்குத் தமது நாட்டின் நகரமொன்றின் பெயரை வழங்கவில்லை எனத் தோன்றுகிறது. மேற்படி வான் கூன்சின் குறிப்பின்


காலத்திலிருந்து *60* ஆண்டுகள் *(1658 - 1719)* கழிந்த பின்னரே லெயுசிக்காமின் நிலப்படங்கள் வரையப்பட்டுள்ளன. இக்காலப் பகுதியில் எழுவைதீவில் மக்கள் குடியேறியிருக்கக்கூடும். நிலப்படத்தில், மண்டைதீவை ஒரு தனித் தீவாக வரைந்து காட்டியிருந்தாலும், நிலப்படத்தின் விளக்கக் குறிப்பில் அதைத் தனியாகப் பெயர் குறித்துப் பட்டியலிடவில்லை. இது தனிக் கோயிற்பற்றாக இல்லாமல் அல்லைப்பிட்டிக் கோயிற்பற்றின் ஒரு பகுதியாக இருந்ததால் பட்டியலில் தனியாகச் சேர்ப்பதைத் தவிர்த்திருக்கலாம். அதேவேளை *1658* ஆம் ஆண்டில் வான் கூன்ஸ் எழுதிய குறிப்பிலும் தீவுகளைப் பட்டியலிடும்போது மண்டைதீவை ஒரு தீவாகக் குறிப்பிடவில்லை. அக்காலத்திலும், அதை லெய்டன் தீவின் (வேலணைத்தீவு) ஒரு பகுதியாகக் கருதியதாகவே தெரிகிறது. மேலே குறிப்பிட்ட தீவுகளுள் நெடுந்தீவு, இரணைதீவு, பாலைதீவு, கவுச்சே, கச்சத்தீவு என்பன நிலப்படத்தில் இல்லை. இவை குடாநாட்டிலிருந்து தொலைவில் இருப்பதால் நிலப்படத்தில் அடங்காமல் இருந்திருக்கலாம். ஆனாலும், இந்த நிலப்படம் பெரிய தீவுகளுடன் அண்டியிருக்கும் பல சிறிய தீவுகளைப் பெயர் குறித்துக் காட்டுகிறது. மேற்படி தீவுகளைப் பெயர் குறித்துக்காட்டும் மிகப்பழைய நிலப்படம் இதுவே. யாழ்ப்பாணத்துக்கும் மண்டைதீவுக்கும் இடையிலுள்ள சிறுத்தீவு, வேலணைத் தீவுக்கும் புங்குடுதீவுக்கும் இடையில் உள்ள நரியன்புட்டி, கண்ணாத்தீவு, பெரிய கண்ணாத்தீவு, சின்னக்கண்ணாத்தீவு, வாரிப்புட்டி ஆகியவையும் புங்குடுதீவை அண்டி கேரதீவு, பள்ளத்தீவு, குறிகாட்டுவான், நடுவில்துருத்தி என்பவையும் அனலைதீவுக்கு அருகில் புளியந்தீவு, பருத்தித்தீவு ஆகியனவும் காரைநகருக்கு அருகில் துருத்துப்புட்டியும் தனித்தனியான தீவுகளாகக் காட்டப்பட்டுள்ளன. (படம்2, 3)



படம்-2: லெயுசிக்காம் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தீவுப்பகுதி.

யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படத்தில் நிர்வாகப் பிரிவுகளான கோவிற்பற்றுகள் குறிக்கப்பட்டிருப்பதுபற்றி ஏற்கெனவே குறிப்பிட்டோம். இந்த நிலப்படம் கோவிற்பற்றுகளுடன் அவற்றின் துணைப்பிரிவுகளான ஊர்களின் பெயர்களையும் அவற்றின் எல்லைகளையும் காட்டுகிறது. நிலப்படத்தில் தரப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும் பிரிவுகளான வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்பவற்றிலும் தீவுப் பகுதியிலும் இருந்த கோவிற்பற்றுப் பிரிவுகள் தனித்தனியே பட்டியலிடப்பட்டுள்ளன. இதன்படி, வலிகாமத்தில் *14* பிரிவுகளும் வடமராட்சியில் *3* பிரிவுகளும் தென்மராட்சியில் *5* பிரிவுகளும் பச்சிலைப்பள்ளியில் *4* பிரிவுகளும் தீவுப் பகுதியில் *7* பிரிவுகளுமாக மொத்தம் *33* பிரிவுகளின் பெயர்கள் பட்டியலில் உள்ளன. குடாநாட்டின் கோவிற்பற்றுப் பிரிவுகளைப் பற்றியும் அவற்றின் துணைப்பிரிவுகளைப்

பற்றியும் பெரும் பிரிவுகளைத் தனித்தனியாகக் காட்டும் நிலப்படங்களை விவரிக்கும்போது பார்க்கலாம். இங்கே தீவுப் பகுதியின் பிரிவுகளை எடுத்துக்கொள்ளலாம். விளக்கக் குறிப்பின்படி தீவுப் பகுதியில் மொத்தம் 7 கோவிற்பற்றுப் பிரிவுகள் உள்ளன. இவற்றுள் வேலணைத்தீவில் மட்டும் ஊராத்துறை, வேலணை, அல்லைப்பிட்டி ஆகிய மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன. காரைதீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு ஆகிய தீவுகள் ஒவ்வொன்றும் தனித்தனியான கோவிற்பற்றுப் பிரிவுகள். பெரிய தீவுகளுள் ஒன்றான நெடுந்தீவு இந்தப் பட்டியலில் இல்லை. ஆனால், லெயுசிகாம் தொகுப்பிலுள்ள வேறு நிலப்படங்களில் நெடுந்தீவில் தேவாலயம் காட்டப்பட்டுள்ளது.



படம்-3: லெயுசிக்காம் நிலப்படத்தில் உள்ளபடி தீவுகளின் பெயர்கள் தமிழில் தரப்பட்டுள்ளன.

மக்கள் வாழும் தீவுகளுக்கு ஒல்லாந்தர் தமது நாட்டிலுள்ள நகரங்களின் பெயர்களை இட்டது பற்றி முன்னரே அறிந்தோம். இந்த நிலப்படத்தில் இவ்வாறு பெயர் மாற்றம் செய்யப்பட்ட ஐந்து தீவுகள் உள்ளன. (படம்-3) மேற்படி தீவுகளுக்குப் பெயர் குறிக்கும்போது ஒல்லாந்தர் இட்ட பெயர்களுக்கே முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, உள்ளூரில் வழங்கிய பெயர்களும் போர்த்துக்கேயர் வழங்கிய பெயர்களும் சேர்த்தே குறிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இதனால், நிலப்படத்தில் சில தீவுகளுக்கு மூன்று பெயர்கள் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக அனலைதீவுக்கு றொட்டர்டாம் (Rotterdam) என்ற ஒல்லாந்தப் பெயருக்கு முதன்மை கொடுத்துள்ளதுடன் போர்த்துக்கேயருடைய காலத்தில் வழக்கிலிருந்த டொனா கிளாரா (Donneclara) என்ற பெயரையும் உள்ளூர்ப் பெயரான அனலைதீவையும் குறித்துள்ளனர். ஒல்லாந்தப் பெயர்கள் இல்லாத தீவுகளுக்கு உள்ளூர்ப் பெயர்களையோ போர்த்துக்கேயர் புழங்கிய பெயர்களையோ முதன்மையாகக் குறிப்பிட்டுள்ளதைக் காணமுடிகிறது. போர்த்துக்கேயர் நாட்டைவிட்டுப் போய் 60 ஆண்டுகளுக்குப் பின்னரும் போர்த்துக்கேயப் பெயர்கள் நிலப்படத்தில் இருப்பது, அப்பெயர்கள் தொடர்ந்து வழக்கில் இருந்ததை அல்லது பழைய ஆவணங்களில் அப்பெயர்கள் இருந்ததால் அவற்றை அடையாளம் காண்பதற்கு வசதியாக அவற்றைக் குறிக்கவேண்டிய தேவை இருந்ததைக் காட்டுகிறது எனக் கொள்ளலாம்.

தீவுகளுக்கு வழங்கிய ஒல்லாந்தப் பெயர்கள் தொடர்பில் வேறு ஆவணங்களில் காணப்படாத தகவல் ஒன்றை இந்த நிலப்படத்தில் காணமுடிகிறது. கரையூருக்கும் மண்டைதீவுக்கும் இடையில் உள்ள சிறிய தீவான சிறுத்தீவுக்கும் “ஒன்ரஸ்ட்” (Onrust) என்னும் இன்னொரு பெயர் காணப்படுகிறது. இந்தப் பெயருக்கான காரணம் குறித்துத் தெளிவில்லை. ஒல்லாந்தருடைய மொழியில் இச்சொல்லுக்கு “அமைதியின்மை”, “ஓய்வின்மை” முதலிய பொருள்கள் உள்ளன. இதே பெயரில் 17 ஆம் நூற்றாண்டில் பெயர்பெற்ற ஒல்லாந்தக் கப்பல் ஒன்றும் இருந்துள்ளது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு 45 ஆண்டுகளுக்கு முன்பே அக்கப்பல் தீயினால் அழிந்துவிட்டது.[5] எனவே, இக்கப்பலின் பெயருக்கும் சிறுத்தீவுக்கு அப்பெயர் இடப்பட்டதற்கு தொடர்பு இருக்க வாய்ப்பு இல்லை. அதேவேளை, ஒல்லாந்தக் கிழக்கிந்தியப் பகுதிகளுக்கான தலைமையிடமாக இருந்த பத்தேவியாவுக்கு அண்மையில் இருந்த ஒரு தீவின் பெயரும்

“ஒன்ரஸ்ட்” இத்தீவில் ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் கடற்படைத் தளம் ஒன்றும் இருந்தது.[6] இந்தப் பெயரையே சிறுத்தீவுக்கும் இட்டு வழங்கியிருக்கக்கூடும். சிறுத்தீவுக்கு இப்பெயரை இட்டதன் பின்னணி என்ன என்பது பற்றியோ மேற்படி இரண்டு தீவுகளுக்குமிடையில் ஏதாவது ஒற்றுமை காணப்பட்டது குறித்தோ தகவல் எதுவும் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், இப்பெயர் சிறுத்தீவுக்குப் பரவலாகப் பயன்பட்டதாகத் தெரியவில்லை. இந்தப் பெயர் குறித்து மேலும் ஆராய்வதற்கு இடமுண்டு.

## வீதிகள்

குடாநாட்டுக்குள் காட்டியுள்ள வீதிகளை நோக்கும்போது அவை அனைத்தும் அக்காலத்திலிருந்த கிறித்தவத் தேவாலயங்களை இணைக்கும் வகையில் இருப்பது தெரிகிறது. உண்மையில் இவைதான் அக்காலத்திலிருந்த வீதிகளா அல்லது தேவாலயங்களை இணைக்கும் வீதிகளை மட்டும் நிலப்படத்தில் காட்டியுள்ளனரா என்பது தெரியவில்லை. ஒல்லாந்தர் பயன்படுத்திய தேவாலயங்கள் அனைத்தும் போர்த்துக்கேயர் அமைத்தவை. எனவே, மேற்படி வீதிகளும் போர்த்துக்கேயர் காலத்தைச் சேர்ந்தவையா அல்லது ஒல்லாந்தர் காலத்துக்கு உரியவையா என்பதும் தெளிவில்லை. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் முதற் சில ஆண்டுகள் யாழ்ப்பாணத்திலிருந்த ஒல்லாந்தப் போதகரான போல்தேயஸ் தனது நூலில் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த தேவாலயங்களைப் பற்றி விளக்கியுள்ளார்.[7] அவர் விளக்கிய ஒழுங்கையும், அவற்றுக்கிடையேயான தொடர்புகள் குறித்து அவர் தந்துள்ள தகவல்களையும் பார்க்கும்போது போர்த்துக்கேயர் காலத்திலேயே லெயுசிக்காம் நிலப்படத்தில் உள்ளது போன்ற ஏதோவொரு வகையான வீதித்தொடர்பு இருந்திருக்கக்கூடும் என்றே தோன்றுகிறது. இதுபற்றி மேலும் விவரமாகப் பின்னர் பார்க்கலாம்.

நிலப்படத்திலுள்ள வீதிகளுள் பெரும்பிரிவுகளை இணைக்கும் வீதிகள் மூன்று. ஒன்று யாழ்ப்பாண நகரத்திலிருந்து பருத்தித்துறைக்குச் செல்கிறது. இது வலிகாமப் பெரும்பிரிவிலுள்ள அச்சுவேலிப் பிரிவுக்கும் வடமராட்சிப் பெரும்பிரிவில் இருக்கும் உடுப்பிட்டிப் பிரிவுக்கும் இடையே கடல்நீரேரியைக் கடக்கிறது. இதுபோலவே யாழ்ப்பாண நகரத்தையும் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளிப் பெரும்பிரிவுகளையும் இணைக்கும் வீதி, வலிகாமத்திலுள்ள சிவியாதெருப் பிரிவுக்கும் தென்மராசியிலுள்ள நாவற்குழிப் பிரிவுக்குமிடையே உப்பாற்றைக் கடக்கிறது. பருத்தித்துறையைத் தென்மராட்சியுடன் இணைக்கும் வீதி வடமராட்சியிலுள்ள துன்னாலைப் பிரிவுக்கும் தென்மராட்சியிலுள்ள வரணிப் பிரிவுக்கும் இடையே நீரேரியைக் கடக்கிறது. மேற்குறிப்பிட்ட மூன்று வீதிகளும் நீரேரியைக் கடக்கும் இடங்கள் ஆழம் குறைந்தவை என்பதால் வறட்சிக் காலங்களில் நீர் வற்றியிருக்கும்போது இப்பகுதியூடாகத் தரைவழிப் போக்குவரத்துச் செய்ய முடிந்திருக்கும். மழை காலங்களில் நீர்வழிப் போக்குவரத்துச் சாதனங்களைப் பயன்படுத்தியிருக்கக்கூடும். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அண்டியே எல்லாப் பருவகாலங்களிலும் வசதியாகப் போக்குவரத்துச் செய்யக்கூடிய வகையில் இவ்வீதிகள் மேம்படுத்தப்பட்டு, அவை நீரேரியைக் கடக்கும் இடங்களில் மரத்தாலான பாலங்களும் அமைக்கப்பட்டன.

## குறிப்புகள்

1. *Rob van Diessen and Bert Nelemans, Comprehensive Atlas of the Dutch United East India Company - IV Ceylon (Voorburg: Asia Maior/ Atlas Maior, 2010), 242.*
2. *Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon 16561665, trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer, 1908), 84.*
3. *nstructions from the GovernorGeneral, 84.*
4. *Phillipus Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon”, trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos. 14 (July 1958April 1959),338.*
5. *Onrust Island, Wikipedia, https://en.wikipedia.org/wiki/Onrust, accessed 2024May4.*
6. *Onrust, Wikipedia, https://en.wikipedia.org/wiki/Onrust_Island, accessed 2024May4.*
7. *Baldaeus, “A True and Exact Description of the Great Island of Ceylon,” 318-340.*

(தொடரும்)



*நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.*

*தமிழில் : த. சிவதாசன்*

● ஜெகன் அருளையா

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

# NurtureLeap :

# யாழ்ப்பாணத்தின் திறன்வளம் கொண்டோரை வல்லுநர்களாக்கும் நிறுவனம்

கோவிட் - 19 பெருந்தொற்றின் பேரழிவு கொண்டுவந்த பொதுமுடக்கம் சில காரியங்களுக்கும் காரணமாக அமைந்துவிட்டது. முதல் தடவையாக, மேற்கு மாகாணத்துக்கு வெளியில் தூங்கிக்கொண்டிருந்த நகரங்கள் விழித்தெழ ஆரம்பித்தன. கொழும்பில் பணிபுரிந்த பலர் சொந்த ஊர்களுக்குக் குடிபெயர்க்கப்பட்டு அங்கு தமது குடும்பங்களுடன் வீடுகளுக்குள் முடக்கப்படலாயினர். துர்ப்பாக்கியமாகச் சிலர் வேலைகளை இழக்கவேண்டி ஏற்பட்டதும் உண்மை தான். உடலுழைப்பு அவசியமான பணிகளைச் செய்தவர்கள் நகர் முடக்கம் காரணமாகவும், பொதுவான பொருளாதார மந்த நிலை காரணமாகவும் வேலைகளை இழந்தார்கள். ஆனால் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் தொழில்துறை மட்டும் தொலைப்பணி (remote work) வசதிகள் காரணமாகத் தப்பிப் பிழைத்துக்கொண்டது.

விருப்பற்ற ஒன்றாக இருந்தும்கூட தொலைப்பணி முறையானது நடைமுறைக்குகந்த, வினைத்திறனுள்ள, செலவு குறைந்த ஒன்றென தொழில்நுட்ப நிறுவனங்கள் கண்டுகொண்டன. ஒருங்கிணைந்த குழுக்களை உருவாக்குவதன் மூலம் தொலைப்பணிகளை வெற்றிகரமாக இயக்கக்கூடிய நடைமுறைகள் வடிவமைக்கப்பட்டன. பணிமனைகளின் பரப்பளவுகளைச் சுருக்கிக்கொள்ளும் சந்தர்ப்பம் முதன்மை நிர்வாகிகளுக்குக் கிட்டியது. வாடகை, மின்சாரம், துப்புரவுப்பணி, பாதுகாப்பு, பால், சீனி, தேனீர் இத்தியாதிகள் போன்றவற்றில் சேமிப்பைக் காணும் வழிகளைக் கண்டுகொண்டார்கள். கொழும்பின்

கைக்கடங்கா வாடகை, உப்புக் கரிக்கும் கடை உணவு, பொதுப் போக்குவரத்து ஆகியவற்றைக் கைவிட்டு குறைந்த செலவில் நிறைந்த வாழ்வு பணியாளர்களுக்குப் பயன் தந்தது. கண்டி, கொழும்பு, திருகோணமலை, காலி, யாழ்ப்பாணம், இன்னும் பல இடை நகரங்களில் தொலைப்பணி புரிவதற்காகப் பணியாளர்கள் குறைந்த சம்பளத்தையும் ஏற்றுக்கொண்டார்கள். குறிப்பாக அனுபவமற்ற புதிய தொழில்நுட்பத்துறைப் பட்டதாரிகள் பருத்த சம்பளங்களை எதிர்பார்க்காது கடமையாற்றத் தயாராகினார்கள்.

இப் புதியோர் தாம் பல்கலைக்கழகங்களிலும், கல்லூரிகளிலும் கற்றுக்கொண்ட தொழில் திறமைகள் மூலம் கொழும்பிலிருந்த தமது சகாக்களுக்கு இணையான திறமைகளைக் காட்டக்கூடியதாகவிருந்தது. ஆனாலும் சீரான ஊடாடல், நேரக் கட்டுப்பாடு ஆகிய தொழில்நேர்த்தி நெறிமுறைகள் போன்ற மென் திறன்களுக்கு (soft skills) அவர்கள் அந்நியமாக இருந்தார்கள். மென்திறன்களைக் கற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த வழி, அவற்றைப் பிறப்பிலிருந்து பின்பற்ற ஆரம்பிப்பதுவே. பாசமும் ஒழுக்கமும் கொண்ட பெற்றோர், அக்கறையுள்ள ஆசிரியர்கள், மரியாதையும் ஆதரவும் தரவல்ல சகபாடிகள் ஆகியோர் மூலமே இவை சாத்தியமாகும். இருப்பினும் இலங்கை சமூகங்களிடையே மென்திறன்கள் இன்னும் போதியளவு வளர்ச்சியடையவில்லை என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். இயற்கையாகக் கிடைக்காதவற்றை வளர்த்தெடுக்க வேண்டியதும் அவசியம்.

கொழும்பில் காணப்படும் மென்பொருள்தொழில் (software industry) சிறந்ததொரு உதாரணம். நான் **1993** இல் பிரித்தானியாவிலிருந்து வெளிநாட்டுப் பணியாளனாகக் கொழும்பு வந்து ஏழு வருடங்கள் மென்பொருள் உற்பத்தி முகாமையாளாராகப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் பின்னர் இத்துறையில் சிறப்பான மாற்றங்கள் நடந்தேறியுள்ளன. வாடிக்கையாளர் முதல் விநியோகஸ்தர் வரை, மேலாளர் முதல் பணியாளர் வரை, மென்திறன் சகல திசைகளிலும் வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. **1993** இல் துடைப்பத்துடன் கடந்து போகும் அலுவலக 'பியோன்' கண்டுகொள்ளப்படவே மாட்டார். பணியாளர்களுக்குத் தலைகூட அசைக்காமல் நிர்வாகி கடந்து போவார். இப்போது உயர் நிலை அதிகாரிக்கும் கடைநிலை ஊழியருக்குமிடையே சிநேக பூர்வமாக முகமன் கூறுவதும், நன்றி தெரிவிப்பதும் வழக்கமாகிவிட்டது. மேலாளர் தமது பணியாளர்களை மரியாதையுடன் நடத்துகிறார். பணியாளர் தமது மேலாளருடன் பண்புடன் பழகுகின்றனர். கோபத்துடன் வரும் வாடிக்கையாளர்களோடு தற்காப்பு விவாதங்களை மேற்கொள்ளாது சாமர்த்தியமாகப் பேசக் கற்றுக்கொண்டுவிட்டார்கள். மகிழ்வான வாடிக்கையாளர்கள் நல்ல விளம்பரத்தைச் செய்வதுடன் சிபாரிசுகளையும் மேற்கொள்வார்கள். இதனால் வியாபாரம் பெருகுகிறது. "குரங்கை மெது மெதுவாகப் பிடிக்கவேண்டும்" என்றொரு பழமொழி உண்டு. வெற்றிகரமான வியாபாரத்தைப் பிடிப்பதற்கு மென்திறன் ஒரு சிறந்த வழி.

**2020** இல் கோவிட் - **19** முடக்கங்களின்போது, பிரித்தானியாவிலிருந்து நிர்வகிக்கப்படும் நிறுவனமான 'செபீரோ' ( Xebiro) கொழும்பிலிருந்த தமது சில பணியாளர்களைத் தமது சொந்த நகரங்களிலிருந்து பணிபுரிய வசதி செய்து கொடுத்தது. அனுபவமுள்ள பணியாளர்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதன் மூலம் அங்குள்ள உள்ளூர் திறனாளிகளையும் உள்வாங்கி அங்கேயே ஒரு குழுவை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை 'செபீரோ' ஏற்படுத்திக்கொண்டது. தொழில் திறமைகளைப் பொறுத்தவரை புதியோரிடம் எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை; கொழும்புக்குச் சமமாக யாழ்ப்பாணமும் இருந்தது. ஆனாலும் மென்திறன்கள் விடயத்தில் பிரச்சினையாகத் தான் இருந்தது. நேரம் தவறாமை, பயனுள்ள உரையாடல், குறைந்த தலையீடுகளுடன் அதிக கவனம், எதிர்பார்த்த காலத்திற்குள் பணிகளை நிறைவேற்றல், அவசரம் பற்றிய புரியாமை என்பன



யாழ்ப்பாணப் பணியாளர்கள்

Image Source - marumoli.com

புதியவர்களுக்கு புரியாத விடயங்களாக இருந்தன. இதை நிவர்த்தி செய்ய, பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட செபீரோவின் நிர்வாகியான சசீவன் கணேசானந்தன் ஒரு புதிய நிறுவனத்தை உருவாக்கினார். அதுதான் 'நேர்ச்சர்லீப்' (Nurture Leap). தொழில்நுட்பத்தில் திறன் வளம் கொண்ட இளையோரை இனம் கண்டு அவர்களைத் தொழில் வல்லுநர்கள் ஆக்குவதே 'நேர்ச்சர்லீப்பின்' தொழில்.

> தொழில் திறமைகளைப் பொறுத்தவரை புதியோரிடம் எதுவித பிரச்சினையும் இருக்கவில்லை; கொழும்புக்குச் சமமாக யாழ்ப்பாணமும் இருந்தது. ஆனாலும் மென்திறன்கள் விடயத்தில் பிரச்சினையாகத் தான் இருந்தது. நேரம் தவறாமை, பயனுள்ள உரையாடல், குறைந்த தலையீடுகளுடன் அதிக கவனம், எதிர்பார்த்த காலத்திற்குள் பணிகளை நிறைவேற்றல், அவசரம் பற்றிய புரியாமை என்பன புதியவர்களுக்கு புரியாத விடயங்களாக இருந்தன.

சில விடயங்களை இலகுவாகச் சமாளித்து விடலாம். தினமும் கைரேகை மூலம் கணனிகளில் உட்புகுதல், வெளிவருதல் போன்ற விடயங்கள் மூலமாக மேலாளர் முதல் பயிற்சியாளர் வரை நேரக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்தல் என்பது இலகுவாக நடைமுறைப்படுத்தக்கூடிய ஒன்று. ஆனால் திறனுள்ள உரையாடல், அவசரம், அவசியம் பற்றிய புரிந்துணர்வு போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவது கொஞ்சம் கடினமாகவே இருந்தது. தலையை மேல் கீழ், பக்கவாட்டு என்று அசைப்பது ஆம் அல்லது இல்லை என்பதை உறுதியாகக் கூற முடியாத நிலை, தெருக்களில் விரைவாகப் போதல் வேலைத்தளங்களில் மெதுவாகப் பணியாற்றுதல் ஆகிய வித்தைகளை இலங்கையர்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள். எதற்கு அவசரம் தேவை என்பது அவர்களுக்குப் புரியாத ஒன்று. அவசரமாக வீடேக வேண்டும் என்பதற்காகப் பணிகளை இடைநிறுத்திவிட்டுச் செல்லும் பொதுத்துறை வியாதி தனியார் துறைகளுக்கும் தொற்றிவிட்டது. வாடிக்கையாளரின் தேவைகளை உரிய நேரத்தில் வழங்க முடியாமை என்பது போட்டிகள் மிக்க தனியார் துறைக்கு மிகவும் ஆபத்தான ஒன்று.

'செபீரோ' வில் இணைவதற்கு முன்னர் சஜீவ் எட்வார்ட் 'ஸ்ராக்ஸ்' (STAX) என்னும் பிரபல ஆலோசக நிறுவனத்தில் பணியாற்றியிருந்தார். தற்போது கொழும்பிலுள்ள 'செபீரோ' அலுவலகத்தில் முதன்மை சந்தைப்படுத்தும் அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். யாழ்ப்பாண அலுவலகத்தை நிர்வகிப்பது



யாழ்ப்பாண அலுவலகம் Image Source - marumoli.com

அவரது பணி.


“யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் இதர கல்வி நிலையங்களிலிருந்து வரும் பட்டதாரிகள் தொழில்நுட்பத்தில் சிறப்பானவர்களாகவும் கொழும்பு பணியாளர்களுக்குச் சமமானவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் மொழிப் பிரயோகம், தலைமைத்துவம், திட்டமுகாமைத்துவம், தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசும் வல்லமை போன்ற மென்திறன்களில் அவர்கள் சோடை போய்விடுகிறார்கள். ஆடை நெறி ஒரு பிரச்சினையே அல்ல. ‘ஸ்மார்ட் காசுவல்’, ‘ஸ்மார்ட் ஷூஸ்’ போன்றவற்றில் பிரச்சினைகள் இல்லை. நேரம் தவறாமை, விடுமுறை விண்ணப்பம், மூத்தோரின் கீழ் பணியாற்றல், உரையாடல் திறன் போன்றவை கற்பிக்கப்பட வேண்டியவை. கை ரேகைப் பதிவுகளுடன் தொடர்புள்ள மனிதவள முறைமை (HR) எங்களிடம் உண்டு. வரவை உறுதிசெய்யவும், விடுமுறை விண்ணப்பங்களை நடைமுறைப்படுத்தவும் இது உதவுகிறது. ஒவ்வொருவரும் தமது பணிகள் பற்றிய விளக்கங்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் அளிப்பதன் மூலம் உரையாடற் திறன், தன்னம்பிக்கை ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள முடியும்” என்கிறார் சசீவன்.

“நிறுவனத்தின் பணியாளர்களிடையேயான சமூக ஊடாடலை மெருகூட்டுவதற்கென வருடத்திற்கு இரு தடவைகள் கொழும்பு, யாழ்ப்பாணக் குழுக்கள் இணைந்து உலாக்களை மேற்கொள்கின்றனர். சென்ற வருடம் வில்பத்திலுள்ள ஆளுநர் வாடியில் இரண்டு நாட் சந்திப்பும், வருட இறுதிக் கொண்டாட்டமாக வாஸ்கடுவவிலுள்ள சிற்றஸ் ஹொட்டேலில் சந்திப்பும் எமது குழுவினரால் மேற்கொள்ளப்பட்டது. புதியோர் முதல் மூத்தோர் வரை, நிறுவனப் பணியாளர்கள் மத்தியில் கிடையாகவும் (horizontal), நெடுவாகவும் (vertical) தோழமையும் விசுவாசமும் உருவாகவேண்டுமென்பதே எமது நோக்கம்” என்கிறார் சசீவன்.

‘நேர்ச்சர்லீப்’ நிறுவனத்தில் மாணவர்கள் பலரும் இணைய வேண்டுமென்பதே சசீவின் விருப்பம். தொழில்நுட்ப ரீதியில் ஏற்கெனவே திறமைகளைக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மேலும் பயிற்சிகள் தேவையில்லை. அவர்கள் உடனடியாகவே பணிகளை ஆரம்பிக்கலாம். மிகவும் கவனமாக மேற்பார்வை செய்யப்படும் இவர்கள் பணியிடைப் பயிற்சிகள் (onthejobtraining) மூலம் தமது தொழில்நுட்பத் திறன்களையும்

மென்திறன்களையும் வளர்த்துக்கொள்ள முடியும்.

கொழும்பு தராதரத்தில் போட்டியிடுமளவுக்கு நேர்ச்சர்லீப் இளையோருக்கு திறன்களைக் கற்பிக்கிறது. பட்டதாரிகளையும், பட்டங்களுக்கு இணையான இதர தொழில்முறைத் தகுதிகளையும் நேர்ச்சர்லீப் அங்கீகரிக்கிறது. உயர் தேசிய டிப்ளோமா (Higher National Diploma (HND)) மற்றும் அதற்கு மேலான தகுதிகளைக் கொண்டவர்கள் பணிக்கு எடுக்கப்படுகிறார்கள். தொழில்நுட்பத் தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமல்லாது சந்தைப்படுத்தல் (Marketing), மனிதவளம் (Human Resources - HR) போன்றவற்றில் தகுதிகளைக் கொண்டிருப்பவர்களும் உள்வாங்கப்படுகிறார்கள். பயிற்சியாளர்களாக (interns) உள்வாங்கப்படுபவர்களுக்கு சந்தை நியமக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. இப்படியாக உள்வாங்கப்படுபவர்கள் ஆரம்பத்திலிருந்தே முறைப்படியான விடுமுறை விண்ணப்பங்கள், வர்த்தக விடுமுறைகள், நேரம் தவறாமை, ஆடை நெறி (dress code), மருத்துவர் சான்றுடனான நோய் விடுப்பு (sick leave) போன்ற தொழில் நேர்த்தி நடைமுறைகளைப் (professional procedures) பின்பற்றவேண்டும். ஆறு மாதப் பயிற்சிக்காலத்தில் மாதமொரு தடவை அரை நாள் விடுப்பும் வழங்கப்படும்.



Developer Screenshot

Image Source - marumoli.com

பயிற்சிகளை வெற்றிகரமாக முடித்து வெளியேறுபவர்கள் சிலருக்கு செபீரோ குழுமத்தின் நிறுவனங்களில் வேலை வழங்கப்படுகிறது. வேறு சிலருக்கு யாழ்ப்பாணத்திலோ அல்லது கொழும்பிலோ உள்ள இதர நிறுவனங்களில் வேலைகளைப் பெற உதவி வழங்கப்படுகின்றது. நவம்பர் 2023 வரை நேர்ச்சர்லீப் 96 பேர்களை உள்வாங்கியிருக்கிறது. இவர்களில் 35 பேர் தற்போது பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள். பயிற்சிகளை முடித்துக்கொண்டவர்களில் 23 பேர் செபீரோவிலும், 22 பேர் இதர நிறுவனங்களிலும் பணிகளை ஆரம்பித்துள்ளனர்; 14 பேர் பல்கலைக்கழகங்களில் கல்விகளைத் தொடர்கிறார்கள்.
நேர்ச்சர்லீப் தொழில்துறைகளுக்காக மக்களைப் பதப்படுத்துகிறது. செபீரோ இதற்கான செலவுகளை எடுத்துக்கொள்கிறது. இருப்பினும் இச்சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்காக தளபாடங்கள், மடிக்கணனிகள் போன்றவற்றைக் கொள்முதல் செய்வதற்காக நிதியுதவிகளை எதிர்பார்க்கிறது.

வாழ்வில் ஒவ்வொரு தெருக்களும் மேடுபள்ளம் கொண்டவைதான். மென்திறன்களை வளர்த்துக்கொள்வதன் மூலம் மேடு பள்ளங்களைத் தவிர்த்து சுமுகமான உறவுகளைத் தக்கவைத்துக்கொள்ள முடியும். இலங்கை சமூகத்தில் மென்திறன்கள் பரவலாக அறியப்பட்டவையல்ல. நேர்ச்சர்லீப் யாழ்ப்பாணத்தில் பயிற்சிகளை வழங்கி வேலைகளைப் பெற வழிவகுக்கிறது. வடக்கில் வேறு பல நிறுவனங்களும் இப்படியான மென்திறன் பயிற்சிகளை வழங்குகின்றன. இவற்றில் சில சிறப்பான பயிற்சிகளை வழங்குபவையாகவும் இருக்கின்றன.

சஜீவ் எட்வார்ட் உடன் தொடர்புகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் sajeev@xebiro.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

# வடக்கு மாகாணத்தில் முதலீடு செய்தல்: பொருளாதார முன்னேற்றமும் சமூகப் பொறுப்பும்

சில வருடங்களுக்கு முன்னர் இலங்கையின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றின் பிரதான பணிப்பாளர் ஒருவருடன் பேசக் கிடைத்தது. ஓய்வு வயதை அண்மித்துக்கொண்டிருக்கும் அந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரியவரிடம் “போர் முடிந்து பலவருடங்களாயினும் ஏன் அந்நிறுவனம் வடக்கில் முதலீடு செய்யவில்லை” எனக் கேட்டேன். “வடக்கை விட இலகுவாக இலாபமீட்டக்கூடிய இதர இடங்கள் இருக்கின்றன” என அவர் சாவதானமாகக் கூறினார். அதில் எந்தவிதத் தவறுமில்லை. பங்குச்சந்தை முதலீட்டை நம்பியிருக்கும் நிறுவனங்கள் தமது முதலீட்டாளர்களின் இலாபத்திற்குப் பொறுப்பாக இருப்பனவேயன்றி உணர்வுகளுக்கும் மனச்சாட்சிக்கும் முதலிடம் கொடுப்பதில்லை.

அப்போதும், இப்போதும் அவர் கூறியது சரியே. இலகுவாகப் பணம் பண்ணுவதற்கு வடக்கு ஏற்ற இடமில்லை. தங்களைப் பணக்காரராக்க முயற்சிப்பதைவிட வடக்கைப் பணக்கார மாகாணமாக மாற்றுவற்கு ஏற்ற வகையில் அவர்கள் முதலீடுகளைச் செய்து மாற்றங்களை ஏற்படுத்தினால் மட்டுமே வடக்கு இலகுவாகப் பணம் பண்ணும் ஒரு இடமாக மாறும்.

வடக்கைப் பற்றி மட்டும் நான் எழுதுவதற்குக் காரணம் நான் அங்கு தான் வாழ்கிறேன்; அது மட்டுமே எனக்குத் தெரிந்த இடமென்பதால். ஆனாலும் இக்கட்டுரையில் நான் குறிப்பிடுவது இலங்கையின் அனைத்து மாகாணங்களுக்கும் பொருந்தும். கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, கவனமாகக் கொடுக்கப்பட்டு, கவனமாகப் பெறப்பட்டு இலக்குவைக்கப்பட்ட முதலீடுகளே இதர மாகாணங்களுக்கும் அவசியம்.
2019 இல் இலங்கை, ஒரு குறுகிய காலத்திற்கு, கீழ் மத்திய வருமான நாடாக இருந்து உயர் மத்திய வருமான நாடாகத் தரமுயர்த்தப்பட்டிருந்ததெனினும், ஒரு வருடத்தின் பின்னர், 2020 இல், மீண்டும் கீழ் மத்திய வருமான நாடாகத் தரமிறக்கப்பட்டது. இருப்பினும் மேற்கு மாகாணத்தை வைத்தே எங்கள் செழிப்பு, தரம் பார்க்கப்பட்டது. மேற்கு






Image Source - www.lankabusinessonline.com




**Central Bank of Sri Lanka figures for Provincial Gross Domestic Product (GDP)**

Image Source - www.lankabusinessonline.com

மாகாணத்தைத் தவிர்த்துவிட்டுப் பார்த்தால் இதர அனைத்து மாகாணங்களும் மிகவும் ஏழ்மையானவை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் என்னை அழைத்து, தாம் எப்படி வடக்கில் முதலிடலாம் எனக் கேட்பார்கள். பணம் பண்ணுவது மட்டுமே அவர்களது முதன்மை நோக்கம். அதேவேளை, வடமாகாண மக்களுக்கு சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொடுப்பதன் மூலம் அவர்களையும் பணம் பண்ண வைப்பது என்பதும் அவர்களது நோக்கங்களிலொன்று. இலாபத்தை மட்டுமே இலக்காகக் கொண்ட முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், வடக்கு மக்கள் தாமே தமக்கான சந்தர்ப்பங்களை உருவாக்க ஆதரவு தருவதும் இவர்களது நோக்கமாகும். இதர மாகாணங்களைச் சேர்ந்த மக்களிடமும் இப்படியான நல்லெண்ண முயற்சிகள் இருக்கலாம். எனவே இங்கு நான் எழுதுவது அனைவருக்குமே பொருந்தும்.

எனக்கு வரும் அழைப்புகளில் பெரும்பாலானவற்றில் இருக்கும் பிரச்சினை, இவ்விடயம் பற்றிய அவர்களது அறிவுப் போதாமையே. அங்குள்ள மக்களுக்கு ஏதாவது உதவியைச் செய்யவேண்டுமென்ற உந்துதலே அவர்களை இயக்குவதுபோல் தெரிகிறது. 30 வருட காலப் போர்; அதன் பின்னர் பத்தாண்டு காலம் என வட மாகாணம் தொடர்ந்து பொருளாதார வளர்ச்சியற்றே இருந்து வருகிறது. 2018 இல் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவின் பிரகாரம் வடக்கு மாகாணம் மிகவும் ஏழ்மையான கிழக்கு மாகாணத்தைவிட அடுத்த உயர் நிலையில் இருந்தது.


முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்படும் கேள்விகளில் சில:

**பண உதவி செய்தல்:** "நோர்வேயிலிருக்கும் ஒருவர் பத்தாயிரம் டொலர்களை உதவியாகத் தர விரும்புகிறார். உங்களிடம் ஏதாவது யோசனைகள் இருக்கிறதா?"

**பண முதலீடு செய்தல்:** "பிரித்தானியாவில் வாழும் எனது கணக்காள நண்பர் ஒருவர் இலங்கையில் ஏற்றுமதி வியாபாரமொன்றில் முதலீடு செய்ய விரும்புகிறார். வடக்கில் இதற்கான சாத்தியமேதுமுள்ளதா?"

**நேரத்தையும் திறமையையும் காணிக்கை செய்தல்:** "உங்கள் இளைய தலைமுறையினரை முன்னேற்ற நீங்கள் முயல்வதுபோல் தெரிகிறது. உதவி தேவைப்பட்டால் எங்களது விவேகமான மாணவர்கள் தமது கல்வியையும், திறமைகளையும் முன்னேற்ற நான் தொண்டாகப் பணிபுரியத் தயாராகவுள்ளேன்"

**முதலீட்டில் பங்காளி:** "என்னிடம் ஒரு விவசாயம் செய்யாத காணி இருக்கிறது. அங்கு ஏதாவது தொழில் முயற்சியை மேற்கொள்ளும் வகையில் பங்காளியாக வரக்கூடியவர் எவரையாவது




Central Bank of Sri Lanka figures

Image Source - www.lankabusinessonline.com

உங்களுக்குத் தெரியுமா?" மிகக்குறைந்த தகவல்களுடன் வருபவர்களுக்கு ஆலோசனை வழங்க நான் தயக்கப்படுவதனால் அவர்களிடம் நான் மேலதிக தகவல்களைக் கேட்பதுண்டு. இதற்குக் காரணம், முதலீடுகளை ஏற்றுக் கொள்பவர்களைக் கண்டுபிடிக்க முடியாது என்பதல்ல. இலவசமாகத் தானம் செய்வது என்பது இலகு. இலவசமென்றால் அதைப் பெறுவதற்கான மக்களில், பற்றாக்குறையே இருக்காது. இலவசப் பணம், இலவச மடிக்கணனி, இலவச இயந்திரம், இலவசக் காணி, இலவசப் பயிற்சி என்றால் அவை உடனடியாகவே பறிக்கப்பட்டுவிடும்.

சொந்தத்தில் இழப்பதற்கு எதுவுமில்லை என்ற காரணத்தால் இவ்வுதவிகளைப் பெறுவதற்கு ஏராளமான பேர் முன்வருவார்கள். எனக்குத் தெரிய, முக்கியமான இடத்தில் தானமாக வழங்கப்பட்ட ஒரு காணி தேடுவாரன்றிக் கிடக்கிறது; வழங்கப்பட்ட இயந்திரங்கள் துருப்பிடிக்கின்றன; வழங்கப்பட்ட இலவசப் பயிற்சிகள் மறக்கப்பட்டோ அல்லது பாவனையற்றோ போய்விட்டன. துர்ப்பாக்கியமாக இலவசமாக வழங்கப்பட்டவைக்கு பெறுமதி இல்லையென்றாகிவிட்டது. ஒரு தேங்காயெண்ணை ஆலைக்கு ரூ. 5 இலட்சம் பெறுமதியான இயந்திரங்களும் ரூ.5,000 பெறுமதியான தள்ளுவண்டியும் இலவசமாக வழங்கப்பட்டன. கவனமற்று வழங்கப்பட்ட அனைத்தும் கவனமற்றுப் பெறப்பட்டன. தானம் செய்யவோ அல்லது முதலீடு செய்யவோ விரும்புபவர்கள் இலக்குகளைத் திட்டமிட்டு இனங்காண்பதும், பெறப்படும் உதவிகள் எதிர்ப்பார்த்த விளைவுகளைத் தரக்கூடுமா என்பதைக் கவனமாக ஆய்ந்தறிந்த பின்னர் தமது தானங்களைச் செய்வதும் அத்தியாவசியமானது.

ஒரு முதலீட்டாளரோ அல்லது காணிக்கையாளரோ தமது முதலீடுகளை அல்லது தானங்களைச் செய்வதற்கு முன்னர், கேட்டறியவேண்டிய சில கேள்விகளை இக் கட்டுரை பரிந்துரைக்கிறது. காணிக்கைகள் என்னும்போது, பெறுபேறுகளை எதிர்பார்க்காத முதலீடுகள் என்பதை இங்கு நான் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

**1. ஏன் நீங்கள் முதலீடு செய்யவேண்டும்?**

*a*). பெறுபவர் எப்படியாகச் செலவு செய்தாலும் பரவாயில்லை என்னும் எண்ணத்துடன் கொடையாகக் கொடுத்தல்.

*b*). நேசிக்கும் ஒருவர் மீதான நினைவுச் சின்னத்தை அமைத்தல்.

*c*). பண்டத்தின் தரத்தையும் உற்பத்தியையும் அதிகரிக்க ஊக்குவிப்பதன் மூலம் அப்பண்டங்களை நீங்களே வாங்கிக்கொள்ளல்.

*d*). ஒரு சொத்துக்கு உரிமையாகுதல், உதாரணமாக ஒரு காணியைக் கொள்வனவு செய்து அதைப் பிரயோசனமாக்குதல்.

*e*). வடமாகாணத்தின் மொத்த உற்பத்தி, கொள்திறன் மற்றும் தரத்தைக் கட்டியெழுப்புதல்.

*f*). வடமாகாணத்தின் ஒரு வியாபாரத்தில் நடைமுறை அல்லது உறங்கு பங்காளியாக ஆகுதல்.

போன்ற பல.

**2. என்ன தொகையை? எப்படி முதலீடு செய்ய உத்தேசமாகவுள்ளீர்கள்?**

a). ஒரு நன்கொடையைக் கொடுத்துவிட்டு பேசாமலிருத்தல்.

b). குறைந்த அல்லது பூச்சிய வட்டிக்கு பணத்தை வழங்குதல் அல்லது ஈடாக எதையும் பெறாது பணத்தை வழங்குதல். அதிக நெருக்கடிகளுடன் வங்கிகளால் கடன் வழங்கப்படுபவர்களுக்கோ அல்லது வங்கிகளால் கடன் நிராகரிக்கப்பட்டவர்களுக்கோ கடன் வழங்குதல்.

c). ஒரு சொத்தை வாங்கி அதில் பிறர் பலன் பெறுவதற்கு வழி செய்தல்: (காணியை ஒரு விவசாயிக்கு குத்தகைக்குக் கொடுத்தல். பெரிய வீடொன்றை உணவகமொன்றிற்கு வாடகைக்கு விடுதல். சிறிய வாகனமொன்றை 'டக்சி' சாரதிக்கு வாடகைக்கு விடுதல்)

d). பங்கு முதலீடுகளில் ஈடுபடுதல். இலாபமீட்டுவதற்குப் பலகாலம் எடுக்கலாம் அல்லது இலாபமே கிடைக்காமல் போகலாம் என்பதை அறிந்து முதலீடு வளரும்வரை பொறுமையாக இருத்தல்.

e). ஈவுத்தொகை (dividends) பெறுவதை மட்டுமே நோக்கமெனக்கொண்டு, பங்கு முதலீட்டின் ஈடுபடுதல். முதலீட்டில் வளர்ச்சி காணாதபோது குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் வெளியேறுதல்.

போன்ற பல.

**3. என்ன பெறுபேற்றை எதிர்பார்க்கிறீர்கள்? அதை எப்படி அளந்து கொள்வீர்கள்?**

a). வேலைகளை உருவாக்குதல்: உ+ம், ஒரு ஆலையை உருவாக்கிவிட்டு, ஒரு வருடத்தின் பின்னர் அதன் பணியாளர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுங்கள்.
b). வருமானத்தை அதிகரித்தல்: உ+ம், ஒரு கிராமியக் குடும்பத்திற்கு 100 கோழிக்குஞ்சுகளைத் தானமாகக் கொடுத்துவிட்டு, கோழிகளாலும் முட்டைகளாலும் அக்குடும்பத்தின் வருமானம் உயர்வதை அவதானியுங்கள்.
c). ஆரோக்கியத்தை முன்னேற்றுதல்: உ+ம், சுத்தமான குடிநீர் வழங்கலுக்கு ஆவன செய்து, பாவனையாளர்களில் நீர் சம்பந்தப்பட்ட வியாதிகள் குறைவதை அவதானியுங்கள்.
d). தொழில் முகவர்களை ஆதரித்தல்: உ+ம், கேக் விநியோக வியாபாரி பெரிய வெதுப்பு சூளை ஒன்றை வாங்குவதற்கு உதவி செய்வதன் மூலம் அவரது வியாபாரம் அதிகரிப்பதை அவதானியுங்கள்.
இப்படிப் பல.

**4. யார் நன்மையடையவேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?**

a). கிராமப்புற சமூகங்கள்
b). பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்
c). இளையோர்
d). போரினால் பாதிக்கப்பட்டவர்கள்
e). கூட்டுறவு முயற்சிகள்
f). தொழில் முகவோர்
ஆகியோர்.

**5. எங்கு?**

a). ஒரு குறிப்பிட்ட கிராமம்
b). ஒரு குறிப்பிட்ட மாவட்டம்
c). ஒரு குறிப்பிட்ட சமூகம்
ஆகியன.

**6. எத் துறையில்?**

a). விவசாயம்
b). மீன்பிடி
c). உணவுத் தயாரிப்பு
d). தகவல் தொழில்நுட்பம்
e). கல்வி
f). சுகாதாரம்
g). சுற்றுலா
ஆகியன.

**7. முதலீட்டு இலக்கு?**

a). தொழில்நுட்பமும் இயங்கு முறைகளும்: புதிய பயிர்வகைகள், சொட்டு நீர்ப்பாசனம் ஆகியன.
b). பயிற்சி / கல்வி: ஆங்கிலம், ஈயத் தொழில் (Plumbing), நீர்ப்பாசனம் ஆகியன.
c). நிலங்களும் கட்டிடங்களும்
d). இயந்திரங்கள்
f). ஆரம்ப முதலீடு
ஆகியன.

இவ்வனைத்துக் கேள்விகளுக்கும் நீங்கள் முற்கூட்டியே பதிலளிக்க வேண்டியதில்லையாயினும் குறைந்தது (1) ஏன் நீங்கள் முதலீடு செய்ய வேண்டும்; (2) எப்படி, எவ்வளவு முதலீட்டை நீங்கள் செய்யவேண்டும்; (3) என்ன பெறுபேற்றை எதிர்பார்க்கிறீர்கள் என்ற கேள்விகளுக்காவது நீங்கள் பதில்களை வைத்திருக்க வேண்டும்.

**வடக்கில் முதலீடு செய்யப்படும், கொடையாக வழங்கப்படும் பல வளங்கள் வீணடிக்கப்படுகின்றன; பாடங்கள் கற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதெல்லாம் எங்களுக்கு எப்படித் தெரியும்? போர் முடிந்து ஒரு தசாப்தத்தின் பின்னரும் எமது வடக்குப் பிரதேசம் பொருளாதாரச் சட்டகத்தின் அடிமட்டத்தில் தான் இன்னமும் இருக்கிறது. உலகம் முழுவதிலும் பொருளாதார ரீதியில் வானளாவிய உயர்ச்சிகளைக் கண்டுவரும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரும் வடக்கைச் சேர்ந்தவர்களாக இருந்தும்கூட நிலைமை இப்படியாக இருக்கிறது.**

முதலீடு செய்வது மட்டுமே முடிவாகாது. நீங்கள் எதிர்ப்பார்த்த பெறுபேறுகள் கிடைத்தனவா என்பதை அறிய முயற்சிக்க வேண்டும். அவற்றை எப்படி மேலும் திறமையாகச் சாதித்திருக்க முடியும் என்பதோடு, மற்றவர்களும் உங்கள் அனுபவத்தின் மூலம் கற்றுக்கொள்ள வழி செய்யவேண்டும்.

பெரிய தொண்டு நிறுவனங்கள் முதல் நிறுவனக் கொடையாளிகள் வரை, தமது கொடைகள் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்குப் பின்னராவது வந்து தமது கொடைகள் எவ்வளவு தூரத்துக்கு நன்மை பயத்திருக்கின்றன; எதிர்பார்த்த விளைவுகள் பெறப்பட்டதா என்பதை அறிந்துகொள்ள முயற்சிப்பதில்லை என்பதே நான் கண்ட உண்மை. சிலவேளைகளிகளில் அவை திருப்தி தராமையினாலோ என்னவோ அப்படியாகச் செய்யப்பட்ட ஆய்வுகள் பலவும் வெளியிடப்படுவதுமில்லை. பலரும் தமது அனுபவங்களை மற்றவரும் பகிரும்படி பரப்புரை செய்வதுமில்லை. மிகப்பெரும் தொண்டு நிறுவனங்கள்கூட தமது மீளாய்வுகளை மற்றயோரிடம் பகிர்வதில்லை என்பது மிகவும் ஏமாற்றத்தைத் தருகிறது.

**அனுபங்களிலிருந்து பட்டறிவைப் பெற குறைந்தது அவர்கள் என்ன செய்யலாம்?**

*a*). முதலீடு செய்யப்பட்டு 12 மாதங்களின் பின்னர் அம்முதலீட்டால் கிடைத்த நன்மை என்ன, எதில் முன்னேற்றம் கண்டிருக்க முடியும், எது தீமையில் முடிந்தது என ஒரு முதலீட்டு மீளாய்வு செய்யப்படுதல்.

*b*). பாடங்களைக் கற்றுக்கொள்ளுதலுடன் அவற்றை மற்றையோரும் அறியக்கூடியாத முன்வைத்தல்.

வடக்கில் முதலீடு செய்யப்படும், கொடையாக வழங்கப்படும் பல வளங்கள் வீணடிக்கப்படுகின்றன; பாடங்கள் கற்றுக்கொள்ளப்படுவதில்லை. இதெல்லாம் எங்களுக்கு எப்படித் தெரியும்? போர் முடிந்து ஒரு தசாப்தத்தின் பின்னரும் எமது வடக்குப் பிரதேசம் பொருளாதாரச் சட்டகத்தின் அடிமட்டத்தில் தான் இன்னமும் இருக்கிறது. உலகம் முழுவதிலும் பொருளாதார ரீதியில் வானளாவிய உயர்ச்சிகளைக் கண்டுவரும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரும் வடக்கைச் சேர்ந்தவர்களாக இருந்தும்கூட நிலைமை இப்படியாக இருக்கிறது. இலங்கையில் வடக்கு ஒன்றுதான் சனத்தொகையில் வீழ்ச்சி கண்டுவரும் மாகாணம். எமது மக்கள் சந்தர்ப்பங்களைத் தேடி வேறு நாடுகளுக்குச் செல்வது தான் இதற்கு காரணம். இதனால் தான் வடக்கிற்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்கள் வீணடிக்கப்படுகின்றன.

நன்றி : மறுமொழி, *Lanka Business Online (www.lankabusinessonline.com)*

(தொடரும்)



● கு. சின்னப்பன்

முனைவர் கு. சின்னப்பன் தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் பேராசிரியராகவும் துறைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறார். இவர், தமிழ் கற்பித்தல், மனித உரிமைக் கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, ஒடுக்கப்பட்டோர் அரங்கு, திருநங்கையரும் ஊடகமும் ஆகிய பகுதிகளில் சிறப்புத்திறன் பெற்றவர். விளிம்புநிலை ஆய்வுகளில் தனிக்கவனம் செலுத்தி வருபவர். இதுவரை 19 நூல்களும், 46 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டுள்ளார். இவரது சிறப்பான பணிகளுக்காக இதுவரை 9 விருதுகள் பெற்றுள்ளார்.

*தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'தமிழ்த்தூது வண. தனிநாயகம் அடிகளாரின் நான்காவது நினைவுப் பேருரை' நிகழ்வில் பேராசிரியர். முனைவர். கு. சின்னப்பன் அவர்களால் இக் கட்டுரை வாசிக்கப்பட்டது.*

# தனிநாயகம் அடிகளாரின் கல்விச் சிந்தனைகள்

**சுருக்கம்**


உரைநடை, நாவல், சிறுகதை, அகராதி, நகைச்சுவை இலக்கியம், மொழிபெயர்ப்பு, ஒப்பீட்டு இலக்கியம் என்று பல முதற்பணிகளைத் தமிழுக்குச் செய்தவர்கள் கிறித்தவத் தமிழ்த் தொண்டர்கள். இவர்களில் இருபதாம் நூற்றாண்டில் ஈழம் தந்த தமிழறிஞர் தனிநாயகம் அடிகள் (19131980), உலகோர் போற்றுமாறு தமிழ் மொழிக்குப் பெருந் தொண்டாற்றியவராவார்.

தமிழ்மொழி, இலக்கியம் - பண்பாடு - கலையென எல்லாச் சிறப்பும் பெற்றிருந்தும் உலக அரங்கில் கவனிப்பாரற்று இருந்த நிலையை மாற்ற, உலகின் பல நாடுகளுக்கும் சென்ற தனிநாயகம் அடிகள் அந்தந்த நாட்டு மொழியில் தமிழின் தொன்மை, வளமை, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க்கலை ஆகியவற்றைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இந்தத் தமிழ்த்தூதுப் பயணத்தின் விளைவாக உலக அறிஞர்கள் தமிழ்மொழியின் சிறப்பை அறிந்து கொள்ளச்செய்தார். தமிழின் சிறப்பை பிறநாட்டினர் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்ப் பண்பாடு (இதழ்), தமிழ்க் கல்வி (இதழ்), தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து), ஒன்றே உலகம் (பயண நூல்) ஆகிய வெளியீடுகளின் வழி தமிழாய்வுப் பணிகளை





இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தனிநாயகம் அடிகள்

Image Source - tamil.wiki



சேவியர் தனிநாயகம் அடிகள்

Image Source - tamil.wiki

அணுகுமுறையை உருவாக்கினார். கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருத்தலைக் கண்டு உணர்த்தினார். இதனால், கீழைத்தத்துவம், பண்பாடு என்பதற்கு மட்டுமல்ல உலகத் தத்துவம், பண்பாடு குறித்த ஆய்வுகளுக்கும் தமிழ்மொழி முக்கியமானது என்ற புரிதல் உலக அறிஞர்களிடம் உருவாகியது.

தமிழ் ஒரு தனித்துவமான மொழி. தமிழ் ஒரு செம்மொழி என்ற உண்மையை வலியுறுத்தி வந்தார். உலக இலக்கியத்திரட்டு (World Classic) என்னும் பெருந்தொகை நூல்களில் தமிழ் இலக்கிய நூல்களும் இடம்பெற வேண்டுமென்று விரும்பினார். பிறநாட்டு இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வதே தமிழ் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்பதை வலியுறுத்தினார். இலண்டன் பல்கலைக்கழகத்தின் ஒப்பியல் கல்வித்துறையில் பழந்தமிழ் இலக்கியங்களில் கல்விச்சிந்தனைகள் (1957) என்னும் தலைப்பில் செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழி இலக்கியங்களின் ஒற்றுமை வேற்றுமைகளை ஒப்பாய்வு செய்து வெளியிட்டார்.

மேற்கொண்டார்.
தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்ய உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துத் தமிழ் மொழிக்கு முதன் முதலில் மலேசியா நாட்டின் கோலாலம்பூரில் (1966) தமிழ் ஆராய்ச்சி மாநாடு கண்டவர் தனிநாயகம் அடிகளார். சென்னை தரமணியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்குவதற்கும் அடித்தளமிட்டார்.

இந்தியா மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்களில் மட்டுமே தமிழாய்வு நடைபெற்றுக்கொண்டிருந்த நிலையை மாற்றி உலக நாடுகளில் தமிழாய்வு நடைபெறுவதற்கு வழிவகுத்தார். தமிழ் மொழியையும், இலக்கியத்தையும் மட்டுமே ஆய்வு செய்த நிலையை மாற்றி தமிழ்ச் சமுதாய வரலாறு, தமிழ்ப் பண்பாடு, திராவிடமொழி, தமிழ்க்கலை, தமிழ்க்கல்வி ஆகிய துறைகளையும் ஒருங்கிணைத்து ஆய்வு மேற்கொள்ளும் ஒரு பண்பாட்டு ஆய்வு

தனிநாயகம் அடிகளின் பெருவிருப்பம் தமிழ்க் கற்பித்தல் பணியாகும். தமிழகத்தின் வடக்கன்குளம் பள்ளியிலும் இலங்கை, மலேசியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் தமிழ் கற்பித்தல் பணிபுரிந்துள்ளார். உலகநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தமிழாய்வுகள் பற்றி வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி என்னும் நூலை எழுதினார். இந்நூலை உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் 1968 இல் வெளியிட்டுள்ளது.

இவ்வாறு தனிநாயகம் அடிகள் மேற்கண்ட தமிழாய்வுப் பணிகளையும் தமிழ்த்தூதுச் சொற்பொழிவுகளையும் அவரது நூல்களிலும் இடம் பெற்றுள்ள கல்விச் சிந்தனைகளையும்

**தமிழ்மொழி, இலக்கியம் - பண்பாடு - கலையென எல்லாச் சிறப்பும் பெற்றிருந்தும் உலக அரங்கில் கவனிப்பாரற்று இருந்த நிலையை மாற்ற, உலகின் பல நாடுகளுக்கும் சென்ற தனிநாயகம் அடிகள் அந்தந்த நாட்டு மொழியில் தமிழின் தொன்மை, வளமை, தமிழ்ப் பண்பாடு, தமிழ்க்கலை ஆகியவற்றைப் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.**

கல்விச் செயற்பாடுகளையும் விவரிப்பு ஆய்வு முறையை (Descriptive Method) பின்பற்றி உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content analysis) அணுகுமுறையில் விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவச்செய்ய கல்வி அறிவே அடிப்படை என்னும் கருதுகோளினைக் கொண்டு கல்வியின் நோக்கம், பயன், கல்விக் கொள்கை, கற்றல் கற்பித்தல் முறை, முறைசார் கல்வி, பாலர் கல்வி, வயது வந்தோர் கல்வி, ஆளுமைக் கல்வி, தமிழ்க் கல்வி, இலக்கியக் கல்வி, நுண்கலைக் கல்வி, பிறமொழிக் கல்வி, ஒப்பாய்வுக் கல்வி, பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி ஆகியன பற்றி தனிநாயகம் அடிகளார் குறிப்பிடும் கல்விச் சிந்தனைகள் விளக்கப்படுகின்றன. தனிநாயகம் அடிகளார் எழுதிய நூல்களும் கட்டுரைகளும், அவரது தமிழாய்வுப் பணிகள் பற்றி வெளிவந்துள்ள நூல்களும், கட்டுரைகளும் முதன்மைத் தரவுகளாக (Primary Source) அமைகின்றன.

தமிழியல் ஆய்வில் ஈடுபட்ட தனிநாயகம் அடிகளாரைப் போன்று தமிழ்ப்பற்றும், தமிழறிவும் பிறமொழிப் புலமையும், ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த தெளிவும் நம்மவர்களுக்கு இருக்குமாயின் தமிழ் ஆராய்ச்சியின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும்; அப்போதுதான் தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவச் செய்ய இயலும் என்ற கருத்து இந்தக் கட்டுரையின் முடிவாக அமைகின்றது.

**அறிமுகம்**

தனிநாயகம் அடிகள் இலங்கை யாழ்ப்பாணம் நெடுந்தீவைச் சார்ந்த ஸ்தனிஸ்லாஸ் கணபதிபிள்ளை, செசில் இராசம்மா தம்பதியர்க்குக் கரம்பனில் 02.08.1913 இல் பிறந்தவர். ‘தனிநாயகம்’ பரம்பரையில் தோன்றியதால் தன் தந்தையின் ஆலோசனைப் பெற்று சேவியர் நிக்கோலஸ் ஸ்தனிஸ்லாஸ் என்னும் தமது பெயரைச் சேவியர் எஸ். தனிநாயகம் என்று 1938 இல் மாற்றிக் கொண்டார். பள்ளி இறுதி வகுப்பு படிக்கும்போது லியோ டால்ஸ்டாய் எழுதிய ‘மறு உயிர்த்தல்’ (Resurrection) என்னும் நூலை வாசித்ததன் காரணமாக, இவரது வாழ்க்கை சமயப் பணியிலும் சேவையிலும், கல்விப் பணியிலும் ஈடுபட காரணமாயிற்று. 1934-39 இல் உரோமில் 43 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் குருத்துவக் கல்வி பயின்றார். தமிழ் குருத்துவ மாணவர் நடத்தி வந்த வீரமாமுனிவர் தமிழ்ச் சங்கத்தில் கலந்து கொண்டார். வத்திக்கான் வானொலி தமிழ் ஒலிபரப்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்றார்.

தனித்தமிழ்ப் புலமை பெற்றவராயினும் பதின்மூன்று மொழிகளைக் கற்றறிந்த தனிநாயகம் அடிகளின் தமிழாய்வுப் பணிகளையும் தமிழ்த்தூதுச் சொற்பொழிவுகளையும் அவரது நூல்களில் இடம் பெற்றுள்ள கல்விச்சிந்தனைகளையும் கல்விச் செயல்பாடுகளையும் இக் கட்டுரை விபரிக்கிறது. தமிழ்க் கற்றலில் எப்பொழுதும் அறிவை வளர்த்துக் கொண்டே இருக்கும் நற்பண்பு உடைய தனிநாயகம் அடிகள் வடக்கன் குளத்தில் புனித தெரெசாள் பள்ளி துணைத் தலைமையாசிரியராகப் (1940-45) பணியாற்றிய காலத்தில், தமது இருபத்தேழாம் வயதில் தனியாக ஓர் ஆசிரியரின் துணையோடு தமிழை





Image Source - www.tamildigitallibrary.in





Image Source - www.panuval.com

முறையாகப் பயின்று புலமை பெற்றார்.

தமிழ்மொழியின் மீது கொண்ட ஆர்வத்தால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., (1945-1947) பட்டப்படிப்புப் பயின்றார். எம். லிட் பட்டப்படிப்பில் (1947-1949) *'Landscape and Poetry: A study of nature in Classical Tamil Poetry'* என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டார். சங்கத் தமிழ் நூல்களான தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை இவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு செம்மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம் ஆகிய நான்கு மொழிகளின் படைப்புகளையும் அருகருகே வைத்து ஒப்பிட்டு திறனாய்வு செய்து தமிழின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறார். ஆங்கில இலக்கியத்திலிருந்தும் ஷேக்ஸ்பியர், சாச்சர், ஸ்பெனிசர், வேர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ் முதலிய கவிஞர்கள் இயற்கையைப் பாடிய கவிதைகளை ஒப்பிட்டு சங்கத்தமிழ் பாடும் இயற்கையின் தனிப்பெரும் அனுபவத்தை எடுத்துச் சொல்கிறது 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' என்னும் தனிநாயகம் அடிகளாரின் இந்த ஆய்வு நூல் (எஸ். ஆல்பர்ட், 2013:116).

இலண்டன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் "பழந்தமிழ் இலக்கியங்களில் கல்வியியல் சிந்தனைகள்" (*Educational thoughts in Ancient Tamil Literature*) எனும் தலைப்பில் (1955 -57) ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றார். டாக்டர் ஜி.யு. போப், டாக்டர் ஆல்பர்ட் ஸ்வைட்சர் போன்ற பேரறிஞர்கள் 'உலகிலேயே ஈடு இணையற்ற ஒரு தனிப்பெரும் நூல் என்றால் அது தமிழில் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள்தான்' என்று கூறியதை தெளிவாகக் காட்டுகிறது தனிநாயகம் அடிகளாரின் கல்விச்சிந்தனைகள் என்னும் இந்த ஆய்வு நூல்.

சமயங்களையெல்லாம் கடந்து வாழ்வியல் சிந்தனைகளை நினைவில் இருத்தும் திருக்குறளையும் பழந்தமிழ் இலக்கிய காலத்தில் சமய சிந்தனைகளை முன்வைத்த சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரட்டைக்

காப்பியங்களையும் கவனத்தில் கொண்டு பிறமொழி இலக்கியங்களில் காணும் கல்விச் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு தமிழின் சிறப்பை உயர்த்திப் பேசுகிறார் (எஸ்.ஆல்பர்ட், 2013, : 117).

### தமிழ்க் கற்பித்தல் பணி

தனிநாயகம் அடிகளாரின் பெருவிருப்பம் கல்வி கற்பித்தல் பணியாகும். 1952 இல் இருந்து 1961 வரை இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1961 - 1968 வரை மலேசியப் பல்கலைக்கழகத்தில் (கோலாலம்பூர்) இலக்கியத் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். இங்கு பணியாற்றியபோது தமிழ் விழா நடத்தியதுடன் தமிழ் நூல் கண்காட்சியையும் சிறப்புற நடத்தினார். தமிழ் நூல்கள் வெளியிட ஓர் தனிப் பிரிவை தொடங்கினார். பேராசிரியர் இஸ்மாயில் ஹூசைன் மலாய்மொழியிலும், பேராசிரியர் சீங்ஷ்சி திருக்குறளை சீன மொழியிலும் மொழிபெயர்த்திட, தனிநாயகம் பெருந்துணையாக இருந்தார். 1971 இல் பாரீஸ் நேப்பிள்ஸ் பல்கலைக்கழகத்தில் சிறப்புநிலைப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். 1998 பாரீஸ் College de France மற்றும் ஸ்டார் ஹோம் பல்கலைக்கழகத்தில் வருகைப் பேராசிரியராகப் பணிப்புரிந்துள்ளார்.

### கல்விச் சிந்தனைகள்

கல்வியின் நோக்கம் : ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆதல் கூடும் என்று எதிர்பார்ப்பாள். அவ்வாறு ஆவதே கல்வியின் நோக்கம் என்பதற்கு,

"ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்
பலர் யான் வாழ்வும் ஊரே" ( 191:67)

எனப் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனிடம் கூறிய புறநானூற்றுப் பாடல் வரிகளை மேற்கோளாகக் கூறுகிறார். உண்மையான கல்வியும், உண்மையான குறிக்கோளும், உண்மையான கோட்பாடுகளும் நிலைபெற்று விளங்கினால் மட்டுமே தமிழ்ச் சான்றோர் அடைந்த சிறப்பு நிலையை நாமும் அடையமுடியும் (தனிநாயகம் அடிகள்,1998:29) என்று அவர் கூறுவதிலிருந்து கல்வியின் நோக்கத்தைப் புரிந்துகொள்ளலாம்.

எதுவரை கற்பது என்பதற்கு,

"யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (: 397)

என்ற குறட்பா மூலம் நாம் வாழும் இக்காலத்திற்குப் பொருத்தமான கற்றல் சிந்தனையை விளக்குகிறார். அதாவது வேற்று நாட்டு மக்களையும், தத்துவத்தையும், பண்பாட்டையும், மொழிகளையும், இலக்கியங்களையும் நம் நாட்டில் உள்ளதைப் போல அறிந்திருக்க வேண்டுமாயின் நம் வாழ்நாள்கள் போதா, எனவே நம் உயிரிருக்கும் நாள் வரை கற்கவேண்டும் என்கிறார்.
அறிவு வளர்ச்சியில்லாத சமுதாயத்தில் சொந்த இனத்தாரோடுதான் மனிதன் உறவு கொண்டாடுவான். தன்னுடைய குடும்பத்தையும் சிறு இனத்தையும் காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர, மக்கள் அனைவரும் எங்கு வாழ்ந்தாலும் தம் இனத்தவரென்றும், எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டுமென்றும் சிந்தனைகள் அவனுக்குத் தோன்றும். உதாரணமாக 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் மனப்பான்மை, உலக ஒற்றுமைக் கல்விக்கு அடிப்படையாக அமைய வேண்டும் என்கிறார் (தனிநாயகம் அடிகள், 2012:26).
எந்தளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அந்தளவிற்கு அவன் ஆளுமை நன்கு வளரும். இச்சிந்தனை, ஆளுமைக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.
பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நீதியும், நிறைவும் மக்களிடையே நிறைந்து நிலவுவதற்குக் கல்வி அறிவே அடிப்படைக் காரணமாய்

தனிநாயகம் அடிகளாரின் பெருவிருப்பம் கல்வி கற்பித்தல் பணியாகும். 1952 இல் இருந்து 1961 வரை இலங்கைப் பேராதனைப் பல்கலைக்கழகக் கல்வித் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றினார். 1961 – 1968 வரை மலேசியப் பல்கலைக்கழகத்தில் (கோலாலம்பூர்) இலக்கியத் துறையின் தலைவராகவும் பேராசிரியராகவும் பணியாற்றினார். இங்கு பணியாற்றியபோது தமிழ் விழா நடத்தியதுடன் தமிழ் நூல் கண்காட்சியையும் சிறப்புற நடத்தினார்.

இருப்பதாகக் கூறுகின்றன. இதனை,

*“கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை” (: 401)*
என்று திருவள்ளுவரும்,

*“கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே” (தொல். மெய், நூற்பா.9)*

என்று தொல்காப்பியரும்,

*“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே பிறப்போ
ரன்ன வுடன் வயிற் றுள்ளும் சிறப்பின் பாலாய்த்
தாயும் மனம் திரியும் ஒருகுடிப் பிறந்த
பல்லோருள்ளும் மூத்தோர் வருக என்னாது
அவருள் அறிவுடையோன் ஆறுஅரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பால்
ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும்
அவன்கட்படுமே” (புறம்: 183)*

எனப் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனும் தம் பாடல்கள் வழி தெரிவிக்கின்றனர்.

### கற்பது எப்படி

மனிதன் நிறைவு பெற கல்வி, கேள்வி எனும் இருநிலைகளில் கற்றல் வேண்டும். கல்வி என்பது நேரடியாகத் தன்னார்வத்துடனும், உள்ளுணர்வுடனும் கற்பதாகும். கேள்வி என்பது பிறரால் வழங்கப்படும் வழிமுறை அறிவுரை ஏற்பதன் வழி கற்பதாகும்.

### கல்வியின் பயன்

கற்றறிந்தார் அவைகளிலும், மன்னர் அவைகளிலும் உள்ள சான்றோர் ஏற்றுக்கொள்ளுமாறு கல்வி, கேள்விகளால் தான் கற்றறிந்தவற்றைத் தெளிவாகவும், பொருத்தமாகவும் சுருக்கச் சொல்லாடலாகவும் எடுத்துரைக்கும் தகுதி பெறவேண்டும். அத்தகுதியை அடையவில்லை எனில் ஒருவர் பெற்ற கல்வியால் பயனேதுமில்லை.

### மொழித் திறன்

தமிழ் ஒலிகள் ஊருக்கு ஊர் உரையாடுதலில் வேறுபடுவது குறிக்கத்தக்கது. ஒலி வேறுபாடுகளை நீக்கி மேல்நாட்டு மொழிகளுக்கு உள்ளதைப்போன்று பொதுநிலை ஒலிப்புமுறை வேண்டும். உதாரணமாக ஆங்கிலத்திற்கு B.B.C இன் ஒலிப்புப் பொதுநிலை விதியாயிருத்தல் போல், தமிழுக்கும் யாதானுமொரு பொதுநிலை ஒலிப்பு வேண்டும் என்பதை உணர்ந்து, நம் எண்ணங்களைத் தமிழில் வெளிப்படுத்தும்போது பிறமொழிக் கலப்பின்றி வெளிப்படுத்த முயல்வோமாகில், நம் மொழிவளம் பெருகுவதற்கும் நம் இலக்கியம் உயர்வடைவதற்கும் வழிநல்கும் என்கிறார் தனிநாயகம் அடிகளார்.

### இலக்கியக் கல்வி

தனிநாயகம் அடிகளார் மனித விடுதலைக்கான, சமூக மேம்பாட்டிற்கான வழிகாட்டும் கல்வி இலக்கியமே போற்றுதற்குரியது என்பதை இலக்காக வைத்து பலமொழி இலக்கியங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தவர். தமிழ் இனத்தாரை ஒற்றுமைப்படுத்தும் கருவி தமிழ்மொழிதான் என்கிறார். ஆனால், நமது நாட்டில் தமிழ் கற்பித்தல் இரண்டாம் தர நிலையிலேயே இருந்து வந்திருக்கிறது. இந் நிலையை மாற்றிட வேண்டும். திறமைமிக்கவர்களைத் தமிழ் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும். அப்போதுதான் இலக்கியங்களைப் படிப்போர் தமிழில் கூறமுடியாத பொருள் ஒன்றும் இல்லை என்றும், எழுதும் பொருளை எவ்வாறு எழுத வேண்டும் என்றும் அறிந்து கொள்வார்கள் என்கிறார் தனிநாயகம் அடிகளார்.

### நுண்கலைக் கல்வி

நாம் பிறருடைய கலைகளை அனுபவித்தால்தான் தமிழ்க்கலைகளின் சிறப்பைப் பெரிதும் உணரமுடியும். தமிழ் மக்கள் அடைந்த உயர்ந்த பண்பிற்கு நம் நாட்டியக் கலையே ஒப்பற்ற சான்று. அக் கலையை நாம் சிலருக்கென்று ஒதுக்கி வைக்காது பலருக்கும் பயிற்றுவித்தல் வேண்டும் (அறிஞர் தனிநாயகம் அடிகள், 1998:73). தமிழ்நாட்டில் தமிழ் மாணவர் அனைவருக்கும் சிறிதளவேனும் கல்விக் கழகங்களில் தமிழ் இசையைப் பயிற்றுவிக்கும் நாள் விரைவில் வரவேண்டுமென்கிறார் (மேலது,1998:90).

### பாலர் கல்வி

தனிநாயகம் அடிகளார் தமிழக அரசின் பாலர் கல்வி ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தபோது அத்துறையில் பல ஆய்வுகள் மேற்கொண்டார். பாலருக்குக் கடுமையான சொற்களைப் படிப்பிக்காமல், குழந்தைகளின் செயலை விளக்குகின்ற எளிய சொற்களைப் பாடநூலில் சேர்த்தால் எளிதாக கற்றுக் கொள்வார்கள் என்கிறார்.

### வயதுவந்தோர் கல்வி

நாம் இவ்வுலகில் இன்பமாக வாழ்வதற்குக் கல்வி இன்றியமையாதது. வயதை எண்ணி நாம் கவலை கொள்ளாமல் படிக்கவேண்டும். வயது வந்தோர் கல்வி வரவேற்புக்குரியது என்றார்.

### பிறமொழிக் கல்வி

ஜப்பான் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் எவையேனும் இரண்டு ஐரோப்பிய மொழிகளைப் பயிலுகின்றனர். மொழிபெயர்ப்பு நூல்கள் வழி மேம்பாடு அடைகின்றனர். உலக நாடுகளில் எழுத்தறிவாளர் தொகையில் ஜப்பான் முதல் இடத்தில் உள்ளது. நாமும் பிறமொழிகளைக் கற்றால்தான் தமிழ்மொழியின் பெருமையை உலகறியச் செய்ய முடியும்; நம் நாட்டு எழுத்தாளர்கள் புதிய உலகங்களைக் காண்பர்.

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல் தமிழ்மொழியில்
இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
புகல்வதிலோர் மகிமை இல்லை
திறமையான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்”

என பாரதி கூறியதை மேற்கோள் காட்டுகிறார் (அறிஞர் தனிநாயகம் அடிகள், 1998:61.) மேலும் வேற்று நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர்கள், தமிழை ஒருவாறு மறப்பதற்கு அவர்கள் சூழ்நிலையே காரணமாக இருப்பதால், அந்நாடுகளின் மொழிகள் வாயிலாகத் தமிழின் புகழைப் பரப்புவது நம் கடமையாகும் என்கிறார்.

ஒப்பாய்வுக் கல்வி

உலகத்தில் உள்ள ஒவ்வொரு இனக் குழுவிலும் செயற்பட்ட, செயலற்படும் கல்வி முறைகள் குறித்த புரிதல் தேவைப்படுகிறது. தொல் சமூகமான கிரேக்கம் போன்ற சமூகங்களில் உள்ள கல்வி முறைக்கும் நமது பண்டையச் சமூகத்திலிருந்த கல்வி முறைக்குமான ஒப்பாய்வு தனிநாயகம் அடிகளாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் எதிர்காலத்தில், ஒரு கல்வி ஒப்பாய்வுத்துறை மாணவர், காலம் காலமாகத் தொடர்ந்து வரும் கல்விச் சிந்தனைகளைச் சுருக்கமாகத் தொகுத்துக் காணக்கூடும் என்கிறார்.

பிளாத்தோ குடிகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்றார். அவை, காவலர் வகுப்பு, படைவீரர் வகுப்பு, தொழிலாளர் வகுப்பு என்பனவாகும். குடிகள் தம் பிறப்பால் இவ்வகுப்புகளுக்கு உரியவராகிறார்கள். இம்மூன்று வகுப்புகளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் அந்தந்த வகுப்புகளிலேயே வாழ்ந்து தொழிலாற்றி உயிர் துறப்பர். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்தவர்க்குக் குடி உரிமைகள் இல்லை. அன்னார்க்கு கல்வி உரிமைகளும் இல்லை. ஒழுக்க வாழ்க்கைக்கு உரியவர்களாகவும் கருதப்பட்டிலர். இக்கருத்திற்கு எதிராக ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்று பாடிய திருவள்ளுவரின் திருக்குறளில் இருந்து,

“மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்”
(குறள்: 973)

எனும் குறளினை ஒப்பிட்டுத் தமிழரின் சமத்துவச் சிந்தனை முதிர்ச்சியைக் காட்டுகிறார் தனிநாயகம் அடிகள்.

**விடுதலைக்கான கருவி கல்வி**

*சமுதாயத் தலைவர்களாக இருப்பவர்களின் கல்விநிலை தாழ்ந்திருக்குமாயின் நாட்டினுடைய முன்னேற்றத்தை எதிர்பார்ப்பது எங்ஙனம்? இந்திய நாட்டின் புரட்சிக்குக் காரணமாக இருந்தவர் பலர் எவ்வாறு ஆங்கில நாட்டில் கல்வி கற்றிருந்தனரோ அவ்வாறே இந்தோனேசியாவின் விடுதலைக்குக் காரணமாக இருந்த தலைவர்கள் பலர் டச்சு நாட்டில் கல்வி கற்றிருந்தனர். எனவேதான், கல்வி விடுதலைக்கான கருவி என்பது தனிநாயகம் அடிகளார் சிந்தனையாகும்.*



**தனிநாயகம் அடிகள் (வலது)**

Image Source - https://tamil.wiki

*ரஷ்யா : செய்தித்தாள்களே பொதுமக்களின் கல்விக்கழகம், அங்கு அனைவரும் செய்தித் தாள்களைப் படிக்குமாறு நகர்களின் சிறப்பான இடங்களில் விளம்பரங்களைப் போல் செய்தித்தாள்களை விளம்பரப் பலகையின் மீது ஒட்டியிருக்கக் கண்டேன் என்கிறார் (தனிநாயக அடிகள், 2012:79).*

*இங்கிலாந்து : ஆங்கிலேயர் எங்கும் புத்தகங்களையும், செய்தித்தாள்களையும் படித்துக் கொண்டிருப்பவர். புகைவண்டி, பால்வண்டி, நிலம்புகும் வண்டி முதலிய வண்டிகளில் மக்கள் ஏனைய நாடுகளில் உரையாடுவதுபோல் உரையாடாது புத்தகங்களையும் ஏனைய வெளியீடுகளையும் பற்றி உரையாடிக் கொண்டே இருப்பார்கள் என்கிறார் (தனிநாயக அடிகள், 2012:103).*

*பாரசீகம் : பாரசீகப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றபோது அங்கு பாரசீக மொழியின் வழியாகவே மருத்துவக் கல்வியைப் புகட்டுவதை அறிந்தேன் (மேலது, 2012:299) என்கிறார். இத்தகைய கற்பிக்கும் போக்கு தமிழிலும் வரவேண்டும் என்னும் ஆவலை வெளிப்படுத்துகிறார்.*

*ஆப்பிரிக்கா : ஆப்பிரிக்க நாடுகளில் வாழ்ந்த மக்களின் விடுதலைக்கும் முன்னேற்றத்திற்கும் கல்வி அடிப்படையாக இருந்தது (மேலது, 2012:192) என்கிறார்.*

**தமிழாய்வுப் பணி**

*இந்தியாவிலும், இலங்கையிலும் மட்டுமே பல்கலைக்கழகங்களில் தமிழாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையை மாற்றி உலக நாடுகளில் தமிழாய்வு நடைபெற வழிவகுத்தவர் தனிநாயகம் அடிகள். தமிழ்சார்ந்த எல்லாத் துறைகளுமே தமிழ் ஆய்வுக்கு உட்பட்டவைதாம். தமிழ் ஆராய்ச்சியைப் பிரிவு பிரிவாகச் செய்வதைவிட அதை ஒருமுகப்படுத்தி முழுமையாகச் செய்வதே பொருத்தமானது என்பதை முதன்முதலாக உணர்ந்த அறிஞர் தனிநாயகம் அடிகளார் என்கிறார் க. கைலாசபதி. ஐரோப்பிய மனிதநேய ஆய்வுகளில் ஊறித் திளைத்த அவர், இலக்கியத்தையும் மொழியையும் மட்டுமல்லாமல் கலைகளையும் பிறதுறைகளையும் இணைத்து ஒருமுகப்படுத்திய ஒரு பண்பாட்டு அணுகுமுறையை உருவாக்கினார். ஆய்வியல் ஒப்பியல்துறை அவருக்கு தனித்தன்மை அளிப்பது. பிறநாட்டு*

இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆய்வு செய்வது தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும் என்றார்.

தனிநாயகம் அடிகளாரின் தமிழாய்வுப் பணிகளால், இந்தியாவில் ஆய்வுகள் என்றால் சமஸ்கிருதம், பாலி மொழிகள் சார்ந்தவை என்ற எண்ணம் தகர்ந்தது. கீழைத் தத்துவம் பண்பாடு என்பதற்கு மட்டுமல்ல, உலகத்தத்துவம் பண்பாடு குறித்த ஆய்வுகளுக்கும் தமிழ்மொழி முக்கியமானது என்ற உண்மை வெளிச்சம் உலக அறிஞர்களிடம் உருவாகியது (இரா. காமராசு, 2013, ப.4).

இவரே ஒவ்வொரு நாட்டில் உள்ள நூலகங்களிலும், பொருட்காட்சிகளிலும், கலைக்கூடங்களிலும் காணப்படுகின்ற தமிழியல் தொடர்பான ஆவணங்களை எதிர்காலத்தில் தமிழாய்வுக்குப் பயன்படும் வகையில் தமது நூல்களில் பதிவு செய்துள்ளார். எனவே இன்று நம் தமிழ்நாட்டுக்கு வேண்டியவர் யாரெனின், ஆற்றல் நிறைந்த கொள்கைச் சான்றோராகிய ஆராய்ச்சியாளர்கள்தாம் என்கிறார். தமிழியல் ஆய்வில் ஈடுபட்டு வரும் பிறநாட்டு அறிஞர்களைப்போல் தமிழ்ப்பற்றும், தமிழறிவும், பன்மொழிப்புலமையும், இக்கால ஆராய்ச்சி நெறிமுறைகளும் நம் இளைஞர்களுக்கு இருக்குமாயின் தமிழ் ஆராய்ச்சியின் எதிர்கால வெற்றிகள் எல்லையற்றவையாய் இருக்கும் என்கிறார் (அறிஞர் தனிநாயக அடிகள், 1998:30).

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி

பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி பற்றிய கண்ணோட்டங்களை உலகத்தொல்குடிச் சமூகங்களின் கண்ணோட்டங்களில் இணைந்து ஆய்வு செய்கிறபோது, பண்டைய கிரேக்கம், செல்டிக் மற்றும் வடஇந்தியாவில் நிலவியிருந்த கல்வி முறைக்கு நிகரான வளர்ச்சியுடன் தமிழகக் கல்வியும் இருந்து வந்துள்ளதை இலக்கியச் சான்றுகளால் அறியலாம் (சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:3334) இந்தியக் கல்வி முறையில் பழந்தமிழகத்தில் நிலவிய கல்விமுறை சமயச் சார்பற்றது.

மனித மைய எண்ணங்கள் உருவாகி மனிதனின் வீரதீரச் செயல்களைப் பாடுவோரே பண்டைத் தமிழ்ச் சமூகத்தின் முதல் கல்வியாளர்கள். தமிழ்ச் சமூகத்தின் இரண்டாம் கட்டக் கல்வி நிலை பாரம்பரியத் தொழில் வகுப்பினரான பாடகர், கூத்தர், இசைஞர், வாழ்த்துப்பா இசைக்கும் பாணர் ஆகியோரிடம் வெளிப்படுகிறது. பாணர், கூத்தர் பணியாக இருந்து வந்த கல்வியைப் புலவர்கள் முறைசார் கல்வியாகத் தகுதிப்படுத்தியது மூன்றாம் கட்டமாகும். புலவர்கள் தத்துவஞானியராகவும், சமயக் கல்வியாளருமாக நாகரிகமடைந்த காலத்தில் செய்யப்பட்டது நான்காம் காலகட்டமாகும். சங்ககாலத்தில் தொடக்கத்தில் பொதுத்தன்மையும் முறைசாராத் தன்மையும் கொண்டிருந்த கல்வி பின்னர் சமயம் சார்ந்த கல்வியாக மாறியது.

### பாணர் - கூத்தர் காலக் கல்வி:

நிலவியல் சார் பண்பாடும் சமுதாய அமைப்புகளும் உடைபட்டு குறுநில மன்னர்களின் ஆட்சியின் கீழமைந்த ஊர்களாகவும், நாடுகளாகவும் மாறிய சூழலில் பாணரும் கூத்தரும் பரிணாமம் பெற்றுள்ளனர். தமிழ்ச் சமூகத்தின் தொடர்பாளர்களாக இருந்த பாணர்களும் கூத்தர்களும் தொடக்கக்கால வெகுவான கல்வியாளர்களாக இருந்துள்ளனர். பொதுமக்களுக்குத் தம் கலையால் பொழுதுபோக்களித்தல், கற்பித்தல் எனும் பணிகளைப் பாணர்களே கைக்கொண்டிருந்தனர்.

### புலவர் காலக் கல்வி :

கிரேக்க சமூகத்தில் கவிஞர்களும் அறிவுவாதிகளும், தத்துவாதிகளும் செல்வாக்குப் பெற்று உயர்ந்ததும் கூத்தர்களது கலையும் வீரகாவியப் பாடல்களும் தமது முக்கியத்தவத்தை இழந்து தொய்வுற்றன. தமிழகத்தின் இக்காலகட்டம் கிரேக்கத்தின் புலவர் காலகட்டத்திற்கு நிகரானது. இயற்கையை, மனிதர்களை, வாழ்க்கையைப் பாடிய, சங்ககாலப் புலவர்கள் முறைசார் கல்வியின் தொடக்கப் புள்ளிகளாக இருப்பதைக் கிரேக்கச் சான்றுகளுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். யூத தீர்க்கதரிசிகளின் நீதிப்பற்றும், சமூகநீதியை நடைமுறைப்படுத்தும் திறனும், உண்மையும், தமிழ்ப் புலவர்களிடமும் குடிகொண்டிருந்தன

(சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:60) என்கிறார்.

மன்னராட்சி நடைபெற்று வந்த சமூகத்திலும், குலத்தலைவர்களும், குடித்தலைவர்களும் நிலத்தனியாட்சி பெற்றுவந்த சமூகத்திலும் புலவர்கள், மாணவர் குழுக்களுக்கு ஆசிரியர்களாகவும் பொதுச் சமூகத்திற்குத் தகவலாளிகளாகவும் இருந்துள்ளனர். தமது மாணவர்களுக்கு முறைசார் ஆரம்பக் கல்வியை அளித்ததோடு மட்டுமின்றிச் சமூகத்திற்கு நீதி வழிகாட்டல், ஒழுக்கவிதி கற்பித்தல், ஆலோசனை வழங்குதல் என்ற நிலையில் முறைசாராப் போதகர்களாகவும் தொழிற்பட்டனர்.

புலவர்காலப் பண்பாட்டில் கல்வி உயர்குடி மரபுடன் இணைவதையும் எடுத்துக் காட்டுகின்றது. அரசருக்கு அமைச்சர்களும், ஆலோசனைக் குழுக்களும் இருந்தன. அவர்களைவிடவும் புலவர்களே அறிவுரை வழங்கும், கற்பிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். புலவர் எனும் சொல் உலக அறிவு, தருக்கம், கல்வி என்பனவற்றுடன் தொடர்புடையது. புலவர்கள் காலத்தில் கல்வி ஒரு கல்வித் தொழில்நுட்பமாக இருந்தது. பெண்பாற்புலவர்கள் சமகாலத்தில் புலவர்கள் போல ஆற்றல்மிக்க ஆசிரியர்களாகவும் ஆலோசகராகவும் இருந்தனர். கற்றலில் கவிதை புனைவதில் பால் வேற்றுமையோ, தொழில் வேற்றுமையோ காட்டப்படவில்லை. கல்வியின் இலக்கு சிறந்த குடிகளாக வாழத் தயார் செய்வதாக இருந்தது.

தொகை நூல்கள் காலம் என்பது பண்பாட்டிலும் கல்விச் செயல்பாடுகளிலும் புலவர்கள் முக்கியத்துவம் பெற்றுவந்த காலகட்டமாகும். தொல்காப்பியத்திலும் தொகை நூல்களிலும் காணப்படுகின்ற கவிதை மரபுகள் இளம் மகளிர் உயர்குடிச் சூழலில் தோழியர் உடனிருக்க, செவிலியரால் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டிருந்ததைக் காட்டுகிறது. செவிலி, தோழி இருவரும் காதல் உளவியலின் கரைகண்ட வல்லுநர்களாக இருப்பதைப் பழந்தமிழ்க் கவிஞர்கள் துல்லியமாகச் சித்தரிக்கின்றனர் (சேவியர் தனிநாயக அடிகளார், 2009:63). அக, புறப் பாடல்களில் புலவர்களின் உளவியல் ரீதியான நுண்ணறிவு வெளிப்பட்டது. தொல்காப்பியம் கவிதை இயற்றுவதற்கான துணை நூலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தமை மொழியியல், இலக்கணம், யாப்பு, மரபுகள், உளவியல் போன்ற பல்வேறு பெருநூல்களின் செறிவாக, சுருக்கப் பதிவாக இருந்திருக்கலாமென்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

இறையாண்மையின் இலக்குகள், அறவியல், உண்மை, நீதி, சமத்துவம், நன்றியறிதல், அன்பு ஆகிய சான்றாண்மைமிக்க மனித உருவாக்கத்திற்கான இலட்சியங்களையும், நல்லொழுக்க நீதிக் கூற்றுகளையும் தொகைநூற்களிலும் முன்னூற்களிலிருந்தும் தொகுக்கின்றது திருக்குறள்.

| | |
|---|---|
| யாதானும் நாடாமால் | (குறள்:397) |
| பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் | (குறள்:996) |
| அன்பிலார் எல்லாம் தமக்குரியர் | (குறள்:72) |
| இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் | (குறள்:82) |
| இன்னாசெய் தார்க்கும் இனியவே | (குறள்:987) |
| அறத்தான் வருவதே இன்பம் | (குறள்:39) |
| இருள்நீக்கி இன்பம் பயக்கும் | (குறள்:352) |
| மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் | (குறள்:457) |
| மேலிருந்தும் மேலல்லார் | (குறள்:973) |
| உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் | (குறள்:596) |
| உள்ளற்க உள்ளம் சிறுகுவ | (குறள்:798) |
| நல்லாண்மை என்பது | (குறள்:1026 |

என ஒவ்வொரு குறட்பாக்களும் முழுக்க முழுக்க மனிதநேய உணர்வின் உந்தலில் நின்று உருப் பெற்றுள்ளன என்பதே திருக்குறள் உலக மானுடக் கவிதை எனும் பார்வையை நியாயப்படுத்துகிறது (சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:85) என்கிறார்.

### முறைசார் கல்வி அறிமுகம்

கி.பி. முதலாம் நூற்றாண்டு தமிழகம் உரோமானியரோடு பெருமளவு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது. வியாபாரத்தினால் பொருளாதாரச் சூழல் பெருகி வளர நகரங்கள் முன்னேற்றமடைந்தன. தென்னகத்தின் கிழக்கு மேற்குக் கரையோரத் துறைமுகங்கள் யாவும்

இரண்டாம் தொழிற்சாலைகளாகவும், வெளிநாட்டு வணிக மையங்களாகவும் வளர்ச்சி பெற்றன. இதனால் மக்கள் அடிப்படை உற்பத்தித் தொழில்களைக் கைவிட்டு இரண்டாம் நிலைப் பணிகளைச் சென்றடைந்தனர். அதையொட்டி முறைசார்ந்த கல்வி அறிமுகப்படுத்தப்பட்டு அதைப்பெறுவதற்கான வாய்ப்புக்களும் பெருகின (சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:55). காலனியாதிக்க காலத்தில் ஐரோப்பிய உள்ளடக்கமே இங்கு வெகுகாலமாகக் கல்விப் பொருளாக இருந்து வந்துள்ளது. அரசாங்க வேலைத் தேவையை நிறைவேற்றுவது மட்டுமே அதன் நோக்கமாக இருந்தது. நமது மரபுகளைத் தொடருகின்ற கல்வி நிலையங்களை நமது சூழலின் சமூகப் பொருளாதாரத் தேவைகளுக்குப் பதிலளிக்கின்ற வகையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

### சமயக் கல்வி

இந்தியக் கல்வி முறையில் பழந்தமிழகத்தில் நிலவிய கல்விமுறை சமயச் சார்பற்றது. ஆனால் சங்க காலத்தின் தொடக்கத்தின் பொதுத் தன்மையும் முறைசாராத் தன்மையையும் கொண்டிருந்த கல்வி பின்னர் சமயம் சார்ந்த முறைசார் கல்வியால் மாறியது. புலவர்கள் தடம் மறையத் தொடங்கிய பின்னர் தத்துவ ஞானியர் கவிதை மொழியையும் மரபுகளையும் பயன்படுத்துவதைக் காண்கிறோம். புலவர்கள் இடத்தைச் சமய ஆசிரியர்களும் தத்துவ ஞானிகளும் பெறுவதை அறியலாம். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தத்துவக் காலகட்ட வளர்ச்சியின் சமயக் கல்வியை முன்னிறுத்துகின்றன. இரட்டைக் காப்பியக் காலத்தில் வேத பிராமணர்களும் சமண, பௌத்த சமயத் துறவிகளும் கல்வியாளர்களாக விளங்கியுள்ளனர். துறவியல்லாதோரும் கூடப் பண்டிதர்களும் புலவர்களுமாக இருந்து வந்ததுள்ளதைக் காணமுடிகின்றது. கல்வியைப் பரப்புதல், மரபான வழக்காறுகளைப் பாதுகாத்தல் போன்ற பணிகளைச் செய்தனர். காப்பியங்கள் முன்னிலைப்படுத்தும் இக்காலகட்டத்தில் திருக்குறள் கருதுகின்ற இலக்கிய மனிதனைப் படைத்து உருவாக்குகின்ற கல்வி நடைபெற்றிருக்கலாம் என்கிறார் தனிநாயகம் அடிகள்.

### வேதக் கல்வி

தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட வைதீகக் கல்வி, வட இந்தியாவில் நிலவி வந்த வைதீகக் கல்வியின் அமைப்பை மிக நுட்பமாகப் பின்பற்றியது. சாதிக்கட்டுப்பாடு சமாச்சாரங்களில் மறு பரிசீலனையைப் பொருட்படுத்தாமல் கற்றல் வாய்ப்புகள் அனைத்தும் பிராமண மாணவர்களையே சென்றடைந்தன. வேதக் கல்வியும், அதன் வளர்ச்சியும் வேள்வி, சடங்குகள், வேத நூற்பாராயணம் போன்ற நடவடிக்கைகளில் மையம் கொண்டது. மாணவர்கள் இளம்பருத்திலிருந்து கற்பிக்கப்பட்டு வந்தனர். வேள்வி செய்தலின் பொருட்டாகவே வேதங்கள் திறன்மிகு ஆசிரியர்களைக் கொண்டு நன்கு கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. மனித வீடுபேற்றுக்கு வழிநடத்தும் ஓர் அமைப்புமுறை வேதக் கல்விக்கு உண்டு (சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:73).

### சமண - பௌத்தக் கல்வி

சமணம், பௌத்தம், ஆசிவகம் போன்ற இறைமைசாராச் சமயங்கள் மற்றும் உலக இன்ப சிந்தனைப் பள்ளிகள், கற்பித்தல் இலக்குகள், இறைமைக் கோட்பாட்டை வலியுறுத்தும் வேதக் கல்வியுடன் மிகுந்த முரண்பாட்டைக் கொண்டிருந்தன. சமண, பௌத்த தமிழ்ச் செவ்விலக்கியங்களில், வேதம் ஓதவல்ல ஒருவர் தனது இச்சைகளையும், உணர்வுகளையும் அடக்கித் தன் ஈடேற்றத்திற்காகக் கொள்ளும் வேட்கையும் தேடலுமே அவரது அற நடவடிக்கையாகக் காணப்படுகிறது. வினைப் பயனிலிருந்து ஒருவராலும் தப்பிக்க இயலாது என்பதே சமண, பௌத்தத்தின் வழி உருவான நீதி இலக்கியங்களின் முக்கிய அறிவுறுத்தலாக இருக்கின்றது (சேவியர் தனிநாயகம் அடிகளார், 2009:75).

புகார், உறையூர், மதுரை நகரங்களில் இக்காலத்தில் சமயப்பள்ளிகள் நிறுவப்பட்டிருந்தன. தத்துவம் நேரடியாகக் கற்பிக்கப்படுவதுடன் காப்பிய மாந்தர்களின் வாழ்க்கை நிகழ்வுகளிலிருந்து எடுத்துக்காட்டும் அளிக்கப்படுகின்றது.

இளமையும் நில்லா யாக்கையும் நில்லா வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா புத்தேள் உலகம்

*புதல்வருக்தாரார் மிக்க அறமே விழுத்துணை யாவது*
*(மணிமேகலை, சிறைசெய்காதை, 22, 135-38)*

சமணமும் பௌத்தமும் தமது சமய ஆசிரியர்களின் ஆளுமையை பெருமதிப்புடன் போற்றி மனதினுள் ஆழப் பதியச் செய்வதை தமது சமயக் கல்வியின் கற்பித்தல் முறையாகக் கொண்டிருந்தன. சமகால நிகழ்வுகளிலிருந்தும் வாழ்வின் போக்கிலிருந்தும் அவர்கள் பாடுபொருளை தேர்வு செய்தனர். உதாரணமாக, 'கவுந்தியடிகள் இரவுப் பயணம் தவிர்த்ததின் நோக்கம் சிறுஉயிரினங்களை மிதித்துத் தீங்கு செய்ய நேரிடும் என்பதின் மூலம் அகிம்சை தத்துவம் கற்பிக்கப்படுகிறது.' ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம். வினைப்பயனும் துன்பமும் அதனாலேயே நிகழ்கின்றன. பௌத்த இளம் பிக்குணி மணிமேகலை மற்றும் பௌத்த தத்துவஞானி அறவண்டிகள் உரையாடலில் வினயமும், தம்மமும், அபிதம்மமும் குறித்துப் பேசப்படுகின்றன.

தமிழர் சமய மரபில் இயற்கைச் சமயங்களாகவே இருந்து வந்த சைவம், வைணவம் சமயக் கல்வியை அவர்களின் வழிபாட்டு நெறிகளின் வாயிலாகவும், துறவிகள், பூசாரிகள் வாயிலாகவும் தொடர்புபடுத்தியிருப்பதைக் காணமுடிகிறது (சேவியர் தனிநாயகம் அடிகள், 2009:72).
தமிழ்மொழி இந்துக்களுக்கு மட்டும் உரியதன்று. அது சமணர், பௌத்தர், இஸ்சுலாமியர், கிறித்தவர் என அனைத்து மதத்தவர்களுக்கும் உரிய தனித்துவமான மொழி என்று உலகம் முழுவதும் இதன் சிறப்பை தனிநாயகம் அடிகள் எடுத்துரைத்தார் (எஸ். ஆல்பர்ட், 2013:119).


### தமிழ்த் தூதுப் பணி

உலக அரங்கில் தமிழ்மொழியும், தமிழ் இலக்கியமும், தமிழ்ப் பண்பாடும் எல்லாச் சிறப்பும் பெருமையும் பெற்றிருந்தும் கவனிப்பாரற்று இருந்த நிலையை மாற்ற உலகப் பயணத்தை மேற்கொண்டு தமிழ்த்தூது நிகழ்த்தினார். உலகின் பல நாடுகளுக்குச் சென்று அந்தந்த நாட்டு மொழியில் தமிழின் சிறப்பை எடுத்துரைத்தார். அவரது தூதுப் பயணத்தின் விளைவாக உலக அறிஞர்கள் தமிழ்மொழியை பற்றி அறிந்து கொண்டனர் என்பார் முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் (தனிநாயகம் அடிகளார் நினைவு மலர், 1992).

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்றபின் உலகப் பயணத்தை மேற்கொள்கிறார். இந்த உலகப் பயணங்களில் பல மொழிகளைக் கற்கும் வாய்ப்பும், பல நாடுகளின் நாகரீகங்களையும் பண்பாடுகளையும் அறியும் வாய்ப்பும் ஏற்பட்டது. இந்த அனுபவங்களை வைத்து 'தமிழ்த்தூது' என்ற ஒரு நூலும் 'ஒன்றே உலகம்' என்ற ஒரு நூலும் எழுதியுள்ளார்.

1950-51 இல் ஜப்பான் மற்றும் அமெரிக்கக் கண்டத்திலும் 1954 இல் இங்கிலாந்திலும் ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள கல்வியியல் நிறுவனங்களுக்கு ஒரு கல்விப் பயணம் மேற்கொண்டார். 1955 இல் இந்தோனேஷியா, கம்போடியா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் ஆசியா பவுண்டேஷன் ஏற்பாட்டில் கல்விப் பயணம் மேற்கொண்டார். 1960 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகள் கனடா, ஜெர்மனி, இத்தாலி, ஸ்காண்டிநேவியா, ரஷ்யா ஆகிய நாடுகளில் வயது வந்தோர் கல்வி பற்றி ஆய்வுப் பயணம் மற்றும் 1970 இல் ஐரோப்பா நூலகங்களில் கல்விப் பயணம் மேற்கொண்டார். தனிநாயகம் அடிகள் தன்வாழ்நாள் முழுவதும் படிப்பதும், எழுதுவதும் உலக நாடுகளுக்குப் பயணம் செய்வதும் தமிழ் பற்றி அறிஞர் அவைகளில் பேசுவதுமாக வாழ்ந்திருக்கிறார்.

ஹோமரின் ஒடிசியையும், வெர்ஜிலின் இலியதையும் மக்கள் போற்றுவது போல் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை உலகம் போற்றுமாறு நாம் செய்ய வேண்டும். கொன்பூசியஸ், செனக்கா முதலிய நீதி நூல் ஆசிரியர்களை உலகமாந்தர் எங்ஙனம் அறிந்து படிக்கின்றனரோ அங்ஙனம் திருவள்ளுவரையும் அறிந்து படிக்குமாறு நாம் செய்தல் வேண்டும். சாலோ, எலிசபெத், பிரௌனிங், ஷேக்ஸ்பியர் போன்றோரின் காதற்பாக்களை மக்கள் காதலித்துப் படித்து இன்புறுவதுபோல் நம் அகத்துறை இலக்கியங்களையும் அவர்கள் படித்து இன்புறும் நாள் உதிக்க வேண்டும். உலக




**1554 ஆம் ஆண்டில் லிசுபனில் அச்சிடப்பட்ட லூசோ-தமிழ் மறைக்கல்வி (Cartilha) நூல். 1950களில் தனிநாயகம் அடிகளாரால் கண்டுபிடிக்கப்பட்டது.**

Image Source - ta.wikipedia.org

இலக்கியத் திரட்டு (*World Classics*) எனும் பெருந்தொகை நூல்களில் நம் இலக்கிய நூல்களும் இடம்பெறும் பெருமை அடைவித்தல் வேண்டும். மேற்றிசை கண்ணும், கீழ்த்திசைகண்ணும் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்க் கலைகளின் தனித்தன்மையை உலகிற்கு உணர்த்துமாறு செய்வித்தல் வேண்டும் என்கிறார் (அறிஞர் தனிநாயகம் அடிகள், *1998:29*).

தமிழ்த் தூதுவுக்கென வேற்றுநாடு செல்வோர் திருவள்ளுவர் கூறும் மூன்று பண்புகளில் முதன்மை சான்றவராய் இருத்தல் இன்றியமையாதது என்பதை,

*“அறிஉரு ஆராய்ந்த கல்வி இம்மூன்றன் செறிவு*
*உடையான் செல்க வினைக்கு”*
*(குறள்: 684)*

எனும் குறள் கூறுகிறது. அதாவது இயற்கையிலே அறிவும், கண்டார் விரும்பும் தோற்றப் பொலிவும் பலரோடும் பலகாலம் ஆராயப்பட்ட கல்வியும் என நன்கு மதித்தற்கேதுவாய் இம்மூன்றன் செறிவு உடையவர் அவ்வினைக்குச் செல்லுதல் வேண்டும் என்கிறார் (அறிஞர் தனிநாயகம் அடிகள், *1998:12*).

ஏட்டுச்சுவடிகளைத் தேடிக் கண்டு தொகுத்த பணி எவ்வளவு உயர்வானதோ, தமிழ்நாட்டுக்கு வந்த சமயக் குருமார்கள் தமிழ் இலக்கியங்களை கற்று தேர்ந்து பரப்பியது எவ்வளவு உயர்வானதோ அவற்றைப் போன்றதொரு பணிதான் தனிநாயகம் அடிகளாரின் அயலகத் தமிழ் பரப்பும் பணி (இரா. காமராசு, *2013:36*) ஆகும்.

உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம் கொழும்பில் *1952* இல் ‘தமிழ்ப் பண்பாட்டு மையம், தூத்துக்குடியில் *1950* இல் தமிழ் இலக்கியக்கழகம் (தற்போது திருச்சிராப்பள்ளியிலும் செயலாற்றிக் கொண்டுள்ளது). புதுதில்லியில் *1964* இல் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் ஆகிய தமிழ் அமைப்புகளைத் தோற்றுவித்தார். உலகத் தமிழ்

ஆராய்ச்சி மன்றம் வெளிநாட்டினர் தமிழை அறியவும் ஆராயவும் வழி வகுத்தது. உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெறவும் வழி அமைத்தது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும்வகை செய்தல் வேண்டும் என்ற கருதுகோளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்தவர் தனிநாயகம் அடிகள். சென்னை தரமணியில் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் தொடங்க அடித்தளமிட்ட தனிநாயகம் அடிகளார்,

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யு மாறே"*
*(திருமந்திரம், 81)*

என்ற திருமூலர் கோட்பாட்டை வாழ்வின் கோட்பாடாக அமைத்துக் கொண்டவர் என்கிறார் ச.சு. இராமர் இளங்கோ (தனிநாயகம் அடிகள், 1998 : iii).

1963 இல் தமிழக அரசு தமிழ் வளர்ச்சிக்குழு உறுப்பினராக இருந்த தனிநாயகம் அடிகளார் தமிழின் மேம்பாட்டுக்காக நாள்தோறும் உழைத்தவர். இவரைத் 'தமிழ் உலகின் சின்னம்' என்று குறிப்பிடுகிறார் சொல்லின் செல்வர் இரா. பி. சேதுப்பிள்ளை. 'எங்கள் சிறப்பெல்லாம் தமிழ்நாட்டிற்குள்தான்; தனிநாயகம் அடிகளாரின் சிறப்பெல்லாம் தரணியெங்கும் பரவி இருக்கிறது' என்று டாக்டர் மு.வ. குறிப்பிடுகிறார். 'தனிநாயகம் அடிகளாரைப் போல் தமிழ் உணர்வு தமிழர்கள் எல்லோருக்கும் வரவேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா குறிப்பிடுகிறார். (மதுரை இளங்கவின், 2016:102-103)

### உலகத்தமிழ் மாநாடு

உலகத்தமிழ் மாநாட்டினைக் கூட்டி தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். 1966 இல் மலேசியா கோலாலம்பூரில் நடந்த முதல் உலகத் தமிழ் மாநாட்டில் 25 நாடுகளைச் சேர்ந்த 132 தமிழறிஞர்கள் கலந்து கொண்டனர். தமிழ் வரலாறும் பண்பாடும், தமிழ் இலக்கியத் திறனாய்வு, இலக்கியமும் சமுதாயமும், இசையும் நடனமும் கலையும் தொன்மையியலும் திராவிட ஒப்பியல் திறனாய்வு ஆகியன பற்றி 146 கட்டுரைகள் வழங்கப்பட்டன.

தமிழ்நாட்டில் அச்சு இயந்திரம் வந்த புதிதில் முதலில் அச்சிடப்பட்ட கார்த்தியா (1534), தம்பிரான் வணக்கம் (1578), கிரிசித்தியாணி வணக்கம் (1579) தமிழ்ப் போர்ச்சுகீசிய அகராதி (1679) ஆகிய நூற்களைக் கண்டுபிடித்து பதிப்பித்து முதல் மாநாட்டில் வெளியிட்டியிருக்கிறார் (எஸ். ஆல்பர்ட், 2013:118). இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு 1968 இல் சென்னையில் நடத்தப்பட்டது. இதில் வெளிநாட்டில் வாழும் தமிழர் வாழ்வு பற்றி ஆராயப்பட்டது.

மூன்றாவது உலகத் தமிழ் மாநாடு 1970 இல் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்றது. இம்மாநாட்டில் 186 தமிழ் அறிஞர்கள் பங்குபெற்றுள்ளனர். சிந்து சமவெளி எழுத்து, சங்க இலக்கியங்களின் கால அளவு, தமிழுக்கும் வடமொழிக்குமான உறவு, தற்காலத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வரங்குகள் சிறப்பாக நடைபெற்றது. நான்காவது உலகத் தமிழ் மாநாடு 1974 இல் இலங்கை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்றது.

### முடிவுரை

தனிநாயகம் அடிகள் தமிழைப் பற்றிப் பேசத் தொடங்கிய காலம் முதலே தமிழ் ஒரு செம்மொழி என்ற உண்மையை வலியுறுத்தி வந்தார். தமிழை உலக அரங்கில் உயர்த்திய தமிழ் அறிஞர், உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் நிறுவி, உலகத் தமிழ் அறிஞர்களை ஒருங்கிணைத்து உலகத் தமிழ் மாநாடு கண்ட கல்வியாளர் அவர். தமிழ்த்தூதுப் பணியை மேற்கொண்டு ஐரோப்பா கண்டத்திலுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்மொழி குறித்துச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியவர். இலங்கை, மலேசியா போன்ற நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தமது பன்மொழிப்புலமையால் தமிழ் மொழியின் தொன்மையை, வளமையை, பெருமையை ஆய்வு நூல்கள் மூலம் உலகறியச் செய்தவர். தமிழ்ப் பண்பாட்டை உலகம் அறிந்துகொள்ள "Tamil Culture" என்னும் காலாண்டு ஆய்விதழை நடத்தியவர். கிழக்காசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு பரவியிருத்தலைக் கண்டு

உணர்த்தியவர். மறைந்த தமிழ் நூல்களைக் கண்டுபிடித்து வெளிக்கொணர்ந்தவர். தமிழின் சிறப்பை உலகம் அறிந்திட ஆங்கிலத்தில் மூன்று நூல்கள் தனிநாயகம் அடிகளாரால் வெளியிடப்பட்டன. உலகில் பிற நாடுகளில் தமிழ் ஆய்வு மேற்கொண்டு வருவது பற்றி வெளிநாடுகளில் தமிழ்க் கல்வி என்ற நூலை (1968) வெளியிட்டார்.

இவ்வாறு தமிழியல் ஆய்வில் ஈடுபட்ட தனிநாயகம் அடிகளாரைப் போன்று தமிழ்ப் பற்றும், தமிழறிவும் பிறமொழிப் புலமையும், ஆராய்ச்சி நெறிமுறைகள் குறித்த தெளிவும் நம்மவர்களுக்கு இருக்குமாயின் தமிழ் ஆராய்ச்சியின் எதிர்காலம் சிறப்பானதாக இருக்கும்; அப்போதுதான் தேமதுரத் தமிழோசை உலகமெங்கும் பரவச் செய்ய இயலும் என்ற கருத்து இந்தக் கட்டுரையின் முடிவாக அமைகின்றது.




Image Source - https://tamil.wiki

**திறவுச்சொற்கள்**

தமிழ்த்தூது, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க்கலை, தமிழோசை, தமிழ்த் தொண்டர், தமிழ்க்கல்வி, தமிழ் ஒப்பாய்வுக்கல்வி.

மேற்பார்வை நூல்

1. சேவியர் தனிநாயகம் அடிகளார், பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் கல்வி, ந. மனோகரன் (மொ. பெ). மாற்று வெளியீட்டகம், சென்னை. முதற் பதிப்பு, டிசம்பர் 2009.

2. தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், எஸ்.ஆர். எம். பல்கலைக்கழகம், தமிழ்ப் பேராயம், காட்டாங்குளத்தூர், சென்னை, 2012.

3. அறிஞர் தனிநாயகம் அடிகள், தமிழ்த் தூது (கட்டுரைக் கொத்து), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, ஐந்தாம் பதிப்பு, 1998.

4. சிவசுப்பிரமணியன், ஆ., தமிழ்க் கிறித்துவம், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி, லிட், நாகர்கோவில், முதற்பதிப்பு, டிசம்பர் 2014.

5. மதுரை இளங்கவின், தமிழ் போற்றும் கிறிஸ்துவர், சேவியர் தனிநாயகம் பக்: 813, வைரவன் பதிப்பகம், மதுரை, முதற்பதிப்பு, டிசம்பர் 1984.

6. மதுரை இளங்கவின், தமிழ்க் கிறிஸ்தவம், தனிநாயகம் அடிகள் பக்: 97103, காவ்யா, சென்னை, முதற்பதிப்பு 2016.

7. ஜான்சன், எஸ்.பி., (தொ.ஆ), நூறாவது தமிழ் மலராய்ப் பூத்த தனிநாயகம், தேடல் வெளியீடு, தூய பவுல் இறையியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி, 2013.

ஆல்பர்ட், எஸ்., தமிழ்க் கலாச்சாரமும் தவத்திரு தனிநாயகம் அடிகளாரும் தளம் கலை இலக்கிய இதழ் (காலாண்டு), ஏப். ஜூன் 2013, பக்:114 - 119.

8. காமராசு, இரா., தமிழ்த்தூதர் தனிநாயகம் அடிகளார், காக்கை சிறகினிலே, கலை இலக்கிய மாத இதழ், அக்டோபர் 2013, பக். 36, .

9. தனிநாயகம் அடிகளார் நினைவு மலர், திருச்சிராப்பள்ளி, 1992.

10. உXavier.s, Thaninayagam (Thaninayaga Adigal), Educational Thought in Ancient Tamil Literature, The Publication Division, Bharathidasan University, Tiruchirappalli, Tamilnadu, First Edition 2010.

11. Complete works of Thani Nayagam Adigalar Vol.I., August 2013, Pop ular Pathipagam, Chennai.



கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

*இனக் குழுமம், சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் வேறுபாடுகளைக் கொண்ட பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் (MULTI – CULTURAL SOCIETIES) சமாதான வழிகளில் தீர்க்க முடியாதனவான சிக்கலான அரசியல் பிரச்சினைகள் தீவிரமடைந்து உள்நாட்டுக் குழப்பங்களிற்கும், உள்நாட்டு யுத்தங்களிற்கும் வழிவகுத்துள்ளன. இதனை மூன்றாம் உலக நாடுகளின் சமகால வரலாறுகள் உணர்த்தியுள்ளன. இவ்வரசியல் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தீர்த்தல், சம்மந்தப்பட்ட நாடுகளின் அமைதிக்கும், சமூக – பொருளாதார – அரசியல் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. அமைதி வழியான தீர்வை அரசியல் தீர்வாக (POLITICAL SOLUTION) அமைப்பதோடு அதிகாரப் பகிர்வு (POWER SHARING), சுயாட்சி (SELF RULE) ஆகியவற்றுக்கான ஆட்சிக் கட்டமைப்புக்களை, அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்குவதும் இன்றியமையாத முன் தேவையாக உள்ளது. அந்த வகையில், 'அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்' என்னும் இப்புதிய தொடரில் மூன்றாம் உலக நாடுகளான இலங்கை, இந்தியா, மலேசியா, பாகிஸ்தான், நைஜீரியா, எத்தியோப்பியா, சூடான், மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் அனுபவங்களை விளக்கியுரைக்கும் கட்டுரைகளின் தமிழாக்கம் வெளியிடப்படும். பல்வேறு தீர்வு மாதிரிகள், அத்தீர்வு மாதிரிகளின் பின்னால் உள்ள அரசியல் கோட்பாடுகள் (POLITICAL THEORIES), அரசியல் யாப்புத் தத்துவங்கள் (CONSTITUTIONAL PRINCIPLES) என்பனவும் விளக்கிக் கூறப்படும்.*

*உரையாடலுக்கு ஆதாரமான பிரதி – ஆங்கிலத்தில் : கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ண*

# எதியோப்பியாவின் சமஷ்டி அரசியல் யாப்பு : ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் ஆய்வுரையை முன்வைத்து ஓர் உரையாடல்

சட்ட அறிஞர் ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் 'TOWARDS DEMOCRATIC GOVERNANCE IN SRI LANKA - A CONSTITUTIONAL MISCELLANY' என்ற தலைப்பிலான கட்டுரைத் தொகுப்பை வெளியிட்டுள்ளார். பத்துக் கட்டுரைகளின் தொகுப்பாக அமையும் இந்நூல் 2014 ஆம் ஆண்டு 'INSTITUTE FOR CONSTITUTIONAL STUDIES' என்னும் ஆய்வு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இந்நூலின் தலைப்பை பொருள் விளக்கம் செய்யும் முறையில் இவ்வாறு மொழிபெயர்த்துக் கொள்ளலாம்.

*'இலங்கையில் ஜனநாயக ஆளுகையை நோக்கிய பயணம் : அரசியல் யாப்புக் கட்டுரைக் கதம்பம்'*

இந்நூலின் பத்துக் கட்டுரைகளில் முதலாவது கட்டுரையின் தலைப்பு ஆங்கிலத்தில் பின்வருமாறு உள்ளது.

'CONSTITUTION MAKING IN MULTICULTURAL SOCIETIES: SOME INTERNATIONAL EXPERIENCES'

இதனைத் தமிழில் பின்வருமாறு மொழி பெயர்த்துக் கொள்ளலாம். "பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களிற்குப் பொருத்தமான அரசியல் யாப்புக்களை வரைதல் : சர்வதேச அனுபவங்கள் சில".

இம் முதலாவது கட்டுரை 74 பக்கங்கள் வரை நீளுவதான ஓர் ஆய்வுரை. அதன் முதல் 9 பக்கங்களில் உள்ளவற்றைத் தழுவி ஒரு கட்டுரையை எழுதி ஏப்பிரல் 2024 'எழுநா' இதழில் பிரசுரித்தோம். இம்மாதம்

அக்கட்டுரையின் பக்கம் 53-62 வரையான 9 பக்கங்களில் 'எதியோப்பியா சமஷ்டி' பற்றி அவர் எழுதியுள்ளவற்றைத் தழுவியும் சுருக்கியும் கூறவுள்ளோம். அத்துடன் அமையாது இக்கட்டுரையில் விக்கிரமரட்ண அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் தொடர்பான 'உரையாடல்' ஒன்றையும் நடத்தவுள்ளோம். எமது நோக்கத்தை தெளிவுபடுத்தும் முறையில் இக்கட்டுரையின் தலைப்பை 'எதியோப்யாவின் சமஷ்டி அரசியல் யாப்பு : ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் ஆய்வுரையை முன்வைத்து ஓர் உரையாடல்' எனக் குறிப்பிட்டோம். இனி சட்ட அறிஞர் விக்கிரமரட்ண அவர்கள் எதியோப்பிய சமஷ்டி பற்றி எழுதியவற்றைப் பார்ப்போம்.

அந்நாட்டில் 80 இற்கும் மேற்பட்ட இனக்குழுமங்கள் உள்ளன. அங்கே பல மொழிகள் பேசும் சமூகங்கள் உள்ளன. சில இனக் குழுமங்களின் சனத்தொகை வெறும் 10,000 உறுப்பினர்கள் மட்டுமே. அத்தோடு வரலாற்று நோக்கில் பார்த்தால் உலகின் பழமையான அரச உருவாக்கங்களில் ஒன்றாக எதியோப்பியா விளங்குகிறது. இவ்வாறு தொடக்கப் பந்தியில் எதியோப்பியாவை அறிமுகம் செய்யும் விக்கிரமரட்ண அவர்கள் அந்நாட்டின் பிரமிப்பைத் தரும் இனக்குழுமப் பன்மைத்துவம் பற்றிய புள்ளி விபரங்களைத் தருகிறார்.


எதியோப்பியாவின் 80 இற்கும் மேற்பட்ட இனக்குழுமச் சமூகங்களில் ஒறோமோ (OROMO) யாவற்றையும் விடப் பெரியது. ஒறோமோவின் சனத்தொகை மொத்த சனத்தொகையின் 34.5%. இதற்கு அடுத்த நிலையில் அம்ஹரா (AMHARA) (26.9%), சோமாலி (6.2%), TIGRAWAY (6.1%), சிடமா (4%), குறகே (2.5%), வொல்யடா (2.3%) என, நாட்டின் நான்கில் ஒன்றுக்கு மேற்பட்ட சனத்தொகையுடைய அம்ஹரா முதல் மிகச் சிறிய சிறுபான்மைச் சமூகங்கள் பலவற்றையும் ஒரே புவியியல் எல்லைக்குள் உள்ளடக்கிய நாடாக எதியோப்பியா விளங்குகிறது. பேசும் மொழியின் அடிப்படையிலான புள்ளி விபரங்கள் பின்வருமாறு:




எதியோப்பியா Image Source - www.britannica.com

| மொழிப் பிரிவு | வீதாசாரம் |
|---|---|
| ஒறோமோ (OROMO) | 33.8% |
| அம்ஹரிக் (AMHARIC) | 29.33% |
| சோமாலி | 6.25% |
| ரிகிறின்யா (TIGRINYA) | 5.86% |
| சிடமோ | 4.84% |
| வொல்யடா | 2.21% |

"எதியோப்பியா ஒரு பன்மைப் பண்பாட்டுச் சமூகம்; அது ஒரு குறைவிருத்தி (LDC) நாடும் ஆகும். (ஆயினும்) அந்நாடு அதிகாரப் பகிர்வு (POWER SHARING) மூலம் நாட்டின் இனக்குழும முறுகல் நிலையையும், முரண்பாடுகளையும் வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்து வரும் நாட்டிற்கு உதாரணமாக விளங்குகிறது. சமஷ்டி முறை அந்நாட்டின் மிகவும் பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்திக்கு உதவியுள்ளது.




**எதியோப்பியாவில் பேசப்படும் மொழிகள்**

Image Source - translatorswithoutborders.org

அம்ஹரிக் நாட்டின் உத்தியோக மொழியாக உள்ளது. நான்கு பிரதான இனக்குழும மொழிச் சமூகங்களில் அம்ஹறா, ரிக்கிறவே, ஒறோமோ என்பன உயர்நிலப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன. சோமாலி இனக்குழுமம் நாட்டின் தென்கிழக்கு பகுதியின் தாழ்நிலப் பகுதிகளில் வாழ்ந்து வருகிறது. மொழியை விட சமய வேறுபாடுகளும் உள்ளன.

| | |
|---|---|
| எதியோப்பிய ஒதொடோக்ஸ் (ETHIOPIAN ORTHODOX) | 43.5% |
| முஸ்லீம் | 33.9% |
| புரட்டஸ்தாந்து | 18.6% |
| மரபுவழிச் சமயங்கள் | 2.6% |
| கத்தோலிக்கர் | 0.7% |

மேற்குறித்த புள்ளி விபரங்கள் 2007 ஆம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டவை.

மெங்கிஸ்டு அறபெய்ன் (MENGISTU AREFAINE) என்ற ஆய்வாளர் எதியோப்பியாவில் நவீன அரசு (MODERN STATE) உருவாவதற்கு முந்திய நிலையை பின்வருமாறு கூறுகிறார்.

”எதியோப்பியாவின் நவீன அரசு உருவாகும் முன் அங்கு உண்மையில் மத்திய கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்ட சுயாட்சி அரசுகள் (De Facto Autonomy) இருந்தன. அச்சுயாட்சிப் பகுதி தமது சொந்த மன்னர்களையும் ஆளுநர்களையும் கொண்டிருந்தன. ஆனால் 20 ஆம் நூற்றாண்டில் நவீன அரசு உருவாக்கம் பெற்ற பொழுது எதியோப்பியாவின் பல்வேறு பிராந்தியங்களுக்கும் மத்திய அரசு தனது அதிகாரத்தை விஸ்தரித்தது. இம்மத்திய அரசு அப்பிராந்தியங்களின் பல்வேறு இனக்குழுமங்களையும் தேசிய சமூகக் குழுக்களையும் (NATIONAL GROUPS) தனது ஆட்சி அதிகாரத்துக்குள் கொண்டு வந்தது. இதன் பின்னர் ஒரே ஒரு சமூகக்குழுவின் (அம்ஹறா) மேலாதிக்கத்திற்கு இவை உட்பட்டன. அம்ஹறா இனக்குழுமத்தின் கையில் ஆட்சி அதிகாரம் வந்தது. பிற இனக்குழுமங்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்து விலக்கப்பட்டன. அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த ஆட்சியாளர்கள் இப் பிராந்தியங்களுக்கு அவ்வப்பகுதி மக்களின் ஆலோசனைகளைப் பெறாதும், உண்மையும் நேர்மையும் அற்ற முறையிலும் பல்வேறு அரசியல் யாப்புக்களை அப்பகுதிகளுக்கு வழங்கினர். இவ் ஆட்சியாளர்களும் மத்திய அரசும் சமயம், பண்பாடு, மொழி என்பனவற்றால் பல்வேறுபட்ட குழுக்களை மேலாதிக்கம் பெற்ற இனக்குழுவான அம்ஹராவுடன் ஒன்றிக் கலந்து விடும் கொள்கையை (POLICY OF ASSIMILATION) நடைமுறைப்படுத்தின. இதன் விளைவாக எதியோப்பியா நீண்டகால சிவில் யுத்தத்தாலும், பொருளாதாரப் பின்னடைவாலும் பேரிடர்களை எதிர்கொண்டது. இதற்கெல்லாம்




**எதியோப்பியாவில் பின்பற்றப்படும் மதங்கள்**

Image Source - www.reddit.com

காரணம் மேலாதிக்கம் செலுத்திய குழுவான அம்ஹரா அதிகார வர்க்கம் தாமாகவே முன்வந்து அரசாங்க அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள மறுத்தமையாகும். இவ்வாட்சியாளர்கள் பன்மைத்துவம் (DIVERSITY) என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொண்டு அதனை உரிய முறையில் நிர்வகிப்பதற்குரிய செயல்முறையை (MECHANISM) வகுக்கத் தவறிவிட்டனர் (பக் 54).

மேற்குறித்த கூற்றை 'MENGISTU AREFAINE' எழுதிய 'FEDERALISM AND ACCOMMODATION OF DIVERSITIES WITH SPECIAL REFERENCE TO DIVIDED SOCIETIES (HELBING AND LITCHTENHAHRN 2005 : பக் 2478) என்னும் நூலில் இருந்து ஐயம்பதி விக்கிரமரட்ண மேற்கோள் காட்டுகிறார்.

### பேரரசர் ஹெய்லி செலஸ்சி ஆட்சிக்கு முடிவு கட்டிய சதிப்புரட்சி

பேரரசர் ஹெய்லி செலஸ்சி 1974 இல் சதிப்புரட்சி மூலம் ஆட்சியில் இருந்து நீக்கப்பட்டார். தற்காலிக இராணுவச் சபை (DERG) ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. 17 ஆண்டுகள் கழித்து 1991 ஆம் ஆண்டில் 'EPRDF' என்ற அமைப்பினால் ஆட்சியில் இருந்து DERG நீக்கப்பட்டது. 'EPRDF' என்ற சுருக்கப் பெயரின் விரிவு எதியோப்பிய மக்களின் புரட்சிகர ஜனநாயக முன்னணி (THE ETHIOPI AN PEOPLE'S REVOLUTIONARY DEMOCRATIC FRONT) என்பதாகும். 'ஈ.பீ.ஆர்.டீ.எவ்' அரசாங்கம் உடனடியாகவே அரசியல் யாப்புச் சபை (CONSTITUENT ASSEMBLY) ஒன்றை அமைத்தது. இவ்வரசியல் யாப்புச் சபை, சமஷ்டி அரசியல் யாப்பு (FEDERAL CONSTITUTION) ஒன்றை வரைந்தது. மக்களின் கருத்தறிதலுக்காக சர்வசன வாக்கெடுப்பையும் நடத்தி அங்கீகாரத்தையும் பெற்றது. மன்னராட்சி முடிவுக்கு வந்ததோடு 1995 இல் அந்நாடு எதியோப்பிய சமஷ்டி ஜனநாயகக் குடியரசு (THE FEDERAL DEMOCRATIC REPUBLIC OF ETHIOPIA) எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் இரண்டாம் உலக யுத்தத்தின் போது எதியோப்பியாவுடன் இணைக்கப்பட்டிருந்த எரிற்றியா (ERITREA) 1993 இல் எதியோப்பியாவில் இருந்து பிரிந்து தனி நாடாக தன்னைப் பிரகடனப்படுத்தியது.

எதியோப்பியா பாராளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்ட நாடாகும். அந்நாட்டின் ஜனாதிபதி நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்படுவதில்லை. ஜனப்பிரதிநிதிகள் சபை, சமஷ்டி சபை (HOUSE OF THE FEDERATION) என்ற இரு சபைகளதும் இணைந்த அமர்வில் (JOINT SESSION) மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவார்.

### தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனம், ஒரு மக்கள்

எதியோப்பியாவின் பெயரில் 'சமஷ்டி', 'ஜனநாயகம்', 'குடியரசு' என்ற மூன்று வார்த்தைகள் இடம்பெற்றிருப்பதை (எதியோப்பிய சமஷ்டி ஜனநாயகக் குடியரசு) போன்று அதன் யாப்பின் உறுப்புரை 39 (4) அந்நாட்டின் மக்கட் குழுமங்களை 'NATION, NATIONALITY OR PEOPLE' என்ற மூன்று சொற்களால் வரையறை செய்துள்ளது. இம் மூன்று சொற்களையும் தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனம், ஒரு மக்கள் என்று மூன்று வெவ்வேறு பதங்களாக மொழிபெயர்த்துக் கொள்வோம்.

இவை பொருள் பொதிந்த எண்ணக்கருக்களை குறிக்கும் சொற்கள் என்பதைத் தமிழ் வாசகர்கள் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். உறுப்புரை 39 (4) இனை பின்வருமாறு மொழிபெயர்த்துக் கொள்ளலாம்.

'பொதுவான பண்பாடு, ஒரே விதமான (ஒழுக்க) நியமங்கள், பரஸ்பரம் புரிந்து கொள்ளக் கூடிய பொது மொழி, பொதுவான அல்லது தொடர்புடைய அடையாளங்களில் நம்பிக்கை, பொதுவான உளவியல் பாங்கு என்பனவற்றை உடையவர்களாகவும் தொடர்ச்சியான நிலப்பரப்பில் செறிவுற்றும், முதன்மை பெற்றும் வாழ்பவர்களுமான சனக்குழுமங்கள்' என தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனம், ஓர் மக்கள் என்பன வரையறை செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனம், ஓர் மக்கள் என்பன சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையன; இவ்வுரித்து நிபந்தனையற்ற உரித்துமாகும் (UNCONDITIONAL RIGHT TO SELF - DE TERMINATION). இந் நிபந்தனையற்ற சுயநிர்ணய உரிமை பின்வரும் கூறுகளை உள்ளடக்கியதாகும்.

1. பிரிந்து (தனிநாடாகச்) செல்வதற்கான உரிமை (RIGHT TO SECESSION [V1])

2. தமது சொந்த மொழியில் பேசவும், எழுதவும், மொழியின் வளர்ச்சிக்காக உழைக்கவும் உள்ள உரிமை

3. தமது பண்பாட்டை வெளிப்படுத்தவும், வளர்க்கவும், அப்பண்பாட்டின் வரலாற்றைப் பாதுகாப்பதற்குமான உரிமை

4. ஒரு தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனம், ஓர் மக்கள் (A PEOPLE) என்பன முழுமையான சுய ஆட்சிக்கான (SELF GOVERN MENT) உரிமை உடையன. தமது வாழ்விடமான புவிப்பரப்பில் (TERRITORY) அரசாங்க நிறுவனங்களை அமைக்கவும், அரசாங்கத்திலும் சமஷ்டி அரசாங்கத்திலும் சமத்துவமான பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கும் அவற்றிற்கு உரிமை உண்டு.

மேலே குறிப்பிட்டவற்றை விட எதியோப்பிய அரசியல் யாப்பு பிரிந்து போவதற்கான உரிமையையும் வழங்குகிறது. பிரிந்து போதல் உட்பட்ட சுய நிர்ணய உரிமைக்கு தேசிய இனங்கள், சிறுபான்மை தேசிய இனங்கள் உரிமையுடையனவாய் உள்ளன. ஒறோமோ தேசிய விடுதலை முன்னணி (OROMO NATIONAL LIBERATION FRONT), ஒகாடன் தேசிய விடுதலை முன்னணி என்பன இந்த உரிமையைப் பயன்படுத்தியே அங்கு விடுதலைக்கான பேரம்பேசலில் ஈடுபட்டிருப்பதையும் குறிப்பிடுகிறார் (பக். 55-56).

### இனக்குழுமங்களின் அடிப்படையிலான அரசுகளைக் கொண்ட நாடு

எதியோப்பியாவின் சமஷ்டி இனக்குழுமங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசுகளைக் கொண்டது என்பதை அரசியல் யாப்பின் உறுப்புரை 46 (2) கூறுகிறது என விக்கிரமரட்ண குறிப்பிடுகிறார் (பக். 56).


'STATES SHALL BE STRUCTURED ON THE BASIS OF SETTLEMENT PATTERNS, LANGUAGE, IDENTITY AND CONSENT OF THE PEOPLE' என 46 (2) உறுப்புரை கூறுகிறது. இதன் பொருள் வருமாறு:

"மக்களின் குடியிருப்புப் பாங்கு, மொழி, அடையாளம் மற்றும் அவர்களின் சம்மதம் என்பனவற்றின் அடிப்படையில் அரசுகள் கட்டமைக்கப்படும்."

எதியோப்பியா 9 அரசுகளைக் கொண்ட சமஷ்டியாகும். அவையாவன:

1. ரிகாரி
2. அவார் (AFAR)
3. அம்ஹரா
4. ஒறோமோ
5. சோமாலி மற்றும் பென்சாங்குல்/குமாஸ்
6. தெற்குத் தேசியங்கள் (SOUTHERN NATIONS)
7. SNNPS பிராந்திய அரசு (NATIONALITIES AND PEOPLES REGIONAL STATE)
8. கம்பெல மக்களின் பிராந்திய அரசு (GAMBELA PEOPLES' REGIONAL STATE)
9. ஹராரி மக்களின் அரசு (HARARI PEOPLES' REGIONAL STATE)

மேற்குறித்த 9 அரசுகளில் எந்த ஒரு அரசுப் பிரதேசமும் ஒரு இனத்தை மட்டும் கொண்ட




எதியோப்பியாவின் அரசுகள்

Image Source - mail.ethioembassy.org.uk

பகுதியாக இல்லை. பல இனக்குழுமங்களும் எல்லா அரசுகளுக்குள்ளும் உள்ளன. உதாரணமாக தெற்குத் தேசங்கள் (SOUTHERN NATIONS) என்னும் பிராந்திய அரசின் கீழ் 50 சமூகக் குழுக்கள் வாழ்கின்றன. இந்த 9 அரசுகளுக்குள் வாழும் தேசிய இனங்களும், சிறுபான்மைத் தேசிய இனங்களும், மக்களும் எந்தச் சமயத்திலும் தமக்குத் தேவைப்படும் அரசு ஒன்றை அமைத்துக் கொள்ளலாம். தலைநகரான அடிஸ்அபாவும், இன்னொரு நகரமான டயர் டவாவும் (DIRE DAWA) சுய நிர்ணய உரிமையுடையவை. இவற்றுக்கு சுய நிர்வாக உரிமை (POWERS OF SELF - ADMINISTRA TION) வழங்கப்பட்டுள்ளது. இவை மத்திய அரசாங்கத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியனவாய் உள்ளன.

## மத்திய அரசினதும் ஒன்பது அரசுகளதும் அதிகாரங்கள்

மத்திய அரசினது அதிகாரங்களாவன :

1. சமூக பொருளாதார அபிவிருத்தி
2. வருவாய், நிதி மற்றும் வெளிநாட்டு முதலீடு (FISCAL, MONETARY AND FOREIGN INVESTMENT POLICIES)
3. சுகாதாரம் தொடர்பான தேசிய தர நிர்ணயம் (NATIONAL STANDARDS)
4. கல்வி, பண்பாடு, வரலாற்று மரபுரிமையும், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்
5. வெளி விவகாரக் கொள்கை
6. சமஷ்டி அரசுப் பொலிஸ் (FEDERAL POLICE)
7. அரசுகளுக்கிடையிலான வர்த்தகமும் வெளிநாட்டு வர்த்தகமும்
8. குடிவரவு, பிரஜா அந்தஸ்து
9. சமஷ்டி அரச வரிகள் (FEDERAL TAXES)
10. வான், ரெயில், கடல் போக்குவரத்து
11. நாணயமும் அந்நியச் செலாவணியும்
12. அவசரகாலநிலை
13. நிலம், இயற்கை வளங்கள், வரலாற்று மரபுரிமை என்பனவற்றை பயன்படுத்தலும் பாதுகாத்தலும்
14. தேர்தல்கள்

சமஷ்டி அரசுக்கு மட்டும் உரியவை எனக் குறித்தொதுக்கப்படாத அதிகாரங்கள் அரசுகளுக்கு உரியவையாகும்.

சமஷ்டி அரசுக்கும் அரசுகளுக்கும் என ஒதுக்கப்பட்ட ஒருங்கிணை அதிகாரங்களும் அரசுகளுக்குரியவை.

அரசுகளின் அதிகாரங்கள் பின்வருவன :

1. பொருளாதார, சமூக அபிவிருத்திக் கொள்கைகளை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
2. நிலம் மற்றும் இயற்கை வளங்களை சமஷ்டி அரசால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு அமைய நிர்வகித்தல்
3. அரசுகளுக்கெனக் குறித்து ஒதுக்கப்பட்ட வரிகளையும் தீர்வைகளையும் அறவிடுதல்
4. அரசினது பொலிஸ் சேவையும், சட்டமும் ஒழுங்கும்

### சனப் பிரதிநிதிகள் சபை

எதியோப்பியாவின் சனப்பிரதிநிதிகள் சபை (HOUSE OF REPRESENTATIVES) 550 உறுப்பினர்களைக் கொண்டது. இத்தொகையில் ஆகக் குறைந்தது 20 ஆசனங்கள் சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் மக்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும். தேர்தல் ஒற்றையங்கத்தவர் தொகுதி முறையில் 'FIRST - PAST - THE - POST' முறையில் நடைபெறும். சனப்பிரதிநிதிகள் சபையை விட சமஷ்டிச் சபை (HOUSE OF FEDERATION) என்ற நிறுவனம் பற்றியும் ஜயம்பதி விக்கிரமரட்ண குறிப்பிடுகிறார். இது பற்றிய விபரங்கள் நூலின் பக்கம் 57 இல் தரப்பட்டுள்ளன.

### அரசுகளின் அரசியல் யாப்புகள்

எதியோப்பிய சமஷ்டியில் 9 அரசுகள் சமஷ்டியுடன் இணைந்தனவாக உள்ளன என்று குறிப்பிட்டோம் அல்லவா? எதியோப்பியாவின் அரசியல் யாப்பை விட, ஒவ்வொரு அரசுக்கும் தனித்தனியான யாப்புக்களும் உள்ளன என விக்கிரமரட்ண குறிப்பிடுகிறார். "அரசுகள் தமக்கென ஒரு அரசியல் யாப்பைக் கொண்டுள்ளன. அவை ஒவ்வொன்றும் தத்தம் விசேட பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு தமது அரசியல் யாப்புக்களை வரைந்துள்ளன. உதாரணமாக SNNPS பிராந்திய அரசு, கீழ்சபையை விட மேற்சபை என்னும் இரண்டாவது சபையையும் (A SECOND CHAMBER) கொண்டுள்ளது. இது தேசியங்களின் சபை (COUN CIL OF NATIONALITIES) என அழைக்கப்படுகின்றது. இவ்விரண்டாம் சபையில் அவ்வரசுக்குக் கீழ் உள்ள பகுதியில் உள்ள தேசிய இனங்கள், சிறுபான்மைத் தேசிய இனங்கள், மக்கள் எனப்படும் எல்லாச் சமூகங்களிற்கும் ஆகக் குறைந்தது ஒரு பிரதிநிதியைத் தம் பிரதிநிதியாகக் கொண்டிருக்க வழி செய்யப்பட்டுள்ளது. அரசுகள் தமது பகுதியின் பன்மைத்துவத்திற்கு ஏற்ப உள்ளூராட்சி அமைப்புகள் பற்றிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம். அரசுகள் இன்னொரு முக்கியமான முடிவையும் செய்கின்றன. அது தம் பகுதிக்குரிய உத்தியோக மொழி அல்லது மொழிகள் எவை என்ற முடிவாகும்.

### எதியோப்பிய அரசியல் யாப்பின் குறைகளும் நிறைகளும்

நூலின் 5859 பக்கங்களில் எதியோப்பிய அரசியல் யாப்பின் குறைகளையும் நிறைகளையும் மதிப்பீடு செய்து கருத்துரைக்கப்பட்டுள்ளது.

1. எதியோப்பிய சமூகம் எதிர்நோக்கும் முக்கியமான அறைகூவல் அதன் பன்மைத்துவத்தை (DIVERSITY) முகாமை செய்வதாகும். பன்மைத்துவம் என்ற பின்புலத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு இந்த யாப்பு வரையப்பட்டுள்ளது. இதனால் இதனை 'DIVERSITY - ORIENTED FEDERALISM' என அழைப்பது பொருத்தமானது என அறபெய்ன் (AREFAINE) என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். எதியோப்பியாவின் பன்மைத்துவம்சார் பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்வு செய்வது, அனைத்து தேசிய இனங்களையும், சிறுபான்மைக் குழுக்களையும் சமத்துவமான பங்கேற்பு (EQUAL PARTNERSHIP) என்பதை ஏற்கச் செய்வதில் தங்கியுள்ளது. குறிப்பாக அந்நாட்டின் பெரும் தேசிய இனங்கள் மேலாதிக்கம் செய்யும் போக்கைக் கைவிட்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் அறபெய்ன் கூறுகிறார்.
2. எதியோப்பிய அரசியல் யாப்பு தேசிய இனங்களின் பிரச்சினையில் (THE NATIONALITY QUESTION) அதிகூடிய கவனம் செலுத்தியுள்ளது. அரசியல் யாப்பினை நடைமுறைப்படுத்துவதில், எல்லைகளை தீர்மானித்தல், தாயகத்திற்கு வெளியே வாழும் நபர்களின் பிரச்சினைகள், ஒரு பகுதியில் செறிந்து வாழாது சிதறிப் பரவியுள்ள இனக்குழுமங்களின் பிரச்சினைகள் போன்ற நடைமுறைப் பிரச்சினைகள் பல உள்ளன.
3. 'FISEHA' என்ற அறிஞர் எதியோப்பிய அரசியல் யாப்பை நடைமுறைப்படுத்தும் போது எழுகின்ற பிரச்சினைகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகிறார். 59 ஆம் பக்கத்தின் ஒரு பந்தியில் அவர் கூறிய கருத்துகளை விக்கிரமரட்ண சுருக்கமாகத் தந்துள்ளார்.
4. டானியல் டெமிசி (DANIEL DEMISSIE) என்பவர் வொல்யடா (WOLAYTA) மக்கள் என்ற சிறு மக்கள் சமூகத்தின் பிரதிநிதி. அவர் 'எதியோப்பியாவில் சமஷ்டியும் ஜனநாயகமும் குழந்தைப் பருவத்திலேயே உள்ளன.' (FEDER ALISM AS WELL AS DEMOCRACY ARE STILL IN INFANCY IN ETHIOPIA) என்று நம்பிக்கை தரும் கருத்தைக் கூறுகிறார்.
5. எதியோப்பியாவின் அரசியலில் 'EPRDF' என்னும் சுருக்க எழுத்துக்களால் குறிப்பிடப்படும் அரசியல் கட்சியின்

ஆதிக்கம் ஆழ வேரூன்றியுள்ளது.

1974 இல் ஹெய்லி செலஸ்சி ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்த 'EPRDF' இயக்கத்தின் விரிவுப்பெயர் எதியோப்பிய மக்கள் புரட்சிகர ஜனநாயக முன்னணி (ETHIOPIAN PEOPLE'S REVOLUTIONARY DEMOCRATIC FRONT) என்பதாகும்.

'EPRDF' ஜனநாயகம், சோஷலிசம் என்பவை பற்றிப் பேசினாலும் அது சிறுபான்மை தேசிய இனங்களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் நடைமுறையில் மதிப்பளிப்பதாகத் தெரியவில்லை. அது ஆட்சியதிகாரத்தில் தேர்தல்கள் மூலம் அமர்ந்து கொண்டதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சுதந்திரமான இயக்கத்திற்கு இடமளிக்காது, மத்தியப்படுத்தப்பட்ட முடிவெடுக்கும் செயல்முறையை (CENTRALISED DECISION MAKING PROCESS) நடைமுறைப்படுத்துகிறது. 2010 இல் பாராளுமன்றத் தேர்தல்களும், பிராந்திய அரசுகளின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும் அறிவிக்கப்பட்ட உடனேயே 'EPRDF' கட்சியின் மேலிடம் அவசர கூட்டத்தை நடத்தி, பிராந்திய அரசுகளின் அரசுச் சட்ட சபைகள் (REGIONAL STATES COUNCILS) யார், யாரைப் பதவிகளுக்கு தெரிவு செய்ய வேண்டும் என்பதை அறிவித்தது.

இது கொள்கை வகுப்பதில் மத்தியப்படுத்தப்பட்ட கட்சி முறையே முக்கியமான மாறிலியாக் காணப்படுவதையும் சமஷ்டி முக்கியமல்ல என்பதையும் எடுத்துக் காட்டுகிறது (THE CEN TRALISED PARTY SYSTEM, NOT FEDERALISM , IS A CRUCIAL VARIABLE IN POLICY MAKING - பக். 60).

6061 ஆம் பக்கங்களில் 'EPRDF' கட்சியின் ஆதிக்கம் சமஷ்டி செயல்முறையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவது பற்றி விளக்கப்பட்டுள்ளது.

### சமஷ்டி எதியோப்பியாவிற்கு நன்மையளித்ததா?

எதியோப்பியா பற்றிய எண்ணம் எமது மனதில் தோன்றும் போது, அந்நாட்டின் கொடிய வறுமையும், எலும்பும் தடியுமாக பசியால் வாடி வதங்கும் சிறுவர்களின் கோரக் காட்சிகளும், வறுமை குறித்த பிம்பங்களுமே வரும். ஊடகங்களும் அவ் விம்பத்தையே எமக்கு தந்து கொண்டிருக்கின்றன. ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் எதியோப்பிய சமஷ்டி பற்றி நம்பிக்கை தரும் சித்திரத்தை எமக்கு வழங்குகிறார்.

சமஷ்டி, எதியோப்பியாவின் தேசிய இனங்களின் சுயநிர்ணயம், எதியோப்பியாவின் வறுமை என்ற இரண்டு விடயங்கள் சார்ந்த அறை கூவல்களுக்கு முகம் கொடுத்து அவை சார்ந்த பிரச்சினைகளை வெற்றிகரமாக சமாளித்து முன்னேறுகிறது என்கிறார். எத்தியோப்பியா பற்றிய அறிமுகத்தை அதிகுறைவிருத்தி நாடொன்றில் சமஷ்டி எதியோப்பியா (ETHIOPIA - FEDERALISM IN AN LDC) என ஆரம்பிக்கும் விக்கிரமரட்ண முடிவுரையாகப் பின்வருமாறு கூறுகிறார்.

"(எதியோப்பியாவில்) சமஷ்டி அறிமுகப்படுத்திய பின்னர் கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்புகள் என்பனவற்றில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1991 இல் நாட்டில் இரண்டு பல்கலைக்கழகங்கள் மட்டும் இருந்தன. அவ்விரண்டிலும் கல்வி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இருந்தது. முதனிலைக் கல்வி சனத்தொகையின் 19% மக்களுக்கே கிடைத்தது. சமஷ்டி முறை அறிமுகமான பின்னர் 30 புதிய பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்டன.

இப்புதிய பல்கலைக்கழகங்கள், எல்லாப் பிராந்தியங்களுக்கும் பல்கலைக்கழகக் கல்வியை எடுத்துச் செல்லும் வகையில் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டன. பிராந்திய அரசுப் பகுதிகளில் (REGIONAL STATES) பல பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. முன்னர் ஆண்டு ஒன்றுக்கு சில ஆயிரம் மாணவர்களே பல்கலைக்கழகங்களிற்குத் தெரிவானார்கள். சமஷ்டி முறை அறிமுகமான பின்னர் இது 150,000 ஆக அதிகரித்துள்ளது. முதல் நிலைக் கல்வியில் சேர்வு வீதம் 92% வீதமாக உயர்ந்துள்ளது. சுகாதார வசதிகளில் பெரு முன்னேற்றம் ஏற்பட்டதோடு சுகாதார வசதிகள் பிற்பட்ட பகுதிகளுக்குச் சென்றடைதல் அதிகரித்துள்ளது. வீதிகள், தொலைபேசி வசதி, மின்சாரம் போன்ற உட்கட்டமைப்புக்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எதியோப்பியா இப்போது தனது அண்டை நாடுகளான கெனியா, சுடான் என்பனவற்றிற்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதற்குத் திட்டமிடுகிறது (பக். 62).

### அரசியல் யாப்புச் சட்டங்களின் ஒப்பீடு

'பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களிற்குப் பொருத்தமான அரசியல் யாப்புக்களை வரைதல் : சர்வதேச அனுபவங்கள் சில' என்னும் கட்டுரையின் சில பக்கங்களில் உள்ள கருத்துக்களை மேலே சுருக்கித் தந்தோம். இக்கட்டுரைத் தலைப்பு, இக்கட்டுரை ஆராயும் விடயங்கள் ஆகியன அரசியல் யாப்புச் சட்டம் பற்றியவை. குறிப்பாக அரசியல் யாப்புச் சட்டங்களின் ஒப்பீடு (COMPARATIVE CONSTITU TIONAL LAW) என்ற பாடத்தின் பகுதியாக அமையும் விடயங்களையே விக்கிரமரட்ண ஆராய்விற்கு எடுத்துக் கொள்கிறார். இப்பாடப் பரப்புப் பற்றி லக்ஸ்மன் மாறசிங்க தரும் வரைவிலக்கணம் எமது உரையாடலுக்குப் பொருத்தமானது.

"அரசியல் யாப்புச் சட்டங்களின் ஒப்பீடு பல்வேறு அரசியல் யாப்புக் கட்டமைப்பு மாதிரிகளை (MODELS) ஆராய்கிறது. வெவ்வேறு சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளின் தேவைகளுக்கு ஏற்ப வெவ்வேறு நாடுகள் அரசியல் யாப்புகளை உருவாக்கிக் கொள்கின்றன. அவ்வரசியல் யாப்புகளின் உருவாக்கப் பின்புலத்தில் வெவ்வேறு அரசியல் யாப்புகளின் சட்டப் பிரச்சினைகள் அலசப்படுகின்றன."

*"IN A STUDY OF COMPARATIVE CONSTITUTIONAL LAW ONE CONSIDERS A VARIETY OF MODELS OF CONSTITU TIONAL STRUCTURES. EACH STRUCTURE CARRIES DIFFERENT LEGAL IMPLICATIONS AND PROVIDE FOR VARYING SOCIOECONOMIC AND POLITICAL NEEDS OF THE COMMUNITY (LAKSMAN MARASINGHE 2007:3)"*

எதியோப்பியாவின் அரசியல் யாப்பு மாதிரி (MODEL) எத்தகையது? அதன் யாப்புக் கட்டமைப்பு யாது? அது அத்தேசத்தின் சமூக, பொருளாதார, அரசியல் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கம் பெற்றதாயின் அத்தேவைகள் யாவை? போன்ற வினாக்கள் எமது உரையாடலுக்குப் பயன் உடையன.

1. எதியோப்பியா ஒரு பன்மைத்துவப் பண்பாடுகள் கொண்ட தேசம். அதன் சிக்கலான பிரச்சினையே அதுதான்.
2. இரண்டாவதாக அது ஒரு 'LDC' - அதாவது உலகின் தீவிர குறைவிருத்தி நாடுகளில் ஒன்று. இலங்கை, குறைவிருத்தி நாடு என்றும் வளர்ச்சியடையும் (DEVELOPING) நாடு என்றும் பலவாறு அழைக்கப்படுவதுண்டு. ஆனால் இலங்கை ஒரு போதும் 'LDC' என்ற அடையாளத்தைப் பெறவில்லை.

எதியோப்பியா, பன்மைப் பண்பாடுகள் - தீவிர குறைவிருத்தி என்ற இரண்டு பிரச்சினைகளையும் தீர்க்கும் தேவையை எதிர்நோக்கியது. இவ்விரு பிரதான பிரச்சினைகளையும் அதிகாரப் பகிர்வு (POWER SHARING), பிராந்தியங்களின் சுயாட்சியும் (AUTONOMY) சுய ஆளுகையும் (SELFRULE) ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் தீர்வு செய்யும் முடிவை அந்நாட்டு மக்கள் மேற்கொண்டனர். பேரரசர் ஹெய்லி செலசியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. இவ் ஆட்சிக் கவிழ்ப்பிற்கு 17 ஆண்டுகள் கழிந்த பின்னர் 1991 இல் EPRDF இயக்கத்தின் அரசியல் தலைமை எதியோப்பியாவிற்கு சமஷ்டி முறையை அறிமுகம் செய்ய முடிவு செய்தது.

### அபிசீனியா



*1995 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி, எதியோப்பிய சமஷ்டி ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படுகின்றது. இந்நாட்டின் பழைய பெயர் அபிசீனியா ஆகும். 1935 ஆம் ஆண்டில் இத்தாலியின் பாசிஸ்ட் சர்வாதிகாரியான முசோலினி அபிசீனியாவின் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடங்கினார். 1936 இல் அபிசீனியா இத்தாலியின் அடிமைக் காலனி நாடாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அபிசீனியா சுதந்திரம் பெற்றது. இதன் பின்னர் 1974 இல் சதிப்புரட்சி, அதற்கு 17 ஆண்டுகளின் பின் 1991 இல் ஆட்சி மாற்றம், 1995 இல் புதிய அரசியல் யாப்பு என எதியோப்பியா ஏற்ற இறக்கங்கள் மிகுந்த நீண்ட வரலாற்றை உடைய நாடாக விளங்குகிறது. எதியோப்பியாவின் வரலாற்றில் அதன் இனத்துவப் பன்மைத்துவம் (ETHNIC DIVERSITY) முக்கியமான காரணியாக இருந்து வந்தது.*

## நவீன அரசும் நவீனத்திற்கு முந்திய அரசும்

*இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் எதியோப்பியாவில் நவீன அரசு (MODERN STATE) ஒன்று உருவாகியது. நவீன அரசின் தோற்றத்திற்கு முந்திய அரசு, வரலாற்று ஆசிரியர்களாலும் அரசியல் கோட்பாட்டாளர்களாலும் நவீனத்திற்கு முந்திய அரசு (PRE MODERN STATE) என அழைக்கப்படுகிறது. எதியோப்பியா மட்டுமல்லாது மூன்றாம் உலகின் முன்னாள் காலனிகளும் இன்று சுதந்திரம் பெற்ற நாடுகளுமாக உள்ள அனைத்து நாடுகளின் நவீன அரசுகள், நவீனத்திற்கு முந்திய அரசுகளில் இருந்து அடிப்படையில் வேறுபட்ட இயல்புகளை உடையனாவாய் இருந்து வருகின்றன. இக்கட்டுரையின் முதலாம் பகுதியில் மேற்கோளாகத் தரப்பட்ட மென்கிஸ்டு அறபெய்ன் என்ற அறிஞரின் கூற்று இந்த வேறுபாட்டை மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது.*

1. *நவீன அரசு மத்தியப்படுத்தப்பட்ட அரசாக (CENTRALISED STATE) வளர்ச்சியடைந்தது.*

2. *இம் மத்தியப்படுத்தப்பட்ட அரசு நாட்டின் பல்வேறு சிறுபான்மை இனக்குழுமங்களையும், மக்கள் சமூகங்களையும் மத்தியில் உள்ள ஆட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.*

3. *மத்தியின் ஆட்சியில் அம்ஹரா (AMHARA) என்ற தேசிய இனம் பிற எல்லா இனக்குழுமங்களையும் மக்கள் சமூகங்களையும் புறந்தள்ளி அரசு அதிகாரத்தினை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால் எதியோப்பியாவின் நவீன அரசு ஒரு தேசிய இனத்தின் அரசாக 'நேஷன் ஸ்டேட் (NATION STATE)' ஆக மாற்றம் பெற்றது.*

4. *எதியோப்பியாவின் 'தேசிய அரசு' ஏனைய தேசியங்களையும் மக்கள் சமூகங்களையும் அவற்றின் பண்பாட்டு மொழி அடையாளங்களையும் அழித்து, ஒன்றிக் கலக்கச் செய்தல் (ASSIMILATION) என்னும் செயல் முறையை நடைமுறைப்படுத்தியது.*

5. *நவீனத்திற்கு முந்திய கால அரசு முறையில், நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களிலும் அதிகாரம் செலுத்திய மன்னர் ஆட்சிப் பகுதிகளும் (KINGDOMS) குறுநில அரசுகளும் (CHIEFDOMS) சுயாட்சி உடையனவாய் இருந்தன. இவை யாவும் சுயாட்சி அதிகாரத்தை இழந்தன.*

*எதியோப்பியாவின் உள்நாட்டு யுத்தங்களால் (CIV IL WAR) நாடு சீரழிந்தது. அதன் பொருளாதாரப் பின்னடைவுக்கு (BACKWARDNESS), மேலாதிக்கம் பெற்றிருந்த இனக்குழுமம் அரசு அதிகாரத்தைப் பகிர்வதற்கும், நாட்டின் பன்மைத்துவத்திற்கு (DIVERSITY) முதன்மையளிக்கும் அரசியல் தீர்வுக்கு இணங்க மறுத்ததுமே காரணம் என்பதை அறபெய்ன் அவர்களின் மேற்கோள் அழுத்திக் கூறுகிறது.*

## தேசிய இனங்களின் விருப்பத்திற்கு மாறான தெரிவு

*மூன்றாம் உலகின் பன்மைத்துவப் பண்பாட்டுச் சமூகங்கள் யாவற்றுக்கும் பொதுவான பிரச்சினை நவீன அரசுகளின் தோற்றத்துடன் ஆரம்பமாகியது. காலனிய அரசுகள் நாடுகளின்*

புவிப்பரப்பில் எழுந்தமானமாக எல்லைகளை வகுத்ததன் விளைவாக இன்றைய தேசிய அரசுகளை உருவாக்கின. இதன் விளைவாகப் பல தேசிய இனங்களின் வாழிடங்கள் கூறு போடப்பட்டன. அவற்றுள் பல, காலனியத்திற்கு முந்திய காலத்தில் அனுபவித்த சுயாதீனத்தை இழந்தன. தமது விருப்பத்திற்கு மாறான தெரிவு தம் மீது சுமத்தப்பட்டுள்ளதை அவை உணர்ந்தன. இது ஒரு வரலாற்று விபத்து ஆகும். சிறுபான்மைத் தேசிய இனங்கள் பலவற்றின் விருப்பத்திற்கு மாறான இத்தெரிவை ஜயம்பதி விக்கிரமரட்ண ஆங்கிலத்தில் 'IN STATES NOT OF THEIR CHOICE' எனத் தலைப்பிட்ட பகுதியில் (நூலின் பக் 37) உதாரணங்கள் காட்டி விளக்கியிருந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் எதியோப்பியாவுடன் எறிற்றியா இணைக்கப்பட்டது. இவ் இணைப்பு எறிற்றிய மக்களின் விருப்பத்திற்கு மாறாகச் செய்யப்பட்டது.

எதியோப்பியாவின் வரலாற்றில், எறிற்றியா மக்களின் விடுதலை போராட்டத்தால் இரத்த ஆறு பெருகியது. அந்நாட்டைச் சிதைத்துச் சீரழித்த உள்நாட்டு யுத்தம் 1993 இல் முடிவுக்கு வந்தது. எறிற்றியா தனி நாடாகப் பிரிந்து சுதந்திரம் பெற்றது.

### தேசிய இனங்களின் பிரச்சினை

'தேசிய இனங்களின் பிரச்சினை (THE NATIONAL QUESTION)' என்ற தொடர் 1920 கள் முதல் சமூக விஞ்ஞானத்தில் பிரபலம் பெற்ற ஒரு தொடராக இருந்து வந்துள்ளது. இத்தொடர் தேசிய இனம் (NATION) எனும் கருத்தாக்கத்தை வரையறை செய்வதன் மூலம் ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழும் இனம், மொழி, சமயம், பண்பாடு, வாழுமிடம் என்னும் அடையாளங்களையுடைய சமூகங்களின் பிரச்சினைகளை அடையாளம் காண உதவுகிறது. எதியோப்பியாவின் அரசியல் யாப்புச் சட்டம் அந்நாட்டின் எல்லைக்குள் வாழ்ந்து வரும் 80 வரையான சமூகக் குழுக்களை தேசிய இனம் (NATION), சிறுபான்மைத்தேசிய இனம் (NATIONALITY), ஒரு மக்கள் (A PEOPLE) என வரையறை செய்துள்ளது. அரசியல் யாப்பின் உறுப்புரை 39 (4), பொதுவான பண்பாடு, ஒரே விதமான (ஒழுக்க) நியமங்கள், பரஸ்பரம் புரிந்து கொள்ளக்கூடிய பொது மொழி, பொதுவான அல்லது தொடர்புடைய அடையாளங்களில் நம்பிக்கை, பொதுவான உளவியல் என்பனவற்றை உடையவர்களாகவும், தொடர்ச்சியான நிலப்பரப்பில் செறிவுற்றும் முதன்மை பெற்றும் வாழ்பவர்களுமான சனக்குழுமங்கள் என இத்தொடர்கள் வரையறை செய்யப்பட்டுள்ளன. கூறியது கூறலாக அமைந்தாலும் மீண்டும் இதனைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமுடையது. 'ஒவ்வொரு தேசியம், சிறுபான்மைத் தேசிய இனம், ஓர் மக்கள் என்பன சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடையன. இவ்வுரித்து நிபந்தனையற்ற உரித்துமாகும்' எனவும் எத்தியோப்பிய அரசியல் யாப்புச் சட்டம் வரையறை செய்துள்ளது எனவும் விக்கிரமரட்ண குறிப்பிட்டுள்ளார். சிறுபான்மைச் சமூகங்களுடன் அரசு அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளுதல் (SHARING STATE POWER) மட்டுமே தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு அடிப்படையாக அமையும் என்பதை எதியோப்பிய அரசியல் யாப்பு உணர்த்தி நிற்கிறது.

### சுயநிர்ணய உரிமை

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, விவாதத்திற்குரிய கோட்பாட்டுப் பிரச்சினையாகும். இவ்விடயம் இச்சிறு கட்டுரையில் விரிவாக விவாதிக்கப்படக் கூடியது அன்று. எதியோப்பிய அரசியல் யாப்பு தேசிய இனங்கள், சிறுபான்மை தேசிய இனங்கள், ஒரு மக்கள் ஆகிய சமூகக் குழுக்களுக்கு சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்துள்ள முன் உதாரணமான அரசியல் யாப்பு ஆகும். இவ்வுரிமை:

1. பிரிந்து தனிநாடாகச் செல்வதற்கான உரிமை
2. மொழியுரிமைகள்
3. பண்பாட்டு உரிமைகள்
4. தமது வாழிடத்தில் சுயாட்சிக்கான உரிமை
5. தமது வாழிடத்தில் அரசாங்க நிறுவனங்களை அமைக்கவும், அரசாங்கத்தில் சமத்துவமான பிரதிநிதித்துவத்தை (EQUAL REPRESENTA TION) பெறுவதற்கான உரிமை.

என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

### எதியோப்பியா - தீர்வு மாதிரிகளுள் ஒன்று

1995 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின்படி, எதியோப்பிய சமஷ்டி ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படுகின்றது. இந்நாட்டின் பழைய பெயர் அபிசீனியா ஆகும். 1935 ஆம் ஆண்டில் இத்தாலியின் பாசிஸ்ட் சர்வாதிகாரியான முசோலினி அபிசீனியாவின் மீது ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடங்கினார். 1936 இல் அபிசீனியா இத்தாலியின் அடிமைக் காலனி நாடாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அபிசீனியா சுதந்திரம் பெற்றது.

*உலகின் பல நாடுகளில் 20 ஆம் நூற்றாண்டில் அரசியல் யாப்புப் பரிசோதனைகள் நடைபெற்றன. பல மாதிரிகள் (MODELS) எமக்குக் கிடைக்கின்றன. எதியோப்பியாவின் சமஷ்டி, அவ்வாறான மாதிரிகளில் ஒன்று என்பதை நாம் கவனத்தில் இருத்துதல் வேண்டும். அம்மாதிரியின் சிறப்பு அம்சங்கள் சிலவற்றை மேலே குறிப்பிட்டோம். விக்கிரமரட்ணவின் கட்டுரை உலகின் பன்மைப் பண்பாட்டுச் சமூகங்கள் பலவற்றின் அரசியல் யாப்பு அனுபவங்களையும், வெவ்வேறு அரசியல் யாப்பு மாதிரிகளையும் விளக்கும் ஒப்பீட்டு ஆய்வாக உள்ளது. சிக்கலான இனத்துவ முரண்பாடுகளின் களமாக அமைந்தது ஸ்பானியா தேசம். அங்கு பஸ்க் (BASQUE) கற்றலோனியா, ஹலீசியா (GALICIA) முதலிய தேசிய இனங்கள் விடுதலைக்கான போராட்டங்களை நடத்தி வந்தன. ஸ்பானியாவின் சிறுபான்மைத் தேசிய இனங்கள் அரசியல் அதிகாரப் பகிர்வு முறையிலான சீர்திருத்தங்களின் நன்மைகளைப் பெற்று இன்று முன்னேற்றப் பாதையில் செல்கின்றன. பெல்ஜியம் இன்னோர் சிறந்த முன் உதாரணம் எனக் குறிப்பிடலாம். டச்சு மொழி பேசும் 'FLANDERS' மக்கள், பிரஞ்சு மொழி பேசும் மக்கள் என்ற இரு மொழிச் சமூகங்களிற்கிடையே பெல்ஜியத்தில் இணக்கப்பாடும் ஒற்றுமையும் வளர்வதற்கான நல்ல அறிகுறிகள் தோன்றியுள்ளன. அந்நாட்டில் 'NONTERRITORIAL FEDERALISM' என்றும் புத்தாக்கமான அரசியல் முறைமை நடைமுறையில் உள்ளதை விக்கிரமரட்ண எடுத்துக் காட்டுகிறார். ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வட அயர்லாந்து ஆகிய பகுதிகளில் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களை வழங்கிய ஐக்கிய இராச்சியம், பல்லினப் பண்பாட்டுச் சமூகங்களின் அரசியல் பிரச்சனைகளுக்கான தீர்வாக சமஷ்டி முறைமையை வெற்றிகரமாக உபயோகித்து வருவதை இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது. டென்மார்க் நாட்டின் ஆள்புலத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் கிறீன்லாந்து (GREEN LAND), பின்லாந்து நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட ஆலந்து தீவுகள், பிரான்ஸ் நாட்டின் ஆளுகைக்கு உட்பட்ட கோர்சிக்கா தீவு என்பன சமஷ்டி அலகுகள் போல் இயங்கும் அதிசயத்தை இக்கட்டுரை சுருக்கமாக விளக்குகிறது. மேலே குறிப்பிட்டவை மேற்கு நாட்டு உதாரணங்கள். அந்நாடுகளின் அரசியல் கலாசாரம் (POLITICAL CULTURE) வேறு, மூன்றாம் உலகம் வேறு என்று கடந்து போவதை விடுத்துப் பல மாதிரிகளையும், பல பரிசோதனைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டிய தேவையை இக் கட்டுரை உணர்த்தி நிற்கிறது. 'SUCCESS IN INDIA' (வெற்றிப் பாதையில் இந்தியா) (பக் - 29 36) என்னும் தலைப்பில் அமைந்த பகுதியில் இந்திய சமஷ்டியின் உதாரணம் விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இந்தோனேசியா, பப்புவா நியுகினியா ஆகிய நாடுகளின் அனுபவங்களும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் அரசியல் யாப்பு மாதிரிகள் பற்றிய சிறந்த ஒப்பீட்டு ஆய்வாக இக்கட்டுரை விளங்குகிறது. விக்கிரமரட்ண முன் வைக்கும் மாதிரிகளில் 'எதியோப்பிய சமஷ்டி' என்னும் ஒரு மாதிரியை முன்வைத்த உரையாடலாக இக்கட்டுரையை அமைத்துள்ளோம். தமிழ் வாசகர்களுக்கும் பல்கலைக்கழகங்களில் வரலாறு, அரசறிவியல், சமூகவியல், சட்டம் ஆகிய பாடங்களைப் பயிலும் மாணவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும், அரசியல் செயற்பாட்டாளர்களுக்கும் ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் பெறுமதிமிக்க இந்நூலைச் சிபாரிசு செய்கிறோம்.*

*(தொடரும்.)*




விவேகானந்தராஜா துலாஞ்சனன்

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.

இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.


*இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.*

# மண்முனையில் பற்சின்னம் கொணர்ந்தவளும் மல்வத்தையில் புத்தர் சிலை அமைத்தவனும்

மகாசேனனுக்குப் பின்னர் (276 - 301) அவன் மகன் மேகவண்ணன் அனுரை அரியணையில் அமர்ந்தான் (301 - 328). அவன் காலத்தில் கலிங்க நாட்டுப் பிராமணப் பெண்ணொருத்தி புத்தரின் திருப்பற்சின்னத்தை அனுரைக்குக் கொணர்ந்ததாகவும் அது மேகவண்ணன் தேவானாம்பிரிய திசையனால் அமைக்கப்பட்ட "தருமச்சக்கரம்" எனும் கட்டடத்தில் வைக்கப்பட்டதாகவும், அன்று முதல் அது "தலதா மாளிகை" என்று அழைக்கப்பட்டதாகவும் மகாவம்சம் சொல்கின்றது (மவ. 37:90-95).

ஆனால் இராசாவழி நூல் சொல்வதன்படி, அந்தப்



**தலதா மாளிகை**

Image Source - srilankamirror.com

பெண்ணின் பெயர் ரன்மாலி அல்லது ஃகேமமாலை. அவள் கலிங்க அரசன் குகசிவனின் மகள். குகசிவனிடமிருந்த பற்சின்னத்தைக் கவர்வதற்காக பகைநாட்டு மன்னன் போர்தொடுக்கும்போது அவனிடமிருந்து புத்தபிரானின் வலது பற்சின்னத்தைப் பெற்று சன்னியாசிகளின் வடிவில் அல்லது பிராமணர்கள் வடிவில் ரன்மாலியும் அவள் கணவன் தந்தனும் தூத்துக்குடியூடாக தப்பிவருகிறார்கள். அவர்கள் அனுரைக்குச் சென்று கீர்த்தி சீமேகவண்ண மன்னனிடம் பற்சின்னத்தை ஒப்படைத்ததற்கு நன்றிக்கடனாக அவன் பெலிகல் (வில்வக்கல்) கோரளையிலுள்ள கீரைவெளி (கிராவெல்ல) என்ற இடத்தை அந்தத் தம்பதியர்க்கு வழங்குகின்றான். அது இன்றைய கேகாலை மாவட்டத்திலுள்ள இடம் (Herath, 1974:81-83).

புத்தமல்லாத சமயத்திலிருந்து புத்தனாக மதம் மாறிய குகசிவன் தந்ததாது என்ற பெயரில் “சவத்தி”யை (செத்தார் எலும்பு) வழிபட்டதால் கோபமுற்று “சிவனையும் பிரம்மனையும் வழிபடுபவனும் குகசிவன் மீது அதிகாரம் செலுத்தியவனுமான” பாண்டு (பாண்டிய) மன்னன், அவன் மீது போர்தொடுத்தான் என்கின்றது தாதுவம்சம். தலதா சிறீத நூல், கேமமாலையும் தந்த இளவரசனும் கரையேறிய இடம் மாதோட்டம் என்கின்றது. ஆனால் மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் சொல்லப்படுவது சற்று மாறுபட்ட கதை.

புத்தரின் புனித தசனத்தை நெடுங்கூந்தலில் மறைத்துக் கொணர்ந்தவள் கலிங்க ஒறிசா தேச அரசன் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள். அவள் தந்தையிடம் விடைபெற்று புத்த தசனத்துடன் காசியிலிருந்து குகவம்சத்தார் கொணர்ந்த சிவலிங்கத்தையும் தன் உடன்பிறந்தான் உலகநாதனுடன் எடுத்து வந்து மணிபுரத்தில் (முத்து + ஊர் = மூதூர்) இறங்கி விசயதுவீபத்துக்கு (கண்டி) சென்று அதை ஆண்ட மேகவர்ணனிடம் புத்ததசனத்தைக் கொடுத்தாள்.

அதற்கு நன்றியாக, குடிமக்களில்லாத இடமொன்றைக் கேட்க, மேகவர்ணன் மட்டக்களப்பை ஆளும் தன் தோழன் குணசிங்கனிடம் அனுப்ப, அவனால் அவள் அம்பிலாந்துறைக்கு அப்பால் மண்ணேறியமுனையில் குடியமர்த்தப்படுகிறாள். அவளால் மண்ணேறிமுனையில் ஒரு சிவன் கோவிலும் பின்னர் கொக்கட்டிச்சோலை சிவாலயமும் தோற்றுவிக்கப்படுகிறது (கமலநாதன் & கமலநாதன், 2005:30-31)

மேகவண்ணன் காலத்தில் மட்டக்களப்பில் உலகநாச்சியால் குடியேற்றம் நிகழ்ந்த கதையை, இராசாவழியின் கேமமாலையின் கேகாலைக் குடியேற்றத்தோடு ஒப்பிடலாம். இச்செய்திகளுக்கு வேறு வலிமையான சான்றுகள் இல்லை. கலிங்கப்பிராமணத்தி பற்சின்னம் கொண்டு வந்த மகாவம்சக் கதை, பிற்சேர்க்கைகளால் மேலும் வளர்ச்சியடைந்த காலத்தில் உலகநாச்சி கதை தமிழரிடமும் ஃகேமமாலை கதை சிங்களவரிடமும் முறையே இருவிதமாகத் திரிந்து இவ்வாறு வெவ்வேறு தொன்மங்களாகியிருக்கலாம். இக்கதையை மண்முனை மட்டக்களப்பின் தனித்த நிருவாக அலகாக வளர்ச்சிபெற்ற 16 ஆம் நூற்றாண்டு காலத்தில் உருவான உற்பத்திக் கதைகளில் ஒன்றாகவும் கருதமுடியும். கேமமாலை பற்றிப் பாடும் இராசாவழியும் கிட்டத்தட்ட இதே காலத்து நூல் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும் மேகவண்ணனின் ஆட்சி கீழைக்கரை வரை நீடித்திருந்தது என்பதை பாணமைப்பற்று இலகுகலையின் மேற்கு எல்லையிலுள்ள நாமலுவையில் (Nmauva, நாமளுவ) கிடைத்த பிராமிக்கல்வெட்டொன்று சொல்கின்றது. சிறீமேகவண்ண அபய மகாராசாவின் காலத்தில் அங்கிருந்த கிரிதிசபருவத மகாவிகாரம் பற்றி அது குறிப்பிடுகின்றது (Nicholas, 1963:23).

மேகவண்ணனுக்கு நூறாண்டுகளுக்குப் பின்னர் ஆறு தமிழர்கள் இலங்கை மீது படையெடுக்கிறார்கள். பாண்டு, பாரிந்த, குட்டபாரிந்த, திரீதர, ‡தாத்திய, பீத்திய என்பது ஒருவர்பின் ஒருவர் ஆண்டதாக மகாவம்சம் சொல்லும் அவர்களது பெயர்கள் (429 - 455). முதல் மூவரின் பெயர் முறையே பாண்டியன், பாரி வேந்தன், இளம்பாரி வேந்தன், என்பனவாம். இவர்கள் மகாவலி கங்கைக்கு அப்பால் மாத்திரம் ஆண்டதாக ஓரிடத்தில் மகாவம்சம் சொல்கின்றது.

ஆனால் கதிர்காமத்தில் கிடைத்த கல்வெட்டொன்று ஆய் சரதரனின் மைந்தனான மகாதலி மகாநாகன் என்பவன் பற்றிக் குறிப்பிடுகின்றது. சரதரன் என்ற ஈழப்பாகதச்

சொல்லை "சிறீதரன்" என்று வடமொழியில் வாசித்து அதை தமிழ் "திருதரு" பாண்டியனுக்குச் சமப்படுத்திப் பார்ப்பார் பரணவிதான. மகாதலி என்பதை "மகாதாட்டியன்" என்று வாசிக்கமுடியும் என்பதால், திரீதர, தாட்டிய என்று குறிப்பிடப்பட்டுள்ள இரு தமிழரசரே இக்கல்வெட்டில் முறையே சரதர, மகாதலி என அழைக்கப்படுவதாக அவர் இனங்காண்பார் (Paranavitana, 1994a:212-214).

பரணவிதானவின் ஊகம் சரியாயின், இலங்கை வந்த ஆறு பாண்டியரும் ஒருவர் பின் ஒருவர் ஆண்டபோது இருவரில் பிந்தையவர், பண்டைய வழக்கின் படி முந்தையவர் ஆளும்போது உரோகணத்தில் உபராசனாக ஆண்டிருக்கக்கூடும். இவ்வூகத்தை எதிர்த்து அவர்கள் இருவரும் தமிழரசர் காலத்தில் கதிர்காமத்தை தலைநகராகக் கொண்டு தென்கிழக்கு உரோகணத்தை சுதந்திரமாக ஆண்ட வேறு இரு சிங்கள மன்னர் என்று கொள்வாரும் உண்டு (Ranawalla, 2011:75).

ஐந்து தொடக்கம் ஏழாம் நூற்றாண்டுக்கிடையே கீழைக்கரையின் தென்கோடியில் புத்தமதம் செழித்தது என்பதற்கான சான்றுகள் கிடைக்கின்றன. குறிப்பாக பாணமைப்பற்று (இலகுகலை) பாணமை கிராமத்திலும் அதன் அயற்புறத்திலும் சில பிராமிக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் பணவ ராசமஹ விஹர (Panava Rajamaha Vihara - பாணவை இராசமகா விகாரம்) பற்றிய வரிகள் காணப்படுகின்றன. பாணமையின் பெயர் பணவ என்று ஐந்தாம் நூற்றாண்டளவிலேயே கிடைப்பதால், தமிழில் நிலவும் "பேழையில் கிடைத்த பாலகி நகைத்ததால் பாலநகை - பாணகை ஆனது" எனும் தொன்மம் மிகப் பிற்காலத்தையது என்பது தெரியவருகிறது. ஆனால் அவ்வூர் மிகத்தொன்மையானது என்பதும் சமூக - அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதும் தமிழ்த் தொன்மங்களால் ஏற்கப்பட்டிருந்தது என்பதையே பாலநகை தொன்மம் வழி ஊகிக்கமுடிகின்றது.

ஆறாம் ஏழாம் நூறாண்டுகளில் உரோகணத்தின் அரசியல் வகிபாகத்தில் சிறுமாற்றம் ஏற்பட்ட காலப்பகுதி ஆகும். அதுவரை எதிர்காலத்தில் அனுரையின் அரசனாக முழுநாட்டையும் ஆளப்போகும் உபராசனுக்கு உரோகணத்தை முதலில் ஆளும் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டில் துவங்கி அனுரை இளவரசர்கள் "மாப்பா" (மாயா அல்லது மாப்பாணன் அல்லது மகா அயபாய / பெருமானடிகள்) என்ற பதவி வழங்கப்பட்டு, அவர்கள் உரோகணத்துக்குப் பதில், தெற்கு தேசத்தை ஆளுபவர்களாக அனுப்பப்பட்டார்கள். தெற்கு தேசம் அல்லது தக்கண தேசம் என்பது மன்னார் - கண்டி - காலி ஆகிய மூன்று நகரங்களுக்கு இடைப்பட்ட நிலப்பரப்பாகும். மாப்பா அல்லது மாயா ஆண்டதால் அது மாயரட்ட (மாப்பாணன் தேசம்) என்று அழைக்கப்படலாயிற்று.

இவ்வாறு உபராசன் என்ற பதவி மாப்பாணருக்கு கைமாற்றப்பட்டமைக்கான காரணம், இளவரசன் ஆளுமளவு பெற்றிருந்த முக்கியத்துவத்தை உரோகணம் இழந்ததாலா, அல்லது மாப்பாண தேசத்தில் வணிகமும் குடியிருப்பும் செழித்து, அப்பகுதி செல்வத்தில் மேம்பட்டதாலா என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் சோழர் படையெடுத்த பத்தாம் நூற்றாண்டிலும் உரோகணத்தின் அரசியல் முக்கியத்துவம் குன்றிப்போனதாகத் தெரியவில்லை என்பதால், உரோகணத்தில் தொடர்ந்து ஏற்பட்டுக்கொண்டிருந்த கிளர்ச்சிகளையும் ஆட்சியுரிமைச் சிக்கல்களையும் அனுரை அரசர்கள் நேரடியாக கையாள முடிவெடுத்து இளவரசர்களுக்கு தக்கண தேசத்தை தங்கள் ஆட்சிப்பயிற்சிக்கான நிலப்பரப்பாக தீர்மானித்தார்கள் எனலாம்.

ஏழாம் நூற்றாண்டில் இக்குவாகு வமிசத்தில் உதித்த மகாதிசையன் என்பவன் "உரோகணசாமி" என்றழைக்கப்பட்ட உரோகண ஆட்சியாளனின் மகளான சங்கசிவையை மணந்திருந்தான். அவர்களுக்கு அக்கபோதி, தப்புலன், மணியக்கிகன் என்று மூன்று மைந்தர்கள். மூத்தவனான அக்கபோதி உரோகணத்தை ஆண்டுவந்ததுடன், மகாகாமம் (கிரிந்த), காசரகாமம் (கதிர்காமம்) ஆகிய இடங்களில் புத்தக்கோவில்களும் மடங்களும் அமைத்திருந்தான். அவனுக்குப் பின்னர் உரோகணத்தை ஆண்ட தப்புலன் தன்

எதிரிகளை வேரறுத்ததுடன் அங்குள்ள மக்களின் மனங்கவர்ந்தவனாக மாறி “உரோகண மகாசாமி” என்று வாஞ்சையுடன் அழைக்கப்பட்டான் (மவ. 45:45-50).

பாசாணதீபவிகாரத்தில் வசித்த மகாதேரருக்காக தப்புலன் உரோகண மகா விகாரத்தை அமைத்தான் என்கின்றது மகாவம்சம் (மவ. 45:53 - 54). இலகுகலையில் உள்ள மங்கலமகா விகாரத்தில் கிடைத்த பன்னிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று அதை உரோகண மகாவிகாரம் (ருன மஃக விஃகர, *Runa maha vihara*) என்று அழைப்பதால் உரோகண மகா விகாரமும் பாசாணதீபிகை விகாரமும் கீழைக்கரையிலேயே அமைந்திருந்தன என்பது தெரியவருகிறது (Nicholas, 1963:70). தாப்புலன் ஆரியகாரி விகாரத்துக்கென மாளவத்து கிராமத்தை ஒப்படைத்தான் (மவ. 45:60 - 65) என்பது மகாவம்சம் அடுத்துச் சொல்லும் சேதி. மாளவத்து என்பது இன்றைய சம்மாந்துறைப்பற்றிலுள்ள மல்வத்தைக் கிராமம் ஆகும். ஆரியகார விகாரம் அதன் அண்மையில் அமைந்திருத்தல் கூடும். மாளவத்துவில் புத்தரின் படிமக்கோவிலொன்றை அமைத்த அவன் அங்கு தங்கத்தில் செய்த உன்னலோமம், ஏமப்பட்டம் (புருவநடு மயிரும் பிச்சைக்கலத்துக்கான தோள் பட்டியும்) என்பவற்றை அங்கு தான் புதிதாக தாபித்த புத்தரின் படிமத்துக்குச் சூடியிருந்தானாம்

மகாவம்சக் குறிப்புகளைப் பார்க்கும் போது இவன் சிலாமேகவண்ணன் (623 - 632) காலத்திலிருந்து இரண்டாம் காசியப்பன் (650 - 659) காலம் வரை சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் உரோகணத்தை சுயாதீனமாக ஆண்டான் எனத் தெரிகிறது. இறுதியில் அவன் மகன் மானவர்மன் தமிழர் ஆதரவுடன் சாத்ததாதன் மேற்கொண்ட போரில் இறந்ததை அடுத்து, தப்புலனும் மனமுடைந்து இறந்தான் (45:70 - 80). சாத்ததாதன் தமிழ் வணிகர் மற்றும் படையினரின் ஆதரவுடன் இரண்டாம் தாதோப திசையன் (659 - 667) என்ற




தக்கிண தேசம் ( மாயரட்டை)

Image Source - ta.wikipedia.org

பெயரில் அனுரை முடியைச் சூடி ஆண்டுவந்தான்.

உரோகணசாமியின் பரம்பரையில் வந்த வேறு மன்னர்கள் உரோகணப்பகுதியை தொடர்ந்து ஆண்டு வந்திருக்கிறார்கள் என்பது கல்வெட்டுச் சான்றுகளில் தெரிகிறது. பாணமைப்பற்று இலகுகலையில் உகந்தமலைக்குச் செல்லும் வழியில் சன்னியாசிமலை என்றோர் சைவ வழிபாட்டுத்தலம் உள்ளது. கதிர்காமம் செல்வோரும் உகந்தமலைக்குச் செல்வோரும் அம்மலையடிவாரத்திலுள்ள பிள்ளையாருக்கு அவல் படைத்து வணங்கிச் செல்வது வழமை. உகந்தமலையின் தோற்றம் பற்றிய தொன்மங்கள் சன்னியாசிமலை சார்ந்தும் சொல்லப்படுவதுண்டு.

அந்த மலையிலுள்ள தொல்லியல் சின்னங்கள் “விகாரகெம புத்த மடத் தொல்பொருள்களாக” இனங்காணப்பட்டு இலங்கை அரசிதழில் வர்த்தமானிப்படுத்தப்பட்டுள்ளன. அங்கு கிடைத்த பாறைக்கல்வெட்டொன்று இப்பகுதியை ஆண்ட வகக மகாரா|சா (*Vahaka maharj*, வஃகக மஃகாரா|சா) மசல விகாரத்தை அமைத்து நான்கு கழஞ்சு நிலத்தை தானமளித்தமை பற்றியும் குறிப்பிடுகின்றது. வஃகக என்பது “விசாகன்” என்பதன் திரிபாகலாம். அல்லது பாலியில் வசப என்றும் வடமொழியில் வ்ருˍ^சப என்றும் (தமிழில் “இடபன்”) என்றும் வாசிக்கக்கூடிய பெயர்.

இவன் “மகாராசா” எனும் பட்டத்தைச் சூடியவன் என்பதால் தென்கிழக்கு உரோகணத்தை சுயாதீனமாக ஆண்டவனாக இருக்கவேண்டும். இந்தக் கல்வெட்டு ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக அடையாளப்படுத்தப்படுவதால், தப்புலனின் தந்தையாக, அல்லது தப்புலனின் பெயர் குறிப்பிடப்படாத வேறொரு மகனாக இம்மன்னன் இருக்கக்கூடும்.

## அடிக்குறிப்புகள்

1. இராசாவழி உருவான 16 - 17ஆம் நூற்றாண்டு காலத்தில் கிராவெல்ல என்பது அரசன் பெண்ணெடுக்கும் வம்சமாக இருந்தது.

2. தாதுவம்சமும் தலதா பூசாவழி நூலும் இவ்விடத்தை "லங்காபட்டணம்" என்கின்றன. மகாவலி கங்கையின் தெற்குக் கழிமுகமான திருக்கோணமலையின் இலங்கைத்துறையை இலங்கைப்பட்டணம் என்பதன் தமிழ் வடிவமாக இனங்கண்டுகொண்டார் ஆய்வாளர் W.B.M. பெர்னாண்டோ (Herath, 1974: 114, 3ff). இன்று அங்கு இலங்காப்பட்டண விகாரம் அமைக்கப்பட்டுள்ளது. விடயம் என்னவென்றால், கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதி வரை, அவ்வூர் இலந்தைத்துறை என்றே அழைக்கப்பட்டு வந்தது (துலாஞ்சனன், 2021:66).

3. மண்முனை இன்று மட்டக்களப்பில் ஆரையம்பதிக்கும் தாழங்குடாவுக்கும் இடையே மட்டக்களப்பு வாவியின் கரையோரமாக உள்ள சிற்றூர். ஆரையம்பதியின் தென்மேற்கில் உலகநாச்சி அமைத்த கோவில் தொடர்பான "சிகரம், கோவில்குளம்" ஆகிய பெயர்கள் இடப்பெயர்களாக நீடிக்கின்றன. அப்பகுதியில் பல தொல்பொருள்கள் கண்டெடுக்கப்பட்டதுடன், அங்கு கிடைத்த கருங்கல் கதவுநிலையொன்று இன்றும் ஆரையம்பதி கந்தசுவாமி கோவிலில் காணப்படுகின்றது. தாழங்குடாவில் மாளிகை அமைந்திருந்த தெருவென ஓரிடம் இன்றும் இனங்காட்டப்படுவதுண்டு.

4. இக்கதையில் தொடர்புறும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீச்சரம், உலகநாச்சியின் கயிலாய லிங்கேச்சரம் என்பவற்றை சோழர் ஆட்சிக்குப் பிந்தைய சிவாலயங்களாகக் கருதமுடியுமாயிருக்கிறது.

ஐந்தாம் நூற்றாண்டுக்குரிய பிராமி வரிவடிவில் "எபரி தேவ" (apari deva, இளம்பாரி தேவர்) என்ற பெயருடன் பொறிக்கப்பட்ட குட்ட பாரிந்தனின் ஈழப்பாகதக் கல்வெட்டு அவன் பெயர் "இளம்பாரி வேந்தன்" என்பதை உறுதிப்படுத்துகின்றது. (Paranavitana, 1994b:111-115). எனினும் இப்பெயரை இளம் பாரிட, இளம் பாரிந்த என்றே வாசிக்கிறார் பரணவிதான. தமிழில் அச்சொற்களுக்கு அர்த்தமில்லை.

5. திருதரு என்ற பெயரை, இக்காலத்துக்கு சில நூறாண்டுகள் முந்தைய தமிழ் இலக்கியத்திலுள்ள "நிலந்தரு திருவிற்பாண்டிய'னுடன் இணைத்துப் பார்ப்பது ஆர்வமூட்டுகிறது.

## உசாத்துணை


1. கமலநாதன், சா.இ., கமலநாதன், க. (2005). மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

2. துலாஞ்சனன், வி. (2021). காலனித்துவ கால ஆவணங்களில் வெருகல் பிரதேசம், செண்பகம் (வெருகலசம் 02), வெருகல் : பிரதேச செயலக மலர்க்குழுவும் கலாசார அதிகார சபையும் வெளியீடு, பப. 62 - 68.

*Herath, H.M.D.B.* (1974). *A History of The Tooth Relic In Ceylon With Special Reference To Its Political Significance (c. AD 300 - 1500) [Doctoral disserta tion, University of London]. SOAS Research Online. https://eprints.soas.ac.uk/29161/1/1073-1256.pdf*

3. *Nicholas, C.W.* (1963). *Historical Topography of Ancient And Medieval Ceylon, JCBRAS, Vol VI (New, Sp. No.)*

4. *Paranavitana, S.* (1994a). *Kataragama Inscriptions, in Epigraphia Zeylanica (D.M.D.Z.Wickramasinghe & H.W.Codrington Eds.), Volume III, pp.* 212225.

______________________. (1994b). *Anuradhapura : Slab Inscription of Khudda Prinda, in Epigraphia Zeylanica (D.M.D.Z.Wickramasinghe & H.W.Codrington Eds.), Volume III, pp.* 212225.*pp.* 111-115.


(தொடரும்)




● ஜெகநாதன் அரங்கராஜ்

முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். 'செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு' என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.



*ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே 'இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்' எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.*


# இலங்கையில் ஆசீவகச் சமயம்

இலங்கையில் விஜயனின் வருகைக்கு முன்பும், பௌத்த சமயத்தின் வருகைக்கு முன்பும், ஆசீவகச் சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கான பல சான்றுகளை மகாவம்சம் முதலான பாளி மொழி நூல்களின் வழியாகவும், தமிழர் - சிங்களர் முதலானோரின் வாழ்வியல் தொன்மங்கள் வழியாகவும் அறியலாம். கி.பி.6 ஆம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுதப்பட்ட இலங்கை அரசர்களின் மரபுகளைக் கூறக்கூடிய மகாவம்சம் என்ற நூலில், ஆசீவகம் குறித்ததான பல செய்திகள் காணப்படுகின்றன.

'விஜயன் இலங்கை வந்து முப்பத்து எட்டு ஆண்டுகள் அரசாண்ட பிறகு தமக்குப் பிள்ளைகளற்று மாண்டான். இந்தியாவில் ஆட்சியிலிருந்த அவனது உடன் பிறப்பான சுமிதன், மதுர நாட்டு அரசனுடைய மகளை மணந்தவன். மதுர நாடு என்பது மதுரை நாடு என்னும் பாண்டிய நாடேயாகும். அவனுக்கு மூன்று மகன்கள் இருந்தனர். அவர்களுள் இளையவன் 'பாண்டு வாசுதேவன்'. அவன் இலங்கையின் அரசனாக விரும்பினான். தன் பயணம் சிறப்புற அமையுமென்று நிமித்தர்கள் உறுதி கூறியதன்வழி, முப்பத்து இரண்டு அமைச்சர்களின் புதல்வர்களுடன் இலங்கைக்குப் புறப்பட்டான். அவர்கள் யாவரும் இரந்துண்ணும் துறவிகளைப் போன்று கப்பலில் ஏறி இலங்கையை அடைந்தனர். அவர்கள் கந்தார நதிக் கழிமுகத்திற்கருகே கரையேறினர். அத்துறவிகளைக் கண்டதும் மக்கள் மதிப்பும் சிறப்பும் செய்து வரவேற்றனர். இம்மகாவம்சக் கூற்றில், நாம் பல செய்திகளை அறியக்கூடியதாகின்றது. முதலாவதாக, இலங்கையிலிருந்த விஜயனும், இந்தியாவிலிருந்த அவன் உடன் பிறந்தானான சுமிதனும், பாண்டிய நாட்டுப்

பெண்களையே மணந்தனர். பாண்டியர்கள் பண்டைநாளில், தமிழரல்லாத பிற வடபுல அரச குடும்பங்களுடனும் மணவுறவு கொண்டிருந்தமையை, இராமனின் பாட்டியான இந்துமதியின் சுயம்வரத்தில் பாண்டிய மன்னன் பங்கு பெற்றமையால் அறியலாம்.

பாண்டு வாசுதேவன் என்ற பெயர் வழக்கினையும் கருத வேண்டியதாகின்றது. பாண்டிய இளவரசியின் மகனான இவன் 'பாண்டு' என்றும் அடைமொழியால் அழைக்கப்படுவது, தாய்வழி மரபு பற்றிய 'பாண்டிய' என்னும் வழக்கு பற்றியதா, அல்லது வெள்ளை நிறத்தினை 'பாண்டு' எனக் குறிக்கக் கூடியது பற்றியா என ஆராய வேண்டியதாகிறது. 'பாண்டுரோகம்' என்பது தோலில் வெள்ளையாக ஏற்படும் ஒருவகை நோயினையும் குறிப்பதன் வழி, அந்நோய் வெள்ளை நிறத்தினைக் குறிப்பதினை அறியலாம். வெளிறிய வெள்ளை நிறத்தில் காணப்பட்டமையால் திருதுராட்டிரனின் தம்பி 'பாண்டு' என அழைக்கப்பட்டான். பாண்டு வாசுதேவனுக்கு 'பாண்டு' எனும் பெயர் வழக்கு வெள்ளை நிறம் பற்றி ஏற்பட்டதென்றால், அதனை பாண்டு வாசுதேவனின் காலமான கி.மு.4 ஆம் நூற்றாண்டில் தமிழர்களிடையே வழகிலிருந்த வெண்நாகன், வெண்காயபன், நல்வெள்ளையார் முதலிய பெயர் வழக்குகளுடன் ஒப்பிட்டு ஆராய வேண்டியது இன்றியமையாததாகின்றது. இன்றைய தொல்லியல் ஆய்வுகளின்படி, சங்க காலம் என்பதும் கி.மு.5 ஆம் நூற்றாண்டிற்கு முன் சென்றுவிட்டது என்பதனை மனத்தில் இருத்திக் கொண்டு ஆராய வேண்டும். அவ்வாறெனில், மேற்கண்டதான வெண்மையை அடையாளமாகவுடைய பெயர் வழக்குகள் யாவும் ஒருவகையில் ஆசீவகச் சமயத்தொடு தொடர்பு பெற்றிருந்தமையினை அறிஞர்கள் விளக்குவர்.

ஆதலால் பாண்டு வாசுதேவனும் ஆசீவக நெறியினனாதலே வேண்டும். இதற்கான சான்றுகள் சிலவும், இவனைக் குறித்ததான குறிப்புகளிலேயே காணக் கிடக்கின்றதெனலாம். பாண்டு வாசுதேவனும் அவனுடன் பயணம் மேற்கொண்ட அமைச்சர்களும் இரந்துண்ணும் துறவியர் போல் கப்பலில் இலங்கைக்கு வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்கள் சமணத் துறவியராக இருந்திருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், இரந்துண்ணும் வழக்கமுடைய, தலையின் முடிகளை நீக்கிய சமணத் துறவியர், கடல் தாண்ட மாட்டா நோன்பினர். பண்டு வாசுதேவன் காலத்திலும் அவனது மகனான அபயன் காலத்திலும் பௌத்தம் இலங்கைக்கு வரவேயில்லை. ஆதலால் அவர்கள், தலைமயிரினை மழிக்கும் பௌத்தரும் அல்லர். மேற்கண்டோர் தலைமுடியுடனேயே வந்துள்ளனர். தமிழ் மரபில் இரந்துண்னும் துறவியர், மக்களால் மதிக்கப் பெற்ற செல்வாக்குடையோராகவும், முக்காலங்களும் அறிந்தோராகவும், மக்களுக்கு நிமித்தங்களைச் சொல்வோராகவும் விளங்கினர். அவர்களை தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் 'அறிவர்' என அழைத்தன. இதனை ஓரில் பிச்சையாரின் சங்கப் பாடல்வழி அறியலாம். அவர்கள் ஆசீவகச் சமயத்தவரே என்பது அறிஞர் பலரின் துணிபு.

பாண்டு வாசுதேவனின் வருகையினை இலங்கையில் உள்ள அமைச்சர்கள் நிமித்திகன் வழி அறியலாயினர். இப் பாண்டு வாசுதேவனைப் பற்றிய மற்றொரு குறிப்பும் ஆசீவக மெய்யியலின் ஊழியற் கோட்பாட்டினை விளக்குவதாக உள்ளமையினைக் காணலாம். கங்கைச் சமவெளியை ஆண்ட சாக்கிய அமிதோதனுடைய ஒரு மகன்தான் சாக்கிய பாண்டு. இச் 'சாக்கிய' என்னும் சொல் பௌத்தரை மாத்திரமல்லாமல் பிற அவைதிகர்களையும் குறிக்கப் பயன்படும் பொதுச் சொல்லாகவும் வழங்கும். அச் சாக்கிய பாண்டுவின் இளையமகள் பத்திர காஞ்சன, பொன்நிற அழகி. அவளை மணக்கப் பலரும் விரும்பினர். ஆனால் பாண்டு, அவள் யாரை மணக்க வேண்டும் என ஊழ் உள்ளதோ, அவரை மணக்கட்டும் எனக் கருதி ஒரு கப்பலில் அவளை ஏற்றிக் கங்கையில் விட்டான். விரும்பியோர் கப்பலைக் கைப்பற்றி அவளை மணக்கலாம் என அறிவித்தான். யாராலும் கப்பலைக் கைப்பற்ற இயலவில்லை. ஊழ்வழிச் சென்ற கப்பல் இலங்கையின் கோண கழகத்தை அடைந்தது. பின்னர் அவள் பாண்டு வாசுதேவனுக்கு மணமுடித்து வைக்கப்பட்டாள்.

**கங்கைச் சமவெளியை ஆண்ட சாக்கிய அமிதோதனுடைய ஒரு மகன்தான் சாக்கிய பாண்டு. இச் 'சாக்கிய' என்னும் சொல் பௌத்தரை மாத்திரமல்லாமல் பிற அவைதிகர்களையும் குறிக்கப் பயன்படும் பொதுச் சொல்லாகவும் வழங்கும். அச் சாக்கிய பாண்டுவின் இளையமகள் பத்திர காஞ்சன, பொன்நிற அழகி. அவளை மணக்கப் பலரும் விரும்பினர். ஆனால் பாண்டு, அவள் யாரை மணக்க வேண்டும் என ஊழ் உள்ளதோ, அவரை மணக்கட்டும் எனக் கருதி ஒரு கப்பலில் அவளை ஏற்றிக் கங்கையில் விட்டான். விரும்பியோர் கப்பலைக் கைப்பற்றி அவளை மணக்கலாம் என அறிவித்தான். யாராலும் கப்பலைக் கைப்பற்ற இயலவில்லை**

இதில் அறிவது சாக்கிய பாண்டும், பாண்டு வாசுதேவனும் ஊழின்பாற் கொண்ட நம்பிக்கையையே ஆகும். இவளை இவன் மணக்க வேண்டும் என்பது முன்னமே முடிவு செய்யப்பட்டது. கருவில் உள்ள போதே எழுதப்பட்டது. அவ்வழி ஊழே அவளது கப்பலை இழுத்து வந்தது என்பதான இக் கோட்பாடு ஆசீவகர்களுக்குரியது என்பதனை இதன்வழி அறியலாம். ஆக பாண்டு வாசுதேவன் காலத்தில் பௌத்தத்திற்கு முன் இலங்கையில் ஆசீவகச் சமயம் செழித்திருந்தமையினை இதன் வழியும் அறியலாம். அறிவர்களின் துணையோடு அவர்கள் கூறும் நிமித்தங்களின் அடிப்படையில் பாண்டு பயணப்பட்டமை போலவே, இன்றும் சிங்கள மக்கள் பயணங்களின் போதும், வேட்டைக்குச் செல்லுதற்கு முன்பும், ஐயநாயக்க என்னும் ஐயனாரை வழிபட்டுச் செல்கின்றமையைக் கொண்டு, இது பண்டைய மரபின் தொடர்ச்சி எனலாம்.

பாண்டு வாசுதேவனுக்கும் பத்ர காஞ்சனாவிற்கும் பத்து ஆண் பிள்ளைகளும் பதினொராவதாகச் சித்தரா என்ற பெண் மகவும் பிறந்தன. முதல் மகனாக அபயன் அரசுக் கட்டிலேறினான். சித்தரா பேரழகி; அவளுக்குப் பிறக்கும் மகனால் மாமன்மார்கள் கொல்லப்படுவர் என நிமித்திகன் கூறியபடியால் அவளை தனியிடத்தில் சிறைவைத்தனர். சித்தரா பணிப் பெண்ணின் ஒத்துழைப்போடு, காமனி என்னும் தன் அத்தை மகனைக் கூடி, பாண்டுகாபயன் என்னும் மகவைப் பெற்றெடுத்து, பணிப் பெண்ணிடம் கொடுத்துப் பிறிதோர் இடத்தில் வளர்க்கச் செய்தாள். இப் பாண்டு காபயனின் வாழ்வும், ஊழினது தன்மையை வலியுறுத்துவதாகவே உள்ளமையினைக் காணலாம். நீண்ட வாழ்நாள் என்பது இவனது ஊழாக இருந்தமையினால், இவளது மாமன்மாரால் இவனை ஒன்றும் செய்ய இயலவில்லை. ஊழின் வழியே, இவனது மாமன்மாருடனான மோதலும் கொலைகளும் நிகழ்ந்து முடிந்து, இப் பண்டுகாபயன் மன்னனானான். இவன் கருவிலிருந்த காலத்திலிருந்து, இவனைப் பாதுகாத்தவர்களாக இரண்டு இயக்கர்கள் (யதமர்கள்) சுட்டபடுகின்றனர். அவர்கள் காலவேலன், சித்தன் என்போராவர். இவர்கள் இருவருமே ஆசீவகச் சமயத்தைப் பின்பற்றும் தமிழர்கள் என்பதை அவர்களின் பெயர்களின் வழி அறியலாம்; இச் சித்தன் என்னும் இயக்கனுடன் சம ஆசனத்தில் அமர்ந்து தேவர்களும் மனிதர்களும் ஆடும் நடனத்தினை பாண்டுகாயபன் கண்டுகளித்தான் எனவும் மகாவம்சம் கூறுவதன் வழியும் இதனை அறியலாம். ஆசீவகர்கள் இசையிலும் நடனத்திலும் பெருவியப்புடையவர்கள் என்பதால் இவர்களும் அவற்றைப் பேணி வளர்த்துள்ளனர் எனலாம்.

மதுரையிலிருந்து திருச்சிராப்பள்ளி செல்லும் வழியில் மேலூருக்கு அருகேயுள்ள மலைக்குன்றில், இயற்கையாய் அமைந்த மலைக் குகையின் தளத்தில் கற்படுக்கைகளிலும் அதன் மேல்பகுதியிலும் உள்ள கல்வெட்டுகளை,

அரிட்டாபட்டிக் கல்வெட்டுகள் என அழைப்பர்.

> “கணிய் நந்த அஸிரிய் இகுவ் அன்கே
> தம்மம் இத்தஅ நெடுஞ்செழியன் பணஅன்
> கடல் அன் வருத்திய கொட்டுபித்த
> பளிஇய்”

என்ற கல்வெட்டும் அக் கல்வெட்டுகளின் ஒரு பகுதியாகும். இக்கல்வெட்டில் ஆசீவகத்தின் சிறப்பிற்குரியோரான கணி நந்தாசிரியன் இயக்கன் என்போனுக்கு பாண்டிய நெடுஞ்செழியன் ஏற்படுத்திய கற்படுக்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆசீவகர்களைத் கணியர், கணி எனவும் அழைப்பர். அவ்வடிப்படையில் இயக்கன் (யட்தமன்) என்ற சொல் ஆசீவகத் துறவிகளைக் குறித்தமையையும் காணலாம். ஆடலும் பாடலும் ஆசீவகச் சமயக் கோட்பாட்டுடன் இணைந்தவை. ஆசீவகத் தோற்றுநர்களில் ஒருவரான மற்கலி கோசலர், இறுதியாகக் கூறிய எட்டு மெய்மைகளில் ஆடலும் பாடலும் அடங்கும். விழா நாட்களில் சித்தன் என்னும் இயக்கனுடன் அமர்ந்து ஆடலையும் பாடலையும் பாண்டுகாபயன் கண்டு களித்தான் என்பதும் அவனது ஆசீவகச் சார்பையே காட்டுவதாகின்றது. பாண்டுகாபயனின் அறச்செயல்கள் பற்றிக் கூறும் மகாவம்சப் பகுதியில் ஆசீவகர்களைப் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

1. அதற்குக் கிழக்கே அரசன் நிகந்த ஜோதியர்களுக்காக ஒரு வீட்டைக் கட்டினான்.

2. அப் பிரதேசத்திலேயே கிரி என்னும் பெயருடைய நிகந்தரும் பல்வேறு மதப்பிரிவுகளைச் சேர்ந்த துறவிகளும் இருந்தனர்.

3. அங்கு அரசன் நிகந்த கும்பந்தருக்காக ஒரு பிரார்த்தனை மண்டபத்தினைக் கட்டினான். அது அவர் பெயரால் அழைக்கப்பட்டது.

மேற்கண்ட மகாவம்சப் பகுதிகளில், நிகந்த (நிகண்ட) ஜோதியர் என்போருக்கு பாண்டுகாயபன் ஒரு வீட்டை வழங்கியதாகவும், நிகந்த கும்பருக்கு ஒரு வழிபாட்டு மண்டபம் கட்டியதாகவும் கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம். இந் நிகண்ட ஜோதியர் குறித்து சிலர், இவர் திகம்பர சமணர் எனக் குறிப்பர். ஆயினும் இக்கருத்து ஐயத்திற்கிடமானதே. திகம்பர சமணர்கள் கடலில் பயணம் செய்திலர். இவர்கள் கடலில் பயணம் செய்யாமையாலேயே, சமணம் துணைக் கண்டத்தினைத் தாண்டி எங்கும் பரவியது. அத்துடன் இலங்கையிற் கிடைக்கின்ற பிராகிருத பிராமிக் கல்வெட்டுகளும் சமண வாணிகர்களுடையதே; அவை சைனத் துறவியருடையதல்ல என்பதினையும் கருதுதல் வேண்டும். அத்துடன் இலங்கை மக்களின் வாழ்வியலில் இன்னும் ஆசீவக மெய்யியலின் தாக்கத்தினைக் காண இயலும். ஆனால், சமணச் சான்றுகள் எதனையும் காண இயலாது.

4. ஜோதியருடைய வீட்டுக்கு அப்பால், காமனி வாவியின் இக்கரையில் ஊர் ஊராகச் சென்று இரந்துண்ணும் துறவிகளுக்காக ஒரு மடத்தைக் கட்டுவித்தான்.

5. ஆசீவகர்களுக்கு ஒரு தங்குமிடமும் பிராமணர்களுக்கு ஒரு தங்குமிடமும் அமைத்தான். இந்த இடத்தில் நோயுற்றவர்கள் தங்கிச் சுகம் பெற ஒரு மனையையும், மண்டபத்தையும் கட்டினான்.

பாண்டு காபயன் ஆசீவகர்களுக்கு அளித்த கொடையாக வரலாற்றாசிரியர்கள் இந் நிகழ்வினைக் குறிப்பிடுவர். ஆசீவகர் என்ற சொல் இங்கு நேரடியாகக் குறிப்பிடப்பட்டமையால் மயக்கமெதுவுமில்லை. வேறுவடிவில், சமணர் என்பதாகவோ அமணர் என்பதாகவோ பொதுச் சொல்லால் குறிப்பிட்டிருந்தால், சைனர் என்று கண்ணை மூடிக் கொண்டு கூறிவிடுவர். ஊர்தோறும் இரந்துண்ணும் துறவியர் எனக் குறிப்பிடப்பட்டவரும் ஆசீவகத் துறவியரே என்பதினை முன்னமே கண்டோம். ஆதலால் இம் மன்னன் செய்த செயல்கள் யாவும் பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகளேயாகும்.

பாண்டு காபயன் முற்பத்து ஏழு வயதில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். எழுபது ஆண்டு காலம் அனுராதபுரத்திலிருந்து ஆண்டான். அங்ஙனமாயின், 107 ஆண்டுகள் உயிர் வாழ்ந்துள்ளான். பாண்டுகாபயனுக்குப் பிறகு

அவனுடைய மகன், மூத்த சிவன் அரசனானான். இவனும் ஆசீவக நெறியினைக் கைக்கொண்டிருந்தான். இதற்கான ஒரு சான்றினைக் காண்போம். ஆசீவகர்கள் பூங்காக்களை அமைத்தலையும் ஆசீவகத் துறவிகள் பூங்காக்களில் ஓய்வெடுத்தலையும் பெரிதும் விரும்புவர். அது அவர் தம் வழமையாகும். அதுபோலவே ஆசீவகத்தின் அடிப்படைக் கொள்கைகள் இயல்பு, ஊழ் தற்செயலியம் என்பனவாம்.

“அரசன் அழகுள்ள மகாமேகவனம் பூங்காவை அமைத்தான். அதன் பெயருக்கேற்ப அந்த வனம் எல்லா வகையான நல்ல வளங்களையும் உடையதாக இருந்தது. பழமரங்களும் மலர் மரங்களும் அங்கு இருந்தன. பூங்காவை உருவாக்குதலுக்கு அந்த இடத்தைத் தேர்வு செய்த போது, ஒரு பெரிய மேகம் திரண்டு, கார்காலமில்லாத மழை பொழியாத அக்காலத்திலும் மழை பொழிந்தது. அதனாலேயே அந்தப் பூங்காவை மகா மேகவனம் என்றழைத்தனர்” என்ற மகாவம்சக் கூற்றுக்களின் வழி, ஆசீவகத்தின் தற்செயல் கோட்பாடு விளக்கப்படுதலினைக் காணலாம். தேவையும் தற்செயலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. வெம்மையால் காடு வாடியபோது தற்செயலாகப் பெய்த மழை, காட்டினை உயிர்ப்பிப்பது என்பது, தேவைக்கும் தற்செயலுக்குமான தொடர்பினை விளக்கக் காணலாம். மூத்த (முத்த) சிவன் என்ற பெயர் வழக்கிலுள்ள, முத்தம் என்பது வெண் முத்தினைக் குறிக்கக்கூடியது. “வெண்முத்தம் கடலிலே பிறப்பினும் கடற்கவைதன் என்செய்யும்” என்ற கலித்தொகையடியால் அதனை அறியலாம். ஆதலால் இவனது பெயரிலும் வெள்ளை நிறம் உள்ளதைக் காணலாம். இவனுக்குப்பின் வந்தவனே தேவனாம்பிரிய தீஸன் என்னும் அவனது மகனாவன். இவனது இயற்பெயர் யாதென அறிதற்கில்லை. ஆனால் தேவனாம் பிரியன் என்பது இவனது இயற்பெயர் அல்ல; பௌத்த சமயத்தில் சேர்ந்தபின், அசோகப் பேரரசனும் அவனுடைய கல்வெட்டுகளில் தேவனாம்பிரியன் என்றே அழைக்கப்பட்டமையினைக் காணலாம். இவன் அசோகனைக் கண்ணால் காணாத அவனது நண்பனாவான். இவன் அசோகனது அவைக்குத் தூதுக் குழுவினையும் பரிசுப் பொருட்களையும் அனுப்பி வைத்தான். அசோகனாலேயே இவன் பௌத்த மதத்திற்கு மாற்றப்பட்டான். அந்நிகழ்வை அசோகனுடைய அமைச்சர்களே செய்தனர். அதற்கான பரிசுப் பொருட்களையும் அசோகனே அனுப்பி வைத்தான். அதனை இரண்டாம் பட்டாபிசேகம் எனக் குறிப்பிட்டனர். மேற்கண்டவாறான செய்திகளை மகாவம்சத்தின் 8, 9, 10, 11 ஆம் அத்தியாயங்களின் வழியறியலாம்.

இனி இலங்கையில் தமிழர்களிடமும் சிங்களவர்களிடமும் ஆசீவகம் தொடர்பாக உள்ள எச்சங்களைக் காணலாம். ஆசீவகம் கடவுட் கொள்கையினை ஏற்ற மெய்யியலைக் கொண்டிருக்கவில்லை என்பதினை முன்பே கண்டோம். ஒருசமயம் தனது வாழ்வியலைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பல்வேறு குறியீடுகளைக் கையாள்வது போல் ஆசீவகமும் பிற்காலத்தில் தனது மெய்யியற் கோட்பாடுகளை வழிபாட்டு மரபுகளுக்குள்ளாகவும் சடங்கியல்களுக்குள்ளாகவும் மறைத்துக் கொண்டதெனலாம். அவ்வகையில் ஆசீவகம் அறப்பேர் சாத்தன் என வழங்கும் சாத்தன் வழிபாடு என்னும் ஐயனார் வழிபாட்டில் தம்மை இணைத்துக் கொண்டதென்பர்.

மற்கலி கோசலரையும், பூரணரையும், பக்குடுக்கை நன்கணியரையுமே பூரண பொற்கலையுடன் கூடிய ஐயனாராக க. நெடுஞ்செழியன் குறிப்பிடுவார். ஐயனார் வழிபாடு இலங்கையில் தமிழ் மக்களிடமும் சிங்கள மக்களிடமும் பெரிதும் பரவியுள்ளது. இன்றளவும் இலங்கைத் தீவு முழுவதும் ஐயனார் வழிபாடானது வழக்கில் உள்ளதெனலாம். ஐயனாரை சிங்கள மக்கள் ஐயநாயக்க தேவர், ஐயநாயக்க தெய்யோ என வழங்கி வழிபடுகின்றனர். ஐயனார் குறித்த செய்திகளை ரன்ஹெலப்பகவின, கோகிலசந்தேச (குயில்விடுதூது) என்ற சிங்கள நூல்கள் கூறுகின்றன. ‘எலான றெலன் பீலியு’ என்ற அம்மையார் இலங்கையில் ஐயனார் வழிபாட்டு முறைகள் பற்றி ஆய்வு மேற்கொண்டுள்ளார். ஐயனார் குறித்த பல்வேறு தொன்மக் கதைகள் சிங்கள மக்களிடமுண்டு. மதுரையிலிருந்து

ஐயனார் இலங்கைக்கு வந்தார் என்ற கருத்தும் உண்டு. ‘புல்லுவன் என்போன் பெண்வடிவம் கொள்ள அவனது வலதுபக்க இடையில் பிறந்தவரே ஐயனார்’ என்ற வழக்கும் உண்டு. இப்புல்லுவன் மகன், யானை மீதேறி தேவருலகம் சென்றபோது தேவர்கள் அவனைக் கூடி வரவேற்றனர். ஐயனார் இயக்கர்கள் பலருடன் மல்லவ தேசத்துத் தெய்வங்களோடு பெரிய படகு ஒன்றில் கடற் பயணத்தினை மேற்கொண்டார். கப்பலிக்க என்பவனால், பல நாடுகளிலிருந்தும் கொண்டுவரப்பட்ட பளிங்குப் பொருட்களால் ஏழு அடுக்குகளையுடையதாக அக்கப்பல் கட்டப்பட்டது. பயணத்தினிடையில் கப்பல் மூழ்க மல்லவ தெய்வங்கள் ஒரு யானையைப் பலியிட்டுக் கப்பலை மீட்டதாகவும், அக்கப்பல் யாழ்ப்பாணத்தை அடைந்ததாகவும், ஐயனார் வெள்ளை யானை மீதமர்ந்து யாழ்ப்பாணத்துக் கடற்கரையோரப் பகுதிகளுக்குச் சென்றதாகவும், வீரக்குழிய என்ற இடத்தில் ஒரு கோயிலைக் கட்டியதாகவும் கூறப்படுகின்றது.

> **ஆசீவகம் கடவுட் கொள்கையினை ஏற்ற மெய்யியலைக் கொண்டிருக்கவில்லை என்பதினை முன்பே கண்டோம். ஒருசமயம் தனது வாழ்வியலைத் தக்க வைத்துக் கொள்வதற்கு பல்வேறு குறியீடு களைக் கையாள்வது போல் ஆசீவகமும் பிற்காலத்தில் தனது மெய்யியற் கோட்பாடுகளை வழிபாட்டு மரபுகளுக்குள்ளாகவும் சடங்கியல்களுக்குள்ளாகவும் மறைத்துக் கொண்டதெனலாம்.**

இக்கதைகளில் பௌத்த சமயத்தின் தாக்கம் இருப்பதினை அறியினும் தமிழக ஐயனார் கதைகளுடன் இவை ஒப்புமைப்பட்டிருக்கின்றமையினைக் காணலாம். தமிழக ஐயனார் சிலைகளைப் போலவே, ஒருகையில் செண்டு என்னும் ஆயுதமும் ஒருகையில் தாமரை மொட்டு அல்லது அபய முத்திரையுடனும் காணப்படக் கூடியவராகச் சிங்கள மக்கள் வழிபடும் ஐயனார் சிலைகள் அமைந்துள்ளன. ஆசீவகர்கள், வானியல் நிமித்தம் முதலியனவற்றை அறிவதில் வல்லவர்கள். பண்டைய சிங்கள மக்கள் அவர்களின் வழிகாட்டுதலின் வழி செயற்பட்டமை போல, இக்காலத்து மக்களும் பயணம் மேற்கொள்ளச் செல்லும் முன் ஐயனாயக்க தேவரை வழிபட்டே செல்லுவர். அத்துடன் தமிழக மக்களிடமில்லாத ஒரு வழிபாட்டு மரபும் சிங்கள் மக்களிடம் உண்டு. ஐயனாருக்கு நடைபெறும் திருவிழாக்களில் ஒரு நிகழ்வாக அமைவது ‘முட்டி மங்கலம்’ என்னும் சடங்காகும். இவ்விழாவில் குளக்கரையின் இரகசியமான இடத்திற்குச் சென்று புதிய சிவப்புப் பானைகளுக்குள்ளே விளக்குகளை ஏற்றிவைத்துப் படையல் செய்து வழிபடுவர். இவ் அரிய வழிபாடு பல தெளிவுகளை நமக்கு வழங்குவதாகின்றது. முட்டி என்னும் சொல் தமிழிலும் மண்பானையினைக் குறிக்கக் கூடியதாகின்றது. பனை மரத்தில் கள்ளுக்குக் கட்டும் பானையினை இன்றும் கள்முட்டி என்றே அழைப்பர்.

கொங்குப்பகுதியில் பனங்கிழங்கினை ஒரு பானையில் அடுக்கி நீரின்றி அவிப்பர். இதனை வறமுட்டி என்பர். முட்டி என்பது முடிவு என்னும் பொருளிலும் நிலைத்தல் என்னும் பொருளிலும் வழங்கும். கோயில் தேர்கள் நிற்கும் இடத்தினைத் தேர்முட்டி என வழங்குவதால் இதனை அறியலாம். ஆசீவகச் சமயத்தார் பானையில் இருந்து தவம் செய்யக் கூடியவர்கள். பானையிலேயே இறந்தவரை அடக்கமும் செய்யக் கூடியவர். இதனையே தாழியிற் கவிழ்த்தல் எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் முதுமக்கள் தாழிகள் பலவும் கிடைக்கக் கூடியனவாகின்றன என்றபடியால், பௌத்தத்திற்கு முன்பு, ஆசீவகச் சமயம் இருந்தபோது தாழியிற் புதைக்கும் வழக்கமே காணப்பட்டதெனலாம். அவ்வாறு தாழியிர் புதைக்கப்பட்டோரினை வழிபடும் மரபின் தொடர்ச்சியாகவே இன்றும் பானையில் விளக்கேற்றி வழிபடும் சடங்கு ஐயனார் வழிபாட்டில் சிங்கள மக்களிடம் உள்ளதெனலாம். அதுபோலவே

ஆசீவகர்களுக்குரிய தாழியில் கவிழ்க்கும் இடுகாடுகளாகவே யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடை முதலான இடங்களைக் கருதமுடியும். ஏனெனில் இறந்தோரை எரியூட்டல் மரபே பௌத்தருடையது. இறந்தோரைத் தாழியிற் கவிழ்த்துப் புதைத்தல் மரபானது ஆசீவகர்களுக்கு உரியதாகும். அவ்வடிப்படையில், இவ்விடங்களை ஆய்வு செய்கின்ற போதே இலங்கையின் உண்மையான சமய வரலாறு வெளிப்படும். தமிழர் வழிபாட்டிலுள்ள ஐயனார் சிலையின் வடிவமைப்பும், சிங்கள மக்களிடமுள்ள ஐயனார் வழிபாட்டுச் சிலையின் வடிவமைப்பும் கிட்டத்தட்ட ஒன்று போன்றனவே. அனுராதபுரத்திற்கருகில் காணப்படும் ஐயனார் சிலையை 'இசுருமுனிய' சிலை என்றழைப்பர். ஆனால் அது ஐயனார் சிலைதான் என்பது தெளிவு. அச்சிலையின் ஒருகையில் செண்டாயுதம் உள்ளமை கொண்டும், அச்சிலை 'அர்த்தலீலாசனத்தில்' அமர்ந்திருத்தல் கொண்டும் இதனை உணரலாம். அச்சிலை கி.பி.6 ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்ததாகலாம் என்பர். திஸ்ஸவாவி என்னும் குளத்திற்கருகே அச்சிலை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஐயனார் வழிபாடுகள் குறித்த பல பாடல்களும் சிங்கள மக்களிடமுண்டு. இன்றும் ஐயனாரை மோகினியின் மகனாகக் கருதுவோரும் உண்டு எனலாம்.

## ஈழத்தில் தமிழரிடம் உள்ள ஐயனார் வழிபாடுகள்

தமிழரின் தாயகப் பகுதிகளில் மிகுதியாகக் காணப்படக்கூடிய கோயில்களில் ஐயனார் கோயில்களும் அடங்கும். தமிழ் பௌத்த சமயத்தின் சிறந்த தலமாக மணிமேகலை சுட்டும் மணிபல்லவம் என்னும் நயினாதீவும், கண்ணகி வழிபாட்டின் சிறந்த தலங்களில் ஒன்றாக உள்ள காரைத் தீவும் போல், ஐயனார் வழிபாட்டின் தலைமைத் தலமாக அமைவது அனலை தீவு ஆகும். யாழ்ப்பாணத்தின் மேற்கே தமிழகத்திற்கும் ஈழத்திற்கும் இடைப்பட்ட இத்தீவுகள் சமயத் தொன்மங்களை உடையதாகும். அவ்வகையில் அனலை தீவிலுள்ள ஐயனார் கோயில் பல நூற்றாண்டுகள் வரலாற்றுச் சிறப்புடையதாகும். இவை தமிழக ஐயனார் வழிபட்டு மரபுடன் ஒத்தனவாக காணப்படுகின்றன. ஐயனாரின் வாகனமாக யானையே காணப்படுகின்றது. கோயிலுக்கு முன் அழகிய தாமரைக்குளம் காணப்படுகின்றது. இக்கோயிலே இலங்கையிலுள்ள ஐயனார் கோயில்களுக்கெல்லாம் தலைமைக் கோயிலாக அமைகின்றது. ஆசீவகச் சமயம் செழிப்புற்றிருந்த காலத்தில் தமிழகத்திற்கும் ஈழத்திற்குமான இணைப்புப் பள்ளியாக இது அமைந்திருக்கும் எனக் கருதலாம்.

சுன்னாகத்தில் அமைந்துள்ள ஐயனார் கோயிலும் புகழ் பெற்றதாகும். சுன்னாகம் ஒரு காலத்தில் ஆசீவகம் சிறப்புற்றிருந்த தலமாகும் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. சுன்னாகம் என்னும் பெயர் ஆசீவகத்தின் வெண்மை நிறத்தினைக் குறிக்கும் வெண்மலை என்னும் பொருளுடையது. இச் சுன்னாகத்திற்குள்ளேயே வெண்பிறப்பினை அடைந்த ஆசீவகத் துறவிகளைத் தாழியில் கவிழ்க்கும் கந்தரோடை அமைந்துள்ளது. அதற்கு அருகிலேயே இலங்கையின் முதற் கண்ணகி கோயிலான அங்கனாவைக் கடாவை கண்ணகி கோயிலும் அமைந்துள்ளது. ஐயனார் வழிபாட்டு முறைமைகளை நோக்குகின்றபோது பெரும்பாலான ஐயனார் கோயில்கள் தமிழ் மரபு வழிபாட்டினை உடையனவாகவே உள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் செல்வந்தர்களின்



அனலைதீவு ஐயனார் தேர்த் திருவிழா

Image Source - globaltamilnews.net



அனலைதீவு ஐயனார்

Image Source - globaltamilnews.net

கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் வைதீக முறை பின்பற்றப்படுகின்றன. யாழ்ப்பாணத்தார் தமிழ் பண்பாடு மரபின்பின் மீது கொண்ட தாழ்வு மனப்பான்மையும், வைதீகம் போன்ற அந்நிய மரபுகளின் மீது கொண்ட மோகமுமே இதற்கான காரணங்களில் முதன்மையானது.

பொங்கல் வெறியாடுதல், காவடி எடுத்தல், கட்டு செல்லுதல், குறிகூறல், தீமிதித்தல் என்பனவான நிகழ்வுகளும், இவற்றின் இறுதியில் நேர்த்திக் கடன்களைச் செலுத்துதல், தண்ணீர் மந்திரித்துக் கொடுத்தல், மடிப்பிச்சை எடுத்தல், பாற் செம்பு முதலியவை நடைபெறும். ஐயனார் வழிபாட்டில் பாற்செம்பு என்பது அதன் வெள்ளை நிறத்தினைக் குறிப்பதாக இன்றளவும் பின்பற்றப்பட்டு வருகின்றமையினைக் காணலாம். வன்னிப் பகுதியிலும் கிழக்கு இலங்கையிலும் ஐயனார் வழிபாடென்பது மிகுதியே. ஒவ்வொரு கோயிலாகக் கூறின் பெருகும். ஆதலால் சிறப்பு வாய்ந்த கோயில்கள் பின்னர் தனி நூலாக்கம் செய்யப்படும். ஐயனார் வழிபாட்டிற்குரியதாக ஐயனார் அகவல், ஐயனார் காவியம் என்பன வழக்கிலுள்ளன. தோவனம் பிரியதிஸன் காலத்திலேயே பௌத்தம் இலங்கைக்கு வந்தது. ஆனால் அதற்கு முன்பு அவனுடைய பாட்டனான பண்டு வாசுதேவன் காலத்திற்கு முன்பே ஆசீவகம் இலங்கையிற் செழித்திருந்தது. அங்ஙனமாயின், அதனை வடபுலத்தில் மாத்திரம் தோன்றிய சமயமாக எப்படிக் கொள்வது? தமிழரின் சிந்தனை மரபில் தோன்றாத ஒரு சமய மரபினைத் தமிழர்கள் எப்படிப் பெருவாரியாகச் சில நூற்றாண்டுகால இடைவெளிகள் கூட இல்லாது உடனே கடைப்பிடிப்பர்? ஆதலால் ஆசீவகம், தமிழர் மரபில் தோன்றிய சமயம் என எண்ண இடமுண்டு.

## அசீவகச் சமய அடையாளங்கள்

ஆசீவகச் சமயம் பல அடையாளங்களை உடையதாக விளங்கியது. பௌத்த - சமண நெறிகளில் இருந்து மாறுபட்டு, இசையினையும் நடனத்தினையும் போற்றி வளர்க்கக் கூடிய சமயமாக இருந்தது. ஆசீவகத் துறவிகளே இக்கலைகளைப் போற்றினர். தமது இறுதிக் காலத்தில் மற்கலிகோசலர், ஆலகால என்ற தனது மாணவியின் வீட்டில் தங்கியிருந்து, எட்டு உறுதிப் பொருட்களை வெளியிட்டார் என்று பகவதி சூத்திரம் கூறுவதாகக் கூறும் க. நெடுஞ்செழியன் அவர்களின் கூற்றினை நோக்குவோம்.

*“மற்கலி கோசலரின் இறுதி நாட்களில் அவர் தம் மாணவியான ஆலகாலா என்னும் பெயருடைய குயப்பெண் வீட்டிலேயே இருந்துள்ளார். அங்கிருந்துதான் தமது எட்டு உறுதிப் பொருட்களையும் வெளியிட்டுள்ளார். அவை:*

1. *இறுதிப் பருகல்*
2. *இறுதிப் பாடல்*
3. *இறுதி ஆடல்*
4. *இறுதி வரவேற்பு*
5. *இறுதிப் பெரும் புயல்முகில்*
6. *இறுதிப் பெரும் புயல்முகில்*
7. *இறுதிப்போர்*
8. *24 ஆவது இறுதித் தீர்த்தங்கள்*

இவற்றை சைன நூலாகிய பகதி சூத்திரம் குறித்துள்ளது எனக் கூறியுள்ளதை நோக்கின், இவற்றில் ஆசீவகத்தினை அடையாளப்படுத்தக் கூடியனவாக உள்ளனவும் உள்ளன. ஆதலால் இவற்றினையும் இவற்றைப் போன்றவற்றினையும் கொண்டு, ஆசீவகத்தின் அடையாளங்களுக்கு உரியவற்றினைக்


சுன்னாகம் ஐயனார் கோவில்
Image Source - www.facebook.com

குறித்தும், அவை எவற்றைக் குறிக்கின்றன என்பன குறித்தும் பார்க்க வேண்டியதாகின்றது.

## இசையும் நடனமும்

ஆசீவகர்கள் இசையும் நடனத்தினையும் போற்றி வளர்த்தனர் என்பதினை, மதுரைக்காஞ்சியில் ஆசீவகப் பள்ளியின் வழிபாட்டில் இசைப்பாடல்கள் பாடப்பட்டமையினாலும், மற்கலிகோசலர் தனது இறுதிக் காலத்தில் ஆலகால என்ற தனது மாணவியின் வீட்டில் இருந்தபோது வெளியிட்ட எட்டு மெய்மைகளில் ஆடலும் பாடலும் உண்டு என்பதாலும் அறியலாம். அத்துடன் இசைக்கும் அவர்களது மெய்யியலுக்கும் பெரிதும் தொடர்பு உண்டு என்பதினை அரச்சலூர்க் கல்வெட்டுக் கூறுகிறது.

இக்கல்வெட்டுக்களின் வழியும், ஆசீவக அடையாளங்களின் வழியும், அவற்றிலுள்ள சமநிலைத்தன்மை ஒன்றினை நாம் அறியக் கூடியதாக உள்ளதெனலாம். அரச்சலூர்க் கல்வெட்டில் மூன்று பகுதிகள் உள்ளன. இரண்டு பகுதிகள் இசை குறித்துக் குறிப்பிடுகின்றன.

**பகுதி 1**

த தை தா தை த
தை தா தே தா தை
தா தே தை தே தா
தை தா தே தா தை
த தை தா தை த

**பகுதி 2**

கை த தை த கை
த தை தி தை த
தை த தை த தை
த தை த தை த

வண்ணக்கண் ஆதன் சாத்தன் என்னும் இசையாசிரியனால் பாடப்பட்ட இவ் வாய்ப்பாடு இக்கால நாட்டிய மரபில் சதி என்று சொல்லப்படுகின்றது. இவ் வாய்ப்பாட்டில் ஒரு சமநிலை மரபு பின்பற்றப்பட்டுள்ளமையினைக் காணக் கூடியதாக உள்ளது. ஒரு புள்ளியும் அதனைச் சூழ்ந்ததாகவும் இச்சமநிலை மரபானது விரிவடைகின்றது.

இதுபோலவே இசையல்லாத பிற ஆசீவக மரபுகளிலும் இச்சமநிலை மரபு விரிகின்றது

என்பதும் ஆய்வுக்குரியதாகும். இவ்விசைச் சொற்களின் தாளக்கட்டினுக்கு ஆடுகின்ற ஆட்டத்திலும், ஒரு சமநிலை காணப்படுமெனலாம். சித்தன்னவாசல் ஓவியங்களில் உள்ள நடனப் பெண்டீரின் வடிவிலும் ஒரு சமநிலைத் தன்மை இருப்பதினைக் காணக்கூடியதாகின்றது.

## தாமரைக் குளம்

தாமரைக் குளமுமாகும் ஆசீவகச் சமயத்தின் அடையாளங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்படுவது. இன்றும் ஈழத்து ஐயனார் கோயில்களைத் தாமரைக் குளங்களின்றிக் காணுதல் என்பதியலாது. இக்குளங்களும் இவற்றிலுள்ள தாமரை மலர்களும் ஆரச் சமநிலையினை உடையனவாக விளங்குகின்றன. குளம், கவிழ்ந்த (ப) கூம்பு வடிவினை உடையது. ஒரு புள்ளியில் தொடங்கி விரியும் சமநிலையினை உடையது. தாமரைப் பூக்களும், மொட்டுப் புள்ளியிலிருந்து தொடங்கி விரியும் தன்மையுடைய சமநிலையானவை. தாமரை இலைகளும் அத் தன்மையானவையே.

## திருநிலை

ஐயனார் கோயில்களின் கருவறை வாயிலுக்கு மேல் காணப்படக்கூடிய திருவையும், திருவினுக்கு இரண்டு பக்கங்களிலும் காணப்படும் யானைகளின் காட்சியையும், திருநிலை என்பார். இத் திருநிலையில் யானைகள் நீரினைச் சொரியும் அமைப்புக் காணப்படும். இதனை அறிஞர்கள் ஆசீவகத்தின் அடையாளங்களில் ஒன்றாகக் குறிப்பிடுவர். இத் திருநிலையும் சமச்சீர் உடையதாகவே அமைந்து காணப்படுதலினைக் காணலாம்.

## ஐயனார் சிலை

ஐயனார் வழிபாட்டினை ஆசீவகச் சமயத்தின் நீட்சியாகக் கருதுவர். ஈழத்தில் ஐயனார் கோயில்களின் எண்ணிக்கையே மிகுதியெனலாம். இவ்வகை ஐயனார் சிலை நடுவில், ஒரு பக்கம் பூரனையும் ஒருபக்கம் பூக்கலையும் அமைய, பொதுவாக ஐயனார் லீலாசனத்திலோ அர்த்த பத்மாசனத்திலோ அமர்ந்த நிலையில் காணப்படுவார். இவ்வடிவமைப்பு சமநிலைத் தன்மையினைக் கொண்டதாகவே அமைவதினைக் காணலாம்.

## ஈடுகாட்டுக்கல் வட்டம்

தாழியிற் கவிழ்க்கப்பட்டோரை அடக்கம் செய்த இடத்தினைச் சுற்றி கல் வட்டங்களை அமைப்பர். அக் கல் வட்டங்களை இன்றளவும் பல இடங்களில் காணலாம். அக் கல்வட்டமும் ஒரு புள்ளியிலிருந்து விரியக் கூடிய ஆரச் சமநிலையினை உடையதாகவே அமைவதினைக் காணலாம். இவ்வடையாளங்கள் ஆசீவகக் கொள்கையை விளக்குவனவாகவே உள்ளன. வயிரமுடைய தேக்கு மரமும், உட்துளையுள்ள மூங்கிலும் ஒன்றுதான்; இரண்டு பொருட்களுமே அணுக்களால் ஆனவையே; அறிஞனும் அசடனும் ஒன்றுதான்; இதில் வியத்தற்கு ஒன்றுமில்லை; எல்லாம் ஊழின் வழி இயங்கக் கூடியனவையே என்னும் சமநிலைத் தன்மை ஆசீவகக் கோட்பாட்டினை விளக்கும்.

*“யாதும் ஊரே, யாவரும் கேளிர்;*
*தீதும், நன்றும், பிறர் தர வாரா;*
*நோதலும், தணிதலும், அவற்றோர் அன்ன;*
*சாதலும் புதுவது அன்றே! வாழ்தல்*
*இனிது என மகிழ்ந்தன்றும் இலமே! முனிவின்*
*இன்னாது என்றலும் இலமே! மின்னொடு*
*வானம் தண் துளி தலைஇ ஆனாது,*
*கல்பொருது இரங்கும், மல்லல் பேர்யாற்று*
*நீர்வழிப் படூஉம் புனை போல், ஆருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது திறவோர்*
*காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியில்*
*பெரியோரை வியத்தலும் இலமே!*
*சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!”*

*(புறநானூறு, 192)*

என்ற பாடல் வரிகளின் கோட்பாட்டுடன் சமநிலைக் கருத்தியல் ஒத்துச் செல்வதினைக் காணக்கூடியதாகின்றது எனலாம்.

(தொடரும். )

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக 'இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்' அமைகின்றது.




**இளங்கோ**

யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, 'டிசே தமிழன்' என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.


# அனுக் அருட்பிரகாசத்தின் 'ஒரு குறுகிய திருமணத்தின் கதை'

நெடும் வருடங்கள் நடந்த ஒரு யுத்தத்தில் ஒரு நாளைப் பிரித்தெடுத்து நிதானமாய்ப் பார்த்தால் என்னவாகும்? உயிர் தப்பியதே அதிசயமாய்த் தோன்றுவது ஒருபுறமிருக்க, அந்த நாளொன்றில் இந்தளவு சம்பவங்கள் நிகழ்ந்ததா என்ற ஆச்சரியம் இன்னொருவகையில் ஒருவரைத் திகைக்க வைக்கக்கூடும். அனுக் அருட்பிரகாசம் எழுதிய '*The Story of a Brief Marriage*' நாவல், எறிகணைத் தாக்குதலில் காயமடையும் ஆறுவயதுச் சிறுவனை, இளைஞனான தினேஷ் வைத்தியசாலைக்குள் தூக்கிக்கொண்டு வருவதோடு தொடங்குகின்றது. அதேபோல நாவல் முடிவதும் மிகக்கொடூரமான எறிகணைத் தாக்குதலோடுதான். ஆனால் ஒரு பகலிலிருந்து அடுத்த நாள் விடிவதற்குள் நாவல் முழுவதும் நடந்து முடிந்து விடுகின்றது.

நம் வாழ்வில் ஒருநாளில் நிகழ்வதை, மிக மெதுவாகச் சுழற்றிப் பார்த்தால் எப்படியிருக்குமோ, அப்படியே இந்த நாவல் கொடும் யுத்தச் சூழலின் ஒரு நாளை மிக மிக மெதுவாக நகரவிட்டு பின் தொடர்ந்தபடி இருக்கின்றது. இங்கே இராணுவம் பற்றியோ, அதை நடத்திக்கொண்டிருக்கும் அரசு பற்றியோ எதையும் நேரடியாகச் சொல்லாமல் யுத்தத்தின் பயங்கரத்தை எழுத்துக்களால் அனுக் கொண்டுவருகின்றார். புலிகளைக் கூட இயக்கம் (movement) என அடையாளப்படுத்துகின்றாரே தவிர, அவர்களைப் பற்றி எந்த விரிவான சித்திரங்களும் இப்புதினத்தில் இல்லை.

இன்னும் சொல்லப்போனால் எறிகணைகள் விழுந்து வெடிக்கின்றதான சித்தரிப்புகளில்லை. ஆனால் எறிகணைகள்





Image Source - forshakti.blogspot.com

ஏவப்பட்டதுடன் ஆரம்பிக்கும் உத்தரிப்புகளும், எறிகணைகள் வெடித்தபின் மாறும் கொடும் சூழல் பற்றிய விரிவான காட்சிகளும் இதில் இருக்கின்றன. அப்பு எழுதிய 'வன்னி யுத்தம்' நூலில், மரணத்தை விட, மரணம் எப்போதும் நிகழும் என்கின்ற அச்சமே தனக்கு யுத்தகாலத்தில் மிகப்பெரும் மனப்பாரத்தைத் தந்தது என எழுதப்பட்டிருப்பதைப் போல, இந் நாவலிலும் யுத்த காலத்தில் வாழ நேர்ந்தவர்களின் அவதிகளும் அச்சங்களும் முன்வைக்கப்படுகின்றன.

எறிகணையால் காயப்பட்ட சிறுவனின் கையை வெட்டி அகற்றினால்தான் அவன் உயிர் தப்புவான் எனும் சந்தர்ப்பத்தில், உடல் உறுப்புகளை இழப்பதை எண்ணிக் கவலைப்படுவதை விட, உயிரோடு எஞ்சுதலே பெருங்காரியம் என நினைக்கின்ற சூழ்நிலைக்கு யுத்தம் மனிதர்களைக் கொண்டுவந்துவிட்டதை உணர்கின்றோம். தினேஷ், பின்னர் தற்காலிக மருத்துவமனையாய் அமைக்கப்பட்ட கொட்டகையைச் சூழக் குவிக்கப்பட்டிருந்த பிணங்களைத் தோண்டிப் புதைக்கின்றார்.

அந்தப் பொழுதிலே தினேஷைப் பற்றி அறிந்த வைத்தியர் சோமசுந்தரம் தனது மகளை மணக்கமுடியுமா என்பதைக் கேட்கின்றார். வைத்தியர் சோமசுந்தரம், தனது மகனையும் மனைவியையும் யுத்தத்தின் நிமித்தம் இழந்தவர். உயிரோடு எஞ்சியிருக்கும் தன் 18 வயதிற்குட்பட்ட மகளையும், இயக்கத்தின் கட்டாய ஆட்சேர்ப்பில் இழந்துவிடுவேனோ என்ற பயத்தில் திருமணம் ஒன்றைச் செய்துவைக்க முயல்கின்றார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் வைத்தியசாலைப் பகுதியில் வந்து தேவையான உதவிகளைச் செய்யும் தினேஷூம், காட்டையண்டிய பகுதியில், இயக்கத்தின் கண்களில் அகப்படாது மறைந்தபடி வாழ்கின்றார்.

தினேஷூம், அவரின் தாயும் சில மாதங்களாய் யுத்தத்தின் நெருக்குவாரத்தில் ஒவ்வொரு



அனுக் அருட்பிரகாசம்
Image Source - www.nytimes.com

இடங்களாய் ஓடிக்கொண்டிருக்கின்றனர். ஓரிடத்தில் ஒரு குடும்பத்தோடு தங்கி நிற்கின்றனர். அந்தக் குடும்பத்து மகனை இயக்கம் யுத்த களத்திற்குக் கொண்டு சென்றிடும் என்ற பயத்தில், அந்தக் குடும்பம் நிலத்தில் புதைத்த எண்ணெய் பரலுக்குள் மகனை மறைத்து வைக்கின்றது. இப்படி ஒளிந்து கிடப்பதன் அவஸ்தையில், ஒருநாள் வீட்டிற்குச்

சொல்லாமலே அந்த இளைஞன் இயக்கத்தில் சேர்ந்துவிடுகின்றான். பிறகு அவன் களத்தில் மரணமானபோதும், அந்தத் தாய் தன் மகன் இறக்கவில்லை என தொடர்ந்து தன் நம்பிக்கையைத் தக்கவைத்துக் கொள்கின்றார். எனது மகன் பிறக்க முன்னர் எப்படி எனது கருவாக என் உடலில் தங்கியிருந்தானோ அப்படியே இப்போதும் உருவமின்றி இருக்கின்றான் எனச் சொல்கின்றார். அப்போது இந்த 'நினைவுகளின் குழப்பத்தை' வித்தியாசமாக நினைக்கும் தினேஷ், பின்னர் தாய் தன் கண்முன்னே துப்பாக்கிகளின் சன்னத்தில் சரிவதைப் பார்க்கும்போது, அவரையும் இப்படியே நினைவுகொள்கின்றார்.

சோமசுந்தரம் திருமணச் சம்பந்தத்தைச் சொல்லும்போது, காயப்பட்ட ஒரு ஐயரை வைத்து திருமணத்தைச் செய்யலாம் என்கின்றார். பிற்பகலில் தினேஷ், வைத்தியரின் தரப்பாள் குடிலைத்தேடிப் போகும்போது, வைத்தியரின் மகள் கங்கா நிற்கின்றார். இருவரும் வைத்தியரைத்தேடிப் போகும்போது, காயப்பட்ட ஐயர், வைத்தியரின் உதவியில்லாது மரணிப்பதைக் காண்கின்றனர். கங்கா, தினேஷ் இருவருக்கும் இதில் முழுச் சம்மதமா என்று யோசிக்க அவகாசம் கொடுக்காது, வைத்தியர் அவர்களுக்கு தன் முன்னிலையில் திருமணத்தைச் செய்துவிடுகின்றார். இறந்துபோன கங்காவின் தாயாரின் தாலியை தினேஷ் அணிவித்து விட, அவர்களைத் தனியே விட்டுவிட்டு சோமசுந்தரம் வைத்தியசாலைக்குப் போகின்றார். யுத்த நேரத்தில் அவ்வப்போது சந்தித்ததைத் தவிர, வேறெந்தத் தொடர்புமில்லாத இருவர் இப்போது கணவன் - மனைவி ஆகிவிட்டனர்.

யுத்தகாலத்தின் நெருக்கடிகளை மிக விரிவான சித்திரிப்புக்களினூடாக அனுக் தரும்போது, நமக்கும் அதே களத்துக்குள் நிற்பதுபோலத் தோன்றுகின்றது. மல - சலம் கழிக்கக் கஷ்டப்படுவது, வாரக் கணக்காய் குளிக்காமல் இருந்து முதல் தடவை குளிப்பது, நகங்களை எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு வெட்டுவது என எல்லாவற்றையும் தினேஷூடாகச் சித்தரிக்கும்போது, மானுட விழுமியங்கள் எல்லாமே எப்படி யுத்தக்காலத்தில் அர்த்தமிழந்து போகின்றதென்பதை நாம் அறிகின்றோம்.

திருமணம் ஆகிவிட்ட கங்காவைப் பார்த்து, 'உனக்கு இது மகிழ்ச்சியா?' எனக் கேட்கும்போது, 'தங்களுக்கு அடுத்து என்ன நடக்கும் என அறியக்கூடியவர்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியும் துக்கமும், எங்களுக்கு அப்படி எந்தத் தெரிவுமே இல்லையே' என அந்தக் கேள்வியைத் தட்டிக்கழிக்கும் போது, யுத்தம் அவர்களின் வாழ்க்கையை அவர்கள் தீர்மானிக்க முடியாத கட்டத்திற்குள் கொண்டுவந்து விட்டதையும் அறிகின்றோம்.

அனுக் இந்த நாவலை, சாதாரண மக்களுக்கு யுத்த காலத்தில் என்ன தெரிவுகள் இருந்தனவோ, அந்தத் தெரிவுகளுக்குள்ளேயே நின்று எழுதியிருப்பது எனக்கு மிகப்பிடித்த விடயங்களில் ஒன்று. அதற்கு அப்பால் போய் அரசையோ, புலிகளையோ, இடங்கிடைக்கின்றதேயென விளாசவுமில்லை. இப்படியான நிலையில்தான் மக்கள் அன்று வாழவேண்டியிருந்தது என்று போருக்கு வெளியில் இருந்தவர்களுக்கு அனுக் ஒரு கதையைச் சொல்கின்றார். போர் என்பது நீங்கள் கற்பனையே செய்ய முடியாத தளங்களில் மனித வாழ்வை எப்படிக் கீழ்நிலைக்குக் கொண்டு போகின்றதென்பதை - ஒருநாளைச் சித்தரிப்பதன் மூலம் - காட்டுகின்றார்.

திருமணம் முடிந்தபின் கூடாரத்தில் தினேஷூம், கங்காவும் தனித்திருப்பது குறித்து எழுதப்படும் ஒரு அத்தியாயத்தில், இந்த யுத்தம் உடல்களின் மீதான இயல்பான காம வேட்கையையும் இல்லாமற் செய்துவிடுகிறது என்பதை விபரித்திருக்கும் முறை கவனிக்கத்தக்கது. பல நாட்களாய் தூக்கமே இல்லாதிருக்கும் தினேஷ் (அவருக்கு எவ்வளவு முயன்றாலும் நித்திரையே வருவதில்லை) கங்காவிற்கு ஒரு அதிசயமான பிறவியாகத் தெரிகிறார். இடையில் ஏதோ காட்டின் கரையிலிருந்து ஒலிவர, இயக்கம் ஆட்களைச் சேர்க்க வந்துவிட்டார்கள் என இருவரும் அஞ்சுகின்றனர். தினேஷ், வெளியில் போய்ப் பார்க்கின்றேன் எனப் புறப்படும்போது, காயம்பட்ட காகத்தைப் பார்க்கின்றார். அந்தக் காகத்திலிருந்து வேறொரு கதை முகிழ்கின்றது. எத்தனை மாதக்கணக்காய் காகம், குயில் இன்னபிற பறவைகளைக் காணவில்லையென அவர் நினைக்கத் தொடங்குகின்றார். காயம்பட்ட

காகம் ஒரு பாதுகாப்பான இடத்திற்குப் போகும்வரை நிதானமாய் இருந்து பார்த்துவிட்டு வரும் தினேஷிடம், கங்கா 'பறக்க முடியாத பறவைகள் நீண்டகாலம் வாழ முடியாதல்லவா?' எனச் சொல்லும்போது அதற்கு வேறொரு அர்த்தம் வருகின்றது.

கங்காவின் தோளில் சாய்ந்து, தன் தாயின் இழப்பிலிருந்து அனைத்தையும் அடக்கிவைத்த தினேஷ் மனம் விட்டு அழுகின்றார். அதுவரை நீண்டகாலமாய் தொலைந்து போயிருந்த தன் நித்திரையைக் மீண்டும் கண்டுகொள்கின்றார். விடிகாலையில் துயிலெழும்போது கங்கா காணாமற் போய்விடுகின்றார். கங்கா தன்னோடு எப்போதும் காவியபடி இருக்கும் ஒரு பையையும் கூடவே கொண்டு சென்றுவிடுகின்றார். ஒவ்வொரு பொழுதும் அதற்குள் என்ன இருக்கிறதெனத் தேட விரும்பும் தினேஷின் ஊடாக வாசிப்பவர்களுக்கும் அந்த மர்மம் எழுந்தபடி இருக்கின்றது. இறுதி முடிவும், நாவல் தொடங்குவதைப் போலத் துயரமானது; மிகக் குறுகிய திருமணம் ஒருநாளில் முடிந்தும் போகின்றது. ஆக அந்த ஒருநாள் தினேஷின் வாழ்வில் என்றென்றைக்குமாய் மறக்கமுடியாத ஒரு நாளாய் ஆகிப்போகின்றது.

அனுக் அருட்பிரகாசம் கொழும்பில் வசிக்கின்றவர். கொலம்பியா பல்கலையில் தத்துவவியலில் கலாநிதிப் பட்டத்தை பெற்றிருக்கிறார். யாழ்ப்பாணப் பெற்றோருக்குப் பிறந்த அனுக், தமிழ் தன் வீட்டு மொழியென்றாலும், முதலாம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தில் கற்றவர். கொழும்பிலிருக்கும் உயர்மட்ட அறிவுஜீவிக் குழாம் மீது ஏற்பட்ட எரிச்சலே, நிறையப் புத்தகங்களை வாசித்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டதற்குக் காரணம் எனக் கூறுகின்றார். ஆங்கிலம் ஒரு காலனித்துவமொழி என்கின்ற புரிதல் இருப்பதாய்




Image Source - www.allenandunwin.co.nz

கூறும் அவர், தமிழிலும் எழுத விருப்பம் என்கின்றார். போர் பற்றி நேரடிச் சாட்சிகளின் கதைகளை கேட்டு பதிவு செய்யப்போன தான், அதனைப் பின்னர் இவ்வாறான நாவலாக மாற்றியதாய் ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். போர் பற்றி தான் வாசித்தவையும், தொலைக்காட்சிகளில் பார்த்த திரைப்படிமங்களும் தன்னைப் பாதித்து இதை எழுத வைத்ததாகவும் கூறுகின்றார்.

தமிழில் வாசிக்காதவர்கள்/ தமிழை வாசிக்கத் தெரியாதவர்களால் ஈழ யுத்தம் குறித்து எழுதப்படும் புனைவுகள் மற்றும் புனைவுகள் அல்லாதவற்றில் காணப்படும் ஈழம் பற்றிய சித்தரிப்புகள் பலவீனமாகவே அமைந்திருக்கும். அந்தப் பலவீனத்தை அனுக் தாண்டியிருப்பதற்கு அவருக்குத் தமிழ் ஏதோ ஒருவகையில் பரிச்சயமாக இருப்பது முக்கிய காரணமாயிருக்கும் என நினைக்கின்றேன். அத்துடன் அடிக்கடி பல இடங்களில் ஏலவே நான் குறிப்பிட்டதைப் போல, மிகச்சிறிய நாவல்களை நுட்பமான சித்தரிப்புக்களுடன் எழுதவேண்டும் என்பதற்கு இணங்க, இந்த நாவல் 200 பக்கங்களில் அடக்கப்பட்டு எழுதப்பட்டு இருப்பது பிடித்திருந்தது. நாவலில் கூறப்பட்ட சம்பவங்களும், அனுபவங்களும் தமிழில் நாம் ஏற்கனவே வாசித்திருக்கக்கூடியவைதான். ஆனால் இந்த நாவலின் சிறப்பம்சம் என்னவென்றால் அதன் சித்தரிப்புகள், ஆங்கிலச் சூழலிற்கு அவ்வளவு பரிச்சயமில்லாதது. 'அரசு X புலிகள்' என எப்போதும் பேசிக்கொண்டிருக்கும் மேற்குலகிற்கு, ஈழ யுத்தின் கோரத்தை அவர்களின் மொழியிலே முன்வைத்து, ஒருவகையில் இந்த யுத்தத்தின் பங்காளிகளான நீங்கள் இந்தச் சாதாரண மக்களுக்கு வழங்கக்கூடிய நியாயம் என்னவாக இருக்குமென்ற கேள்வியை எழுப்பி, மேற்குலகின் மனச்சாட்சிகளை கொஞ்சம் அசைத்துப் பார்ப்பதாக இப்புதினம் இருப்பதையும் நாம் கண்டுகொள்ள முடியும்.

(தொடரும்.)

# மன்னார்ப் படுகை எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வும் அகழ்வும்: அபிவிருத்திக்கான வாய்ப்பா, சாபமா?



● வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

**பின்புலம்**

அரசியல் பொருளாதாரப் பகுப்பாய்வு (*Political Economy Analysis*) என்பது ஒரு சூழ்நிலையில் உண்மையில் என்ன நடக்கிறது, உடனடிப் பிரச்சினையின் மேற்பரப்பிற்குப் பின்னால் என்ன இருக்கிறது, போட்டியிடும் ஆர்வங்கள் உள்ளதா என்பனவற்றைக் கண்டறியும் முயற்சியாகும். அரசியல் பொருளாதாரப் பகுப்பாய்வு, ஒரு சமூகத்தில் அரசியல் மற்றும் பொருளாதாரச் செயல்முறைகளின் தொடர்புகளை ஆராய்கிறது. இது சமூகத்திலுள்ள குழுக்களின் அதிகாரத்தைப் புரிந்துகொள்வதை உள்ளடக்குகிறது; அவர்கள் வைத்திருக்கும் நலன்கள் மற்றும் அவர்களை உந்துவிக்கும் ஊக்கங்கள், குறிப்பிட்ட விளைவுகள் நடைபெறும் போது அதன் தாக்கங்கள் என்பனவற்றின் மீது கவனம் செலுத்துகிறது. பொருளாதாரத்தைப் படிக்க வெவ்வேறு அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் அதில் ஒரு பகுதியான அரசியல் பொருளாதாரம் என்பது, பெரும்பரப்பை பல்வேறு சமூகக் கட்டமைப்பு வடிவங்கள் ஊடு (*lenses*), பொருளாதாரச் சிந்தனைகளின் வரம்பில் அமர்ந்து பார்ப்பதாகும். இது வர்க்கம், பாலினம், இனம் போன்றவை பொருளாதாரம் மற்றும் அவற்றைப் பாதிக்கும் சிக்கல்களை பகுப்பாய்வு செய்ய உதவும் துறையாகும். இத் துறைசார் அணுகுமுறை, ஆய்வுக்குரிய குழுக்கள் மற்றும் அவர்களின் நலன்களை அடையாளம் காண முயற்சி செய்கிறது; மேலும் அரசியல் நிறுவனங்கள், அதன் கொள்கைகள், எதிர்கால அபிலாசைகள் மீது அவற்றின் தாக்கத்தைப் பதிவு செய்து அபிவிருத்திப் பொருளாதாரத்தை நோக்கி நடைபோடும் வழிக்கு பங்களிப்புச் செய்கிறது.

> **மன்னார் படுகையின் நிலப்பரப்பு 90% கிரானுலைட்டின் (metamorphic rocks of granulite) உயர்தர உருமாற்ற பாறைகளால் ஆனது. மீதமுள்ள நிலப்பரப்பு ஆம்பிபோலைட் முகங்களினால் (amphibolite facies) ஆனது (கூரே 1984). வடக்குக் கரையோர விளிம்பு, மற்றும் கரையோரப் பகுதி ஆகியன வண்டல் பாறைகளைக் கொண்டுள்ளன.**

இலங்கையின் கடந்த கால பொருளாதார முன்னெடுப்புகள் முரண்நிலையை, இனவழிப்பை உருவாக்கின. ஒரு இனப் பரம்பலை நீர்க்கச் செய்து, அதன் வாழ்வாதார வளங்களை தன் கட்டுப்பாட்டில் எடுத்து, திட்டமிட்ட முறையில் நீடித்த இனவழிப்பை வழிநடத்துவது கொழும்பு மைய அரசின் அரசியல் பொருளாதார வெளிப்பாடாக இன்றும் விளங்குவது

கண்கூடு. ரபேல் லெம்கின் (Raphael Lemkin) இந்நிலை பற்றி மிக விரிவாக ஆராய்ந்து கூறியவர். அவரது இனப்படுகொலை குறித்த கருத்து மிக முக்கியமானது.

“பொதுவாக, ஒரு தேசத்தின் அனைத்து உறுப்பினர்களையும் வெகுஜனக் கொலைகளால் அழித்தல் என்பது மட்டுமே ‘இனப்படுகொலை’ ஆகாது அல்லது ஒரு தேசத்தின் உடனடி அழிவைக் குறிக்காது. நடைமுறையில் அது, தேசியக் குழுக்களின் வாழ்க்கையின் அத்தியாவசிய அடித்தளங்களை அழிப்பதை நோக்கமாகக் கொண்ட வெவ்வேறு செயல்களின் ஒருங்கிணைந்த திட்டத்தைக் குறிக்கும் போக்குடன் நிறைவேற்றப்படுபவை. அத்தகைய திட்டத்தினால் அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள், கலாசாரம், மொழி, தேசிய உணர்வு, மதம், தேசியக் குழுக்களின் பொருளாதார இருப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, சுதந்திரம், சுகாதாரம், கண்ணியம் மற்றும் பல அழிக்கப்படும். இனப்படுகொலை என்பது ஒரு தேசியக் குழுவிற்கு எதிரான ஒரு அமைப்பாக இயக்கப்படுகிறது. மேலும் சம்பந்தப்பட்ட செயல்கள் தனிநபர்களுக்கு எதிராக அவர்களின் தனிப்பட்ட திறனில் அல்லாமல், தேசியக் குழுவின் உறுப்பினர்களுக்கு எதிராக இயக்கப்படுகிறது.”

இலங்கைச் சமூகங்களின் வாழ்விடப் பாதுகாப்பான நிலம் மற்றும் வாழ்வாதார அடிப்படைகளை நீர்க்கச் செய்ததில் மிக முக்கியமானவை:

1. **மலையக மக்களின் வாக்குரிமை :** மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமை மற்றும் அவர்களை இந்தியாவிற்கு நிர்ப்பந்தமாக வெளியேற்றியமை. இதனால், நிலவுரிமையைக் கோரும் அவர்களின் உரிமை திட்டமிட்டுப் பறிக்கப்பட்டது. மலையக மக்ககளின் வாக்குரிமை பறிக்கப்படாமல் தேசிய அபிவிருத்தியில் அவர்களையும் பங்காளிகளாக இணைத்திருந்தால், அவர்களின் சனத்தொகை இன்றைய சனத்தொகைக்கு மேல், இரண்டு மில்லியன் இருக்கும்.

2. **அரசு முன்னெடுத்த குடியேற்றங்கள் :** பட்டிப்பளை (கல்லோயா, அம்பாறை) முதல் மணலாறு வரை மற்றும் திருகோணமலை, வவுனியா தென்பகுதி ஆகிய இடங்களில் அரசு முன்னெடுத்த குடியேற்றங்களால் நில அபகரிப்புகள் நடந்தன. இப்பகுதிகளில் தமிழ் மக்களின் நிலவுரிமைகளை அனுமதித்திருந்தால், தமிழர்களின் இன்றைய சனத்தொகை 15% அதிகரித்திருக்கும். மேலும், கல்வியுரிமை மறுப்பு, அரச உதவியுடனான திட்டமிட்ட வன்முறைகள் தந்த விளைவின் பயனாக வெளிநாடுகளுக்கு இடம்பெயந்த மொத்தச் சனத்தொகை இன்றைய எண்ணிக்கையின் 10 % ஆகும். இது, அரசின் அரசியல் பொருளாதாரத்தின் வெற்றிக்கும், தமிழ்த் தேசிய அரசியல் பொருளாதாரத்தின் தோல்விக்கும் வழிசெய்தது.

3. **மகாவலி அபிவிருத்தித் திட்டம் :** மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் (Zone L முதல் J வரை) உள்நோக்கம் தமிழர் தாயக, நில மற்றும் கடல் தொடர்ச்சியைக் கூறுபோடுவது (மணலாறு பிரதேசத்துடன் இணைந்த ஆற்று மற்றும் நன்னீர் வளங்கள்) ஆகும். மேலும், மட்டக்களப்பின் வளமான, கால்நடை பொருளாதார வாழ்வாதார அடிப்படைகளை திட்டமிட்டு அழித்து, அந்நில மக்களை அகற்றும் முயற்சி தொடர்ந்தும் நடைபெறுகிறது.

தமிழர் தாயக உருவாக்கம் என்பது, வலுவான அரசியல் ஒருங்கிணைப்பிற்கு ஈடான அதன் அரசியல், பொருளாதார நலன்கள் பற்றிய ஆழமான பார்வையின் தளத்தில் வளரவேண்டும். இலங்கை அரசின் அரசியல், பொருளாதார கொள்கையின் முக்கிய நோக்கம் என்பது மாற்று இனங்களின் உடனடி அழிப்பாக (Direct physical destruction) இருப்பதை விட, மற்றொரு சமூகத்தை மௌனமாகக் கைப்பற்றி வலுக்கட்டாயமாக ஒருங்கிணைக்கும் (forced assimilation) முறையாகவே இருக்கிறது. இது பல்வேறு வகையான அரச சார்பு காலனிகளை நிறுவுவதன் மூலம் நடைபெறும். காலனித்துவச் செயற்பாட்டின் போது கட்டாய ஒருங்கிணைப்பு, பிரதேச அபிவிருத்தியின் பெயரில் அரங்கேறும். அதற்கு வெளி உலக நிதிகளும் கச்சிதமாகப் பாய்ச்சப்படும். இந்நிலையில், இவற்றின் தொடர்ச்சியாக


‘மன்னார் எண்ணெய்வள ஆய்வும் அதனை அகழ்வதற்கான முன்னெடுப்பும்’ தற்போது இடம்பெறவிருக்கிறது. போரின் பின்னாலான ஒரு பெரிய முன்னெடுப்பாக இடம்பெறவிருக்கும் மன்னார் படுகை எண்ணெய் வள ஆய்வு பற்றிய ஒரு மதிப்பீடு மிக அவசியம். இச் செயற்பாட்டில், இக்கட்டுரையாக்கம் ஒரு முன்னெடுப்பை தொடங்க முயல்கிறது.

## மன்னார் எண்ணெய்வள, இயற்கை எரிவாயுப் படுகை

தென்னிந்தியாவிற்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ள மன்னார் படுகையில் சுமார் 260 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் காணப்படலாம் என ஆரம்பகட்ட ஆய்வு அறிக்கைகள் கூறுகின்றன. இலங்கையின் எரிசக்தி அமைச்சும் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. மன்னார் படுகை இலங்கையின் தென்மேற்கு மற்றும் வடமேற்கிலும், இந்தியாவின் தென்கிழக்கிலும், காவிரிப் படுகையின் தெற்கிலும் அமைந்துள்ளது (படம் 1). இது இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் ஒரு ‘உள்கிரேட்டோனிக்’ தோற்றுவித்த பிளவு மூலம் உருவாகியிருக்கலாம்.

மன்னார் படுகையின் நிலப்பரப்பு 90% கிரானுலைட்டின் (*metamorphic rocks of granulite*) உயர்தர உருமாற்ற பாறைகளால் ஆனது. மீதமுள்ள நிலப்பரப்பு ஆம்பிபோலைட் முகங்களினால் (*amphibolite facies*) ஆனது (கூரே 1984). வடக்குக் கரையோர விளிம்பு, மற்றும் கரையோரப் பகுதி ஆகியன வண்டல் பாறைகளைக் கொண்டுள்ளன. மூன்று கடல் வண்டல் படுகைகள், 1. காவிரி, 2. மன்னார், 3. இலங்கை என எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. மன்னார் கடல் படுகையானது கடலில் அமைந்திருக்கும் இன்னொரு மாகணமாகும் (படம் 1). இது இலங்கையில் மிகவும் செழிப்பான ஹைட்ரோகார்பன் அடங்கியுள்ள பிரதேசமுமாகும்.

நில அதிர்வு (*Seismic Surveys*) ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், வடக்கு கடல் பகுதியில் 30,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 1 மில்லியன் தொடக்கம் 5 பில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் வளங்கள் இருப்பதாக அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது. இந்த எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்விலும் அகழ்விலும் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு 50% இலாபம் வழங்க அரசு அறிவித்துள்ளது. இலாபமாக 133.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் அரசாங்கத்திற்கு கிடைக்கும் எனவும், இது





படம் 1
Image Source - www.linkedin.com

நாட்டின் மொத்தக் கடன் பெறுமதியான 47 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட, கிட்டத்தட்ட மூன்று மடங்கு எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. மன்னார் படுகையில் உள்ள 267 பில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்கள் நாட்டின் மொத்த கடனை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

மன்னார் படுகையில் உள்ள எரிவாயு மூலம் மட்டுமே நுரைச்சோலை அனல்மின் நிலையம் 120 வருடங்கள் இயங்க முடியும் என முன்னாள் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். அண்டை நாடான இந்தியா 1940 களில் இருந்து இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் இருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுவை எடுத்திருந்தது. பல்வேறு காரணங்களால் இலங்கை அதை தவறவிட்டது. விடுதலைப் புலிகளின் வலுவான கள நிலை மற்றும் யுத்தம் என்பன அவற்றில் ஒரு காரணம். தற்போது, போரின் பின்பான காலத்தில், இலங்கை இவ்விடயம் தொடர்பாக சர்வதேசக் கேள்வி கோரி, முதலீட்டாளர்களை அழைத்துள்ளது. புலிகளின் அழிவிற்குப் பின், யுத்தத்தின் முடிவை அடுத்து, இவ் விடயத்தில் அரசு காட்டும் அவசரத்தையும் காணக்கூடியதாக இருந்தது.

2022 டிசெம்பர் மாதத்தில் இலங்கையின் எண்ணெய் நுகர்வு நாளுக்கு 98.000 பீப்பாய்கள் எனப் பதிவாகியுள்ளது (மேலும் தரவுகளுக்கு கீழே உள்ள அட்டவணையைப் பார்க்கவும்). 2022 ஆம் ஆண்டில், பெட்ரோலிய எரிவாயுவை இறக்குமதி செய்ய, இலங்கைக்கு $225 மில்லியன் தேவைப்பட்டது. முக்கியமாக ஓமான் ($71.9M), சவுதி அரேபியா ($60M), ஈராக் ($23M), அல்ஜீரியா ($21.4M) மற்றும் மலேசியா ($18.9M) ஆகிய நாடுகளில் இருந்து இது இறக்குமதி செய்யப்பட்டது.


'இலங்கையின் ஹைட்ரோகார்பன் ஆய்வுத் தொகுதி வரைபடம்' எனத் தலைப்பிடப்பட்டுள்ள மேற்குறித்த வரைபடம், ஆய்வு உரிமங்கள், மேம்பாட்டு உரிமங்கள் மற்றும் கூட்டு ஆய்வுகளுக்கான தொகுதிகளைக் கோடிட்டுக் காட்டுகிறது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்திச் செயலகத்தினால், இலங்கைக் கடற்பரப்பில் எண்ணெய் மற்றும் எரிவாயு வைப்புக்கள் இருப்பதாக இனங்காணப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் ஆய்வு செய்ததை இந்த வெளியீடு உள்ளடக்கியுள்ளது. இந்த வரைபடத்தில், மன்னார் படுகையில் தலா 15 x 15 கிமீ நீளமுள்ள 873 தொகுதிகள் காட்டப்பட்டுள்ளன. இது முதலீட்டாளர்கள் சிரமமின்றி ஆய்வுக்கு விருப்பமான நிலங்களைத் தேர்ந்தெடுக்க உதவும். மன்னார், காவேரி மற்றும் லங்கா படுகைகள் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் வரைபடம் மற்றும் ஆய்வு செயல்முறையை உருவாக்க எரிசக்தி அமைச்சகம் முயற்சி செய்துள்ளது. பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வரைபடத் தொகுதிகள் மீது விருப்பம் தெரிவித்துள்ளதாக அமைச்சகம்




படம் 2

Image Source - www.researchgate.net

குறிப்பிட்டது. புதிதாக வெளியிடப்பட்ட வரைபடம், செயல்முறை என்பன உலகின் முதல் 20 எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்களை இந்தத் துறையில் முதலீடு செய்ய ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டமானது இரண்டு பில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் மற்றும் ஒன்பது டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயுவை வழங்குவதற்கான ஆற்றலைக் கொண்டுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது.





View Sri Lanka's Oil Consumption from 1965 to 2022 in the chart

Image Source - www.ceicdata.com

பெற்றோலிய ஆய்வு என்பது பூமியின் மேற்பரப்பிற்கு அடியில் சிக்கியுள்ள எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் திரட்சிகளைக் கண்டறியும் முயற்சியாகும். பெற்றோலிய உற்பத்தி என்பது, செயலாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் பயன்பாட்டிற்காக மறைந்திருக்கும் வளங்களை மீட்டெடுப்பதற்கான செயல்முறையாகும். ஏறக்குறைய அனைத்து வேதியியலாளர்களும் பெற்றோலியம் என்பது உயிரினங்களின் சில மில்லியன் ஆண்டுகள் சிதைவின் விளைவாகும் என்று நம்புகிறார்கள். எண்ணெய் என்பது ஒரு புதைபடிவ எரிபொருளாகும். இது பாசி மற்றும் ஜூப்ளாங்க்டன் போன்ற தாவரங்கள் மற்றும் விலங்குகளிலிருந்து உருவாகிறது. இந்த உயிரினங்கள் இறந்தவுடன் கடலின் அடிப்பகுதியில் விழுகின்றன. காலப்போக்கில், மணல் மற்றும் சேற்றின் பல அடுக்குகளின் கீழ் சிக்கிக் கொள்கின்றன. பைட்டோபிளாங்க்டன் மற்றும் ஜூப்ளாங்க்டன், பாசிகள் மற்றும் பாக்டீரியாக்கள் கடலின் அடிப்பகுதியில் மூழ்கி, நீரோடைகள் மற்றும் ஆறுகளில் இருந்து இந்தக் கடலுக்குள் நுழையும் கனிமங்கள், களிமண் போன்ற பொருட்களுடன் கலக்கின்றன. காலவோட்டத்தில் இது பெற்றோலியமாக உருவாகுகின்றது.

இலங்கையில் பெட்ரோலிய ஆய்வு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு 1960 களின் பிற்பகுதியில் தொடங்கியது. எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுப் பணிகளைப் புதுப்பித்து, மன்னார்




Location of the three sedimentary basins (Cauvery, Mannar, and Lanka) in Sri Lanka, exploration blocks in the Mannar Basin (M1-M9), the Cauvery Basin (C1-C5) and Joint study blocks in the Lanka Basin (JS1-JS6)

Image Source - www.researchgate.net

படுகையில் '2D' நில அதிர்வு ஆய்வுகள் 2001 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் உள்ள பிராந்திய அலுவலகத்துடன் நோர்வே நில அதிர்வு ஒப்பந்த நிறுவனமான 'TGS NOPEC' ஆல் நடத்தப்பட்டது. 2007 இல் முதல் சர்வதேச உரிமச் சுற்று மூன்று ஆய்வுத் தொகுதிகளுக்கு (M1, M2 மற்றும் M3)

நடைபெற்றது. மற்றும் ஒரு ஆய்வுத் தொகுதி, 2008 இல், இந்தியாவின் துணை நிறுவனமான கெய்ர்ன் லங்கா பிரைவேட் லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்டது. முதன்முறையாக, 2011 ஆம் ஆண்டில், கெய்ர்ன் நிறுவனத்தால், 'பிளாக் M2' இல் தோண்டப்பட்ட மூன்று கிணறுகளில், இரண்டு கிணறுகளில் எரிவாயு கண்டுபிடிப்புகள் செய்யப்பட்டன. இலங்கையின் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி செயலகம் (PRDS), மன்னார் படுகை மாத்திரம் இரண்டு பில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் மற்றும் ஒன்பது டிரில்லியன் கன அடி இயற்கை எரிவாயு (9 TCF) உற்பத்தி செய்யும் ஆற்றலைக் கொண்டிருக்க முடியும் என்று மதிப்பிட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டுக்குள் இயற்கை எரிவாயுவைத் தோண்டும் நோக்கத்துடன், 2019 ஆம் ஆண்டில் இயற்கை எரிவாயு மீதான தேசியக் கொள்கையை (NPNG) இயற்றிய பிறகு, மன்னார் மற்றும் காவிரிப் படுகைகளில் மீதமுள்ள தொகுதிகளில், ஆய்வு மற்றும் மேம்பாட்டுப் பணிகளுக்காக, அடுத்த பெரிய உரிமச் சுற்றுக்கான ஏலங்களை அழைக்க 'PRDS' திட்டமிட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு 'அபன் ஆபிரகாம்' என்ற எண்ணெய் மற்றும் எரிவாயு துறப்பணம் வந்தது. மன்னார் மற்றும் காவிரிப் படுகைகளில் உள்ள M1, M2 மற்றும் C1 தொகுதிகளில் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 2019 ஆம் ஆண்டில் சர்வதேச போட்டி ஏலங்களுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுத்தது.





Image Source - www.sundaytimes.lk

ஒரு அமைச்சரவை தீர்மானத்தின் கீழ், இலங்கை அரசாங்கம் 'TGS NOPEC' இல் இருந்து மன்னார் படுகையின் '2D' தரவை வாங்கியது. இதன் மூலம் 'TGS NOPEC' இலங்கையின் கடற்பரப்பில் நில அதிர்வு தரவுகளை சேகரிக்க இருந்த பிரத்தியேக உரிமையை ரத்து செய்தது. இந்தத் தரவுகளின் அடிப்படையில் மன்னார் படுகை 3340 முதல் 6640 சதுர கிலோமீட்டர் வரையிலான ஒன்பது ஆய்வுத் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. கூறப்பட்ட ஒன்பது தொகுதிகளில், சர்வதேச உரிமச் சுற்றின் கீழ், பெற்றோலிய ஆய்வுக்காக மூன்று தொகுதிகளை (M1, M2 மற்றும் M3) வழங்க அமைச்சர்கள் அமைச்சரவை முடிவு செய்தது. இருப்பினும், M2 தொகுதியை மட்டுமே வழங்க அமைச்சரவை முடிவு செய்தது. 2008 இல் இலங்கை அரசாங்கம், பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு ஊடாக கெய்ர்ன் லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்துடன் பெற்றோலிய வள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. அண்மைய அறிக்கையின் படி, இந்நிறுவனம், இலங்கை அரசானது ஏனைய நிறுவனங்களுக்கு மன்னார் படுகையில் ஆய்வு செய்ய அனுமதியளித்தமைக்கு எதிராக, வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இது, இந்தியாவின்

கம்பெனி என்பதனால் இந்தியாவின் தலையீடு இதற்கு உண்டு .

மன்னார் படுகையில் (வடமேற்கு) 1,354 மீட்டர் ஆழத்தில் எரிவாயு அமைந்துள்ளது. கெய்ர்ன் இந்தியா லிமிடெட்டின் துணை நிறுவனமான கெய்ர்ன் லங்கா அதனைத் தோண்டும் பணியைத் தொடங்கியது.

**இலங்கையில் பெட்ரோலிய ஆய்வு சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு 1960 களின் பிற்பகுதியில் தொடங்கியது. எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வுப் பணிகளைப் புதுப்பித்து, மன்னார் படுகையில் '2D' நில அதிர்வு ஆய்வுகள் 2001 மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலியாவின் பெர்த்தில் உள்ள பிராந்திய அலுவலகத்துடன் நோர்வே நில அதிர்வு ஒப்பந்த நிறுவனமான 'TGS NOPEC' ஆல் நடத்தப்பட்டது.**

உட்கட்டமைப்பைக் கட்டியெழுப்ப 1 பில்லியன் டொலர் முதலீடு தேவைப்படும். எனவே, இலங்கைக்கான நன்மைகளை அதிகப்படுத்த, முடிந்தவரை அதிகமான முதலீட்டாளர்களை ஈர்ப்பது இன்றியமையாதது; குறிப்பாக உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மற்றும் முதலீட்டாளர்களின் விருப்பத்தை மேம்படுத்தியுள்ள எரிசக்தி விலை அதிகரிப்பு ஆகியவற்றின் வெளிச்சத்தில்.


இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னார் படுகையில் இயற்கை எரிவாயுப் படிவு கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவித்தார். லண்டனில் பட்டியலிடப்பட்ட கெய்ர்ன் எனர்ஜி பிஎல்சியின் ஒரு பகுதியான கெய்ர்ன் இந்தியா லிமிடெட்டின் துணை நிறுவனமான கெய்ர்ன் லங்காவால் இந்த கிணறு உருவாக்கப்பட்டது. மன்னார் படுகையில் உள்ள எட்டுத் தொகுதிகளில் ஒன்றைக் கொண்டுள்ள கெய்ர்ன் லங்கா தோண்டும் பணியைத் தொடங்கியது. இது வர்த்தக ரீதியாக வெற்றியடையும் என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம் என பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். மன்னார் படுகையில் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு இருப்பதற்கான அறிகுறிகளை சுரண்டுவதற்கான இலங்கையின் முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான நிலைமைகள் கடந்த ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க வகையில் மேம்பட்டுள்ளதாக சர்வதேச எண்ணெய் தொழில்துறையில் நன்கு அறியப்பட்ட ஆதாரங்கள் தெரிவிக்கின்றன (AsiaNews).

2011 மற்றும் 2013 இற்கு இடையில் கெய்ர்ன் இந்தியா மூன்று ஆய்வுக் கிணறுகளைத் தோண்டியபோது, இரண்டு கிணறுகளான பாரகுடா மற்றும் டொராடோ முறையே '1.8TCF' மற்றும் '300 BCF' என மதிப்பிடப்பட்ட எரிவாயுக்களைக் கொண்டிருப்பதாக நம்பப்பட்டன. கெய்ர்ன் இந்தியா இலங்கையில் கிட்டத்தட்ட 200 மில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளது, ஆனால் உற்பத்தி

ஒரு அறிக்கை, ஒரு நிறுவனம் 1,354 மீட்டர் நீர் ஆழத்தில் துளையிட்டதாகக் கூறியது. ஆனால் கண்டுபிடிப்பின் வணிக நம்பகத்தன்மையை நிறுவ மேலும் துளையிடுதல் தேவை எனக் கூறப்பட்டது. மன்னார் படுகை எட்டுத் தொகுதிகளைக் கொண்டது. 2007 இல், இலங்கை அரசு, இந்தியாவிற்கு இரண்டையும் சீனாவிற்கு ஒன்றையும் வழங்கியது. ரஷ்யாவின் மிகப் பெரிய எண்ணெய் நிறுவனமான 'Gazprom' இன் அதிகாரிகள் சமீபத்தில் மன்னார் படுகையில் ஆய்வு நடத்துவது குறித்து விவாதிக்க அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

### சுற்றுசூழல் பாதிப்புகள் மற்றும் வாழ்வாதாப் பிரச்சினைகள்

எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு மற்றும் அகழ்வு, உயிரினங்களின் இடப்பெயர் பாதைகளைச் சீர்குலைக்கிறது. எண்ணெய் மற்றும் எரிவாயுக் கசிவானது சுற்றுச்சூழல் அமைப்புகளைச் சார்ந்திருக்கும் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தும். எண்ணெய் மற்றும் எரிவாயு ஆய்வு என்பது எண்ணெய் மற்றும் எரிவாயுவிற்காகத் தோண்டுதல் மற்றும் பிரித்தெடுப்பதற்கான சாத்தியமான தளங்களைக் கண்டறிதல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியது. இவை பல அனர்த்தங்களை விளைவிக்கலாம். புதைபடிவ எரிபொருள் நிறுவனங்களின் செயற்பாடுகள் கொடிய காற்று மாசுபாட்டை ஏற்படுத்துகின்றன. இது பூமியை வெப்பமாக்கும் 'கிரீன்ஹவுஸ்' வாயு உமிழ்வை வெளியிடுவதோடு, புதைபடிவ




**மன்னார் படுகையில் உள்ள ஆழமான நீர் பெற்றோலிய அமைப்பு, இலங்கையின் கடல் பகுதியில்**

Image Source - www.sciencedirect.com

எரிபொருட்களை எரிப்பது காற்று மாசுபாட்டையும் உருவாக்குகிறது.

ஒருங்கிணைந்த எண்ணெய் நிறுவனங்கள் இலாப நோக்கம் கொண்டவை. இவற்றின் திட்டங்கள் நீர், இயற்கை வாழ்விடங்கள் மற்றும் காற்றின் தரம் போன்ற சுற்றுச்சூழல் மீது கவனம் செலுத்துவதில்லை. எண்ணெய் நிறுவனங்களின் ஒருங்கிணைந்த சக்தி அணுகல் சாலைகள், குழாய்கள் மற்றும் பிற உட்கட்டமைப்புகள், வனவிலங்குகளின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து துண்டு துண்டாக மாற்றுவதன் மூலம் சுற்றுச்சூழல் அமைப்புகளை சேதப்படுத்துகின்றன. அவை மண் அரிப்பு, வண்டல், தாவர இழப்பு, களைகளின் பரவல் மற்றும் மண் சுருக்கத்தை ஏற்படுத்துகின்றன, சமூக விலை அதிகம். அரசில் மீது தள்ளப்படும் இச் சுமைகள் மோதல்களை உருவாக்கும்; மோதல்களுக்கு அனுபவப்பட்ட பிரதேசம் கூடிய விரைவில் தீயாக பற்றிக்கொள்ளும். அணைப்பது சுலபமில்லை.

## முடிவு

வெளிப்புற 'கான்டினென்டல் ஷெல்ஃப் (OCS)' நமது நாட்டின் எரிசக்தி பொருளாதாரத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவனங்களுக்கு நீண்ட கால ஆபத்து என்பது, குறைந்து வரும் இயற்கை விநியோகம் ஆகும். எண்ணெய் மற்றும் எரிவாயு சுரண்டலினால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் பலவுண்டு. மீன்பிடித் தொழில் இதனால் பாதிக்கப்பட்டு வருகின்றது. எண்ணெய் வள ஆய்வு நடவடிக்கைகளின் விளைவாக, மீன்பிடிச் சாதனங்களுக்குப் பாதிப்பு உண்டாகலாம். ஆய்வுப் பிரதேசத்தில் மீன்பிடிக்கத் தடை ஏற்படுத்தப்படல், மீன்கள் வாழும் - இனப்பெருக்கம் செய்யும் இடங்களில் ஆய்வை முன்னெடுத்தல் போன்றன மீனவர்களுக்கு பொருளாதார இழப்பைக் கொடுக்கலாம்.

எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழில் நடவடிக்கைகளின் போது எண்ணெய் கசிவு

ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு. இதன் பாதிப்பு, இத்துறை தரும் பொருளாதார வாய்ப்பை விட பல மடங்கு அதிகம். மேலும், வாழ்வாதார இழப்பு, பாரம்பரியத் தொழில் இழப்பு, சுற்றுச்சூழல் பாதிப்பு, குறைந்த வருமானம், நியாயமற்ற எண்ணெய்ப் பகிர்வு, வேலையின்மை மற்றும் போதிய இழப்பீடு இன்மை ஆகியவை இதன் பாதிப்புகளுள் அடங்கும்.

**பெற்றோலிய ஆய்வு என்பது பூமியின் மேற்பரப்பிற்கு அடியில் சிக்கியுள்ள எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுவின் திரட்சிகளைக் கண்டறியும் முயற்சியாகும். பெற்றோலிய உற்பத்தி என்பது, செயலாக்கம், சந்தைப்படுத்தல் மற்றும் பயன்பாட்டிற்காக மறைந்திருக்கும் வளங்களை மீட்டெடுப்பதற்கான செயல்முறையாகும்.**

எண்ணெய் மற்றும் எரிவாயுத் தொழிலுக்கு உலக அரங்கில் பலத்த ஆதரவு உண்டு. சமீபத்திய ஆண்டுகளில் எண்ணெய் விலைகள், குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளன. இது எண்ணெய் வளங்களின் மீதான கட்டுப்பாட்டை வளர்ச்சியின் முக்கிய சாத்தியமான இயக்கியாக மாற்றுகிறது. எண்ணெய் வளத்தை தேசிய ஆதாரமாக வைத்திருப்பது, ஒரு நாட்டை பொருளாதார அடிப்படையில் முன்னேற்றக்கூடியது என்பதையும் குறிப்பிட்டுச் சொல்லியாக வேண்டும்.

நேரடியாகவும் மறைமுகமாகவும் எண்ணெய்யுடன் தொடர்புடைய செயற்பாடுகளால், பொது நிதியை மேம்படுத்துதல், முதலீட்டை ஊக்குவித்தல், வேலைவாய்ப்பை வழங்குதல் போன்ற நன்மைகளும் உண்டு. இருப்பினும், எண்ணெய் பிரித்தெடுத்தல், வர்த்தகம் மற்றும் தொடர்புடைய வருவாய்கள் போன்றன பலவீனமான சமூக மற்றும் அரசியல் நிறுவனங்களைக் கொண்ட நாடுகளில் குறிப்பிடத்தக்க சவால்களையும் கொண்டு வரும். எண்ணெய் போன்ற புதுப்பிக்க முடியாத இயற்கை வளங்களைக் கொண்ட நாடுகள், குறைவான இயற்கை வளங்களைக் கொண்ட நாடுகளைக் காட்டிலும் குறைந்த அளவிலான பொருளாதார மற்றும் மனித வளர்ச்சியையே அனுபவிக்கின்றன. இந்த முரண்பாடு 'வளச் சாபம்' என்று குறிப்பிடப்படுகிறது. வெளிப்படைத்தன்மை மறைந்து, மோதல் மற்றும் எதேச்சதிகார தன்மை அதிகரிக்க வழியுண்டு.

இந்தியாவின் அயற்துறைக் கொள்கை, இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகளை தனது நட்பு நாடுகளாக வைத்திருப்பதை நோக்காகக் கொண்டது. அது, இந் நாடுகள் சீனாவின் கைகளை நாடாமல் பார்த்துக் கொள்ளும் உள் நோக்கத்தையுடையது. மன்னார் படுகை எண்ணெய் வள அகழ்வுக்கு இந்தியாவின் ஆதரவு கட்டாயம் கிடைக்கும். இவ் அகழ்வு, தற்போதைய இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவியாகவும் மாறக் கூடும். அவ்வாறு மாறினால், இலங்கையின் பெரும்பான்மைவாத அரசியல் காரணமாக, பொருளாதாரச் சமத்துவமின்மை உருவாக்கப்படலாம். அது ஏனைய சிறுபான்மை இனங்களைப் பாதிக்கும்.

ஒரு நாட்டின் இயற்கை வளத்தைச் சூறையாட இன்னொரு நாடு அதனை ஆக்கிரமிப்புச் செய்யும் கதைகளை நாம் மனித குல வரலாறு நெடுகவும் வாசித்தறிய முடியும். எண்ணெய் வளத்தைக் கொண்ட நாடுகளின் அரசியலில், அவ் வளத்தின் மீது நிகழ்ந்த போட்டிகளின் காரணமாகவே, பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதற்குச் சம காலம் வரை பல உதாரணங்கள் உண்டு. இந்நிலைமை மன்னார் படுகைகளுக்கும் நடக்கலாம். அதனால், பதட்டங்கள் மோதல்கள் உருவாக வாய்ப்புண்டு.

தமிழ்த் தரப்பு, உடனடியாகச் செய்யவேண்டியது யாதெனில், ஒரு வலுவான, வளம் கொண்ட சமூக ஆய்வு மையத்தை உருவாக்குவதும், எண்ணெய் வள முன்னெடுப்புகள் பற்றிய முழுக் கருத்தாக்கத்தை உருவாக்குவதற்கு, சகலரையும் இணைத்து, சமூகம் சார் ஆய்வு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை உடன் ஆரம்பிப்பதுதான். மன்னார் படுகை எமது வளம், ஆழ் கடலின் முதுசம். அதனை, நாம் கவனமாக நிதானத்துடன் கையாள ஒரு சந்தர்ப்பம் அமைந்திருக்கிறது.

*'இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்' எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.*




● என். கே. எஸ். திருச்செல்வம்


கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் 'தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்', 'புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்', 'இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்', 'யார் இந்த இராவணன்', 'பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை', 'பண்டைய தமிழ் நூல்களில் சிவன்', 'கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்', 'தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.


# நாக யுவராஜனின் தவறான சமய நம்பிக்கை பற்றிக் குறிப்பிடும் திஸ்ஸமகராம கல்வெட்டு

இலங்கையின் தென்பகுதியில் உள்ள அம்பாந்தோட்டை மாவட்டத்தில் திஸ்ஸமகாராமை அமைந்துள்ளது. இவ்விடம் பண்டைய மாகம இராச்சியத்தின் முக்கிய நகரமாகும். இது பண்டைய காலத்தில் அக்குறு கொட என அழைக்கப்பட்டது. பண்டைய ருகுணு இராச்சியத்தின் முக்கிய பகுதியாக இந்நகரமும், இதனை அண்டிய பகுதியும் விளங்கியது. இந்த இராச்சியத்தின் எச்சங்களாக பல பௌத்த தூபிகளும், கல்வெட்டுகளும், கட்டிட இடிபாடுகளும், தொல்பொருள் சின்னங்களும் இங்கு அதிகளவில் காணப்படுகின்றன.

இங்குள்ள திஸ்ஸவாவி குளத்தின் கிழக்குப் பகுதியில் அக்குறு கொட எனும் இடம் அமைந்துள்ளது. இவ்விடத்தின் அருகில் தான் சந்தகிரி தூபி, திஸ்ஸ தூபி போன்ற பண்டைய பௌத்த வழிபாட்டுத் தலங்கள் காணப்படுகின்றன. இங்கு அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட போது பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்பலகை ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இக் கல்வெட்டில் தமிழ் சொல்லான பெருமகன் எனும் சொல் காணப்படுகின்றது.



No. 122

திஸ்ஸமகராம எண்கோண தூண் கல்வெட்டு

அக்குறுகொடவில் இன்னுமோர் மிக முக்கிய கல்வெட்டு கிடைக்கப்பெற்றது. இக்கல்வெட்டு எண்கோண தூண் ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தூண் சுமார் 15 அடி உயரமானதாகும். இரண்டு துண்டுகளாக உடைந்துள்ள இத்தூணில் இரண்டு வரிகளில் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு முதன் முதலாக ஆராய்ச்சியாளர் ஹென்றி பாக்கரால் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் இக்கல்வெட்டு பற்றிய விபரங்களை ரோயல் ஆசியாக் கழக அறிக்கையில் வெளியிட்டார். இக்கல்வெட்டில் நாக யுவராஜன் தவறான சமய நம்பிக்கையைக் கைவிட்டு புத்த பெருமானிடம் சரணடைந்தான் எனக் கூறப்பட்டுள்ளது.

இது பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டிற்குரிய பிற்கால பிராமிக் கல்வெட்டாகும். இக் கல்வெட்டில் நாக யுவராஜன் இந்து மதத்தைக் கைவிட்டு பௌத்த மதத்தைத் தழுவியது பற்றிய செய்தி பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

"சித்தம் ய கெதம சே பயே நாம சகவதம நெ நாம மிக திதிக ஜ ந அவதய நெ ஹகியே சக ஆச தி சொஹ ரஜிகி கமே மிகதிதி பிணக அதி மத்திம புத்த சரண கடே நாக யுவராஜே நாம கட யுவராஜ கலஹி."

பொருள் : சித்தம், பேராசையே பயத்தின் மூலமாகும். பற்று அதிகரித்தல் உண்மையாகவே ஒரு தவறான நம்பிக்கையில்லையா? பற்று, ஆசை ஆகியனவற்றில் இருந்து மக்களைத் திசை திருப்ப முடியாதா? இவ்வாறு சிந்தித்துக் கொண்டும் அரசருக்குரிய கிராமத்தில் தவறான நம்பிக்கைகளை நீக்கும் பொருட்டும், மதிநுட்பம் வாய்ந்தவனும், நாக என்ற பெயரை உடையவனுமாகிய உபராஜா பதவியை வகித்த நான் புத்த பெருமானைச் சரணடைந்து இதைச் செய்தேன்.

பாளி நூல்களிலும் இந்து சமயத்தைக் குறிப்பிடும் இடங்களில் தவறான சமய நம்பிக்கை எனும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே விடயம் கிரிந்த கல்வெட்டிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிரிந்த கல்வெட்டில் "தவறான சமய நம்பிக்கைகள்" எனக் குறிப்பிடும் அதே சமயம் திஸ்ஸமகராம கல்வெட்டில் "அரசனுக்குரிய கிராமத்திலுள்ள தவறான சமய நம்பிக்கை" எனக் கூறப்பட்டுள்ளது.


திஸ்ஸமகராம கல்வெட்டுக் காணப்படும் எண்கோணத் தூண்

இதன் மூலம் ரோகன இராச்சியத்தின் தலைநகரமாக விளங்கிய திஸ்ஸமகாராம எனும் பண்டைய "மாகம அல்லது அக்குறுகோட" பகுதியில் இந்து சமயம் தழைத்தோங்கி இருந்தது எனக் கூறக்கூடியதாக உள்ளது. கிரிந்த, திஸ்ஸமகராம ஆகிய இரு இடங்களிலும் பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டுகளில் கூறப்பட்டுள்ள நாகன் எனும் சிற்றரசன் ஒருவனாகத்தான் இருக்க வேண்டும். இக்

கல்வெட்டுகள் குறிப்பிடும் தவறான சமய நம்பிக்கை என்பது அக்காலப்பகுதியில் இலங்கையில் நிலவிய நாக வழிபாடு, சிவ வழிபாடு ஆகியவற்றைக் குறிப்பதாகும்.

### மகாநாகன், ஈழநாகன் பற்றிக் கூறும் திஸ்ஸமகராம நாக மகாவிகாரை கல்வெட்டு

திஸ்ஸமகாராமையில் உள்ள மிகப்பெரிய தூபி திஸ்ஸமகாவிகாரை என அழைக்கப்படுகிறது. திஸ்ஸவாவி குளத்தின் அணைக்கட்டின் தென்பகுதியில் இந்தத் தூபி காணப்படுகிறது. இதுவே மாகம இராச்சியத்தை அமைத்த மகாநாகன் எனும் மன்னனால் பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட நாக மகா விகாரையாகும்.

1876 ஆம் ஆண்டு கலாநிதி. கோல்ட் ஸ்மித் இத்தூபியின் சிதைவுகளுக்கு மத்தியில் ஓர் கல்வெட்டைக் கண்டெடுத்தார். பெரிய கற்பலகையில் எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்த இக்கல்வெட்டு ஈழநாகன் எனும் மன்னனால் பொறிக்கப்பட்டதாகும். திஸ்ஸமகராமையில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளில் இக்கல்வெட்டே பெரியதும், மிகப் பழமையானதும் ஆகும். இக்கல்வெட்டில் ஈழநாகன் நாக மகாவிகாரையை புனரமைத்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இம்மன்னன் மகாதாதிக மகா நாகனின் பேத்தியின் கணவனாவான். பொ.ஆ. 33 முதல் 43 வரையான 10 ஆண்டுகள் ஈழநாகன் இலங்கையை ஆட்சிசெய்தான்.

இக்கல்வெட்டில் நாக மன்னர்களான மகாநாகன், ஈழநாகன் ஆகியோரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே இம்மன்னர்களின் ஆட்சியில் தென்னிலங்கையில் நாக வழிபாடு சிறப்புடன் விளங்கியது எனலாம்.

### நாக யுவராஜனின் தவறான சமய நம்பிக்கை பற்றிக் குறிப்பிடும் கிரிந்த கல்வெட்டு

திஸ்ஸமகராம நகரின் தென்கிழக்கில் 11 கி.மீ. தூரத்தில் கடற்கரையை ஒட்டி கிரிந்த எனும் பண்டைய கிராமம் அமைந்துள்ளது. இங்கு கடற்கரையில் உள்ள ஓர் பாறை மீது பண்டைய



No.123

கிரிந்த கல்வெட்டின் படியெடுக்கப்பட்ட படம்

காலம் முதல் விஷ்ணு, முருகன் மற்றும் சமன் ஆகிய தெய்வங்களின் கோயில்கள் அமைந்துள்ளன. இது “சேதிஹாசிக்க கிரிந்த மகா தேவாலய” என அழைக்கப்படுகிறது. இது தொன்மைமிக்க கிரிந்த மகாகோயில் எனப் பொருள்படுகிறது.

கிரிந்த பற்றிய ஓர் ஐதீக கதையும் உள்ளது. இலங்கையின் மேற்குப் பகுதியில் இருந்த கல்யாணி இராச்சியத்தின் மன்னனான களனிதீசன் தான் செய்த ஓர் தவறுக்கு பிராயச்சித்தம் தேடும் வகையில் தான் வணங்கிய தெய்வத்திற்கு தனது மகளை தானமாக அளிப்பதற்காக, பேழை ஒன்றில் வைத்து அப்பெண்ணை கடலில் விட்டதாகவும், அந்தப் பேழை கிரிந்த கடற்கரையில் கரை ஒதுங்கியதாகவும், இப்பகுதியை ஆட்சி செய்த காக்கைவண்ணன் பேழையில் கரை ஒதுங்கிய பெண்ணை எடுத்து வளர்த்து தானே மணம் முடித்ததாகவும், இப்பெண்ணே விகார மகாதேவி எனவும், இவர்களின் மகனே துட்டகாமினி எனவும் அவ் ஐதீகம் கூறுகிறது.

இவ்விடத்திலேயே பாறையில் கிரிந்த கோயிலும், அடுத்த பாறையில் பௌத்த தூபியும் அமைக்கப்பட்டுள்ளன. கிரிந்த கோயிலில் மூன்று சந்நிதிகள் உள்ளன. நடுவில் விஷ்ணு சந்நிதியும், இடது பக்கம் முருகன் சந்நிதியும், வலது பக்கம் சமன் தெய்வத்தின் சந்நிதியும் காணப்படுகின்றன. தூபியின் அருகில் விகாரமஹாதேவியின் சிலையும், அதன் அருகில், சிலைமனையின் பின்பக்கம் கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட பாறையும் அமைந்துள்ளது. சிலைமனையின் இடது பக்கம் உள்ள சிறிய பாறையில் இன்னுமோர் கல்வெட்டும் காணப்படுகிறது.




கிரிந்த கடற்கரைப் பாறையில் அமைந்துள்ள கிரிந்த மகா தேவாலய என அழைக்கப்படும் விஷ்ணு, முருகன் கோயில்கள்



விகாரமகாதேவி சிலையும், அதன் பின்பக்கம் உருண்டை வடிவில் கல்வெட்டு பொறிக்கப்பட்ட பாறையும்



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள பாறை



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள பாறை - கிரிந்த கல்வெட்டின் அண்மித்த தோற்றம்



கல்வெட்டின் முன்பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள தர்மச் சக்கரமும், வடிவங்களும்

சிலைமனையின் பின்பக்கம் உள்ள கல்வெட்டு 12 அடி உயரமான உருண்டையான ஓர் பாறையில், நான்கு வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் நாக யுவராஜாவால் இக்கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பற்றிய விபரங்களை கல்வெட்டு ஆய்வாளர் எட்வேர்ட் முல்லர் முதன்முதலாக 1883 ஆம் ஆண்டு தனது நூலில் பதிவு செய்தார். அதன் பின்பு பேராசிரியர் பரணவிதான, மாலினி டயஸ் ஆகியோர் இக் கல்வெட்டை மீளாய்வு செய்து 2001 ஆம் ஆண்டு Inscription of CeylonVol.11 Part.11 எனும் நூலில் மீள் பதிவு செய்தனர். இக்கல்வெட்டில் நாக யுவராஜன் இந்து மதத்தை கைவிட்டு பௌத்த மதத்தைத் தழுவியது பற்றிய செய்தி காணப்படுகிறது. கல்வெட்டின் வாசகம் பின்வருமாறு:

"இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் புத்தருக்கு சமமாக ஒருவருமில்லை. எல்லாப் பொருட்களிலும் அவரது நிலையை அடைதல் மிகவும் எளிதன்று. சர்வஞ்ஞரான அவருக்கு மேலான ஆசிரியர் எவருமிலர். அவரே மேலான புகலிடமாவார். அவரே உலகத்தின் கண். அவர் உண்மையாகவே சுயம்பு ஆகவும் உள்ளவர். இப் பாறையிலுள்ள விகாரையில் நாக என்ற பெயருள்ள உபராஜா புத்தபெருமானிடம் சரணடைந்தார். இதனால் தவறான சமய நம்பிக்கைகளைக் கைவிட்டு நல்வழியில் ஈடுபட்டார்."

கல்வெட்டின்படி நாக யுவராஜன் தவறான சமய நம்பிக்கைகளைக் கைவிட்டு புத்தபெருமானிடம் சரணடைந்தான் எனக் கூறப்பட்டுள்ளது. "தவறான சமய நம்பிக்கை" என்பது இந்து சமய நம்பிக்கை என்பதையே குறிக்கின்றது. மகாவம்சம் போன்ற பாளி நூல்களிலும் இந்து சமயத்தைக் குறிப்பிடும் இடங்களில் இச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்படி இப்பகுதியை ஆண்ட நாக வழிபாடு செய்த சிற்றரசன் புத்த சமயத்திற்கு மதம் மாறினான் எனத் தெரிகிறது. எனவே தென்னிலங்கையில் பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியிலும் அங்கிருந்த சிற்றரசர்கள் இந்துக்களாக இருந்துள்ளனர் என்பதும் உறுதியாகிறது.

இது போன்ற வாசகம் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று திஸ்ஸமகராமையிலும் காணப்படுகிறது. நாக யுவராஜன் தவறான சமய நம்பிக்கைகளைக் கைவிட்டு புத்தபெருமானிடம் சரணடைந்தான் என அக் கல்வெட்டிலும் கூறப்பட்டுள்ளது.

# பிதுரங்கல பிராமிக் கல்வெட்டுகளில் நாகர்



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகையும், அதன் கீழே உள்ள வழிபாட்டு அறைகளும்

மாத்தளை மாவட்டத்தில் மொத்தமாக 62 முற்கால பிராமிக் கல்வெட்டுகளும், 6 பிற்கால பிராமிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவற்றில் 3 கல்வெட்டுகளில் மட்டுமே நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை பற்றிய விபரங்களைப் பார்க்கலாம்.

**கரடித காமத்தில் வாழ்ந்த வீம நாகன் பற்றிய பிதுரங்கல கல்வெட்டு**

மாத்தளை மாவட்டத்தின் வடபகுதியில் பிரசித்தி பெற்ற சிகிரியா மலைக்குன்று அமைந்துள்ளது. இம்மலைக்குன்று பண்டைய காலத்தில் சிவகிரி, சிம்மகிரி ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டு வந்தது. தற்போது இது சிகிரியா எனத் திரிபடைந்துள்ளது. சிம்மகிரி மலையின் உச்சியில் இருந்து பார்க்கும் பொழுது வடக்குப் பக்கத்தில் சுமார் 600 மீற்றர் தூரத்தில் ஓர் மலையைக் காணலாம். இதுவே பிதுரகல மலையாகும். தற்போது இம்மலை பிதுரங்கல என அழைக்கப்படுகிறது. இம்மலையில் காசியப்பன் தன் தந்தையான தாது சேனனுக்கு பிதுர்க்கடன் செய்தான் எனக் கூறப்படுகிறது. இதனால் இம்மலை பிதுர்மலை எனப் பெயர் பெற்று, அதுவே சிங்கள மொழியில் பிதுரகல என அழைக்கப்பட்டது. பின்பு முகலனும் இம்மலை அடிவாரத்தில் தன் அண்ணன் காசியப்பனின் உடலை எரித்து, தனது



இரண்டு கல்வெட்டுகளும் காணப்படும் குகையின் மேற்பகுதி



கல்வெட்டின் அண்மித்த தோற்றம்


கடமைகளை நிறைவேற்றி, இவ்விடத்தில் காசியப்பனுக்கு ஓர் சமாதியை அமைத்தான் எனக் கூறப்படுகிறது.

இம்மலையின் வடக்கு மற்றும் மேற்குப் பக்க அடிவாரத்தில் 14 இயற்கையான கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டுள்ளன. இவற்றில் நான்கு குகைகளில் பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் சிவன், நாகன், கண்ணன், சுவாமி, பூசகன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் சிவவழிபாடு, நாகவழிபாடு, கண்ணன் அல்லது கணேசன் வழிபாடு ஆகியவை 2000 ஆண்டுகளுக்கு முன்பே இருந்துள்ளது என்பதற்கு இக்கல்வெட்டுகள் முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன.

பிதுரங்கல மலைக்கு ஏறுவதற்கு உள்ள வழியில், மலையின் அடிவாரத்தில் பௌத்த விகாரையும், தூபியும் அமைந்துள்ளன. இவற்றைக் கடந்து படிகள் வழியாக மலைக்கு ஏறும்போது ஒரு பெரிய கற்குகை காணப்படுகிறது. இக்கற்குகையின் உட் பகுதியில் சுவர்களால் அறைகள் கட்டப்பட்டு, அதில் தெய்வச் சிலைகளை ஸ்தாபித்து



கற்புருவங்கள் வெட்டப்பட்ட தம்புள்ளை கற்குகைகள்



நாகதத்த என எழுதப்பட்டுள்ள தம்புள்ளை கல்வெட்டின் பிரதி



834

பெண் பக்தை நாக தத்த பற்றிய கல்வெட்டின் பிரதி

வழிபாடு செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக உள்ள சிறிய அறையில் விஷ்ணு பகவானின் சிலையும், மத்தியில் உள்ள பெரிய அறையில் புத்த பகவானின் சிலையும், மூன்றாவதாக உள்ள அறையில் இன்னுமோர் தெய்வத்தின் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. இக்குகையின் மேற்பகுதியில் கற்புருவம் வெட்டப்பட்டு அதன் கீழே இரண்டு பிராமிக் கல்வெட்டுகளும் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் முதலாவதாக பெரிய எழுத்துக்களில் சிவன் பற்றிய கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் கீழே சிறிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கும் கல்வெட்டு நாகன் பற்றிய கல்வெட்டாகும்.

சிகிரியாவின் அருகில் இருந்த கரடித காமம் என்னுமிடத்தில் வீம நாகன் என்பவன் வாழ்ந்துள்ளமை பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. இவனின் மனைவியின் கற்குகையில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. இவன் நாகவழிபாடு செய்தவனாக இருக்க வேண்டும் என எண்ணக் கூடிய வகையில் இக்கல்வெட்டில் உள்ள வாசகங்கள் காணப்படுகின்றன. அக்கல்வெட்டு பின்வருமாறு:

“திச தேவிய சதா மதன கரதிதஹம வீம நாக பரிய”

இதன் பொருள் ஆங்கிலத்தில் பின்வருமாறு: “*The co donor with Tissadevi is Mandana, wife of Vima Naga of Garadidagama*”. இது தமிழில்: “திஸ்ஸதேவியுடன் சேர்ந்து தானம் செய்பவர் கரடித காமத்தைச் சேர்ந்த வீம நாகனின் மனைவி மந்தனா” என்பதாகும்.

இக்கல்வெட்டு கூறும் செய்தியின் மூலம், இக்குகையின் சொந்தக்காரியும், சிவனின் பேத்தியுமான திஸ்ஸாதேவியுடன் இணைந்து வீமநாகனின் மனைவியான மந்தனாவும் தானதர்மங்கள் செய்துள்ளாள் எனத் தெரிகிறது. இக்கல்வெட்டுகள் இரண்டையும் பேராசிரியர் பரணவிதான தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

## பாமரப் பெண் பக்தை நாக தத்தவைப் பற்றிய அம்புலம்பே கல்வெட்டு

மாத்தளை நகரில் இருந்து தம்புள்ளைக்குச் செல்லும் வீதியில் உள்ள லென்தொர என்னுமிடத்தின் மேற்குப்பக்கத்தில் சுமார் 5 கி.மீ தூரத்தில் அம்புலம்பே எனும் இடம் அமைந்துள்ளது. இங்குள்ள மலைப் பகுதியில் உள்ள கற்குகையில் 4 முற்கால பிராமிக் கல்வெட்டுகளும், ஒரு பிற்கால பிராமிக் கல்வெட்டும் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு முற்காலக் கல்வெட்டில் நாகர் பற்றி எழுதப்பட்டுள்ளது. அக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு,

“உபசிக நாகதத்தய லேனே அகட்ட [அனகட்ட சடு தி] ச சகச”

இதன் பொருள்: “பாமர பெண் பக்தையான நாகதத்தவின் குகை நான்கு திசைகளிலும் இருந்து வரும் சங்கத்தார்க்கு அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும்..”. ஆங்கிலத்தில் இது, *The cave of the female lay devotee Nagadatta, [is given] to the sangha of the four directions present and absent*” எனப் பொருள்படும். இக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நாகதத்த என்பது நாகத்தால் வழங்கப்பட்டவர் எனும் அர்த்தத்தைக் கொண்டதாகும்.

## நாக தத்தவைப் பற்றிய தம்புள்ளை கல்வெட்டு

இலங்கையின் மத்தியில் உள்ள மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை நகரம் அமைந்துள்ளது. இந்நகரின் தெற்குப் பக்கத்தில் ஒரு பெரிய மலைப்பாறை ஒன்று உள்ளது. 900 மீற்றர் நீளமும், 700 மீற்றர் அகலமும் கொண்ட இம்மலைப் பாறையின் தெற்குப் பக்கத்தில் இயற்கையான பல கற்குகைகள் காணப்படுகின்றன.

இக்கற்குகைகளில் பலவற்றில் கற்புருவம் வெட்டப்பட்டுள்ளது. இக் கற்குகைகளில் மொத்தமாக 25 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றில் நாகர் பற்றியும், இரண்டு கல்வெட்டுகளில் சிவன் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

நாகர் பற்றிய கல்வெட்டில் மொத்தமாக 5 எழுத்துகள் காணப்படுகின்றன. இதில் “நாகதத்த..” எனும் ஒரே ஒரு சொல் மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. இது நாகத்தால் வழங்கப்பட்டவர் எனப் பொருள்படும். இதன் மூலம் 2300 ஆண்டுகளுக்கு முன்பு நாகத்தை வழிபட்டவர்கள் தம்புள்ளை பகுதியில் வாழ்ந்துள்ளனர் எனத் தெரிகிறது.

(தொடரும்.)



*ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக 'பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை' எனும் தொடர் அமைகின்றது.*


● நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் வடக்குப் பகுதியின் மழைவீழ்ச்சி

## அறிமுகம்

வடக்கு பிராந்தியத்தின் வருடாந்த மழைவீழ்ச்சி 1230 மி.மீ. ஆயினும்கூட, ஆண்டுக்கு ஆண்டு, இடத்திற்கு இடம் மற்றும் பருவத்திற்குப் பருவம் இது வேறுபடும் (படம் 7.1). இருப்பினும், வடகிழக்கு பருவக்காற்றின் தாக்கம் மற்றும் வங்காள விரிகுடாவில் பல்வேறு காற்றமுத்த தாழ்வுகள் உருவாகி வருவதால், மொத்த மழையில் 75 சதவீதம் (700மி.மீ.) வடகீழ் பருவக்காற்றின் போது பெறப்படுகிறது (Alahacoon & Edirisinghe, 2021b). மேலும், வடக்கு பிராந்தியத்தில் 60% மழை (550 மி.மீ.) நவம்பர் 15 முதல் டிசம்பர் 30 வரை பதிவாகுகின்றது. ஆய்வின் படி, கடந்த பத்தாண்டு கால வரலாற்றில் வங்கக் கடலில் ஏற்பட்ட காற்றமுத்த தாழ்வு நிலைகளால் பதிவான மொத்த மழைவீழ்ச்சியில் 70% இற்கும் அதிகமானவை இக் காலப்பகுதியில் பதிவாகியுள்ளது. முக்கியமாக, நவம்பர் 20 ஆம் தேதி முதல் டிசம்பர் 10 ஆம் தேதி வரையிலான ஒரு வாரத்திற்குள் மொத்த மழையில் 300 மில்லி மீற்றருக்கும் அதிகமான மழை கிடைக்கின்றது. குறைந்த காலப்பகுதியில் கிடைக்கும் கனமழையினால் குறைந்த உயரம் கொண்ட சில பகுதிகளில் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதே சமயம், இக்காலத்தில் மழைவீழ்ச்சியினால் 70 சதவீதத்துக்கும் அதிகமான மழைநீர் எவ்வித உபயோகமும் இன்றி கடலில் கலப்பதால், நிலத்தடி நீர்வளம் பாதிக்கப்படுகின்றது (ADB, 2022). அயன இடை ஒருங்கல் வலயத்தின் இயக்கம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் மழையை ஏற்படுத்துகிறது. வடக்குப் பகுதியில் மார்ச் மாதத்தில் குறிப்பிட்ட ஆண்டுகளில் 100 மி.மீ. இற்கும் அதிகமான மழைவீழ்ச்சி கிடைப்பதற்கு அயன இடை ஒருங்கல் வலயமே காரணமாகும்.




படம் 7.1. வடக்கு மாகாணத்தின் வேறுபட்ட நிலையங்களின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சிப் போக்கு

ஆண்டு மழைவீழ்ச்சி பொதுவாக 1230 மி.மீ. ஆகும். எவ்வாறாயினும், ஊர்காவற்றுறை, மாந்தை மேற்கு, நெடுந்தீவு மற்றும் மடுப் பகுதிகளில், சராசரி வருடாந்த மழைவீழ்ச்சி 980 மில்லிமீற்றருக்கும் குறைவாகவே உள்ளது. பெரியமடு, உயிலங்குளம், இரணைஇலுப்பைக்குளம், மூன்றாம்பிட்டி, மருதோண்டிக்குடா, இலுப்பைக்கடவை, பெரியபண்டிவிரிச்சான், கள்ளியடி, ஆத்திமோட்டை, மாதோட்டம், விடத்தல்தீவு, பாலம்பிட்டி, எருக்கலம்பிட்டி, வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், வண்டன்குளம், பண்டிவிரிச்சான், தோட்டவெளி, பேசாலை, அரிப்பு, சிலாவத்துறை, கொண்டைச்சி, மறிச்சுக்கட்டி, ஊர்காவற்துறை, பல்லவராயன்கட்டு, நாகபடுவான், கிராஞ்சி, வேரவில், மற்றும் வலைப்பாடு போன்ற பிரதேசங்கள் குறைவான மழைபெறும் பிரதேசங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதேவேளை வவுனியா, கணுக்கேணி, திருநெல்வேலி, இரணைமடு, நெடுங்கேணி, முத்தையன்கட்டு, ஒட்டுசுட்டான், ஈரட்டபெரியகுளம் மற்றும் ஏனைய பிரதேசங்களில் வருடாந்த மொத்த மழைவீழ்ச்சி 1250 மில்லிமீற்றருக்கும் அதிகமாகப் பதிவாகியுள்ளது (Alahacoon & Edirisinghe, 2021a).


அட்டவணை 7.1. வடக்கு மாகாணத்தின் மாவட்ட ரீதியிலான ஆண்டு சராசரி மொத்த மழைவீழ்ச்சி

| மாவட்டம் | வருடாந்த மொத்த மழைவீழ்ச்சி சராசரி (மி.மீ.) |
|---|---|
| யாழ்ப்பாணம் | 1230 |
| கிளிநொச்சி | 1210 |
| முல்லைத்தீவு | 1280 |
| மன்னார் | 1140 |
| வவுனியா | 1260 |

வெப்பச்சலனத்தினால் ஏற்படும் மழைவீழ்ச்சி சமீபகாலமாக அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதுடன் வட மாகாணத்தின் மழைவீழ்ச்சிப் பாங்கில் சில மாற்றங்களும் காணப்படுகின்றன. வெப்பச்சலன/மேற்காவுகை/உகைப்புச் செயற்பாட்டின் காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில், வெப்பச்சலன மாதங்களில், குறிப்பாக ஏப்ரல் - மே - ஜூலை மற்றும் செப்டம்பர் மாதங்களில் வெப்பச்சலனம் காரணமாக எதிர்பாராத மழைவீழ்ச்சி, காற்றின் வேக மாறுபாடு, வெப்பநிலை மற்றும் ஈரப்பத மாற்றங்கள் ஆகியன உணரப்பட்டுள்ளன. வடக்கு மாகாணத்தின் மொத்த மழைவீழ்ச்சியில் ஏறக்குறைய 10 % மழைவீழ்ச்சி வெப்பச்சலன செயற்பாட்டின் மூலம் கிடைக்கின்றது (Abeysingha & Rajapaksha, 2020).

### இலங்கையின் வட மாகாணத்தில் மழைவீழ்ச்சியின் இடரீதியான மாறுபாடுகள்

இடரீதியாக, வட பிராந்தியத்தில் மழைவீழ்ச்சியில் சில வேறுபாடுகள் உள்ளன (அட்டவணை 7.1), (படம் 7.2). வடக்குப் பிராந்தியத்தின் மொத்த





*படம் 7.2. வடக்கு மாகாணத்தின் இடரீதியிலான மழைவீழ்ச்சிப் பாங்கு*


வடக்கு மாகாணம் தென்மேற்குப் பருவக்காற்றின் நிழல் பகுதியில் அமைந்திருப்பதால், வறண்ட காற்றின் உள்வருகை காரணமாக மிகக் குறைந்த அளவு மழையைப் பெறுகிறது. இரண்டாவது இடைப்பருவ காலத்தில் சராசரி மழையளவு 280 மி.மீ. ஆகும் (படம் 7.3, 7.4, 7.5, 7.6, 7.7, மற்றும் அட்டவணை 7.2) இருப்பினும், பனிக்கன்குளம், உயிலங்குளம், வவுனிக்குளம் மற்றும் மணியங்குளம் போன்ற சில பகுதிகளில் 280 மி.மீ இற்கும் அதிகமான மழை பெய்யும். வெப்பச்சலன செயல்முறை காரணமாக ஈரமான காற்றின் உள்வருகையுடன் ஈரப்பதனும் அதிகரிக்கின்றமை இதற்குக் காரணமாகும்.

முதலாவது இடைப்பருவத்தின்போது வடக்குப் பிராந்தியத்தின் அனைத்துப் பகுதிகளும் அயன இடை ஒருங்கல் வலய விரிவாக்கம் மற்றும் வெப்பச் சலனம் காரணமாக குறிப்பிடத்தக்க அளவு மழையைப் பெறுகின்றன. ஏனைய இடங்களுடன் ஒப்பிடும் போது, முல்லைத்தீவு, யாழ்ப்பாண பிரதேசம், கரையோரப் பகுதிகள் மற்றும் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளில் முதலாவது இடைப்பருவத்தின் போது மழை சற்று அதிகமாகக் கிடைக்கின்றது. இப்பிரதேசங்களில் சராசரி மழைவீழ்ச்சி 160 மி.மீ. இற்கு மேல் பதிவாகியுள்ளது. முழுக் கிளிநொச்சி மாவட்டத்திலும் மன்னார் மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலும் இந்தக் காலகட்டங்களில் 160 மில்லிமீற்றருக்கும் குறைவான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் சூரியனின் நிலை ஏறக்குறைய நேரடியாக வடக்கு மாகாணத்திற்கு செங்குத்தாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனால், உயரமான இடங்களில் இரவும் பகலும் அதிக வெப்பம் நிலவுகிறது (Dananjaya et al., 2022).

அட்டவணை 7.2. பருவகால ரீதியிலான மழைவீழ்ச்சி சராசரி


| பருவங்கள் | சராசரி மழைவீழ்ச்சி (மி.மீ) |
|---|---|
| முதலாவது இடைப்பருவம் | 160 |
| தென்மேற்கு பருவம் | 120 |
| இரண்டாவது இடைப்பருவம் | 280 |
| வடகீழ்ப் பருவம் | 650 |







படம் 7.3. பருவகால ரீதியிலான மழைவீழ்ச்சிப் போக்கு


ஏனைய பருவங்களை விட, வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளும் இக்காலத்தில் அதிக மழையைப் பெறுகின்றன. வடகீழ் பருவத்தின் போது வடக்குப் பிராந்தியத்தின் சராசரி மழையளவு 650 மி.மீ. ஆகும். எனினும், மடுக்கந்த, இளமருதன்குளம் ஈரற்பெரியகுளம், தண்ணிமுறிப்பு, மாமடுவ, நெளுக்குளம், தண்டுவான், ஆறுமுகத்தன் புதுக்குளம், மருதோடை, நைனாமடு, நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம், வட்டக்கச்சி, கரிப்பட்ட முறிப்பு, இரணைமடு, பாவற்குளம், கணுக்கேணி, உடையார்கட்டு பகுதிகள் அதிகளவில் மழையைப் பெறுகின்றன. வடகீழ் பருவத்தின் போது இப்பகுதிகள் 700மி.மீ. இற்கும் அதிகமான மழைவீழ்ச்சியைப் பெறுகின்றன. வங்காள விரிகுடாவின் திறந்த கடல் மேற்பரப்பின் ஈரமான காற்று மற்றும் பல்வேறு நிலைகளிலான குறைந்த அழுத்தத்தின் வளர்ச்சி ஆகியவை வடக்கு மாகாணத்திற்கு அதிக மழையை வழங்கும் முக்கிய காரணிகளாகும்.





படம் 7.4. வடக்கு மாகாணத்தில் முதலாவது இடைப்பருவகால மழைவீழ்ச்சியின் இடரீதியிலான பரம்பல் பாங்கு




படம் 7.5. வடக்கு மாகாணத்தில் இரண்டாவது இடைப்பருவகால மழைவீழ்ச்சியின் இடரீதியிலான பரம்பல் பாங்கு




படம் 7.6. வடக்கு மாகாணத்தில் தென்மேற்கு பருவகால மழைவீழ்ச்சியின் இடரீதியிலான பரம்பல் பாங்கு





*படம் 7.7. வடக்கு மாகாணத்தில் வடகீழ்ப்பருவகால மழைவீழ்ச்சியின் இடரீதியிலான பரம்பல் பாங்கு*


## இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் மழைவீழ்ச்சியின் பருவகால பாங்கு


*வட மாகாணத்தின் பருவகால மழைவீழ்ச்சியின் அளவிலும் போக்கிலும் பல்வேறு மாறுபாடுகள் காணப்படுகின்றன. வடகிழக்கு பருவமழை, வெப்பச்சலன செயல்முறை, முகப்புச் செயல்முறை மற்றும் அயன இடை ஒருங்கல் வலயத்தின் இயக்கம் ஆகியவை மூலம் இங்கு மழை கிடைக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய மழைவீழ்ச்சி வடகீழ் பருவ காலத்திலும், இரண்டாவது இடைப்பருவ காலத்திலுமே கிடைக்கின்றது. மாகாணத்தின் மொத்த மழைவீழ்ச்சியின் 85% அளவு, மேற்கூறிய இரண்டு பருவத்திலுமே கிடைக்கின்றது (அட்டவணை 7.3 மற்றும் படம் 7.8). இவ்விரண்டு பருவங்களுமே வடக்கின் ஈரலிப்பான பருவங்கள் ஆகையால், இவை இரண்டையும் சேர்த்து மாரி காலம் என்றும் அழைக்கின்றோம் (Perera, 2021).*

அட்டவணை 7.3. வடக்கு மாகாணத்தின் வேறுபட்ட நிலையங்களின் பருவகால ரீதியிலா மழைவீழ்ச்சிப் பாங்கு

| நிலையம் | பருவம் | சென்னின் பெறுமானம் | போக்கு |
|---|---|---|---|
| அக்கராயன்குளம் | வடகீழ்ப்பருவம் | -0.98 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.23 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.234 | அதிகரிப்பு |
| அம்பலப்பெருமாள் | வடகீழ்ப்பருவம் | 0.12 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | 2.197 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 3.768 | அதிகரிப்பு |
| இரணைமடு | வடகீழ்ப்பருவம் | -0.89 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.08 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.987 | அதிகரிப்பு |
| மாங்குளம் | வடகீழ்ப்பருவம் | -0.01 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.342 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.876 | அதிகரிப்பு |
| கனுக்கேணி | வடகீழ்ப்பருவம் | 0.54 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | 1.62 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.876 | அதிகரிப்பு |
| கறுக்காயக்குளம் | வடகீழ்ப்பருவம் | -0.43 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.98 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 3.164 | அதிகரிப்பு |
| முருங்கன் | வடகீழ்ப்பருவம் | 0.067 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | 0.978 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 1.89 | அதிகரிப்பு |
| முத்தையன்கட்டு | வடகீழ்ப்பருவம் | -0.987 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 0.795 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.134 | அதிகரிப்பு |
| பல்லவராயன்கட்டு | வடகீழ்ப்பருவம் | -0.0634 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.349 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.876 | அதிகரிப்பு |
| பாவற்குளம் | வடகீழ்ப்பருவம் | 0 | அறியப்படவில்லை |
| | தென்மேற்கு பருவம் | 1.816 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.917 | அதிகரிப்பு |
| திருநெல்வேலி | வடகீழ்ப்பருவம் | 0.005 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | 1.0678 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.676 | அதிகரிப்பு |
| நயினாதீவு | வடகீழ்ப்பருவம் | -0.87 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.872 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 3.012 | அதிகரிப்பு |
| நெடுங்கேணி | வடகீழ்ப்பருவம் | 0.76 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | -0.98 | வீழ்ச்சி |
| | வருடாந்தம் | 1.876 | அதிகரிப்பு |
| வவுனிக்குளம் | வடகீழ்ப்பருவம் | -1.005 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 0.956 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 1.89 | அதிகரிப்பு |
| வவுனியா | வடகீழ்ப்பருவம் | -0.98 | வீழ்ச்சி |
| | தென்மேற்கு பருவம் | 1.056 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.89 | அதிகரிப்பு |
| தண்ணிமுறிப்பு | வடகீழ்ப்பருவம் | 0.033 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவம் | 1.734 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 2.183 | அதிகரிப்பு |







*படம் 7.8. வடக்கு மாகாணத்தின் இடம்சார்ந்த ரீதியிலான பருவகால மழைவீழ்ச்சி மாற்றம்*

இலங்கையின் வட பிராந்தியக் காலநிலை வரலாற்றின் படி, ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மற்றும் ஜனவரி போன்ற சில மாதங்கள் மழை பெய்யும் மாதங்களாகும். வரலாற்றின் படி 1897 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி நெடுங்கேணியில் பதிவான 805.7 மி.மீ மழையே வடக்கு மாகாணத்தில் கிடைத்த ஒரு நாளில் கிடைத்த அதிகூடிய மழையாகும். முழு இலங்கையையும் பொறுத்த வரையிலும் இதுவே ஒரு நாளின் அதிக மழை வீழ்ச்சியாகும். பெப்ரவரி 1984 இல் முல்லைத்தீவில் அதிக மாதாந்திர மற்றும் வருடாந்த மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. 1984 ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரு வாரத்திற்கு 850 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்தது. இந்தக் கனமழைக்கு வங்கக்கடலில் உருவான சூறாவளி முக்கிய காரணமாகும் (Abeysingha & Rajapaksha, 2020).


இலங்கையின் வடபகுதி, இலங்கையின் பருவமழைக் காலநிலைச் செல்வாக்குடன் உலர் வலயத்தின் கீழ் அமைந்துள்ளது. வட இலங்கையின் மழைவீழ்ச்சி அதன் புவியியல் இருப்பிடத்தின் காரணமாக நாட்டின் பிற பகுதிகளிலிருந்து சிறிது மாறுபடுகிறது. வங்காள விரிகுடா இலங்கையின் வடபகுதி மழைப்பொழிவை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. வட பிராந்தியத்தின் மொத்த வருடாந்த மழைவீழ்ச்சி 1240 மி.மீ ஆகும். இருப்பினும், இது பருவத்திற்கு பருவம் மற்றும் இடத்திற்கு இடம் மாறுபடும். இப்பிரதேசத்தின் முப்பது வருட வரலாற்றின் படி 60% மழைவீழ்ச்சி வடகிழக்கு பருவமழை காலத்தில் பதிவாகியுள்ளது. குறிப்பாக நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வடக்கு மாகாணத்தில் 700 மி.மீ இற்கு மேற்பட்ட மழைவீழ்ச்சி கிடைக்கின்றது.

## மழையின் போக்கு


வடக்கு மாகாணத்தின் மழைவீழ்ச்சியில் பருவ கால ரீதியாக, காலநிலைப் பருவங்கள் ரீதியாக, ஆண்டுகள் ரீதியாக, மாதாந்த ரீதியாக, வாராந்த ரீதியாக, இடம் சார்ந்த ரீதியாக பல்வேறு வகைப்பட்ட வேறுபாடுகளை அறிந்து கொள்ள முடியும் (படம் 7.9, 7.10, 7.11 மற்றும் 7.12). அந்த அடிப்படையில் மழைவீழ்ச்சியின் போக்கில் ஆண்டுச் சராசரி மழை வீழ்ச்சியினுடைய அளவு, குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கவில்லை. 1930 முதல் 1960 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தினுடைய மழை வீழ்ச்சி 22 மில்லி மீற்றராகவும், 1960 முதல் 1990 வரையான காலப்பகுதியில் 34 மில்லி மீற்றராகவும், 1990 இல் இருந்து 2022 வரையான காலப்பகுதியில் 54 மில்லி மீற்றராகவும் அதிகரித்துள்ளது. ஒவ்வொரு 10 ஆண்டுக்கும் மழைவீழ்ச்சி அளவு அதிகரித்து வருகின்றது. எனினும் கடந்த 2000 ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான 20 ஆண்டுகாலப் பகுதியில் வடக்கு மாகாணத்தினுடைய மழை வீழ்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்புக் காணப்படுகின்றது. இதற்கான பிரதானமான காரணமாக காலநிலை மாற்றத்தை ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் (Naveendrakumar et al., 2018).




*படம் 7.9. வடக்கு மாகாணத்தின் வருடாந்த மொத்த மழைவீழ்ச்சிப் போக்கு*






*படம் 7.10. வடக்கு மாகாணத்தின் ஆண்டுரீதியான மாத மழைவீழ்ச்சிப் போக்கு*




*படம் 7.11. வடக்கு மாகாணத்தின் சராசரி ஆண்டு மொத்த மழைவீழ்ச்சிப் போக்கு*








*படம் 7.12. வேறுபட்ட நிலையங்களின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சிப் போக்கு*

பருவ கால ரீதியிலான வடக்கு மாகாண மழை வீழ்ச்சியைப் பொறுத்தவரையில் வடகீழ் பருவ காலம் தன்னுடைய அளவில் குறைந்து கொண்டு செல்வதனையும், இரண்டாவது இடைப்பருவம் தன்னுடைய சராசரி மழை அளவில் உயர்ந்து கொண்டு செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. அதே சமயம் மிகப்பெரிய மாற்றமாக, தென்மேற்குப் பருவக் காற்று நிலவுகின்ற காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் வெப்பச் சலனம் காரணமாக அண்மித்த இரண்டு தசாப்தங்களுக்கு 120 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை கிடைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. அதேபோல முதலாவது இடைப்பருவக் காலத்திலும் குறிப்பிடத்தக்க அளவு மழை கிடைத்து வருவதைக் கவனிக்கலாம். அந்த அடிப்படையில், மாரிகாலம் அல்லது வடக்கினுடைய மிக முக்கியமான மழைக்காலம் என்று அழைக்கப்படுகின்ற வடகீழ் பருவக் காற்று காலத்தில் மழையினுடைய அளவு குறைவடைந்து செல்கின்றது. குறிப்பாக டிசம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குப் பின்னர் மழையினுடைய அளவு கணிசமாகக் குறைந்து கொண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. வடக்கு மாகாணத்தினுடைய மொத்த மழை வீழ்ச்சியில் 65% கொண்டிருக்கின்ற வடகீழ் பருவக் காற்று காலம் தற்பொழுது 58% ஆக குறைவடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. அதேவேளை தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் மழையினுடைய அளவு 07 வீதத்திலிருந்து 12 வீதமாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. முதலாவது இடைப்பருவத்தை பொறுத்தவரையில் மிக நீண்ட காலமாக 'சித்திரை ஒரு சிறு மாதிரி' எனும் மக்கள் நம்பிக்கை குறைவடைந்து கொண்டு செல்கின்றது. சித்திரை மாதத்தில், அதாவது ஏப்ரல் மாதத்தில், வடக்கு மாகாணத்திற்கு கிடைக்கின்ற மழை வீழ்ச்சியினுடைய அளவு குறைந்து கொண்டு செல்கின்றமை அதற்கான காரணமாகும்.

### காலநிலைக் காலங்களில் மழை மாற்றங்கள்

வடக்கு மாகாணத்தின் தற்போதைய ஆண்டுச் சராசரி மழையளவு சுமார் 1240 மி.மீ. ஆகும். வேறுபட்ட காலநிலைக் காலங்களில் (1901-1930, 1931-1960, 1961-1990, மற்றும் 1991-2022) காணப்பட்ட மழை மாற்றங்களின்

பகுப்பாய்வின்படி, ஒவ்வொரு காலநிலைக் காலங்களிலும் மழைவீழ்ச்சியில் எத்தகைய வேறுபாடுகளும் பதிவாகவில்லை. 1901 முதல் 1930 வரை, மழைவீழ்ச்சி மாற்றம் 2 மி.மீ. முதல் 5 மி.மீ. வரை இருந்தது. மேலும், நிலையங்களுக்கு இடையேயும் ஆண்டுகளுக்கு இடையேயும் அதிக வேறுபாடு காணப்பட்டது. 1901-1930 காலப்பகுதியுடன் ஒப்பிடும் போது, 1930-1960 வரையான காலத்தில் சராசரி அதிகரிப்பு 17 மி.மீ. ஆகவுள்ளது. இதுவொரு மிகப்பெரிய காலநிலை மாற்ற அம்சமாகப் பார்க்கப்படாவிட்டாலும், 1960 முதல் 1990 வரையான காலநிலைக் காலத்தில் இதன் அதிகரிப்பு 36 மி.மீ. ஆக அதிகரித்தமை, காலநிலை மாற்றத்தின் முக்கிய அம்சமாகப் பார்க்கப்பட்டது. 1990 முதல் 2022 வரையான காலகட்டத்தில், இது மேலும் 52 மி. மீ. ஆக அதிகரித்தது (Shelton & Lin, 2019).

இருப்பினும், நான்கு காலநிலைக் காலங்களிலும் மாதாந்த அடிப்படையில் மழைவீழ்ச்சியில் பல மாற்றங்களை நாம் அவதானிக்கலாம். வடக்கு மாகாணத்தில் ஜனவரி மாத மழைவீழ்ச்சியில் அதிக வித்தியாசத்தைக் காணலாம். ஒவ்வொரு காலநிலைக் காலத்திலும், ஜனவரி மாத மழை குறைந்து கொண்டே வருகிறது.
எடுத்துக்காட்டாக, 1901-1930 காலப்பகுதியில் 118 மி.மீ. ஆகவும் 1931-1960 காலப்பகுதியில் 90 மி.மீ. ஆகவும், 1961-1990 காலப்பகுதியில் 60 மி.மீ. ஆகவும் குறைவடைந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் நெற்பயிர்ச்செய்கைக்கான மிக முக்கியமான மழை ஜனவரி மாதத்தில் பெய்கிறது. இந்த ஜனவரி மாத மழையில் ஏற்படுகின்ற குறைவு அல்லது அதிகரிப்பு நெற்செய்கையை, குறிப்பாக நெல்லின் அறுவடையை, கணிசமான அளவு பாதிக்கும். இதனால் தான் பெரும்பாலான விவசாயிகள் ஜனவரி மாதத்தில் குறிப்பாக ஜனவரி 20 ஆம் தேதி வரையிலான மழை வீழ்ச்சியை பெரிதும் எதிர்பார்ப்பார்கள்.
ஆனால் கடந்த காலநிலைக் காலங்களோடு ஒப்பிடுகின்ற பொழுது ஆண்டுதோறும் ஜனவரி மாதத்துக்கான மழை வீழ்ச்சியின் அளவு குறைவடைந்து கொண்டு வருகின்றமையால், வடக்கு மாகாணத்தினுடைய மானாவாரியான நெற்செய்கை பாதிக்கப்படும் நிலைமை உருவாகி உள்ளது.

வடகீழ் பருவக் காற்று காலத்தில் மழை வீழ்ச்சி குறைவடைந்து கொண்டு செல்லுகின்றது. குறிப்பாக டிசம்பர் மற்றும் ஜனவரி மாத காலத்தில் வடக்கு மாகாணத்தினுடைய மழை வீழ்ச்சி அளவு குறைவடைந்து கொண்டு செல்லுகின்றமை நெற்செய்கையை மட்டுமின்றி வடக்கு மாகாணத்தின் தரைக்கீழ் நீர் வளத்தையும் கணிசமான அளவு பாதிக்கின்றது. வடக்கு மாகாணத்தில் ஏப்ரல் மாத மழை குறிப்பிடத்தக்கது. ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு வட மாகாணத்தில் தொடர்ந்து நான்கு மாதங்களுக்கும் மேலாக குறைவான மழைவீழ்ச்சியே இருக்கும் என்பதால் இது மிக முக்கியமான மழையாகும். ஆய்வின்படி, ஏப்ரல் மழையும் குறைந்துள்ளது. மே மாத மழைவீழ்ச்சியில் எந்த மாற்றமும் இல்லை. இருப்பினும், ஜூன் மாத மழையின் சராசரி குறைந்து வருகிறது. சில நிலையங்களில், ஜூன் மாதம், மழை பெய்யாத மாதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜூன் மாதத்தைப் போலவே ஜூலை மாத மழையும் 18 மி.மீ. குறைந்துள்ளது. ஓகஸ்ட் மாதத்தின் ஒவ்வொரு காலநிலைக் காலத்திலும் இது ஒரு தெளிவற்ற வடிவத்தைக் கொண்டுள்ளது. 1901-1930 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 1931-1960 காலப்பகுதிகளில் ஓகஸ்ட் மழைவீழ்ச்சி அதிகரித்தாலும், அனைத்துக் காலநிலை காலங்களிலும் ஏற்ற இறக்க நிலைகளை நாம் அவதானிக்கலாம். அதன் பிறகு, ஓகஸ்ட் மாதத்தின் இரண்டு காலநிலைக் காலகட்டங்களிலும் (1961-1990, 1991-2022) மழை குறைந்துள்ளது. 1901-1930 காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது 1931-1960 காலப்பகுதியில் செப்டம்பர் மழை குறைந்தாலும், 1961-1990, 1991-2022 காலப்பகுதிகளில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் அக்டோபர் மாத மழையில், வேறுபட்ட மழைவீழ்ச்சி அவதான நிலையங்களுக்கிடையில், ஒரு தெளிவான தன்மையைக் காண முடியவில்லை. ஒரு சீரற்ற போக்கையே ஒவ்வொரு நிலையங்களும் கொண்டிருக்கின்றன. இருப்பினும் சில பிரதேசங்களில் ஒக்டோபர் மாத மழையானது அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில்

அம்பலப்பெருமாள்குளம், வவுனிக்குளம், இரணைமடு, தண்ணிமுறிப்பு மற்றும் கணுக்கேணி போன்ற பிரதேசங்களில் ஒக்டோபர் மாத மழை அதிகரித்துக் கொண்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதேபோல வடக்கு மாகாணத்தின் அனைத்து நிலையங்களிலும் நவம்பர் மாத மழையானது அதிகரித்துக் கொண்டு வருகின்ற நிலைமையை அவதானிக்கலாம். 1931 முதல் 1960 வரையான காலநிலைக் காலத்தோடு ஒப்பிடுகின்ற பொழுது 1960 இல் இருந்து 1990 வரையான காலநிலைக் காலப்பகுதியில் நவம்பர் மாத மழை, சராசரியாக வடக்கு மாகாணத்தில் 58 மில்லி மீற்றரால் அதிகரித்துக் காணப்பட்டது. அதேபோல 1990 முதல் 2022 வரையிலான காலநிலைக் காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின நவம்பர் மாத மழை 86 மில்லி மீற்றராக அதிகரித்துக் காணப்படுகின்றது. இது காலநிலை மாற்றத்தின் ஒரு வெளிப்பாடு என ஆராய்ச்சியாளர்கள் பெரிதும் கருதுகின்றனர். வடகீழ் பருவக்காற்று காலம் தன்னுடைய மொத்த மழைவீழ்ச்சியின் அளவில் குறைவடைந்து சென்றாலும் கூட, நவம்பர் மாத மழையில் அதிகரிப்புக் காணப்படுகின்றமை ஆராய்ச்சியாளர்களுக்கு மிகப்பெரிய ஒரு ஆச்சரியத்தை உருவாக்கியுள்ளது.

இதற்கு நேர்மாறாக, மாதாந்திர சராசரிப் பகுப்பாய்வைப் பார்த்தால், இலங்கையின் அனைத்து நிலையங்களிலும் மழைவீழ்ச்சி முறை அதிகரித்து வருகிறது. இருப்பினும், இலங்கையின் வட பிராந்தியத்தில், வருடாந்த மொத்த மழைவீழ்ச்சி சில குறிப்பிடத்தக்க ஏற்ற இறக்கங்களைக் காட்டுகிறது. சில ஆண்டுகள் குறைந்த அளவு மழையையும், சில பகுதிகள், மிக அதிக அளவு மழையையும் பெற்றன. அதே நேரத்தில், அனைத்துக் காலநிலைக் காலங்களிலும் வருடாந்த மொத்த மழையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இல்லை.


1901-1930, 1931-1960, 1961-1990, மற்றும் 1991-2022 போன்ற காலநிலை காலத்திற்கான மாதாந்த சராசரி மழையின் ஏற்ற இறக்கமான முறை அக்கராயன்குளம் வவுனியா, பல்லவராயன்கட்டு, திருநெல்வேலி, இரணைமடு போன்ற பகுதிகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆண்டு மழை விலகலும் ஒவ்வொரு ஆண்டும் மாறுபடுகின்றது. அக்கராயன்குளம், பாவற்குளம், வவுனிக்குளம், மாங்குளம், இரணைமடு, கணுக்கேணி, கறுக்காய்க்குளம், தண்ணிமுறிப்பு, முருங்கன், முத்தையன்கட்டு, நயினாதீவு, அம்பலப்பெருமாள்குளம், நயினாதீவு, நெடுங்கேணி போன்ற பகுதிகளில் இந்த மழைவீழ்ச்சியில் ஆண்டுதோறும் அதிக விலகல்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

## மழைவீழ்ச்சி வகைகளில் மாற்றங்கள்


இலங்கையின் வடக்குப் பகுதி பொதுவாக பருவமழைச் செயல்முறை, சூறாவளி அல்லது முகப்புச் செயல்முறை, வெப்பச்சலன செயல்முறை மற்றும் அயன இடை ஒருங்கல் வலய விரிவாக்கம் போன்ற பல்வேறு செயல்முறைகளில் இருந்து மொத்த மழையைப் பெறுகிறது. இலங்கையின் வட பிராந்தியத்தில் மழைவீழ்ச்சிக்கு பருவமழைச் செயல்முறை முன்னணிப் பங்களிப்பை வழங்குகின்றது. மேலும் இது மொத்த மழையின் 65% பங்களிப்பாகும். எவ்வாறாயினும், வட மாகாணத்தில் கோடை மாதங்களில், குறிப்பாக கடந்த இரண்டு தசாப்தங்களில், மழையின் அளவு மற்றும் மழைக்காலத்தை தீர்மானிப்பதில் மேற்காவுகைச் செயல்முறை முக்கிய பங்கு வகிக்கிறது (படம் 7.13, 7.14 மற்றும் 7.15). முந்தைய காலநிலைக் காலங்களோடு ஒப்பிடும்போது, தற்போதைய காலநிலைக்காலத்தில், வெப்பச் சலனத்தினால் கிடைக்கும் மழையின் அளவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வெப்ப காலத்தோடு ஒப்பிடும் போது, இது ஆய்வுப் பகுதியில், மொத்த மழை ஒரு குறிப்பிட்ட சதவீத அதிகரிப்பைக் கொண்டுள்ளது. உதாரணமாக, 1960 முதல் 1990 வரை, வெப்பச்சலனம் மொத்த மழையில் 12% ஆக உள்ளது. ஆனால் அதன் அளவு தற்போது 21% ஆக அதிகரித்துள்ளது. மறுபுறம், வெப்பச்சலனச் செயல்முறையானது நிலையற்ற மற்றும் கணிக்க முடியாத வானிலையை உருவாக்கி எதிர்பாராத மழையை உண்டாக்குகிறது (Alahacoon & Edirisinghe, 2021a).

வட இலங்கையில், வெப்பச்சலன செயல்முறை பொதுவாக மாலை மற்றும் அதிகாலையில் மார்ச், ஏப்ரல், மே, ஒகஸ்ட் மற்றும் செப்டம்பர்

மாதங்களில் நிகழ்கிறது. இந்தக் காலகட்டத்தில், சூரியனின் நிலை வட மாகாணத்தில் (இலங்கைக்கு அருகிலுள்ள அகலக்கோடுகளில்) கிட்டத்தட்ட மேலே உள்ளது. இதன் விளைவாக, மதிய நேரத்தில் வெப்பச்சலனச் செயன்முறைகள் உருவாக்கப்பட்டு, வளிமண்டலத்தின் மாறன் மண்டலத்தின் கீழ்ப் பகுதியில், நீராவியை பாரியளவில் உயர்த்துதல் மற்றும் மேல் வளிமண்டலத்தால் குளிர்ச்சியடையச் செய்தல் செயற்பாடுகள் காரணமாக வெப்பச்சலன மழை கிடைக்கின்றது. இம்மழைவீழ்ச்சியானது பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னரே ஏற்படுகிறது. சில வேளைகளில் அதிகாலையிலும் ஏற்படுகின்றது.




படம் 7.13. வடக்கு மாகாணத்தின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சியில் வேறுபட்ட மழைவீழ்ச்சி வகைகளின் பங்களிப்பு




படம் 7.14. வடக்கு மாகாணத்தின் வெப்பச்சலன/மேற்காவுகை/உகைப்பு மழையின் போக்கு




படம் 7.15. வடக்கு மாகாணத்தின் வெப்பச்சலன/மேற்காவுகை/உகைப்பு மழையின் போக்கு

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் வெப்பச்சலன மழை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மழையாகும். ஏனெனில் அதிகரித்த வெயிலினால், மிகக் கடுமையான ஆவியாக்கம் ஏற்பட்டு, நீர்ப் பற்றாக்குறை அல்லது குறைந்த அளவிலான வறட்சி நிலமை நிலவுகின்ற காலப்பகுதிகளில் நிகழ்கின்ற இந்த வெப்பநிலை, வடக்கு மாகாணத்தின் தரை மேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீர் மீள் நிரப்பலுக்கு உதவுகின்ற மிக முக்கியமான மழையாகும். இந்த மழையே வடக்கு மாகாணத்தின் அதி வெப்பமான காலப் பகுதியில் சௌகரியமான வானிலை நிலைமைகள் உருவாகுவதற்கும் உதவியாக உள்ளது.

இதன் விளைவாக, இந்த மழை வட பிராந்தியத்திற்கு இன்றியமையாதது. வெப்பச்சலன செயல்முறையின் சராசரி மழைவீழ்ச்சி வடக்குப் பகுதியில் 330 மி.மீ. (தற்போது மொத்த மழையில் 29% இற்குச் சமம்) அதிகமாக உள்ளது. கடந்த 19301960 காலநிலைக் காலத்துடன் ஒப்பிடுகையில், இந்தப் பத்தாண்டு வெப்பச்சலன மழையில் 17% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தச் சதவீதத்தில் சில இட வேறுபாடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அதே நேரத்தில், பிற காரணங்களால் மழைப் பொழிவு ஏற்ற இறக்கங்களையும் காட்டுகிறது (Karunathilaka et al., 2017).

ஏனைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 1976, 1984,1985, 1989, மற்றும் 1999 போன்ற சில ஆண்டுகள் சராசரி வெப்பச்சலன மழையை விட 40% அதிக மழையைப் பெற்றன. மேலும் 1977, 1988 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் சராசரியை விட 40% இற்கும் குறைவான மழை பெய்தது. இருப்பினும், 1971, 1984, 1988 மற்றும் 2001 ஆகிய ஆண்டுகளில் இரண்டாவது இடைப்பருவத்தின் போது 175 மி.மீ. மழைவீழ்ச்சி அதிகமாக இருப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக, வெப்பச்சலன மழையின் மொத்த மழையில் 90% மாலை 5.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை பெய்யும்; மற்றும் அதிகாலை 4.30 மணி முதல் 7.00 மணி வரை கிடைக்கப் பெறும். இருப்பினும், வெப்பச்சலன மழையின் போது நிச்சயமற்ற சூழ்நிலையும் நிலவுகிறது. இந்த மழைவீழ்ச்சியில் பல ஏற்ற இறக்கங்கள் கண்டறியப்பட்டுள்ளன. ஏனைய காலங்களுடன் ஒப்பிடும் போது, மார்ச் மாதத்தின் பிற்பகுதி

மற்றும் ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் பருவமழைக்காலத்தில் அதிக அளவு மழை கிடைக்கின்றது. இது ஜூன், ஜூலை, ஒகஸ்ட், செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் பெறும் மழையைவிட 50மி.மீ. அதிகம். முதல் மற்றும் இரண்டாம் பருவ மழைக்காலங்களின் வெப்பச்சலன மழை குறிப்பிடத்தக்கது. வறட்சியான வானிலையை எதிர்கொள்கின்ற வடக்கு மாகாணத்தின் பல பகுதிகள், நீரின்றிக் காணப்படும் சூழலில், நீர் நிரப்பலை மேற்கொள்கின்ற ஒரே ஒரு ஆதாரமாக இந்த வெப்பச்சலன மழை காணப்படுவதனால், வடக்கு மாகாண மக்களுக்கு ஒரு இன்றியமையாத வரமாகவே இது அமைகிறது. 91% இற்கும் அதிகமான மக்கள் இந்த மழைவீழ்ச்சி இன்றியமையாதது என்று நினைக்கிறார்கள். ஏனெனில் இது வறண்ட காலத்தில் நிகழ்கிறது. மக்கள் தங்கள் பணத்தையும் நேரத்தையும் தண்ணீரைப் பெற பயன்படுத்துகிறார்கள்.

வெப்பச்சலன மழை என்பது முதல் இடைப்பருவமழை காலத்திலும் தென்மேற்கு பருவமழையின் பிற்பகுதியிலும் நிகழ்கிறது. இந்த இரண்டு பருவங்களும் வறட்சிக் காலங்கள். பெரும்பாலான மாவட்டங்கள் கடுமையான வறட்சிப் பாதிப்பை எதிர்கொள்கின்றன. சில பிரதேசங்கள், குறிப்பாக மாந்தை மேற்கு, மடு, பூநகரி, தீவுத் தெற்கு, தீவு வடக்கு, காரைநகர் மற்றும் நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுகள் கடுமையான குடிநீர்ச் சிரமங்களை எதிர்கொள்கின்றன. எனவே, இந்தப் பருவங்களின் மழைவீழ்ச்சி மக்களுக்கு ஒரு 'ரட்சகராக' கருதப்படுகிறது. இந்த வெப்பச்சலன மழையானது யாழ்ப்பாண மாவட்டத்திலும் வட பிராந்தியத்தின் பிரதான நிலப்பரப்பிலும் நிலத்தடி நீரை நிரப்புவதற்கான முதன்மையான ஆதாரமாகும (Piratheeparajah, 2015).

அட்டவணை 7.4. வடக்கு மாகாணத்தின் ஆண்டு மொத்த மழைவீழ்ச்சியில் காலநிலைக் காலங்களுக்கிடையிலான பருவரீதியிலான மழைவீழ்ச்சிப் பங்களிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம்

| பருவம் | காலநிலைக் காலம் | | |
|---|---|---|---|
| | 1931-1960 | 1961-1990 | 1990-2022 |
| முதலாவது இடைப்பருவம் (மார்ச்- ஏப்ரல்) | 23% | 24% | 26% |
| தேன்மேற்கு பருவம் (மே- செப்டெம்பர்) | 15% | 13% | 10% |
| இரண்டாவது இடைப்பருவம் (ஒக். நவம்.) | 26% | 26% | 30% |
| வடகீழ்ப்பருவம் (டிசம்- பெப்) | 36% | 37% | 34% |

## மழைவீழ்ச்சியில் பருவகால மாற்றங்கள்

இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் மழைவீழ்ச்சியில் பருவகால அடிப்படையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அடையாளம் காணப்படுகின்றன (அட்டவணை 7.4). தென்மேற்கு பருவ கால மழை 35 மி.மீ ஆல் குறைந்துள்ளது. மேலும் இரண்டாவது இடைப்பருவ கால மழைவீழ்ச்சி 95 மி.மீ ஆல் அதிகரித்து வருகிறது. வடகீழ் பருவ மழை 90 மி.மீ. குறைந்துள்ளது. மேலும் முதலாவது இடைப்பருவ காலத்தில், ஆய்வுப் பகுதியில் 24 மி.மீ. மழை அதிகரித்துள்ளது. பொதுவாக, தென்மேற்குப் பருவ காலம், வட மாகாணத்தில் மிகவும் வறண்ட காலமாக அடையாளம் காணப்படுகிறது.

வட பிராந்தியத்தின் மழைவீழ்ச்சி முறை மாற்றங்கள் காரணமாக விவசாயம் மற்றும் பிற பொருளாதாரத் துறைகள் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன. நீர்ப் பிரச்சினை காரணமாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை அல்லது குறைந்த அளவிலான விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பதே விவசாயிகளின் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் குறைந்த நீர்மட்டம் காரணமாக தங்கள் கிணறுகளிலிருந்து தண்ணீரைப் பெறுவதில் பலர் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். வட மாகாணத்தில் அதிக மழை பெய்யும் பருவங்களில் ஒன்றாக இரண்டாவது இடைப்பருவ காலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்தப் பருவத்தின் சராசரி மழைவீழ்ச்சி அதிகரித்தால், அது மேற்பரப்பு நீர்நிலைகளின் நீர் மட்டத்தைப் பாதிக்கும். மேலும் இந்த மாற்றங்கள் ஆய்வுப் பகுதியின் அறுவடை நடவடிக்கைகளையும் பாதிக்கும் (Somasundaram et al., 2020).

## மழைவீழ்ச்சியின் மாதாந்த மாற்றங்கள்

வட மாகாணத்தில் மாதாந்த மழைவீழ்ச்சி முறையில் சில மாறுபாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. 1930 முதல் 1990 வரையிலான காலநிலைக் காலத்தில், நவம்பர் - டிசம்பர் மற்றும் ஜனவரி ஆகியவை வட மாகாணத்தில் கடுமையான மழைவீழ்ச்சி மாதங்களாகவும், ஏப்ரல் - ஆகஸ்ட் மற்றும் அக்டோபர் மிதமான மழை மாதங்களாகவும் அடையாளம் காணப்பட்டன. ஏனைய மாதங்கள் வழக்கமான மழை மாதங்களாக

அடையாளம் காணப்படுகின்றன. இருப்பினும், 1990 இற்குப் பிறகு இந்த மாதங்களில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன. ஏப்ரல் மற்றும் ஒகஸ்ட் மாதங்கள், சராசரி மழைவீழ்ச்சி மாதங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும் மார்ச், மிதமான மழைவீழ்ச்சி மாதமாகக் கருதப்படுகிறது. அயன இடை ஒருங்கல் வலயத்தின் (ITCZ) விரிவாக்கம் மார்ச் மாதத்தில் அதிக மழை பொழிவதற்கு முதன்மைக் காரணமாகும். அதே நேரத்தில், அயன இடை ஒருங்கல் வலயத்தின் காரணமாக இந்த மாதத்தின் வளி வெப்பநிலையும் அதிகரிக்கிறது. வடக்கு மாகாணத்தில், ஒக்டோபர் - நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்யும் மழையால், இம் மாதங்கள் உயிர்ப் பாதுகாப்பு மாதங்களாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இந்த மாதங்களில் பெய்யும் மழையானது நிலத்தடி நீரை நிரப்புவதற்கும், மேற்பரப்பு நீரைச் சேமித்து வைப்பதற்கும் முதன்மை ஆதாரமாகச் செயற்படுகிறது. இந்த தரைக்கீழ் மற்றும் மற்றும் மேற்பரப்பு நீர்ச் சேமிப்பு, ஆண்டு முழுவதும் உயிரினங்களின் உயிர் வாழ்விற்கு உதவுகிறது.

வட பிராந்தியத்தில், ஜனவரி மாதத்தில் மழைவீழ்ச்சி வெகுவாகக் குறைவதை அவதானிக்கலாம். அந்த வகையில், 1930 முதல் 1960 வரையிலான ஜனவரி மாதச் சராசரி மழையளவு 94.5 மி.மீ. ஆகவும் 1961 முதல் 2022 வரையிலான காலகட்டத்தில் 67.1 மி.மீ. ஆகவும் உள்ளது. மேலும், 2000 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் 93.7 மி.மீ. மழை கிடைத்துள்ளது. இருப்பினும், 2004 முதல் டிசம்பர் மாதத்திற்குப் பிறகு வடகிழக்கு பருவக்காற்று வலுவிழந்து வருவதாலும், கடலால் சூழப்பட்ட வடக்குப் பகுதியின் வெப்பநிலை மாற்றத்தினாலும் ஜனவரியில் பெறப்பட்ட மழைவீழ்ச்சி அளவு குறைந்திருப்பதைக் காணலாம்.

இருப்பினும், பிப்ரவரியில் மழைவீழ்ச்சி அதிகரித்து வருகிறது. 1931 முதல் 1960 வரை சராசரி மழையளவு 34.8 மி.மீ. ஆகவும், 1961 முதல் 1990 வரை 39 மி.மீ. ஆகவும், 1991 முதல் 2022 வரை 42.7 மி.மீ. ஆகவும் மழைவீழ்ச்சி கிடைப்பதை நாம் அவதானிக்கலாம். ஜனவரி இறுதியில் வெப்பநிலை அதிகரிப்பதால், வங்கக் கடலில் குறைந்த காற்றமுத்தம் காரணமாக வட பிராந்தியத்தில் மழைவீழ்ச்சி அதிகரித்துள்ளது என்றும், பிப்ரவரி இறுதியில் வெப்பச்சலன செயல்முறை காரணமாக மழைவீழ்ச்சி அதிகரித்தது என்றும் சொல்லலாம். இருப்பினும், 2000 ஆம் ஆண்டிலிருந்து ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அந்த மழைவீழ்ச்சியில் நிச்சயமற்ற தன்மைகளை அவதானிக்க முடிகின்றது.

1930 முதல் 2010 வரை, மார்ச் மாதத்தைப் பொறுத்தவரை சராசரியாக 56.8 மி.மீ. மழை மட்டுமே கிடைக்கின்றது. மார்ச் மாதம் முதலாவது இடைப்பருவ காலம் என்பதனால் வட மாகாணத்தில் பருவமழை தாக்கம் இல்லை. அதன்படி, சில மார்ச் மாதங்களில் மழை கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டாக, 1987 இல் 00 மி.மீ. மழையும், 1991 இல் 1.4 மி.மீ. மழையும், 1999 இல் 2.6 மி.மீ. மழையும், 2005 இல் 00 மி.மீ. மழையும் பெய்தது. இருப்பினும், 2008 மார்ச் 1 முதல் 23 வரை, வெப்பமண்டல ஒருங்கிணைப்புச் செயல்முறையின் காரணமாக 243.1 மி.மீ. மழை பெய்தது. 2008 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் தேதி 471.4 மி.மீ. மழை கிடைத்தது. இதனால் கடந்த 40 ஆண்டுகளில் 2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அதிக மழை கிடைத்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மழை குறைவதைக் காணலாம். 1930 முதல் 1960 வரை சராசரி மழையளவு 66.2 மி. மீ. இருப்பினும், 1961 முதல் 1990 வரை 52.3 மி.மீ. மழை மட்டுமே இருந்தது. அதன்பிறகு, 2001 இல் 125.8 மில்லி மீற்றரும், 2002 இல் 140.1 மில்லி மீற்றரும் மழை கிடைக்கின்றது. இருப்பினும் ஏப்ரல் மாதத்தில் சராசரி மழை கிடைக்கின்றது. கடந்த 60 ஆண்டுகளாக, மார்ச் மாதத்தில் மழை குறைந்தால், ஏப்ரலில் மழை அதிகமாக இருக்கும். இதன் போக்கை, 2000 - 2015 வரையான காலத்தை உதாரணமாகக் கொண்டு பார்க்கலாம். 2000 மார்ச்சில் 17.3 மில்லி மீற்றரும், ஏப்ரலில் 62.0 மில்லி மீற்றரும் மழை பெய்தது. 2001 மார்ச்சில் 00 மி.மீ. மழையும், 2002 மார்ச்சில் 14.11 மி.மீ. மழையும், 2005 ஏப்ரலில் 140.1 மி.மீ. மழையும், 2005 மார்ச்சில் 00 மி.மீ. மழையும், ஏப்ரலில் 150.1 மி.மீ. மழையும் பெய்தது. 2006 மார்ச்சில் 45.7 மி.மீ. மழையும், ஏப்ரலில் 269 மி.மீ. மழையும் பெய்தது. எனவே, மார்ச் மாதத்தில் பெய்யும் மழையின் அளவு ஏப்ரல் மாத மழையைத் தீர்மானிக்கிறது எனலாம். வடக்குப் பிராந்தியத்தில்

மார்ச் மாதத்தில் வளிமண்டல வெப்பநிலையில் கடுமையான மாற்றம் வெப்பநிலை மாறுபாட்டை உருவாக்குகிறது. இது மழையைக் கொண்டுவருகிறது (குறிப்பாக மதியம் 1 மணிக்குப் பிறகு). தென்மேற்குப் பருவக்காற்று ஏப்ரல் இறுதியில் தொடங்குவதால், பருவநிலை மாற்றங்களால், ஏப்ரலில் பெய்யும் மழையின் அளவு மாறுபடுகின்ற தன்மையை அறியமுடியும்.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை மே முதல் செப்டம்பர் வரை கிடைக்கும் மழை குறைவாகவே உள்ளது. தென்மேற்குப் பருவக்காற்று இந்த மாதத்தில் செல்வாக்குச் செலுத்துவதால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வறண்ட காற்றின் தாக்கம் அதிகமாக இருப்பதால், தென்மேற்குக் காற்று வீசும்போது வடக்கு மாகாணத்துக்கு குறைவான மழையே கிடைக்கின்றது. அதனால் இந்தக் காலகட்டத்தில் பெறப்பட்ட மழையின் அளவு குறைவாகவே உள்ளது. அது மட்டுமன்றி சில ஆண்டுகளில் இம்மாதத்தில் மழை கிடைக்கவில்லை. 1931 முதல் 1960 வரை சராசரியாக 164.6 மி.மீ. மழையும், 1961 முதல் 1990 வரை 189.9 மி.மீ. மழையும் கிடைத்தது. 2000 முதல் 2015 மே - செப்டம்பர் வரையிலான மழையின் தன்மையைக் கருத்தில் கொண்டால், 2004 மே மாதத்தில் 256.9 மி.மீ. மழையும், 2005 இல் 280 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. 2006 மே மாதத்தில் 1.0 மி.மீ. மழையும், ஜூன் மாதத்தில் 0.0 மி.மீ. மழையும், ஜூலையில் 0.0 மி.மீ. மழையும் பதிவாகியதோடு ஆகஸ்டில் குறைந்த மழைவீழ்ச்சி இருந்தது. 2006 மே - ஆகஸ்ட் மாதத்தில் 1.0 மி.மீ. மழை பெய்தது. 2000 ஆம் ஆண்டு மிகக் குறைந்த மழையே கிடைத்தது. அதேபோல, 2000 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் குறைவான மழையே கிடைத்துள்ளது. செப்டம்பர் மாத மழைவீழ்ச்சி முறையில் ஒரு மாற்றம் கண்டறியப்பட்டுள்ளது. 1901 முதல் 1930 வரை செப்டெம்பர் மாதத்தில் 44.88 மி.மீ. மழை சராசரியாகக் கிடைத்தது. பின்னர் 1931 - 1960 காலப்பகுதியில் 69 மி.மீ. மழை செப்டெம்பர் மாதச் சராசரியாக கிடைத்துள்ளது. இது 94.1 மி.மீ. ஆக 1960 முதல் 1990 வரை காணப்பட்டுள்ளது. ஆனால் 1991 முதல் 2022 வரையான காலத்திற்கு 99 மி.மீ. கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த மழை வட பகுதி மக்களுக்கு, குறிப்பாக விவசாயிகளுக்கு மிக அவசியமானது. ஏனெனில் இந்தக் காலத்திலும் ஆகஸ்ட் மாதத்தின் பிற்பகுதியிலும் பெய்யும் மழை, விதைப்பு மழை என்று அழைக்கப்படுகிறது. இந்த மழை சீராகப் பெய்தால், பயிர்ச் செய்கைக்கான வாய்ப்பு, குறிப்பாக நெல் விதைப்பு நடவடிக்கை, நன்றாக அமையும். இந்த மாதத்தில் மழை குறைவாக இருக்கும் போது, வடக்குப் பகுதியின் விவசாயத்தை அது பாதிக்கிறது.


வடமாகாணத்தில் அக்டோபர் மாதத்தில் குறிப்பிடத்தக்க அளவில் மழை கிடைக்கின்றது. வடகீழ்ப் பருவக்காற்றின் ஆரம்ப நிலை என்பதால் அதிக மழை பெய்யும். இந்தக் காலகட்டத்தில் வங்காள விரிகுடாவில் தோன்றும் தாழமுக்கங்கள் காரணமாகச் சில நேரங்களில் அதிக மழையும் கிடைப்பதுண்டு. யாழ்ப்பாணக் குடாநாட்டின் மழைக்காலம் பெரும்பாலும் இந்தக் காலப்பகுதியில்தான் ஆரம்பமாகிறது. 1931 முதல் 1960 வரையான காலநிலைக் காலத்தில் ஒக்டோபர் மாதச் சராசரி மழையளவு 239.7 மி.மீ. ஆகவும், 1961 - 1990 காலப்பகுதியில் 242 மி.மீ. ஆகவும், 1990 முதல் 2022 வரையான காலப்பகுதியில் 312 மி.மீ. ஆகவும் காணப்பட்டது.

வட மாகாணத்தில் நவம்பர் மாதச் சராசரி மழைவீழ்ச்சி ஒவ்வொரு தசாப்தத்திலும் மாறுபடுகின்றது. 1960 முதல் 2022 வரையிலான காலநிலைக் காலத்தில் சராசரி மழையளவு 404.8 மி.மீ. ஆகும். இருப்பினும், 1961 முதல் 1990 வரை 336.1 மி.மீ. மழை கிடைத்துள்ளது. 2000 முதல் 2015 வரை 427.2 மி.மீ. மழை கிடைத்துள்ளது. ஆண்டுதோறும் நவம்பர் மழைவீழ்ச்சியில் வித்தியாசம் அவதானிக்கப்படுகிறது. ஆண்டு தோறும் நவம்பர் மழைவீழ்ச்சியில் வேறுபாடு இருந்தாலும், எல்லா ஆண்டுகளிலும் வேறெந்த மாதத்திலும் இல்லாத அளவுக்கு நவம்பர் மாதம் மழை பெய்யும். 2000 - 2015 காலகட்டத்தில், 2008 ஆண்டு அதிகபட்சமாக 830 மி.மீ. மழை கிடைத்துள்ளது. அதே நேரத்தில் 2000 ஆம் ஆண்டில், 286.8 மி.மீ. குறைவான மழை கிடைத்துள்ளது. இருப்பினும், பெரும்பாலான ஆண்டுகளில் நவம்பர் மாதத்தில் கிடைக்கின்ற கனமழையின் காரணமாக வடக்குப் பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. டிசம்பர் மாதச் சராசரி மழையளவு, 1931 முதல் 1960 வரையிலான காலகட்டத்தில், 200 மி.மீ. ஆகும்.

1961 முதல் 1990 வரை 278.2 மி.மீ. மழை கிடைத்துள்ளது. 2000 முதல் 2015 வரை டிசம்பர் மாதத்தில் சராசரியாக 219.4 மி.மீ. மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2000 முதல் 2015 வரையில் அதிகபட்சமாக 321.1 மி.மீ. மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. 2015 முதல் 2022 வரையான காலப்பகுதியில் 300 மி.மீ. மழைவீழ்ச்சி கிடைத்துள்ளது. ஏனைய நாட்களுடன் ஒப்பிடும்போது டிசம்பர் மாதத்தின் 5 முதல் 20 ஆம் தேதி வரை அதிக மழை பெய்யும்.

### மழை நாட்களில் அவதானிக்கப்பட்ட மாற்றங்கள்

மழை நாட்களின் எண்ணிக்கை என்பது ஒரு முக்கியமான வானிலை மூலக்கூறு ஆகும் (Kumar Guntu & Agarwal, 2020). இது எப்போதும் மழைவீழ்ச்சி மற்றும் அதன் செறிவுடன் தொடர்புடையது. ஒவ்வொரு காலநிலைக் காலத்திலும் இலங்கையின் வடக்குப் பகுதியில் சராசரி மழை நாட்களின் எண்ணிக்கைகள் குறைந்து வருகின்றன. மழைநாட்களின் எண்ணிக்கை 1901 முதல் 1930 வரையான காலப்பகுதியில் 88 ஆக இருந்தது. இது 1930 முதல் 1960 வரையிலான காலகட்டத்தில் 83 ஆகக் குறைந்தது. 1960 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் மழை நாட்கள் 76 ஆகக் குறைந்துள்ளது. எனினும், 1990 முதல் 2022 வரையிலான காலக்கட்டத்தில் அது 58 ஆகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (படம் 7.16).




படம் 7. 16. வடக்கு மாகாணத்தின் மழைநாட்களில் ஏற்பட்டுள்ள மாற்றம்

வருடாந்த மொத்த மழைவீழ்ச்சியில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏதும் இல்லாமல் மழை நாட்களில் குறைவு ஏற்படுதல் மணித்தியாலத்துக்கான அல்லது நாளுக்கான மழைச்செறிவை அதிகரிக்கும். மழை நாட்கள் குறைவது மழையின் தீவிரத்தை அதிகரிக்கும். மழை நாட்கள் நீண்ட நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டால், அது ஆய்வுப் பகுதிக்கு பயனளிக்கும். ஏனெனில் அதிக மழைநீர் நிலத்திலோ அல்லது மேற்பரப்பிலோ சேமிக்கப்படும். அதே நேரத்தில், மழைவீழ்ச்சியின் பரவலான விநியோகத்தில் நீரின் மேற்பரப்பு ஓட்டம் குறைக்கப்படும். இருப்பினும், குறுகிய காலத்திற்குள் அதிக மழையைப் பெறுகிறோம் (சராசரியில் எந்த மாற்றமும் இல்லை ஆனால் மழை நாட்களில் குறைவாகவுள்ளது). இதுவே வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பாதிப்பை ஏற்படுத்தும் பிரதான காரணியாகும். அத்தோடு மழைநீரின் பெரும்பகுதி எந்த உபயோகமும் இல்லாமல் கடலில் கலக்கிறது. எனவே, பருவநிலை மாற்றக் கண்ணோட்டத்தில் வட மாகாணத்தில் மழை நாட்கள் குறைவடைவது என்பது எதிர்காலத்தில் பல பாதிப்புகளை ஏற்படுத்தும்.

நவம்பர் 20 முதல் டிசம்பர் 10 வரையான காலப்பகுதிக்குள் வடக்கு மாகாணத்தின் மொத்த மழைவீழ்ச்சியில் 70% இற்கும் அதிகமான மழை கிடைக்கின்றது. அதாவது 20 நாட்களுக்குள் இந்த 70% மழையும் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதேவேளை நவம்பர் 25 ஆம் தேதி முதல் டிசம்பர் 5 ஆம் தேதி வரையிலான பத்து நாட்களுக்குள் மொத்த மழையில் 55% கிடைக்கின்றது. எனவே, இந்த நாட்களில் வட மாகாணத்தில் வெள்ளப் பாதிப்பும் ஏற்படுகிறது. இலங்கையின் வடக்குப் பகுதியினது வாழ்வும் தாழ்வும் வடகிழக்குப் பருவக்காற்றுப் பருவக் காலத்தில் பெய்யும் மழையைப் பொறுத்தே அமைகின்றது. இருப்பினும், இந்தப் பருவத்தில் மழை நாட்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இது இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் அல்லது நீர் இருப்பை நேரடியாகப் பாதிக்கிறது.

(தொடரும்)




● ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.



*இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.*


# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

## பகுதி 07

### கிழக்குப் பிராந்தியத்தில் தமிழரும் சோனகரும் : ஒரு முக்கியமான சோதனை

இன்று, தமிழ் அரசியல் தலைமையின் புறக்கணிப்பு மற்றும் அவமரியாதைச் செயல்கள் காரணமாகவும், தங்களின் அரசியல் தலைவர்களின் வழிகாட்டல்களுக்கு பதிலளிக்கும் விதமாகவும், இலங்கைச் சோனகர்கள் தங்களை ஒரு தனித்துவமான இனம் மற்றும் மதக்குழுவினர் என்ற தெளிவான பிம்பத்தைப் பெற்றுள்ளனர்.

1980 களின் முற்பகுதியில் ஈழப் போர் வெடித்ததில் இருந்து, இனவாத நலன்களைப் பிரிதிநிதித்துவப்படுத்திய சிங்கள பெரும்பான்மைக் கட்சிகள், தமிழ் பேசும் மக்களுக்கிடையில் ஐக்கியம் உருவாகுவதைத் தடுப்பதற்காக சோனகர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையில் உள்ளூர் வன்முறையைத் தூண்டி, தீவிரப்படுத்துவதன் மூலம் இந்த பிளவை ஆழப்படுத்த முயன்றன (அலி 1986-87: 164; UTHR அறிக்கை 7, 1991; தனிப்பட்ட களப்பணி தரவு 1993 மற்றும் 1995).

1990 முதல், விடுதலைப் புலிகள் தொழுகையின் போது முஸ்லிம்களை படுகொலை செய்ததோடு, யாழ்ப்பாணம் மற்றும் தீவின் வடக்கிலிருந்து முழு முஸ்லிம் மக்களையும் கட்டாயமாக வெளியேற்றினர் (ஹஸ்புல்லா 1996; சிவராம் 1992). இவை அனைத்தும் கிழக்கில் சோனகரும், தமிழர்களும் கிராம



**1990 இல் நிகழ்ந்த முஸ்லிம் மக்கள் வெளியேற்றம்**

Image Source - namathu.blogspot.com

மட்டத்தில் தொடர்ச்சியாகப் பகிர்ந்துகொள்கிற வரலாற்று ரீதியாக வேரூன்றிய மொழி, சமூக அமைப்பு மற்றும் பண்பாட்டுப் பழக்கவழக்கங்கள் போன்றவற்றிலிருந்து இந்த மக்களை தூரப்படுத்தவும் காரணமாகின்றன. குறிப்பாக கிழக்குக் கடற்கரையில் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அதிகளவான முஸ்லிம்களும் தமிழர்களும் நெல் விவசாயம் செய்யும் அயலவர்களாக வாழ்கின்றனர். அவர்களின் பகிரப்பட்ட கலாச்சார பாரம்பரியத்தின் வரம்புகளை சோதிக்கும் வகையில் அதே பொருளாதார மற்றும் அரசியல் வளங்களுக்காகப் பலமாகப் போட்டியிடவும் செய்கின்றனர்.

தமிழ்ப் பிரிவினைவாத இயக்கத்தின் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று இங்குதான் தீர்மானிக்கப்பட வேண்டும்; அதாவது, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள துணைப் பிரதேசங்களில் வாழும் கரையோர முஸ்லிம்கள் தமிழ் பேசும் தாயகத்திற்கான தமிழ்த் தலைமையிலான இயக்கத்தில் சேருவதற்கு ஒப்புக்கொள்வார்களா? அல்லது சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் மாவட்டங்களுக்குள்ளேயே இன்னும் சிறுபான்மையினராக இருக்க விரும்புவார்களா?

அம்பாறையின் கிழக்குப் பகுதியில் உள்ள ஒரு பெரிய முஸ்லிம், மற்றும் இந்து விவசாய நகரமான அக்கரைப்பற்றில் உள்ள தமிழர்கள் மற்றும் சோனகர்களிடையே மேற்கொண்ட (1969 -71, 1975, 1978, 1993, 1995) எனது களப்பணி அடிப்படையிலும், மற்றும் சிறு அளவில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களின் ஏனைய பகுதிகளில் மேற்கொண்ட குறுகிய எனது களப்பணி அடிப்படையிலும் இந்தப் பிராந்தியத்தில் வாழும் தமிழ் - முஸ்லிம் மக்களின் கலாசார உறவுக்கான ஒரு உரு வரைவினை என்னால் முன்வைக்க முடியும்.

இனவரைவியல் நிகழ்காலத்தில் எழுதப்பட்டாலும், நான் வழங்கும் விளக்கம் பெரும்பாலும் 1970 களில் நான் செய்த களப்பணியை அடிப்படையாகக் கொண்டது. ஒரு தசாப்தத்திற்கும் மேலாக போர் மற்றும்

சண்டைகள் இருந்தபோதிலும், 1993 மற்றும் 1995 இல் இப்பகுதியில் நிகழ்த்திய இரண்டு குறுகிய ஆய்வுப் பயணங்களில், தமிழ் மற்றும் சோனகத் தாய்வழிச் சமூக அமைப்பு மற்றும் பிரபலமான மதத்தின் முக்கிய வடிவங்கள், இன்னும் முடிந்தவரை எங்கெல்லாம் மதிக்கப்படுகின்றன என்பதை என்னால் சரிபார்க்க முடிந்தது. எவ்வாறாயினும், பொருளாதார நெருக்கடிகள், இறப்புகள், காணாமல் போதல், இராணுவ ஆட்சேர்ப்புகள் மற்றும் வெளிநாடுகளுக்கான புலப்பெயர்வுகள் போன்றன சாதாரண திருமண முறைகள் மற்றும் பொது வழிபாட்டு முறைகள் அனைத்திலும் மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் இங்கு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும்.

ஈழப்போர்களின் விளைவாக எத்தகைய நீண்ட கால சமூக மற்றும் கலாச்சார மாற்றங்கள் உருவாகலாம் என்பதை தீர்மானிக்க இன்னும் விரிவான களப்பணி அவசியமாகும். எவ்வாறாயினும், 1970 களில் இருந்து எனது அடிப்படை இனவரைவியல் ஆய்வானது, 1980 களின் பிற்பகுதியில் தமிழ் - முஸ்லிம் உறவானது தீவிரமான இனவாத நிலைக்குட்பட்டு துருவ முனைக்குச் செல்லு முன்னர் இருந்த உறவின் நிலையான வடிவத்தையும், பதட்டத்தையும் புரிந்துகொள்ள உதவும்.

## கிழக்குச் சோனகரின் வரலாறு, பொருளியல் மற்றும் குடியிருப்பு

மட்டக்களப்புக்கு புலம்பெயர்ந்த சோனகரை மட்டக்களப்பிலே மீள்குடியேற்றம் செய்தது பற்றிய 1626 ஆம் ஆண்டின் செனரத் மன்னனின் பலவீனமான ஆவணப்பதிவைத் தவிர, கிழக்குக் கரையில் ஆரம்பகால சோனக சமூகம் குறித்த உறுதியான வரலாற்றுப் பதிவுகள் எதுவும் இல்லை. இருப்பினும் மத்தியகால கடல் வர்த்தகத்தில் காணப்பட்ட முஸ்லிம்களின் ஆதிக்கம் காரணமாக அவர்கள் அப்பகுதிக்கு போர்த்துகீசிய வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்னரே வந்திருக்கலாம் என்று நான் கருதுகிறேன். இந்த விஷயத்தில் இலங்கையின் புலமை ஆய்வுகள் மிகவும் குறைவு.

மத்திய கிழக்கிலிருந்து நேரடியாக இங்கு வந்த நேரடி அரபு வம்சாவளியினரான 'மிதக்கும் பலகை' புனித மனிதர்களின் அதிசயக் கதைகளைப் பற்றியும் இங்கு கேள்விப்பட்டேன். தமிழ் முக்குவர்களுக்கும் அவர்களின் போட்டியாளர்களான திமிலர்களுக்கும் இடையே பிராந்திய ஆதிக்கத்திற்காக நடந்த சாதிப் போரை விவரிக்கும் ஒரு பிரபலமான நாட்டுப்புற கதையும் உள்ளது. இதில் முக்குவர்கள் உள்ளூர் முஸ்லிம்களின் உதவியைப் பெற்றதாகக் கூறப்படுகிறது. அவர்களின் வெற்றிக்கான வெகுமதியாக, முஸ்லிம்கள் தமிழ் மனைவிகளை சாமர்த்தியமாக தேர்ந்தெடுத்தனர். தாய்வழி பரம்பரையின் உள்ளூர் அமைப்பின் கீழ், தங்கள் வாழ்க்கைத் துணைவர்கள் தங்களுடன் நிலத்தையும் கொண்டு வருவார்கள் (கத்ரமேர் 1934).

அதன் வரலாற்றுத்தன்மை பிரச்சனைக்குரியதாக இருந்தாலும், கடந்த காலங்களில், உள்ளூர் தமிழர்களுக்கும் (குறிப்பாக ஆதிக்க சாதி முக்குவர்களுக்கும்) முஸ்லிம்களுக்கும் இடையே நல்லதொரு கலப்புத் திருமணம் இருந்ததை இந்த



படுகொலை நிகழ்த்தப்பட்ட பள்ளிவாசல் - காத்தான்குடி

Image Source - www.vidiyal.lk



கல்லோயா திட்டத்தை பார்வையிடும் டி.எஸ். சேனநாயக்க

Image Source - thuppahis.com

பிரபலமான புராணக்கதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறது. இன்று தமிழர்கள் மற்றும் சோனகர்களின் திருமணம் மற்றும் வம்சாவளி முறைகளில் காணப்படும் ஒத்த தன்மைகள் இந்தப் பார்வைக்கு பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஆதரவைக் கொடுக்கிறது (சலீம் 1990: 29). சில இந்துத் தமிழர்கள், குறிப்பாக முக்குவர் சமூகத்தைச் சேர்ந்த மிகவும் வறிய மற்றும் ஒடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இஸ்லாமியர்களாக மாறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. இதற்கான வரலாற்று ஆதாரம் என்னிடம் இல்லை என்றாலும், கேரளா மற்றும் தமிழ்நாட்டிலுள்ள முக்குவர் மீனவ சாதியினரிடையே கத்தோலிக்க மதமாற்றம் ஏற்பட்டுள்ளது. இத்தகையதொரு நிலைமை முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம் (மோரே 1993b: 78; ராம் 1991).

மட்டக்களப்பு பிராந்தியத்தின் காலனித்துவத்திற்கு முந்தைய முக்குவர் தலைவர்களின் கீழ், சோனகர்கள் ஒரு கீழ்நிலை சமூக நிலையைக் கொண்டிருந்ததாகவே தெரிகிறது. ஆரம்ப காலத்திலிருந்தே சோனகர்கள் வணிகம், மாட்டு வண்டிப் போக்குவரத்து, கைத்தறி நெசவு, தச்சு மற்றும் கடலோர மீன்பிடி போன்றவற்றில் வெற்றிகரமான சிறப்புத் தேர்ச்சி கொண்டவர்களாக காணப்படுகிற போதிலும், வெள்ளாளர் மற்றும் முக்குவ உயர்சாதி ஆதிக்கம் நிலவும் தமிழ் சமூக அமைப்பில் அவற்றின் ஒட்டுமொத்த தரமும் செல்வாக்கும் குறைவாகவே இருந்தது.

முக்கிய இந்துக் கோவில்களின் தாய்வழி அடிப்படையிலான சடங்குகள் மற்றும் படிநிலைச் சாதிய சடங்குகளிலும் சோனகர்கள் பரம்பரையாக இணைக்கப்பட்டிருந்ததற்கான தடயங்கள், 20 ஆம் நூற்றாண்டு வரை சில பகுதிகளில் (எ.கா., கொக்கட்டிக்கோலை, திருக்கோவில்) தொடர்ந்திருந்ததாகத் தெரிகிறது. முஸ்லிம் மத மற்றும் இன உணர்வுகள் பரவலடைந்தமை அவர்கள் இத்தகைய சடங்குகளைத் துறப்பதற்கு வழிவகுத்தது. உயர்சாதி தமிழ் இந்துக் கண்ணோட்டத்தில், இந்தக் கடமைகள், அதாவது கோயில் சடங்குகளின் சோனகப் 'பங்குகள்' (shares) ஒரு சுமையாக அல்லது இழிவான சேவைக்

கடமையாகப் பார்க்கப்படுவதற்குப் பதிலாக ஒரு சலுகையாகவும் மரியாதையாகவும் பார்க்கப்பட வேண்டும் என கூறப்பட்டது.

கிழக்குக் கரையோர, தமிழ் மற்றும் சோனக நகரங்களினதும், கிராமங்களினதும் தற்போதைய வடிவம் இருசாராரும் ஓரிரு மைல்களுக்குள் வாழ்வதாக அமைந்திருக்கிறது. அதேநேரம், உள்ளூரில் சில இடங்களில் தமிழ் - முஸ்லிம் பிரிவுகளும் உள்ளன. தமிழ் மற்றும் சோனக விவசாயிகள் பலர் கரையோர நகரங்களில் உள்ள வீடுகளில் இருந்து தங்கள் வயல்களுக்கு தினசரி பயணிக்கின்றனர். அவர்களின் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரம் நீர்ப்பாசனமும், நெற்செய்கையும் ஆகும். கிழக்குக் கரையோரத் தமிழர்களும் சோனகர்களும் அருகாமையில் உள்ள வயல் நிலங்களில்தான் பயிரிடுகின்றனர். ஆனால் அவர்களது வீடுகள் இன ரீதியாகப் பிரிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் அமைந்துள்ளன. தமிழர்களும் முஸ்லிம்களும் சில சமயங்களில் தெருவின் எதிரெதிர் பக்கங்களில் வசிக்கலாம். அத்தோடு அவர்களது வீடுகள் கிட்டத்தட்ட ஒன்றுடன் ஒன்று குறுக்கிடுவதில்லை. இந்த இனப் பிரிவினை பொதுவாக தேர்தல் வார்டுகள் அல்லது உள்ளூர் மத்திச்சமார் (Headmen) பிரிவுகளுடன் ஒத்துப்போகிறது. சில சமயங்களில் ஒரு குறுகிய மணல் பாதையால் மட்டுமே இரு சாராரும் பிரிக்கப்படுகின்றனர். தமிழர்கள் மத்தியில், இந்து மதத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்ட குறிப்பிட்ட பரம்பரைத் தொழில்களுக்காக (எடுத்துக்காட்டாக அடித்தட்டு சாதியப் பிரிவினரான பறையடிப்பவர்களுக்காக) ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட தெருக்கள், வார்டுகள் மற்றும் தனித்தனி குக்கிராமங்கள் போன்ற சாதிப் பிரிவினை முறை காணப்படுகிறது (McGilvray 1983). ஆனால், முஸ்லிம்கள் - சிறியளவில் முடிதிருத்துதல், விருத்தசேதனம் போன்ற வேலைகளைச் செய்கிற (ஒஸ்தா) ஓரளவு குறைந்த சமூக அந்தஸ்து கொண்ட குழுவைத் தவிர - இந்துக்களுக்கு இணையான தமது சொந்த சாதி வரிசைமுறையை உருவாக்கவில்லை. அவர்கள் மத்தியில் மதரீதியாக சற்று அந்தஸ்துக் கூடிய மௌலானா குடும்பங்களும், (சயீதுகள், நபியின் பரம்பரை வழித்தோன்றல்கள்) மற்றும் சில உள்ளூர் பாவாக்கள், மற்றும் சூஃபிகளும் சமூகரீதியாக பெரிதும் மதிக்கப்பட்டனர் (Aniff 1990; Mahroof 1991; McGilvray 1988b).

1993 மற்றும் 1995 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பணிகளிலிருந்து சூஃபித்துவம் நடுத்தர வர்க்கத்தினரிடையே பிரபலமடைந்து வருகிறது என்பதை உணர முடிந்தது. கேரளா மற்றும் லட்சத்தீவு தீவுகளைச் சேர்ந்த ஷேக்குகள் காத்தான்குடி, கல்முனை, அக்கரைப்பற்று மற்றும் தீவின் பிற இடங்களில் உள்ள முஸ்லிம்களுக்கு ரிபாய் ஒழுங்கின் தனித்துவமான திக்ரைக் கற்பிக்கிறார்கள் (McGilvray 1997a).

மேற்கில், உலர் வலயக் காடுகளில் ஒரு காலத்தில் வேட்டைக்கார வேடுவர்களும், ஏழை சிங்களச் சேனை விவசாயிகளும் (பியரிஸ் 1965) ஐதாக வசித்தனர். இலங்கையின் சுதந்திரத்திற்குப் பிந்தைய முதலாவது விவசாய குடியேற்றத் திட்டமான ‘கல் ஓயா’ திட்டத்தினால் நீர் பாய்ச்சப்பட்ட புராதன தீகவாபி பௌத்த ஸ்தூபியை ஒட்டிய நிலங்களில், தற்போது 150,000 இற்கும் மேற்பட்ட சிங்கள விவசாயிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். வடக்கில் உள்ள அனைத்து இன எல்லை மாவட்டங்களிலும் உள்ளதைப் போலவே இங்கும், நன்கு நிறுவப்பட்ட தமிழ் பேசும் மாவட்டங்களில், வெற்றிகரமாக சிங்கள மக்களை உடனடியாக அருகாமையில் குடியமர்த்துவதற்கு அரசாங்கம் சர்வதேச அளவில் நிதியளிக்கப்பட்ட நீர்ப்பாசனத் திட்டங்களைப் பயன்படுத்துகிறது. அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களின் சில பகுதிகளில் ஆழமான மக்கள்தொகை மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அங்கு தமிழர்களும் சோனகர்களும் சிங்களவர்களிடம் பெரும்பான்மை அந்தஸ்தை இழந்துள்ளனர் (கேர்னி 1987).

எனவே தமிழ் பேசும் பெரும்பான்மை நிலமான வடக்கு கிழக்கில் தமிழ் - முஸ்லிம்களுக்கான அரசியல் வசதிகள் செய்துகொடுப்பதன் மூலம் இந்த நிலத்தின் தனித்துவத்தை இரு சாராரும் (தமிழரும் - சோனகரும்) இணைந்து காப்பாற்ற முடியும்.

(தொடரும்)




● சை. கிங்ஸ்லி கோமஸ்

அரச உத்தியோகத்தராகப் பணியாற்றும் சை. கிங்ஸ்லி கோமஸ் வீரகேசரி, தினக்குரல், தாயகம் (யாழ்பாணம்), புது வசந்தம் (யாழ்ப்பாணம்) ஆகிய பத்திரிகைகளின் கொட்டகலைக்கான மேலதிக நிருபருமாவார். கட்டுரையாளர், விமர்சகர், சிறுகதை எழுத்தாளர், திரைப்படத் தயாரிப்பாளர், குறும்பட இயக்குனர் என பன்முக ஆளுமை கொண்டவர். 'The Dark Nest' எனும் இவரது குறுந்திரைப்படத்திற்கு பெண்கள் ஊடக மையத்தின் (இலங்கை) 2023 ஆம் ஆண்டிற்கான விஷேட விருது கிடைத்திருக்கின்றது. ஊடறு, பெண்ணியா, காக்கைச் சிறகினிலே (தமிழ்நாடு), ஜித்தன் (தமிழ் நாடு) போன்ற பிற நாட்டுப் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார். மலையக வரலாறு, சமூகவியல்,


*முதலாளி வர்க்கம் வசதியாக வாழ தம் வாழ்க்கையைத் தியாகம் செய்த மலையகத் தமிழ் மக்கள் தாது வருடப் பஞ்சத்தின் போது தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அண்மை நாடான இலங்கைக்கும் அழைத்துவரப்பட்ட இம் மக்கள் ஏமாற்றப்பட்டே அழைத்துவரப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இந்த நாட்டிலே உழைத்து இந்த நாட்டின் சகல மக்களுக்காகவும் தங்களை மாய்த்துக் கொண்ட இலங்கை மலையகத் தமிழ் சமூகம் 200 வருடங்களாக அடையாளச் சிக்கலைச் சந்தித்து வருகிறது. மலையகத் தமிழர்களின் அவலங்களையும் கடந்த காலத்தின் துன்பியல் சுவடுகளையும் அனுபவங்களாகக் கொண்டு, எதிர்காலத்தில் இச் சமூகம் தனியான ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுவதையும், சுதந்திரமான வாழ்க்கையை நோக்கி நகருவதையும் நோக்கமாகக் கொண்டு "இலங்கை மலையகத் தமிழ் மக்களின் இன அடையாளச் சர்ச்சை : 200 வருடங்கள் என்னும் இத் தொடர் அமைகின்றது.*

# கிழக்கிந்தியக் கம்பெனிகளும் அவற்றின் வியாபாரத் தந்திரங்களும்

இலங்கையை வளம் கொழிக்கும் நாடாக மாற்றுவதற்கு, மலையகத் தமிழ் மக்களின் உழைப்பைச் சுரண்டியதில், கிழக்கிந்தியக் கம்பெனியினரே முதற் பங்கு வகித்தனர். கிழக்கிந்தியக் கம்பெனிகளின் ஆதிக்கமானது இலங்கையில் அவர்கள் தடம் பதிப்பதற்கு முன்னரே இந்திய நாட்டில் ஆரம்பித்துவிட்டது.



16 ஆம் நூற்றாண்டில் இலண்டனில் அமைந்திருந்த கிழக்கிந்தியக் கம்பெனி அலுவலகம்

Image Source - www.britannica.com

உடல் உழைப்பை மாத்திரம் மூலதனமாகக் கொண்ட இந்திய விவசாயச் சமூகத்தில், 17 ஆம் நூற்றாண்டானது பழமையும் முதுமையுமாக செயற்பட முடியாமல் இருந்த காலமாகக் கணிக்கப்படுகின்றது. இக் காலத்தில் தமிழர்களை ஆட்சி செய்த வேற்று மொழி மன்னர்கள் பற்றற்றவர்களாகவும் தமிழ் பேசும் மக்களை மதிக்காதவர்களாகவும் இருந்தனர். ஏழை மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலிப்பது மட்டுமே அரசின் கடமை என்ற எண்ணத்துடன், அரசாங்கங்கள் மந்த கதியில் ஆட்சி செய்து வந்த காலமது. இந்தக்



முகலாய மன்னர் கம்பெனிக்காரர்களுடன் ஒப்பந்தம் செய்வதை விளக்கும் ஓவியம்


Image Source - www.theguardian.com

காலகட்டத்திலேயே மேல் நாட்டினர் இந்தியாவில் காலடி எடுத்து வைத்தனர். வியாபாரத்திற்காக வந்தவர்கள் இந்தியாவின் ஆட்சியைக் கைப்பற்றினர். இந்தியாவில் ஆதிக்கம் கொண்ட பிரிட்டிஷ் பேரரசு ஆசியாவின் பல நாடுகளிலும் தமது அதிகார ஆட்சியைப் பலப்படுத்தியது. இந்தியாவை மையமாகக் கொண்டு ஆசிய நாடுகளை நிர்வகிப்பதற்காக, பல்வேறு சுதேச அரசுகளை இணைத்து, இந்தியாவை பிரிட்டிஷ் அரசு ஆட்சி செய்யத் தொடங்கியது. பிரிட்டிஷ் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளுக்கு மக்கள் செல்ல, வீசா - பாஸ்போர்ட் போன்ற தடைகள் இல்லாமல் இருந்ததுடன், இந்த நாடுகளை நிர்வகிக்க கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஏதுவான சூழ்நிலைகளை பிரித்தானிய அரசு செய்து கொடுத்தது.

### கிழக்கிந்தியக் கம்பெனிகள்

16 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் உலகின் உற்பத்திப் பொருட்களில் நான்கில் ஒரு பங்கு ஆசியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. ஆசியாவின் செழிப்பில் மயங்கிய பிரிட்டிஷ் தொழிலதிபர் 'ராஜ் சீசப் சா பீச்' இந்தியப் பெருங்கடல், மொசபத்தேமியா, பாரசீக வளைகுடா, தென்கிழக்கு ஆசியா ஆகிய நாடுகளுக்கு வணிகப் பயணங்களை மேற்கொண்டார். இந்தியாவின் செழிப்பில் ஈர்க்கப்பட்ட அவர், ஜேம்ஸ் லேண்ட் காஸ்டர் எனும் மற்றுமோர் தொழிலதிபரோடு இந்தியாவிற்குள் வந்தனர். 1600 டிசம்பர் 31 ஆம் திகதி, கிழக்கு ஆசியாவின் வளங்களைச் சூறையாடுவதற்கு, கிழக்கிந்தியக் கம்பெனிக்கு பிரிட்டிஷ் ராணியிடமிருந்து ஒப்புதல் கிடைத்தது.

இந்திய ஆட்சிப் பீடத்தில் இருந்த முகலாயப் பேரரசுடன் பல ஆலோசனைகளையும், முன்மொழிவுகளையும், முயற்சிகளையும் முன்னெடுத்த பிரிட்டன் கிழக்கிந்தியக் கம்பெனி, பல ஆண்டுகளுக்குப் பிறகு, முகலாய அரசுடன் 'சர் தாமஸ் ரோ' என்ற பிரிட்டிஷ் இராஜதந்திரியின் சாமர்த்தியத்தால் வணிக ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த நிறுவனம்




**16 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவின் காலனி நாடுகள்**

Image Source - www.britannica.com

இந்திய அரசை ஏமாற்றியதாக வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. அந்தக் கிழக்கிந்தியக் கம்பெனி ஸ்பெயின், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடிமைகளை விற்பனை செய்து பெரும் பொருளீட்டிய கம்பெனி என்பது முக்கிய விடயமாகும்.

இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை, காலனித்துவ ஆட்சி நாடுகளுக்கு மிக இலகுவாகக் கடத்திச் செல்வதற்கான தந்திரத்தை இக் கம்பெனிகள் மேற்கொண்டன. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு தோட்டத் தொழிலாளர்களாக கொண்டுவரப்பட்ட இந்திய விவசாயிகள், இந்தக் கிழக்கிந்தியக் கம்பெனிகளின் தந்திரத்தாலேயே அழைத்துவரப்பட்டனர். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அவர்களாகவே இலங்கைக்கு ஓடி வந்தார்கள் என்ற கூற்று எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை இதனோடு தொடர்புபடுத்தி ஆராய வேண்டும்.

இந்தக் கம்பெனி மனிதத் துயரங்களை தனது வியாபாரத்திற்கு ஏதுவாக்கிக் கொண்டது. வங்காளப் பஞ்சகாலத்தில் அரிசி விலை 40 மடங்காய் அதிகரித்த அந்த நிறுவனம் 60 ஆயிரம் பவுண்ட் இலாபம் ஈட்டியமையை இதற்குச் சிறந்த உதாரணமாகக் கூறலாம். கிழக்கிந்தியக் கம்பெனியின் 120 ஆண்டுகால ஆட்சியில், 34 முறை பஞ்சம் ஏற்பட்டது. இந்திய மக்களுக்கு கிழக்கிந்தியக் கம்பெனிகளின் உண்மை முகம் தெரிய ஆரம்பித்தது. முகலாய ஆட்சியில் பஞ்சகாலத்தில் வரி குறைக்கப்பட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. ஆனால் கிழக்கிந்தியக் கம்பெனியோ, பஞ்ச காலத்தில் வரியை அதிகரித்து மனித நேயமற்ற அதன் வியாபாரத் தந்திரங்களைச் செயற்படுத்தியது. இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சங்கள் செயற்கையாகவே மக்கள் மத்தியில் திணிக்கப்பட்டது எனலாம்.

## கிழக்கிந்தியக் கம்பெனிகளின் வியாபாரமும் அடக்குமுறைகளும்

சீனாவிற்குத் தேவையான பொருட்களை வழங்க முடியாததன் காரணத்தினாலும் சீனாவிடமிருந்து பட்டு மற்றும் பீங்கான் பொருட்களை கிழக்கிந்தியக் கம்பெனி வாங்கிக் கொண்டிருந்ததனாலும், பொப்பி விதைகளையும் அபின் போன்ற போதைப் பொருட்களையும் கிழக்கிந்தியக் கம்பெனிகள் சீனாவிற்கு வியாபாரம் செய்ய ஆரம்பித்தன. அபின் தயாரிப்பிற்காக

பீகாரில் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. அவை கிழக்கிந்திய கம்பெனிகள் மூலமாக சீனாவிற்கு கடத்தப்பட்டன. சீனாவில் மக்களிடையே மிகக் குறைவாகக் காணப்பட்ட அபின் பயன்பாட்டை கிழக்கிந்தியக் கம்பெனி சீன முகவர்கள் மூலம் ஊக்குவித்தது. வரலாற்றாசிரியரும் விமர்சகரும் பத்திரிகையாளருமான 'பாரி அலிக்' தனது 'கம்பெனி அதிகாரம்' என்ற புத்தகத்தில் இதனோடு சம்பந்தப்பட்ட மேலும் பல தகவல்களையும் பதிவு செய்துள்ளார்.

கிழக்கிந்தியக் கம்பெனி, 2.5 இலட்சம் இராணுவ வீரர்களைக் கொண்ட ஒரு பலம் வாய்ந்த கம்பெனியாகவும் காணப்பட்டது. வர்த்தகத்தில் மட்டுமன்றி அது இராணுவத்தின் மூலமும் இலாபம் ஈட்டியது. இந்த இராணுவம் அடுத்த ஐம்பது ஆண்டுகளில் இந்தியாவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்ததால் இந்தியாவின் தலை எழுத்தே மாறியது.

வில்லியம் டெலிட் ட்ரிம்பில் என்பவர், தனது 'ரிலையன்ஸ் ஆப் த ஈஸ்ட் இந்தியா கம்பெனி' என்னும் புத்தகத்தில், பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் 20 கோடி மக்களை தனது இராணுவம் அடிமைப்படுத்திய வரலாறு பற்றிக் கூறியுள்ளார்.

1935 ஆம் ஆண்டில், ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்தினை மேம்படுத்த கம்பெனிகள் நிதியை ஒதுக்கியமை இந்தியாவின் கலை, கலாசாரம், பண்பாடு, அரசியல், இலக்கியம் என்பவற்றைச் சிதைத்தது. சுதேசக் கலாசாரத்தை நிர்மூலமாக்குவதன் மூலம் கலாசார ரீதியிலும் தமது ஆதிக்கத்தைச் செலுத்த வேண்டிய தேவை கம்பெனிகளுக்கு இருந்தது. போதைப் பொருட்களால் சீனாவைச் சிதைத்த கம்பெனிகள், இந்தியக் கலாசாரத்தைச் சிதைக்க அதிக பணத்தைச் செலவு செய்தது.

சுதேச மொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலத்தை இந்தியாவில் பரப்புதல் அவர்களின் அரசியல் காய் நகர்த்தல்களில் பிரதான பாத்திரத்தை வகித்தது. ஒரு சமூகத்தை அழிப்பதற்கு அல்லது அடிமையாக்குவதற்கு, அந்தச் சமூகத்தின் கலாசார, பண்பாட்டு அம்சங்களைச் சிதைக்க வேண்டியிருந்தது.

இன்று இலங்கையில், இளைஞர்கள் மத்தியில் எழுச்சி ஏற்படக் கூடாது என்ற தந்திரத்துடன், தமிழர் தாயகப் பிரதேசங்களில் போதைக் கலாசாரமும் சினிமாக் கலாசாரமும் பிற்போக்கு அரசியல் சிந்தனைகளும் ஏனைய களியாட்ட நிகழ்வுகளும் திட்டமிட்டுப் பரப்பப்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. இதே விடயத்தை அன்று கிழக்கிந்தியக் கம்பெனிகள் தமிழ்நாட்டில் செய்ய முயற்சித்த போது, அவை பெரிதளவில் வெற்றியை அளிக்கவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும்.

1857 ஆம் ஆண்டு சுதந்திரப் போரின் போது, கம்பெனிகள் ஆயிரக்கணக்கான பொது மக்களை தெருக்களிலும், சந்தைகளிலும், பொது இடங்களிலும் கொலை செய்தது. கம்பெனிகளின் இந்தக் கொடூரக் கொலைகள் காரணமாக பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு பெரும் அவப்பெயர் ஏற்பட்டது. இந்த அவப்பெயரானது சர்வதேச ரீதியாக பிரிட்டிஷ் அரசாங்கம் காட்டி வந்து வலதுசாரி ஜனநாயக முகத்திரையைக் கிழித்தெறிய வைத்தது. இதனால், 1858 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் நாள், பிரிட்டன் மகாராணி கம்பெனிகளின் உரிமைகளை ரத்துச் செய்தார்.

'உலகம் கடவுளுடையது; நாடு அரசனுடையது; ஆட்சி அதிகாரம் கம்பெனியினுடையது.' என்று மக்களை நம்பச்செய்து மிக மோசமான சித்தாந்தத்திற்கு மக்களை நகர்த்திய கம்பெனிகள் அன்று பின்வாங்கிவிட்டன. ஆனால், முதலாளித்துவச் சிந்தனையோடு தொழிலாளர்களின் நலன் சார்ந்த செயற்பாடுகளைக் காட்டிக்கொடுக்கும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்காத தோட்டக் கம்பெனிகள், மலையக மக்களின் உரிமைகளை வழங்கத் தயங்கும் அரசாங்கங்கள், மலையக மக்களின் தியாகத்தை ஏற்க மறுக்கும் ஏனைய தேசிய இனங்கள் ஆகியன கிழக்கிந்தியக் கம்பெனிகளின் பாதையிலேயே இன்று பயணிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அன்றும் இன்றும் மக்களைச் சுரண்டி ஏமாற்றும் கோர முகத்தின் வண்ணங்கள் மாறிக்கொண்டு வருகின்றதே ஒழிய மக்களின் நிலை இன்னும் மாறவில்லை.

(தொடரும்)




சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


*கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.*

# இலங்கையின் கறவை மாடுகளைப் பாதிக்கும் முக்கியமான தொற்றுநோய்கள்

இலங்கையின் கறவை மாடுகளை பல தொற்று நோய்கள் பாதிக்கின்றன. அவற்றுள் கால்வாய் நோய் (*foot and mouth disease*), தொண்டையடைப்பான் நோய் (*Hemorrhagic septicemia*), கருங்காலி நோய் (*Black quarter*), லம்பி தோல் கழலை நோய் (*lumpy skin disease*), புருசெல்லா கருச்சிதைவு நோய் (*Brucellosis*), மடியழற்சி நோய்கள் (*Mastitis*), குடற்புழு நோய்கள் (*gastro intestinal worms*) என்பன குறிப்பிடத்தக்கன. இந்த நோய்கள் கறவை மாடுகளைப் பாதித்து அவற்றின் உற்பத்தியைப் பாதிக்கின்றன. சில நோய்கள் உயிரிழப்பை ஏற்படுத்துகின்றன. சில நோய்கள் நிரந்தர மலட்டுத் தன்மையை ஏற்படுத்துகின்றன. சில நோய்கள் மனிதனுக்கும் தொற்றுக்களை தர வல்லன (*Zoonotic*). நோய்களை சுகப்படுத்த கணிசமான அளவு பணத்தை பண்ணையாளர்கள் மருந்துகளுக்கு செலவிட வேண்டி ஏற்படுகிறது. கால்வாய் நோய், தொண்டையடைப்பான், கருங்காலி நோய்களைத் தடுக்கும் தடுப்பூசிகளுக்கு அரசாங்கம் அதிகளவான பணத்தையும் செலவிடுகிறது. இந்தத் தடுப்பூசிகள் கறவை மாடுகளுக்கு அரச கால்நடை வைத்திய அலுவலகங்களினூடாக இலவசமாக வழங்கப்படுகின்றன. பொருளாதார நெருக்கடிமிக்க அண்மை நாட்களில் அவற்றுக்கான தட்டுப்பாடும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட தீவாக இருப்பதால் ஏனைய நாடுகளில் இருந்து நேரடியாக எந்தத் தொற்று நோயும் இலகுவில் நுழைய முடியாது. துறைமுகங்கள், விமான நிலையங்களினூடாக மாத்திரமே உத்தியோகபூர்வமாக நோய்கள் நுழைய முடியும். எனினும் இந்தியாவிலிருந்து கடல் வழியான சட்டவிரோத கடத்தல்காரர்கள் மூலமாக, அவர்களின் உணவுக்காக கொண்டு வரும் விலங்குகள் மூலமாக கால்வாய்நோய், லம்பி தோல்நோய் போன்றன பரவிய வரலாறு உள்ளது. அண்மைக்காலத்தில் இந்தியாவிலிருந்து படகுகள் மூலம் சட்ட விரோதமாக ஆடுகள், பசுக் கன்றுகள், கோழிகள், நாய்கள் என்பன வட மாகாணத்தில் வந்திறங்குவதையும் காணமுடிகிறது. இவை



கால் வாய் நோய் - குளம்பில் கொப்பளம்

Image Source - www.biopharmachemie.com

இலங்கையிலில்லாத பல புதிய கால்நடை நோய்களைப் பரப்பும் வாய்ப்பைத் திறந்துவிடுகின்றன. இதனை விட கடந்த சில வருடங்களுக்கு முன் வெளிநாடுகளில் இருந்து முறையற்ற தனிமைப்படுத்தல் முறைமையின்றிக் கொண்டுவரப்பட்ட பல மாடுகளால் *'Bovine viral diarrhoea'* போன்ற நோய்கள் பரவியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இனி, சில முக்கியமான சில நோய்கள் குறித்துப் பார்ப்போம்.

## கால்வாய் நோய் / கோமாரி நோய் (Foot and mouth disease)

மாடுகள், எருமைகள், ஆடுகள், செம்மறி ஆடுகள், பன்றிகள் போன்ற பிளவுற்ற குளம்புள்ள (*cloven foot*) விலங்குகளுக்கு இந்த நோய் ஏற்படுகிறது. *'foot and mouth disease virus'* எனும் RNA வைரஸ் இந்த நோயை ஏற்படுத்துகிறது. O,A,C, Asia **1**, SAT **1**, SAT **2**,SAT **3** எனும் 7 உப வகைகளை இந்த வைரஸ் கொண்டுள்ளது. இலங்கையில் *'O serotype'* வைரசே நோய் நிலையை அண்மைக் காலத்தில் தோற்றுவிக்கிறது. இந்த வைரஸ் சூழலில் நிலைத்திருக்கக் கூடியதுடன் பயன்படுத்தப்படும் விவசாய உபகரணங்கள், மனிதர்கள் மூலம் வேகமாகப் பரவலடைகிறது (காற்று மூலம், உணவின் மூலம், செயற்கைச் சினைப்படுத்தல் மூலம், கொப்புளங்களிலுள்ள திரவங்களின் தொடுகை மூலம்). இந்த நோய்க்குரிய தடுப்பூசிகள், இலங்கையில் தயாரிக்கப்பட்டும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டும் வழங்கப்படுகிறது.

### நோயின் அறிகுறிகள்:

1. காய்ச்சல்
2. முகம், முரசு, வாய், நாக்கு, குளம்பு, முலைச்சுரப்பி போன்ற இடங்களில் கொப்புளங்கள் தோன்றுகிறது.
3. கொப்புளங்கள் உடைந்து புண் ஏற்படுகிறது.
4. தொடர்ச்சியாக எச்சில் வடிதல்.
5. உணவில் நாட்டமின்மை, நீர் அருந்தாமை.
6. விலங்குகள் நொண்டுதல், நடக்கச் சிரமப்படல், குளம்புகள் கழன்று விழல்.
7. பாலுற்பத்தி குறைதல்.
8. கன்றுகள் இறத்தல் (இதயப் பாதிப்புக் காரணமாக).

### கால்வாய் நோயினால் ஏற்படும் பொருளாதாரப் பாதிப்புகள்:



கால்வாய் நோய் - நாக்கு, முரசில் காயம்

Image Source - www.business.qld.gov.au

1. உற்பத்தி குறைதல் (பால், இறைச்சி).
2. சிகிச்சைச் செலவு அதிகமாதல்.
3. பண்ணையாளரின் வருமானம் குறைதல்.

4. கருச்சிதைவு ,சினைப்பிடிக்காமை.
5. கன்றுகளின் இறப்பு.
6. நொண்டுதல், குளம்பு கழர்தல், நிரந்தர அங்கவீனம்.
7. மடியழற்சி ஏற்படல்.
8. தடுப்பூசி மற்றும் நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் அரசாங்கத்துக்கு அதிக செலவு ஏற்படுகிறது.

### கால்வாய் நோய் ஏற்பட்ட பின் என்ன செய்ய வேண்டும்?


உடனடியாக பிரதேச அரச கால்நடை வைத்தியருக்கு அறிவித்து நோயுற்ற விலங்குகளை தனிமைப்படுத்திச் சிகிச்சையளித்தல் வேண்டும். அரச கால்நடை வைத்தியர் தகுந்த இடங்களுக்கு அறிவித்து மாடுகளின் அசைவுகளைக் கட்டுப்படுத்துவார்கள். விசேட தடுப்பூசித் திட்டங்களைச் செய்வார்கள் (இதன் மூலம் ஏனைய கால்நடைகள் தொற்றுக்குள்ளாகுவதைத் தடுக்க முடியும்). நோயுற்ற விலங்குளை பொதுவான மேய்ச்சல் வெளிகளுக்கு அனுப்பக் கூடாது. இறந்த கால்நடைகளை முறையாக அகற்றுவது அவசியம்.

### நோய் வராமல் தடுப்பது எவ்வாறு?

1. தடுப்பூசி வழங்குதல்.
2. நம்பிக்கையான பண்ணைகளில் இருந்து கால்நடைகளைக் கொள்வனவு செய்தல்.
3. நோயுற்ற விலங்குகளை தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல்.
4. புதிய கால்நடைகளை உடனடியாக பண்ணைக்குள் விடாமல் சில வாரங்கள் தனிமைப்படுத்தி வைத்தல் (Quarantine).

### லம்பி தோல் நோய் (Lumpy skin disease)

இது, அண்மைக் காலத்தில் இலங்கையின் கறவை மாடுகளில் அடிக்கடி ஏற்படும் நச்சுயிரி (virus) நோயாகும். 1929 ஆம் ஆண்டில் தென் ஆபிரிக்க நாடுகளில் முதன் முதலில் அவதானிக்கப்பட்ட இந்த நோய், 2019 ஆம்



கால்வாய் நோய் - எச்சில் வடிதல்

Image Source - www.nadis.org.uk

ஆண்டில் வட இந்தியாவில் அடையாளம் காணப்பட்டது. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமாக இந்த நோய் பரவலடைந்து, இறுதியில் தமிழ்நாட்டை அடைந்து, சில வாரங்களில் வடக்கு இலங்கையையும் வந்தடைந்தது. அதன் பிறகு இன்றை வரை அடிக்கடி இலங்கையின் பல பகுதிகளில் இந்த நோய்க் கிளர்ச்சியை அவதானிக்க முடிகிறது.

இந்த நோய் உண்ணிகள் ஈ, நுளம்புகள் மூலம் அதிகளவு பரவலடைகிறது. நேரடியாக மாடுகளைத் தொடுவதன் மூலம் நோயற்ற மாடுகளுக்கும் பரவுகிறது. தாயிடம் பால் குடிப்பது மூலம் கன்றுகளுக்குப் பரவுகிறது. இந்த நோயைப் பரப்பும் பூச்சிகள், பல கிலோமீட்டர்கள் பறந்து நோயைப் பரப்ப வல்லன. எருமை மாடுகளை விட பசுமாடுகளில் அதிக தொற்றுகள் அவதானிக்கப்படும். உள்ளூர்ப் பசுக்களை விட, கலப்பினப் பசுக்கள் அதிக பாதிப்பைச் சந்திக்கின்றன. பெரிய பசுக்களை விட, கன்றுகள் அதிக பாதிப்படைகின்றன. இறப்பு வீதமும் அதிகம்.

### நோய் அறிகுறிகள்:

1. கடும் காய்ச்சல், உணவைத் தவிர்த்தல்
2. கண்களிலிருந்து தொடர்ச்சியாக கண்ணீர் வடிதல்.
3. மூக்கிலிருந்து சளி வடிதல்.
4. மூச்சு விடச் சிரமப்படல்.
5. கால் வீங்குதல், நடக்கச் சிரமப்படல்.
6. உடல் முழுவதும் வீக்கம், கட்டிகள் தோன்றுதல்.
7. கட்டிகள் 23 வாரங்களில் படிப்படியாகக் குறையும்.
8. சில மாடுகளின் கட்டிகள் உடையும், சீழ் பிடிக்கும்.
9. கட்டிகள் உடைந்த இடம் நெருப்புச் சுட்டது போலத் தெரியும்.
10. கன்றுகளின் நுரையீரல் பாதிக்கப்பட்டு சளி வடியும், மூச்சுவிடுவதில் சிரமம் ஏற்பட்டு மரணம் ஏற்படும்.
11. உடல் மெலியும், பாலுற்பத்தி குறையும்.



லம்பி தோல் நோய்க்குச் சிகிச்சையளிக்கப்படுதல்

Image Source - health.economictimes.indiatimes.com

## பொருளாதார இழப்புகள்:

1. மாடுகள் பலவீனமடையும்
2. பாலுற்பத்தி குறைதல்.
3. வளர்ச்சி குறையும், இழுவைத் திறன் குறையும்.
4. சினைப் பிடிக்காது, கருச்சிதைவு ஏற்படும் (இளம் சினை மாடுகளில்).
5. மடி வீக்கம் காரணமாகப் பாலுற்பத்தி குறையும்.
6. கன்றுகள் இறக்கும்.
7. காயம் காரணமாக தோலின் பெறுமதி குறையும்.
8. நோய் அறிகுறிகளின்வ்கோரமான தோற்றம் காரணமாக பால் அருந்துவதையோ, இறைச்சி உண்பதையோ மக்கள் விரும்புவதில்லை.
9. காயங்களுக்கான மற்றும் வீக்கங்களுக்கான சிகிச்சைக்கான செலவு அதிகம்.
10. 10. தடுப்பூசிச் செலவும் அதிகம் (அண்மையில் இந்தியா இந்த நோய்க்கான தடுப்பூசியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காக, ஆட்டு அம்மைத் தடுப்பூசியையும் பயன்படுத்த முடியும். இலங்கையில் சில தனியார் நிறுவனங்கள் இந்த நோய்க்கான தடுப்பூசியை அறிமுகப்படுத்தியுள்ளன.)

## நோய்த் தடுப்பும் பராமரிப்பும்:

1. நோயுற்ற மாடுகளைத் தனிமைப்படுத்தல்
2. கிருமிநாசினி மூலம் பட்டிகளைக் கழுவுதல் (பீனோல், போமலின், ஈதர்).
3. காவிகளான பூச்சிகளைக் கட்டுப்படுத்தல்.
4. பண்ணைகளில் உயிர்ப்பாதுகாப்பு முறைகள் (புதிய கால்நடைகளை உடனடியாக அறிமுகப்படுத்தாமை, தனிமைப்படுத்தல், புதிய விலங்குகள் மனிதர்களைத் தவிர்த்தல்).
5. தடுப்பூசி வழங்கல்.
6. இரண்டாம் நிலை நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை காயத்துக்கு பயன்படுத்தல்.
7. கன்றுகளின் சுவாச தொற்றுக்கு அதி தீவிர சிகிச்சை அவசியம்.
8. கால்நடை வைத்தியருக்கு அறிவித்து தேவையற்ற நடமாட்டத்தை தவிர்த்தல் (கால்வாய் நோய்க்கு செய்ததைப் போல).
9. பாரம்பரிய மூலிகை மருத்துவம் மூலம் சிகிச்சையளித்தல்.

அடுத்த கட்டுரைகளில் மேலும் பல நோய்களைத் தொடர்ச்சியாக ஆராய்வோம்.

(தொடரும்.)

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் 'மலையகம் 200' நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் 'மலையகம் 200' எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

● எம். இராமதாஸ்


'மலையம் 200' நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் எம். இராமதாஸ் அவர்களால் எழுதப்பட்ட 'வரலாற்றின் வழியில் மலையகத் தமிழரும் இலங்கை அரசியலும்' எனும் இக் கட்டுரை ஆறுதல் பரிசைப் பெற்றது.

# வரலாற்றின் வழியில் மலையகத் தமிழரும் இலங்கை அரசியலும்

இவ் ஆண்டுடன், மலையக மக்கள் இலங்கையில் காலடி வைத்து கிட்டத்தட்ட இருநூறு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் மலையத்தின் கட்சிகள் அல்லது தொழிற்சங்கங்கள் ஏதாவதொன்றுக்கு நூறு வருட வரலாறாவது இருக்குமா என்றால் நிச்சயமாக இல்லை என்றே பதில் கிடைக்கும். இதனை அரசியல் ரீதியான நோக்கோடு ஆராய்வது அவசியமாகிறது.

19 ஆம் நூற்றாண்டில், இந்தியாவில் சுதந்திரதாகம் பேரெழுச்சி பெற்று காந்தியடிகளின் சத்தியாக்கிரகப் போராட்டங்கள் வெள்ளையர்களின் அதிகாரத்தை உலுக்கிக்கொண்டிருந்தது. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பகத்சிங் போன்ற சுதந்திர வீரர்களின் வீரங்கள் பூகம்பங்களாகப் பொங்கியெழுந்தன. ஆனால் வெள்ளையர்களை வெளியேற்ற அவர்கள் காட்டிய முனைப்பில் சிறு பங்கு கூட, தாயகத்தில் இருந்து தொழில் அகதிகளாக வெளியேற்றப்பட்டுக்கொண்டிருந்த நாட்டு மக்களின் பக்கம் திரும்பவில்லை. வெள்ளையர்களினால் அவர்களின் குடியேற்றப் பிரதேசங்களுக்கு சடப்பொருட்களைப் போல ஏற்றுமதி செய்யப்பட்ட ஏழைத் தொழிலாளர்களின் சரிதம் சுதந்திர இந்தியாவின் கறைபடிந்த வரலாறாகும்.

இலங்கையில் 1609களில் சிறிய எண்ணிக்கையிலான இந்தியத் தொழிலாளர் இடப்பெயர்வு ஆரம்பித்தது. பின்னர், 1824 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் கோப்பிச் செய்கைக்காக தொழிலாளர் இறக்குமதி செய்யப்பட்டனர். அதற்குப் பின், தேயிலை - இறப்பர் போன்ற பெருந்தோட்டத் தொழில்துறையில் ஈடுபடுத்தவென பெருந்தொகையான தொழிலாளர் இறக்குமதி



கோப்பி உற்பத்தியில் ஈடுபடுதல்

Image Source - gbu-taganskij.ru

செய்யப்பட்டனர். இது, 1939 ஆம் ஆண்டு, இந்தியாவில் இருந்து இலங்கைக்கு தொழிலாளர்கள் செல்வது முழுமையாகத் தடைசெய்யப்படும் வரை நீண்டது.

19 ஆம் நூற்றாண்டில் சிலோன் தேசத்திற்கு வருகை தந்த இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் எண்ணிக்கை மிகையாகக் காணப்பட்ட போதும், ஆரம்பத்தில் அவர்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடவில்லை. துரைமார்களும் கங்காணிகளும் கொடுத்த துன்பங்களுடனே அவர்களது வாழ்க்கை கழிந்துகொண்டிருந்தது. கூலி அகதிகளாக நாட்டினைத் துறந்து, கால்நடையாகவும் பாதுகாப்பற்ற படகுகளின் மூலமாகவும் தலைமன்னார் துறையை வந்தடைந்து, அங்கிருந்து மாத்தளை வழியாக மலைநாட்டுத் தோட்டங்களுக்குச் சென்ற மக்கள் அனுபவித்த துயரங்கள், தோட்டங்களில் குடியேறிய பின்பும் தொடரவே செய்தன. அந்த நேரத்தில் அவர்களது தேவையாகக் காணப்பட்டது உணவும் சொற்பப் பணமும் மட்டுமே. இதனைக் கூட முழுமையாகப் பெறமுடியாது, அலைக்கழிக்கப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, கொடூரத் தண்டணைகளால் மண்ணாகிப் போனதிலேயே அவர்களது காலம் கடந்ததெனலாம்.

அரசியல் அதிகாரத்திலிருந்த தமிழ் அரசியல்வாதிகளின் பார்வையில் கூட மலையகத் தொழிலாளர்கள் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவே தெரிந்தார்கள். 1845 ஆம் ஆண்டின் தொடக்கக் காலப்பகுதிகளில், ஆங்கிலேய அரசு மலையக மக்களுக்கென பிரத்தியேகமாகத் தயார் செய்த தொழிலாளர் சட்டங்களையே மலையக மக்களுக்கு அரசியல் ரீதியாகக் கிடைத்த இடமெனக் குறிப்பிட முடியும். அவற்றைச் சட்டங்கள் என்பதை விட அடிமைச் சாசனங்கள் என குறிப்பிடுவதே மிகப் பொருத்தமானதாக இருக்கும். அதுவரை மலையக தமிழர்கள் அரசியல் அரங்கில் கண்மூடி மௌனிகளாகவே இருந்தார்கள். கோப்பியுகத்தை அடுத்து வந்த தேயிலை யுகத்தில் தான் ஓரளவு மலையக மக்களின் அரசியல் பங்கேற்பு நிகழ்ந்தது.


## சட்டசபையில் இலங்கையர்

இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கு அமைய சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இலங்கை அரசியலில் சேர்.பொன். இராமநாதன், குணசிங்க, டி.எஸ். சேனநாயக்க போன்றவர்களின் பங்குபற்றல் மிகையாகக் காணப்பட்டது. குறூ மக்கலம் மற்றும் தற்காலிக மனிங் யாப்பு போன்ற சீர்திருத்தங்கள் மூலமாக இலங்கையர்கள் அரசியல் பங்களிப்பைப் பெற்றிருந்தார்கள். ஆனாலும் அவர்கள் மலையக மக்களை, இலங்கை பூர்வீக மக்களுக்கு ஆபத்து விளைக்கும் ஒரு பிரிவினர்களாகவே கருதினர். இதனால் இலங்கை வாழ் இந்தியத் தொழிலாளர்களின் உரிமைகள் நசுக்கப்பட்டன. இத்தகைய நிலமைக்கு, இலங்கைவாழ் அரசியல் உறுப்பினர்களாக இருந்த அரசியல் தலைவர்களும் மறைமுகக் காரணமாக இருந்தனர்.

## தோட்டத்திற்குள் அடக்குமுறைகள்

அன்றைய காலத்தில் தேயிலைத் தோட்டப் பகுதிகளுக்குள் இலகுவாக நுழைய இயலாத சூழலே காணப்பட்டது. தேயிலை தோட்டத்தில் தொழில்புரியும் தொழிலாளர்கள் வெளியிடங்களுக்குச் செல்வதும் இலகுவான காரியமாக இருக்கவில்லை. தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்தாலும் கங்காணி மற்றும் துரைமார்களாலும் உன்னிப்பாகக் கண்காணிக்க ப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களின் லயத்து காம்பராக்களில் ஜன்னல் ஒன்றை மாற்றிவைக்க வேண்டுமென்றாலும் கூட நிர்வாகத்திடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. அவர்களின் செயற்பாடுகள் அடக்கப்பட்டிருந்தன. 'பற்றுச்சீட்டுத் துண்டு' முறை மூலமாக திறந்த வெளியில் அவர்களைச் சிறை வைத்திருந்தது அன்றைய ஆங்கிலேய அரசு.

வீட்டுக்கு தேவையான அரிசி, தேங்காய், கள்ளுக்கடை வசதிகள் போன்றன அருகில் இருந்த பெட்டிக்கடைகளில் கிடைத்ததால் அவர்களுக்கு வெளியில் செல்லும் தேவையும் ஏற்படவில்லை. அரசும் அதை விரும்பவில்லை.




தேயிலைத் தோட்டத்திற்காக காடழிக்கப்படுதல்

Image Source - lankapura.com

இந்தச் சிறைவைப்புக் கூட அவர்களை புரட்சியின்பால் செல்லத் தூண்டவில்லை. அவர்களுக்கு ஏற்படும் அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பவர்களாக கங்காணிகளும் துரைகளும் காணப்பட்டார்கள். கங்காணி சொல்வதே நீதியாக இருந்தது. சில பிரச்சினைகள் துரை வரை போனாலும், துரை பெரும்பாலும் கங்காணியைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. இதனால் அத்துமீறல்களும் அடக்குமுறையும் உச்சத்தில் இருந்தன.

### கோதண்டராம நடேசய்யர்

இருண்டு கிடந்த அன்றைய தேயிலைக்காட்டுப் பகுதியில் விடிவெள்ளியாய் வீரத்தோடு எழுந்து வந்தார் நடேசய்யர். இந்தியாவின் தஞ்சாவூர் மாவட்டத்திலே பிறந்து கணக்கியலிலும், பத்திரிகை மற்றும் பதிப்பியல் துறையிலும், தமிழ் - ஆங்கிலப் புலமையிலும் சிறந்து விளங்கிய நடேசய்யர், ஆங்கிலேயர்கள் வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்திய அந்தக் காலப்பகுதியில் தமிழரும் அதில் சிறந்திட வேண்டும் என்று போராடி அதில் வெற்றியும் கண்டார். வியாபார நோக்கில், நெல் மற்றும் புடவை வியாபார அமைப்புகளை இந்தியாவில் நிறுவி, அதில் ஒரு கிளையை கொழும்பில் ஸ்தாபிக்க வேண்டும் என்று, 1910 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் காலெடுத்து வைத்தார் நடேசய்யர்.

இக் காலப்பகுதியிலேயே இலங்கையில் தேயிலைச் செடிகளிடையே அடிமைகளாய் இருக்கும் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய நிலவரம் தெரிய வருகிறது. இந்திய மக்கள் நாடு கடந்து உழைப்பாளர்களாய் அடிமைப்படுத்தப்பட்டிருப்பதை அறிந்து கரிசனை கொண்டு அவர்களின் துன்பத்தில் பங்கெடுக்க ஆயத்தமானார்.

தோட்டத் தொழிலாளர்களின் அத்தனை தேவைகளும் தோட்டங்களுக்குள்ளேயே சுருக்கி வைக்கப்பட்டிருப்பதை தோட்ட நிர்வாகம் அவ்வப்போது உறுதி செய்து கொண்டே இருந்தது. அதனையும் தாண்டி தோட்டங்களுக்குள் உள் நுழைபவர்களாக வியாபாரிகளே இருந்தனர். இதனை ஒரு கருவியாகக் கொண்டு நடேசய்யர், புடவை வியாபாரி வேடமிட்டு மலையகத் தோட்டப் பகுதிகளுக்குள் நுழைந்தார்.

அன்றிலிருந்து அவர்களின் வேதனைகளில் அக்கறை கொண்டு அவர்களின் சுக துக்கங்களை பகிரங்கப்படுத்த ஆரம்பித்தார். அதற்கு அவர் கையிலெடுத்த மிகப்பெரும் அஹிம்சை ஆயுதமாக பத்திரிகைத்துறை காணப்பட்டது. 'தேசநேசன்' என்ற பத்திரிகையை கொழும்பில் தொடங்கி தோட்டத்தொழிலாளர்கள் படும் துன்பதுயரங்களை விளக்கி எழுதியதோடு பரப்பவும் செய்தார்.

**இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கு அமைய சிங்களவர்களும் தமிழர்களும் முஸ்லிம்களும் சட்டசபைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இலங்கை அரசியலில் சேர்.பொன். இராமநாதன், குணசிங்க, டி.எஸ். சேனநாயக்க போன்றவர்களின் பங்குபற்றல் மிகையாகக் காணப்பட்டது.**

தேயிலைச் செடிகளைத் தாண்டி, தோட்டத் தொழிலாளர்களின் அத்தனை தேவைகளும் பிரச்சினைகளும் பகிரங்கப்படுத்தப்பட்டது நடேசய்யர் என்ற தனிமனித சக்தியால்தான் என்றால் அது மிகையல்ல. 'தேசநேசன்' மூலமாக சொல்லப்படாத தொழிலாளர் குறித்த செய்திகளை உலகுகிற்குக் காண்பித்தார். பாரதியாரின் கருத்துகளில், கவிதைகளில் ஈர்க்கப்பெற்ற நடேசய்யர் அவரது பாடல்களினூடாக விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டார். மலையகத் தொழிலாளர்களின் உள்ளத்தில் சுதந்திர உணர்வும் அரசியல் எண்ணங்களும் ஊற்றெடுக்க நடேசய்யர் காரணமாக



துரைமார்கள்

Image Source - www.basilurtea.com

விளங்கினார். இவரது எழுச்சியைக் கண்டு ஆங்கிலேய அரசு இவரை நாடு கடத்தக் கூட எண்ணியது. அதற்கெல்லாம் இவரது வீரமான பேச்சும் எழுத்தாற்றலும் அச்சம் கொள்ளவில்லை.

முதன் முதலில் மலையக மக்கள் சார்பில் அரசாங்க சபையில் அங்கத்தவரானவர் நடேசய்யர் அவர்களே. இதற்குப் பின்னரே மலையகத்தில் உரிமைகள் குறித்துப் பேசப்பட்டன. முல்லோயா கோவிந்தன் அவர்கள் அரசியல் உரிமைக்காக மலையகத்தின் முதல் தியாகியானார். தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில், இலங்கை - இந்தியக் காங்கிரஸின் உதயம் மேலும் மக்கள் அரசியலில் ஈடுபடக் காரணமாகியது. அதனைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உதயமாகி பல தலைவர்கள் உருவாகினார்கள். தொண்டமான் என்ற நாமம் மக்கள் மத்தியில் அறிமுகம் பெற்று அழிக்க முடியாத அம்சமாகி அரசியலில் ஓங்கி நின்றது. பின்பு, ஒரவஞ்சனைகளும் பிரிவினைகளும் அதிகரித்து பல கட்சிகள் தொழிற்சங்கங்கள் உருவாகின. இதில் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன எழுச்சிப்பாதையை நோக்கிச் செல்லலாயின. எழுத்தாளர்களும் சமூக சிந்தனைவாதிகளும் அரசியலில் உட்சென்று மலையக அரசியலை வேறு ஒரு திசைக்கு கொண்டு சென்றனர்.

நடேசய்யரைப் போன்று ஒரு அரசியல் ஆளுமையை, சமூக சிந்தனையாளரை இன்று வரை மலையகம் காணவில்லை என்பது கசப்பான உண்மை. அவரது அரசியல் நோக்கம் இன்று தவிடுபொடியாகிவிட்டது. மக்களுக்காக அரசியல் என்ற நிலைமாறி, பிழைப்பிற்காக அரசியல் என்ற நிலையே மலையக அரசியல் இன்று காணப்படுகிறது.

## தேசிய அரசியல் நீரோட்டத்தில் மலையகம்

தேயிலை யுகம் பிறந்த பின், குறிப்பாக சுமார் 1907 களில் தான், இவர்கள் மத்தியில் அரசியல் உரிமைகளை துணிவுடன் கேட்கும் எண்ணம் பிறந்தது. அதுவரையில் இவர்கள் அடிமைத்தன விலங்கோடு பிணைக்கப்பட்டிருந்தனர். கங்காணிமார்களாலும் துரைகளாலும் வஞ்சனை செய்யப்பட்டு, உழைப்புச் சுரண்டல் இடம்பெற்றாலும் அவ்வப்போது அவர்களால் கிடைக்கும் சொற்பச் சலுகைகளுக்காக மயங்கிப்


போகவும் செய்தனர். இவர்களின் கண்களுக்கு, முதலாளித்துவம் ஒரு பக்கம் கொடூர அரக்கனாக தென்பட்ட அதே சமயத்தில், மறுபுறத்தில் சலுகைகள் வழங்கி தங்களைக் காக்கும் இரட்சகனாகவும் தோன்றியது. இது, மக்களின் அறியாமையேயன்றி வேறொன்றும் இல்லை.

இலங்கை அரசியலில் சோல்பரி யாப்பின் பின்னரான, பகுதியளவு சுதந்திரத்திலும் கூட மலையக மக்கள் கண்டுகொள்ளப்படாதவர்களாகவே காணப்பட்டனர். அன்றைய சட்டவாக்க மன்றத்தில் படித்த இலங்கையர் சார்பில் உறுப்பினராக இருந்த சேர்.பொன். இராமநாதன் அவர்கள் 'இந்திய வம்சாவளித் தமிழர்' என மலையக மக்களைக் குறிப்பிட்டமையே இதற்குச் சிறந்த உதாரணம். சுதந்திரக் காலப்பகுதியில் மலையக மக்களின் அடிமைச் சாசனம் துரைமார்களில் இருந்து படிப்படியாக அரசியல்வாதிகளின் கெடுபிடிமிக்க கைகளுக்கு மாற்றப்பட்டது. மக்களின் பிரச்சினைகள் தீர்ந்தால் இங்கு அரசியல் செய்வது கடினம் என்ற தீர்க்கதரிசனம் இலங்கை இந்த அரசியல்வாதிகளிடம் உண்டு. சொந்தப் பிரச்சினைகள் சூழ்ந்திருக்கும் போது தேசியப் பிரச்சினை தொடர்பாகப் பேசுவது சவாலான ஒன்று. தொழிற்சங்கம், சம்பளம், கொழுந்து, தேயிலை, லயம் என்று இவர்களின் பிரச்சினைகள் அனைத்தும் சுருக்கப்பட்டு கிடக்கிறன.

இரு நூற்றாண்டுகளுக்கு முன், இங்கு வந்து குடியேறியபோது இருந்த, 'தானுண்டு தன் வீடுண்டு' எனும் மனநிலை இன்றும் மலையக மக்களிடம் உண்டு. இந்த மனப்போக்கே தேசிய நீரோட்டத்தில் இவர்கள் இன்னமும் இணையாமல் இருப்பதற்குக் காரணமாக இருக்கிறது. இன்றும் கூட, படித்த இளைஞர்களால் போராட்டங்கள், அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போதும், தொடர்ந்தும் பசப்பு வார்த்தைகளை நம்பி வாக்களிக்கும் நிலையே காணப்படுகின்றது. இதற்குத் தீர்வு வேண்டுமெனில் சுயசிந்தனை வளர்க்கப்பட வேண்டும். சலுகைகளைப் புறக்கணித்து எதிர்காலத்திற்காகச் சிந்தனை செய்யும் போக்கு வலியுறுத்தப்பட வேண்டும்.

தேசிய ரீதியான சிந்தனைகள் வலுப்பெறுதல் அவசியம். உழைப்பிற்கான கூலியை, ஒப்பந்தங்கள் தீர்மானம் செய்யும் அவலம் மாற வேண்டும். தேசிய அரசியலில் மலையகம் சங்கமிக்க, ஒவ்வொருவரும் மனதளவில் உணர்சியோடு கிளர்ந்தெழ வேண்டும். மக்களின் புரட்சியால் மட்டுமே அது சாத்தியம். அவ்வாறு இல்லையெனில், நூற்றாண்டு கடந்து சகாப்தம் பிறந்தாலும், நம் நிலை மாறப்போவதில்லை. புத்தெழுச்சியும் புதிய சிந்தனையும் மலையக மக்கள் ஒவ்வொருவரின் மத்தியிலும் எழ வேண்டியது காலத்தின் தேவையாகும்.

(தொடரும்)




**தேயிலை கொண்டுசெல்லப்படுதல்**

Image Source - www.teafarerteas.com



**கணபதிப்பிள்ளை ரூபன்**

கணபதிப்பிள்ளை கந்தரூபன் (ரூபன்) அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

*திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Compa nies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.*

# வணிக நகர்வுகளில் துணிவுடமையின் வகிபாகம்



Image Source - smith.queensu.ca

*"தூங்காமை கல்வி*
*துணிவுடைமை இம்மூன்றும்*

*நீங்கா நிலனான் பவர்க்கு"*

*திருக்குறள் (383)*

***மு. வரதராசனார் விளக்கம் :***
*காலம் தாழ்த்தாத தன்மை,*
*கல்வியுடைமை, துணிவுடைமை*
*இந்த மூன்று பண்புகளும் நிலத்தை ஆளும்*
*அரசனுக்கு நீங்காமல் இருக்க வேண்டியவை.*

எமது வாழ்க்கையின் இன்றைய நிலையை இரண்டு விதமான நிகழ்வுகள் வடிவமைத்திருக்கும். முதலாவது, நுண் (Micro) அளவில் நாம் ஒவ்வொரு நாளும் செய்யும் செயல்கள், முடிவுகள், அதனால் வரும் விளைவுகள்.

இரண்டாவது, பெரிய (Macro) அளவில் நாம் எப்போதாவது செய்யும் விடயங்கள். இது எம்மையும் எமது சூழலையும் பெரியளவில் மாற்றி, வாழ்க்கையின் பாதையையும் மாற்றக் கூடியது.

இலங்கையில் 1950 - 1960 களில் நடந்த கல்வி முன்னேற்றம் இதற்குச் சிறந்த உதாரணம். 1970 களில், எனது ஆரம்பக் கல்வியை புற்றளை மகா வித்தியாலத்தில் படித்தேன். இது ஆரம்ப



Image Source - www.desiblitz.com

காலத்தில் ஓர் திண்ணைப் பள்ளிக்கூடமாகவே இருந்தது. முன்னைய காலத்தில் விவசாயம் மற்றும் வர்த்தகமே முக்கியமான தொழிலாக இருந்ததால், இப்படியான பள்ளிகளில் ஆரம்ப வாசிப்பும், சிறிது எழுத்துப் பயிற்சியும், கணக்குப் பாடமும், சமய நெறியும் கற்றுக்கொடுக்கப்பட்டது. அந்த நேரத்தில், மிசனறிப் பாடசாலைகள் சிறப்பான கல்வியைப் போதித்ததால், அங்கு படித்தவர்கள் பல்கலைக்கழகம் போகும் வாய்ப்பு அதிகமாக இருந்தது. அதனை உணர்ந்த எமது முன்னோர்கள் புற்றளை மாதிரியான திண்ணைப் பள்ளிகளின் தரத்தை அதிகரிக்க வேண்டுமென்று, எதிர்கால முன்னேற்றத்திற்குத் தேவையான பல பாடங்களை அறிமுகப்படுத்தினார்கள். அதன் மூலம் கிராமங்களிலிருந்த திறமையுள்ள பலர் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சிறிய சிந்தனை மாற்றம், பிற்காலத்தில் பல விஞ்ஞானிகள், வைத்தியர்கள் மற்றும் என்னைப் போன்ற தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்க உதவியது. அன்று எமது முன்னோர்கள் எடுத்த துணிகரமான நகர்வுகள், இன்று எமது வாழ்க்கைத்தரத்தை உலகளாவிய அளவில் உயர்த்த உதவியாக இருந்தது.

எனது 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி' வரையான பயணத்தை யோசித்துப் பார்த்தால், இப்படியான சில நிகழ்வுகளும், நான் அப்போது எடுத்த முடிவுகளும் எனது ஆரம்ப நிறுவனங்களை அமைக்கவும் அதனை வளர்த்து வெற்றிகரமாக மேம்படுத்தவும் உதவியாக இருந்தது என்பதை அறிய முடிகிறது. அல்லது, அப்படியான செயல்முறையே எனக்குத் தேவையானதாக இருந்திருக்கிறது. அவற்றுள் ஒரு துணிகரமான முடிவையாவது நான் எடுக்காமல் இருந்திருந்தால், நான் இந்த நிலைக்கு வந்திருப்பேனா என்பது சந்தேகமே.

எனது வாழ்க்கையில் நான் எடுத்த சில துணிகரமான முடிவுகளையும், அவை எவ்வாறு எனது பிற்காலத்தை வடிவமைத்தது என்றும் இங்கு மேலும் கூறுகிறேன்.

**ஆபிரிக்கப் பயணம்:** 1989 ஆண்டு, ஈழத்திற்கு மிகக் கொடிய ஓர் காலமாக அமைந்தது. அப்போது பல முனைகளில் போர்களும், அதனால் இளைய பருவத்தினரின் எதிர்காலமும் திசையின்றிப் போய்க்கொண்டிருந்தது. நான் எடுக்க வேண்டிய உயர்தரப் பரீட்சை தள்ளிப்போடப்பட்டது. மீண்டும் பரீட்சை நடக்குமா என்ற சந்தேகமே இருந்தது. ஆனால் நான் பரீட்சைக்குத் தேவையான பாடங்களை முழுமையாகப் படித்து விட்டிருந்தேன். அப்போது ஆபிரிக்காவில் வேலை செய்து கொண்டிருந்த எனது அண்ணாவின் அறிவுரையின்படி, உயர்தரப் பரீட்சைக்குக் காத்திராமல் ஈழத்தை விட்டு வெளியேறி ஆபிரிக்கா சென்றேன். அப்படியான


ஓர் முடிவு எனது வாழ்க்கையின் பாதையை முற்றாக மாற்றியது. அப்போது அந்த மாற்றம் பெரிய சுமையாகத் தெரிந்தது. நான் ஈழத்தில் தமிழில் உயர்தரம் படித்து, ஆபிரிக்காவில் ஆங்கிலத்தில் பரீட்சை செய்ய வேண்டியிருந்தது. ஆனாலும் துணிவாக அன்று எடுத்த முடிவு, அதன் பின் ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்று, பல்கலைக்கழகங்களில் பட்டங்கள் எடுக்க உதவியதுடன், அமெரிக்காவில் ஆரம்ப நிறுவனங்களை உருவாக்கவும் அடிக்கல்லாக இருந்தது. இதனால், கிடைக்கும் வாய்ப்புகளை தவறவிடாமல் பயன்படுத்துவது முக்கியம் என நான் உணர்ந்து கொண்டேன்.

**திறந்த கதவும் எனது நகர்வும்:** எனக்கு ஐக்கிய அமெரிக்காவின் மினசோற்றா பல்கலைக்கழகத்தில் கற்பதற்கு வாய்ப்புக் கிடைத்ததால், நான் அமெரிக்கா வந்தேன். எனது ஈழத்துக் கல்வி, பல்கலைகழகத்தில் நல்ல மதிப்பெண்கள் எடுக்க உதவியது. ஆனால் எனக்கு அமெரிக்க வேலை அனுபவம் இல்லாததாலும், நான் சர்வதேச மாணவனாக இருந்ததாலும், பகுதி நேர வேலை எடுப்பது எனக்குக் கடினமாக இருந்தது. அதனால் நான் மிக மனக் கவலையடைந்தேன். ஓர் சுவாரஷ்யமான விடயம் என்னவென்றால், எனது பெயரை ஆங்கிலத்தில் எழுதினால் மிக நீளமாக இருக்கும். எனது முதற் பெயரையும், கடைசிப் பெயரையும் சேர்த்தால் ஆங்கிலத்தில் மொத்தமாக 28 எழுத்துகள் வரும். எனது பெயரைக்கூறி அழைக்க பேராசிரியர்கள் சிரமப்படுவார்கள். இக் காரணத்தினாலும், நான் வகுப்பில் நல்ல புள்ளிகள் எடுப்பதனாலும் பேராசிரியர்கள் என்னை நன்றாக அறிந்திருந்தார்கள்.

ஓர் நாள் நான் விரக்தியுடன், எனது மின்சாரவியல் பேராசிரியரிடம் சென்று, என்னை அறிமுகப்படுத்தி, எனது சூழ்நிலையை அவரிடம் கூறினேன். அவர் எனது திறமையை அறிந்திருந்தார்; அவரது நல்ல மனப்பான்மையினால், அவரது ஆய்வகத்தில் வேலை கொடுத்தார். நான் அவருடன் மூன்று வருடங்கள் வேலை செய்தேன். அப்போது பல தொழில்நுட்பங்களைக் அவரது குழுவினரிடமிருந்து கற்றுக் கொண்டேன். அவர் எனது மேற் படிப்பிற்கும் பரிந்துரை செய்து, எனக்கு உலகின் முன்னிலையான 'Stanford University' இல் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தினார். நான் பேராசிரியரிடம் எனது நிலமையைச் சொல்லுவதற்காக கதவைத் திறந்த அந்தச் சிறு நகர்வு, எனது வாழ்க்கையை நிரந்தரமாக மாற்றியது.

**வாடிக்கையாளரை முதன்மைப்படுத்தல்:** நான் முதலில் வேலை பார்த்த நிறுவனம் 'ரொக்வெல்' என்னும் பெரிய நிறுவனம். ஆரம்பத்தில் எனது அணியினர், பெரியளவில் சிந்தித்து மிகச் சிக்கலான பொருட்களை உருவாக்க நினைத்தார்கள். அதில் பல அம்சங்கள் இன்றைய கால கைத்தொலைபேசியில் இருப்பவை. எனது காலம் 30 வருடங்களுக்கு முந்தியது. அவர்களது யோசனை பெரிதாக இருந்தாலும், அவர்கள் வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடி முடிவு செய்யாததால் அந்தப் பொருட்களை சந்தைக்குக் கொண்டுவர முடியவில்லை. அதே நேரம் இன்னொரு சக அணி, வாடிக்கையாளர்களுடன் கலந்துரையாடி ஓர் பொருளை உருவாக்கினார்கள். அந்த வரைதிட்டத்தில் எனக்கு ஆர்வம் உண்டாகியதால், நான் அந்த அணியில் சேர்ந்து, அந்தப் பொருளை உருவாக்கும் ஓர் முக்கிய உறுப்பினர் ஆனேன். அதன் மூலம் அந்தப் பொருளை வெற்றிகரமாக உருவாக்கி மில்லியன் கணக்கில் வியாபாரம் செய்தோம். அதனால் என்னை அவர்கள் அந்தக் குழுவிற்குத் தலைவர் ஆக்கினார்கள்; நான் முதலில் இருந்த குழுவைக் கலைக்கவும் முடிவு செய்தார்கள். இந்த அனுபவத்தினால், நான் வாடிக்கையாளர்கள் எவ்வளவு முக்கியம் என்று கற்றுக்கொண்டேன். அதை எனது பிற்கால வாழ்க்கையில் பயன்படுத்தி, எப்படியான விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்று கற்றுக் கொண்டேன்.

**சொகுசான வேலையைத் துறந்தேன்:** நான் மேலே கூறியபடி, புதிய குழுவுடன் சேர்ந்து உருவாக்கிய தயாரிப்புப் பொருள், சாம்சங் (Samsung) போன்ற நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்டு உலகின் முதல் தலைமுறை நவீன கைத்தொலைபேசிகள் உருவாக்கப்பட்டன. அந்த நேரத்தில் நான் வேலை புரிந்த நிறுவனத்திலும், இன்னொரு நிறுவனத்திலும், மேற் பதவிகளுக்குப் போக சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் அதனை



கல்வியே அடிக்கல்லை வைக்கும், காலம் தாமதிக்காத செயல்முறை சந்தையைச் சரியான நேரத்தில் கைப்பற்ற உதவும், ஆனால் இவற்றோடு அடுத்த நிலைக்குப்போக, துணிவுடமை மிக முக்கியம்.


Stanford University

Image Source - www.britannica.com

நிராகரித்துவிட்டு, இருந்த வேலையையும் விட்டுவிட்டு, மனத் துணிச்சலுடன் சில நண்பர்களுடன் எனது முதலாவது ஆரம்பத் தொழில்நுட்ப நிறுவனத்தை ஆரம்பிக்க முடிவு செய்தேன். ஓர் ஆரம்ப நிறுவனத்தைத் தொடங்குவதற்கு பல விடயங்கள் அவசியம். அணி சேர்க்க வேண்டும், பண வியாபாரங்களில் முதலீடு செய்பவர்களிடம் எமது யோசனையில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும், உற்பத்திப் பொருள் இல்லாமலேயே எமது எதிர்கால வாடிக்கையாளர்களுடன் பேசி எமது யோசனைக்கு ஒப்புதல் வாங்க வேண்டும் எனப் பல கடினமான விடயங்கள் இருந்தன. இவற்றை எல்லாம் நாம் செய்வோம் என எங்களை நாங்களே நம்பி, எமது சொகுசான வேலையை விட்டுவிட்டு, ஆரம்ப நிறுவனம் ஒன்றைத் தொடங்க முடிவு செய்தமை ஓர் எல்லை தாண்டிய துணிச்சலே. இப்படியான துணிச்சலான செயலில் இறங்கியதால் தான், இன்று எனது வாழ்க்கைக் கதையை மன உறுதியுடன் கூறமுடிகிறது.

நான் எனது தொழில் வாழ்க்கையை, அதாவது கடந்த முப்பது வருட அனுபவங்களை (உண்மையில் நான் ஐக்கிய அமெரிக்காவில் வேலை செய்யத்தொடங்கி இந்த மாதத்தோடு - மே. 2024 - சரியாக 30 வருடங்கள் ஆகிறது.) மேலே கூறியது போன்ற சில நிகழ்வுகளே, எனது வாழ்க்கையை அடுத்த நிலைக்குக் கொண்டுசெல்ல மிகப் பெரிய பங்களிப்புகளைச் செய்திருக்கின்றன. மேலேயுள்ள திருக்குறளில் கூறியது போல், கல்வியே அடிக்கல்லை வைக்கும், காலம் தாமதிக்காத செயல்முறை சந்தையைச் சரியான நேரத்தில் கைப்பற்ற உதவும், ஆனால் இவற்றோடு அடுத்த நிலைக்குப்போக, துணிவுடமை மிக முக்கியம்.

(தொடரும்.)


SpotOn Money
SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE*
Immediate Payment to Any Account
Partnership with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT
Cash Pickup at any
Cargills food city
get 5% Discount*
on Purchases
0207 341 7300
www.spoton.money
Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales,
and registered as a money service business with HMRC (12161278)
* T & C Apply

வணக்கம் London

www.vanakkamlondon.com




## யாதும் ஊரே யாவரும் கேளிர்

## தமிழால் இணையும்
## தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



**Life100**
INSURANCE & INVESTMENTS INC.

**416-918-9771 | 416-321-2500**
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*



## XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

### OUR GROUP OF COMPANIES

**codelantic**
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

### CSR INITIATIVE

**NurtureLeap**
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

Helping you harness the power around you
NEW DAWN ENERGY SOLUTIONS

## SOLAR POWER சூரிய சக்தி

SAFE ◦ CLEAN ◦ FREE ◦ பாதுகாப்பானது ◦ இலவசமானது ◦ சுத்தமானது

AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating BBB ACCREDITED BUSINESS

500 2015 TOP SOLAR CONTRACTORS

info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377



# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

**RE/MAX ELITE**

021 224 2855 | 0777 44 1113

**இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்**
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK


abc DRIVING SCHOOL
We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.
CAR DRIVING LESSONS
Class 5 Driving License
Refresher Lessons
Knowledge Test Preparation
ENROLL NOW!
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy
528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8
(514) 278-1824
abc.conduire@gmail.com
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon
4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6
(514) 866-4777
abc.driving4295@gmail.com


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

# புத்தகங்கள், எழுத்து வாசிப்பு, பரவலாக்கம்

**உரைகள்... ஆய்வரங்குகள்...**

- இலங்கை இந்திய ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்வியலாளர்கள், பதிப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.
- இந்த புத்தக கண்காட்சி அரங்கில் இலங்கை, இந்திய பதிப்பகங்கள், புத்தகசாலைகளின் நூல்களைப் பார்வையிடலாம், வாங்கலாம்!
- ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கான தனி அரங்கு உள்ளது!

## செயற் திட்டம்
## அங்குரார்ப்பண நிகழ்வு

**காலம்**
**21, 22, 23 ஜூன் 2024**

**நேரம்**
**வெள்ளி மாலை 5 - 8 மணி**
**சனி, ஞாயிறு காலை 10 மணி தொடக்கம்**
**மாலை 8 மணி வரை**

**இடம்**
**சைவ மங்கையர் கழக மண்டபம்**
**23 ருத்ரா மாவத்தை வெள்ளவத்தை**

## அரிய வாய்ப்பு, அழைக்கிறோம்!!

**தொடர்புகளுக்கு**
**S.Kandeepan (Panuwal Book Mart) 076 742 7596**
**M.Fauzer 0044 78 1726 2980**

மானுடம் நிறுவனம்
maanudam foundation

மதகு

## புத்தகங்களை நேசிப்போம்!! வாசிப்பினை வளர்ப்போம்!!


உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து வகையான
மரக்கறி மற்றும் பலசரக்கு
பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட இன்றே நாடுங்கள்
MEGAA STORE
மெகா ஸ்டோர்ஸ்
- Fresh Meat
- Asian Groceries
- Fruits & Vegetable
- Frozen Foods
- Off Licence
OPENING HOURS
EVERYDAY
7AM - 11PM
020 8336 0061 | 074 9414 7547
Email: hellomegaastore@gmail.com
MEGAA STORE LTD - 99 Burlington Road, New Malden, KT3 4LR.


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY